ॐ

उपनिषदः

உபநிஷத்துக்கள்

(மூலம், எழுத்துப்பெயர்ப்பு, சொற்பொருள்,

மொழிபெயர்ப்பு, சாரம்)

ஸ்வாமி குருபராநந்த

Published by: **Sarada Associates**

Copies available at:

Sarada Associates,
11, Club Road, Chetpet, Chennai - 31
Phone : 044 - 8241977
http://www.saradaassociates.com

Sastraprakasika Trust,
Chandra Vilas Apartments,
A-3, No.9, 8th Street, Dr. Radhakrishnan Salai,
Mylapore, Chennai - 600 004 (India).
Phone : 044-8475009, 8470311; Fax: 8470579
e-mail: info@sastraprakasika.org
http://www.sastraprakasika.org

Srimathi Lingammal Ramaraju Sastraprathista Trust,
No.1, Gandhi Kalaimandram Road,
Rajapalayam - 621 117.
e-mail: shatraprathishta@yahoo.com

Price Rs: 75/-

Printed by:
Ratna Offset Printers, 40, Peters Road, Royapettah, Chennai 600 014.

பொருளடக்கம்

ஸம்ஸ்க்ருத - தமிழ் எழுத்துப்பெயர்ப்பு

உயிரெழுத்துக்கள்

अ	आ	इ	ई	उ	ऊ	ऋ
அ	ஆ	இ	ஈ	உ	ஊ	ரி
ॠ	ऌ	ए	ऐ	ओ	औ	
ரீ	ல்ரு	ஏ	ஐ	ஓ	ஔ	

உயிர்மெய் எழுத்துக்கள்

क	ख	ग	घ	ङ
க	க$_2$	க$_3$	க$_4$	ங
च	छ	ज	झ	ञ
ச	ச$_2$	ஜ	ஜ$_2$	ஞ
ट	ठ	ड	ढ	ण
ட	ட$_2$	ட$_3$	ட$_4$	ண
त	थ	द	ध	न
த	த$_2$	த$_3$	த$_4$	ந, ன
प	फ	ब	भ	म
ப	ப$_2$	ப$_3$	ப$_4$	ம
य	र	ल	व	
ய	ர	ல	வ	
श	ष	स	ह	
ச$_1$	ஷ	ஸ	ஹ	

கூட்டெழுத்துக்கள்

क्ष	ज्ञ
க்ஷ	ஞ

குறிப்புகள்

1. ஒரு மொழியின் சொல்லை இன்னொரு மொழியின் எழுத்துக்களால் எழுதுவதை எழுத்துப்பெயர்ப்பு **(Transliteration)** என்று அழைக்கிறோம். ஒரு மொழியிலுள்ள சொல்லின் பொருளை மற்றொரு மொழியில் கூறுவதை மொழிபெயர்ப்பு **(Translation)** என்று அழைக்கிறோம்.

2. **श** என்ற ஸம்ஸ்க்ருத எழுத்திற்கு ச$_1$ என்று எழுத்துப் பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. சக்தி என்ற சொல்லில் உள்ள ச என்ற எழுத்தை எவ்விதம் உச்சரிக்கிறோமோ அவ்விதம் ச$_1$ **(श)** என்ற எழுத்து உச்சரிக்கப்படவேண்டும்.

3. ஸம்ஸ்க்ருத-தமிழ் எழுத்துப் பெயர்ப்பில் கொடுத்துள்ள எழுத்துக்கள் எழுத்துப்பெயர்ப்பில் மட்டும் பயன்படுத்தப் பட்டுள்ளன. மொழி பெயர்ப்பில், வழக்கத்தில் உள்ள தமிழ் எழுத்துக்களே பயன் படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக **भक्तिः** என்ற சொல் எழுத்துப் பெயர்ப்பில் ப$_4$க்தி: என்றும், மொழிபெயர்ப்பில் பக்தி என்றும் எழுதப்படும்.

4. ஸம்ஸ்க்ருதத்தில் உள்ள உயிரெழுத்தான **ऋ** என்பது உயிரெழுத்தாகவே வரும்பொழுது ரி என்றும் உயிர்மெய் எழுத்தாக வரும் பொழுது ரு என்றும் உச்சரிக்கப்படுகிறது.

   உதாரணமாக **ऋक्** - ரிக் **कृतं** - க்ருதம்.

5. ச - வரிசையில் வரும் **ञ** என்ற எழுத்தும் **ज्ञ** என்ற கூட்டெழுத்தும் ஞ என்றே எழுத்துப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. **ञ** என்ற எழுத்தில் துவங்கும் சொற்கள் இல்லை. இவ்வெழுத்து மெய் யெழுத்தாக சொற்களில் காணப்படும். கூட்டெழுத்தான **ज्ञ** உயிர்மெய் எழுத்தாக சொற்களில் அதிகமாக காணப்படும்.

6. ஒரு சொல்லிற்கு மேல் இருக்கின்ற புள்ளியானது ம் என்னும் எழுத்தைக் குறிக்கிறது. உதாரணம் अहं - அஹம்

7. ஒரு சொல்லின் இறுதியில் வருகின்ற : இவ்விதமான மேலும் கீழும் வருகின்ற இரு புள்ளிகள் விஸர்கம் என்று அழைக்கப் படுகிறது. இதன் உச்சரிப்பு இதற்கு முன் வரும் எழுத்தைப் பொறுத்து அமையும்.

உதாரணம்:	रामः	ராம:	-	ராமஹ
	कविः	கவி:	-	கவிஹி
	गुरुः	கு$_3$ரு:	-	கு$_3$ருஹு
	अङ्गैः	அங்கை$_3$:	-	அங்கை$_3$ஹி
	मृत्योः	ம்ருத்யோ:	-	ம்ருத்யோஹோ

8. ஸம்ஸ்க்ருத எழுத்துக்களின் சரியான உச்சரிப்புக்களை முறையாக ஸம்ஸ்க்ருதம் கற்றவர்களிடமிருந்து அறிந்துகொள்ள வேண்டும்.

9. ஒவ்வோர் உபநிஷத்துக்களின் சாரத்தில் அடைப்புக் குறிகளில் இருக்கின்ற எண்கள் அந்தந்தப் பகுதியிலுள்ள மந்த்ரத்தின் எண்களைக் குறிக்கின்றன.

முகவுரை

வேதம் ஓர் அறிவுக்களஞ்சியம் **(A body of knowledge).** ரிஷிகள் மூலமாக இறைவனாலேயே வெளிப்படுத்தப்பட்டதே வேதம் என்று, மரபில் வந்தோர் வேதத்தை நோக்குகின்றனர். நாம் வாழ்வில் எவற்றையெல்லாம் அடையலாம் என்ற நம் லக்ஷ்யங் களைப் பற்றிய அறிவைக் கொடுத்தும் அந்த லக்ஷ்யங்களை அடைவதற்கான பாதைகளின் அறிவைக் கொடுத்தும் நம் வாழ்வை வேதமானது பயனுடையதாக்குகிறது.

நமது அனைத்து லக்ஷ்யங்களும் நான்காகப் பிரிக்கப்படுகின்றன.

1. அர்த்தம் - **अर्थः**
2. காமம் - **कामः**
3. தர்மம் - **धर्मः**
4. மோக்ஷம் - **मोक्षः**

அர்த்தம் என்பது நம்முடைய பாதுகாப்பிற்காகப் பயன்படும் பொருள்கள். உடலும் மனமும் வருந்தாது இருக்க நாம் சேர்க்கும் உடைமைகள் அர்த்தம் எனப்படும். மனிதன் மனதில் உதிக்கும் முதல் லக்ஷ்யம் இதுவே. உடலும் மனமும் வருந்தாது பாதுகாக்க அர்த்தம் பயன்படுகிறது.

காமம் என்பது இன்பத்திற்காகப் பயன்படும் பொருள்கள். உடலும் மனமும் இன்புற்றிருக்க நாம் சேர்க்கும் பொருள்கள் காமம். இது, தன்னைப் பாதுகாத்தபின் மனதில் அடுத்து உதிக்கும் லக்ஷ்யம். உடலுக்கும் மனதிற்கும் இன்பத்தைக் கொடுக்க காமம் பயன் படுகிறது. அர்த்தத்தின் பலன் துக்கநிவ்ருத்தியும் காமத்தின் பலன் ஸுகப்ராப்தியும் ஆகும். உதாரணமாக பசியை நீக்க நாடும் உணவுப் பொருள் அர்த்தம். சுவைக்காக நாடும் உணவுப்பொருள் காமம்.

தர்மம் என்பது புண்யம். கண்ணிற்குத் தெரியாத இந்தப் புண்யமானது வேதத்தில் கூறிய கர்மங்களைச் செய்வதாலும் தர்மத்திற்கு முரணாகாத செயல்களாலும் அடையப்படுகிறது. இவ்வாழ்விலும் வரப்போகும் வாழ்விலும் துயரத்தை நீக்கவும் ஸுகத்தை அடையவும் புண்யமானது பயன்படுகிறது.

கர்மகாண்டம் என அழைக்கப்படும் வேதத்தின் முதல்பாகம், அர்த்த-காம-தர்மங்களை அடையப் பலவித உபாயங்களைப் பற்றிக் கூறுகிறது. உபாயங்களைக் கூறிய போதிலும் அதே வேதம் இறுதியில் இம்மூன்றிலும் உள்ள குறைபாடுகளையும் எடுத்துக் காட்டுகிறது. இம்மூன்றின் மூலமாக மனிதர்கள் இன்பத்தைத் துய்க்க நாடிக்கொண்டு இருக்கிறார்கள். இன்பமே மனிதர்களின் முடிவான இலக்காகத் தோன்றும்பொழுது இன்பத்தில் உள்ள குறைகளை இவ்விதம் கூறுகிறது:

1. ஒவ்வொரு இன்பத்திலும் துன்பம் கலந்தே உள்ளது. இன்பத்தைத் தரும் பொருளை அடைதல், அவற்றைப் பாதுகாத்தல், அவற்றின் இழப்பு முதலிய காரணங்களால் அனைத்து இன்பங்களும் துயரத்துடன் கலந்ததாகவே உள்ளன.

2. எந்த இன்பமும் மனதில் முழு நிறைவைக் கொடுப்பதில்லை.

3. அனைத்து இன்பங்களும் பொருள்களைச் சார்ந்திருக்கச் செய்து நம்மை அடிமையாக்குகின்றன.

இவ்விதம் நமக்கு குறைகளைக் காட்டி, இக்குறைகளற்ற மோக்ஷம் என்ற லக்ஷ்யத்தை நமக்கு வேதம் அறிமுகப்படுத்துகிறது. அந்த மோக்ஷத்தை அடையப் பாதையையும் காட்டித்தருகிறது.

மோக்ஷம் என்பதுதான் மனிதனின் உண்மையான, மேலான லக்ஷ்யம். மோக்ஷம் என்பது முழு மனநிறைவை அடைதல். நம் மிடத்திலேயே முழு நிறைவைக் காணுதல். மோக்ஷத்தை அடைவதன் மூலம் அர்த்த, காம, தர்மங்களுக்கு நாம் அடிமைப்படாமல் அவை தேவை என்ற நிபந்தனைகளிலிருந்து விடுபடுகிறோம். அவை நமக்கு ஆடம்பரப் பொருள்கள் போல் ஆகின்றன. எந்த

நிபந்தனையுமின்றி மனதில் நம்மால் அறியப்படும் நிறைவே மோக்ஷமாகிறது. மோக்ஷமே வேதத்தின் கடைசிப் பகுதியிலிருந்து கிடைக்கும் அறிவின் பலன்.

வேதத்தின் கடைசிப் பகுதியானது வேதாந்தம், ஞான காண்டம், உபநிஷத் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. வேதத்தின் கடைசிப் பகுதியில் அமைந்ததால் வேதாந்தம் எனவும் மெய்ப் பொருளைப் பற்றிய அறிவை மையமாகக் கொண்டதால் ஞானகாண்டம் எனவும் ஸம்ஸாரத்தை நீக்கும் மெய்ப்பொருளைப் பற்றிய ஞானம் என்ற பொருளைக்கொண்டதால் உபநிஷத் எனவும் பெயர் பெற்றுள்ளது. உபநிஷத் என்ற சொல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு பொருள் கொள்ளப்படுகிறது.

उप - உப - குருவின் அருகே செல்லுதல்

नि - நி - மெய்ப்பொருளைப் பற்றிய ஞானத்தை அடைதல்


षत् - ஷத் - துயரத்தை நீக்குதல்

குருவை அடைந்து பெறப்பட்ட, ஸந்தேஹமற்ற எந்த ஞானத்தினால் ஒருவன் துயரத்திலிருந்து விடுபடுகிறானோ, அந்த ஞானமே உபநிஷத். அப்படிப்பட்ட ஞானத்தைக் கொடுக்கும் நூலையும் உபநிஷத் என்று அழைக்கிறோம்.

மோக்ஷம் என்ற லக்ஷ்யத்தை அடைவதற்காக ஒருவனுடைய உண்மையான தன்மையை வேதாந்தம் எடுத்து விளக்குகிறது. எப்பொழுதும் பந்தப்படாத தன் உண்மையான ஆத்ம ஸ்வரூபத்தை அறிவதன் மூலமே மோக்ஷத்தை அடையமுடியும் என்பதால் ஆத்ம ஞானம் உபாயமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஆத்ம ஞானத்தை நமக்குக் கொடுக்க வேதாந்தம் சில முறைகளைக் கையாளுகிறது. குருவின் துணைகொண்டு வேதாந்தத்தைப் பயன்படுத்தும் பொழுதுதான் நாம் முழுப்பலனை அடையமுடியும். ஆகவே ஞானத்திற்குக் கருவியாக விளங்கும் வேதாந்தம் எவ்வளவு முக்கியமோ அதே அளவு குருவும் முக்கியமாகிறார்.

உபநிஷத் பொதுவாக குரு-சிஷ்யனின் உரையாடலாக அமைந்திருக்கும். ஒன்று அல்லது பல உரையாடல்கள் சேர்ந்து ஒரு உபநிஷத் ஆகும். ஒவ்வொரு வேதத்தின் கடைசியிலும் பல உபநிஷத்துக்கள் உள்ளன.

அவற்றில் இங்கு ஏழு உபநிஷத்துக்களின் சாரம், மூலம், எழுத்துப் பெயர்ப்பு, சொற்பொருள், மொழிபெயர்ப்பு, ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன.


முண்டகோபநிஷத்

ॐ

मुण्डकोपनिषद्

முண்ட$_3$கோபநிஷத்$_3$

சாரம்

இந்த உபநிஷத் அதர்வணவேதத்தில் அமைந்துள்ளது. முண்டகம் என்ற சொல்லுக்கு இரண்டு பொருள்கள் உள்ளன. 1. சீர்ஷம் (தலை) 2. ப்ரதானம் (முக்யம்). தலையில் அக்னியை சுமந்து செய்யப்படும் ஒரு யாகத்தை நிகழ்த்தியபின் இந்த உபநிஷத்தைப் படிக்க ஆரம்பிப்பதால் இப்பெயர் பெறுகிறது. அல்லது தலைமுடியை அகற்றியபின் இவ்வுபநிஷத்தைப் படிப்பதற்கு ஆரம்பிப்பதாலும் இப்பெயர் பெறுகிறது.

இவ்வுபநிஷத் மூன்று அத்யாயங்களாகவும் ஒவ்வொரு அத்யாயமும் இரண்டு பகுதிகளாகவும் பிரிந்து அமைந்துள்ளது. இங்கு அத்யாயம் முண்டகம் என்றும் பகுதி கண்டம் என்றும் பெயர் பெற்றுள்ளன.

முதல் முண்டகத்தில் முதல் கண்டம்

பரம்பொருளைப் பற்றிய ஞானத்தின் பெருமையைக் கூறி இந்த உபநிஷத் துவங்குகிறது. இந்த ஞானம் அனைத்து ஞானத்திற்கும் ஆதாரமாகவும் வாழ்வில் நிறைவைக் கொடுக்கக் கூடியதாகவும் இருப்பதால் இந்த ஞானத்தின் பெருமையை உணர்வது அவசியமாகிறது. இந்த ஞானமானது, இவ்வுலகைப் படைத்து, காத்து வருகின்ற ப்ரஹ்மதேவனால் தன்னுடைய மகனுக்கு உபதேசிக்கப் பட்டு, பின்னர் அவரால் அவருடைய சிஷ்யருக்கு உபதேசிக்கப் பட்டு, பரம்பரையாக வந்துகொண்டு இருக்கிறது (1, 2). அந்தப் பரம்பரையில் வந்த சௌனகர் என்பவர் அங்கிரஸ் என்பவரை முறைப்படி அணுகி, இவ்விதம் ஒரு கேள்வியைக் கேட்கின்றார் (3).

இறைவா, எதை அறிவதனால் இவை அனைத்தும் அறிந்தது ஆகும்? என்பதே கேள்வி. இக்கேள்விக்கு பதிலே இவ்வுபநிஷத். இக்கேள்வியை சற்று ஆராய்ந்தால், ஒன்றை அறிவதனால், மற்ற அனைத்தையும் எப்படி அறிந்ததாகும் என்ற ஸந்தேஹம் எழுகிறது. ஒன்றைப் பற்றிய ஞானத்தால் மற்ற அனைத்தைப் பற்றிய ஞானமும் அடையவேண்டும் என்றால் அந்த ஒன்று மற்ற அனைத்திற்கும் காரணமாக இருக்கவேண்டும். ஆகவே, மூலகாரணத்தை அறிவதனால், அதிலிருந்து தோன்றிய அனைத்துக் காரியங்களும் அறியப்படுவதாகின்றன. அந்த மூலகாரணமே உபாதான காரணம் என்று அழைக்கப்படுகிறது. உதாரணமாக, விதவிதமான உருவில் உள்ள பானைகளுக்கு, களிமண் உபாதான காரணமாகிறது. இந்த உபாதான காரணமான களிமண்ணை அறிவதனால் அனைத்துப் பானைகளின் தன்மை அறியப்படுகிறது. அதுபோல், அனைத்து உலகிற்கும் எந்த ஒன்று உபாதான காரணம் என்பதே கேள்வியின் மையப்பொருள்.

இவ்விதம் கேட்கப்பட்ட கேள்விக்கு, குருவானவர், இரண்டுவிதமான ஞானமானது ஒவ்வொருவராலும் அடையப்பட வேண்டியது என்று பதிலைத் துவக்குகிறார் (4). அவை முறையே 1. பரா வித்யா 2. அபரா வித்யா என்பதாகும். பரா வித்யா என்பது ஆத்மவித்யா, காரணஞானம், ப்ரஹ்மஞானம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. அபரா வித்யா என்பது அனாத்மவித்யா, கார்யஞானம், நிலையற்ற பொருளைப் பற்றிய ஞானம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. அறிவை இவ்விதம் இரண்டாகப் பிரித்த குருவானவர் எவை யெல்லாம் அபரா வித்யா என்று அடுத்து விளக்குகிறார்.

ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம் ஆகிய நான்கு வேதங்களும் வேதங்களின் அங்கமாக இருக்கின்ற சிக்ஷா, கல்பம், வ்யாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம். இந்த ஆறும் அபரா வித்யா ஆகின்றன (5).

இவ்விதம், அனைத்து அறிவையும் அபரா வித்யா என்று கூறிய பின்னர் பரம்பொருளின் தன்மையை வர்ணித்து, இப்படிப்பட்ட

பரம்பொருளை எந்த அறிவானது க்ரஹிக்கிறதோ, அந்த அறிவே பரா வித்யா என்று இயம்புகிறார். இங்கு அனைத்து வேதங்களும் அபரா வித்யா என்று அழைக்கப்பட்டதால் வேதத்தின் கடைசிப் பகுதியில் அமைந்துள்ள உபநிஷத்துக்களும் அபரா வித்யாவாக ஆகுமே என்ற ஐயம் எழும்பொழுது, உபநிஷத் மந்த்ரங்களை உச்சரிக்கும் முறையை, அதாவது சப்தஞானத்தை அபரா வித்யா என்றும் உபநிஷத் மந்த்ரங்களால் அறியப்படும் பரம்பொருளைப் பற்றிய அர்த்த ஞானத்தை பரா வித்யா என்றும் புரிந்துகொள்ள வேண்டும்.

எந்த ஒன்று கண்களால் காணப்படாததோ, அதுபோல மற்ற ஞானேந்த்ரியங்களால் அறியப்படாததாகவும் கை போன்ற கர்மேந்த்ரியங்களால் க்ரஹிக்கப்படாததாகவும் குணங்களற்றதாகவும் பிறப்பற்றதாகவும் கண்கள் காதுகள் போன்ற ஞானேந்த்ரியங்கள் அற்றதாகவும் கர்மேந்த்ரியங்கள் அற்றதாகவும் என்றும் உள்ளதாகவும் அனைத்தையும் வ்யாபித்தும் மிகவும் ஸூக்ஷ்மமாக, அழியாததாக, பலவிதமாகத் தன்னை வெளிப்படுத்தி, அனைத் துக்கும் உபாதான காரணமாக இருக்கிறதோ அந்த ப்ரஹ்மனை தீரர்கள் தெளிவாக அறிகிறார்கள் என்று ப்ரஹ்மனின் ஸ்வரூபத்தை விளக்குகிறார். இத்தகைய ப்ரஹ்மனைப் புரிந்து கொள்ளும் அறிவே பரா வித்யா ஆகும் (6). இதில் பூதயோனி என்ற ஒரு சொல் ப்ரஹ்மத்துக்கு லக்ஷணமாகக் கூறப்பட்டுள்ளது. பூதயோனி என்ற சொல் உபாதான காரணத்தைக் குறிக்கிறது.

ஒரு பொருள் தோன்றவேண்டும் என்றால் இரண்டு விதமான காரணங்கள் தேவைப்படுகின்றன: 1. உபாதான காரணம், 2. நிமித்த காரணம். பானைகளுக்குக் களிமண் உபாதான காரணமென்றால், குயவன் நிமித்த காரணம். நாம் அனுபவிக்கின்ற இந்த அனைத்துப் படைப்பிற்கும் இரண்டு காரணங்கள் எவை என்பதற்கு, ப்ரஹ்மனே இரண்டு காரணமாகவும் இருக்கிறது என்ற கருத்து கூறப்படுகிறது. இக்கருத்து உதாரணங்களின் மூலமாக மேலும் விளக்கப்படுகிறது. எவ்விதம் சிலந்திப்பூச்சியானது, தான் உருவாக்கிய வலைக்குத் தானே நிமித்த காரணமாகவும் உபாதான காரணமாகவும்

இருக்கிறதோ, அதுபோல் இப்படைப்பிற்கு ப்ரஹ்மன் ஒன்றே இவ்விரு காரணங்களாகவும் விளங்குகிறது (7).

ஆகவே இந்த ப்ரஹ்மனை அறிவதனால் அனைத்தையும் அறிந்ததாகும் என்பது பொருந்துகிறது. இந்த ப்ரஹ்மனே உபாதான காரணம் என்று கூறிய ஆசிரியர் அதுவே நிமித்த காரணமாகவும் இருக்கிறது என்றும் விளக்கி இந்த முதல் கண்டத்தை நிறைவு செய்கிறார் (8, 9).

முதல் முண்டகத்தில் இரண்டாவது கண்டம்

இந்தப் பகுதியில் குரு, அபரா வித்யையைப் பற்றிப் பேசுகிறார். வேதத்தின் முதல்பகுதி கர்மகாண்டம் என்று அழைக்கப்படுகின்றது. கர்மகாண்டத்தில் விதவிதமான யாகங்கள் இகலோக இன்பத்திற்காகவும் சொர்க்கம் முதலிய பரலோக இன்பத்திற்காகவும் பேசப்படுகின்றன. இங்கு கர்மத்தின் பலன்களையும் குறைபாடுகளையும் விளக்குகிறார்.

முதல் ஆறு மந்த்ரங்களில் கர்மத்தினுடைய பெருமையும் அதனால் அடையப்படும் பலனும் பேசப்படுகிறது. கர்மபலனில் விருப்பம் உடையவர்கள், கர்மத்தை செய்துதான் ஆக வேண்டும். செய்த கர்மம் வீண்போவதில்லை (1). கர்மங்களில் முக்கிய கர்மமான அக்னிஹோத்ரம் உதாரணமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அதை முறையாகச் செய்யவேண்டும். இல்லையெனில் விபரீத பலன் தோன்ற வாய்ப்புண்டு என்று எச்சரிக்கை விடுக்கப்படுகிறது (2, 3). யாகத்தில் பயன்படுத்தப்படும் நெருப்புக்கு விதவிதமான பெயர்கள் குறிப்பிடப்படுகிறது (4). யாகத்தின் பலனாக, அதன் யஜமானன் ஸ்வர்கலோகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு ஸுக போகங்களை அனுபவிக்கிறான் (5, 6).

அடுத்து கர்மத்தின் சிறுமையும் அதனால் அடையப்படும் பலனின் நிலையற்ற தன்மையும் பேசப்படுகிறது. சிறு படகைத் துணையாகக் கொண்டு கடலைக் கடக்க முடியாதது போல், கர்மத்தின் துணைகொண்டு ஸம்ஸாரக்கடலைக் கடக்க முடியாது (7).

கர்மத்தையே முடிவான துணையாகக் கொண்டவர்கள், தங்களைப் பண்டிதர்களாகவும் கருதி, குருடனால் வழிநடத்தப்பட்ட குருடன் போல், கீழ்மையான நிலையை அடைகிறார்கள் (8, 9, 10). கர்மம் என்பது உடலாலும் வாக்காலும் உருவாகின்ற செயல். மனதால் செய்யப்படுகின்ற த்யானம் முதலிய செயலுக்கு உபாசனை என்று பெயர். இதை மேற்கொள்கின்ற உபாசகர்கள், கர்மம் செய்ப வர்களைக் காட்டிலும் அதிக பலனை இவ்வுலகில் அடைந்து, மேலுலகில் சொர்க்கத்திற்கும் மேலாக இருக்கின்ற ப்ரஹ்ம லோகத்தை அடைகிறார்கள். இவர்கள் அடையும் பலனும் நிலையற்றது (11).

இவ்விதம், கர்மத்தின் பெருமையையும் உபாசனையின் பெருமையையும் பிறகு, சிறுமையையும் அதாவது நிலையற்ற பலனையே கொடுக்கும் தன்மையையும் விளக்கிய குருவானவர், கர்மகாண்டத்திலிருந்து ஞானகாண்டத்திற்குப் பாலமாக அமையும் ஸாதனைகளை அழகாக விளக்குகிறார். இவ்வுலகை ஆராய்ச்சி செய்து, அதிலுள்ள குறைகளை உணர்ந்ததால் வைராக்யத்தை அடைந்த சாதகன், மோக்ஷத்திற்கு கர்மம் நேரடியான ஸாதனம் அல்ல என்பதையும் உணர்ந்து, பணிவான மனதுடன், மரபுவழி வந்தவராகவும் ப்ரஹ்மனில் நிலைபெற்றவராகவும் இருக்கின்ற குருவை அடைந்துதான் ஆக வேண்டும் (12). இவ்விதம் தம்மை அடைந்த சிஷ்யனுக்கு குருவானவர் பரப்ரஹ்ம தத்துவத்தை விளக்குகிறார் (13).

இரண்டாவது முண்டகத்தில் முதல் கண்டம்

இந்தப் பகுதியிலிருந்து பரா வித்யாவுக்கு விஷயமான ப்ரஹ்மனைப் பற்றிய விளக்கம் ஆரம்பிக்கப்படுகிறது. பரப்ரஹ்மனே அனைத்து உலகத்திற்கும் ஜீவராசிகளுக்கும் உபாதான காரணமாக விளங்குகிறது (1). அதே சமயத்தில், ப்ரஹ்மன், தோன்றிய அனைத் திற்கும் ஆதாரமாகவும் அவற்றால் வரையறுக்கப் படாமலும் விளங்கிக் கொண்டிருக்கிறது (2). ப்ரஹ்மனே ஜீவனுக்கும் ஜகத்திற்கும் காரணமாக இருப்பதால் ப்ரஹ்மனை அறிவதால் அனைத்தையும்

அறிந்ததாகிறது. அந்த ப்ரஹ்மன் காரணமாகவும் அதே சமயத்தில் மாற்றமடையாத தத்துவமாகவும் உள்ளது என்று விளக்கப்பட்டு, ப்ரஹ்மனிடம் இருந்து ஐந்து பூதங்களின் தோற்றமும் ப்ராணன், மனம் போன்றவைகளின் தோற்றமும் கூறப்படுகிறது (3). படைக்கப்பட்ட ஸ்தூல உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் ப்ரஹ்மன் விராட் என்று அழைக்கப்படுகிறது. இவ்வுலகமே விராட்டின் உடலாக உருவகப் படுத்தப்படுகிறது (4). இவ்வுலகில் தோன்றிய சிலவற்றைக் குறிப்பிட்டு இவை அனைத்தும் ப்ரஹ்மனிடமிருந்து வந்தவை என காட்டப் படுகிறது (5 - 9). அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கும் ப்ரஹ்மனே ஒருவனுடைய ஆத்மசொரூபமாக உள்ளது எனக்கூறி, தோன்றியவை வெறும் தோற்றமே என்றும் கூறி, இப்படிப்பட்ட அறிவை அடைபவன் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை அடைகிறான் என்பதுடன் இப்பகுதி முடிவடைகிறது (10).

இரண்டாவது முண்டகத்தில் இரண்டாவது கண்டம்

இப்பகுதியில் பரப்ரஹ்மனின் ஸ்வரூபம், சில ஸாதனைகள், ப்ரஹ்மஞானத்தின் பலன் ஆகியவை பேசப்படுகின்றன. அறிவு ஸ்வரூபமான ப்ரஹ்மன், ஜீவனுடைய மனதில் விளங்கிக் கொண்டி ருக்கிறது. அனைத்து உயிர்த்திரள்களும் இந்த ப்ரஹ்மனை ஆதாரமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. இந்த ப்ரஹ்மனே, ஒருவனால் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய லக்ஷ்யம் ஆகிறது (1). அறிவு ஸ்வரூபமான இந்த ப்ரஹ்மன், சிறியதைக் காட்டிலும் சிறியதாகவும் அதே சமயத்தில் அனைத்துமாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ப்ரஹ்மனை ஒரு ஜீவன் இலக்காக வைத்து அடைய வேண்டும் (2). வில்லின் துணையோடு ஒரு அம்பானது இலக்கை அடைவதை உதாரணமாகக் கொண்டு சில ஸாதனைகள் விளக்கப்படுகின்றன. வில் - உபநிஷத், அம்பு - ஜீவாத்மா, இலக்கு - பரமாத்மா. அம்பானது வில்லின் துணையோடு இலக்கினையடைய வேண்டுமானால், அந்த அம்பு கோணலற்றதாகவும் கூர்மையான தாகவும் வில்லில் நன்கு பொருத்தப்பட்டதாகவும் இலக்கிற்கு நேராகவும் இருக்கவேண்டும். அது போல, அம்பாக வர்ணிக்கப் பட்ட ஜீவன் தூய்மையான மனதுடனும் ஒருமுகப்படுத்தப்பட்ட

மனதுடனும் வில்லாக வர்ணிக்கப்பட்ட உபநிஷத்தில் முழு நம்பிக்கை பொருந்தியவனாகவும் ப்ரஹ்மனாக வர்ணிக்கப்பட்ட இலக்கு ஒன்றையே குறியாகக் கொண்டவனாகவும் இருக்கும் பொழுது இலக்குடன் அம்பு ஒன்றாவது போல் ப்ரஹ்மனுடன் ஜீவன் ஒன்றாகின்றான் (3, 4). அந்த ப்ரஹ்மனிடத்தில் பூமி முதற்கொண்டு அனைத்து உலகங்களும் மனம், ப்ராணன் போன்ற அனைத்து தத்துவங்களும் கோர்க்கப்பட்டுள்ளன. தானே அந்த ப்ரஹ்மன் என்பதை அறியவேண்டும் என்று கூறி, இந்த ஞானத்தில் நிலைபெற தேவையற்ற பேச்சை நிறுத்தவேண்டும் என்பது ஸாதனையாகக் கூறப்படுகிறது (5).

குருவானவர், அனைத்துமாக விளங்குகின்ற இந்த ப்ரஹ்மனை த்யானித்து அறியாமையைக் கடக்க சிஷ்யனை ஆசீர்வதிக்கிறார் (6). எவருடைய மகிமை இவ்வுலகமாக விளங்கிக்கொண்டு இருக்கிறதோ, அவர், மனதிற்குள் இருந்துகொண்டு அனைத்தையும் நடத்தி வருகிறார். தீரர்கள் அதை மரணமற்ற, ஆனந்தஸ்வரூபமாக விளங்கு வதாக அறிகிறார்கள் (7, 8). இப்படிப்பட்ட ஞானத்தால், அறியாமை என்ற கயிறானது அறுபட்டு, சந்தேகங்களெல்லாம் நீக்கப்பட்டு, அனைத்துக் கர்மங்களிலிருந்தும் விடுதலை கிடைக்கின்றது (9). அறிவைக் கொடுக்க உதவுகின்ற காரணங்களான மனம், இந்த்ரியங்கள் போன்றவை ஜ்யோதி என்றால், ப்ரஹ்மன் ஜ்யோதிகளுக்கு ஜ்யோதியாக விளங்குகிறது (10). இவ்வுலகில் ஜ்யோதியாக விளங்கிவரும் ஸூர்யன், சந்திரன் போன்றவை ப்ரஹ்மனை விளக்காது. ஆனால் ப்ரஹ்மனால் இவை விளங்கி வருகின்றன (11). தோன்றிய இவை அனைத்தும் கயிற்றில் பாம்பு தோன்றுவது போல, வெறும் தோற்றமேயன்றி உண்மையல்ல என்று இந்த ஜகத்தை நீக்கி, ப்ரஹ்மன் மட்டுமே இரண்டற்றதாக இருக்கிறது என்றவாறு இப்பகுதி முடிவடைகிறது (12).

மூன்றாவது முண்டகத்தில் முதல் கண்டம்

இப்பகுதியில் ஞானத்துக்குத் தேவையான ஸாதனைகள், ஜீவ ஈச்வர ஐக்கியம், அந்த ஞானத்தின் பலன் முதலியன பேசப்படுகின்றன.

ஸம்ஸாரத்தின் காரணத்தையும் அதிலிருந்து விடுபட உபாயத்தையும் விளக்க ஓர் உவமையுடன் இப்பகுதி துவங்குகிறது. ஒரு மரத்தில் இரு பறவைகள் அமர்ந்துள்ளன. ஒரு பறவை, மரத்திலுள்ள கனியை சுவைக்கிறது. மற்றொன்று, பார்த்தவண்ணம் அமர்ந்திருக்கிறது. இதில், நமது உடல்-மரம், கனியை சுவைக்கும் பறவை-ஜீவாத்மா, கனியை சுவைக்காத பறவை-பரமாத்மா. ஜீவாத்மா, ஸுகதுக்கம் என்கின்ற கனியை சுவைத்து, கர்த்தாவாகவும் போக்தாவாகவும் இருந்து ஸம்ஸாரியாக இருக்கிறான். பரமாத்மா ஸாக்ஷியாக இருந்து கொண்டு அஸம்ஸாரியாக இருக்கிறது. சோகத்தில் ஆழ்ந்த ஜீவன் தன்னை எப்பொழுது அந்த பரமாத்மாவாக ஞானத்தின் மூலம் மாற்றிக் கொள்கிறானோ, அப்பொழுது சோகத்திலிருந்து விடுதலை அடைகிறான் (1, 2). இவ்விதம், பரமாத்மஸ்வரூபத்தை அடைய ஞானமே மூலகாரணம் எனப்புகட்டி, அந்த ஞானத்தின் பலனாக புண்ணிய, பாவத்தை விட்டு பரப்ரஹ்மனுடன் ஐக்கியத்தை அடைந்து தேவையற்ற பேச்சுக்களைத் துறந்தவனாக மாறி தன்னிடத்தில் இன்புற்று இருக்கிறான் (3, 4). இந்த ஞானத்துக்கு ஸாதனைகளாக வாய்மை, தவம், சாஸ்த்ரத்தை நம்பிக்கையுடன் கேட்டல், ப்ரஹ்மச்சர்யம் முதலியவற்றைக் கூறி (5), பிறகு வாய்மையின் மகிமை பேசப் படுகிறது (6). ப்ரஹ்மதத்துவமானது அனைத்து இருமைகளையும் கடந்துள்ளது என்பதை விளக்க, தூரத்தில் உள்ளது, அருகேயும் உள்ளது, பெரிதாகவும் உள்ளது, சிறிதாகவும் உள்ளது போன்ற விதங்களில் விளக்கி, ப்ரஹ்மன் சைதன்ய ஸ்வரூபமாக நமக்குள் விளங்குகிறது என்று விளக்கப்படுகிறது (7). இப்படிப்பட்ட ப்ரஹ்ம தத்துவத்தைக் கண்கள் முதலிய எந்த இந்த்ரியங்களாலும் க்ரஹிக்க முடியாது என்றும் வாக்கு முதலிய கர்ம இந்த்ரியங்களாலும் எவ்வித தவத்தாலும் அறிய முடியாது என்றும் கூறி, அமைதியை அடைந்த மனதின் துணைகொண்டு, ஞானத்தால் அறியப்படும் என்பதால், அதற்கு மனம் இன்றியமையாததாக இருக்கிறது என்று கூறப்படுகிறது (8, 9). ஞானத்தின் பெருமையைக் கூற, ஞானியின் பெருமை பேசப்படுகிறது. ஞானியானவன். இறைவனுக்குச் சமமாகக் கூறப்பட்டு லௌகிக ஸுகத்தை அடைய

விரும்புபவர்கள், ஞானியை வணங்கினாலே, அது இறைவனை வணங்குவது ஆவதால், ஞானியை வணங்கியே அவர்கள் விரும்பிய பலனை அடைவார்கள் (10).

மூன்றாவது முண்டகத்தில் இரண்டாவது கண்டம்

இந்த இறுதிப் பகுதியிலும் ஸாதனைகளின் முக்கியத்துவமும் ஞானத்தின் பலனும் கூறப்படுகிறது.

மோக்ஷத்தை அடைய விரும்புபவர்களும் ஞானியின் துணையை நாடவேண்டும். அவ்வாறு நாடிப் பயனை அடைந்த தீரர்கள் துயரத்தைக் கடக்கிறார்கள் (1). ஒருவன் எப்பொருளை நினைத்து ஆசைப்பட்டவனாக இறந்துவிடுகிறானோ, அவன் மறுபிறப்பில் அப்பொருளை அனுபவிக்கும் சூழ்நிலையில் பிறக்க நேரிட்டு, அப்பொருளை அனுபவிக்கிறான். இங்கேயே அனைத்து ஆசைகளையும் நீக்கியவனுக்கு மறுபிறப்பு ஏற்படுவதில்லை (2). ஒரு குறிப்பிட்ட ஸாதனையை உயர்த்திக்கூற, மற்ற ஸாதனைகளை சற்று தாழ்வுபடுத்திக்கூறுதல் ஒரு மரபாக இருக்கிறது. அவ்விதத்தில் முமுக்ஷுத்துவத்தின் பெருமையைக் கூற, மற்ற ஸாதனைகளான சாஸ்த்ரத்தைக் கேட்டல், அவற்றை ஓதுதல் போன்றவற்றால் மட்டும் இந்த ஆத்மா அடையப்படமுடியாது எனக் கூறி, எவர்கள் இந்த ஆத்மதத்துவத்தையே லக்ஷ்யமாகத் தேர்ந்தெடுக்கிறார்களோ, அவர்களை இறைவன் தன் ஸ்வரூபத்தை விளக்கத் தேர்ந்தெடுக்கிறார் என்று கூறப்படுகிறது (3). இந்த ஆத்ம தத்துவத்தை, மனதில் பலஹீனமாக இருப்பவர்களாலும் கவனக் குறைவுடன் இருப்பவர்களாலும் வைராக்யமற்ற ஞானத்தாலும் அடையமுடியாது என்று கூறப்படுகிறது (4). ரிஷிகள், இந்தத் தத்துவத்தை அடைந்து, ஞானத்தில் திருப்தி அடைந்தவர்களாகவும் செய்ய வேண்டியவற்றை எல்லாம் செய்து முடித்தவர்களாகவும் அனைத்தையும் வ்யாபிக்கின்றனர் (5). வேதாந்த ஞானத்தில் நிச்சயத்தை அடைந்து த்யாகத்தால் தூய்மை அடைந்தவர்கள், ஜீவன்முக்தர்களாக இருந்துகொண்டு இறுதியான மரணத்தை அடைந்தவர்கள், ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே இருந்து மீண்டும்

பிறப்பதில்லை (6). அவர்களுடைய ஸூக்ஷ்மசரீரம் அந்தந்த தேவதைகளுடன் சேர்ந்துவிட, அவர்கள் அழியாத ப்ரஹ்மனிடம் ஒன்றாகவே இருக்கிறார்கள் (7). நதிகள் தங்களுடைய நாமரூபத்தை இழந்து கடலில் கலப்பது போல, ஞானிகள் ப்ரஹ்மனிடத்தில் கலந்து ப்ரஹ்மனாகவே இருந்து, பாவத்தையும் சோகத்தையும் கடந்து விடுகிறார்கள் (8, 9). கடைசி இரண்டு மந்த்ரங்களில், இந்த உபநிஷத்தைத் தகுதியுள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் இங்கு குரு கூறியது அனைத்தும் உண்மை என்றும் உபநிஷத் கூறி முடிக்கிறது (10, 11).

शान्तिपाठः
சா1ந்திபாட2:

भद्रं कर्णेभिः शृणुयाम देवाः। भद्रं पश्येमाक्षभिर्यजत्राः। स्थिरैरङ्गैस्तुष्टुवाँसस्तनूभिः। व्यशेम देवहितं यदायुः। स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः। स्वस्ति नः पूषा विश्ववेदाः। स्वस्ति नस्ताक्ष्र्यो अरिष्टनेमिः। स्वस्ति नो बृहस्पतिर्दधातु। ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

ப4த்3ரம் கர்ணேபி4: ச்1ருணுயாம தே3வா:। ப4த்3ரம் பச்1யேமாக்ஷபி4ர்யஜத்ரா:। ஸ்தி2ரைரங்கை3ஸ்துஷ்டு வாம்ஸஸ்தனூபி4:। வ்யசே1ம தே3வஹிதம் யதா3யு:। ஸ்வஸ்தி ந இந்த்3ரோ வ்ருத்3த4ச்1ரவா:। ஸ்வஸ்தி ந: பூஷா விச்1வவேதா3:। ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டனேமி:। ஸ்வஸ்தி நோ ப்3ருஹஸ்பதிர்த3தா4து। ஓம் சா1ந்தி: சா1ந்தி: சா1ந்தி: ॥

देवाः தே3வா: தேவர்களே **कर्णेभिः** கர்ணேபி4: செவிகளால் **भद्रं** ப4த்3ரம் நல்லதை **शृणुयाम** ச்1ருணுயாம கேட்போமாக. **यजत्राः** யஜத்ரா: வணக்கத்திற்குரிய தேவர்களே **अक्षभिः** அக்ஷபி4: கண்களால் **भद्रं** ப4த்3ரம் நல்லதை **पश्येम** பச்1யேம பார்ப்போமாக. **स्थिरैः अङ्गैः** ஸ்தி2ரை: அங்கை3: உறுதியான உறுப்புக்களுடன் **तनूभिः** தனூபி4: வேதங்களால் (உங்களை நாங்கள்) **तुष्टुवांसः** துஷ்டுவாம்ஸ: புகழ்ந்துகொண்டு **यद् आयुः** யத்3 ஆயு: எவ்வளவு ஆயுள் **देवहितं** தே3வஹிதம் இறைவனால் (எங்களுக்கு) கொடுக்கப்பட்டுள்ளதோ (அதை) **व्यशेम** வ்யசே1ம அனுபவிப்போமாக. **वृद्धश्रवाः** வ்ருத்3த4ச்1ரவா: ஓங்கிய புகழையடைந்த **इन्द्रः** இந்த்3ர: இந்த்ரன் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **विश्ववेदाः** விச்1வவேதா3: அனைத்தையும் அறிகின்ற **पूषा** பூஷா ஸூர்யதேவர் **नः** ந:

எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **अरिष्टनेमिः** அரிஷ்டனேமி: தடையின்றிச் செல்லும் **तार्क्ष्यः** தார்க்ஷ்ய: கருடதேவர் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **बृहस्पतिः** ப்₃ருஹஸ்பதி: (பேரறிவுடைய) ப்ருஹஸ்பதி **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை **दधातु** த₃தா₄து அருளட்டும். **ओं शान्तिः** ஓம் சா₁ந்தி: ஓம் சாந்தி **शान्तिः** சா₁ந்தி: சாந்தி **शान्तिः** சா₁ந்தி: சாந்தி.

தேவர்களே, செவிகளால் நல்லதைக் கேட்போமாக. வணக்கத்திற்குரிய தேவர்களே, கண்களால் நல்லதைப் பார்ப்போமாக. உறுதியான உறுப்புக்களுடன் வேதங்களால் உங்களை நாங்கள் புகழ்ந்து கொண்டு எவ்வளவு ஆயுள் இறைவனால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதோ அதை அனுபவிப்போமாக. ஓங்கிய புகழையடைந்த இந்த்ரன் எங்களுக்கு நன்மையை அருளட்டும். அனைத்தையும் அறிகின்ற ஸூர்யதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். தடையின்றிச் செல்லும் கருடதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். பேரறிவுடைய ப்ருஹஸ்பதி எங்களுக்கு நன்மையை அருளட்டும். ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

இங்கு சாந்தி என்ற சொல்லிற்கு தடைகள் நீங்கட்டும் என்பது பொருள். இயற்கை, சூழ்நிலை, உடல் முதலிய மூன்று இடங்களிலிருந்து வரும் தடைகள் அமைதி அடைய வேண்டும் அதாவது நீங்கவேண்டும் என்று மும்முறை கூறப்படுகிறது.

प्रथममुण्डके प्रथमः खण्डः

முதல் முண்டகத்தில் முதல் கண்டம்

१. ब्रह्मा देवानां प्रथमः सम्बभूव विश्वस्य कर्ता भुवनस्य गोप्ता।
स ब्रह्मविद्यां सर्वविद्याप्रतिष्ठाम् अथर्वाय ज्येष्ठपुत्राय प्राह॥

1. ப்$_3$ரஹ்மா தே$_3$வானாம் ப்ரத$_2$ம: ஸம்ப$_3$பூ$_4$வ
விச்$_1$வஸ்ய கர்தா பு$_4$வனஸ்ய கோ$_3$ப்தா ।
ஸ ப்$_3$ரஹ்மவித்$_3$யாம் ஸர்வவித்$_3$யாப்ரதிஷ்டா$_2$ம்
அத$_2$ர்வாய ஜ்யேஷ்ட$_2$புத்ராய ப்ராஹ ॥

ब्रह्मा ப்$_3$ரஹ்மா ப்ரஹ்மா **देवानां** தே$_3$வானாம் தேவர்களுள் **प्रथमः** ப்ரத$_2$ம: முதன்மையானவராகவும் முக்கியமானவராகவும் **संबभूव** ஸம்ப$_3$பூ$_4$வ தோன்றினார். **विश्वस्य** விச்$_1$வஸ்ய (அவர்) உலகத்தை **कर्ता** கர்தா படைப்பவராகவும் **भुवनस्य** பு$_4$வனஸ்ய உலகத்தை **गोप्ता** கோ$_3$ப்தா காப்பவராகவும் (இருக்கிறார்). **सः** ஸ: அவர் **सर्व-विद्या-प्रतिष्ठां** ஸர்வ-வித்$_3$யா-ப்ரதிஷ்டா$_2$ம் அனைத்து அறிவிற்கும் ஆதாரமாக உள்ள **ब्रह्मविद्यां** ப்$_3$ரஹ்மவித்$_3$யாம் ப்ரஹ்ம வித்யாவை **ज्येष्ठपुत्राय** ஜ்யேஷ்ட$_2$புத்ராய (தன்னுடைய) மூத்த மகனான **अथर्वाय** அத$_2$ர்வாய அதர்வனுக்கு **प्राह** ப்ராஹ உபதேசித்தார்.

ப்ரஹ்மா, தேவர்களுள் முதன்மையானவராகவும் முக்கிய மானவராகவும் தோன்றினார். அவர் உலகத்தைப் படைப்ப வராகவும் உலகத்தைக் காப்பவராகவும் இருக்கிறார். அவர் அனைத்து அறிவிற்கும் ஆதாரமாக உள்ள ப்ரஹ்ம வித்யாவைத் தன்னுடைய மூத்த மகனான அதர்வனுக்கு உபதேசித்தார்.

२. अथर्वणे यां प्रवदेत ब्रह्मा अथर्वा तां पुरोवाचाङ्गिरे ब्रह्मविद्याम्।
स भारद्वाजाय सत्यवहाय प्राह भारद्वाजोऽङ्गिरसे परावराम्॥

2. அத$_2$ர்வணே யாம் ப்ரவதே$_3$த ப்$_3$ரஹ்மா
அத$_2$ர்வா தாம் புரோவாசாங்கி$_3$ரே ப்$_3$ரஹ்மவித்$_3$யாம் ।
ஸ பா$_4$ரத்$_3$வாஜாய ஸத்யவஹாய ப்ராஹ
பா$_4$ரத்$_3$வாஜோऽங்கி$_3$ரஸே பராவராம் ॥

ब्रह्मा ப்$_3$ரஹ்மா ப்ரஹ்மா **यां ब्रह्मविद्यां** யாம் ப்$_3$ரஹ்மவித்$_3$யாம் எந்த ப்ரஹ்மவித்யாவை **अथर्वणे** அத$_2$ர்வணே அதர்வனுக்கு **पुरा** புரா முன்பு **प्रवदेत** ப்ரவதே$_3$த உபதேசித்தாரோ **तां** தாம் அதை **अथर्वा** அத$_2$ர்வா அதர்வன் **अङ्गिरे** அங்கி$_3$ரே அங்கிருக்கு **उवाच** உவாச உபதேசித்தார். **सः** ஸ: அவர் (அங்கிர்) **भारद्वाजाय** பா$_4$ரத்$_3$வாஜாய பரத்வாஜகுலத்தில் தோன்றிய **सत्यवहाय** ஸத்யவஹாய ஸத்யவஹருக்கு **प्राह** ப்ராஹ உபதேசித்தார். **परावरां** பராவராம் பரம்பரையாக வந்த (இந்த வித்யாவை) **भारद्वाजः** பா$_4$ரத்$_3$வாஜ: பாரத்வாஜர் **अङ्गिरसे** அங்கி$_3$ரஸே அங்கிரஸுக்கு (உபதேசித்தார்).

ப்ரஹ்மா எந்த ப்ரஹ்மவித்யாவை அதர்வனுக்கு முன்பு உபதேசித்தாரோ, அதை அதர்வன் அங்கிருக்கு உபதேசித்தார். அங்கிர், பரத்வாஜ குலத்தில் தோன்றிய ஸத்யவஹருக்கு உபதேசித்தார். பரம்பரையாக வந்த இந்த வித்யாவை பாரத்வாஜர், அங்கிரஸுக்கு உபதேசித்தார்.

३. **शौनको ह वै महाशालः अङ्गिरसं विधिवदुपसन्नः पप्रच्छ।**
कस्मिन्नु भगवो विज्ञाते सर्वमिदं विज्ञातं भवतीति॥

3. சௌ$_1$னகோ ஹ வை மஹாசா$_1$ல:
அங்கி$_3$ரஸம் விதி$_4$வது$_3$பஸன்ன: பப்ரச்ச$_2$ ।
கஸ்மின்னு ப$_4$க$_3$வோ விஞாதே
ஸர்வமித$_3$ம் விஞாதம் ப$_4$வதீதி ॥

महाशालः ह वै மஹாசா$_1$ல: ஹ வை பெரிய யாகசாலையை உடைய **शौनकः** சௌ$_1$னக: சௌனகர் **अङ्गिरसं** அங்கி$_3$ரஸம் அங்கிரஸை

विधिवत् விதி$_4$வத் முறைப்படி **उपसन्नः** உபஸன்ன: அணுகி **भगवः** ப$_4$க$_3$வ: இறைவா **कस्मिन् नु** கஸ்மின் னு எதை **विज्ञाते** விஞாதே அறிவதனால் **इदं सर्वं** இத$_3$ம் ஸர்வம் இவை அனைத்தையும் **विज्ञातं** விஞாதம் அறிந்தது **भवति** ப$_4$வதி ஆகும் **इति** இதி என்று **पप्रच्छ** பப்ரச்ச$_2$ கேட்டார்.

பெரிய யாகசாலையை உடைய சௌனகர் அங்கிரஸை முறைப்படி அணுகி இறைவா, எதை அறிவதனால் இவை அனைத்தையும் அறிந்தது ஆகும்? என்று கேட்டார்.

இவ்வுபநிஷத்தில் குருவாக விளங்குபவர் அங்கிரஸ். சிஷ்யனாக விளங்குபவர் சௌனகர். சௌனகருக்கு பெரிய யாகசாலையை உடையவர் என்ற அடைமொழியானது, அவர் இல்லறவாஸியாக இருந்துகொண்டு, வேதநெறிப்படி வாழ்க்கையை மேற்கொண்டு தன்னைத் தகுதிப்படுத்தியவர் என்பதைக் குறிக்கிறது.

४. तस्मै स होवाच — द्वे विद्ये वेदितव्ये इति ह स्म
यद् ब्रह्मविदो वदन्ति परा चैवापरा च ॥

4. தஸ்மை ஸ ஹோவாச —த்$_3$வே வித்$_3$யே வேதி$_3$தவ்யே இதி ஹ
ஸ்ம யத்$_3$ ப்$_3$ரஹ்மவிதோ$_3$ வத$_3$ந்தி பரா சைவாபரா ச ||

सः ஸ: அவர் (அங்கிரஸ்) **तस्मै** தஸ்மை அவரிடம் (சௌனகரிடம்) **ह उवाच** ஹ உவாச (இவ்விதம்) கூறினார். **द्वे** த்$_3$வே இரண்டு (விதமான) **विद्ये** வித்$_3$யே அறிவு **वेदितव्ये** வேதி$_3$தவ்யே அறியத்தக்கது **इति ह स्म** இதி ஹ ஸ்ம என்று **यद् ब्रह्मविदः** யத்$_3$ ப்$_3$ரஹ்மவித$_3$: வேதத்தை அறிந்தவர்கள் **वदन्ति** வத$_3$ந்தி கூறுகிறார்கள். **परा च एव** பரா ச ஏவ (அந்த இவ்விரண்டு அறிவானது) பரா (வித்யா என்றும்) **अपरा च** அபரா ச அபரா (வித்யா என்றும் பெயர் பெற்றுள்ளது).

அங்கிரஸ் சௌனகரிடம் இவ்விதம் கூறினார்: இரண்டு விதமான அறிவு அறியத்தக்கது என்று வேதத்தை அறிந்தவர்கள்

கூறுகிறார்கள். அந்த இவ்விரண்டு அறிவானது, பரா வித்யா என்றும் அபரா வித்யா என்றும் பெயர்பெற்றுள்ளது.

५. तत्रापरा ऋग्वेदो यजुर्वेदः सामवेदोऽथर्ववेदः
शिक्षा कल्पो व्याकरणं निरुक्तं छन्दो ज्योतिषमिति।
अथ परा यया तदक्षरमधिगम्यते॥

5. தத்ராபரா ரிக்$_3$வேதோ$_3$ யஜுர்வேத$_3$:
ஸாமவேதோ$_3$ऽத$_2$ர்வவேத$_3$:
சி$_1$க்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம்
ச$_2$ந்தோ$_3$ ஜ்யோதிஷமிதி ।
அத$_2$ பரா யயா தத$_3$க்ஷரமதி$_4$க$_3$ம்யதே ॥

तत्र தத்ர அதில் (அந்த இரண்டில்) **ऋग्वेदः** ரிக்$_3$வேத$_3$: ரிக்வேதம் **यजुर्वेदः** யஜுர்வேத$_3$: யஜுர்வேதம் **सामवेदः** ஸாமவேத$_3$: ஸாமவேதம் **अथर्ववेदः** அத$_2$ர்வவேத$_3$: அதர்வண வேதம் **शिक्षा** சி$_1$க்ஷா உச்சாரண சாஸ்த்ரம் **कल्पः** கல்ப: யாகவிதியைப்பற்றிய சாஸ்த்ரம் **व्याकरणं** வ்யாகரணம் இலக்கணம் **निरुक्तं** நிருக்தம் சொல்லின் தோற்றத்தை ஆராயும் சாஸ்த்ரம் **छन्दः** ச$_2$ந்த$_3$: செய்யுள் **ज्योतिषं** ஜ்யோதிஷம் ஜ்யோதிடம் (என்பவை) **अपरा इति** அபரா இதி அபரா (வித்யா). **अथ** அத$_2$ ஆனால் **यया** யயா எதனால் **तत्** தத் அந்த **अक्षरं** அக்ஷரம் அழிவற்ற (பரம்பொருள்) **अधिगम्यते** அதி$_4$க$_3$ம்யதே அடையப் படுகிறதோ **परा** பரா (அதுவே) பரா (வித்யா).

அந்த இரண்டில், ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம், உச்சாரண சாஸ்த்ரம், யாகவிதியைப் பற்றிய சாஸ்த்ரம், இலக்கணம், சொல்லின் தோற்றத்தை ஆராயும் சாஸ்த்ரம், செய்யுள், ஜ்யோதிடம் என்பவை அபரா வித்யா. ஆனால், எதனால் அந்த அழிவற்ற பரம்பொருள் அடையப் படுகிறதோ அதுவே பரா வித்யா.

६. यत्तदद्रेश्यमग्राह्यमगोत्रमवर्णम्
अचक्षुःश्रोत्रं तदपाणिपादम्।
नित्यं विभुं सर्वगतं सुसूक्ष्मं तदव्ययं
यद् भूतयोनिं परिपश्यन्ति धीराः॥

6. யத்தத$_3$த்$_3$ரேச்$_1$யமக்$_3$ராஹ்யமகோ$_3$த்ரமவர்ணம்
அசக்ஷு:ச்$_1$ரோத்ரம் தத$_3$பாணிபாத$_3$ம் ।
நித்யம் விபு$_4$ம் ஸர்வக$_3$தம் ஸுஸூக்ஷ்மம் தத$_3$வ்யயம்
யத்$_3$ பூ$_4$தயோனிம் பரிபச்$_1$யந்தி தீ$_4$ரா: ॥

यत् तत् யத் தத் எந்த அது (ப்ரஹ்மன்) **अद्रेश्यं** அத்$_3$ரேச்$_1$யம் (ஞானேந்த்ரியங்களால்) பார்க்கப்படாதது **अग्राह्यं** அக்$_3$ராஹ்யம் (கர்மேந்த்ரியங்களால்) க்ரஹிக்கப்படாதது **अगोत्रं** அகோ$_3$த்ரம் காரணமற்றது **अवर्णं** அவர்ணம் குணமற்றது **अचक्षुःश्रोत्रं** அசக்ஷு: ச்$_1$ரோத்ரம் கண்களும் செவிகளும் அற்றது **तत्** தத் அது **अपाणिपादं** அபாணிபாத$_3$ம் கைகளும் கால்களும் அற்றது **नित्यं** நித்யம் எப்பொழுதும் உள்ளது **विभुं** விபு$_4$ம் அனைத்துமாகத் தோற்றமளிப்பது **सर्वगतं** ஸர்வக$_3$தம் அனைத்தையும் வ்யாபிப்பது **सुसूक्ष्मं** ஸுஸூக்ஷ்மம் மிகவும் ஸூக்ஷ்மமானது **तत्** தத் அது **अव्ययं** அவ்யயம் அழிவற்றது **भूतयोनिं** பூ$_4$தயோனிம் உலகத்திற்கு உபாதான காரணமாக உள்ளது. **यत्** யத் இப்படிப்பட்ட (ப்ரஹ்மனை) **धीराः** தீ$_4$ரா: தீரர்கள் **परिपश्यन्ति** பரிபச்$_1$யந்தி எங்கும் காண்கின்றனர்.

அந்த ப்ரஹ்மன், ஞானேந்த்ரியங்களால் பார்க்கப்படாதது, கர்மேந்த்ரியங்களால் க்ரஹிக்கப்படாதது, காரணமற்றது, குணமற்றது, கண்களும் செவிகளும் அற்றது, அது கைகளும் கால்களும் அற்றது, எப்பொழுதும் உள்ளது, அனைத்துமாகத் தோற்றமளிப்பது, அனைத்தையும் வ்யாபிப்பது, மிகவும் ஸூக்ஷ்மமானது, அது அழிவற்றது, உலகத்திற்கு உபாதான காரணமாக உள்ளது. இப்படிப்பட்ட ப்ரஹ்மனை தீரர்கள் எங்கும் காண்கின்றனர்.

௭. **यथोर्णनाभिः सृजते गृह्णते च यथा पृथिव्यामोषधयः सम्भवन्ति।**
यथा सतः पुरुषात्केशलोमानि तथाक्षरात्सम्भवतीह विश्वम्॥

7. யதோ$_2$ர்ணநாபி$_4$: ஸ்ருஜதே க்$_3$ருஹ்ணதே ச
யதா$_2$ ப்ருதி$_2$வ்யாமோஷத$_4$ய: ஸம்ப$_4$வந்தி ।
யதா$_2$ ஸத: புருஷாத்கேச$_1$லோமானி
ததா$_2$க்ஷராத்ஸம்ப$_4$வதீஹ விச்$_1$வம் ॥

यथा யதா$_2$ எவ்விதம் **ऊर्णनाभिः** ஊர்ணநாபி$_4$: சிலந்தி **सृजते** ஸ்ருஜதே (வலையை) உற்பத்தி செய்கிறதோ **गृह्णते च** க்$_3$ருஹ்ணதே ச (தனக்குள்) எடுத்தும் கொள்கிறதோ **यथा** யதா$_2$ எவ்விதம் **ओषधयः** ஓஷத$_4$ய: மரங்கள் **पृथिव्यां** ப்ருதி$_2$வ்யாம் பூமியில் **सम्भवन्ति** ஸம்ப$_4$வந்தி தோன்றுகின்றனவோ **यथा** யதா$_2$ எவ்விதம் **सतः** ஸத: உயிருடன் இருக்கின்ற **पुरुषात्** புருஷாத் மனிதரிடமிருந்து **केश-लोमानि** கேச$_1$-லோமானி தலையிலும் உடலிலும் உள்ள முடிகள் (தோன்றுகின்றனவோ) **तथा** ததா$_2$ அவ்விதம் **अक्षरात्** அக்ஷராத் அழியாத (ப்ரஹ்மனிடமிருந்து) **इह** இஹ இங்கு **विश्वं** விச்$_1$வம் உலகம் **सम्भवति** ஸம்ப$_4$வதி தோன்றுகிறது.

எவ்விதம் சிலந்தி வலையை உற்பத்தி செய்கிறதோ, தனக்குள் எடுத்தும் கொள்கிறதோ, எவ்விதம் மரங்கள் பூமியில் தோன்றுகின்றனவோ, எவ்விதம் உயிருடன் இருக்கின்ற

[redacted]

ब्रह्म ப்₃ரஹ்ம ப்ரஹ்மன் **तपसा** தபஸா அறிவால் **चीयते** சீயதே (ஸ்ருஷ்டிக்குத்) தயாராகிறது. **ततः** தத: அதனிடமிருந்து (ஸ்ருஷ்டிக்குத் தயாராக இருக்கின்ற ப்ரஹ்மனிடமிருந்து) **अन्नं** அன்னம் படைக்கும் சக்தி **अभिजायते** அபி₄ஜாயதே உருவாகிறது. **अन्नात्** அன்னாத் படைக்கும் சக்தியிலிருந்து **प्राणः** ப்ராண: ஸூக்ஷ்ம ப்ரபஞ்சம் (தோன்றுகிறது). (பிறகு) **मनः** மன: ஸமஷ்டி மனமும் **सत्यं** ஸத்யம் ஸ்தூல பூதங்களும் **लोकाः** லோகா: உலகங்களும் (செயல்களும் தோன்றுகின்றன). **कर्मसु** கர்மஸு செயல்களிலிருந்து **अमृतं च** அம்ருதம் ச கர்மபலன்களும் (தோன்றுகின்றன).

ப்ரஹ்மன் அறிவால் ஸ்ருஷ்டிக்குத் தயாராகிறது. ஸ்ருஷ்டிக்குத் தயாராக இருக்கின்ற ப்ரஹ்மனிடமிருந்து படைக்கும் சக்தி உருவாகிறது. படைக்கும் சக்தியிலிருந்து ஸூக்ஷ்ம ப்ரபஞ்சம் தோன்றுகிறது. பிறகு ஸமஷ்டி மனமும் ஸ்தூல பூதங்களும் உலகங்களும் செயல்களும் தோன்றுகின்றன. செயல்களிலிருந்து கர்மபலன்களும் தோன்றுகின்றன.

படைப்பானது படிப்படியாக வந்துள்ளது என்பதே இம்மந்த்ரத்தின் மையக்கருத்து. முதலில் ப்ரஹ்மன் ஸ்ருஷ்டிக்குத் தயாராகிறது. படைக்கலாம் என்ற அறிவே ப்ரஹ்மனின் தவம்.

९. **यः सर्वज्ञः सर्वविद् यस्य ज्ञानमयं तपः।**
तस्मादेतद् ब्रह्म नाम रूपमन्नं च जायते॥

9. ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித்₃ யஸ்ய ஜ்ஞானமயம் தப: ।
தஸ்மாதே₃தத்₃ ப்₃ரஹ்ம நாம ரூபமன்னம் ச ஜாயதே ॥

यः ய: எவர் **सर्वज्ञः** ஸர்வஜ்ஞ: அனைத்தையும் ஸாமான்யமாக அறிகிறாரோ **सर्वविद्** ஸர்வவித்₃ அனைத்தையும் விசேஷமாக அறிகிறாரோ **यस्य** யஸ்ய எவருக்கு **ज्ञानमयं** ஜ்ஞானமயம் (உலகைப் படைக்கும்) அறிவே **तपः** தப: தவமாகிறதோ **तस्मात्** தஸ்மாத் அவரிடமிருந்து (ப்ரஹ்மனிடமிருந்து) **एतत्** ஏதத் இந்த **ब्रह्म** ப்₃ரஹ்ம

ஹிரண்யகர்பரும் **नाम** நாம பெயரும் **रूपं** ரூபம் உருவமும் **अन्नं च** அன்னம் ச உணவும் **जायते** ஜாயதே தோன்றுகின்றன.

எவர் அனைத்தையும் ஸாமான்யமாக அறிகிறாரோ, அனைத்தையும் விசேஷமாக அறிகிறாரோ, எவருக்கு உலகைப்படைக்கும் அறிவே தவமாகிறதோ, அந்த ப்ரஹ்ம னிடமிருந்து இந்த ஹிரண்யகர்பரும் பெயரும் உருவமும் உணவும் தோன்றுகின்றன.

इति प्रथममुण्डके प्रथमः खण्डः

முதல் முண்டகத்தில் முதல் கண்டம் முடிவுற்றது.

प्रथममुण्डके द्वितीयः खण्डः

முதல் முண்டகத்தில் இரண்டாவது கண்டம்

१. तदेतत्सत्यं मन्त्रेषु कर्माणि कवयः
यान्यपश्यंस्तानि त्रेतायां बहुधा सन्ततानि।
तान्याचरथ नियतं सत्यकामाः
एष वः पन्था: सुकृतस्य लोके॥

1. ததே₃தத்ஸத்யம் மந்த்ரேஷு கர்மாணி கவய:
யாந்யபச்₁யம்ஸ்தானி த்ரேதாயாம் ப₃ஹுதா₄ ஸந்ததானி।
தாந்யாசரத₂ நியதம் ஸத்யகாமா:
ஏஷ வ: பந்தா₂: ஸுக்ருதஸ்ய லோகே ॥

तत् एतत् தத் ஏதத் இது (இங்கு சொல்லப்படுவது) **सत्यं** ஸத்யம் (முற்றிலும்) உண்மை. **कवयः** கவய: ரிஷிகள் **यानि** யானி எந்த **कर्माणि** கர்மாணி யாகங்களை **मन्त्रेषु** மந்த்ரேஷு மந்த்ரங்களுக்குள் **अपश्यन्** அபச்₁யன் பார்த்தார்களோ **तानि** தானி அவை **त्रेतायां** த்ரேதாயாம் மூன்று (வேதங்களில்) **बहुधा** ப₃ஹுதா₄ பலவிதமாக **सन्ततानि** ஸந்ததானி விரிந்து அமைந்துள்ளன. **सत्यकामाः** ஸத்ய காமா: கர்மபலத்தில் விருப்பம் உடையவர்களே **तानि** தானி அவைகளை (அந்தக் கர்மங்களை) **नियतं** நியதம் முறையாக **आचरथ** ஆசரத₂ அனுஷ்டானம் செய்வீர்களாக. **सुकृतस्य** ஸுக்ருதஸ்ய (உங்களால் செய்யப்பட்ட) கர்மத்தின் **लोके** லோகே பலனை அடைவதற்கு **वः** வ: உங்களுக்கு **एषः** ஏஷ: இதுவே **पन्थाः** பந்தா₂: மார்க்கமாக (உள்ளது).

இங்கு சொல்லப்படுவது முற்றிலும் உண்மை. ரிஷிகள் எந்த யாகங்களை மந்த்ரங்களுக்குள் பார்த்தார்களோ, அவை மூன்று வேதங்களில் பலவிதமாக விரிந்து அமைந்துள்ளன. கர்மபலத்தில் விருப்பம் உடையவர்களே, அந்தக் கர்மங்களை முறையாக அனுஷ்டானம் செய்வீர்களாக. உங்களால்

செய்யப்பட்ட கர்மத்தின் பலனை அடைவதற்கு உங்களுக்கு இதுவே மார்கமாக உள்ளது.

२. यदा लेलायते ह्यर्चिः समिद्धे हव्यवाहने।
तदाज्यभागावन्तरेण आहुतीः प्रतिपादयेत्॥

2. யதா$_3$ லேலாயதே ஹ்யர்சி: ஸமித்$_3$தே$_4$ ஹவ்யவாஹனே ।
ததா$_3$ஜ்யபா$_4$கா$_3$வந்தரேண ஆஹுதீ: ப்ரதிபாத$_3$யேத் ॥

यदा யதா$_3$ எப்பொழுது **समिद्धे** ஸமித்$_3$தே$_4$ நன்கு தூண்டிவிடப்பட்ட **हव्यवाहने** ஹவ்யவாஹனே நெருப்பில் **अर्चिः हि** அர்சி: ஹி சுடரானது **लेलायते** லேலாயதே மேல்நோக்கியுள்ளதோ **तदा** ததா$_3$ அப்பொழுது **आज्यभागौ** ஆஜ்யபா$_4$கௌ$_3$ வடக்குப்பகுதிக்கும் தெற்குப்பகுதிக்கும் **अन्तरेण** அந்தரேண இடையில் **आहुतीः** ஆஹுதீ: யாகத்திற்கான பொருள்களை **प्रतिपादयेत्** ப்ரதிபாத$_3$யேத் அர்ப்பணம் செய்ய வேண்டும்.

எப்பொழுது நன்கு தூண்டிவிடப்பட்ட நெருப்பில் சுடரானது மேல்நோக்கியுள்ளதோ, அப்பொழுது வடக்குப்பகுதிக்கும் தெற்குப்பகுதிக்கும் இடையில் யாகத்திற்கான பொருள்களை அர்ப்பணம் செய்யவேண்டும்.

३. यस्याग्निहोत्रमदर्शमपौर्णमासम्
अचातुर्मास्यमनाग्रयणमतिथिवर्जितं च।
अहुतमवैश्वदेवमविधिना हुतम्
आसप्तमांस्तस्य लोकान्हिनस्ति॥

3. யஸ்யாக்$_3$னிஹோத்ரமத$_3$ர்ச$_1$மபௌர்ணமாஸம்
அசாதுர்மாஸ்யமனாக்$_3$ரயணமதிதி$_2$வர்ஜிதம் ச ।
அஹுதமவைச்$_1$வதே$_3$வமவிதி$_4$னா ஹுதம்
ஆஸப்தமாம்ஸ்தஸ்ய லோகான்ஹினஸ்தி ॥

यस्य யஸ்ய எவருடைய **अग्निहोत्रं** அக்₃னிஹோத்ரம் அக்னி ஹோத்ரமானது **अदर्श** அத₃ர்ச₁ம் தர்சம் (என்ற யாகம்) அற்றதாகவும் **अपौर्णमासं** அபௌர்ணமாஸம் பௌர்ணமாஸம் (என்ற யாகம்) அற்றதாகவும் **अचातुर्मास्यं** அசாதுர்மாஸ்யம் சாதுர்மாஸ்யம் (என்ற யாகம்) அற்றதாகவும் **अनाग्रयणं** அனாக்₃ரயணம் ஆக்ரயணம் (என்ற யாகம்) அற்றதாகவும் **अतिथिवर्जितं च** அதிதி₂வர்ஜிதம் ச விருந் தோம்பல் அற்றதாகவும் **अहुतं** அஹுதம் முறையான காலத்தில் செய்யப்படாததாகவும் **अवैश्वदेवं** அவைச்₁வதே₃வம் வைச்வதேவம் (என்ற யாகம்) அற்றதாகவும் **अविधिना हुतं** அவிதி₄னா ஹுதம் முறைப்படி செய்யப்படாததாகவும் (அமைகிறதோ) **तस्य** தஸ்ய அவருக்கு **आसप्तमान् लोकान्** ஆஸப்தமான் லோகான் ஏழு உலகங்கள் வரை (செல்ல உதவும் புண்யங்கள்) **हिनस्ति** ஹினஸ்தி அழிகின்றன.

எவருடைய அக்னிஹோத்ரமானது தர்சம் என்ற யாகம் அற்றதாகவும் பௌர்ணமாஸம் என்ற யாகம் அற்றதாகவும் சாதுர்மாஸ்யம் என்ற யாகம் அற்றதாகவும் ஆக்ரயணம் என்ற யாகம் அற்றதாகவும் விருந்தோம்பல் அற்றதாகவும் முறையான காலத்தில் செய்யப்படாததாகவும் வைச்வதேவம் என்ற யாகம் அற்றதாகவும் முறைப்படி செய்யப்படாததாகவும் அமைகிறதோ, அவருக்கு ஏழு உலகங்கள் வரை செல்ல உதவும் புண்யங்கள் அழிகின்றன.

அக்னிஹோத்ரமானது இங்கு குறிப்பிட்ட யாகங்களுடன் செய்யப் படவேண்டும். இங்கு குறிப்பிட்ட யாகங்களை செய்யவில்லை என்றால் அக்னி ஹோத்ரம் செய்வதால் மட்டும் பயன் இல்லை. காம்யமாக செய்யும் கர்மத்தை முறையாக செய்யவில்லை என்றால் விபரீத பலனும் ஏற்படுகிறது என்ற கருத்தும் இங்கு புகட்டப் படுகிறது.

४. **काली कराली च मनोजवा च सुलोहिता या च सुधूम्रवर्णा।**
स्फुलिङ्गिनी विश्वरुची च देवी लेलायमाना इति सप्तजिह्वाः ।।

4. காலீ கராலீ ச மனோஜவா ச
ஸுலோஹிதா யா ச ஸுதூ4ம்ரவர்ணா ।
ஸ்பு2லிங்கி3னீ விச்1வருசீ ச தே3வீ
லேலாயமானா இதி ஸப்த ஜிஹ்வா: ॥

काली காலீ கருமையான சுடர் **कराली च** கராலீ ச மிக உஷ்ணமான சுடர் **मनोजवा च** மனோஜவா ச மனதைப்போல் வேகமாக அசையும் சுடர் **सुलोहिता** ஸுலோஹிதா அடர்ந்த சிவப்புச்சுடர் **या च सुधूम्रवर्णा** யா ச ஸுதூ4ம்ரவர்ணா புகையின் வர்ணத்தையுடைய சுடர் **स्फुलिङ्गिनी** ஸ்பு2லிங்கி3னீ பளிச்சிடும் சுடர் **विश्वरुची च देवी** விச்1வருசீ ச தே3வீ பல வர்ணங்களுடன் கூடிய சுடர் **इति** இதி என்று **लेलायमाना:** லேலாயமானா: ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற (நெருப்பிற்கு) **सप्त-जिह्वा:** ஸப்த-ஜிஹ்வா: ஏழு நாக்குகள் (உள்ளன).

கருமையான சுடர், மிக உஷ்ணமான சுடர், மனதைப்போல் வேகமாக அசையும் சுடர், அடர்ந்த சிவப்புச் சுடர், புகையின் வர்ணத்தையுடைய சுடர், பளிச்சிடும் சுடர், பல வர்ணங்களுடன் கூடிய சுடர் என்று, ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற நெருப்பிற்கு ஏழு நாக்குகள் உள்ளன.

५. एतेषु यश्चरते भ्राजमानेषु यथाकालं चाहुतयो ह्याददायन्।
तं नयन्त्येताः सूर्यस्य रश्मयः यत्र देवानां पतिरेकोऽधिवासः॥

5. ஏதேஷு யச்1சரதே ப்4ராஜமானேஷு
யதா2காலம் சாஹுதயோ ஹ்யாத3தா3யன் ।
தம் நயந்த்யேதா: ஸூர்யஸ்ய ரச்1மய:
யத்ர தே3வானாம் பதிரேகோऽதி4வாஸ: ॥

य: ய: யார் **एतेषु भ्राजमानेषु** ஏதேஷு ப்4ராஜமானேஷு இந்த ஒளிர்கின்ற சுடர்களில் **यथाकालं** யதா2காலம் சரியான காலத்தில் **चरते** சரதே (யாகத்தை) செய்கிறானோ (அவனை) **आददायन् हि** ஆத3தா3யன் ஹி அழைத்துச்செல்கின்ற **एता:** ஏதா: இந்த **आहुतय: च**

ஆஹுதய: ச ஆஹுதிகள் **सूर्यस्य** ஸூர்யஸ்ய ஸூர்யனுடைய **रश्मय:** ரச்$_1$மய: ஒளிக்கதிர்களாக (மாறி) **यत्र** யத்ர எங்கு **अधिवास:** அதி$_4$வாஸ: ஆள்கின்ற **एक:** ஏக: ஒருவனான **देवानां** தே$_3$வானாம் தேவர்களின் **पति:** பதி: தலைவன் (உள்ளானோ அங்கு) **तं** தம் அந்த (யஜமானனை) **नयन्ति** நயந்தி அழைத்துச் செல்கின்றன.

யார் இந்த ஒளிர்கின்ற சுடர்களில், சரியான காலத்தில் யாகத்தை செய்கிறானோ, அவனை அழைத்துச் செல்கின்ற இந்த ஆஹுதிகள், ஸூர்யனுடைய ஒளிக்கதிர்களாக மாறி, எங்கு ஆள்கின்ற ஒருவனான தேவர்களின் தலைவன் உள்ளானோ அங்கு அந்த யஜமானனை அழைத்துச்செல்கின்றன.

६. एह्येहीति तमाहुतय: सुवर्चस:
सूर्यस्य रश्मिभिर्यजमानं वहन्ति।
प्रियां वाचमभिवदन्त्योऽर्चयन्त्य:
एष व: पुण्य: सुकृतो ब्रह्मलोक: ॥

6. ஏஹ்யேஹீதி தமாஹுதய: ஸுவர்சஸ:
ஸூர்யஸ்ய ரச்$_1$மிபி$_4$ர்யஜமானம் வஹந்தி।
ப்ரியாம் வாசமபி$_4$வத$_3$ந்த்யோऽர்சயந்த்ய:
ஏஷ வ: புண்ய: ஸுக்ருதோ ப்$_3$ரஹ்மலோக: ॥

सूर्यस्य ஸூர்யஸ்ய ஸூர்யனுடைய **रश्मिभि:** ரச்$_1$மிபி$_4$: ஒளிக்கதிர் களாக உள்ள **सुवर्चस:** ஸுவர்சஸ: ஒளிபொருந்திய **आहुतय:** ஆஹுதய: ஆஹுதிகள் **एहि एहि** ஏஹி ஏஹி வாரும் வாரும் **इति** இதி என்றும் **व:** வ: உங்களுடைய **पुण्य:** புண்ய: நல்ல **सुकृत:** ஸுக்ருத: கர்மத்தினுடைய பலனானது **एष:** ஏஷ: இந்த **ब्रह्मलोक:** ப்$_3$ரஹ்மலோக: ப்ரஹ்மலோகம் (என்றும்) **प्रियां** ப்ரியாம் ப்ரியமான **वाचं** வாசம் சொற்களை **अभिवदन्त्य:** அபி$_4$வத$_3$ந்த்ய: கூறிக் கொண்டும் **अर्चयन्त्य:** அர்சயந்த்ய: வணங்கிக்கொண்டும் **तं** தம் அந்த **यजमानं** யஜமானம் யஜமானனை **वहन्ति** வஹந்தி அழைத்துச் செல்கின்றன.

ஸூர்யனுடைய ஒளிக்கதிர்களாக உள்ள ஒளி பொருந்திய ஆஹுதிகள் வாரும் வாரும் என்றும் உங்களுடைய நல்ல கர்மத்தினுடைய பலனானது இந்த ப்ரஹ்மலோகம் என்றும் ப்ரியமான சொற்களைக் கூறிக்கொண்டும் வணங்கிக் கொண்டும் அந்த யஜமானனை அழைத்துச் செல்கின்றன.

இங்கு ப்ரஹ்மலோகம் என்ற சொல் ஸ்வர்கலோகத்தைக் குறிக்கிறது. இதுவரை கர்மத்தால் அடையப்படும் பலன்கள் கூறப்பட்டது. இனி கர்மத்தையே பற்றியுள்ளவர்கள் அடையும் கீழ்மையைப் பற்றியும் கர்மபலத்தின் நிலையாமை பற்றியும் பேசப்படுகிறது.

७. प्लवा ह्येते अदृढा यज्ञरूपाः अष्टादशोक्तमवरं येषु कर्म।
एतच्छ्रेयो येऽभिनन्दन्ति मूढाः जरामृत्युं ते पुनरेवापि यन्ति॥

7. ப்லவா ஹ்யேதே அத்$_3$ருடா$_4$ யஞ்ஞரூபா:
அஷ்டாத$_3$சோ$_1$க்தமவரம் யேஷு கர்ம ।
ஏதச்ச்$_2$ரேயோ யேऽபி$_4$னந்த$_3$ந்தி மூடா$_4$:
ஜராம்ருத்யும் தே புனரேவாபி யந்தி ॥

येषु ஏஷு எந்த (யஞ ஸாதனங்களை) **अवरं** அவரம் அல்பமான (பலன்தரும்) **कर्म** கர்ம கர்மம் (சார்ந்துள்ளதாக) **उक्तं** உக்தம் (சாஸ்த்ரத்தினால்) கூறப்பட்டுள்ளதோ **एते** ஏதே அந்த **अष्टादश** அஷ்டாத$_3$ச$_1$ பதினெட்டு **यज्ञरूपाः** யஞ்ஞரூபா: யஞத்திற்கான ஸாதனங்கள் **अदृढाः** அத்$_3$ருடா$_4$: உறுதியற்ற **प्लवाः** **हि** ப்லவா: ஹி படகுகள் (போன்றதாகின்றன). **ये मूढाः** யே மூடா$_4$: எந்த மூடர்கள் **एतत्** ஏதத் இதை (கர்மத்தை) **श्रेयः** ச்$_1$ரேய: மோக்ஷ ஸாதனமாக **अभिनन्दन्ति** அபி$_4$னந்த$_3$ந்தி கருதுகிறார்களோ **ते** தே அவர்கள் **पुनः** **एव** புன: ஏவ மீண்டும் மீண்டும் **जरामृत्युं** ஜராம்ருத்யும் வயோதி கத்தையும் மரணத்தையும் **अपियन्ति** அபியந்தி அடைகிறார்கள்.

எந்த யஞஸாதனங்களை அல்பமான பலன் தரும் கர்மம் சார்ந்துள்ளதாக சாஸ்த்ரத்தினால் கூறப்பட்டுள்ளதோ, அந்தப் பதினெட்டு யஞத்திற்கான ஸாதனங்கள் உறுதியற்ற படகுகள்

போன்றதாகின்றன. எந்த மூடர்கள் இந்தக் கர்மத்தை மோக்ஷ ஸாதனமாகக் கருதுகிறார்களோ, அவர்கள் மீண்டும் மீண்டும் வயோதிகத்தையும் மரணத்தையும் அடைகிறார்கள்.

> பதினெட்டு யக்ஞத்திற்கான ஸாதனங்கள் என்பது யாகங்களை செய்ய உதவும் பதினாறு ரித்விக்குகள், யஜமானன், யஜமானனின் மனைவி. இந்த நிலையற்ற மனிதர்களை சார்ந்து இருக்கும் யாகமும் நிலையற்ற பலனைத் தான் கொடுக்கும் என்பது கருத்து.

८. अविद्यायामन्तरे वर्तमानाः स्वयं धीराः पण्डितं मन्यमानाः ।
जङ्घन्यमानाः परियन्ति मूढाः अन्धेनैव नीयमाना यथान्धाः ॥

8. அவித்$_3$யாயாமந்தரே வர்தமானா:
ஸ்வயம் தீ$_4$ரா: பண்டி$_3$தம் மன்யமானா: ।
ஜங்க$_4$ன்யமானா: பரியந்தி மூடா$_4$:
அந்தே$_4$னைவ நீயமானா யதா$_2$ந்தா$_4$: ॥

अविद्यायां अन्तरे அவித்$_3$யாயாம் அந்தரே அறியாமையின் மையத்தில் **वर्तमानाः** வர்தமானா: (மூழ்கி) இருப்பவர்கள் **स्वयं** ஸ்வயம் தங்களை **धीराः** தீ$_4$ரா: அறிவுடையவர்களாகவும் **पण्डितं मन्यमानाः** பண்டி$_3$தம் மன்யமானா: ஞானிகளாகவும் கருதுகின்ற **मूढाः** மூடா$_4$: அறிவிலிகள் **अन्धेन एव** அந்தே$_4$ன ஏவ குருடனாலேயே **नीयमानाः** நீயமானா: வழிநடத்தப்படுகின்ற **अन्धाः यथा** அந்தா$_4$: யதா$_2$ குருடர்கள் போல **जङ्घन्यमानाः** ஜங்க$_4$ன்யமானா: தொடர்ந்து துயரத்தால் தாக்கப் பட்டவர்களாக **परियन्ति** பரியந்தி அலைகிறார்கள்.

அறியாமையின் மையத்தில் மூழ்கி இருப்பவர்கள், தங்களை அறிவுடையவர்களாகவும் ஞானிகளாகவும் கருதுகின்ற அறிவிலிகள், குருடனாலேயே வழிநடத்தப்படுகின்ற குருடர்கள் போலத் தொடர்ந்து துயரத்தால் தாக்கப்பட்டவர்களாக அலைகிறார்கள்.

९. अविद्यायां बहुधा वर्तमानाः वयं कृतार्था इत्यभिमन्यन्ति बालाः।
यत्कर्मिणो न प्रवेदयन्ति रागात् तेनातुराः क्षीणलोकाश्च्यवन्ते॥

9. அவித்$_3$யாயாம் ப$_3$ஹுதா$_4$ வர்தமானா:
வயம் க்ருதார்தா$_2$ இத்யபி$_4$மந்யந்தி பா$_3$லா: ।
யத்கர்மிணோ ந ப்ரவேத$_3$யந்தி ராகா$_3$த்
தேனாதுரா: க்ஷீணலோகாச்$_1$ச்யவந்தே ॥

अविद्यायां அவித்$_3$யாயாம் அறியாமையில் **बहुधा** ப$_3$ஹுதா$_4$ வித விதமாக **वर्तमानाः** வர்தமானா: (மூழ்கி) இருப்பவர்களும் **बालाः** பா$_3$லா: பக்குவம் அடையாதவர்களும் **वयं** வயம் நாங்கள் **कृत-अर्थाः** க்ருத-அர்தா$_2$: அடையவேண்டியதை அடைந்துள்ளோம் **इति** இதி என்று **अभिमन्यन्ति** அபி$_4$மந்யந்தி கருதுகிறார்கள். **कर्मिणः** கர்மிண: கர்மத்தைப் பற்றியுள்ளோர் **रागात्** ராகா$_3$த் அவாவின் நிமித்தமாக (மோக்ஷத்தின் மஹிமையை) **यत्** யத் எதனால் **न प्रवेदयन्ति** ந ப்ரவேத$_3$யந்தி அறிவதில்லையோ **तेन** தேன அதனால் **आतुराः** ஆதுரா: துயரப்பட்டவர்களாகவும் **क्षीणलोकाः** க்ஷீணலோகா: கர்ம பலத்தை இழந்தவர்களாகவும் **च्यवन्ते** ச்யவந்தே வீழ்கிறார்கள்.

அறியாமையில் விதவிதமாக மூழ்கி இருப்பவர்களும் பக்குவம் அடையாதவர்களும் நாங்கள் அடையவேண்டியதை அடைந்துள்ளோம் என்று கருதுகிறார்கள். கர்மத்தைப் பற்றி யுள்ளோர், அவாவின் நிமித்தமாக மோக்ஷத்தின் மஹிமையை எதனால் அறிவதில்லையோ, அதனால் துயரப்பட்ட வர்களாகவும் கர்மபலத்தை இழந்தவர்களாகவும் வீழ்கிறார்கள்.

१०. इष्टापूर्तं मन्यमाना वरिष्ठं नान्यच्छ्रेयो वेदयन्ते प्रमूढाः।
नाकस्य पृष्ठे ते सुकृतेऽनुभूत्वा इमं लोकं हीनतरं वा विशन्ति॥

10. இஷ்டாபூர்தம் மன்யமானா வரிஷ்ட₂ம்
நான்யச்ச்₂ரேயோ வேத₃யந்தே ப்ரமூடா₄: ।
நாகஸ்ய ப்ருஷ்டே₂ தே ஸுக்ருதேऽனுபூ₄த்வா
இமம் லோகம் ஹீனதரம் வா விச₁ந்தி ॥

इष्टा-पूर्तं இஷ்டா-பூர்தம் யாகத்தையும் ஸேவையையும் **वरिष्ठं** வரிஷ்ட₂ம் மேலானதாக **मन्यमानाः** மன்யமானா: நினைப்பவர்களான **प्रमूढाः** ப்ரமூடா₄: அறிவிலிகள் **अन्यत्** அன்யத் (இவற்றுக்கு) வேறான **श्रेयः** ச்₁ரேய: மேலானதை **न वेदयन्ते** ந வேத₃யந்தே அறியமாட்டார்கள். **ते** தே அவர்கள் **सुकृते** ஸுக்ருதே புண்யத்தால் அடையப்படும் **पृष्ठे** ப்ருஷ்டே₂ உயர்மட்ட **नाकस्य** நாகஸ்ய ஸ்வர்கத்தில் **अनुभूत्वा** அனுபூ₄த்வா (கர்மபலத்தை) அனுபவித்து **इमं** இமம் இந்த **लोकं** லோகம் உலகத்தை **वा** வா அல்லது **हीनतरं** ஹீனதரம் கீழான (உலகத்தை) **विशन्ति** விச₁ந்தி அடைகிறார்கள்.

யாகத்தையும் ஸேவையையும் மேலானதாக நினைப்பவர் களான அறிவிலிகள், இவற்றுக்கு வேறான மேலானதை அறியமாட்டார்கள். அவர்கள் புண்யத்தால் அடையப்படும் உயர்மட்ட ஸ்வர்கத்தில் கர்மபலத்தை அனுபவித்து, இந்த உலகத்தை அல்லது கீழான உலகத்தை அடைகிறார்கள்.

யாகமும் ஸேவையும் மட்டுமே நேரடியாக மோக்ஷத்தைக் கொடுக்கும் என்ற கருத்தே நிராகரிக்கப்பட்டுள்ளது. யாகம், ஸேவை போன்றவை நம்மைப் பண்படுத்த முற்றிலும் அவசியம் என்ற கருத்து நிராகரிக்கப் படவில்லை என்பதை உணரவேண்டும்.

११. तपःश्रद्धे ये ह्युपवसन्त्यरण्ये शान्ता विद्वांसो भैक्षचर्यां चरन्तः।
सूर्यद्वारेण ते विरजाः प्रयान्ति यत्रामृतः स पुरुषो ह्यव्ययात्मा॥

11. தப:ச்₁ரத்₃தே₄ யே ஹ்யுபவஸந்த்யரண்யே
சா₁ந்தா வித்₃வாம்ஸோ பை₄க்ஷசர்யாம் சரந்த: ।
ஸூர்யத்₃வாரேண தே விரஜா: ப்ரயாந்தி
யத்ராம்ருத: ஸ புருஷோ ஹ்யவ்யயாத்மா ॥

ये विद्वांस: யே வித்$_3$வாம்ஸ: எந்த உபாஸகர்கள் **शान्ता:** சா$_1$ந்தா: கட்டுப்பாட்டை அடைந்தவர்களாகவும் **भैक्षचर्यां चरन्त:** பை$_4$க்ஷசர்யாம் சரந்த: யாசித்தலை மேற்கொண்டவர்களாகவும் **अरण्ये** அரண்யே வனத்தில் **तप:श्रद्धे हि** தப:ச்$_1$ரத்$_3$தே$_4$ ஹி தவத்தையும் த்யானத்தையும் **उपवसन्ति** உபவஸந்தி அனுஷ்டிக்கிறார்களோ **ते** தே அவர்கள் **विरजा:** விரஜா: தூய்மையானவர்களாக **सूर्यद्वारेण** ஸூர்யத்$_3$வாரேண ஸூர்ய மார்கத்தில் **यत्र** யத்ர எங்கு **स:** ஸ: அந்த **अमृत:** அம்ருத: என்றுமுள்ள **अव्ययात्मा हि** அவ்யயாத்மா ஹி அழியாத **पुरुष:** புருஷ: ஹிரண்யகர்பர் (இருக்கிறாரோ அங்கு) **प्रयान्ति** ப்ரயாந்தி செல்கிறார்கள்.

எந்த உபாஸகர்கள், கட்டுப்பாட்டை அடைந்தவர்களாகவும் யாசித்தலை மேற்கொண்டவர்களாகவும் வனத்தில் தவத்தையும் த்யானத்தையும் அனுஷ்டிக்கிறார்களோ, அவர்கள் தூய்மை யானவர்களாக, ஸூர்யமார்கத்தில் எங்கு அந்த என்றுமுள்ள, அழியாத ஹிரண்யகர்பர் இருக்கிறாரோ அங்கு செல்கிறார்கள்.

१२. परीक्ष्य लोकान्कर्मचितान्ब्राह्मण:
निर्वेदमायान्नास्त्यकृत: कृतेन।
तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत्
समित्पाणि: श्रोत्रियं ब्रह्मनिष्ठम्॥

12. பரீக்ஷ்ய லோகான்கர்மசிதான்ப்$_3$ராஹ்மண:
நிர்வேத$_3$மாயாந்நாஸ்த்யக்ருத: க்ருதேன ।
தத்$_3$விஞானார்த$_2$ம் ஸ கு$_3$ருமேவாபி$_4$க$_3$ச்சே$_2$த்
ஸமித்பாணி: ச்$_1$ரோத்ரியம் ப்$_3$ரஹ்மநிஷ்ட$_2$ம் ॥

ब्राह्मण: ப்$_3$ராஹ்மண: ஸத்வ குணத்தை அடைந்த ஸாதகன் **कर्मचितान्** கர்மசிதான் கர்மத்தாலும் (உபாஸனையாலும்) அடையப்பட்ட **लोकान्** லோகான் உலகங்களை **परीक्ष्य** பரீக்ஷ்ய ஆராய்ச்சி செய்து **निर्वेदं** நிர்வேத$_3$ம் வைராக்யத்தை **आयात्** ஆயாத் அடைகின்றான். **अकृत:** அக்ருத: (செயலினால்) உருவாக்கப்படாத (ப்ரஹ்மன்) **कृतेन**

க்ருதேன செயலினால் **न अस्ति** ந அஸ்தி அடையப்படாதது. **तत्** தத் ஆகவே **सः** ஸ: அவன் **समित्पाणिः** ஸமித்பாணி: ஸமித்தைக் கையில் ஏந்தியவனாக **विज्ञानार्थं** விஞானார்த$_2$ம் அறிவை அடைவதற்கு **श्रोत्रियं** ச்$_1$ரோத்ரியம் மரபுவழியில் வந்த **ब्रह्मनिष्ठं** ப்$_3$ரஹ்மநிஷ்ட$_2$ம் ப்ரஹ்மனில் நிலைபெற்ற **गुरुं** கு$_3$ரும் குருவை **अभिगच्छेत् एव** அபி$_4$க$_3$ச்சே$_2$த் ஏவ அடைந்துதான் ஆகவேண்டும்.

ஸத்வ குணத்தை அடைந்த ஸாதகன், கர்மத்தாலும் உபாஸனையாலும் அடையப்பட்ட உலகங்களை ஆராய்ச்சி செய்து வைராக்யத்தை அடைகின்றான். செயலினால் உருவாக்கப்படாத ப்ரஹ்மன் செயலினால் அடையப்படாதது. ஆகவே அவன் ஸமித்தைக் கையில் ஏந்தியவனாக, அறிவை அடைவதற்கு மரபு வழியில் வந்த, ப்ரஹ்மனில் நிலைபெற்ற குருவை அடைந்துதான் ஆகவேண்டும்.

१३. तस्मै स विद्वानुपसन्नाय सम्यक्
प्रशान्तचित्ताय शमान्विताय।
येनाक्षरं पुरुषं वेद सत्यं
प्रोवाच तां तत्त्वतो ब्रह्मविद्याम्॥

13. தஸ்மை ஸ வித்$_3$வானுபஸன்னாய ஸம்யக்
ப்ரசா$_1$ந்தசித்தாய ச$_1$மாந்விதாய ।
யேனாக்ஷரம் புருஷம் வேத$_3$ ஸத்யம்
ப்ரோவாச தாம் தத்த்வதோ ப்$_3$ரஹ்மவித்$_3$யாம் ॥

सः विद्वान् ஸ: வித்$_3$வான் அந்த ஞானியானவர் **सम्यक्** ஸம்யக் முறையாக **उपसन्नाय** உபஸன்னாய அணுகிய **शमान्विताय** ச$_1$மாந்விதாய இந்த்ரிய ஒழுக்கத்தையுடைய **प्रशान्तचित्ताय** ப்ரசா$_1$ந்த சித்தாய மனத்தூய்மையுடைய **तस्मै** தஸ்மை அவனுக்கு **येन** யேன எந்த (அறிவால்) **अक्षरं** அக்ஷரம் அழியாத **सत्यं** ஸத்யம் உண்மையான **पुरुषं** புருஷம் ப்ரஹ்மனை (குருவானவர்) **वेद** வேத$_3$

அறிவாரோ **तां** தாம் அந்த **ब्रह्मविद्यां** ப்₃ரஹ்மவித்₃யாம் ப்ரஹ்மனைப் பற்றிய அறிவை **तत्त्वतः** தத்த்வத: தெளிவாக **प्रोवाच** ப்ரோவாச உபதேசிக்கவேண்டும்.

அந்த ஞானியானவர், முறையாக அணுகிய, இந்த்ரிய ஒழுக்கத்தையுடைய, மனத்தூய்மையுடைய அவனுக்கு, எந்த அறிவால் அழியாத, உண்மையான, ப்ரஹ்மனை குருவானவர் அறிவாரோ, அந்த ப்ரஹ்மனைப் பற்றிய அறிவைத் தெளிவாக உபதேசிக்க வேண்டும்.

इति प्रथममुण्डके द्वितीयः खण्डः

முதல் முண்டகத்தில் இரண்டாவது கண்டம் முடிவுற்றது.

द्वितीयमुण्डके प्रथमः खण्डः

இரண்டாவது முண்டகத்தில் முதல் கண்டம்

१. तदेतत्सत्यं यथा सुदीप्तात्पावकाद्
विस्फुलिङ्गाः सहस्रशः प्रभवन्ते सरूपाः ।
तथाक्षराद्विविधाः सोम्य भावाः
प्रजायन्ते तत्र चैवापि यन्ति ॥

1. ததே$_3$தத்ஸத்யம் யதா$_2$ ஸுதீ$_3$ப்தாத்பாவகாத்$_3$
விஸ்பு$_2$லிங்கா$_3$: ஸஹஸ்ரச$_1$: ப்ரப$_4$வந்தே ஸரூபா: ।
ததா$_2$க்ஷராத்$_3$விவிதா$_4$: ஸோம்ய பா$_4$வா:
ப்ரஜாயந்தே தத்ர சைவாபி யந்தி ॥

तत् एतत् தத் ஏதத் இது (இங்கு சொல்லப்படுவது) **सत्यं** ஸத்யம் (முற்றிலும்) உண்மை. **सोम्य** ஸோம்ய ப்ரியமானவனே **यथा** யதா$_2$ எவ்விதம் **सुदीप्तात्** ஸுதீ$_3$ப்தாத் ஒளிர்கின்ற **पावकात्** பாவகாத் நெருப்பினிடமிருந்து **सहस्रशः** ஸஹஸ்ரச$_1$: ஆயிரக்கணக்கான **सरूपाः** ஸரூபா: (நெருப்பின்) தன்மையான **विस्फुलिङ्गाः** விஸ்பு$_2$லிங்கா$_3$: பொறிகள் **प्रभवन्ते** ப்ரப$_4$வந்தே தோன்றுகின்றனவோ **तथा** ததா$_2$ அவ்விதம் **अक्षरात्** அக்ஷராத் அழியாத (ப்ரஹ்ம நிடமிருந்து) **विविधाः** விவிதா$_4$: பலவித **भावाः** பா$_4$வா: உயிரினங்கள் **प्रजायन्ते** ப்ரஜாயந்தே தோன்றுகின்றன. **तत्र एव च** தத்ர ஏவ ச அதனிடத்திலேயே **अपियन्ति** அபியந்தி (உயிரினங்கள்) ஒடுங்குகின்றன.

இங்கு சொல்லப்படுவது முற்றிலும் உண்மை. ப்ரியமானவனே, எவ்விதம் ஒளிர்கின்ற நெருப்பினிடமிருந்து ஆயிரக்கணக்கான நெருப்பின் தன்மையான பொறிகள் தோன்றுகின்றனவோ, அவ்விதம் அழியாத ப்ரஹ்மனிடமிருந்து பலவித உயிரினங்கள் தோன்றுகின்றன. அதனிடத்திலேயே உயிரினங்கள் ஒடுங்குகின்றன.

ப்ரஹ்மனிடமிருந்து ஜீவன் தோன்றினான் என்பதற்கு இங்கு கொடுக்கப்படும் உதாரணத்திலிருந்து, ப்ரஹ்மனும் ஜீவனும் உண்மையில் வேற்றுமை அற்ற ஸ்வரூபம் என்று விளங்குகிறது.

२. दिव्यो ह्यमूर्तः पुरुषः सबाह्याभ्यन्तरो ह्यजः।
अप्राणो ह्यमनाः शुभ्रः ह्यक्षरात्परतः परः॥

2. தி₃வ்யோ ஹ்யமூர்த: புருஷ: ஸபா₃ஹ்யாப்₄யந்தரோ ஹ்யஜ: ।
அப்ராணோ ஹ்யமனா: சு₁ப்₄ர: ஹ்யக்ஷராத்பரத: பர: ॥

पुरुषः புருஷ: (அந்த) ப்ரஹ்மன் **दिव्यः** தி₃வ்ய: ஸ்வயமாக ப்ரகாசிப்பது **अमूर्तः हि** அமூர்த: ஹி உருவமற்றது **सबाह्याभ्यन्तरः** ஸபா₃ஹ்யாப்₄யந்தர: உள்ளேயும் வெளியேயும் உள்ளது **अजः हि** அஜ: ஹி பிறப்பற்றது **अप्राणः** அப்ராண: ப்ராணனற்றது **अमनाः हि** அமனா: ஹி மனமற்றது **शुभ्रः** சு₁ப்₄ர: தூய்மையானது **परतः** பரத: மேலான **अक्षरात् हि** அக்ஷராத் ஹி மாயையைக்காட்டிலும் **परः** பர: மேலானது.

அந்த ப்ரஹ்மன் ஸ்வயமாக ப்ரகாசிப்பது, உருவமற்றது, உள்ளேயும் வெளியேயும் உள்ளது, பிறப்பற்றது, ப்ராணனற்றது, மனமற்றது, தூய்மையானது, மேலான மாயையைக் காட்டிலும் மேலானது.

३. एतस्माज्जायते प्राणः मनः सर्वेन्द्रियाणि च।
खं वायुर्ज्योतिरापः पृथिवी विश्वस्य धारिणी॥

3. ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராண: மன: ஸர்வேந்த்₃ரியாணி ச ।
க₂ம் வாயுர்ஜ்யோதிராப: ப்ருதி₂வீ விச்₁வஸ்ய தா₄ரிணீ ॥

एतस्मात् ஏதஸ்மாத் இதனிடமிருந்து (இந்த ப்ரஹ்மனிடமிருந்து) **प्राणः** ப்ராண: ப்ராணன் **मनः** மன: மனம் **सर्वेन्द्रियाणि च** ஸர்வேந்த்₃ரியாணி ச அனைத்து இந்த்ரியங்கள் **खं** க₂ம் ஆகாசம் **वायुः** வாயு: காற்று **ज्योतिः** ஜ்யோதி: நெருப்பு **आपः** ஆப: நீர் **विश्वस्य** விச்₁வஸ்ய

அனைத்திற்கும் **धारिणी** தா$_4$ரிணீ ஆதாரமாக இருக்கும் **पृथिवी** ப்ருதி$_2$வீ பூமி **जायते** ஜாயதே (ஆகியவை) தோன்றுகின்றன.

இந்த ப்ரஹ்மனிடமிருந்து ப்ராணன், மனம், அனைத்து இந்த்ரியங்கள், ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கும் பூமி ஆகியவை தோன்றுகின்றன.

४. अग्निर्मूर्धा चक्षुषी चन्द्रसूर्यौ
दिशः श्रोत्रे वाग्विवृताश्च वेदाः ।
वायुः प्राणो हृदयं विश्वमस्य
पद्भ्यां पृथिवी ह्येष सर्वभूतान्तरात्मा ॥

4. அக்$_3$னிர்மூர்தா$_4$ சக்ஷுஷீ சந்த்$_3$ரஸூர்யௌ
திக்$_3$ச$_1$: ச்$_1$ரோத்ரே வாக்$_3$விவ்ருதாச்$_1$ச வேதா$_3$: ।
வாயு: ப்ராணோ ஹ்ருத$_3$யம் விச்$_1$வமஸ்ய
பத்$_3$ப்$_4$யாம் ப்ருதி$_2$வீ ஹ்யேஷ ஸர்வபூ$_4$தாந்தராத்மா ॥

एषः हि ஏஷ: ஹி (ப்ரஹ்மனிடமிருந்து தோன்றிய) இந்த (விராட்) **सर्वभूतान्तरात्मा** ஸர்வபூ$_4$தாந்தராத்மா அனைத்து உயிர்களின் ஆத்மாவாக உள்ளது. **अस्य** அஸ்ய இவருடைய (விராட்டினுடைய) **मूर्धा** மூர்தா$_4$ தலை **अग्निः** அக்$_3$னி: ஸ்வர்கலோகம். **चक्षुषी** சக்ஷுஷீ கண்கள் **चन्द्रसूर्यौ** சந்த்$_3$ரஸூர்யௌ சந்த்ரனும் ஸூர்யனும். **श्रोत्रे** ச்$_1$ரோத்ரே செவிகள் **दिशः** தி$_3$ச$_1$: திசைகள். **वाक्** வாக் வாக்கு **विवृताः वेदाः च** விவ்ருதா: வேதா$_3$: ச ப்ரஸித்தமான வேதங்கள். **प्राणः** ப்ராண: ப்ராணன் **वायुः** வாயு: காற்று. **हृदयं** ஹ்ருத$_3$யம் மனம் **विश्वं** விச்$_1$வம் உலகம். **पद्भ्यां** பத்$_3$ப்$_4$யாம் கால்கள் **पृथिवी** ப்ருதி$_2$வீ பூமி.

ப்ரஹ்மனிடமிருந்து தோன்றிய இந்த விராட் அனைத்து உயிர்களின் ஆத்மாவாக உள்ளது. இந்த விராட்டினுடைய தலை - ஸ்வர்கலோகம். கண்கள் - சந்த்ரனும் ஸூர்யனும். செவிகள் - திசைகள். வாக்கு - ப்ரஸித்தமான வேதங்கள். ப்ராணன் - காற்று. மனம் - உலகம். கால்கள் - பூமி.

இவ்வுலகமே இறைவனின் உடல் என்பதால் உலகத்திலுள்ள சில பொருள்கள் உறுப்புக்களாகக் கருதப்படுகின்றன. ஜீவனுக்கு உடல்போல் இறைவனுக்கு உடல் இவ்வுலகம், ஜீவன் உடல்முழுதும் வ்யாபிப்பது போல இறைவன் அனைத்தையும் வியாபிக்கிறார் என்பதே மையக்கருத்து.

५. तस्मादग्निः समिधो यस्य सूर्यः सोमात्पर्जन्य ओषधयः पृथिव्याम्।
पुमान्रेतः सिञ्चति योषितायां बह्वीः प्रजाः पुरुषात्सम्प्रसूताः ॥

5. தஸ்மாத₃க்₃னி: ஸமிதோ₄ யஸ்ய ஸூர்ய:
ஸோமாத்பர்ஜந்ய ஓஷத₄ய: ப்ருதி₂வ்யாம் ।
புமான்ரேத: ஸிஞ்சதி யோஷிதாயாம்
ப₃ஹ்வீ: ப்ரஜா: புருஷாத்ஸம்ப்ரஸூதா: ॥

यस्य யஸ்ய எந்த ஸ்வர்கலோகத்திற்கு **सूर्यः** ஸூர்ய: ஸூர்யன் **समिधः** ஸமித₄: விளக்காக இருக்கிறதோ **अग्निः** அக்₃னி: (அந்த) ஸ்வர்கலோகம் **तस्मात् पुरुषात्** தஸ்மாத் புருஷாத் அந்த ப்ரஹ்மனிடமிருந்து (தோன்றியது). **सोमात्** ஸோமாத் (ஸ்வர்கத்திடமிருந்து தோன்றிய) நிலவிலிருந்து **पर्जन्यः** பர்ஜந்ய: மேகங்கள் (தோன்றின). **पृथिव्यां** ப்ருதி₂வ்யாம் பூமியில் **ओषधयः** ஓஷத₄ய: தாவரங்கள் (தோன்றின). **पुमान्** புமான் ஆண் **योषितायां** யோஷிதாயாம் பெண்ணிற்குள் **रेतः** ரேத: வீர்யத்தை **सिञ्चति** ஸிஞ்சதி கொடுக்கிறான். **बह्वीः** ப₃ஹ்வீ: (இவ்விதம்) பல **प्रजाः** ப்ரஜா: ஜீவராசிகள் **सम्प्रसूताः** ஸம்ப்ரஸூதா: தோன்றின.

எந்த ஸ்வர்கலோகத்திற்கு ஸூர்யன் விளக்காக இருக்கிறதோ, அந்த ஸ்வர்கலோகம் அந்த ப்ரஹ்மனிடமிருந்து தோன்றியது. ஸ்வர்கத்திடமிருந்து தோன்றிய நிலவிலிருந்து மேகங்கள் தோன்றின. பூமியில் தாவரங்கள் தோன்றின. ஆண் பெண்ணிற்குள் வீர்யத்தைக் கொடுக்கிறான். இவ்விதம் பல ஜீவராசிகள் தோன்றின.

६. तस्मादृचः साम यजूँषि दीक्षाः यज्ञाश्च सर्वे क्रतवो दक्षिणाश्च।
संवत्सरश्च यजमानश्च लोकाः सोमो यत्र पवते यत्र सूर्यः।।

6. தஸ்மாத்$_3$ருச: ஸாம யஜூம்ஷி தீ$_3$க்ஷா:
யஞ்ஞாச்$_1$ச ஸர்வே க்ரதவோ த$_3$க்ஷிணாச்$_1$ச ।
ஸம்வத்ஸரச்$_1$ச யஜமானச்$_1$ச லோகா:
ஸோமோ யத்ர பவதே யத்ர ஸூர்ய: ।।

तस्मात् தஸ்மாத் அதனிடமிருந்து (ப்ரஹ்மனிடமிருந்து) **ऋचः** ரிச: ரிக் வேதம் **यजूंषि** யஜூம்ஷி யஜுர்வேதம் **साम** ஸாம ஸாமவேதம் **दीक्षाः** தீ$_3$க்ஷா: யாகவிதிகள் **सर्वे यज्ञाः च** ஸர்வே யஞா: ச அனைத்து யாகங்கள் **क्रतवः** க்ரதவ: பலியுடன் கூடிய யாகங்கள் **दक्षिणाः च** த$_3$க்ஷிணா: ச தக்ஷிணைகள் **संवत्सरः च** ஸம்வத்ஸர: ச வருடம் **यजमानः च** யஜமான: ச யஜமானன் **यत्र** யத்ர எந்த லோகத்தை **सोमः** ஸோம: நிலவு **पवते** பவதே தூய்மைப் படுத்துகிறதோ **यत्र** யத்ர எந்த லோகத்தை **सूर्यः** ஸூர்ய: ஸூர்யன் (தூய்மைப்படுத்துகிறதோ அந்த) **लोकाः** லோகா: லோகங்கள் (தோன்றின).

அந்த ப்ரஹ்மனிடமிருந்து ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், யாகவிதிகள், அனைத்து யாகங்கள், பலியுடன் கூடிய யாகங்கள், தக்ஷிணைகள், வருடம், யஜமானன், எந்த லோகத்தை நிலவு தூய்மைப் படுத்துகிறதோ எந்த லோகத்தை ஸூர்யன் தூய்மைப் படுத்துகிறதோ அந்த லோகங்கள் தோன்றின.

७. तस्माच्च देवा बहुधा सम्प्रसूताः साध्या मनुष्याः पशवो वयांसि।
प्राणापानौ व्रीहियवौ तपश्च श्रद्धा सत्यं ब्रह्मचर्यं विधिश्च।।

7. தஸ்மாச்ச தே$_3$வா ப$_3$ஹுதா$_4$ ஸம்ப்ரஸூதா:
ஸாத்$_4$யா மனுஷ்யா: பச$_1$வோ வயாம்ஸி ।
ப்ராணாபானௌ வ்ரீஹியவௌ தபச்$_1$ச
ச்$_1$ரத்$_3$தா$_4$ ஸத்யம் ப்$_3$ரஹ்மசர்யம் விதி$_4$ச்$_1$ச ।।

तस्मात् च தஸ்மாத் ச அதனிடமிருந்து (ப்ரஹ்மனிடமிருந்து) **बहुधा** ப₃ஹுதா₄ பலவித **देवाः** தே₃வா: தேவர்கள் **साध्याः** ஸாத்₄யா: ஸாத்யர்கள் (என்ற தேவர்கள்) **मनुष्याः** மனுஷ்யா: மனிதர்கள் **पशवः** பச₁வ: மிருகங்கள் **वयांसि** வயாம்ஸி பறவைகள் **प्राण-अपानौ** ப்ராண-அபானௌ ப்ராணன் அபானன் **व्रीहि-यवौ** வ்ரீஹி-யவௌ நெல் பார்லி **तपः च** தப: ச தவம் **श्रद्धा** ச்₁ரத்₃தா₄ நம்பிக்கை **सत्यं** ஸத்யம் வாய்மை **ब्रह्मचर्यं** ப்₃ரஹ்மசர்யம் ஒழுக்கம் **विधिः च** விதி₄: ச யாகங்களை செய்யும் முறை (ஆகியவை) **सम्प्रसूताः** ஸம்ப்ரஸூதா: தோன்றின.

அந்த ப்ரஹ்மனிடமிருந்து பலவித தேவர்கள், ஸாத்யர்கள் என்ற தேவர்கள், மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், ப்ராணன், அபானன், நெல், பார்லி, தவம், நம்பிக்கை, வாய்மை, ஒழுக்கம், யாகங்களை செய்யும் முறை ஆகியவை தோன்றின.

८. **सप्त प्राणाः प्रभवन्ति तस्मात् सप्तार्चिषः समिधः सप्त होमाः।**
सप्त इमे लोका येषु चरन्ति प्राणा गुहाशया निहिताः सप्त सप्त॥

8. ஸப்த ப்ராணா: ப்ரப₄வந்தி தஸ்மாத்
ஸப்தார்சிஷ: ஸமித₄: ஸப்த ஹோமா: ।
ஸப்த இமே லோகா யேஷு சரந்தி
ப்ராணா கு₃ஹாச₁யா நிஹிதா: ஸப்த ஸப்த ॥

तस्मात् தஸ்மாத் அதனிடமிருந்து (ப்ரஹ்மனிடமிருந்து) **सप्त** ஸப்த ஏழு **प्राणाः** ப்ராணா: இந்த்ரியங்கள் **सप्त-अर्चिषः** ஸப்த-அர்சிஷ: ஏழு அறியும் சக்திகள் **समिधः** ஸமித₄: அறியும் பொருள்கள் **सप्त होमाः** ஸப்த ஹோமா: ஏழுவிதமான அறிவுகள் **येषु** யேஷு எந்த (இடங்களில் இருந்து கொண்டு) **प्राणाः** ப்ராணா: இந்த்ரியங்கள் **चरन्ति** சரந்தி செயல்படுகின்றனவோ **इमे सप्त** இமே ஸப்த அந்த ஏழு (இந்த்ரியங்களுக்கான) **लोकाः** லோகா: இடங்கள் **प्रभवन्ति** ப்ரப₄வந்தி தோன்றின. **गुहाशयाः** கு₃ஹாச₁யா: ஹ்ருதயத்தில் ஒடுங்குகின்ற

(இந்த்ரியங்கள்) **सप्त सप्त** ஸப்த ஸப்த ஏழேழு விதமாக (ப்ரஹ்மனால் ஒவ்வொரு ஜீவனுக்கும்) **निहिता:** நிஹிதா: வைக்கப்பட்டுள்ளன.

அந்த ப்ரஹ்மனிடமிருந்து ஏழு இந்த்ரியங்கள், ஏழு அறியும் சக்திகள், அறியும் பொருள்கள், ஏழு விதமான அறிவுகள், எந்த இடங்களில் இருந்துகொண்டு இந்த்ரியங்கள் செயல்படுகின்றனவோ அந்த ஏழு இந்த்ரியங்களுக்கான இடங்கள் தோன்றின. ஹ்ருதயத்தில் ஒடுங்குகின்ற இந்த்ரியங்கள் ஏழேழு விதமாக ப்ரஹ்மனால் ஒவ்வொரு ஜீவனுக்கும் வைக்கப் பட்டுள்ளன.

இங்கு ஏழு இந்த்ரியங்கள் என குறிப்பிடப்படுவது நம் முகத்தில் உள்ள த்வாரங்கள். கண்கள் இரண்டு, செவிகள் இரண்டு, மூக்கில் இரு த்வாரங்கள், வாய். ஏழு த்வாரங்களில் இருக்கும் அறியக் கூடிய சக்தி, அவைகளால் அறியப்படும் பொருள், போன்றவை அனைத்தும் ப்ரஹ்மனிடமிருந்தே தோன்றின.

९. अतः समुद्रा गिरयश्च सर्वे अस्मात्स्यन्दन्ते सिन्धवः सर्वरूपाः।
अतश्च सर्वा ओषधयो रसश्च येनैष भूतैस्तिष्ठते ह्यन्तरात्मा।।

9. அத: ஸமுத்$_3$ரா கி$_3$ரயச்$_1$ச ஸர்வே
அஸ்மாத்ஸ்யந்த$_3$ந்தே ஸிந்த$_4$வ: ஸர்வரூபா: ।
அதச்$_1$ச ஸர்வா ஓஷத$_4$யோ ரஸச்$_1$ச
யேனைஷ பூ$_4$தைஸ்திஷ்ட$_2$தே ஹ்யந்தராத்மா ।।

अत: அத: அதனிடமிருந்து (ப்ரஹ்மனிடமிருந்து) **सर्वे** ஸர்வே அனைத்து **समुद्रा:** ஸமுத்$_3$ரா: கடல்களும் **गिरय: च** கி$_3$ரய: ச மலைகளும் (தோன்றின). **अस्मात्** அஸ்மாத் அதனிடமிருந்து (ப்ரஹ்மனிடமிருந்து) **सर्वरूपा:** ஸர்வரூபா: எல்லாவிதமான **सिन्धव:** ஸிந்த$_4$வ: ஆறுகள் **स्यन्दन्ते** ஸ்யந்த$_3$ந்தே தோன்றின. **अत: च** அத: ச அதனிடமிருந்து (ப்ரஹ்மனிடமிருந்தே) **सर्वा:** ஸர்வா: அனைத்து **ओषधय:** ஓஷத$_4$ய: தாவரங்களும் **येन** யேன எதனால் (தாவரங்களில் உள்ள சக்தியால்) **एष: अन्तरात्मा हि** ஏஷ: அந்தராத்மா ஹி இந்த

ஸூக்ஷ்ம சரீரம் **भूतैः** பூ$_4$தை: ஸ்தூல உடல்களுடன் **तिष्ठते** திஷ்ட$_2$தே இருக்கமுடியுமோ (அந்த) **रसः च** ரஸ: ச சக்தியும் (தோன்றின).

அந்த ப்ரஹ்மனிடமிருந்து அனைத்து கடல்களும் மலைகளும் தோன்றின. அந்த ப்ரஹ்மனிடமிருந்து எல்லா விதமான ஆறுகள் தோன்றின. அந்த ப்ரஹ்மனிடமிருந்தே அனைத்து தாவரங்களும் தாவரங்களில் உள்ள எந்த சக்தியால் இந்த ஸூக்ஷ்ம சரீரம் ஸ்தூல உடல்களுடன் இருக்கமுடியுமோ அந்த சக்தியும் தோன்றின.

१०. पुरुष एवेदं विश्वं कर्म तपो ब्रह्म परामृतम् ।
एतद्यो वेद निहितं गुहायां सोऽविद्याग्रन्थिं विकिरतीह सोम्य ॥

10. புருஷ ஏவேத$_3$ம் விச்$_1$வம் கர்ம
தபோ ப்$_3$ரஹ்ம பராம்ருதம் ।
ஏதத்$_3$யோ வேத$_3$ நிஹிதம் கு$_3$ஹாயாம்
ஸோऽவித்$_3$யாக்$_3$ரந்தி$_2$ம் விகிரதீஹ ஸோம்ய ॥

सोम्य ஸோம்ய ப்ரியமானவனே **कर्म** கர்ம கர்ம **तपः** தப: உபாஸனா ஸ்வரூபமான (அவற்றின் பலனாகவும் உள்ள) **इदं विश्वं** இத$_3$ம் விச்$_1$வம் இந்த உலகம் **पुरुषः एव** புருஷ: ஏவ ப்ரஹ்மனாகவே உள்ளது. **यः** ய: யார் **एतत्** ஏதத் இந்த **पर-अमृतं** பர-அம்ருதம் மேலான அழியாத **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **गुहायां** கு$_3$ஹாயாம் ஹ்ருதயத்திற்குள் **निहितं** நிஹிதம் விளங்குவதாக **वेद** வேத$_3$ அறிகிறானோ **सः** ஸ: அவன் **इह** இஹ இங்கேயே **अविद्या-ग्रन्थिं** அவித்$_3$யா-க்$_3$ரந்தி$_2$ம் அறியாமையின் முடிச்சை **विकिरति** விகிரதி அழிக்கின்றான்.

ப்ரியமானவனே, கர்ம, உபாஸனா ஸ்வரூபமான அவற்றின் பலனாகவும் உள்ள இந்த உலகம் ப்ரஹ்மனாகவே உள்ளது. யார் இந்த மேலான அழியாத ப்ரஹ்மனை ஹ்ருதயத்திற்குள் விளங்குவதாக அறிகிறானோ அவன் இங்கேயே அறியாமையின் முடிச்சை அழிக்கின்றான்.

இவ்வுலகத்திற்கு இரு அடைமொழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. 1. கர்மம் 2. தவம் (உபாஸனா). உடலால் வெளிப்படும் செயல் கர்மம். மனதால் வெளிப்படும் செயல் உபாஸனா. உலகில் இவ்விரண்டு விதமான செயல்கள் காணப்படுகின்றன. எப்படிப்பட்ட உலகை நாம் உருவாக்குவோம் என்பதும் நம்மிடமிருந்து வெளிப் பட்ட கர்மத்தின் அடிப்படையிலும் உபாஸனையின் அடிப்படையிலும் தான். ஆகவே உலகமே கர்ம, உபாஸனா ஸ்வரூபம் என்று கூறப்படுகிறது. இந்த உலகம் ப்ரஹ்மனாக உள்ளது என்பது ப்ரஹ்மனிடத்தில் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்ற அர்த்தத்தில் கூறப்பட்டுள்ளது. கயிற்றில் ஏற்றிவைக்கப்பட்ட பாம்பு போல. இவ்விதம் கூறுவதிலிருந்து உலகம் மித்யா அதாவது வெறும் தோற்றம் என்று கூறப்பட்டதாகிறது. உலகுக்கு ஆதாரமாக உள்ள ப்ரஹ்மனே ஆத்மாவாக விளங்குகிறது என்று ஜீவ-ப்ரஹ்ம ஐக்யமும் கூறப்பட்டு, இந்த ஞானத்தின் பலனும் கூறப்பட்டுள்ளது.

इति द्वितीयमुण्डके प्रथमः खण्डः

இரண்டாவது முண்டகத்தில் முதல் கண்டம் முடிவுற்றது.

द्वितीयमुण्डके द्वितीयः खण्डः

இரண்டாவது முண்டகத்தில் இரண்டாவது கண்டம்

१. आविः सन्निहितं गुहाचरं नाम
महत्पदमत्रैतत्समर्पितम्।
एजत्प्राणन्निमिषच्च यदेतज्जानथ सदसद्वरेण्यं
परं विज्ञानाद्यद्वरिष्ठं प्रजानाम्॥

1. ஆவி: ஸந்நிஹிதம் கு$_3$ஹாசரம் நாம
மஹத்பத$_3$மத்ரைதத்ஸமர்பிதம் ।
ஏஜத்ப்ராணந்நிமிஷச்ச யதே$_3$தஜ்ஜானத$_2$
ஸத$_3$ஸத்$_3$வரேண்யம் பரம்
விஞானாத்$_3$யத்$_3$வரிஷ்ட$_2$ம் ப்ரஜானாம் ॥

आविः ஆவி: தானாகவே ஒளிர்கின்ற **सन्निहितं** ஸந்நிஹிதம் வெளிப்படையாக உள்ள ப்ரஹ்மன் **गुहाचरं** கு$_3$ஹாசரம் ஹ்ருதயத்தில் சஞ்சரிப்பது **नाम** நாம (என்று) பெயர்பெற்றுள்ளது. (அதுவே) **महत् पदं** மஹத் பத$_3$ம் பெரிய ஆதாரம். **एजत्** ஏஜத் நகர்கின்றவை **प्राणत्** ப்ராணத் ஸ்வாசிக்கின்றவை **निमिषत् च** நிமிஷத் ச இமைக்கின்றவை **एतत्** ஏதத் இவை (அனைத்தும்) **अत्र** அத்ர அதனிடத்தில் (ப்ரஹ்மனிடத்தில்) **समर्पितं** ஸமர்பிதம் இருக்கின்றன. **यत्** யத் எந்த (ப்ரஹ்மனானது) **सत्** ஸத் தோற்றத்திற்கு வந்ததாகவும் **असत्** அஸத் தோற்றத்திற்கு வராததாகவும் (உள்ளதோ) **वरेण्यं** வரேண்யம் (அனைவராலும்) அடையக்கூடியதில் **यत् वरिष्ठं** யத் வரிஷ்ட$_2$ம் மேலானதாக இருக்கிறதோ **प्रजानां** ப்ரஜானாம் மனிதர்களால் **विज्ञानात्** விஞானாத் அறியப்படும் பொருள்களைக் காட்டிலும் **परं** பரம் வேறானதோ **एतत्** ஏதத் அந்த (ப்ரஹ்மனை) **जानथ** ஜானத$_2$ (நீங்கள்) அறிவீர்களாக.

தானாகவே ஒளிர்கின்ற, வெளிப்படையாக உள்ள ப்ரஹ்மன், ஹ்ருதயத்தில் சஞ்சரிப்பது என்று பெயர்பெற்றுள்ளது. அதுவே

பெரிய ஆதாரம். நகர்கின்றவை, ஸ்வாசிக்கின்றவை, இமைக்கின்றவை இவை அனைத்தும் அந்த ப்ரஹ்மனிடத்தில் இருக்கின்றன. எந்த ப்ரஹ்மனானது தோற்றத்திற்கு வந்ததாகவும் தோற்றத்திற்கு வராததாகவும் உள்ளதோ, அனைவராலும் அடையக்கூடியதில் மேலானதாக இருக்கிறதோ, மனிதர்களால் அறியப்படும் பொருள்களைக் காட்டிலும் வேறானதோ அந்த ப்ரஹ்மனை நீங்கள் அறிவீர்களாக.

२. यदर्चिमद्यदणुभ्योऽणु च
यस्मिँल्लोका निहिता लोकिनश्च।
तदेतदक्षरं ब्रह्म स प्राणस्तदु वाङ्मनः
तदेतत्सत्यं तदमृतं तद्वेद्धव्यं सोम्य विद्धि॥

2. யத$_3$ர்சிமத்$_3$யத$_3$ணுப்$_4$யோऽணு ச
யஸ்மிம்ல்லோகா நிஹிதா லோகினச்$_1$ச ।
ததே$_3$தத$_3$க்ஷரம் ப்$_3$ரஹ்ம ஸ ப்ராணஸ்தது$_3$ வாங்மன:
ததே$_3$தத்ஸத்யம் தத$_3$ம்ருதம் தத்$_3$வேத்$_3$த$_4$வ்யம்
ஸோம்ய வித்$_3$தி$_4$ ।।

यत् யத் எது **अर्चिमत्** அர்சிமத் சைதன்ய ஸ்வரூபமோ **यत्** யத் எது **अणुभ्यः** அணுப்$_4$ய: அணுவைக்காட்டிலும் **अणु च** அணு ச அணுவாக உள்ளதோ **यस्मिन्** யஸ்மிந் எதில் **लोकाः** லோகா: உலகங்களும் **लोकिनः च** லோகின: ச உலகத்தில் இருப்பவர்களும் **निहिताः** நிஹிதா: இருக்கின்றார்களோ **तद् एतत्** தத்$_3$ ஏதத் அந்த இதுவே **अक्षरं** அக்ஷரம் அழியாத **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன். **सः** ஸ: அதுவே **प्राणः** ப்ராண: ப்ராணன். **तद् उ** தத்$_3$ உ அதுவே **वाङ्मनः** வாங்மன: வாக்கும் மனமும். **तद् एतत्** தத்$_3$ ஏதத் அதுவே **सत्यं** சத்யம் உண்மை. **तत्** தத் அதுவே **अमृतं** அம்ருதம் அழிவற்றது. **तद्** தத்$_3$ அது (ஓர் இலக்கைப்போல்) **वेद्धव्यं** வேத்$_3$த$_4$வ்யம் அடையத்தக்கது. **सोम्य** ஸோம்ய ப்ரியமானவனே **विद्धि** வித்$_3$தி$_4$ (அதை) அடைவாயாக.

எது சைதன்ய ஸ்வரூபமோ, எது அணுவைக் காட்டிலும் அணுவாக உள்ளதோ, எதில் உலகங்களும் உலகத்தில் இருப்பவர்களும் இருக்கின்றார்களோ அந்த இதுவே அழியாத ப்ரஹ்மன். அதுவே ப்ராணன். அதுவே வாக்கும் மனமும். அதுவே உண்மை. அதுவே அழிவற்றது. அது ஓர் இலக்கைப்போல் அடையத்தக்கது. ப்ரியமானவனே, அதை அடைவாயாக.

३. धनुर्गृहीत्वौपनिषदं महास्त्रं शरं ह्युपासानिशितं सन्दधीत।
आयम्य तद्भावगतेन चेतसा लक्ष्यं तदेवाक्षरं सोम्य विद्धि॥

3. த$_4$னுர்க்$_3$ருஹீத்வௌபநிஷத$_3$ம் மஹாஸ்த்ரம்
சர$_1$ம் ஹ்யுபாஸாநிசி$_1$தம் ஸந்த$_3$தீ$_4$த।
ஆயம்ய தத்$_3$பா$_4$வக$_3$தேன சேதஸா
லக்ஷ்யம் ததே$_3$வாக்ஷரம் ஸோம்ய வித்$_3$தி$_4$ ॥

सोम्य ஸோம்ய ப்ரியமானவனே **औपनिषदं** ஔபநிஷத$_3$ம் உபநிஷத்தில் உள்ள (ஓங்கார ரூபமான) **महास्त्रं** மஹாஸ்த்ரம் மேலான ஆயுதமான **धनुः** த$_4$னு: வில்லை **गृहीत्वा** க்$_3$ருஹீத்வா எடுத்து **उपासा-निशितं** உபாஸா-நிசி$_1$தம் உபாஸனையினால் கூர்மையாக்கப்பட்ட **शरं** ச$_1$ரம் அம்பை **सन्दधीत हि** ஸந்த$_3$தீ$_4$த ஹி பொருத்தவேண்டும். **तद्भावगतेन** தத்$_3$பா$_4$வக$_3$தேன அதனிடத்தில் (ப்ரஹ்மனிடத்தில்) செலுத்தியதான **चेतसा** சேதஸா மனதினால் **आयम्य** ஆயம்ய உள்நோக்கையடைந்து **तद् एव** தத்$_3$ ஏவ அந்த **अक्षरं** அக்ஷரம் அழியாத (ப்ரஹ்மனான) **लक्ष्यं** லக்ஷ்யம் இலக்கை **विद्धि** வித்$_3$தி$_4$ அடைவாயாக.

ப்ரியமானவனே, உபநிஷத்தில் உள்ள ஓங்காரரூபமான, மேலான ஆயுதமான வில்லை எடுத்து உபாஸனையினால் கூர்மையாக்கப்பட்ட அம்பைப் பொருத்தவேண்டும். அந்த ப்ரஹ்மனிடத்தில் செலுத்தியதான மனதினால் உள்நோக்கை யடைந்து அந்த அழியாத ப்ரஹ்மனான இலக்கை அடைவாயாக.

४. प्रणवो धनुः शरो ह्यात्मा ब्रह्म तल्लक्ष्यमुच्यते।
अप्रमत्तेन वेद्धव्यं शरवत्तन्मयो भवेत्॥

4. ப்ரணவோ த$_4$னு: ச$_1$ரோ ஹ்யாத்மா
ப்$_3$ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே ।
அப்ரமத்தேன வேத்$_3$த$_4$வ்யம்
ச$_1$ரவத்தந்மயோ ப$_4$வேத் ॥

प्रणवः ப்ரணவ: ஓங்காரம் **धनुः** த$_4$னு: வில். **आत्मा हि** ஆத்மா ஹி ஜீவாத்மா **शरः** ச$_1$ர: அம்பு. **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன் **तल्लक्ष्यं** தல்லக்ஷ்யம் அந்த (ஜீவனுடைய) லக்ஷ்யம் **उच्यते** உச்யதே என்று சொல்லப் படுகிறது. **अप्रमत्तेन** அப்ரமத்தேன கவனக்குறைவில்லாமல் **वेद्धव्यं** வேத்$_3$த$_4$வ்யம் எய்தப்பட வேண்டும். **शरवत्** ச$_1$ரவத் அம்பைப்போல (அம்பானது லக்ஷ்யத்துடன் ஒன்றுவது போல ஜீவன் அந்த ப்ரஹ்மனுடன் ஒன்றி) **तन्मयः** தந்மய: அதன் மயம் **भवेत्** ப$_4$வேத் ஆகவேண்டும்.

ஓங்காரம் வில். ஜீவாத்மா அம்பு. ப்ரஹ்மன் அந்த ஜீவனுடைய லக்ஷ்யம் என்று சொல்லப்படுகிறது. கவனக்குறைவில்லாமல் எய்தப்படவேண்டும். அம்பானது லக்ஷ்யத்துடன் ஒன்றுவது போல ஜீவன் அந்த ப்ரஹ்மனுடன் ஒன்றி அதன் மயமாக வேண்டும்.

५. यस्मिन्द्यौः पृथिवी चान्तरिक्षम् ओतं मनः सह प्राणैश्च सर्वैः।
तमेवैकं जानथ आत्मानम् अन्या वाचो विमुञ्चथामृतस्यैष सेतुः॥

5. யஸ்மின்த்$_3$யௌ: ப்ருதி$_2$வீ சாந்தரிக்ஷம்
ஓதம் மன: ஸஹ ப்ராணைச்$_1$ச ஸர்வை: ।
தமேவைகம் ஜானத$_2$ ஆத்மானம்
அன்யா வாசோ விமுஞ்சதா$_2$ம்ருதஸ்யைஷ ஸேது: ॥

यस्मिन् யஸ்மின் எதனிடத்தில் **द्यौः** த்₃யௌ: ஸ்வர்கம் **पृथिवी** ப்ருதி₂வீ பூமி **अन्तरिक्षं च** அந்தரிக்ஷம் ச ஆகாசம் **सर्वैः प्राणैः च** ஸர்வை: ப்ராணை: ச அனைத்து ப்ராணன்களுடன் **सह** ஸஹ கூடிய **मनः** மன: மனம் (ஆகியவை) **ओतं** ஓதம் கோர்க்கப்பட்டுள்ளனவோ **तं एव एकं** தம் ஏவ ஏகம் அந்த ஒன்றாக உள்ள (ப்ரஹ்மனை) **आत्मानं** ஆத்மானம் ஆத்மாவாக **जानथ** ஜானத₂ அறிவீர்களாக. **अन्याः** அன்யா: தேவையற்ற **वाचः** வாச: பேச்சுக்களை **विमुञ्चथ** விமுஞ்சத₂ விட்டுவிடுவீர்களாக. **एषः** ஏஷ: இது **अमृतस्य** அம்ருதஸ்ய மரணமற்ற நிலைக்கு **सेतुः** ஸேது: மார்கமாகிறது.

எதனிடத்தில் ஸ்வர்கம், பூமி, ஆகாசம், அனைத்து ப்ராணன்களுடன் கூடிய மனம் ஆகியவை கோர்க்கப்பட்டுள் ளனவோ, அந்த ஒன்றாக உள்ள ப்ரஹ்மனை ஆத்மாவாக அறிவீர்களாக. தேவையற்ற பேச்சுக்களை விட்டுவிடுவீர்களாக. இது மரணமற்ற நிலைக்கு மார்கமாகிறது.

६. अरा इव रथनाभौ संहता यत्र नाड्यः
स एषोऽन्तश्चरते बहुधा जायमानः।
ओमित्येवं ध्यायथ आत्मानं
स्वस्ति वः पाराय तमसः परस्तात्॥

6. அரா இவ ரத₂நாபௌ₄ ஸம்ஹதா யத்ர நாட்₃ய:
ஸ ஏஷோऽந்தச்₁சரதே ப₃ஹுதா₄ ஜாயமான: ।
ஓமித்யேவம் த்₄யாயத₂ ஆத்மானம்
ஸ்வஸ்தி வ: பாராய தமஸ: பரஸ்தாத் ॥

रथ-नाभौ ரத₂-நாபௌ₄ தேர்ச்சக்கரத்தினுடைய மையத்தில் **अराः** அரா: ஆரக்கால்கள் **इव** இவ (கூடுவது) போல **यत्र** யத்ர எதில் (ஹ்ருதயத்தில்) **नाड्यः** நாட்₃ய: நாடிகள் **संहताः** ஸம்ஹதா: கூடியுள்ளனவோ (அந்த ஹ்ருதயத்திற்கு) **अन्तः** அந்த: உள்ளே **सः एषः** ஸ: ஏஷ: இந்த (ஆத்மா) **बहुधा** ப₃ஹுதா₄ பலவிதங்களில்

जायमानः ஜாயமான: வெளிப்பட்டு **चरते** சரதே செயல்படுவது (போல் தென்படுகிறது). **ओं इति एवं** ஓம் இதி ஏவம் இவ்விதத்தில் ஓங்காரத்தின் துணைகொண்டு **आत्मानं** ஆத்மானம் ஆத்மாவை **ध्यायथ** த்$_4$யாயத$_2$ த்யானிப்பீர்களாக. **तमसः** தமஸ: அறியாமைக்கு **परस्तात्** பரஸ்தாத் அப்பாலான **पाराय** பாராய கரையை அடைய **वः** வ: உங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி ஆசிகள்.

தேர்ச் சக்கரத்தினுடைய மையத்தில் ஆரக்கால்கள் கூடுவது போல எந்த ஹ்ருதயத்தில் நாடிகள் கூடியுள்ளனவோ, அந்த ஹ்ருதயத்திற்கு உள்ளே இந்த ஆத்மா பலவிதங்களில் வெளிப்பட்டு செயல்படுவது போல் தென்படுகிறது. இவ்விதத்தில் ஓங்காரத்தின் துணைகொண்டு ஆத்மாவை த்யானிப்பீர்களாக. அறியாமைக்கு அப்பாலான கரையை அடைய உங்களுக்கு ஆசிகள்.

७. यः सर्वज्ञः सर्वविद् यस्यैष महिमा भुवि।
दिव्ये ब्रह्मपुरे ह्येषः व्योमन्यात्मा प्रतिष्ठितः ।।

7. ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித்$_3$
யஸ்யைஷ மஹிமா பு$_4$வி ।
தி$_3$வ்யே ப்$_3$ரஹ்மபுரே ஹ்யேஷ:
வ்யோமந்யாத்மா ப்ரதிஷ்டி$_2$த: ।।

यः ய: எந்த (ஆத்மா) **सर्वज्ञः** ஸர்வஜ்ஞ: அனைத்தையும் ஸாமான்யமாக அறிகிறதோ **सर्वविद्** ஸர்வவித்$_3$ அனைத்தையும் விசேஷமாக அறிகிறதோ **यस्य** யஸ்ய எந்த (ஆத்மாவின்) **एषः** ஏஷ: இந்த **महिमा** மஹிமா மஹிமையானது **भुवि** பு$_4$வி பூமியில் (விளங்கி வருகிறதோ) **एषः हि आत्मा** ஏஷ: ஹி ஆத்மா அந்த ஆத்மா **दिव्ये ब्रह्मपुरे** தி$_3$வ்யே ப்$_3$ரஹ்மபுரே ப்ரஹ்மனின் ஒளிமிக்க இருப்பிடமான (மனதின்) **व्योमनि** வ்யோமநி மையத்தில் **प्रतिष्ठितः** ப்ரதிஷ்டி$_2$த: இருக்கின்றது.

எந்த ஆத்மா அனைத்தையும் ஸாமான்யமாக அறிகிறதோ, அனைத்தையும் விசேஷமாக அறிகிறதோ, எந்த ஆத்மாவின் இந்த மஹிமையானது பூமியில் விளங்கிவருகிறதோ, அந்த ஆத்மா, ப்ரஹ்மனின் ஒளிமிக்க இருப்பிடமான மனதின் மையத்தில் இருக்கின்றது.

८. मनोमयः प्राणशरीरनेता प्रतिष्ठितोऽन्ने हृदयं सन्निधाय।
तद्विज्ञानेन परिपश्यन्ति धीराः आनन्दरूपममृतं यद्विभाति॥

8. மனோமய: ப்ராணச$_1$ரீரநேதா
ப்ரதிஷ்டி$_2$தோऽன்னே ஹ்ருத$_3$யம் ஸந்நிதா$_4$ய ।
தத்$_3$விஞானேன பரிபச்$_1$யந்தி தீ$_4$ரா:
ஆனந்த$_3$ரூபமம்ருதம் யத்$_3$விபா$_4$தி ॥

मनोमयः மனோமய: (இந்த ஆத்மா) மனதிலுள்ள எண்ணங்களால் அறியப்படுகிறது. **प्राण-शरीर-नेता** ப்ராண-ச$_1$ரீர-நேதா ஸூக்ஷ்ம சரீரத்தை அழைத்துச் செல்கிறது. **अन्ने** அன்னே ஸ்தூல சரீரத்தில் **हृदयं** ஹ்ருத$_3$யம் ஹ்ருதயத்தை **सन्निधाय** ஸந்நிதா$_4$ய வைத்து (அந்த ஹ்ருதயத்திற்குள்) **प्रतिष्ठितः** ப்ரதிஷ்டி$_2$த: இருக்கின்றது. **धीराः** தீ$_4$ரா: தீரர்கள் **तद्-विज्ञानेन** தத்$_3$-விஞானேன அந்த ஆத்மாவை அறிவதன் மூலமாக **आनन्दरूपं** ஆனந்த$_3$ரூபம் ஆனந்த ஸ்வரூபமானதும் **अमृतं** அம்ருதம் மரணமற்றதுமாக **यद् विभाति** யத்$_3$ விபா$_4$தி எப்பொழுதும் விளங்கிக் கொண்டிருக்கின்ற (ப்ரஹ்மனை) **परिपश्यन्ति** பரிபச்$_1$யந்தி தெளிவாகக் காண்கிறார்கள்.

இந்த ஆத்மா மனதிலுள்ள எண்ணங்களால் அறியப்படுகிறது. ஸூக்ஷ்ம சரீரத்தை அழைத்துச்செல்கிறது. ஸ்தூல சரீரத்தில் ஹ்ருதயத்தை வைத்து அந்த ஹ்ருதயத்திற்குள் இருக்கின்றது. தீரர்கள் அந்த ஆத்மாவை அறிவதன் மூலமாக ஆனந்த ஸ்வரூபமானதும் மரணமற்றதுமாக எப்பொழுதும் விளங்கிக் கொண்டிருக்கின்ற ப்ரஹ்மனைத் தெளிவாகக் காண்கிறார்கள்.

९. भिद्यते हृदयग्रन्थिः छिद्यन्ते सर्वसंशयाः।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे॥

9. பி$_4$த்$_3$யதே ஹ்ருத$_3$யக்$_3$ரந்தி$_2$: சி$_2$த்$_3$யந்தே ஸர்வஸம்ச$_1$யா: ।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மின்த்$_3$ருஷ்டே பராவரே ॥

पर-अवरे பர-அவரே காரணமாகவும் கார்யமாகவும் விளங்குகின்ற **तस्मिन्** தஸ்மின் அந்த (ப்ரஹ்மனை) **दृष्टे** த்$_3$ருஷ்டே அறிவதனால் **हृदय-ग्रन्थिः** ஹ்ருத$_3$ய-க்$_3$ரந்தி$_2$: ஹ்ருதயத்தினுடைய (அறியாமை என்ற) முடிச்சானது **भिद्यते** பி$_4$த்$_3$யதே அவிழ்க்கப்படுகிறது. **सर्व-संशयाः** ஸர்வ-ஸம்ச$_1$யா: அனைத்து ஸந்தேகங்களும் **छिद्यन्ते** சி$_2$த்$_3$யந்தே நீக்கப்படுகின்றன. **अस्य च** அஸ்ய ச அவனுடைய **कर्माणि** கர்மாணி அனைத்து கர்மங்களும் **क्षीयन्ते** க்ஷீயந்தே நாசமாகின்றன.

காரணமாகவும் கார்யமாகவும் விளங்குகின்ற அந்த ப்ரஹ்மனை அறிவதனால் ஹ்ருதயத்தினுடைய அறியாமை என்ற முடிச்சானது அவிழ்க்கப்படுகிறது. அனைத்து ஸந்தேகங்களும் நீக்கப்படுகின்றன. அவனுடைய அனைத்து கர்மங்களும் நாசமாகின்றன.

१०. हिरणमये परे कोशे विरजं ब्रह्म निष्कलम्।
तच्छुभ्रं ज्योतिषां ज्योतिः तद्यदात्मविदो विदुः॥

10. ஹிரண்மயே பரே கோசே$_1$ விரஜம் ப்$_3$ரஹ்ம நிஷ்கலம் ।
தச்சு$_2$ப்$_4$ரம் ஜ்யோதிஷாம் ஜ்யோதி: தத்$_3$யதா$_3$த்மவிதோ$_3$ விது$_3$: ॥

विरजं விரஜம் மாசற்ற **निष्कलं** நிஷ்கலம் அங்கங்களற்ற **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன் **परे** பரே மேலான **हिरणमये** ஹிரண்மயே ஒளிபொருந்திய **कोशे** கோசே$_1$ இருப்பிடமான மனதில் (உள்ளது). **तत्** தத் அது (ப்ரஹ்மன்) **शुभ्रं** சு$_1$ப்$_4$ரம் தூய்மையானது. **यत्** யத் எது **ज्योतिषां** ஜ்யோதிஷாம் ஒளிகளுக்கெல்லாம் **ज्योतिः** ஜ்யோதி: ஒளியாக

உள்ளதோ **तत्** தத் அதை (ப்ரஹ்மனை) **आत्मविदः** ஆத்மவித$_3$: ஆத்மாவை அறிந்தவர்கள் **विदुः** விது$_3$: அறிகிறார்கள்.

மாசற்ற, அங்கங்களற்ற ப்ரஹ்மன் மேலான, ஒளி பொருந்திய இருப்பிடமான மனதில் உள்ளது. அந்த ப்ரஹ்மன் தூய்மையானது. எது ஒளிகளுக்கெல்லாம் ஒளியாக உள்ளதோ அந்த ப்ரஹ்மனை ஆத்மாவை அறிந்தவர்கள் அறிகிறார்கள்.

११. न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं
नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ।
तमेव भान्तमनुभाति सर्वं
तस्य भासा सर्वमिदं विभाति ॥

11. ந தத்ர ஸூர்யோ பா$_4$தி ந சந்த்$_3$ரதாரகம்
நேமா வித்$_3$யுதோ பா$_4$ந்தி குதோऽயமக்$_3$னி: ।
தமேவ பா$_4$ந்தமனுபா$_4$தி ஸர்வம்
தஸ்ய பா$_4$ஸா ஸர்வமித$_3$ம் விபா$_4$தி ॥

तत्र தத்ர அதனிடத்தில் (ப்ரஹ்மனை) **सूर्यः** ஸூர்ய: ஸூர்யன் **न भाति** ந பா$_4$தி விளக்காது. **चन्द्र-तारकं** சந்த்$_3$ர-தாரகம் நிலவும் நட்சத்திரங்களும் **न** ந விளக்காது. **इमाः विद्युतः** இமா: வித்$_3$யுத: இந்த மின்னல்கள் **न भान्ति** ந பா$_4$ந்தி விளக்காது. **अयं अग्निः** அயம் அக்$_3$னி: இந்த நெருப்பு **कुतः** குத: எப்படி விளக்கும். **भान्तं** பா$_4$ந்தம் ஸ்வயமாக விளங்குகின்ற **तं एव** தம் ஏவ அதையே (சார்ந்து) **सर्वं** ஸர்வம் அனைத்தும் **अनुभाति** அனுபா$_4$தி விளங்குகிறது. **तस्य** தஸ்ய அதனுடைய **भासा** பா$_4$ஸா ஒளியினால் **इदं सर्वं** இத$_3$ம் ஸர்வம் இவை அனைத்தும் **विभाति** விபா$_4$தி விளங்குகிறது.

ப்ரஹ்மனை ஸூர்யன் விளக்காது. நிலவும் நக்ஷத்ரங்களும் விளக்காது. இந்த மின்னல்கள் விளக்காது. இந்த நெருப்பு எப்படி விளக்கும்! ஸ்வயமாக விளங்குகின்ற அதையே சார்ந்து அனைத்தும் விளங்குகிறது. அதனுடைய ஒளியினால் இவையனைத்தும் விளங்குகிறது.

१२. ब्रह्मैवेदममृतं पुरस्ताद् ब्रह्म पश्चाद् ब्रह्म दक्षिणतश्चोत्तरेण।
अधश्चोर्ध्वं च प्रसृतं ब्रह्मैवेदं विश्वमिदं वरिष्ठम्।।

12. ப்$_3$ரஹ்மைவேத$_3$மம்ருதம் புரஸ்தாத்$_3$
ப்$_3$ரஹ்ம பச்$_1$சாத்$_3$ ப்$_3$ரஹ்ம த$_3$க்ஷிணதச்$_1$சோத்தரேண ।
அத$_4$ ச்$_1$சோர்த்$_4$வம் ச ப்ரஸ்ருதம்
ப்$_3$ரஹ்மைவேத$_3$ம் விச்$_1$வமித$_3$ம் வரிஷ்ட$_2$ம் ॥

पुरस्तात् புரஸ்தாத் எதிரில் உள்ள **इदं** இத$_3$ம் இவை (அனைத்தும்) **अमृतं** அம்ருதம் அழியாத **ब्रह्म एव** ப்$_3$ரஹ்ம ஏவ ப்ரஹ்மனே. **पश्चात्** பச்$_1$சாத் பின்னுள்ளதும் **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன். **दक्षिणतः** த$_3$க்ஷிணத: வலது பக்கமுள்ளதும் **उत्तरेण च** உத்தரேண ச இடதுபக்கமுள்ளதும் **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனே. **अधः च** அத$_4$: ச கீழும் **ऊर्ध्वं च** ஊர்த்$_4$வம் ச மேலும் (ப்ரஹ்மனே) **प्रसृतं** ப்ரஸ்ருதம் வ்யாபித்துள்ளது. **इदं विश्वं** இத$_3$ம் விச்$_1$வம் இந்த உலகம் **वरिष्ठं** வரிஷ்ட$_2$ம் மேலான **इदं** இத$_3$ம் இந்த **ब्रह्म एव** ப்$_3$ரஹ்ம ஏவ ப்ரஹ்மனாகவே உள்ளது.

எதிரில் உள்ள இவையனைத்தும் அழியாத ப்ரஹ்மனே. பின்னுள்ளதும் ப்ரஹ்மன். வலது பக்கமுள்ளதும் இடது பக்கமுள்ளதும் ப்ரஹ்மனே. கீழும் மேலும் ப்ரஹ்மனே வ்யாபித்து உள்ளது. இந்த உலகம் மேலான இந்த ப்ரஹ்மனாகவே உள்ளது.

इति द्वितीयमुण्डके द्वितीयः खण्डः

இரண்டாவது முண்டகத்தில் இரண்டாவது கண்டம் முடிவுற்றது.

तृतीयमुण्डके प्रथमः खण्डः

மூன்றாவது முண்டகத்தில் முதல் கண்டம்

१. द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते।
तयोरन्यः पिप्पलं स्वाद्वत्ति अनश्नन्नन्योऽभिचाकशीति।।

1. த்$_3$வா ஸுபர்ணா ஸயுஜா ஸகா$_2$யா
ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே ।
தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்$_3$வத்தி
அனச்$_1$னன்னன்யோऽபி$_4$சாகசீ$_1$தி ।।

सयुजा ஸயுஜா என்றும் சேர்ந்துள்ள **सखाया** ஸகா$_2$யா ஒரே தன்மையுடைய **द्वा** த்$_3$வா இரண்டு **सुपर्णा** ஸுபர்ணா பறவைகள் **समानं वृक्षं** ஸமானம் வ்ருக்ஷம் ஒரே மரத்தை **परिषस्वजाते** பரிஷஸ்வஜாதே பற்றிக்கொண்டுள்ளன. **तयोः** தயோ: அவ்விரண்டில் **अन्यः** அன்ய: ஒன்று **पिप्पलं** பிப்பலம் பழத்தை **स्वादु** ஸ்வாது$_3$ ருசித்து **अत्ति** அத்தி சாப்பிடுகிறது. **अन्यः** அன்ய: மற்றொன்று **अनश्नन्** அனச்$_1$னன் சாப்பிடாமல் **अभिचाकशीति** அபி$_4$சாகசீ$_1$தி பார்த்த வண்ணம் இருக்கிறது.

என்றும் சேர்ந்துள்ள, ஒரே தன்மையுடைய இரண்டு பறவைகள் ஒரே மரத்தைப் பற்றிக்கொண்டுள்ளன. அவ்விரண்டில் ஒன்று பழத்தை ருசித்து சாப்பிடுகிறது. மற்றொன்று சாப்பிடாமல் பார்த்த வண்ணம் இருக்கிறது.

२. समाने वृक्षे पुरुषो निमग्नः अनीशया शोचति मुह्यमानः।
जुष्टं यदा पश्यत्यन्यमीशमस्य महिमानमिति वीतशोकः।।

2. ஸமானே வ்ருக்ஷே புருஷோ நிமக்$_3$ன:
அனீச$_1$யா சோ$_1$சதி முஹ்யமான: ।
ஜுஷ்டம் யதா$_3$ பச்$_1$யத்யன்யமீச$_1$மஸ்ய
மஹிமானமிதி வீதசோ$_1$க: ।।

समाने वृक्षे ஸமானே வ்ருக்ஷே (சரீரமாகிய) மரத்தில் **निमग्रः** நிமக்₃ன: மூழ்கியவனான **मुह्यमानः** முஹ்யமான: மோஹத்தை அடைந்த **पुरुषः** புருஷ: ஜீவன் **अनीशया** அனீச₁யா தன்வசமின்றி **शोचति** சோ₁சதி துயரப்படுகிறான். **यदा** யதா₃ எப்பொழுது **अन्यं** அன்யம் (ஸம்ஸாரிக்கு) வேறான **जुष्टं** ஜுஷ்டம் வணங்கத்தக்க **ईशं** ஈச₁ம் ஈச்வரனை (தானாகவும்) **अस्य** அஸ்ய அவருடைய **महिमानं इति** மஹிமானம் இதி மகிமையை (தனதாகவும்) **पश्यति** பச்₁யதி பார்க்கிறானோ (அப்பொழுது) **वीतशोकः** வீதசோ₁க: துயரத்திலிருந்து விடுபடுகிறான்.

சரீரமாகிய மரத்தில் மூழ்கியவனான, மோஹத்தை அடைந்த ஜீவன் தன்வசமின்றித் துயரப்படுகிறான். எப்பொழுது ஸம்ஸாரிக்கு வேறான வணங்கத்தக்க ஈச்வரனைத் தானாகவும் அவருடைய மஹிமையைத் தனதாகவும் பார்க்கிறானோ, அப்பொழுது துயரத்திலிருந்து விடுபடுகிறான்.

३. यदा पश्यः पश्यते रुक्मवर्णं कर्तारमीशं पुरुषं ब्रह्मयोनिम्।
तदा विद्वान्पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैति॥

3. யதா₃ பச்₁ய: பச்₁யதே ருக்மவர்ணம்
கர்தாரமீச₁ம் புருஷம் ப்₃ரஹ்மயோனிம் ।
ததா₃ வித்₃வான்புண்யபாபே விதூ₄ய
நிரஞ்ஜன: பரமம் ஸாம்யமுபைதி ॥

यदा யதா₃ எப்பொழுது **पश्यः** பச்₁ய: ஸாதகன் **रुक्मवर्णं** ருக்மவர்ணம் தங்கத்தைப் போல் ஒளிர்கின்ற **कर्तारं** கர்தாரம் படைக்கின்ற **ईशं** ஈச₁ம் ஆள்கின்ற **ब्रह्मयोनिं** ப்₃ரஹ்மயோனிம் ஹிரண்யகர்பனுக்குக் காரணமான **पुरुषं** புருஷம் ப்ரஹ்மனை **पश्यते** பச்₁யதே பார்க்கிறானோ **तदा** ததா₃ அப்பொழுது **विद्वान्** வித்₃வான் (அந்த) ஞானி **पुण्य-पापे** புண்ய-பாபே புண்யத்தையும் பாபத்தையும் **विधूय** விதூ₄ய நீக்கி **निरञ्जनः** நிரஞ்ஜன: தூய்மையானவனாக

(ப்ரஹ்மனுடன்) **परमं** பரமம் முழுமையான **साम्यं** ஸாம்யம் ஐக்யத்தை **उपैति** உபைதி அடைகிறான்.

எப்பொழுது ஸாதகன் தங்கத்தைப்போல் ஒளிர்கின்ற, படைக்கின்ற, ஆள்கின்ற, ஹிரண்யகர்பருக்குக் காரணமான ப்ரஹ்மனைப் பார்க்கிறானோ, அப்பொழுது அந்த ஞானி புண்யத்தையும் பாபத்தையும் நீக்கி, தூய்மையானவனாக ப்ரஹ்மனுடன் முழுமையான ஐக்யத்தை அடைகிறான்.

४. प्राणो ह्येष यः सर्वभूतैर्विभाति विजानन्विद्वान्भवते नातिवादी।
आत्मक्रीड आत्मरतिः क्रियावान् एष ब्रह्मविदां वरिष्ठः ॥

4. ப்ராணோ ஹ்யேஷ ய: ஸர்வபூ$_4$தைர்விபா$_4$தி
விஜானன்வித்$_3$வான்ப$_4$வதே நாதிவாதீ$_3$ ।
ஆத்மக்ரீட$_3$ ஆத்மரதி: க்ரியாவான்
ஏஷ ப்$_3$ரஹ்மவிதா$_3$ம் வரிஷ்ட$_2$: ।।

यः प्राणः ய: ப்ராண: எந்த ப்ரஹ்மன் **सर्वभूतैः हि** ஸர்வபூ$_4$தை: ஹி அனைத்து உயிரினங்களாக **विभाति** விபா$_4$தி விளங்குகிறதோ (அதுவே) **एषः** ஏஷ: இந்த (ஆத்மா). **विजानन्** விஜானன் (இவ்விதம்) அறிகின்ற **विद्वान्** வித்$_3$வான் ஞானி **नातिवादी** நாதிவாதீ$_3$ பேச்சற்ற வனாக **भवते** ப$_4$வதே ஆகிறான். **एषः** ஏஷ: இவன் **आत्मक्रीडः** ஆத்மக்ரீட$_3$: தன்னிடத்தில் விளையாடுபவன். **आत्मरतिः** ஆத்மரதி: தன்னிடத்தில் மகிழ்ந்திருப்பவன். **क्रियावान्** க்ரியாவான் மேலான கர்மத்தில் ஈடுபடுபவன். **ब्रह्मविदां** ப்$_3$ரஹ்மவிதா$_3$ம் ப்ரஹ்மனை அறிந்தவர்களுள் **वरिष्ठः** வரிஷ்ட$_2$: மேலானவன்.

எந்த ப்ரஹ்மன் அனைத்து உயிரினங்களாக விளங்குகிறதோ அதுவே இந்த ஆத்மா. இவ்விதம் அறிகின்ற ஞானி பேச்சற்றவனாக ஆகிறான். இவன் தன்னிடத்தில் விளையாடுபவன். தன்னிடத்தில் மகிழ்ந்திருப்பவன். மேலான கர்மத்தில் ஈடுபடுபவன். ப்ரஹ்மனை அறிந்தவர்களுள் மேலானவன்.

५. **सत्येन लभ्यस्तपसा ह्येष आत्मा सम्यग्ज्ञानेन ब्रह्मचर्येण नित्यम्।**
अन्तःशरीरे ज्योतिर्मयो हि शुभ्रः यं पश्यन्ति यतयः क्षीणदोषाः।।

5. ஸத்யேன லப்$_4$யஸ்தபஸா ஹ்யேஷ ஆத்மா
ஸம்யக்$_3$ஞானேன ப்$_3$ரஹ்மசர்யேண நித்யம் ।
அந்த: ச$_1$ரீரே ஜ்யோதிர்மயோ ஹி சு$_1$ப்$_4$ர:
யம் பச்$_1$யந்தி யதய: க்ஷீணதோ$_3$ஷா: ।।

एषः हि आत्मा ஏஷ: ஹி ஆத்மா இந்த ஆத்மா **नित्यं** நித்யம் என்றும் பின்பற்றும் **सत्येन** ஸத்யேன வாய்மையாலும் **तपसा** தபஸா தவத்தாலும் **ब्रह्मचर्येण** ப்$_3$ரஹ்மசர்யேண ப்ரஹ்மசர்யத்தாலும் **सम्यग्ज्ञानेन** ஸம்யக்$_3$ஞானேன முறையான விசாரத்தாலும் **लभ्यः** லப்$_4$ய: அடையப்படுகிறது. **क्षीणदोषाः** க்ஷீணதோ$_3$ஷா: குறைகள் நீங்கப் பெற்ற **यतयः** யதய: ஸாதகர்கள் **अन्तःशरीरे हि** அந்த:ச$_1$ரீரே ஹி உடலுக்குள் **शुभ्रः** சு$_1$ப்$_4$ர: தூய்மையான **ज्योतिर्मयः** ஜ்யோதிர்மய: சைதன்ய ஸ்வரூபமான **यं** யம் அந்த (ஆத்மாவை) **पश्यन्ति** பச்$_1$யந்தி பார்க்கிறார்கள்.

இந்த ஆத்மா, என்றும் பின்பற்றும் வாய்மையாலும் தவத்தாலும் ப்ரஹ்மசர்யத்தாலும் முறையான விசாரத்தாலும் அடையப்படுகிறது. குறைகள் நீங்கப்பெற்ற ஸாதகர்கள் உடலுக்குள் தூய்மையான, சைதன்ய ஸ்வரூபமான அந்த ஆத்மாவைப் பார்க்கிறார்கள்.

६. **सत्यमेव जयते नानृतं सत्येन पन्था विततो देवयानः।**
येनाक्रमन्त्यृषयो ह्याप्तकामाः यत्र तत्सत्यस्य परमं निधानम्।।

6. ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்
ஸத்யேன பந்தா$_2$ விததோ தே$_3$வயான: ।
யேனாக்ரமந்த்ய்ருஷயோ ஹ்யாப்தகாமா:
யத்ர தத்ஸத்யஸ்ய பரமம் நிதா$_4$னம் ।।

सत्यं एव ஸத்யம் ஏவ வாய்மையே **जयते** ஜயதே வெல்லும். **अनृतं** அந்ருதம் பொய்மை **न** ந வெல்லாது. **यत्र** யத்ர எந்த (ப்ரஹ்ம லோகத்தில்) **सत्यस्य** ஸத்யஸ்ய ஸத்யத்தினால் அடையப்படும் **तत् परमं** தத் பரமம் அந்த மேலான **निधानं** நிதா$_{4}$னம் லக்ஷ்யம் உண்டோ (அந்த லோகத்தை) **आप्तकामाः हि** ஆப்தகாமா: ஹி ஆசைகள் நீங்கிய **ऋषयः** ரிஷய: ரிஷிகள் **येन** யேன எதனால் (எந்தப் பாதையினால்) **आक्रमन्ति** ஆக்ரமந்தி அடைகிறார்களோ (அந்த) **देवयानः** தே$_{3}$வயான: ஒளிபொருந்திய **पन्थाः** பந்தா$_{2}$: பாதை **सत्येन** ஸத்யேன ஸத்யத்தினால் **विततः** விதத: அமைக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும். பொய்மை வெல்லாது. எந்த ப்ரஹ்ம லோகத்தில் ஸத்யத்தினால் அடையப்படும் அந்த மேலான லக்ஷ்யம் உண்டோ, அந்த லோகத்தை ஆசைகள் நீங்கிய ரிஷிகள் எந்தப் பாதையினால் அடைகிறார்களோ, அந்த ஒளி பொருந்திய பாதை ஸத்யத்தினால் அமைக்கப்பட்டுள்ளது.

७. **बृहच्च तद्दिव्यमचिन्त्यरूपं सूक्ष्माच्च तत्सूक्ष्मतरं विभाति।**
दूरात्सुदूरे तदिहान्तिके च पश्यत्स्विहैव निहितं गुहायाम्।।

7. ப்$_{3}$ருஹச்ச தத்$_{3}$தி$_{3}$வ்யமசிந்த்யரூபம்
ஸூக்ஷ்மாச்ச தத்ஸூக்ஷ்மதரம் விபா$_{4}$தி ।
தூ$_{3}$ராத்ஸுதூ$_{3}$ரே ததி$_{3}$ஹாந்திகே ச
பச்$_{1}$யத்ஸ்விஹைவ நிஹிதம் கு$_{3}$ஹாயாம் ।।

तत् தத் அது (ப்ரஹ்மன்) **बृहत् च** ப்$_{3}$ருஹத் ச எல்லையற்றது. **दिव्यं** தி$_{3}$வ்யம் ஸ்வயம் ப்ரகாசமானது. **अचिन्त्यरूपं** அசிந்த்யரூபம் சிந்தனைக்கு அப்பாற்பட்ட ஸ்வரூபமானது. **तत्** தத் அது **सूक्ष्मात् च** ஸூக்ஷ்மாத் ச நுண்ணியதைக் காட்டிலும் **सूक्ष्मतरं** ஸூக்ஷ்மதரம் நுண்ணியது. **विभाति** விபா$_{4}$தி விதவிதமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. **तत्** தத் அது **दूरात्** தூ$_{3}$ராத் தூரத்தில் இருப்பதைக் காட்டிலும் **सुदूरे** ஸுதூ$_{3}$ரே தூரத்தில் உள்ளது. **इह अन्तिके च**

இஹ அந்திகே ச மிக அருகிலும் இருக்கிறது. **पश्यत्सु** பச்$_1$யத்ஸு ஜீவர்களின் **इह एव** இஹ ஏவ உடலிலுள்ள **गुहायां** கு$_3$ஹாயாம் மனதில் **निहितं** நிஹிதம் வைக்கப்பட்டுள்ளது.

அந்த ப்ரஹ்மன் எல்லையற்றது. ஸ்வயம் ப்ரகாசமானது. சிந்தனைக்கு அப்பாற்பட்ட ஸ்வரூபமானது. அது நுண்ணியதைக் காட்டிலும் நுண்ணியது. விதவிதமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது தூரத்தில் இருப்பதைக் காட்டிலும் தூரத்தில் உள்ளது. மிக அருகிலும் இருக்கிறது. ஜீவர்களின் உடலிலுள்ள மனதில் வைக்கப்பட்டுள்ளது.

௮. **न चक्षुषा गृह्यते नापि वाचा नान्यैर्देवैस्तपसा कर्मणा वा।**
ज्ञानप्रसादेन विशुद्धसत्त्वः ततस्तु तं पश्यते निष्कलं ध्यायमानः॥

8. ந சக்ஷுஷா க்$_3$ருஹ்யதே நாபி வாசா
நான்யைர்தே$_3$வைஸ்தபஸா கர்மணா வா ।
ஞானப்ரஸாதே$_3$ன விசு$_1$த்$_3$த$_4$ஸத்த்வ:
ததஸ்து தம் பச்$_1$யதே நிஷ்கலம் த்$_4$யாயமான: ॥

चक्षुषा சக்ஷுஷா (இந்த ஆத்மா) கண்களினால் **न गृह्यते** ந க்$_3$ருஹ்யதே க்ரஹிக்கப்படுவதில்லை. **वाचा अपि** வாசா அபி சொற்களாலும் **न** ந க்ரஹிக்கப்படுவதில்லை. **अन्यैः देवैः** அன்யை: தே$_3$வை: மற்ற இந்த்ரியங்களாலும் **न** ந க்ரஹிக்கப்படுவதில்லை. **तपसा** தபஸா தவத்தாலும் **कर्मणा वा** கர்மணா வா கர்மத்தாலும் (அடையப்படுவதில்லை). **ज्ञान-प्रसादेन** ஞான-ப்ரஸாதே$_3$ன (ஸாதகன்) மனதினுடைய அமைதியினால் **विशुद्धसत्त्वः** விசு$_1$த்$_3$த$_4$ஸத்த்வ: தூய்மையான மனதையடைகிறான். **ततः तु** தத: து பிறகு **ध्यायमानः** த்$_4$யாயமான: த்யானத்தின் மூலம் **तं** தம் அந்த **निष्कलं** நிஷ்கலம் பிளவுபடாத (ஆத்மாவை) **पश्यते** பச்$_1$யதே அறிகிறான்.

இந்த ஆத்மா கண்களினால் க்ரஹிக்கப்படுவதில்லை. சொற்களாலும் க்ரஹிக்கப்படுவதில்லை. மற்ற இந்த்ரியங்களாலும்

க்ரஹிக்கப்படுவதில்லை. தவத்தாலும் கர்மத்தாலும் அடையப் படுவதில்லை. ஸாதகன் மனதினுடைய அமைதியினால் தூய்மையான மனதையடைகிறான். பிறகு த்யானத்தின் மூலம் அந்தப் பிளவுபடாத ஆத்மாவை அறிகிறான்.

९. एषोऽणुरात्मा चेतसा वेदितव्यः यस्मिन्प्राणः पञ्चधा संविवेश।
प्राणैश्चित्तं सर्वमोतं प्रजानां यस्मिन्विशुद्धे विभवत्येष आत्मा॥

9. ஏஷோऽணுராத்மா சேதஸா வேதி$_3$தவ்ய:
யஸ்மின்ப்ராண: பஞ்சதா$_4$ ஸம்விவேச$_1$ ।
ப்ராணைச்$_1$சித்தம் ஸர்வமோதம் ப்ரஜானாம்
யஸ்மின்விசு$_1$த்$_3$தே$_4$ விப$_4$வத்யேஷ ஆத்மா ॥

यस्मिन् யஸ்மின் எதில் (ஸ்தூல சரீரத்தில்) **प्राणः** ப்ராண: ப்ராணன் **पञ्चधा** பஞ்சதா$_4$ ஐந்து விதமாக **संविवेश** ஸம்விவேச$_1$ சென்றுள்ளதோ (அந்த ஸ்தூல சரீரத்தில் உள்ள) **चेतसा** சேதஸா மனதால் **एषः** ஏஷ: இந்த **अणुः** அணு: ஸூக்ஷ்மமான **आत्मा** ஆத்மா ஆத்மா **वेदितव्यः** வேதி$_3$தவ்ய: அறியப்பட வேண்டும். **प्रजानां** ப்ரஜானாம் ஜீவர்களின் **प्राणैः** ப்ராணை: இந்த்ரியங்களும் **सर्वं चित्तं** ஸர்வம் சித்தம் முழுமனதும் (ஆத்மாவால்) **ओतं** ஓதம் வ்யாபிக்கப்பட்டுள்ளது. **यस्मिन् विशुद्धे** யஸ்மின் விசு$_1$த்$_3$தே$_4$ மனம் தூய்மையாகும்பொழுது **एषः आत्मा** ஏஷ: ஆத்மா இந்த ஆத்மா **विभवति** விப$_4$வதி தெளிவாக விளங்குகிறது.

எந்த ஸ்தூல சரீரத்தில் ப்ராணன் ஐந்து விதமாக சென்றுள்ளதோ, அந்த ஸ்தூல சரீரத்தில் உள்ள மனதால் இந்த ஸூக்ஷ்மமான ஆத்மா அறியப்பட வேண்டும். ஜீவர்களின் இந்த்ரியங்களும் முழுமனதும் ஆத்மாவால் வ்யாபிக்கப்பட்டு உள்ளது. மனம் தூய்மையாகும்பொழுது இந்த ஆத்மா தெளிவாக விளங்குகிறது.

१०. यं यं लोकं मनसा संविभाति विशुद्धसत्त्वः कामयते यांश्च कामान्।
तं तं लोकं जयते तांश्च कामान् तस्मादात्मज्ञं ह्यर्चयेद्भूतिकामः ।।

10. யம் யம் லோகம் மனஸா ஸம்விபா$_4$தி
விசு$_1$த்$_3$த$_4$ஸத்த்வ: காமயதே யாம்ச்$_1$ச காமான் ।
தம் தம் லோகம் ஜயதே தாம்ச்$_1$ச காமான்
தஸ்மாதா$_3$த்மஞ்ஞம் ஹ்யர்சயேத்$_3$பூ$_4$திகாம: ।।

विशुद्धसत्त्वः விசு$_1$த்$_3$த$_4$ஸத்த்வ: தூய்மையான மனதையுடையவன் **यं यं लोकं** யம் யம் லோகம் எந்தெந்த லோகத்தை **मनसा** மனஸா மனதால் **संविभाति** ஸம்விபா$_4$தி ஆசைப்படுகிறானோ **यान् च** யான் ச எந்தெந்த **कामान्** காமான் பொருள்களை **कामयते** காமயதே ஆசைப் படுகிறானோ **तं तं लोकं** தம் தம் லோகம் அந்தந்த லோகத்தையும் **तान् च कामान्** தான் ச காமான் அந்தந்தப் பொருள்களையும் **जयते** ஜயதே அடைகிறான். **तस्मात्** தஸ்மாத் ஆகவே **भूतिकामः** பூ$_4$திகாம: இன்பத்தில் ஆசையுள்ளவன் **आत्मज्ञं हि** ஆத்மஞும் ஹி ஞானியை **अर्चयेत्** அர்சயேத் பூஜிக்கவேண்டும்.

தூய்மையான மனதையுடையவன் எந்தெந்த லோகத்தை மனதால் ஆசைப்படுகிறானோ, எந்தெந்தப் பொருள்களை ஆசைப்படுகிறானோ, அந்தந்த லோகத்தையும் அந்தந்தப் பொருள்களையும் அடைகிறான். ஆகவே இன்பத்தில் ஆசை யுள்ளவன் ஞானியைப் பூஜிக்க வேண்டும்.

इति तृतीयमुण्डके प्रथमः खण्डः

மூன்றாவது முண்டகத்தில் முதல் கண்டம் முடிவுற்றது.

तृतीयमुण्डके द्वितीयः खण्डः

மூன்றாவது முண்டகத்தில் இரண்டாவது கண்டம்

१. स वेदैतत्परमं ब्रह्म धाम यत्र विश्वं निहितं भाति शुभ्रम्।
उपासते पुरुषं ये ह्यकामाः ते शुक्रमेतदतिवर्तन्ति धीराः ॥

1. ஸ வேதை$_3$தத்பரமம் ப்$_3$ரஹ்ம தா$_4$ம
யத்ர விச்$_1$வம் நிஹிதம் பா$_4$தி சு$_1$ப்$_4$ரம் ।
உபாஸதே புருஷம் யே ஹ்யகாமா:
தே சு$_1$க்ரமேதத$_3$திவர்தந்தி தீ$_4$ரா: ॥

सः ஸ: அந்த (ஞானி) **परमं** பரமம் மேலான **धाम** தா$_4$ம இருப்பிடமான **एतत्** ஏதத் இந்த **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **वेद** வேத$_3$ அறிகிறார். **यत्र** யத்ர எதனிடம் (ப்ரஹ்மனிடத்தில்) **विश्वं** விச்$_1$வம் உலகமானது **निहितं** நிஹிதம் இருக்கிறதோ (அந்த ப்ரஹ்மன்) **शुभ्रं** சு$_1$ப்$_4$ரம் தெளிவாக **भाति** பா$_4$தி விளங்குகிறது. **ये अकामाः हि** யே அகாமா: ஹி எந்த ஆசையற்றவர்கள் **पुरुषं** புருஷம் ஞானியை **उपासते** உபாஸதே வணங்குகிறார்களோ **ते धीराः** தே தீ$_4$ரா: அந்த தீரர்கள் **एतत् शुक्रं** ஏதத் சு$_1$க்ரம் இந்த ஸம்ஸாரத்தை **अतिवर्तन्ति** அதிவர்தந்தி கடந்து செல்கிறார்கள்.

அந்த ஞானி மேலான இருப்பிடமான இந்த ப்ரஹ்மனை அறிகிறார். எந்த ப்ரஹ்மனிடத்தில் உலகமானது இருக்கிறதோ அந்த ப்ரஹ்மன் தெளிவாக விளங்குகிறது. எந்த ஆசையற்ற வர்கள் ஞானியை வணங்குகிறார்களோ அந்த தீரர்கள் இந்த ஸம்ஸாரத்தைக் கடந்து செல்கிறார்கள்.

२. कामान्यः कामयते मन्यमानः स कामभिर्जायते तत्र तत्र।
पर्याप्तकामस्य कृतात्मनस्तु इहैव सर्वे प्रविलीयन्ति कामाः ॥

2. காமான்ய: காமயதே மன்யமான:
ஸ காமபி₄ர்ஜாயதே தத்ர தத்ர ।
பர்யாப்தகாமஸ்ய க்ருதாத்மனஸ்து
இஹைவ ஸர்வே ப்ரவிலீயந்தி காமா: ॥

य: ய: யார் **कामान्** காமான் பொருள்களை **मन्यमान:** மன்யமான: நினைத்துக்கொண்டு **कामयते** காமயதே ஆசைவசப்படுகிறானோ **स:** ஸ: அவன் **तत्र तत्र** தத்ர தத்ர அந்தந்த சூழ்நிலையில் **कामभि:** காமபி₄: ஆசைப்பட்ட பொருள்களுடன் **जायते** ஜாயதே பிறக்கிறான். **पर्याप्तकामस्य** பர்யாப்தகாமஸ்ய முழுநிறைவை அடைந்த **कृतात्मन: तु** க்ருதாத்மன: து தனக்கு செய்யவேண்டியதைச் செய்து முடித்த வனுக்கு **सर्वे कामा:** ஸர்வே காமா: அனைத்து ஆசைகளும் **इह एव** இஹ ஏவ இங்கேயே **प्रविलीयन्ति** ப்ரவிலீயந்தி நீங்குகின்றன.

யார் பொருள்களை நினைத்துக்கொண்டு ஆசைவசப் படுகிறானோ, அவன் அந்தந்த சூழ்நிலையில் ஆசைப்பட்ட பொருள்களுடன் பிறக்கிறான். முழு நிறைவையடைந்த, தனக்கு செய்யவேண்டியதைச் செய்து முடித்தவனுக்கு அனைத்து ஆசைகளும் இங்கேயே நீங்குகின்றன.

३. नायमात्मा प्रवचनेन लभ्य: न मेधया न बहुना श्रुतेन।
यमेवैष वृणुते तेन लभ्य: तस्यैष आत्मा विवृणुते तनुं स्वाम्॥

3. நாயமாத்மா ப்ரவசனேன லப்₄ய:
ந மேத₄யா ந ப₃ஹுனா ச்₁ருதேன ।
யமேவைஷ வ்ருணுதே தேன லப்₄ய:
தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனும் ஸ்வாம் ॥

अयं आत्मा அயம் ஆத்மா இந்த ஆத்மா **प्रवचनेन** ப்ரவசனேன (வேதத்தை) ஓதுவதால் (மட்டும்) **न लभ्य:** ந லப்₄ய: அடையப் படுவதில்லை. **मेधया** மேத₄யா ஞாபகசக்தியால் (மட்டும்) **न** ந

அடையப்படுவதில்லை. **बहुना श्रुतेन** ப$_3$ஹுனா ச்$_1$ருதேன மீண்டும் மீண்டும் கேட்பதால் (மட்டும்) **न** ந அடையப்படுவதில்லை. **एषः** ஏஷ: இந்த (ஆத்மா) **यं** யம் யாரை **वृणुते** வ்ருணுதே தேர்ந்தெடுக்கிறதோ **तेन एव** தேன ஏவ அவனால்தான் **लभ्यः** லப்$_4$ய: அடையப்படுகிறது. **एषः आत्मा** ஏஷ: ஆத்மா இந்த ஆத்மா **तस्य** தஸ்ய அவனுக்கு **स्वां** ஸ்வாம் தன் **तनुं** தனும் ஸ்வரூபத்தை **विवृणुते** விவ்ருணுதே விளக்குகிறது.

இந்த ஆத்மா வேதத்தை ஓதுவதால் மட்டும் அடையப்படுவதில்லை. ஞாபக சக்தியால் மட்டும் அடையப்படுவதில்லை. மீண்டும் மீண்டும் கேட்பதால் மட்டும் அடையப்படுவதில்லை. இந்த ஆத்மா யாரைத் தேர்ந்தெடுக்கிறதோ அவனால்தான் அடையப்படுகிறது. இந்த ஆத்மா அவனுக்குத் தன் ஸ்வரூபத்தை விளக்குகிறது.

४. नायमात्मा बलहीनेन लभ्यः न च प्रमादात्तपसो वाप्यलिङ्गात्।
एतैरुपायैर्यतते यस्तु विद्वान् तस्यैष आत्मा विशते ब्रह्मधाम॥

4. நாயமாத்மா ப$_3$லஹீனேன லப்$_4$ய:
ந ச ப்ரமாதா$_3$த்தபஸோ வாப்யலிங்கா$_3$த் ।
ஏதைருபாயைர்யததே யஸ்து வித்$_3$வான்
தஸ்யைஷ ஆத்மா விச$_1$தே ப்$_3$ரஹ்மதா$_4$ம ॥

अयं आत्मा அயம் ஆத்மா இந்த ஆத்மா **बलहीनेन** ப$_3$லஹீனேன பலஹீனனால் **न लभ्यः** ந லப்$_4$ய: அடையப்படுவதில்லை. **प्रमादात् च** ப்ரமாதா$_3$த் ச கவனக்குறைவுடன் இருப்பதாலும் **न** ந அடையப்படுவதில்லை. **अलिङ्गात्** அலிங்கா$_3$த் துறவற்ற **तपसः अपि** தபஸ: அபி ஞானத்தாலும் **वा** வா அடையப்படுவதில்லை. **यः विद्वान् तु** ய: வித்$_3$வான் து எந்த ஞானி **एतैः उपायैः** ஏதை: உபாயை: இந்த உபாயங்களுடன் **यतते** யததே முயற்சி செய்கின்றானோ **तस्य** தஸ்ய அவனுடைய **एषः आत्मा** ஏஷ: ஆத்மா இந்த ஆத்மா **ब्रह्मधाम** ப்$_3$ரஹ்மதா$_4$ம ப்ரஹ்மஸ்வரூபத்தை **विशते** விச$_1$தே அடைகிறது.

இந்த ஆத்மா பலஹீனனால் அடையப்படுவதில்லை. கவனக்குறைவுடன் இருப்பதாலும் அடையப்படுவதில்லை. துறவற்ற ஞானத்தாலும் அடையப்படுவதில்லை. எந்த ஞானி இந்த உபாயங்களுடன் முயற்சி செய்கின்றானோ, அவனுடைய இந்த ஆத்மா ப்ரஹ்மஸ்வரூபத்தை அடைகிறது.

५. सम्प्राप्यैनमृषयो ज्ञानतृप्ताः कृतात्मानो वीतरागाः प्रशान्ताः ।
ते सर्वगं सर्वतः प्राप्य धीराः युक्तात्मानः सर्वमेवाविशन्ति ।।

5. ஸம்ப்ராப்யைனம்ருஷயோ ஞானத்ருப்தா:
க்ருதாத்மானோ வீதராகா$_3$: ப்ரசா$_1$ந்தா: ।
தே ஸர்வக$_3$ம் ஸர்வத: ப்ராப்ய தீ$_4$ரா:
யுக்தாத்மான: ஸர்வமேவாவிச$_1$ந்தி ।।

ऋषयः ரிஷய: ரிஷிகள் **एनं** ஏனம் இதை (ப்ரஹ்மனை) **सम्प्राप्य** ஸம்ப்ராப்ய அடைந்து **ज्ञानतृप्ताः** ஞானத்ருப்தா: ஞானத்தினால் த்ருப்தியை அடைந்தவர்களாகவும் **कृतात्मानः** க்ருதாத்மான: தன்னை நிறைவுபடுத்தியவர்களாகவும் **वीतरागाः** வீதராகா$_3$: ஆசையிலிருந்து விடுபட்டவர்களாகவும் **प्रशान्ताः** ப்ரசா$_1$ந்தா: மன அமைதியை அடைந்தவர்களாகவும் (ஆகிறார்கள்). **ते युक्तात्मानः** தே யுக்தாத்மான: அந்த சுயக்கட்டுப்பாடுடைய **धीराः** தீ$_4$ரா: தீரர்கள் **सर्वगं** ஸர்வக$_3$ம் எங்கும் வ்யாபிக்கின்ற (ப்ரஹ்மனை) **सर्वतः** ஸர்வத: முழுமையாக **प्राप्य** ப்ராப்ய அடைந்து **सर्वं एव** ஸர்வம் ஏவ அனைத்தையும் **आविशन्ति** ஆவிச$_1$ந்தி வ்யாபிக்கிறார்கள்.

ரிஷிகள் இந்த ப்ரஹ்மனை அடைந்து ஞானத்தினால் த்ருப்தியை அடைந்தவர்களாகவும் தன்னை நிறைவுபடுத்திய வர்களாகவும் ஆசையிலிருந்து விடுபட்டவர்களாகவும் மன அமைதியை அடைந்தவர்களாகவும் ஆகிறார்கள். அந்த சுயக் கட்டுப்பாடுடைய தீரர்கள் எங்கும் வ்யாபிக்கின்ற ப்ரஹ்மனை முழுமையாக அடைந்து அனைத்தையும் வயாபிக்கிறார்கள்.

६. वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः सन्न्यासयोगाद्यतयः शुद्धसत्त्वाः ।
ते ब्रह्मलोकेषु परान्तकाले परामृताः परिमुच्यन्ति सर्वे ॥

6. வேதா$_3$ந்தவிஞானஸுநிச்$_1$சிதார்தா$_2$:
ஸந்ந்யாஸயோகா$_3$த்$_3$யதய: சு$_1$த்$_3$த$_4$ஸத்த்வா: ।
தே ப்$_3$ரஹ்மலோகேஷு பராந்தகாலே
பராம்ருதா: பரிமுச்யந்தி ஸர்வே ॥

शुद्धसत्त्वाः சு$_1$த்$_3$த$_4$ஸத்த்வா: தூய்மையான மனதையுடைய **यतयः** யதய: ஸாதகர்கள் **सन्न्यासयोगात्** ஸந்ந்யாஸயோகா$_3$த் ஸந்யாஸம் என்ற ஸாதனையினால் **वेदान्त-विज्ञान-सुनिश्चित-अर्थाः** வேதா$_3$ந்த-விஞான-ஸுநிச்$_1$சித-அர்தா$_2$: வேதாந்தத்திலிருந்து தோன்றிய ஞானத்திற்குப் பொருளான (ப்ரஹ்மனில்) உறுதியை அடைகிறார்கள். **ते सर्वे** தே ஸர்வே அவர்கள் அனைவரும் **परामृताः** பராம்ருதா: (வாழும் பொழுதே) ப்ரஹ்மனுடன் ஒன்றானவர்களாக இருந்து கொண்டு **परान्तकाले** பராந்தகாலே முடிவான மரண காலத்தில் **ब्रह्मलोकेषु** ப்$_3$ரஹ்மலோகேஷு ப்ரஹ்மனிடத்தில் **परिमुच्यन्ति** பரிமுச்யந்தி முழுமையாகக் கலந்து விடுகிறார்கள்.

தூய்மையான மனதையுடைய ஸாதகர்கள் ஸந்யாஸம் என்ற ஸாதனையினால் வேதாந்தத்திலிருந்து தோன்றிய ஞானத்திற்குப் பொருளான ப்ரஹ்மனில் உறுதியை அடைகிறார்கள். அவர்கள் அனைவரும் வாழும்பொழுதே ப்ரஹ்மனுடன் ஒன்றானவர்களாக இருந்துகொண்டு முடிவான மரணகாலத்தில் ப்ரஹ்மனிடத்தில் முழுமையாகக் கலந்து விடுகிறார்கள்.

७. गताः कलाः पञ्चदश प्रतिष्ठाः देवाश्च सर्वे प्रतिदेवतासु ।
कर्माणि विज्ञानमयश्च आत्मा परेऽव्यये सर्व एकीभवन्ति ॥

7. க$_3$தா: கலா: பஞ்சத$_3$ச$_1$ ப்ரதிஷ்டா$_2$:
தே$_2$வாச்$_1$ச ஸர்வே ப்ரதிதே$_3$வதாஸு ।
கர்மாணி விஞானமயச்$_1$ச ஆத்மா
பரேऽவ்யயே ஸர்வ ஏகீப$_4$வந்தி ॥

पञ्चदश பஞ்சத$_3$ச$_1$ பதினைந்து **कला:** கலா: அவயவங்கள் **प्रतिष्ठा:** ப்ரதிஷ்டா$_2$: (அவற்றின்) காரணங்களை **गता:** க$_3$தா: அடைகின்றன. **सर्वे देवा: च** ஸர்வே தே$_3$வா: ச எல்லா இந்த்ரியங்களும் **प्रतिदेवतासु** ப்ரதிதே$_3$வதாஸு அந்தந்த தேவதைகளை (அடைகின்றன). **विज्ञानमय: आत्मा** விஞானமய: ஆத்மா அஹங்காரம் **कर्माणि च** கர்மாணி ச கர்மங்கள் **सर्वे** ஸர்வே (இவை) அனைத்தும் **परे** பரே மேலான **अव्यये** அவ்யயே அழியாத (ப்ரஹ்மனில்) **एकीभवन्ति** ஏகீப$_4$வந்தி ஒடுங்கிவிடுகின்றன.

பதினைந்து அவயவங்கள் அவற்றின் காரணங்களை அடைகின்றன. எல்லா இந்த்ரியங்களும் அந்தந்த தேவதைகளை அடைகின்றன. அஹங்காரம், கர்மங்கள் இவை அனைத்தும் மேலான, அழியாத ப்ரஹ்மனில் ஒடுங்கிவிடுகின்றன.

௮. **यथा नद्य: स्यन्दमाना: समुद्रे अस्तं गच्छन्ति नामरूपे विहाय।**
तथा विद्वान्नामरूपाद्विमुक्त: परात्परं पुरुषमुपैति दिव्यम्॥

8. யதா$_2$ நத்$_3$ய: ஸ்யந்த$_3$மானா: ஸமுத்$_3$ரே
அஸ்தம் க$_3$ச்ச$_2$ந்தி நாமரூபே விஹாய ।
ததா$_2$ வித்$_3$வான்நாமரூபாத்$_3$விமுக்த:
பராத்பரம் புருஷமுபைதி தி$_3$வ்யம் ॥

यथा யதா$_2$ எவ்விதம் **स्यन्दमाना:** ஸ்யந்த$_3$மானா: (விதவிதமான திசைகளில்) ஓடுகின்ற **नद्य:** நத்$_3$ய: ஆறுகள் **नामरूपे** நாமரூபே நாமரூபத்தை **विहाय** விஹாய விட்டு **समुद्रे** ஸமுத்$_3$ரே கடலில் **अस्तं गच्छन्ति** அஸ்தம் க$_3$ச்ச$_2$ந்தி கலந்துவிடுகின்றனவோ **तथा** ததா$_2$

அவ்விதம் **विद्वान्** வித்$_3$வான் ஞானி **नामरूपात्** நாமரூபாத் நாம ரூபங்களிலிருந்து **विमुक्तः** விமுக்த: விடுபட்டவனாக **परात्** பராத் மாயைக்கும் **परं** பரம் மேலான **दिव्यं** தி$_3$வ்யம் சைதன்ய ஸ்வரூபமான **पुरुषं** புருஷம் ப்ரஹ்மனை **उपैति** உபைதி அடைகிறான்.

எவ்விதம் விதவிதமான திசைகளில் ஓடுகின்ற ஆறுகள் நாமரூபத்தை விட்டுக் கடலில் கலந்துவிடுகின்றனவோ அவ்விதம் ஞானி, நாமரூபங்களிலிருந்து விடுபட்டவனாக, மாயைக்கும் மேலான, சைதன்ய ஸ்வரூபமான ப்ரஹ்மனை அடைகிறான்.

९. स यो ह वै तत्परमं ब्रह्म वेद
ब्रह्मैव भवति नास्याब्रह्मवित्कुले भवति।
तरति शोकं तरति पाप्मानं
गुहाग्रन्थिभ्यो विमुक्तोऽमृतो भवति॥

9. ஸ யோ ஹ வை தத்பரமம் ப்$_3$ரஹ்ம வேத$_3$
ப்$_3$ரஹ்மைவ ப$_4$வதி நாஸ்யாப்$_3$ரஹ்மவித்குலே ப$_4$வதி ।
தரதி சோ$_1$கம் தரதி பாப்மானம்
கு$_3$ஹாக்$_3$ரந்தி$_2$ப்$_4$யோ விமுக்தோऽம்ருதோ ப$_4$வதி ॥

यः ह वै ய: ஹ வை யார் **तत्** தத் அந்த **परमं** பரமம் மேலான **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **वेद** வேத$_3$ அறிகிறானோ **सः** ஸ: அவன் **ब्रह्म एव** ப்$_3$ரஹ்ம ஏவ ப்ரஹ்மனாகவே **भवति** ப$_4$வதி ஆகிறான். **अस्य** அஸ்ய அவனுடைய **कुले** குலே குலத்தில் **अब्रह्मविद्** அப்$_3$ரஹ்மவித்$_3$ ப்ரஹ்மனை அறியாதவர் **न भवति** ந ப$_4$வதி இருக்கமாட்டார். **शोकं** சோ$_1$கம் (அவன்) துயரத்தை **तरति** தரதி கடக்கின்றான். **पाप्मानं** பாப்மானம் (அவன்) பாபத்தை **तरति** தரதி கடக்கின்றான். **गुहा-ग्रन्थिभ्यः**

கு$_3$ஹா-க்$_3$ரந்தி$_2$ப்$_4$ய: ஹ்ருதயத்தின் முடிச்சிலிருந்து **विमुक्तः** விமுக்த: விடுபட்டவனாகவும் **अमृतः** அம்ருத: மரணமற்றவனாகவும் **भवति** ப$_4$வதி ஆகிறான்.

யார் அந்த மேலான ப்ரஹ்மனை அறிகிறானோ, அவன் ப்ரஹ்மனாகவே ஆகிறான். அவனுடைய குலத்தில் ப்ரஹ்மனை அறியாதவர் இருக்கமாட்டார். அவன் துயரத்தைக் கடக்கின்றான். அவன் பாபத்தைக் கடக்கின்றான். ஹ்ருதயத்தின் முடிச்சிலிருந்து விடுபட்டவனாகவும் மரணமற்றவனாகவும் ஆகிறான்.

१०. तदेतदृचाभ्युक्तम् —

क्रियावन्तः श्रोत्रिया ब्रह्मनिष्ठाः
स्वयं जुह्वत एकर्षिं श्रद्धयन्तः ।
तेषामेवैतां ब्रह्मविद्यां वदेत शिरोव्रतं विधिवद्यैस्तु चीर्णम् ॥

10. ததே$_3$தத்$_3$ருசாப்$_4$யுக்தம் —

க்ரியாவந்த: ச்$_1$ரோத்ரியா ப்$_3$ரஹ்மநிஷ்டா$_2$:
ஸ்வயம் ஜுஹ்வத ஏகர்ஷிம் ச்$_1$ரத்$_3$த$_4$யந்த: ।
தேஷாமேவைதாம் ப்$_3$ரஹ்மவித்$_3$யாம் வதே$_3$த
சி$_1$ரோவ்ரதம் விதி$_4$வத்$_3$யைஸ்து சீர்ணம் ॥

तत् एतत् தத் ஏதத் இங்கு கொடுக்கப்படுகின்ற நிபந்தனை **ऋचा** ரிசா ரிக்மந்த்ரத்தால் **अभ्युक्तम्** அப்$_4$யுக்தம் கூறப்பட்டிருக்கிறது.

क्रियावन्तः க்ரியாவந்த: கடமையை முறையாகச் செய்பவர்கள் **श्रोत्रियाः** ச்$_1$ரோத்ரியா: சாஸ்த்ரம் படித்தவர்கள் **ब्रह्मनिष्ठाः** ப்$_3$ரஹ்மநிஷ்டா$_2$: ப்ரஹ்மனை அடைய முழுமுயற்சி எடுத்தவர்கள் **एकर्षिं** ஏகர்ஷிம் ஏகர்ஷி (என்ற யாகத்தை) **स्वयं** ஸ்வயம் தானே **जुह्वते** ஜுஹ்வதே செய்தவர்கள் **श्रद्धयन्तः** ச்$_1$ரத்$_3$த$_4$யந்த: நம்பிக்கை யுடன் கூடியவர்கள் **यैः तु** யை: து (மேலும்) எவர்களால் **विधिवत्** விதி$_4$வத் முறைப்படி **शिरोव्रतं** சி$_1$ரோவ்ரதம் சிரோவ்ரதம் (என்ற

யாகம்) **चीर्णं** சீர்ணம் செய்யப்பட்டுள்ளதோ **तेषां एव** தேஷாம் ஏவ அவர்களுக்குத்தான் **एतां ब्रह्मविद्यां** ஏதாம் ப்$_3$ரஹ்மவித்$_3$யாம் இந்த ப்ரஹ்மவித்யையை **वदेत** வதே$_3$த உபதேசிக்கவேண்டும்.

இங்கு கொடுக்கப்படுகின்ற நிபந்தனை ரிக்மந்த்ரத்தால் கூறப்பட்டிருக்கிறது.

கடமையை முறையாகச் செய்பவர்கள், சாஸ்த்ரம் படித்தவர்கள், ப்ரஹ்மனை அடைய முழுமுயற்சி எடுத்தவர்கள், ஏகர்ஷி என்ற யாகத்தை தானே செய்தவர்கள், நம்பிக்கையுடன் கூடியவர்கள், மேலும் எவர்களால் முறைப்படி சிரோவ்ரதம் என்ற யாகம் செய்யப்பட்டுள்ளதோ அவர்களுக்குத்தான் இந்த ப்ரஹ்ம வித்யையை உபதேசிக்க வேண்டும்.

११. तदेतत्सत्यमृषिरङ्गिराः पुरोवाच नैतदचीर्णव्रतोऽधीते।
नमः परमऋषिभ्यो नमः परमऋषिभ्यः ।।

11. ததே$_3$தத்ஸத்யம்ருஷிரங்கி$_3$ரா: புரோவாச
நைதத$_3$சீர்ணவ்ரதோऽதீ$_4$தே ।
நம: பரமரிஷிப்$_4$யோ நம: பரமரிஷிப்$_4$ய: ।।

अङ्गिराः ऋषिः அங்கி$_3$ரா: ரிஷி: அங்கிரஸ் ரிஷி **तत् एतत्** தத் ஏதத் இந்த **सत्यं** ஸத்யம் உண்மையை **पुरा** புரா வெகுகாலத்திற்கு முன்பு **उवाच** உவாச உபதேசித்தார். **अचीर्णव्रतः** அசீர்ணவ்ரத: (இங்கு சொல்லப்பட்ட) நெறிகளைப் பின்பற்றாதவன் **एतत्** ஏதத் இதை **न अधीते** ந அதீ$_4$தே படிக்கக்கூடாது.

परमऋषिभ्यः பரமரிஷிப்$_4$ய: மேலான ரிஷிகளுக்கு **नमः** நம: நமஸ்காரங்கள். **परमऋषिभ्यः** பரமரிஷிப்$_4$ய: மேலான ரிஷிகளுக்கு **नमः** நம: நமஸ்காரங்கள்.

அங்கிரஸ் ரிஷி இந்த உண்மையை வெகு காலத்திற்கு முன்பு உபதேசித்தார். இங்கு சொல்லப்பட்ட நெறிகளைப் பின்பற்றாதவன் இதைப் படிக்கக்கூடாது.

மேலான ரிஷிகளுக்கு நமஸ்காரங்கள். மேலான ரிஷிகளுக்கு நமஸ்காரங்கள்.

इति तृतीयमुण्डके द्वितीयः खण्डः

மூன்றாவது முண்டகத்தில் இரண்டாவது கண்டம் முடிவுற்றது.

।। मुण्डकोपनिषत् समाप्ता ।।

முண்டகோபநிஷத் முடிவுற்றது.

****

கேனோபநிஷத்



ॐ

केनोपनिषद्
கேனோபநிஷத்$_3$

சாரம்

சாமவேதத்தில் அமைந்துள்ள இந்த உபநிஷத் கேன என்று துவங்குவதால் கேனோபநிஷத் என்று பெயர் பெற்றுள்ளது. இவ்வுபநிஷத் நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது.

முதல் பகுதி

முதல் மந்த்ரமே சிஷ்யனுடைய கேள்வியாக அமைந்துள்ளது. சிஷ்யனுடைய கேள்வியின் சாரம்: நாம் பார்த்து அனுபவிக்கின்ற ஸ்தூல உடலுக்கும், ஸூக்ஷ்மமான இந்த்ரியங்கள், மனம் முதலிய வற்றுக்கும் வேறாக இயங்கும் அறிவு தத்துவத்தின் தன்மை என்ன? என்பதே. இங்கு சிஷ்யன், உடல் எப்படி ஜடமோ, அதுபோல் மாற்றத்தை அடைந்து கொண்டிருக்கும் மனமும் ஜடம் என உணர்ந்து, இவற்றுக்கு வேறான, மாறாத, நிலையான மெய்ப்பொருள் என்ன என்பதை வினவுகிறான் (1).

குருவானவர், இக்கேள்விக்கு பதிலளித்து, இந்த ஞானத்தின் பலனையும் கூறுகின்றார் (2). பரம்பொருளின் தத்துவத்தை நேரடியாக விளக்கமுடியாத காரணத்தால், இங்கு சில முறைகளைப் பயன்படுத்தி பரம்பொருள் தத்துவத்தைச் சுட்டிக் காட்டுகின்றார். எந்த ஒன்று அறிவுஸ்வரூபமாக உள்ளதோ, அந்த ஒன்று செவி, மனம், வாக்கு முதலிய கருவிகளை வ்யாபித்து, அவற்றை செயல்படும் திறன் கொண்டதாக ஆக்குகின்றது. அந்த அறிவுஸ்வரூபத்தின் நிமித்தமாகத்தான் செவிக்கு செவி என்ற தன்மை கிடைக்கின்றது. அது போல் மனம் முதலிய கருவிகளுக்கு அந்தந்தத் தன்மை கிடைக்கின்றன. ஆகவேதான், அந்த மெய்ப்பொருள் செவிக்குச்செவியாக, மனதுக்கு மனதாக இருக்கின்றது என்னும் விதத்தில் விளக்கப்படுகிறது. அந்த

மெய்ப்பொருளை உணர்ந்த தீரர்கள், இவ்வுடலில் உள்ள பற்றை விட்டவர்களாக, மரணமற்ற தன்மையை அடைகிறார்கள். இவ்விதம் இரண்டாவது மந்த்ரத்தில் கூறிய கருத்தை மேலும் விளக்குகிறார். அந்த அறிவுஸ்வரூபத்தைக் கருவிகள் காட்டாது. நேரடியாகவும் விளக்கமுடியாது (3).

அறிந்ததற்கும் அறியாததற்கும் வேறுபட்டு இருக்கின்ற ஒரே பொருள், அறிபவனிடம் இருக்கின்ற அறிவு, அந்த அறிவே மெய்ப்பொருள். இவ்விதத்தில் எங்களுடைய குருவிடம் கேட்டதை உனக்குக் கூறுகின்றேன் என்று, இந்த அறிவைப் புகட்டும் முறையும் மரபுவழியில் வந்துள்ளது என்பதை குரு காட்டுகின்றார் (4). எந்தப் பொருளை, வாக்கு, மனம், கண்கள் முதலிய இந்த்ரியங்கள் விளக்காதோ, ஆனால் எந்த மெய்ப்பொருளால் வாக்கு முதலிய கருவிகள் விளங்குகின்றனவோ, அந்த மெய்ப்பொருளான ப்ரஹ்ம தத்துவம் நீ என்று அறிந்துகொள் என்று ஜீவப்ரஹ்ம ஐக்யத்தை குரு உபதேசித்து, இதுவரை நீ எவற்றை வழிபட்டு வந்தாயோ, அவை அனைத்தும் உனக்கு உதவிய படிகளே தவிர மெய்ப்பொருள் அல்ல என்றும் தெளிவுபடுத்துகிறார் (5 - 9).

இரண்டாவது பகுதி

இங்கு குருவானவர், சிஷ்யன் சரியாகப் புரிந்துகொண்டுள்ளானா என்று சோதிக்க விரும்பி, நான் ப்ரஹ்மனை நன்கு அறிவேன் என்று நீ நினைத்தால் அந்த ப்ரஹ்மனை நீ சரியாகப் புரிந்துகொண்டிருக்க மாட்டாய். ஆகவே நீ மீண்டும் விசாரத்தில் ஈடுபடவேண்டும் என்று கூற சிஷ்யனானவன், நான் ப்ரஹ்மனை சரியாகப் புரிந்துள்ளேன் என்று கூறி (1) தன்னுடைய தெளிவான அறிவை இவ்விதம் வெளிப்படுத்துகிறான்: நான் ப்ரஹ்மனை அறிந்தும் உள்ளேன், அதே சமயத்தில் அறியவும் இல்லை. இதை யார் உணர்கிறார்களோ அவர்களே உண்மையை உணர்கிறார்கள் (2). ப்ரஹ்மதத்துவத்தை ஒரு பொருளாக அறியவில்லை. நானாக அறிந்துள்ளேன் என்பதே சிஷ்யனுடைய கூற்றின் சாரம். இக்கருத்தையே உபநிஷத்தும், அறிபவர்கள் அறியவில்லை. அறியாதவர்கள் அறிகிறார்கள் என்று

கூறுகிறது. ப்ரஹ்மனை ஒரு பொருளாக அறிந்தவர்கள் உண்மையில் ப்ரஹ்மனை அறியவில்லை. ப்ரஹ்மனைப் பொருளாக அறியாத வர்கள் ப்ரஹ்மனை அறிகிறார்கள் (3). இப்படிப்பட்ட ப்ரஹ்ம தத்துவத்தை நம்முடைய மனதிற்குள் எழுகின்ற ஒவ்வொரு எண்ணத்தில் விளங்குகின்ற அறிவு ஸ்வரூபமாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவ்விதம் புரிந்து கொண்டதன் விளைவாக ஒருவன் பிறவாமையை அடைகின்றான். தகுதியடைந்த மனதின் துணை கொண்டு இந்தத் தத்துவத்தை க்ரஹிக்கும் சக்தியை அடைந்து, ஞானத்தால் மரணமற்ற நிலையை ஒருவன் அடைகிறான் (4).

இவ்விதம் பரம்பொருளின் தத்துவத்தை விளக்கியபின், மனிதப் பிறவியின் மேன்மை பேசப்படுகிறது. இந்தப் பிறவியிலேயே, மெய்ப்பொருளை அறிவதனால் இப்பிறவி அர்த்தமுடையதாக ஆகிறது. இல்லையென்றால் பேரிழப்பு நேரிடுகிறது. தீரர்கள்தான் எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் இந்த ப்ரஹ்மனை அறிந்து, அஹங்காரத்திலிருந்தும் மமகாரத்திலிருந்தும் விலகி மரணமற்ற தன்மையை அடைகிறார்கள் (5).

மூன்றாவது பகுதி

முதல் இரண்டு பகுதிகளில் பரம்பொருளின் தத்துவம் விளக்கப்பட்டு, அதன் பலனும் கூறப்பட்டுவிட்டது. மூன்றாவது, நான்காவது பகுதிகளில் கதை ஒன்று கூறப்பட்டு, சில பண்புகள் உபதேசிக்கப் படுகின்றன. ப்ரஹ்மன் தேவர்களுக்காக அசுரர்களை வென்றார். இந்த வெற்றியை தங்களுடையதாகக் கருதி தேவர்கள் கர்வம் கொண்டனர். அவர்களுடைய கர்வத்தை நீக்கி, பரம்பொருளைப் பற்றிய ஞானமானது, அக்னி, வாயு, இந்த்ரன் முதலிய தேவர்களுக்குப் புகட்டப்பட்டது (1 - 12).

நான்காவது பகுதி

ப்ரஹ்மனை அறிந்த காரணத்தால்தான் இந்த்ரன் முதலியோர் பெருமையை அடைகிறார்கள் (1 - 3).

இந்தக் கதையிலிருந்து நமக்குக் கிடைக்கும் அறிவுரைகள்:

1. கர்வத்தை நீக்கவேண்டும்.
2. இந்த்ரியங்களுக்கு எட்டாதபோதிலும் ப்ரஹ்மன் இருக்கின்றது.
3. ப்ரஹ்மனை அறிய விவேகம், வைராக்யம், ச்ரத்தா முதலிய தகுதிகள் தேவை.
4. ப்ரஹ்மன் அவ்வளவு எளிதில் அறியக்கூடிய தத்துவம் அல்ல.
5. ப்ரஹ்மனை அறிந்துகொள்ள குருவின் துணை தேவை.

இவ்விதம் கதையின் மூலமாக மேற்கண்ட அரிய கருத்துக்களைப் புகட்டி, இரண்டு விதமான த்யானப் பயிற்சிகள் வகுத்துக் கொடுக்கப் படுகின்றன. த்யானப்பயிற்சிகள், தத்துவத்தை க்ரஹிக்க முடியாத ஸாதகர்களைப் பண்படுத்துவதற்காகக் கூறப்பட்டுள்ளன. முதல் த்யானத்தில் ப்ரஹ்மன் மின்னலுடன் ஒப்பிடப்படுகிறது. எவ்விதம் மின்னல் பிரகாச ஸ்வரூபமோ அதுபோல் ப்ரஹ்மன் ப்ரகாசஸ்வரூபமாக அனைத்தையும் விளக்குகிறது என்பது உட்கருத்து. மேலும், ப்ரஹ்மன் கண்ணை மூடித்திறப்பதற்கு (wink of the eye) ஒப்பிடப்படுகிறது. எவ்விதம் இந்தப் பரந்த உலகமானது, கண்ணைத் திறக்கும் போது தோற்றத்துக்கு வந்து, கண்ணை மூடும்பொழுது மறைந்து விடுகின்றதோ அதுபோல் ப்ரஹ்மனிடமிருந்து இவ்வுலகம் தோன்றி மறைகிறது (4). மனமே ப்ரஹ்மனை வெளிப்படுத்துவது போல் த்யானித்தல் அதாவது மனதில் எழுகின்ற ஒவ்வொரு எண்ணமும் சைதன்யத்தை உணர்த்துவதால், மனம் ப்ரஹ்மனை விளக்குவதாக த்யானிக்கப்படுகிறது (5).

இரண்டாவது த்யானத்தில், ப்ரஹ்மனானது போற்றத்தக்க பொருளாக த்யானிக்கப்படுகிறது (6). இந்த இரண்டுவித த்யானங்களைக் கூறிய பிறகு, ப்ரஹ்மனைப் பற்றிய விளக்கம் முடிந்து விட்டதா? என்ற ஸந்தேஹத்தை சிஷ்யன் கேட்க, குருவானவர், ப்ரஹ்மனைப் பற்றிய விளக்கம் நிறைவு பெற்றுவிட்டது என்று கூறுகிறார் (7). இந்த ப்ரஹ்ம ஞானத்திற்குத் தகுதியை அடைய தவம், புலனடக்கம், கர்ம யோகம், வாய்மை ஆகிய சாதனங்கள் கொடுக்கப்பட்டு (8), இந்த ஞானத்தின் பலனாக மேலான மோக்ஷத்தை ஒருவன் அடைகிறான் என்ற கருத்துடன் இவ்வுபநிஷத் நிறைவுபெறுகிறது (9).

शान्तिपाठः
சா$_1$ந்திபாட$_2$:

आप्यायन्तु ममाङ्गानि वाक्प्राणश्चक्षुः श्रोत्रमथो बलमिन्द्रियाणि च सर्वाणि। सर्वं ब्रह्मौपनिषदम्। माहं ब्रह्म निराकुर्यां मा मा ब्रह्म निराकरोत्। अनिराकरणमस्त्व निराकरणं मे अस्तु। तदात्मनि निरते य उपनिषत्सु धर्मास्ते मयि सन्तु। ते मयि सन्तु। ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

ஆப்யாயந்து மமாங்கா$_3$னி வாக்ப்ராணச்$_1$சக்ஷு: ச்$_1$ரோத்ர மதோ$_2$ ப$_3$லமிந்த்$_3$ரியாணி ச ஸர்வாணி । ஸர்வம் ப்$_3$ரஹ்மௌபநிஷத$_3$ம் । மாஹம் ப்$_3$ரஹ்ம நிராகுர்யாம் மா மா ப்$_3$ரஹ்ம நிராகரோத் । அநிராகரணமஸ்த்வநிராகரணம் மே அஸ்து । ததா$_3$த்மனி நிரதே ய உபநிஷத்ஸு த$_4$ர்மாஸ் தே மயி ஸந்து । தே மயி ஸந்து । ஓம் சா$_1$ந்தி: சா$_1$ந்தி: சா$_1$ந்தி: ॥

मम மம எனது **अङ्गानि** அங்கா$_3$னி அங்கங்கள் **आप्यायन्तु** ஆப்யாயந்து ஆற்றல் பெறட்டும். **वाक्** வாக் வாக்கு **प्राणः** ப்ராண: ப்ராணன் **चक्षुः** சக்ஷு: கண் **श्रोत्रं** ச்$_1$ரோத்ரம் செவி **च** ச மற்றும் **सर्वाणि** ஸர்வாணி எல்லா **इन्द्रियाणि** இந்த்$_3$ரியாணி இந்த்ரியங்களும் **अथो** அதோ$_2$ மற்றும் (அவற்றின்) **बलं** ப$_3$லம் சக்தியும் (ஆற்றல் பெறட்டும்). **औपनिषदं** ஔபநிஷத$_3$ம் உபநிஷத்தினால் மட்டும் அடையப்படும் **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன் **सर्वं** ஸர்வம் அனைத்துமாக (இருக்கிறது). **अहं** அஹம் நான் **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **मा निराकुर्यां** மா நிராகுர்யாம் மறுக்காமல் இருப்பேனாக. **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன் **मा** மா என்னை **मा निराकरोत्** மா நிராகரோத் மறுக்காமல் இருப்பாராக. **अनिराकरणं अस्तु** அநிராகரணம் அஸ்து (என்னால் ப்ரஹ்மன்) மறுக்கப்படாமல் இருக்கட்டும். **मे** மே என்னை (ப்ரஹ்மன்) **अनिराकरणं अस्तु** அநிராகரணம் அஸ்து மறுக்காமல் இருக்கட்டும். **तदात्मनि**

ததா$_3$த்மனி அந்த ஆத்மாவை அறியும் மார்கத்தில் **निरते** நிரதே முழு ஈடுபாடுடைய (என்னிடத்தில்) **उपनिषत्सु** உபநிஷத்ஸு உபநிஷத்துக்களில் (கூறப்பட்டுள்ள) **धर्माः** த$_4$ர்மா: தகுதிகள் **ये** யே எவையோ **ते** தே அவை **मयि** மயி என்னிடத்தில் **सन्तु** ஸந்து இருக்கட்டும். **ते** தே அவை **मयि** மயி என்னிடத்தில் **सन्तु** ஸந்து இருக்கட்டும். **ओं शान्तिः** ஓம் சா$_1$ந்தி: ஓம் சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி.

எனது அங்கங்கள் ஆற்றல் பெறட்டும். வாக்கு, ப்ராணன், கண், செவி மற்றும் எல்லா இந்த்ரியங்களும் மற்றும் அவற்றின் சக்தியும் ஆற்றல் பெறட்டும். உபநிஷத்தினால் மட்டும் அடையப்படும் ப்ரஹ்மன் அனைத்துமாக இருக்கிறது. நான் ப்ரஹ்மனை மறுக்காமல் இருப்பேனாக. ப்ரஹ்மன் என்னை மறுக்காமல் இருப்பாராக. என்னால் ப்ரஹ்மன் மறுக்கப்படாமல் இருக்கட்டும். என்னை ப்ரஹ்மன் மறுக்காமல் இருக்கட்டும். அந்த ஆத்மாவை அறியும் மார்கத்தில் முழு ஈடுபாடுடைய என்னிடத்தில், உபநிஷத்துக்களில் கூறப்பட்டுள்ள தகுதிகள் எவையோ அவை என்னிடத்தில் இருக்கட்டும். அவை என்னிடத்தில் இருக்கட்டும். ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

प्रथमः खण्डः

முதல் பகுதி

१. केनेषितं पतति प्रेषितं मनः
केन प्राणः प्रथमः प्रैति युक्तः।
केनेषितां वाचमिमां वदन्ति
चक्षुः श्रोत्रं क उ देवो युनक्ति॥

1. கேனேஷிதம் பததி ப்ரேஷிதம் மன:
கேன ப்ராண: ப்ரத$_2$ம: ப்ரைதி யுக்த: ।
கேனேஷிதாம் வாசமிமாம் வத$_3$ந்தி
சக்ஷு: ச்$_1$ரோத்ரம் க உ தே$_3$வோ யுநக்தி ॥

केन கேன யாரால் **इषितं** இஷிதம் இச்சிக்கப்பட்டு **प्रेषितं** ப்ரேஷிதம் கட்டாயப்படுத்தப்பட்டது (போல) **मनः** மன: மனம் **पतति** பததி (விஷயத்தில்) வீழ்கிறது. **प्रथमः प्राणः** ப்ரத$_2$ம: ப்ராண: முக்கியமான ப்ராணன் **केन** கேன யாருடன் **युक्तः** யுக்த: சேர்ந்ததாக **प्रैति** ப்ரைதி இயங்குகிறது. **केन** கேன யாரால் **इषितां** இஷிதாம் இச்சிக்கப்பட்டு **इमां** இமாம் இந்த **वाचं** வாசம் வார்த்தையை **वदन्ति** வத$_3$ந்தி (மக்கள்) பேசுகின்றனர். **कः उ** க: உ எந்த **देवः** தே$_3$வ: தெய்வீக தத்துவம் **चक्षुः** சக்ஷு: கண்ணையும் **श्रोत्रं** ச்$_1$ரோத்ரம் செவியையும் **युनक्ति** யுநக்தி (விஷயத்தில்) இணைக்கிறது.

யாரால் இச்சிக்கப்பட்டு, கட்டாயப்படுத்தப்பட்டது போல மனம் விஷயத்தில் வீழ்கிறது? முக்யமான ப்ராணன், யாருடன் சேர்ந்ததாக இயங்குகிறது? யாரால் இச்சிக்கப்பட்டு இந்த வார்த்தையை மக்கள் பேசுகின்றனர்? எந்த தெய்வீக தத்துவம் கண்ணையும் செவியையும் விஷயத்தில் இணைக்கிறது?

२. श्रोत्रस्य श्रोत्रं मनसो मनो यद्
वाचो ह वाचं स उ प्राणस्य प्राणः।
चक्षुषश्चक्षुरतिमुच्य धीराः
प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति॥

2. ச்$_1$ரோத்ரஸ்ய ச்$_1$ரோத்ரம் மனஸோ மனோ யத்$_3$
வாசோ ஹ வாசம் ஸ உ ப்ராணஸ்ய ப்ராண: ।
சக்ஷுஷச்$_1$சக்ஷுரதிமுச்ய தீ$_4$ரா:
ப்ரேத்யாஸ்மால்லோகாத$_3$ம்ருதா ப$_4$வந்தி ॥

यत् யத் எந்த (ஆத்மாவானது) **श्रोत्रस्य** ச்$_1$ரோத்ரஸ்ய செவியின் **श्रोत्रं** ச்$_1$ரோத்ரம் செவியாகவும் **मनसः** மனஸ: மனதின் **मनः** மன: மனதாகவும் **वाचः ह** வாச: ஹ வாக்கின் **वाचं** வாசம் வாக்காகவும் **प्राणस्य** ப்ராணஸ்ய மூச்சின் **प्राणः** ப்ராண: மூச்சாகவும் **चक्षुषः** சக்ஷுஷ: கண்ணின் **चक्षुः** சக்ஷு: கண்ணாகவும் (இருக்கிறதோ) **सः उ** ஸ: உ அதுவே (அந்தத் தத்துவம்). **धीराः** தீ$_4$ரா: தீரர்கள் **अतिमुच्य** அதிமுச்ய (இந்த ஆத்ம தத்துவத்தை அறிந்து சரீர) அபிமானத்தை விட்டு **अस्मात् लोकात्** அஸ்மாத் லோகாத் இந்த உடலிலிருந்து **प्रेत्य** ப்ரேத்ய நீங்கியபின் **अमृताः** அம்ருதா: மரணமற்றவர்களாக **भवन्ति** ப$_4$வந்தி ஆகின்றனர்.

எந்த ஆத்மாவானது செவியின் செவியாகவும் மனதின் மனதாகவும் வாக்கின் வாக்காகவும் மூச்சின் மூச்சாகவும் கண்ணின் கண்ணாகவும் இருக்கிறதோ, அதுவே அந்தத் தத்துவம். தீரர்கள் இந்த ஆத்ம தத்துவத்தை அறிந்து, சரீர அபிமானத்தை விட்டு, இந்த உடலிலிருந்து நீங்கியபின் மரணமற்றவர்களாக ஆகின்றனர்.

३. न तत्र चक्षुर्गच्छति न वाग्गच्छति नो मनः।
न विद्मो न विजानीमः यथैतदनुशिष्यात्॥

3. ந தத்ர சக்ஷுர்க$_3$ச்ச$_2$தி ந வாக்$_3$க$_3$ச்ச$_2$தி நோ மன: ।
ந வித்$_3$மோ ந விஜானீம: யதை$_2$தத$_3$னு சி$_1$ஷ்யாத் ॥

तत्र தத்ர அதனிடத்தில் (ப்ரஹ்மனிடத்தில்) **चक्षुः** சக்ஷு: கண் **न गच्छति** ந க$_3$ச்ச$_2$தி செல்வதில்லை. **वाक्** வாக் வாக்கு **न गच्छति** ந க$_3$ச்ச$_2$தி செல்வதில்லை. **मनः** மன: மனம் **न उ** ந உ செல்வதில்லை. **न विद्मः** ந வித்$_3$ம: (அந்த ப்ரஹ்மனை) நாங்கள் அறியவில்லை. **एतत्** ஏதத் இதை (ப்ரஹ்மனை) **यथा** யதா$_2$ எப்படி **अनुशिष्यात्** அனுசி$_1$ஷ்யாத் உபதேசித்து விளக்கமுடியும் (என்றும்) **न विजानीमः** ந விஜானீம: அறியாதவர்களாக இருக்கின்றோம்.

அந்த ப்ரஹ்மனிடத்தில் கண் செல்வதில்லை. வாக்கு செல்வதில்லை. மனம் செல்வதில்லை. அந்த ப்ரஹ்மனை நாங்கள் அறியவில்லை. இந்த ப்ரஹ்மனை எப்படி உபதேசித்து விளக்க முடியும் என்றும் அறியாதவர்களாக இருக்கின்றோம்.

மற்ற பொருள்களைப் போல் ப்ரஹ்மனை அறியமுடியாது. மற்ற பொருள்களை விளக்குவது போல் விளக்கவும் முடியாது என்பதே இதன் உட்கருத்து.

४. अन्यदेव तद्विदिताद् अथो अविदितादधि।
इति शुश्रुम पूर्वेषां ये नस्तद् व्याचचक्षिरे॥

4. அன்யதே$_3$வ தத்$_3$விதி$_3$தாத்$_3$ அதோ$_2$ அவிதி$_3$தாத$_3$தி$_4$ ।
இதி சு$_1$ச்$_1$ரும பூர்வேஷாம் யே நஸ்தத்$_3$ வ்யாசசக்ஷிரே ॥

तत् தத் அது (ப்ரஹ்மன்) **विदितात्** விதி$_3$தாத் அறியப்பட்டதிலிருந்து **अन्यत् एव** அன்யத் ஏவ வேறுபட்டதேயாகும். **अथो** அதோ$_2$ மேலும் **अविदितात्** அவிதி$_3$தாத் அறியப்படாததிலிருந்தும் **अधि** அதி$_4$ வேறாக இருக்கிறது **इति** இதி என்று (இவ்விதம்) **ये** யே எவர்கள் **नः** ந: எங்களுக்கு **तत्** தத் அதை (ப்ரஹ்மனை) **व्याचचक्षिरे** வ்யாசசக்ஷிரே விளக்கினார்களோ **पूर्वेषां** பூர்வேஷாம் (அத்தகைய) மரபு வழி வந்த (ஆசிரியர்களுடைய வசனங்களை) **शुश्रुम** சு$_1$ச்$_1$ரும கேட்டுள்ளோம்.

அந்த ப்ரஹ்மன் அறியப்பட்டதிலிருந்து வேறுபட்டதே ஆகும். மேலும், அறியப்படாததிலிருந்தும் வேறாக இருக்கிறது என்று இவ்விதம் எவர்கள் எங்களுக்கு அந்த ப்ரஹ்மனை விளக்கினார்களோ, அத்தகைய மரபுவழி வந்த ஆசிரியர் களுடைய வசனங்களைக் கேட்டுள்ளோம்.

५. यद् वाचानभ्युदितं येन वागभ्युद्यते।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते॥

5. யத்$_3$ வாசானப்$_4$யுதி$_3$தம் யேன வாக$_3$ப்$_4$யுத்$_3$யதே ।
ததே$_3$வ ப்$_3$ரஹ்ம த்வம் வித்$_3$தி$_4$ நேத$_3$ம் யதி$_3$த$_3$முபாஸதே ॥

यद् யத்$_3$ எது **वाचा** வாசா வாக்கினால் **अनभ्युदितं** அனப்$_4$யுதி$_3$தம் அறிவிக்கப்படவில்லையோ **येन** யேன எந்த (சைதன்யத்தால்) **वाक्** வாக் வாக்கானது **अभ्युद्यते** அப்$_4$யுத்$_3$யதே அறிவிக்கப்படுகிறதோ **तत् एव** தத் ஏவ அதையே **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனாக **त्वं** த்வம் நீ **विद्धि** வித்$_3$தி$_4$ அறிவாயாக. **यद् इदं** யத்$_3$ இத$_3$ம் எந்த இந்த (தேவதையை ஸாதகர்கள்) **उपासते** உபாஸதே த்யானிக்கிறார்களோ **इदं** இத$_3$ம் அது (ப்ரஹ்மன்) **न** ந அல்ல.

எது வாக்கினால் அறிவிக்கப்படவில்லையோ, எந்த சைதன்யத்தால் வாக்கானது அறிவிக்கப்படுகிறதோ, அதையே ப்ரஹ்மனாக நீ அறிவாயாக. எந்த இந்த தேவதையை ஸாதகர்கள் த்யானிக்கிறார்களோ, அது ப்ரஹ்மன் அல்ல.

६. यन्मनसा न मनुते येनाहुर्मनो मतम्।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते॥

6. யந்மனஸா ந மனுதே யேனாஹுர்மனோ மதம் ।
ததே$_3$வ ப்$_3$ரஹ்ம த்வம் வித்$_3$தி$_4$ நேத$_3$ம் யதி$_3$த$_3$முபாஸதே ॥

यत् யத் எதை **मनसा** மனஸா மனதால் **न मनुते** ந மனுதே (ஒருவன்) அறிவதில்லையோ **येन** யேன எந்த (சைதன்யத்தால்) **मनः** மன: மனம்

मतं மதம் அறியப்படுகிறது **आहुः** ஆஹு: (என்று) கூறுகிறார்களோ **तत् एव** தத் ஏவ அதையே **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மனாக **त्वं** த்வம் நீ **विद्धि** வித்₃தி₄ அறிவாயாக **यद् इदं** யத்₃ இத₃ம் எந்த இந்த (தேவதையை ஸாதகர்கள்) **उपासते** உபாஸதே த்யானிக்கிறார்களோ **इदं** இத₃ம் அது (ப்ரஹ்மன்) **न** ந அல்ல.

எதை மனதால் ஒருவன் அறிவதில்லையோ, எந்த சைதன்யத்தால் மனம் அறியப்படுகிறது என்று கூறுகிறார்களோ, அதையே ப்ரஹ்மனாக நீ அறிவாயாக. எந்த இந்த தேவதையை ஸாதகர்கள் த்யானிக்கிறார்களோ, அது ப்ரஹ்மன் அல்ல.

௭. यच्चक्षुषा न पश्यति येन चक्षूँषि पश्यति।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते।।

7. யச்சக்ஷுஷா ந பச்₁யதி யேன சக்ஷூம்ஷி பச்₁யதி ।
தத₃வ ப்₃ரஹ்ம த்வம் வித்₃தி₄ நேத₃ம் யதி₃த₃முபாஸதே ।।

यत् யத் எதை **चक्षुषा** சக்ஷுஷா கண்ணால் **न पश्यति** ந பச்₁யதி (ஒருவன்) காண்பதில்லையோ **येन** யேன எந்த (சைதன்யத்தால்) **चक्षूंषि** சக்ஷூம்ஷி கண்களை **पश्यति** பச்₁யதி (ஒருவன்) காண்கிறானோ **तत् एव** தத் ஏவ அதையே **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மனாக **त्वं** த்வம் நீ **विद्धि** வித்₃தி₄ அறிவாயாக. **यद् इदं** யத்₃ இத₃ம் எந்த இந்த (தேவதையை ஸாதகர்கள்) **उपासते** உபாஸதே த்யானிக்கிறார்களோ **इदं** இத₃ம் அது (ப்ரஹ்மன்) **न** ந அல்ல.

எதைக் கண்ணால் ஒருவன் காண்பதில்லையோ, எந்த சைதன்யத்தால் கண்களை ஒருவன் காண்கிறானோ, அதையே ப்ரஹ்மனாக நீ அறிவாயாக. எந்த இந்த தேவதையை ஸாதகர்கள் த்யானிக்கிறார்களோ, அது ப்ரஹ்மன் அல்ல.

८. यच्छ्रोत्रेण न शृणोति येन श्रोत्रमिदँ श्रुतम्।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते।।

8. யச்ச்$_2$ரோத்ரேண ந ச்$_1$ருணோதி யேன ச்$_1$ரோத்ரமித$_3$ம்ச்$_1$ருதம் ।
ததே$_3$வ ப்$_3$ரஹ்ம த்வம் வித்$_3$தி$_4$ நேத$_3$ம் யதி$_3$த$_3$முபாஸதே ।।

यत् யத் எதை **श्रोत्रेण** ச்$_1$ரோத்ரேண செவியால் **न शृणोति** ந ச்$_1$ருணோதி (ஒருவன்) கேட்பதில்லையோ **येन** யேன எந்த (சைதன்யத்தால்) **इदं श्रोत्रं** இத$_3$ம் ச்$_1$ரோத்ரம் இந்த செவி **श्रुतं** ச்$_1$ருதம் அறியப்படுகிறதோ **तत् एव** தத் ஏவ அதையே **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனாக **त्वं** த்வம் நீ **विद्धि** வித்$_3$தி$_4$ அறிவாயாக. **यद् इदं** யத்$_3$ இத$_3$ம் எந்த இந்த (தேவதையை ஸாதகர்கள்) **उपासते** உபாஸதே த்யானிக்கிறார்களோ **इदं** இத$_3$ம் அது (ப்ரஹ்மன்) **न** ந அல்ல.

எதை செவியால் ஒருவன் கேட்பதில்லையோ, எந்த சைதன்யத்தால் இந்த செவி அறியப்படுகிறதோ, அதையே ப்ரஹ்மனாக நீ அறிவாயாக. எந்த இந்த தேவதையை ஸாதகர்கள் த்யானிக்கிறார்களோ, அது ப்ரஹ்மன் அல்ல.

९. यत्प्राणेन न प्राणिति येन प्राणः प्रणीयते।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते।।

9. யத்ப்ராணேன ந ப்ராணிதி யேன ப்ராண: ப்ரணீயதே ।
ததே$_3$வ ப்$_3$ரஹ்ம த்வம் வித்$_3$தி$_4$ நேத$_3$ம் யதி$_3$த$_3$முபாஸதே ।।

यत् யத் எதை **प्राणेन** ப்ராணேன மூக்கினால் **न प्राणिति** ந ப்ராணிதி (ஒருவன்) நுகர்வதில்லையோ **येन** யேன எந்த (சைதன்யத்தால்) **प्राणः** ப்ராண: மூக்கானது **प्रणीयते** ப்ரணீயதே (தனது விஷயத்தைக் குறித்து) செலுத்தப்படுகிறதோ **तत् एव** தத் ஏவ அதையே **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனாக **त्वं** த்வம் நீ **विद्धि** வித்$_3$தி$_4$ அறிவாயாக. **यद् इदं** யத்$_3$ இத$_3$ம் எந்த இந்த (தேவதையை ஸாதகர்கள்) **उपासते** உபாஸதே த்யானிக்கிறார்களோ **इदं** இத$_3$ம் அது (ப்ரஹ்மன்) **न** ந அல்ல.

எதை மூக்கினால் ஒருவன் நுகர்வதில்லையோ, எந்த சைதன்யத்தால் மூக்கானது தனது விஷயத்தைக் குறித்து செலுத்தப்படுகிறதோ, அதையே ப்ரஹ்மனாக நீ அறிவாயாக. எந்த இந்த தேவதையை ஸாதகர்கள் த்யானிக்கிறார்களோ, அது ப்ரஹ்மன் அல்ல.

इति प्रथमः खण्डः

முதல் பகுதி முடிவுற்றது.

द्वितीयः खण्डः

இரண்டாவது பகுதி

१. यदि मन्यसे सुवेदेति दभ्रमेवापि
नूनं त्वं वेत्थ ब्रह्मणो रूपम्।
यदस्य त्वं यदस्य देवेष्वथ नु
मीमांस्यमेव ते मन्ये विदितम्॥

1. யதி$_3$ மன்யஸே ஸுவேதே$_3$தி த$_3$ப்$_4$ரமேவாபி
நூனம் த்வம் வேத்த$_2$ ப்$_3$ரஹ்மணோ ரூபம் ।
யத$_3$ஸ்ய த்வம் யத$_3$ஸ்ய தே$_3$வேஷ்வத$_2$ நு
மீமாம்ஸ்யமேவ தே மன்யே விதி$_3$தம் ॥

सुवेद ஸுவேத$_3$ (நான் ப்ரஹ்மனை) நன்கு அறிவேன் **इति** இதி என்று **यदि मन्यसे** யதி$_3$ மன்யஸே நீ கருதினால் **अस्य** அஸ்ய இந்த **ब्रह्मणः** ப்$_3$ரஹ்மண: ப்ரஹ்மனுடைய **यत्** யத் எந்த **रूपं** ரூபம் ரூபத்தை **त्वं** த்வம் நீ (மனிதர்களிடத்தில்) **वेत्थ** வேத்த$_2$ அறிந்தாயோ (அதுபோல்) **अस्य** அஸ்ய இந்த (ப்ரஹ்மனுடைய) **यत्** யத் எந்த (ரூபத்தை) **त्वं** த்வம் நீ **देवेषु** தே$_3$வேஷு தேவர்களிடத்தில் (அறிந்தாயோ அந்த ப்ரஹ்மனுடைய ரூபத்தை) **दभ्रं एव अपि** த$_3$ப்$_4$ரம் ஏவ அபி வரையறுக்கப்பட்ட ரூபமாகவே **नूनं** நூனம் உண்மையில் (நீ அறிந்துள்ளாய்). **अथ नु** அத$_2$ நு ஆகவே **ते** தே உனது (அறிவு) **मीमांस्यं एव** மீமாம்ஸ்யம் ஏவ ஆராயப்பட்டேயாக வேண்டும் (என்று குரு கூறினார்). **विदितं** விதி$_3$தம் (என்னால் ப்ரஹ்மன்) அறியப்பட்டதாக **मन्ये** மன்யே (நான்) கருதுகிறேன் (என்று சிஷ்யன் பதிலளித்தான்).

நான் ப்ரஹ்மனை நன்கு அறிவேன் என்று நீ கருதினால், இந்த ப்ரஹ்மனுடைய எந்த ரூபத்தை நீ மனிதர்களிடத்தில் அறிந்தாயோ, அதுபோல் இந்த ப்ரஹ்மனுடைய எந்த ரூபத்தை நீ தேவர்களிடத்தில் அறிந்தாயோ, அந்த ப்ரஹ்மனுடைய ரூபத்தை வரையறுக்கப்பட்ட ரூபமாகவே உண்மையில் நீ அறிந்துள்ளாய்.

ஆகவே உனது அறிவு ஆராயப்பட்டேயாக வேண்டும் என்று குரு கூறினார். என்னால் ப்ரஹ்மன் அறியப்பட்டதாக நான் கருதுகிறேன் என்று சிஷ்யன் பதிலளித்தான்.

२. नाहं मन्ये सुवेदेति नो न वेदेति वेद च।
यो नस्तद्वेद तद्वेद नो न वेदेति वेद च॥

2. நாஹம் மன்யே ஸுவேதே$_3$தி நோ ந வேதே$_3$தி வேத$_3$ ச ।
யோ நஸ்தத்$_3$வேத$_3$ தத்$_3$வேத$_3$ நோ ந வேதே$_3$தி வேத$_3$ ச ॥

अहं அஹம் நான் **सुवेद** ஸுவேத$_3$ (ப்ரஹ்மனை) நன்கு அறிவேன் **इति** இதி என்று **न मन्ये** ந மன்யே கருதவில்லை **न वेद** ந வேத$_3$ (நான் ப்ரஹ்மனை) அறியவில்லை **इति** இதி என்றும் **न उ** ந உ கருதவில்லை **वेद** வேத$_3$ (நான்) அறிகிறேன் **च** ச நான் அறியவில்லை. **नः** நঃ நம்முள் **यः** யঃ யார் **न वेद** ந வேத$_3$ (நான் ப்ரஹ்மனை) அறியவில்லை **इति** இதி என்றும் **न उ** ந உ கருதவில்லை **वेद** வேத$_3$ (நான்) அறிகிறேன் **च** ச நான் அறியவில்லை **तद्** தத்$_3$ என்ற இந்த (வாக்யத்தை) **वेद** வேத$_3$ அறிகிறானோ (அவன்) **तद्** தத்$_3$ அதை (ப்ரஹ்மனை) **वेद** வேத$_3$ அறிந்தவனாகிறான்.

நான் ப்ரஹ்மனை நன்கு அறிவேன் என்று கருதவில்லை, நான் ப்ரஹ்மனை அறியவில்லை என்றும் கருதவில்லை, நான் அறிகிறேன், நான் அறியவில்லை. நம்முள் யார் நான் ப்ரஹ்மனை அறியவில்லை என்றும் கருதவில்லை, நான் அறிகிறேன், நான் அறியவில்லை என்ற இந்த வாக்யத்தை அறிகிறானோ, அவன் ப்ரஹ்மனை அறிந்தவனாகிறான்.

३. यस्यामतं तस्य मतं मतं यस्य न वेद सः।
अविज्ञातं विजानतां विज्ञातमविजानताम्॥

3. யஸ்யாமதம் தஸ்ய மதம் மதம் யஸ்ய ந வேத$_3$ ஸঃ ।
அவிஞாதம் விஜானதாம் விஞாதமவிஜானதாம் ॥

यस्य யஸ்ய யாருக்கு **अमतं** அமதம் (ப்ரஹ்மன் விஷயமாக) அறியப்படவில்லையோ **तस्य** தஸ்ய அவருக்கு **मतं** மதம் (ப்ரஹ்மன்) அறியப்பட்டதாகிறது. **यस्य** யஸ்ய யாருக்கு **मतं** மதம் (ப்ரஹ்மன் விஷயமாக) அறியப்பட்டதோ **सः** ஸ: அவர் **न वेद** ந வேத$_3$ (ப்ரஹ்மனை) அறிந்தவர் அல்ல. **विजानतां** விஜானதாம் (ஏனெனில்) ஞானிகளுக்கு **अविज्ञातं** அவிஞாதம் (ப்ரஹ்மன் விஷயமாக) அறியப்பட்டது அல்ல. **अविजानतां** அவிஜானதாம் அஞானிகளுக்கு **विज्ञातं** விஞாதம் (ப்ரஹ்மன் விஷயமாக) அறியப்பட்டதாகும்.

யாருக்கு ப்ரஹ்மன் விஷயமாக அறியப்படவில்லையோ, அவருக்கு ப்ரஹ்மன் அறியப்பட்டதாகிறது. யாருக்கு ப்ரஹ்மன் விஷயமாக அறியப்பட்டதோ, அவர் ப்ரஹ்மனை அறிந்தவர் அல்ல. ஏனெனில் ஞானிகளுக்கு ப்ரஹ்மன், விஷயமாக அறியப்பட்டது அல்ல. அஞானிகளுக்கு ப்ரஹ்மன் விஷயமாக அறியப்பட்டதாகும்.

४. प्रतिबोधविदितं मतम् अमृतत्वं हि विन्दते।
आत्मना विन्दते वीर्यं विद्यया विन्दतेऽमृतम्॥

4. ப்ரதிபோ$_3$த$_4$விதி$_3$தம் மதம் அம்ருதத்வம் ஹி விந்த$_3$தே ।
ஆத்மனா விந்த$_3$தே வீர்யம் வித்$_3$யயா விந்த$_3$தேऽம்ருதம் ॥

प्रतिबोध-विदितं ப்ரதிபோ$_3$த$_4$-விதி$_3$தம் ஒவ்வொரு எண்ணத்திலும் சைதன்யத்தின் வெளிப்பாட்டை அறிவதன் மூலம் **मतं** மதம் (ப்ரஹ்மன்) அறியப்படுகிறது. **हि** ஹி (இவ்விதம் அறிந்த) பின் **अमृतत्वं** அம்ருதத்வம் (ஒருவன்) இறவாமையை **विन्दते** விந்த$_3$தே அடைகிறான். **आत्मना** ஆத்மனா தகுதியடைந்த மனதால் (அறியும்) **वीर्यं** வீர்யம் சக்தியை **विन्दते** விந்த$_3$தே அடைகிறான். **विद्यया** வித்$_3$யயா ஞானத்தால் **अमृतं** அம்ருதம் மரணமின்மையை **विन्दते** விந்த$_3$தே அடைகிறான்.

ஒவ்வொரு எண்ணத்திலும் சைதன்யத்தின் வெளிப்பாட்டை அறிவதன் மூலம் ப்ரஹ்மன் அறியப்படுகிறது. இவ்விதம் அறிந்த பின் ஒருவன் இறவாமையை அடைகிறான். தகுதியடைந்த மனதால் அறியும் சக்தியை அடைகிறான். ஞானத்தால் மரண மின்மையை அடைகிறான்.

५. इह चेदवेदीदथ सत्यमस्ति
न चेदिहावेदीन्महती विनष्टिः ।
भूतेषु भूतेषु विचित्य धीराः
प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ।।

5. இஹ சேத$_3$வேதீ$_3$த$_3$த$_2$ ஸத்யமஸ்தி
ந சேதி$_3$ஹாவேதீ$_3$ந்மஹதீ வினஷ்டி: ।
பூ$_4$தேஷு பூ$_4$தேஷு விசித்ய தீ$_4$ரா:
ப்ரேத்யாஸ்மால்லோகாத$_3$ம்ருதா ப$_4$வந்தி ।।

इह இஹ இந்தப்பிறவியிலேயே **अवेदीत् चेत्** அவேதீ$_3$த் சேத் (ஒருவன் ப்ரஹ்மனை) அறிவானாகில் **अथ सत्यं अस्ति** அத$_2$ ஸத்யம் அஸ்தி வாழ்க்கைக்கு ஓர் அர்த்தமுண்டு. (மாறாக) **इह** இஹ இப்பிறவியில் **न अवेदीत् चेत्** ந அவேதீ$_3$த் சேத் (ஒருவன் ப்ரஹ்மனை) அறியாவிடில் **महती विनष्टिः** மஹதீ வினஷ்டி: (அவன் அடையும்) நஷ்டம் மிகப்பெரிது. **धीराः** தீ$_4$ரா: தீரர்கள் **भूतेषु भूतेषु** பூ$_4$தேஷு பூ$_4$தேஷு ஒவ்வொரு ஜீவனிடத்திலும் **विचित्य** விசித்ய (ப்ரஹ்மனை) அறிந்து **अस्मात् लोकात्** அஸ்மாத் லோகாத் இந்த உடலிலிருந்து **प्रेत्य** ப்ரேத்ய நீங்கியபின் **अमृताः** அம்ருதா: மரணமற்றவர்களாக **भवन्ति** ப$_4$வந்தி ஆகின்றனர்.

இந்தப் பிறவியிலேயே ஒருவன் ப்ரஹ்மனை அறிவானாகில் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தமுண்டு. மாறாக இப்பிறவியில் ஒருவன் ப்ரஹ்மனை அறியாவிடில், அவன் அடையும் நஷ்டம் மிகப்பெரிது. தீரர்கள், ஒவ்வொரு ஜீவனிடத்திலும் ப்ரஹ்மனை அறிந்து, இந்த உடலிலிருந்து நீங்கியபின் மரணமற்றவர்களாக ஆகின்றனர்.

इति द्वितीयः खण्डः

இரண்டாவது பகுதி முடிவுற்றது.

तृतीयः खण्डः

மூன்றாவது பகுதி

१. ब्रह्म ह देवेभ्यो विजिग्ये तस्य ह ब्रह्मणो विजये देवा अमहीयन्त।
त ऐक्षन्तास्माकमेवायं विजयः अस्माकमेवायं महिमेति ।।

1. ப்₃ரஹ்ம ஹ தே₃வேப்₄யோ விஜிக்₃யே
தஸ்ய ஹ ப்₃ரஹ்மணோ விஜயே தே₃வா அமஹீயந்த ।
த ஐக்ஷந்தாஸ்மாகமேவாயம் விஜய:
அஸ்மாகமேவாயம் மஹிமேதி ।।

ब्रह्म ப்₃ரஹ்ம ப்ரஹ்மன் **देवेभ्यः ह** தே₃வேப்₄ய: ஹ தேவர்களுக்காக **विजिग्ये** விஜிக்₃யே (அஸுரர்கள் மீது) வெற்றி கொண்டார். **तस्य ब्रह्मणः ह** தஸ்ய ப்₃ரஹ்மண: ஹ அந்த ப்ரஹ்மனுடைய **विजये** விஜயே வெற்றியில் **देवाः** தே₃வா: தேவர்கள் **अमहीयन्त** அமஹீயந்த பெருமைப்படுத்தப்பட்டார்கள். **अयं** அயம் இந்த **विजयः** விஜய: வெற்றி **अस्माकं एव** அஸ்மாகம் ஏவ எங்களுடையதே **अयं** அயம் இந்த **महिमा** மஹிமா பெருமை **अस्माकं एव** அஸ்மாகம் ஏவ எங்களுடையதே **इति** இதி என்று **ते** தே அவர்கள் (தேவர்கள்) **ऐक्षन्त** ஐக்ஷந்த நினைத்தார்கள்.

ப்ரஹ்மன் தேவர்களுக்காக அஸுரர்கள் மீது வெற்றி கொண்டார். அந்த ப்ரஹ்மனுடைய வெற்றியில் தேவர்கள் பெருமைப்படுத்தப்பட்டார்கள். இந்த வெற்றி எங்களுடையதே! இந்தப் பெருமை எங்களுடையதே! என்று தேவர்கள் நினைத்தார்கள்.

२. तद्धैषां विजज्ञौ तेभ्यो ह प्रादुर्बभूव
तन्न व्यजानत किमिदं यक्षमिति ।।

2. தத்₃தை₄ஷாம் விஜஜ்ஞௌ தேப்₄யோ ஹ ப்ராது₃ர்ப₃பூ₄வ
தந்ந வ்யஜானத கிமித₃ம் யக்ஷமிதி ।।

तेषां தேஷாம் அவர்களுடைய (தேவர்களுடைய) **तद् ह** தத்3 ஹ அந்த (கர்வத்தை) **विजज्ञौ** விஜஜ்ஞௌ (ப்ரஹ்மன்) அறிந்தார். **तेभ्यः ह** தேப்4ய: ஹ அவர்களுக்காக (தேவர்களுக்கு உண்மையை உணர்த்த) **प्रादुर्बभूव** ப்ராது3ர்ப3பூ4வ (ப்ரஹ்மன் யக்ஷரூபத்தில் அவர்கள் முன்) தோன்றினார். **तत्** தத் அதை (யக்ஷரூபத்தில் உள்ள ப்ரஹ்மனை) **न व्यजानत** ந வ்யஜானத (தேவர்கள்) தெளிவாக அறியவில்லை. **किं इदं** கிம் இத3ம் யார் இந்த **यक्षं** யக்ஷம் யக்ஷன் **इति** இதி என்று (வியந்தனர்).

தேவர்களுடைய அந்த கர்வத்தை ப்ரஹ்மன் அறிந்தார். தேவர்களுக்கு உண்மையை உணர்த்த ப்ரஹ்மன் யக்ஷரூபத்தில் அவர்கள் முன் தோன்றினார். யக்ஷரூபத்தில் உள்ள ப்ரஹ்மனை தேவர்கள் தெளிவாக அறியவில்லை. யார் இந்த யக்ஷன்? என்று வியந்தனர்.

३. तेऽग्निमब्रुवन् जातवेद एतद्विजानीहि किमेतद्यक्षमिति तथेति ॥

3. தேऽக்3னிமப்3ருவந் ஜாதவேத3 ஏதத்3விஜானீஹி
கிமேதத்3யக்ஷமிதி ததே2தி ॥

ते தே அவர்கள் (தேவர்கள்) **अग्निं** அக்3னிம் அக்னிதேவரிடம் **जातवेदः** ஜாதவேத3: எல்லாம் அறிந்தவரே **किं** கிம் யார் **एतत्** ஏதத் இந்த **यक्षं** யக்ஷம் யக்ஷன் **एतत्** ஏதத் இதை **विजानीहि** விஜானீஹி அறிந்து வாரும் **इति** இதி என்று **अब्रुवन्** அப்3ருவந் சொன்னார்கள். **तथा** ததா2 அப்படியே ஆகட்டும் **इति** இதி என்று (அக்னிதேவர் பதிலளித்தார்).

தேவர்கள் அக்னிதேவரிடம், எல்லாம் அறிந்தவரே, யார் இந்த யக்ஷன்? இதை அறிந்து வாரும் என்று சொன்னார்கள். அப்படியே ஆகட்டும் என்று அக்னிதேவர் பதிலளித்தார்.

४. तदभ्यद्रवत्तमभ्यवदत् कोऽसीति अग्निर्वा अहमस्मीत्यब्रवीद् जातवेदा वा अहमस्मीति ॥

4. தத$_3$ப்$_4$யத்$_3$ரவத்தமப்$_4$யவத$_3$த் கோऽஸீதி அக்$_3$னிர்வா
அஹமஸ்மீத்யப்$_3$ரவீத்$_3$ ஜாதவேதா$_3$ வா அஹமஸ்மீதி ||

तत् தத் அதை (யக்ஷனை) **अभ्यद्रवत्** அப்$_4$யத்$_3$ரவத் (அக்னிதேவர்) அணுகினார். **तं** தம் அவரை (அக்னிதேவரை நோக்கி) **कः असि** க: அஸி நீ யார் **इति** இதி என்று **अभ्यवदत्** அப்$_4$யவத$_3$த் (யக்ஷன்) கேட்டார். **अग्निः** அக்$_3$னி: அக்னி (என) **वै** வை பெயர் பெற்றவனாக **अहं** அஹம் நான் **अस्मि** அஸ்மி இருக்கிறேன் **इति** இதி என்றும் **जातवेदाः** ஜாதவேதா$_3$: எல்லாம் அறிந்தவன் (என) **वै** வை பெயர் பெற்றவனாக **अहं** அஹம் நான் **अस्मि** அஸ்மி இருக்கிறேன் **इति** இதி என்றும் **अब्रवीद्** அப்$_3$ரவீத்$_3$ (அக்னிதேவர்) பதிலளித்தார்.

அந்த யக்ஷனை அக்னிதேவர் அணுகினார். அந்த அக்னி தேவரை நோக்கி நீ யார்? என்று யக்ஷன் கேட்டார். அக்னி எனப்பெயர் பெற்றவனாக நான் இருக்கிறேன் என்றும், எல்லாம் அறிந்தவன் எனப்பெயர் பெற்றவனாக நான் இருக்கிறேன் என்றும் அக்னிதேவர் பதிலளித்தார்.

५. तस्मिँस्त्वयि किं वीर्यमिति अपीदँसर्वं दहेयं यदिदं पृथिव्यामिति ।।

5. தஸ்மிம்ஸ்த்வயி கிம் வீர்யமிதி அபீத$_3$ம்ஸர்வம்
த$_3$ஹேயம் யதி$_3$த$_3$ம் ப்ருதி$_2$வ்யாமிதி ||

तस्मिन् தஸ்மின் அத்தகைய **त्वयि** த்வயி (பெயர்பெற்ற) உன்னிடத்தில் **किं** கிம் என்ன **वीर्यं** வீர்யம் சக்தி உள்ளது **इति** இதி என்று (யக்ஷன் கேட்டார்). **यद् इदं** யத்$_3$ இத$_3$ம் எவை எல்லாம் இந்த **पृथिव्यां अपि** ப்ருதி$_2$வ்யாம் அபி பூமியில் இருக்கின்றனவோ **इदं सर्वं** இத$_3$ம் ஸர்வம் அவை அனைத்தையும் **दहेयं** த$_3$ஹேயம் எரித்து விடுவேன் **इति** இதி என்று (அக்னிதேவர் கூறினார்).

அத்தகைய பெயர்பெற்ற உன்னிடத்தில் என்ன சக்தி உள்ளது? என்று யக்ஷன் கேட்டார். எவை எல்லாம் இந்த பூமியில் இருக்கின்றனவோ, அவை அனைத்தையும் எரித்து விடுவேன் என்று அக்னிதேவர் கூறினார்.

६. तस्मै तृणं निदधावेतद्दहेति तदुपप्रेयाय सर्वजवेन तन्न शशाक
दग्धुं स तत एव निववृते नैतदशकं विज्ञातुं यदेतद्यक्षमिति ॥

6. தஸ்மை த்ருணம் நித$_3$தா$_4$வேதத்$_3$த$_3$ஹேதி தது$_3$பப்ரேயாய
ஸர்வஜவேன தந்ந ச$_1$சா$_1$க த$_3$க்$_3$து$_4$ம் ஸ தத ஏவ
நிவவ்ருதே நைதத$_3$ ச$_1$கம் விஞாதும் யதே$_3$தத்$_3$யக்ஷமிதி ॥

तस्मै தஸ்மை அவரிடம் (அக்னிதேவர் முன்) **तृणं** த்ருணம் ஒரு புல்லை **निदधौ** நித$_3$தௌ$_4$ (யக்ஷன்) வைத்தார். **एतत् दह** ஏதத் த$_3$ஹ இதை எரி **इति** இதி என்றார். **तत्** தத் அந்த (புல்லிடம்) **सर्वजवेन** ஸர்வஜவேன (தன்னுடைய) முழுசக்தியுடன் **उपप्रेयाय** உபப்ரேயாய (அக்னிதேவர்) நெருங்கினார். **तत्** தத் (ஆனால்) அதை **दग्धुं** த$_3$க்$_3$து$_4$ம் எரிக்க **न शशाक** ந ச$_1$சா$_1$க முடியவில்லை. **सः** ஸ: அவர் (அக்னிதேவர்) **ततः एव** தத: ஏவ அங்கிருந்து **निववृते** நிவவ்ருதே திரும்பிவிட்டார். **यत् एतत् यक्षं** யத் ஏதத் யக்ஷம் யார் இந்த யக்ஷன் **इति** இதி என்று **एतत्** ஏதத் இதை (யக்ஷனை) **विज्ञातुं** விஞாதும் அறிய **न अशकं** ந அச$_1$கம் முடியாதவனாக இருக்கிறேன் (என்று அக்னி தேவர் தேவர்களிடம் கூறினார்).

அந்த அக்னிதேவர் முன் ஒரு புல்லை யக்ஷன் வைத்தார். இதை எரி என்றார். அந்தப் புல்லிடம் தன்னுடைய முழு சக்தியுடன் அக்னிதேவர் நெருங்கினார். ஆனால் அதை எரிக்க முடியவில்லை. அக்னிதேவர் அங்கிருந்து திரும்பிவிட்டார். யார் இந்த யக்ஷன்? என்று இந்த யக்ஷனை அறிய முடியாதவனாக இருக்கிறேன் என்று அக்னிதேவர் தேவர்களிடம் கூறினார்.

७. अथ वायुमब्रुवन् वायवेतद्विजानीहि किमेतद्यक्षमिति तथेति ।।

7. அத$_2$ வாயுமப்$_3$ருவந் வாயவேதத்$_3$விஜானீஹி
கிமேதத்$_3$ யக்ஷமிதி ததே$_2$தி ॥

अथ அத$_2$ பிறகு (தேவர்கள்) **वायुं** வாயும் வாயுதேவரிடம் **वायो** வாயோ வாயுதேவரே **किं एतत्** கிம் ஏதத் யார் இந்த **यक्षं** யக்ஷம் யக்ஷன் **एतत्** ஏதத் இதை **विजानीहि** விஜானீஹி அறிந்து வாரும் **इति** இதி என்று **अब्रुवन्** அப்$_3$ருவந் சொன்னார்கள். **तथा** ததா$_2$ அப்படியே ஆகட்டும் **इति** இதி என்று (வாயுதேவர் பதிலளித்தார்).

பிறகு தேவர்கள் வாயுதேவரிடம் வாயுதேவரே, யார் இந்த யக்ஷன்? இதை அறிந்துவாரும் என்று சொன்னார்கள். அப்படியே ஆகட்டும் என்று வாயுதேவர் பதிலளித்தார்.

८. तदभ्यद्रवत्तमभ्यवदत् कोऽसीति वायुर्वा अहमस्मीत्यब्रवीद् मातरिश्वा वा अहमस्मीति ।।

8. தத$_3$ப்$_4$யத்$_3$ரவத்தமப்$_4$யவத$_3$த் கோऽஸீதி வாயுர்வா
அஹமஸ்மீத்யப்$_3$ரவீத்$_3$ மாதரிச்$_1$வா வா அஹமஸ்மீதி ॥

तत् தத் அதை (யக்ஷனை) **अभ्यद्रवत्** அப்$_4$யத்$_3$ரவத் (வாயுதேவர்) அணுகினார். **तं** தம் அவரை (வாயுதேவரை நோக்கி) **कः असि** க: அஸி நீ யார் **इति** இதி என்று **अभ्यवदत्** அப்$_4$யவத$_3$த் (யக்ஷன்) கேட்டார். **वायुः** வாயு: வாயு (என) **वै** வை பெயர்பெற்றவனாக **अहं** அஹம் நான் **अस्मि** அஸ்மி இருக்கிறேன் **इति** இதி என்றும் **मातरिश्वाः** மாதரிச்$_1$வா: ஆகாசத்தில் ஸ்வதந்த்ரமாக ஸஞ்சரிப்பவன் (என) **वै** வை பெயர்பெற்றவனாக **अहं** அஹம் நான் **अस्मि** அஸ்மி இருக்கிறேன் **इति** இதி என்றும் **अब्रवीत्** அப்$_3$ரவீத் (வாயுதேவர்) பதிலளித்தார்.

அந்த யக்ஷனை வாயுதேவர் அணுகினார். அந்த வாயுதேவரை நோக்கி நீ யார்? என்று யக்ஷன் கேட்டார். வாயு என

பெயர் பெற்றவனாக நான் இருக்கிறேன் என்றும், ஆகாசத்தில் ஸ்வதந்த்ரமாக ஸஞ்சரிப்பவன் என பெயர் பெற்றவனாக நான் இருக்கிறேன் என்றும் வாயுதேவர் பதிலளித்தார்.

**९. तस्मिँस्त्वयि किं वीर्यमिति अपीदँ सर्वमाददीय
यदिदं पृथिव्यामिति ।।**

9. தஸ்மிம்ஸ்த்வயி கிம் வீர்யமிதி அபீத$_3$ம்ஸர்வமாத$_3$தீ$_3$ய
யதி$_3$த$_3$ம் ப்ருதி$_2$வ்யாமிதி ।।

तस्मिन् தஸ்மின் அத்தகைய **त्वयि** த்வயி (பெயர்பெற்ற) உன்னிடத்தில் **किं** கிம் என்ன **वीर्यं** வீர்யம் சக்தி உள்ளது **इति** இதி என்று (யக்ஷன் கேட்டார்). **यद् इदं** யத்$_3$ இத$_3$ம் எவை எல்லாம் இந்த **पृथिव्यां अपि** ப்ருதி$_2$வ்யாம் அபி பூமியில் இருக்கின்றனவோ **इदं सर्वं** இத$_3$ம் ஸர்வம் அவையனைத்தையும் **आददीय** ஆத$_3$தீ$_3$ய தூக்கி விடுவேன் **इति** இதி என்று (வாயுதேவர் கூறினார்).

அத்தகைய பெயர்பெற்ற உன்னிடத்தில் என்ன சக்தி உள்ளது? என்று யக்ஷன் கேட்டார். எவை எல்லாம் இந்த பூமியில் இருக்கின்றனவோ அவையனைத்தையும் தூக்கிவிடுவேன் என்று வாயுதேவர் கூறினார்.

१०. तस्मै तृणं निदधावेतदादत्स्वेति तदुपप्रेयाय सर्वजवेन तन्न शशाकादातुं स तत एव निववृते नैतदशकं विज्ञातुं यदेतद् यक्षमिति ।।

10. தஸ்மை த்ருணம் நித$_3$தா$_4$வேததா$_3$த$_3$த்ஸ்வேதி தது$_3$ப ப்ரேயாய
ஸர்வஜவேன தந்ந ச$_1$சா$_1$காதா$_3$தும் ஸ தத ஏவ நிவவ்ருதே நைத
த$_3$ச$_1$கம் விஞாதும் யதே$_3$தத்$_3$ யக்ஷமிதி ।।

तस्मै தஸ்மை அவரிடம் (வாயுதேவர் முன்) **तृणं** த்ருணம் ஒரு புல்லை **निदधौ** நித$_3$தௌ$_4$ (யக்ஷன்) வைத்தார். **एतत् आदत्स्व** ஏதத் ஆத$_3$த்ஸ்வ

இதைத் தூக்கு **इति** இதி என்றார். **तत्** தத் அந்த (புல்லிடம்) **सर्वजवेन** ஸர்வஜவேன (தன்னுடைய) முழு சக்தியுடன் **उपप्रेयाय** உபப்ரேயாய (வாயுதேவர்) நெருங்கினார். **तत्** தத் (ஆனால்) அதை **आदातुं** ஆதா$_3$தும் தூக்க **न शशाक** ந ச$_1$சா$_1$க முடியவில்லை **सः** ஸ: அவர் (வாயுதேவர்) **ततः एव** தத: ஏவ அங்கிருந்து **निववृते** நிவவ்ருதே திரும்பிவிட்டார். **यत् एतत् यक्षं** யத் ஏதத் யக்ஷம் யார் இந்த யக்ஷன் **इति** இதி என்று **एतत्** ஏதத் இதை (யக்ஷனை) **विज्ञातुं** விஞாதும் அறிய **न अशकं** ந அச$_1$கம் முடியாதவனாக இருக்கிறேன் (என்று வாயுதேவர் தேவர்களிடம் கூறினார்).

அந்த வாயுதேவர் முன் ஒரு புல்லை யக்ஷன் வைத்தார். இதைத் தூக்கு என்றார். அந்தப் புல்லிடம் தன்னுடைய முழு சக்தியுடன் வாயுதேவர் நெருங்கினார். ஆனால் அதைத் தூக்க முடியவில்லை. வாயுதேவர் அங்கிருந்து திரும்பிவிட்டார். யார் இந்த யக்ஷன்? என்று இந்த யக்ஷனை அறியமுடியாதவனாக இருக்கிறேன் என்று வாயுதேவர் தேவர்களிடம் கூறினார்.

११. अथेन्द्रमब्रुवन् मघवन्नेतद्विजानीहि किमेतद्यक्षमिति तथेति तदभ्यद्रवत्तस्मात् तिरोदधे।।

11. அதே$_2$ந்த்$_3$ரமப்$_3$ருவந் மக$_4$வந்நேதத்$_3$விஜானீஹி கிமேதத்$_3$ யக்ஷமிதி ததே$_2$தி தத$_3$ப்$_4$யத்$_3$ரவத்தஸ்மாத் திரோத$_3$தே$_4$ ।।

अथ அத$_2$ பிறகு (தேவர்கள்) **इन्द्रं** இந்த்$_3$ரம் இந்த்ரனிடம் **मघवन्** மக$_4$வன் சக்திபொருந்தியவரே **किं एतत्** கிம் ஏதத் யார் இந்த **यक्षं** யக்ஷம் யக்ஷன் **एतत्** ஏதத் இதை **विजानीहि** விஜானீஹி அறிந்து வாரும் **इति** இதி என்று **अब्रुवन्** அப்$_3$ருவந் சொன்னார்கள். **तथा** ததா$_2$ அப்படியே ஆகட்டும் **इति** இதி என்று (இந்த்ரன் பதிலளித்தார்). **तत्** தத் அதை (யக்ஷனை) **अभ्यद्रवत्** அப்$_4$யத்$_3$ரவத் (இந்த்ரன்) அணுகினார். **तस्मात्** தஸ்மாத் அங்கிருந்து **तिरोदधे** திரோத$_3$தே$_4$ (யக்ஷன்) மறைந்து விட்டார்.

பிறகு தேவர்கள் இந்த்ரனிடம் சக்தி பொருந்தியவரே, யார் இந்த யக்ஷன்? இதை அறிந்துவாரும் என்று சொன்னார்கள். அப்படியே ஆகட்டும் என்று இந்த்ரன் பதிலளித்தார். அந்த யக்ஷனை இந்த்ரன் அணுகினார். அங்கிருந்து யக்ஷன் மறைந்து விட்டார்.

१२. स तस्मिन्नेवाकाशे स्त्रियमाजगाम बहुशोभमानामुमाँहैमवतीं ताँ होवाच किमेतद्यक्षमिति ।।

12. ஸ தஸ்மிந்நேவாகாசே$_1$ ஸ்த்ரியமாஜகா$_3$ம ப$_3$ஹு
சோ$_1$ப$_4$மானாமுமாம் ஹைமவதீம் தாம் ஹோவாச
கிமேதத்$_3$யக்ஷமிதி ॥

सः ஸ: அவர் (இந்த்ரன்) **तस्मिन् आकाशे एव** தஸ்மின் ஆகாசே$_1$ ஏவ அந்த இடத்திலேயே **स्त्रियं** ஸ்த்ரியம் ஒரு பெண்ணை (பார்த்தார்). **बहु शोभमानां** ப$_3$ஹு சோ$_1$ப$_4$மானாம் மிகவும் ப்ரகாசிக்கின்ற **हैमवतीं** ஹைமவதீம் ஹிமவானின் மகளான **उमां** உமாம் உமாதேவியான **तां** தாம் அந்த (பெண்ணை) **आजगाम** ஆஜகா$_3$ம அணுகினார். **एतत् यक्षं** ஏதத் யக்ஷம் இந்த யக்ஷன் **किं** கிம் யார் **इति** இதி என்று (அவர்) **ह उवाच** ஹ உவாச கேட்டார்.

அந்த இந்த்ரன் அந்த இடத்திலேயே ஒரு பெண்ணைப் பார்த்தார். மிகவும் ப்ரகாசிக்கின்ற, ஹிமவானின் மகளான, உமாதேவியான அந்தப் பெண்ணை அணுகினார். இந்த யக்ஷன் யார்? என்று அவர் கேட்டார்.

इति तृतीयः खण्डः

மூன்றாவது பகுதி முடிவுற்றது.

चतुर्थः खण्डः
நான்காவது பகுதி

१. सा ब्रह्मेति होवाच ब्रह्मणो वा एतद्विजये महीयध्वमिति ततो हैव विदाञ्चकार ब्रह्मेति ।।

1. ஸா ப்₃ரஹ்மேதி ஹோவாச ப்₃ரஹ்மணோ வா ஏதத்₃ விஜயே மஹீயத்₄வமிதி ததோ ஹைவ விதா₃ஞ்சகார ப்₃ரஹ்மேதி ।।

सा ஸா அவள் **ब्रह्म** ப்₃ரஹ்ம (அந்த யக்ஷன்) ப்ரஹ்மன் **इति** இதி என்று **ह उवाच** ஹ உவாச (இந்த்ரனுக்கு) கற்பித்தாள். **ब्रह्मणः** ப்₃ரஹ்மண: ப்ரஹ்மனுடைய **विजये वै** விஜயே வை வெற்றியில்தான் **एतत्** ஏதத் இவ்வாறு **महीयध्वं** மஹீயத்₄வம் பெருமைப்படுத்தப் பட்டீர்கள் **इति** இதி என்று (கூறினாள்). **ततः ह एव** தத: ஹ ஏவ அதிலிருந்துதான் (அந்த உமாதேவியின் உபதேசத்திலிருந்துதான்) **ब्रह्म** ப்₃ரஹ்ம (அது) ப்ரஹ்மன் **इति** இதி என்று **विदाञ्चकार** விதா₃ஞ்சகார (இந்த்ரன்) புரிந்துகொண்டார்.

அவள் அந்த யக்ஷன் ப்ரஹ்மன் என்று இந்த்ரனுக்குக் கற்பித்தாள். ப்ரஹ்மனுடைய வெற்றியில்தான் இவ்வாறு பெருமைப்படுத்தப்பட்டீர்கள் என்று கூறினாள். அந்த உமா தேவியின் உபதேசத்திலிருந்துதான் அது ப்ரஹ்மன் என்று இந்த்ரன் புரிந்து கொண்டார்.

२. तस्माद्वा एते देवा अतितरामिवान्यान् देवान् यदग्निर्वायुरिन्द्रस्ते ह्येनन्नेदिष्ठं पस्पर्शुः ते ह्येनत् प्रथमो विदाञ्चकार ब्रह्मेति ।।

2. தஸ்மாத்₃வா ஏதே தே₃வா அதிதராமிவான்யான் தே₃வான் யத₃க்₃னிர்வாயுரிந்த்₃ரஸ்தே ஹ்யேனந்நேதி₃ஷ்டம் பஸ்பர்சு₁: தே ஹ்யேனத் ப்ரத₂மோ விதா₃ஞ்சகார ப்₃ரஹ்மேதி ।।

तस्मात् वै தஸ்மாத் வை (யக்ஷனுடன் தொடர்புகொண்ட) காரணத்தால் தான் **एते देवाः** ஏதே தே$_3$வா: இந்த தேவர்கள் **अन्यान् देवान्** அன்யான் தே$_3$வான் மற்ற தேவர்களைவிட **अतितरां इव** அதிதராம் இவ உயர்ந்தவர்களாக ஆனார்கள். **यत्** யத் ஏனென்றால் **अग्निः** அக்$_3$னி: அக்னி **वायुः** வாயு: வாயு **इन्द्रः** இந்த்$_3$ர: இந்த்ரன் **ते** தே ஆகியோர் **एनत् हि** ஏனத் ஹி இவருடன் (யக்ஷனுடன்) **नेदिष्ठं** நேதி$_3$ஷ்ட$_2$ம் நெருங்கிய **पस्पर्शुः** பஸ்பர்ஶ$_1$: தொடர்பு கொண்டனர். **ते हि** தே ஹி அவர்களே **एनत्** ஏனத் இவரை (யக்ஷனை) **ब्रह्म इति** ப்$_3$ரஹ்ம இதி ப்ரஹ்மன் என்று **प्रथमः** ப்ரத$_2$ம: முதலில் **विदाञ्चकार** விதா$_3$ஞ்சகார அறிந்தவர்கள்.

யக்ஷனுடன் தொடர்புகொண்ட காரணத்தால்தான் இந்த தேவர்கள் மற்ற தேவர்களை விட உயர்ந்தவர்களாக ஆனார்கள். ஏனென்றால் அக்னி, வாயு, இந்த்ரன் ஆகியோர் இந்த யக்ஷனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டனர். அவர்களே இந்த யக்ஷனை ப்ரஹ்மன் என்று முதலில் அறிந்தவர்கள்.

३. **तस्माद्वा इन्द्रोऽतितरामिवान्यान् देवान् स ह्येनन्नेदिष्ठं पस्पर्श स ह्येनत् प्रथमो विदाञ्चकार ब्रह्मेति ।।**

3. தஸ்மாத்$_3$வா இந்த்$_3$ரோऽதிதராமிவான்யான் தே$_3$வான்
ஸ ஹ்யேனந்நேதி$_3$ஷ்ட$_2$ம் பஸ்பர்ஶ$_1$ ஸ ஹ்யேனத் ப்ரத$_2$மோ
விதா$_3$ஞ்சகார ப்$_3$ரஹ்மேதி ।।

तस्मात् वै தஸ்மாத் வை (யக்ஷனுடன் தொடர்புகொண்ட) காரணத்தால் தான் **इन्द्रः** இந்த்$_3$ர: இந்த்ரன் **अन्यान् देवान्** அன்யான் தே$_3$வான் மற்றதேவர்களைவிட **अतितरां इव** அதிதராம் இவ உயர்ந்தவர் ஆனார். **हि** ஹி ஏனெனில் **सः** ஸ: அவர் (இந்த்ரன்) **एनत्** ஏனத் இவருடன் (யக்ஷனுடன்) **नेदिष्ठं** நேதி$_3$ஷ்ட$_2$ம் நெருங்கிய **पस्पर्शः** பஸ்பர்ஶ$_1$: தொடர்புகொண்டார். **सः हि** ஸ: ஹி அவரே (இந்த்ரனே)

एनत् ஏனத் இவரை (யக்ஷனை) **ब्रह्म इति** ப்$_3$ரஹ்ம இதி ப்ரஹ்மன் என்று **प्रथमः** ப்ரத$_2$ம: முதலில் **विदाञ्चकार** விதா$_3$ஞ்சகார அறிந்தார்.

யக்ஷனுடன் தொடர்புகொண்ட காரணத்தால்தான் இந்த்ரன் மற்ற தேவர்களை விட உயர்ந்தவர் ஆனார். ஏனெனில் அந்த இந்த்ரன் யக்ஷனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். இந்த்ரனே இந்த யக்ஷனை ப்ரஹ்மன் என்று முதலில் அறிந்தார்.

४. तस्यैष आदेशः यदेतद्विद्युतो व्यद्युतदा ३ इतीन्न्यमीमिषदा ३ इत्यधिदैवतम् ।।

4. தஸ்யைஷ ஆதே$_3$ச$_1$: யதே$_3$தத்$_3$வித்$_3$யுதோ வ்யத்$_3$யுததா$_3$ 3 இதீந்ந்யமீமிஷதா$_3$ 3 இத்யதி$_4$தை$_3$வதம் ।।

तस्य தஸ்ய அந்த ப்ரஹ்மனைப்பற்றிய (உவமை ரூபமான) **आदेशः** ஆதே$_3$ச$_1$: உபதேசம் **एषः** ஏஷ: பின்வருமாறு: **यत् एतत्** யத் ஏதத் இந்த (ப்ரஹ்மன்) **विद्युतः** வித்$_3$யுத: மின்னலின் **व्यद्युतत्** வ்யத்$_3$யுதத் ப்ரகாசமான ஒளிக்கு **आ** ஆ ஒப்பிடத்தக்கது. **इति** இதி இது (முதல் உபதேசம்). **इत्** இத் மேலும் **न्यमीमिषत्** ந்யமீமிஷத் (இந்த ப்ரஹ்மன்) கண் இமைப்பதற்கு **आ** ஆ ஒப்பிடத்தக்கது. **इति** இதி இது (இரண்டாவது உபதேசம்). **अधिदैवतं** அதி$_4$தை$_3$வதம் தேவதா விஷயமான (ப்ரஹ்மனைப்பற்றிய உவமையுடன் கூடிய உபதேசம் இவ்விதம் முடிகிறது).

அந்த ப்ரஹ்மனைப்பற்றிய உவமை ரூபமான உபதேசம் பின்வருமாறு: இந்த ப்ரஹ்மன் மின்னலின் ப்ரகாசமான ஒளிக்கு ஒப்பிடத்தக்கது. இது முதல் உபதேசம். மேலும் இந்த ப்ரஹ்மன் கண் இமைப்பதற்கு ஒப்பிடத்தக்கது. இது இரண்டாவது உபதேசம். தேவதா விஷயமான ப்ரஹ்மனைப்பற்றிய உவமை யுடன் கூடிய உபதேசம் இவ்விதம் முடிகிறது.

५. अथाध्यात्मं यदेतद् गच्छतीव च मनोऽनेन चैतदुपस्मरत्यभीक्ष्णँ सङ्कल्पः ॥

5. அதா$_2$த்$_4$யாத்மம் யதே$_3$தத்$_3$ க$_3$ச்ச$_2$தீவ ச மனோऽனேன
சைதது$_3$பஸ்மரத்யபீ$_4$க்ஷ்ணம்ஸங்கல்ப: ॥

अथ அத$_2$ இனிவருவது **अध्यात्मं** அத்$_4$யாத்மம் அத்யாத்ம விஷயமாக உள்ள (உவமையுடன் கூடிய ப்ரஹ்மனைப்பற்றிய உபதேசம்). **मनः** மன: எண்ணங்கள் **यत् एतत्** யத் ஏதத் இதை (சைதன்ய ரூபமான ப்ரஹ்மனை) **गच्छति इव** க$_3$ச்ச$_2$தி இவ வெளிப்படுத்துவது போன்றதாகின்றன. **च** ச மேலும் **अनेन** அனேன அந்த (எண்ணங்களின்) மூலம் **एतत्** ஏதத் இந்த (சைதன்யத்தை) **सङ्कल्पः** ஸங்கல்ப: தெரிந்து கொண்டு **अभीक्ष्णं च** அபீ$_4$க்ஷ்ணம் ச மீண்டும் மீண்டும் **उपस्मरति** உபஸ்மரதி (அந்த ப்ரஹ்மனை) த்யானிக்கிறான்.

இனி வருவது அத்யாத்ம விஷயமாகவுள்ள, உவமையுடன் கூடிய ப்ரஹ்மனைப்பற்றிய உபதேசம். எண்ணங்கள் இந்த சைதன்ய ரூபமான ப்ரஹ்மனை வெளிப்படுத்துவது போன்றதாகின்றன. மேலும் அந்த எண்ணங்களின் மூலம் இந்த சைதன்யத்தைத் தெரிந்து கொண்டு மீண்டும் மீண்டும் அந்த ப்ரஹ்மனை த்யானிக்கிறான்.

६. तद्ध तद्वनं नाम तद्वनमित्युपासितव्यं स य एतदेवं वेदाभिहैनँ सर्वाणि भूतानि संवाञ्छन्ति ॥

6. தத்$_3$த$_4$ தத்$_3$வனம் நாம தத்$_3$வனமித்யுபாஸிதவ்யம் ஸ ய ஏத
தே$_3$வம் வேதா$_3$பி$_4$ஹைனம் ஸர்வாணி பூ$_4$தானி ஸம்வாஞ்ச$_2$ந்தி ॥

तत् தத் அந்த (ப்ரஹ்மன்) **ह** ஹ உண்மையில் **तद्वनं** தத்$_3$வனம் எல்லோராலும் பூஜிக்கத்தக்கவர் (என) **नाम** நாம பெயர்பெற்றவர். **तद्वनं इति** தத்$_3$வனம் இதி (ஆகையால் ப்ரஹ்மன்) எல்லோராலும் பூஜிக்கத்தக்கவர் என்று **उपासितव्यं** உபாஸிதவ்யம் த்யானிக்கப்

படவேண்டும். **यः सः** ய: ஸ: யார் ஒருவன் **एवं** ஏவம் இவ்வாறு **एतत्** ஏதத் இதை (ப்ரஹ்மனை) **वेद** வேத₃ த்யானிக்கிறானோ **एनं ह** ஏனம் ஹ அவனை **सर्वाणि भूतानि** ஸர்வாணி பூ₄தானி எல்லா உயிரினங்களும் **अभिसंवाञ्छन्ति** அபி₄ஸம்வாஞ்ச₂ந்தி பூஜிக்கும்.

அந்த ப்ரஹ்மன் உண்மையில் எல்லோராலும் பூஜிக்கத் தக்கவர் என பெயர்பெற்றவர். ஆகையால் ப்ரஹ்மன் எல்லோராலும் பூஜிக்கத்தக்கவர் என்று த்யானிக்கப்பட வேண்டும். யார் ஒருவன் இவ்வாறு இந்த ப்ரஹ்மனை த்யானிக்கிறானோ, அவனை எல்லா உயிரினங்களும் பூஜிக்கும்.

௭. उपनिषदं भो ब्रूहीत्युक्ता त उपनिषद् ब्राह्मीं वाव त उपनिषदमब्रूमेति ॥

7. உபநிஷத₃ம் போ₄ ப்₃ரூஹீத்யுக்தா த உபநிஷத்₃
ப்₃ராஹ்மீம் வாவ த உபநிஷத₃மப்₃ரூமேதி ॥

भोः போ₄: ஆசிரியரவர்களே **उपनिषदं** உபநிஷத₃ம் உபநிஷத்தை **ब्रूहि** ப்₃ரூஹி (எனக்கு) கூறுங்கள் **इति** இதி என்று (சிஷ்யன் கேட்டான்). **ते** தே உனக்கு **उपनिषत्** உபநிஷத் உபநிஷத் **उक्ता** உக்தா (என்னால்) கூறப்பட்டது. **ते** தே (இதுவரை) உனக்கு **ब्राह्मीं वाव** ப்₃ராஹ்மீம் வாவ ப்ரஹ்மனை விளக்குகின்ற **उपनिषदं** உபநிஷத₃ம் உபநிஷத்தைத்தான் **अब्रूम** அப்₃ரூம கூறினோம் **इति** இதி என்று (ஆசிரியர் கூறினார்).

ஆசிரியரவர்களே, உபநிஷத்தை எனக்குக் கூறுங்கள் என்று சிஷ்யன் கேட்டான். உனக்கு உபநிஷத் என்னால் கூறப்பட்டது. இதுவரை உனக்கு ப்ரஹ்மனை விளக்குகின்ற உபநிஷத்தைத் தான் கூறினோம் என்று ஆசிரியர் கூறினார்.

८. तस्यै तपो दमः कर्मेति प्रतिष्ठाः वेदाः सर्वाङ्गानि सत्यमायतनम् ।।

8. தஸ்யை தபோ த$_3$ம: கர்மேதி ப்ரதிஷ்டா$_2$: வேதா$_3$:
ஸர்வாங்கா$_3$னி ஸத்யமாயதனம் ।।

तस्यै தஸ்யை அதற்கு (ப்ரஹ்மஞானத்திற்கு) **तपः** தப: தவம் **दमः** த$_3$ம: புலனடக்கம் **कर्म** கர்ம கடமையை ஆற்றுதல் **इति** இதி ஆகியவை **प्रतिष्ठाः** ப்ரதிஷ்டா$_2$: ஆதாரங்கள். **वेदाः** வேதா$_3$: வேதங்கள் **सर्वाङ्गानि** ஸர்வாங்கா$_3$னி (அதனுடைய) எல்லா உறுப்புகள். **सत्यं** ஸத்யம் வாய்மை **आयतनं** ஆயதனம் (அதனுடைய) இருப்பிடம்.

அந்த ப்ரஹ்ம ஞானத்திற்கு தவம், புலனடக்கம், கடமையை ஆற்றுதல் ஆகியவை ஆதாரங்கள். வேதங்கள் அதனுடைய எல்லா உறுப்புகள். வாய்மை அதனுடைய இருப்பிடம்.

९. यो वा एतामेवं वेदापहत्य पाप्मानमनन्ते स्वर्गे लोके ज्येये
प्रतितिष्ठति प्रतितिष्ठति ।।

9. யோ வா ஏதாமேவம் வேதா$_3$பஹத்ய பாப்மானமனந்தே
ஸ்வர்கே$_3$ லோகே ஜ்யேயே ப்ரதிதிஷ்ட$_2$தி ப்ரதிதிஷ்ட$_2$தி ।।

यः वै ய: வை யார் **एवं** ஏவம் இவ்வாறு **एतां** ஏதாம் இதை (உபநிஷத்தை) **वेद** வேத$_3$ புரிந்துகொள்கிறானோ (அவன்) **पाप्मानं** பாப்மானம் பாபத்தை **अपहत्य** அபஹத்ய நீக்கி **अनन्ते** அனந்தே எல்லையற்றதும் **ज्येये** ஜ்யேயே மிக உயர்ந்ததுமாகிய **स्वर्गे लोके** ஸ்வர்கே$_3$ லோகே மோக்ஷத்தில் **प्रतितिष्ठति** ப்ரதிதிஷ்ட$_2$தி நிலை பெறுகிறான். **प्रतितिष्ठति** ப்ரதிதிஷ்ட$_2$தி (நிச்சயமாக மோக்ஷத்தில்) நிலைபெறுகிறான்.

யார் இவ்வாறு இந்த உபநிஷத்தைப் புரிந்து கொள்கிறானோ, அவன் பாபத்தை நீக்கி எல்லையற்றதும் மிக உயர்ந்ததுமாகிய மோக்ஷத்தில் நிலைபெறுகிறான். நிச்சயமாக மோக்ஷத்தில் நிலைபெறுகிறான்.

इति चतुर्थः खण्डः

நான்காவது பகுதி முடிவுற்றது.

।। केनोपनिषत् समाप्ता ।।

கேனோபநிஷத் முடிவுற்றது.

****

கடோபநிஷத்



ॐ

कठोपनिषद्

கடோ$_2$பநிஷத்$_3$

சாரம்

கடோபநிஷத் க்ருஷ்ண யஜுர்வேதத்தில் அமைந்துள்ளது. இந்த உபநிஷத் இரண்டு அத்யாயங்களாகவும் ஒவ்வொரு அத்யாயமும் மூன்று பகுதிகளாகவும் பிரிவுபட்டிருக்கின்றன. இங்கு பகுதிகள் வல்லி என்று அழைக்கப்படுகின்றன.

முதல் அத்யாயத்தில் முதல் வல்லி

ஒரு கதையுடன் இவ்வுபநிஷத் துவங்குகிறது. வாஜச்ரவஸ் என்பவர் விச்வஜித் என்ற ஒரு யாகத்தை செய்கிறார். இந்த யாகத்தின் விதிமுறைப்படி, ஒருவனுடைய அனைத்து செல்வத்தையும் தானமாகக் கொடுக்க வேண்டும். அவ்விதம், வயதான பசுக்களை எல்லாம் அவர் தானமாகக் கொடுத்துக்கொண்டிருக்கும் பொழுது, அதைப் பார்த்த நசிகேதன் என்ற பெயருடைய அவர் மகன், என்னை யாருக்கு தானமாகக் கொடுப்பீர்கள்? என தந்தையிடம் கேட்க, தந்தையானவர் கோபத்தின் வசப்பட்டு யமனுக்குக் கொடுக்கின்றேன் என்று கூறுகிறார். யமலோகத்திற்குச் சென்ற நசிகேதன், மூன்று நாட்கள் காத்திருந்து, யமதேவரை சந்திக்கின்றான். நசிகேதனைக் காத்திருக்க வைத்ததற்காக யமதேவர் மூன்று வரம் கொடுக்கின்றார் (1 - 9). தந்தையினுடைய மன அமைதிக்காக முதல் வரத்தை நசிகேதன் பயன்படுத்துகின்றான் (10, 11). எந்த ஒரு யாகத்தை செய்தால் ஸ்வர்க லோகத்தை அடையமுடியுமோ அந்த யாகத்தைப் பற்றிய விளக்கத்தை இரண்டாவது வரமாக, பொது மக்களின் பொருட்டு கேட்கின்றான் (12 - 19). மூன்றாவது வரமாக, உடல் அழிந்த பின்னும் அழியாது இருக்கின்ற ஆத்மதத்துவத்தைப் பற்றிய அறிவைக் கேட்கின்றான் (20). இந்த அறிவானது, தகுதி உடையவர்களால் தான் புரிந்துகொள்ள முடியும் என்பதால், இங்கு குருவாக விளங்க இருக்கும் யமதேவர், முதலில் நசிகேதனுக்குப்

போதிய முமுக்ஷுத்வம் (உண்மையை அறிவதில் நாட்டம்) இருக்கின்றதா என்று சோதிக்கின்றார். இந்த அறிவை அடைவது மிகக்கடினம். ஆகவே, வேறு வரத்தைக் கேட்பாயாக என்று ஆத்மஞானத்தில் இருக்கின்ற விருப்பத்தைத் திசைதிருப்ப முயலும் பொழுது, இது கடினமாக இருப்பதனால்தான் நான் நாடுகின்றேன் என்று நசிகேதன் தன் ஊக்கத்தில் உறுதியாக நிற்கின்றான் (21, 22). பிறகு, நசிகேத னுக்குப் போதிய வைராக்யம் இருக்கின்றதா என்பதை சோதிக்க இஹலோகத்திலும் பரலோகத்திலும் இருக்கின்ற போகப் பொருட்களைக் கொடுப்பதாகக் கூறுகின்றார் (23 - 25). அவை அனைத்தையும் மறுத்த நசிகேதன், இந்த போகப்பொருட்களினால் வருகின்ற குறைகளையும் தெளிவாகச் சுட்டிக்காட்டி, தன்னுடைய வைராக்யம் விவேகத்தில் உதித்தது என்பதை நிலைநாட்டுகின்றான். ஆத்ம ஞானத்தைத் தவிர வேறு எதுவும் தனக்கு வேண்டாம் என்று நசிகேதன் தனது மூன்றாவது வரத்தில் உறுதியாகவும் தகுதி உடையவனாகவும் இருப்பதை யமதேவர் உணர்கிறார் (26 - 29).

முதல் அத்யாயத்தில் இரண்டாவது வல்லி

ச்ரேயஸ், ப்ரேயஸ் என்ற இரண்டு லக்ஷ்யங்களை மனிதன் தேர்ந்தெடுக்க வாய்ப்புண்டு. ச்ரேயஸ் என்றால் நன்மை. ப்ரேயஸ் என்றால் இன்பம். எது ச்ரேயஸ், எது ப்ரேயஸ் என்று பிரித்து அறிதலே பலரால் இயலாததாக இருக்கிறது. ஒன்றைத் தேர்ந் தெடுக்கும்பொழுது மற்றதிலிருந்து விலகிச்செல்கிறோம். இரண் டையும் சேர்த்தும் தேர்ந்தெடுக்க முடியாது. இவ்விதம் இருக்க, நசிகேதன் இவற்றைப் பகுத்தறிந்து ச்ரேயஸைத் தேர்ந்தெடுத்தான் என்று நசிகேதனை யமதேவர் புகழ்கிறார் (1 - 4). ப்ரேயஸைத் தேர்ந் தெடுப்பவர்களை நிந்தனை செய்து, அவர்கள் மீண்டும் மீண்டும் என் வசத்தில் வீழ்கிறார்கள் என்று யமதேவர் கூறுகிறார் (5, 6). இந்த ஆத்மதத்துவத்தைக் கேட்டல், புரிந்து கொள்ளுதல், உபதேசித்தல் இவையெல்லாம் அரிதிலும் அரிது என்று கூறி, குருவின் துணையின்றி இந்த நுண்ணிய தத்துவத்தை க்ரஹிக்க முடியாது என்று விளக்குகிறார் (7, 8). மீண்டும் நசிகேதனின் உறுதி,

வைராக்யம், விவேகம் முதலிய பண்புகளை யமதேவர் புகழ்கிறார். உன்னைப்போன்ற சிஷ்யனை நான் மேலும் அடைவேனாக என்று கூறி, உன் வைராக்யம் விவேகத்தில் உதித்தது என்று தான் புரிந்து கொண்டதை நசிகேதனிடம் கூறுகிறார் (9 - 11). இந்த ஸூக்ஷ்மமான, ஆத்மதத்துவத்தை நன்கு க்ரஹித்து அந்த அறிவில் நிலை பெற்றவன், சுகதுக்கங்களைக் கடந்து, தன்னுள் அமைதியை அடைகிறான். மோக்ஷத்தின் வாசல் நசிகேதனுக்குத் திறக்கப்பட்டதாக, அவனிடமே கூறுகின்றார் (12,13). இந்த உபதேசத்தைக் கேட்ட நசிகேதன், மூன்றாவது வரத்திற்கான பதில் இன்னும் நேரடியாக வரவில்லை என்பதால் மீண்டும், தர்மம், அதர்மம் முதலிய இருமைகளைக் கடந்து விளங்குகின்ற தத்துவத்தை உபதேசியுங்கள் என்று கேட்கின்றான் (14). ஆத்ம ஞானத்தை அடைவதற்கு, மனதைத் தகுதிப்படுத்த ஓங்கார த்யானத்தை யமதேவர் முதலில் உபதேசிக்கிறார் (15 - 17). நசிகேதனுடைய கேள்வியின் பதிலான ஆத்மதத்துவத்தின் விளக்கம் ஆரம்பமாகிறது. பிறப்பும் இறப்பும் அற்ற, எதிலிருந்தும் தோன்றாத, என்றுமுள்ள ஆத்மா, சரீரம் அழிந்த போதிலும் அழிவதில்லை (18). இந்த ஆத்மா எந்த ஒரு செயலையும் செய்பவனாகவோ, செயலின் பயனை அனுபவிப்ப வனாகவோ இல்லை (19). இந்த ஆத்மதத்துவம் சிறியது, பெரியது போன்ற இருமைகளுக்கு அப்பால் நிற்பதால் பெரிதினும் பெரியது, சிறிதினும் சிறியது என்றெல்லாம் விளக்கப்படுகிறது. எல்லா ஜீவர்களுடைய ஹ்ருதயத்திலும் விளங்கும் இந்த ஆத்மா தகுதியை அடைந்தவர்களால் அறியப்பட்டு, அந்த அறிவின் பலனாக அவர்கள் துயரத்தைக் கடக்கிறார்கள் (20 - 22). இவ்விதம் ஆத்ம ஸ்வரூபத்தை விளக்கிய யமதேவர் முமுக்ஷுத்வம், அதர்மத்திலிருந்து விலகி இருத்தல், புலனடக்கம், மனவடக்கம் போன்ற சாதனை களைக் கூறி (23, 24), இவை இல்லையென்றால் இந்தத் தத்துவத்தை க்ரஹிக்கமுடியாது என்று முடிக்கின்றார் (25).

முதல் அத்யாயத்தில் மூன்றாவது வல்லி

பரமாத்மாவும் ஜீவாத்மாவும் அறிமுகப்படுத்தப்பட்டு, பரமாத்மா ஒளிக்கு நிகராகவும் ஜீவாத்மா நிழலுக்கு நிகராகவும் கூறப்பட்டு,

இந்த இரு தத்துவங்களும் நமக்குள்ளேயே இருந்து வருகின்றன என்று காட்டுவதன் மூலம் பரமாத்மாவே மெய்ப்பொருள் என்ற அறிவு புகட்டப்பட்டதாகிறது (1). யாகங்களின் துணைகொண்டு ஜீவாத்மா விதவிதமான லோகங்களை அடையலாம் அல்லது ஞானத்தின் துணைகொண்டு, தானே பரமாத்மா என உணரலாம் (2). இங்கு வாழ்க்கையை ஒரு பயணமாக உருவகப்படுத்தி சில சாதனைகளை யமதேவர் கூறுகிறார்: உடல் - ரதம், இந்த்ரியங்கள் - குதிரைகள், நம்மால் அனுபவிக்கப்படக்கூடிய பொருள்கள் - பாதைகள், மனம் - கடிவாளம், புத்தி - தேரோட்டி, ஜீவாத்மா - ரதத்தில் அமர்ந்துள்ள யஜமானன். எவ்விதம் அறிவுடைய தேரோட்டி கடிவாளத்தையும் குதிரை களையும் தன் வசம் வைத்தவனாக, சரியான பாதையில் ரதத்தை செலுத்தி, சேரவேண்டிய இடத்தில் யஜமானனைச் சேர்க்கின்றானோ அவ்விதமே, அறிவை உடைய புத்தியானது, மனதையும் இந்த்ரியங்களையும் தன்வசம் வைத்து, சரியான பாதையில் சென்று, ஜீவாத்மாவை சேரவேண்டிய இடமான பரமாத்மாவிடம் சேர்க்கின்றது (3 - 9).

இவ்விதமான பயணம், நமக்குள் நடப்பதாகும். வெளியே உள்ள பொருட்கள் உண்மையற்றன என்று படிப்படியாக நீக்கி, பரமாத்மாவே உண்மையான லக்ஷ்யம் என அறியவேண்டும் (10, 11). இந்த பரமாத்மதத்துவம் மிகவும் ஸூக்ஷ்மமான, கூர்மை யான புத்தியினால்தான் அறியப்படுகிறது (12). ஒருவன் ஒவ்வொரு கோசத்திலும் இருக்கின்ற அபிமானத்தைப் படிப்படியாக விட்டு, இறுதியில் ஆத்மாவினிடத்தில் நிலைபெற வேண்டும். இவ்விதம் செய்கின்ற பயணம் சற்றுக் கடினமானதே என்பதை உணர்த்த யமதேவர், நசிகேதனை உற்சாகப்படுத்தும் பொருட்டு எழுந்திரு, விழித்துக்கொள், குருவை அடைந்து உண்மையை உணர்வாயாக! இது கத்தியில் நடப்பது போன்றது என்று கூறுகிறார் (14). இந்த்ரியங்களினால் க்ரஹிக்கப்படாத, என்றுமுள்ள இந்த பரப்ரஹ்ம தத்துவத்தை அறிந்து ஒருவன் மரணத்திலிருந்து விடுதலை அடைகிறான் (15). இந்த உபநிஷத்தைக் கேட்பதாலும் கற்பிப்ப தாலும் வரும் பலன் சொல்லப்பட்டு இப்பகுதி முடிகிறது (16, 17).

இரண்டாவது அத்யாயத்தில் முதல் வல்லி

இரண்டாவது அத்யாயம் முழுவதிலும் 1. ஆத்மஞானம் 2. சாதனைகள் 3. பலன் ஆகியவை பேசப்படுகின்றன.

இந்த வல்லி வைராக்யத்தின் தேவையை உணர்த்தும் விதத்தில் ஆரம்பிக்கிறது. இந்த்ரியங்கள் வெளிவிஷயங்களைப் பார்ப்ப தற்காகவே படைக்கப்பட்டதனால், அதன் வழியாகவே செல்பவர்கள் பஹிர்முகமாகவே இருந்து அந்தராத்மாவை அறியவில்லை. சில தீரர்கள் இந்த்ரியங்களிலிருந்து விலகிக்கொண்டு தம் உண்மை ஸ்வரூபத்தைப் பார்க்கின்றார்கள் (1). வெளி விஷயத்திலேயே செல்பவர்கள் மரணத்தை அடைகின்றார்கள் (2).

ஜீவாத்மாவும் பரமாத்மாவும் உண்மையில் வேறுபடாத அறிவு ஸ்வரூபமாகவே இருந்து, அனைத்து விஷயங்களுக்கும் அவஸ்தைகளுக்கும் ஸாக்ஷியாக விளங்குகின்றது (3, 4). மாயா தத்துவத்திற்கு அதிபதியாக இருக்கும் ஈச்வரனும் ஜீவனும் அடிப்படையில் ஒன்று என்று ஐக்யம் கூறப்படுகிறது. இந்த ஞானத்தை அடைந்தவன் தன்னைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆசையிலிருந்து விடுபடுகிறான் (5). ஸூக்ஷ்மமான உலகிற்கு அதிபதியாக இருக்கின்ற ஹிரண்யகர்பர் என்று அழைக்கப் படுகின்ற ஈச்வரனும் ஜீவனும் ஒன்று என்று கூறப்படுகிறது (6, 7, 9). ஸ்தூல உலகத்திற்கு அதிபதியாக இருக்கின்ற விராட் என்று அழைக்கப்படுகின்ற ஈச்வரனும் ஜீவனும் ஒன்று எனக்கூறப் படுகிறது (8). மீண்டும் ஜீவப்ரஹ்ம ஐக்யமே பேசப்படுகிறது. யார் இங்கு இருமைகளைக் காண்கிறார்களோ, அவர்கள் மரணத்தி லிருந்து மரணத்துக்குச் செல்கிறார்கள் (10 - 13). இப்பகுதியில் ஜீவப்ரஹ்ம ஐக்யம் பல கோணங்களில் பேசப்பட்டு, வேற்றுமை யுடன் நோக்குவதால் கிட்டும் பலனையும் வேற்றுமையை நீக்கி ஐக்யத்தைப் பார்ப்பதால் கிட்டும் பலனையும் கூறி இப்பகுதி முடிவடைகிறது (14 - 15).

இரண்டாவது அத்யாயத்தில் இரண்டாவது வல்லி

உடலை ஒரு நகரமாகக் கற்பனை செய்து, பிறவாத, மாறாத ப்ரஹ்மன் அந்த நகரத்தில் வீற்றிருப்பதாகக் கூறப்படுகிறது (1). இந்த

ப்ரஹ்மனே அனைத்தையும் வ்யாபிக்கின்றது (2). இந்தப் பரம்பொருள் இருப்பதனால்தான் ப்ராணன், இந்த்ரியங்கள் முதலிய அனைத்தும் செயல்படுகின்றன (3 - 5). அறியாமையில் இருப்பவர்கள் இறந்தபின் எந்நிலையை அடைகிறார்கள் என்று யமதேவர் இங்கு கூறுகிறார் (6, 7). இந்த ப்ரஹ்மதத்துவம் ஆத்மாவாக இருந்து கொண்டு, அனைத்துக்கும் ஆதாரமாகவும் இருக்கின்றது (8). ஒன்றாக இருக்கின்ற ப்ரஹ்மதத்துவம் பலவாகத் தோன்றுகின்றதே தவிர பலவாக ஆகவில்லை (9, 10). அனைத்தையும் வ்யாபித்தபோதிலும் எதனாலும் பாதிக்கப் படாமல் இருக்கிறது (11). எந்த தீரர்கள் ஈச்வரனைத் தன் ஆத்மாவாக உணர்கிறார்களோ, அவர்களே சாச்வதமான சாந்தியை அடைகிறார்கள் (12, 13). ஆனந்த ஸ்வரூபமான அந்த ப்ரஹ்ம தத்துவத்தை ஸூர்யன் போன்ற எந்த தத்துவங்களும் விளக்காது. ஆனால் அவை அந்த ப்ரஹ்மத்தால் விளங்குகின்றன (14, 15).

இரண்டாவது அத்யாயத்தில் மூன்றாவது வல்லி

இவ்வுலகம் அரசமரத்திற்கும், ப்ரஹ்மன் வேருக்கும் உருவகப் படுத்தப்படுகின்றன. இந்த ப்ரஹ்மனைச் சார்ந்தே அனைத்தும் உள்ளன (1). இந்த ப்ரஹ்மனே ஈச்வரனாக விளங்கி அனைத்து தேவர்களையும் ஆள்கிறார் (2, 3). மனித சரீரத்தினுடைய பெருமை யானது பேசப்படுகிறது. மற்ற லோகத்தைக் காட்டிலும் மானிட லோகத்தில்தான் இந்தத் தத்துவத்தை அறிய முழு வாய்ப்பு கிடைக்கிறது (4, 5). உடல், மனம், இந்த்ரியங்கள் இவற்றைக் கடந்து இருக்கின்ற ப்ரஹ்மத்தை அறிபவன் துயருறுவதில்லை (6, 7, 8). ஸூக்ஷ்மமான, தூய்மையான மனதில்தான் இந்த ப்ரஹ்ம னானது அறியப்படுகிறது (9). த்யானம் என்ற சாதனை பேசப்பட்டு, கவனமாக இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை விடப்படுகிறது (10, 11). ச்ரத்தையின் அவசியம் பேசப்படுகிறது (12, 13). இந்த ஞானத்தின் பலனாக, ஆசையின் நிவ்ருத்தியும் ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே ஆவதைப்பற்றியும் கூறப்படுகிறது (14, 15). இந்த ஞானத்தை அடைய முடியாதவர்கள் சகுண ப்ரஹ்மத்தை த்யானித்து ப்ரஹ்மலோகத்தை அடைகிறார்கள் (16).

அனாத்மாவிலிருந்து ஆத்மாவை கவனமாகப் பிரித்தெடுத்து, அந்த ஆத்ம ஸ்வரூபத்தை ப்ரஹ்மனாக உணரவேண்டும் (17). யமதேவரால் கூறப்பட்ட, நசிகேதனால் அடையப்பட்ட இந்த ஞானத்தை யார் அடைகிறார்களோ, அவர்களும் மரணத்திலிருந்து விடுபட்டு முக்தியை அடைகிறார்கள் (18).

शान्तिपाठः
சா$_1$ந்திபாட$_2$:

**स ह नाववतु । स ह नौ भुनक्तु । सह वीर्यं करवावहै ।
तेजस्विनावधीतमस्तु मा विद्विषावहै ।
ओं शान्तिः शान्तिः शान्तिः ।।**

ஸ ஹ நாவவது । ஸ ஹ நௌ பு$_4$நக்து । ஸஹ வீர்யம் கரவாவஹை । தேஜஸ்விநாவதீ$_4$தமஸ்து மா வித்$_3$விஷா வஹை । ஓம் சா$_1$ந்தி: சா$_1$ந்தி: சா$_1$ந்தி: ।।

सः ஸ: அவன் (அந்த இறைவன்) **नौ ह** நௌ ஹ (குரு சிஷ்யர்களாகிய) எங்கள் இருவரையும் **अवतु** அவது காப்பாற்றட்டும். **सः** ஸ: அவன் (அந்த இறைவன்) **नौ ह** நௌ ஹ எங்கள் இருவரையும் **भुनक्तु** பு$_4$நக்து காப்பாற்றட்டும். **वीर्यं** வீர்யம் (எங்களுக்குரிய) முயற்சியை **सह** ஸஹ (நாங்கள் இருவரும்) சேர்ந்து **करवावहै** கரவாவஹை செய்வோமாக. **नौ अधीतं** நௌ அதீ$_4$தம் எங்கள் படிப்பு **तेजस्वि** தேஜஸ்வி ஒளிபொருந்தியதாக **अस्तु** அஸ்து இருக்கட்டும். **मा विद्विषावहै** மா வித்$_3$விஷாவஹை (நாங்கள் ஒருவரையொருவர்) வெறுக்காமல் இருப்போமாக. **ओं शान्तिः** ஓம் சா$_1$ந்தி: ஓம் சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி.

அந்த இறைவன் குரு சிஷ்யர்களாகிய எங்கள் இருவரையும் காப்பாற்றட்டும். அந்த இறைவன் எங்கள் இருவரையும் காப்பாற்றட்டும். எங்களுக்குரிய முயற்சியை நாங்கள் இருவரும் சேர்ந்து செய்வோமாக. எங்கள் படிப்பு ஒளி பொருந்தியதாக இருக்கட்டும். நாங்கள் ஒருவரையொருவர் வெறுக்காமல் இருப்போமாக. ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

प्रथमाध्याये प्रथमा वल्ली

முதல் அத்யாயத்தில் முதல் வல்லி

१. उशन्ह वै वाजश्रवसः सर्ववेदसं ददौ ।
तस्य ह नचिकेता नाम पुत्र आस ॥

1. உச$_1$ன்ஹ வை வாஜச்$_1$ரவஸ: ஸர்வவேத$_3$ஸம் த$_3$தௌ$_3$ ।
தஸ்ய ஹ நசிகேதா நாம புத்ர ஆஸ ॥

वाजश्रवसः வாஜச்$_1$ரவஸ: வாஜச்ரவஸ் **उशन् ह वै** உச$_1$ன் ஹ வை (கர்மபலனில்) ஆசைகொண்டவராக **सर्ववेदसं** ஸர்வவேத$_3$ஸம் (விச்வஜித் என்ற யாகத்தில்) அனைத்து பொருள்களையும் **ददौ** த$_3$தௌ$_3$ (தக்ஷிணையாக) கொடுத்தார். **तस्य ह** தஸ்ய ஹ அவருக்கு **नचिकेताः** நசிகேதா: நசிகேதன் **नाम** நாம (என்ற) பெயரையுடைய **पुत्रः** புத்ர: மகன் **आस** ஆஸ இருந்தான்.

வாஜச்ரவஸ், கர்ம பலனில் ஆசைகொண்டவராக விச்வஜித் என்ற யாகத்தில் அனைத்து பொருள்களையும் தக்ஷிணையாகக் கொடுத்தார். அவருக்கு நசிகேதன் என்ற பெயரையுடைய மகன் இருந்தான்.

२. तँह कुमारँ सन्तं दक्षिणासु नीयमानासु
श्रद्धाविवेश सोऽमन्यत ॥

2. தம்ஹ குமாரம் ஸந்தம் த$_3$க்ஷிணாஸு நீயமானாஸு
ச்$_1$ரத்$_3$தா$_4$விவேச$_1$ ஸோऽமன்யத ॥

दक्षिणासु नीयमानासु த$_3$க்ஷிணாஸு நீயமானாஸு (தந்தையால்) தக்ஷிணைகள் கொடுக்கப்பட்டுக்கொண்டிருந்த பொழுது **कुमारं सन्तं** குமாரம் ஸந்தம் சிறுவனாக இருக்கின்ற **तं ह** தம் ஹ அவனை (அந்த நசிகேதனை) **श्रद्धा** ச்$_1$ரத்$_3$தா$_4$ ச்ரத்தையானது **आविवेश** ஆவிவேச$_1$ ஆட்கொண்டது. **सः** ஸ: அவன் **अमन्यत** அமன்யத (இவ்விதம்) நினைத்தான்.

தந்தையால் தக்ஷிணைகள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்த பொழுது, சிறுவனாக இருக்கின்ற அந்த நசிகேதனை ச்ரத்தை யானது ஆட்கொண்டது. அவன் இவ்விதம் நினைத்தான்:

३. पीतोदका जग्धतृणा: दुग्धदोहा निरिन्द्रिया: ।
अनन्दा नाम ते लोका: तान्स गच्छति ता ददत् ।।

3. பீதோத$_{3}$கா ஜக்$_{3}$த$_{4}$த்ருணா: து$_{3}$க்$_{3}$த$_{4}$தோ$_{3}$ஹா நிரிந்த்$_{3}$ரியா: ।
அனந்தா$_{3}$ நாம தே லோகா: தான்ஸ க$_{3}$ச்ச$_{2}$தி தா த$_{3}$த$_{3}$த் ।।

(தக்ஷிணைக்கான பசுக்கள்) **पीत-उदका:** பீத-உத$_{3}$கா: இறுதி நீரைக் குடித்தவையாகவும் **जग्ध-तृणा:** ஜக்$_{3}$த$_{4}$-த்ருணா: இறுதிப் புல்லை உட்கொண்டவையாகவும் **दुग्ध-दोहा:** து$_{3}$க்$_{3}$த$_{4}$-தோ$_{3}$ஹா: இறுதி பாலைக்கொடுத்தவையாவும் **निरिन्द्रिया:** நிரிந்த்$_{3}$ரியா: கன்று ஈனும் சக்தியற்றவையாகவும் (இருந்தன). **ता:** தா: இப்படிப்பட்ட (பசுக்களை) **ददत्** த$_{3}$த$_{3}$த் கொடுப்பதன் மூலமாக **अनन्दा: नाम** அனந்தா$_{3}$: நாம ஸுகமற்றவை எனப் பெயர்பெற்ற **ते लोका:** தே லோகா: எந்த உலகங்கள் உண்டோ **तान्** தான் அந்த (உலகங்களை) **स:** ஸ: ஒருவன் **गच्छति** க$_{3}$ச்ச$_{2}$தி அடைகிறான்.

தக்ஷிணைக்கான பசுக்கள் இறுதி நீரைக் குடித்தவை யாகவும் இறுதிப் புல்லை உட்கொண்டவையாகவும் இறுதிப் பாலைக் கொடுத்தவையாகவும் கன்று ஈனும் சக்தியற்ற வையாகவும் இருந்தன. இப்படிப்பட்ட பசுக்களைக் கொடுப்பதன் மூலமாக ஸுகமற்றவை எனப் பெயர்பெற்ற எந்த உலகங்கள் உண்டோ அந்த உலகங்களை ஒருவன் அடைகிறான்.

४. स होवाच पितरं तत कस्मै मां दास्यसीति ।
द्वितीयं तृतीयं तँहोवाच मृत्यवे त्वा ददामीति ।।

4. ஸ ஹோவாச பிதரம் தத கஸ்மை மாம் தா$_{3}$ஸ்யஸீதி ।
த்$_{3}$விதீயம் த்ருதீயம் தம்ஹோவாச ம்ருத்யவே த்வா த$_{3}$தா$_{3}$மீதி ।।

स: ஸ: அவன் **पितरं** பிதரம் தந்தையிடம் **तत** தத தந்தையே **कस्मै** கஸ்மை யாருக்கு **मां** மாம் என்னை **दास्यसि** தா₃ஸ்யஸி (தக்ஷிணையாக) கொடுப்பீர்கள் **इति** இதி என்று **ह उवाच** ஹ உவாச கேட்டான். **द्वितीयं** த்₃விதீயம் இரண்டாவது முறையும் **तृतीयं** த்ருதீயம் மூன்றாவது முறையும் (அவ்விதமே கேட்டான்). **त्वा** த்வா உன்னை **मृत्यवे** ம்ருத்யவே யமதேவருக்கு **ददामि** த₃தா₃மி கொடுக்கிறேன் **इति** இதி என்று **तं** தம் அவனிடத்தில் **ह उवाच** ஹ உவாச (தந்தை) கூறினார்.

அவன் தந்தையிடம் தந்தையே, யாருக்கு என்னை தக்ஷிணையாகக் கொடுப்பீர்கள் என்று கேட்டான். இரண்டாவது முறையும் மூன்றாவது முறையும் அவ்விதமே கேட்டான். உன்னை யமதேவருக்குக் கொடுக்கிறேன் என்று அவனிடத்தில் தந்தை கூறினார்.

௫. बहूनामेमि प्रथम: बहूनामेमि मध्यम: ।
किँस्विद्यमस्य कर्तव्यं यन्मयाद्य करिष्यति ।।

5. பு₃ஹூனாமேமி ப்ரத₂ம: பு₃ஹூனாமேமி மத்₄யம: ।
கிம்ஸ்வித்₃யமஸ்ய கர்தவ்யம் யந்மயாத்₃ய கரிஷ்யதி ।।

बहूनां பு₃ஹூனாம் பலருள் (பல மாணவர்களுள்) **प्रथम:** ப்ரத₂ம: முதன்மையானவனாக **एमि** ஏமி திகழ்கிறேன். **बहूनां** பு₃ஹூனாம் பலருள் (பல மாணவர்களுள்) **मध्यम:** மத்₄யம: இடைப்பட்டவனாக **एमि** ஏமி திகழ்கிறேன் (கடைசி மாணவனாக இருந்ததில்லை). **अद्य** அத்₃ய இப்பொழுது **मया** மயா என்னை **यत्** யத் கொடுப்பதன் மூலமாக **यमस्य** யமஸ்ய யமதேவருக்கு **किंस्विद्** கிம்ஸ்வித்₃ என்னதான் **कर्तव्यं** கர்தவ்யம் நன்மையை **करिष्यति** கரிஷ்யதி (தந்தை) செய்ய உள்ளார் (என்று யோசித்தான்).

பல மாணவர்களுள் முதன்மையானவனாகத் திகழ்கிறேன். பல மாணவர்களுள் இடைப்பட்டவனாகத் திகழ்கிறேன். கடைசி மாணவனாக இருந்ததில்லை. இப்பொழுது என்னைக்

கொடுப்பதன் மூலமாக யமதேவருக்கு என்னதான் நன்மையை தந்தை செய்ய உள்ளார் என்று யோசித்தான்.

६. **अनुपश्य यथा पूर्वे प्रतिपश्य तथापरे ।**
सस्यमिव मर्त्यः पच्यते सस्यमिवाजायते पुनः ॥

6. அனுபச்$_1$ய யதா$_2$ பூர்வே ப்ரதிபச்$_1$ய ததா$_2$பரே ।
ஸஸ்யமிவ மர்த்ய: பச்யதே ஸஸ்யமிவாஜாயதே புன: ॥

यथा யதா$_2$ எவ்விதம் **पूर्वे** பூர்வே முன்னோர்கள் (வாழ்ந்தார்கள் என்று) **अनुपश्य** அனுபச்$_1$ய யோசித்துப் பாருங்கள். **तथा अपरे** ததா$_2$ அபரே இப்பொழுது உள்ளவர்கள் (எவ்விதம் வாழ்கிறார்கள் என்று) **प्रतिपश्य** ப்ரதிபச்$_1$ய யோசித்துப் பாருங்கள். **मर्त्यः** மர்த்ய: மனிதன் **सस्यं** ஸஸ்யம் தாவரத்தை **इव** இவ போல **पच्यते** பச்யதே மடிகிறான். **सस्यं** ஸஸ்யம் தாவரத்தை **इव** இவ போல **पुनः** புன: மீண்டும் **आजायते** ஆஜாயதே பிறக்கிறான் (என்று தந்தையிடம் கூறி யமலோகத்தை அடைந்தான்).

எவ்விதம் முன்னோர்கள் வாழ்ந்தார்கள் என்று யோசித்துப் பாருங்கள். இப்போது உள்ளவர்கள் எவ்விதம் வாழ்கிறார்கள் என்று யோசித்துப் பாருங்கள். மனிதன் தாவரத்தைப் போல மடிகிறான். தாவரத்தைப்போல மீண்டும் பிறக்கிறான் என்று தந்தையிடம் கூறி யமலோகத்தை அடைந்தான்.

கதை வேகமாக செல்கிறது. தந்தை கூறிய வாக்கின்படி நசிகேதன் யமலோகம் போக முற்படுகிறான். அதைத் தடுத்து நிறுத்த தந்தை விரும்புகிறார். தான் கோபத்தில் கூறியதை மெய்யாக எடுத்து யமலோகம் செல்லவேண்டாம் என தந்தை கூறும்போது தந்தையிடம் நசிகேதன் இவ்விதம் கூறுகிறான். நிலையற்ற வாழ்வில் ஏன் பொய்மையைப் பின்பற்ற வேண்டும். நம் முன்னோர்கள் உண்மையைப் பின்பற்றி வாழ்ந்தார்கள். ஆகவே நீங்கள் கூறியபடியே நான் யமதேவரிடம் செல்கிறேன் என்று சென்றுவிடுகிறான்.

७. वैश्वानरः प्रविशति अतिथिर्ब्राह्मणो गृहान्।
तस्यैताँशान्तिं कुर्वन्ति हर वैवस्वतोदकम्।।

7. வைச்$_1$வாநர: ப்ரவிச$_1$தி அதிதி$_2$ர்ப்$_3$ராஹ்மணோ க்$_3$ருஹான் ।
தஸ்யைதாம்சா$_1$ந்திம் குர்வந்தி ஹர வைவஸ்வதோத$_3$கம் ।।

वैश्वानरः வைச்$_1$வாநர: அக்னிதேவரே **ब्राह्मणः** ப்$_3$ராஹ்மண: ப்ராஹ்மண **अतिथिः** அதிதி$_2$: விருந்தினராக **गृहान्** க்$_3$ருஹான் வீட்டை **प्रविशति** ப்ரவிச$_1$தி அடைந்திருக்கிறார். **तस्य** தஸ்ய அவருக்கு **एतां** ஏதாம் இப்படிப்பட்ட **शान्तिं** சா$_1$ந்திம் உபசாரத்தை **कुर्वन्ति** குர்வந்தி (மனிதர்கள்) செய்கிறார்கள். **वैवस्वत** வைவஸ்வத யமதேவரே **उदकं** உத$_3$கம் (உபசரிக்க) நீரை **हर** ஹர கொண்டு வாருங்கள்.

அக்னிதேவரே ப்ராஹ்மண விருந்தினராக வீட்டை அடைந்திருக்கிறார். அவருக்கு இப்படிப்பட்ட உபசாரத்தை மனிதர்கள் செய்கிறார்கள். யமதேவரே, உபசரிக்க நீரைக் கொண்டுவாருங்கள்.

நசிகேதன் யமலோகத்தை அடைகிறான். அங்கு யமதேவர் இல்லை. மூன்று நாட்கள் கழித்து யமதேவர் வருகிறார். அதுவரை நசிகேதன் காத்திருக்கிறான். யமதேவர் வந்தவுடன் யமலோகத்தில் பணிபுரிபவர்கள் அக்னிதேவரே வந்தது போல நசிகேதன் நம் இடத்திற்கு விருந்தினராக வந்துள்ளான் எனத் தெரிவிக்கிறார்கள். விருந்தினருக்கு செய்ய வேண்டிய உபசாரத்தை செய்யும்படி யமதேவரிடம் கூறுகிறார்கள்.

८. आशाप्रतीक्षे सङ्गतँसूनृतां च इष्टापूर्ते पुत्रपशूँश्च सर्वान्।
एतद् वृङ्क्ते पुरुषस्याल्पमेधसः यस्यानश्नन् वसति ब्राह्मणो गृहे।।

8. ஆசா$_1$ப்ரதீக்ஷே ஸங்க$_3$தம்ஸூந்ருதாம் ச
இஷ்டாபூர்தே புத்ரபசூ$_1$ம்ச்$_1$ச ஸர்வான் ।
ஏதத்$_3$வ்ருங்க்தே புருஷஸ்யால்பமேத$_4$ஸ:
யஸ்யானச்$_1$னன் வஸதி ப்$_3$ராஹ்மணோ க்$_3$ருஹே ।।

यस्य யஸ்ய எவருடைய **गृहे** க்$_3$ருஹே வீட்டில் **ब्राह्मणः** ப்$_3$ராஹ்மண: ஒரு ப்ராஹ்மணன் **अनश्नन्** அனச்$_1$னன் உணவு உட்கொள்ளாமல் **वसति** வஸதி வஸிக்கிறானோ **अल्पमेधसः** அல்பமேத$_4$ஸ: (அந்த) அறிவற்ற **पुरुषस्य** புருஷஸ்ய மனிதனுடைய **एतत् सर्वान्** ஏதத் ஸர்வான் அனைத்து **आशा-प्रतीक्षे** ஆசா$_1$-ப்ரதீக்ஷே விருப்பத்தையும் எதிர் பார்ப்பையும் **सङ्गतं** ஸங்க$_3$தம் ஸத்ஸங்கத்தினால் (வந்த புண்யத் தையும்) **सूनृतां च** ஸூந்ருதாம் ச நல்ல சொற்களால் (தேடிய புண்யத்தையும்) **इष्टा-पूर्ते** இஷ்டா-பூர்தே யாகத்தாலும் ஸேவையாலும் (அடைந்த புண்யத்தையும்) **पुत्र-पशून् च** புத்ர-பசூ$_1$ன் ச மக்கட் செல்வத்தையும் பசுக்களையும் **वृङ्क्ते** வ்ருங்க்தே (அந்த ப்ராஹ்மணன்) அழிக்கின்றான்.

எவருடைய வீட்டில் ஒரு ப்ராஹ்மணன் உணவு உட் கொள்ளாமல் வஸிக்கிறானோ, அந்த அறிவற்ற மனிதனுடைய அனைத்து விருப்பத்தையும் எதிர்பார்ப்பையும் ஸத்ஸங்கத் தினால் வந்த புண்யத்தையும் நல்ல சொற்களால் தேடிய புண்யத் தையும் யாகத்தாலும் ஸேவையாலும் அடைந்த புண்யத்தையும் மக்கட்செல்வத்தையும் பசுக்களையும் அந்த ப்ராஹ்மணன் அழிக்கின்றான்.

விருந்தோம்பலின் பெருமையை யமதேவரிடம் அங்குள்ளோர் கூறுகிறார்கள். விருந்தினரை சரியாக உபசரிக்கவில்லை என்றால் என்ன இழப்பு ஏற்படும் என்று இங்கு கூறப்படுகிறது. விருந்தி னராக வந்தவனே புண்யங்கள் அனைத்தையும் அழித்து விடுவான் என்பதுபோல் கூறப்பட்டுள்ளது.

९. **तिस्रो रात्रीर्यदवात्सीर्गृहे मे अनश्नन् ब्रह्मन्नतिथिर्नमस्यः ।**
नमस्तेऽस्तु ब्रह्मन् स्वस्ति मेऽस्तु तस्मात् प्रति त्रीन् वरान् वृणीष्व ॥

9. திஸ்ரோ ராத்ரீர்யத$_3$வாத்ஸீர்க்$_3$ருஹே மே
அனச்$_1$னன் ப்$_3$ரஹ்மந்நதிதி$_2$ர்நமஸ்ய: ।
நமஸ்தேऽஸ்து ப்$_3$ரஹ்மன் ஸ்வஸ்தி மேऽஸ்து
தஸ்மாத் ப்ரதி த்ரீன் வரான் வ்ருணீஷ்வ ॥

ब्रह्मन् ப்$_3$ரஹ்மன் ப்ராஹ்மணனே **नमस्यः** நமஸ்ய: போற்றத்தக்க **अतिथिः** அதிதி$_2$: விருந்தினராக **अनश्नन्** அனச்$_1$னன் உணவு உட்கொள்ளாமல் **मे** மே என்னுடைய **गृहे** க்$_3$ருஹே வீட்டில் **तिस्रः** திஸ்ர: மூன்று **रात्रीः** ராத்ரீ: இரவுகள் **यत् अवात्सीः** யத் அவாத்ஸீ: வஸித்த காரணத்திற்காக முதலில் **ते** தே உனக்கு **नमः** நம: (என்னுடைய) வணக்கம் **अस्तु** அஸ்து உரித்தாகுக. **ब्रह्मन्** ப்$_3$ரஹ்மன் ப்ராஹ்மணனே **मे** மே எனக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி மங்களம் **अस्तु** அஸ்து இருக்கட்டும். **तस्मात् प्रति** தஸ்மாத் ப்ரதி ஆகவே (உணவின்றி மூன்று இரவுகள் காத்திருந்ததற்காக) **त्रीन् वरान्** த்ரீன் வரான் மூன்று வரங்களை **वृणीष्व** வ்ருணீஷ்வ தேர்ந்தெடுப்பாயாக.

ப்ராஹ்மணனே, போற்றத்தக்க விருந்தினராக உணவு உட்கொள்ளாமல் என்னுடைய வீட்டில் மூன்று இரவுகள் வஸித்த காரணத்திற்காக முதலில் உனக்கு என்னுடைய வணக்கம் உரித்தாகுக. ப்ராஹ்மணனே, எனக்கு மங்களம் இருக்கட்டும். ஆகவே உணவின்றி மூன்று இரவுகள் காத்திருந்ததற்காக மூன்று வரங்களைத் தேர்ந்தெடுப்பாயாக.

१०. शान्तसङ्कल्पः सुमना यथा स्याद् वीतमन्युर्गौतमो माभि मृत्यो।
त्वत्प्रसृष्टं माभिवदेत् प्रतीतः एतत् त्रयाणां प्रथमं वरं वृणे॥

10. சா$_1$ந்தஸங்கல்ப: ஸுமனா யதா$_2$ ஸ்யாத்$_3$
வீதமன்யுர்கௌ$_3$தமோ மாபி$_4$ ம்ருத்யோ ।
த்வத்ப்ரஸ்ருஷ்டம் மாபி$_4$வதே$_3$த் ப்ரதீத:
ஏதத் த்ரயாணாம் ப்ரத$_2$மம் வரம் வ்ருணே ॥

मृत्यो ம்ருத்யோ யமதேவரே **गौतमः** கௌ$_3$தம: (என் தந்தை) கௌதமர் **शान्तसङ्कल्पः** சா$_1$ந்தஸங்கல்ப: கவலையற்ற மனதையுடையவராகவும் **वीतमन्युः** வீதமன்யு: கோபமற்றவராகவும் **मा अभि** மா அபி$_4$ என்னிடத்தில் **सुमनाः** ஸுமனா: அன்பான மனதை உடையவராகவும் **यथा** யதா$_2$ எவ்விதம் **स्याद्** ஸ்யாத்$_3$ ஆவாரோ (அவ்விதம் அருள்வீராக). **त्वत्प्रसृष्टं** த்வத்ப்ரஸ்ருஷ்டம் உங்களால் திருப்பி

அனுப்பப்படும் **मा** மா என்னை **प्रतीतः** ப்ரதீத: அடையாளம் கண்டு கொண்டவராக **अभिवदेत्** அபி$_4$வதே$_3$த் (என்னிடத்தில்) பேச வேண்டும். **एतत्** ஏதத் இதை **त्रयाणां** த்ரயாணாம் மூன்று (வரங்களுள்) **प्रथमं** ப்ரத$_2$மம் முதல் **वरं** வரம் வரமாக **वृणे** வ்ருணே தேர்ந்தெடுக்கிறேன்.

யமதேவரே, என் தந்தை கௌதமர் கவலையற்ற மனதையுடையவராகவும் கோபமற்றவராகவும் என்னிடத்தில் அன்பான மனதை உடையவராகவும் எவ்விதம் ஆவாரோ அவ்விதம் அருள்வீராக. உங்களால் திருப்பி அனுப்பப்படும் என்னை அடையாளம் கண்டுகொண்டவராக என்னிடத்தில் பேச வேண்டும். இதை மூன்று வரங்களுள் முதல் வரமாகத் தேர்ந்தெடுக்கிறேன்.

११. यथा पुरस्ताद् भविता प्रतीतः
औद्दालकिरारुणिर्मत्प्रसृष्टः ।
सुखँरात्रीः शयिता वीतमन्युः
त्वां ददृशिवान् मृत्युमुखात् प्रमुक्तम् ॥

11. யதா$_2$ புரஸ்தாத்$_3$ ப$_4$விதா ப்ரதீத:
ஔத்$_3$தா$_3$லகிராருணிர்மத்ப்ரஸ்ருஷ்ட: ।
ஸுக$_2$ம்ராத்ரீ: ச$_1$யிதா வீதமன்யு:
த்வாம் த$_3$த்$_3$ருசி$_1$வான் ம்ருத்யுமுகா$_2$த் ப்ரமுக்தம் ॥

आरुणिः ஆருணி: அருணருடைய புத்ரரான **औद्दालकिः** ஔத்$_3$தா$_3$லகி: (உன் தந்தை) ஔத்தாலகர் **मृत्युमुखात्** ம்ருத்யுமுகா$_2$த் மரணத்தின் வாயிலிருந்து **प्रमुक्तं** ப்ரமுக்தம் விடுபட்ட **त्वां** த்வாம் உன்னை **ददृशिवान्** த$_3$த்$_3$ருசி$_1$வான் பார்த்து **प्रतीतः** ப்ரதீத: அடையாளம் கண்டு கொண்டவராக **यथा** யதா$_2$ எப்படி **पुरस्ताद्** புரஸ்தாத்$_3$ (உன்னிடத்தில்) முன்பு இருந்தாரோ **भविता** ப$_4$விதா (அப்படியே) ஆவாராக. **मत्प्रसृष्टः** மத்ப்ரஸ்ருஷ்ட: என்னால் அனுக்ரஹிக்கப்பட்டவராக **वीतमन्युः** வீதமன்யு: கோபத்திலிருந்து விடுபட்டு **रात्रीः** ராத்ரீ: இரவுகளில் **सुखं** ஸுக$_2$ம் ஸுகமாக **शयिता** ச$_1$யிதா உறங்குவார்.

அருணருடைய புத்ரரான உன் தந்தை ஔத்தாலகர் மரணத்தின் வாயிலிருந்து விடுபட்ட உன்னைப் பார்த்து அடையாளம் கண்டு கொண்டவராக எப்படி உன்னிடத்தில் முன்பு இருந்தாரோ அப்படியே ஆவாராக. என்னால் அனுக்ரஹிக்கப்பட்டவராக, கோபத்திலிருந்து விடுபட்டு இரவுகளில் ஸுகமாக உறங்குவார்.

१२. स्वर्गे लोके न भयं किञ्चनास्ति न तत्र त्वं न जरया बिभेति।
उभे तीर्त्वाशनायापिपासे शोकातिगो मोदते स्वर्गलोके॥

12. ஸ்வர்கே$_3$ லோகே ந ப$_4$யம் கிஞ்சனாஸ்தி
ந தத்ர த்வம் ந ஜரயா பி$_3$பே$_4$தி ।
உபே$_4$ தீர்த்வாச$_1$னாயாபிபாஸே
சோ$_1$காதிகோ$_3$ மோத$_3$தே ஸ்வர்க$_3$லோகே ॥

स्वर्गे लोके ஸ்வர்கே$_3$ லோகே ஸ்வர்கலோகத்தில் **किञ्चन** கிஞ்சன சிறிதளவும் **भयं** ப$_4$யம் பயம் **न अस्ति** ந அஸ்தி இல்லை. **तत्र** தத்ர அங்கு **त्वं** த்வம் நீங்கள் **न** ந இல்லை. **जरया** ஜரயா வயோதிகத்தால் **न बिभेति** ந பி$_3$பே$_4$தி (ஒருவன்) பயப்படுவதில்லை. **अशनाया-पिपासे** அச$_1$னாயா-பிபாஸே பசி தாகம் **उभे** உபே$_4$ இரண்டையும் **तीर्त्वा** தீர்த்வா தாண்டி **शोकातिगः** சோ$_1$காதிக$_3$: சோகத்தைக் கடந்தவனாக **स्वर्गलोके** ஸ்வர்க$_3$லோகே ஸ்வர்க லோகத்தில் **मोदते** மோத$_3$தே (ஒருவன்) மகிழ்ந்திருக்கிறான்.

ஸ்வர்கலோகத்தில் சிறிதளவும் பயம் இல்லை. அங்கு நீங்கள் இல்லை. வயோதிகத்தால் ஒருவன் பயப்படுவதில்லை. பசி, தாகம் இரண்டையும் தாண்டி சோகத்தைக் கடந்தவனாக ஸ்வர்கலோகத்தில் ஒருவன் மகிழ்ந்திருக்கிறான்.

१३. स त्वमग्निँस्वर्ग्यमध्येषि मृत्यो प्रब्रूहि त्वँश्रद्दधानाय मह्यम्।
स्वर्गलोका अमृतत्वं भजन्ते एतद् द्वितीयेन वृणे वरेण॥

13. ஸ த்வமக்$_3$னிம்ஸ்வர்க்$_3$யமத்$_4$யேஷி ம்ருத்யோ
ப்ரப்$_3$ரூஹி த்வம்ச்$_1$ரத்$_3$த$_3$தா$_4$னாய மஹ்யம் ।
ஸ்வர்க$_3$லோகா அம்ருதத்வம் ப$_4$ஜந்தே
ஏதத்$_3$ த்$_3$விதீயேன வ்ருணே வரேண ।।

मृत्यो ம்ருத்யோ யமதேவரே **सः त्वं** ஸ: த்வம் நீங்கள் **स्वर्ग्यं** ஸ்வர்க்$_3$யம் ஸ்வர்கலோகத்திற்கு அழைத்துச்செல்லும் **अग्निं** அக்$_3$னிம் யாகத்தை **अध्येषि** அத்$_4$யேஷி அறிவீர்கள். **त्वं** த்வம் நீங்கள் **श्रद्दधानाय** ச்$_1$ரத்$_3$த$_3$தா$_4$னாய ச்ரத்தையுடைய **मह्यं** மஹ்யம் எனக்கு **प्रब्रूहि** ப்ரப்$_3$ரூஹி (அந்த யாகத்தை) கூறுவீர்களாக. **स्वर्गलोकाः** ஸ்வர்க$_3$ லோகா: ஸ்வர்கலோகத்தில் இருப்பவர்கள் **अमृतत्वं** அம்ருதத்வம் அதிக கால இருப்பை **भजन्ते** ப$_4$ஜந்தே அனுபவிக்கிறார்கள். **एतत्** ஏதத் இதை **द्वितीयेन** த்$_3$விதீயேன இரண்டாவது **वरेण** வரேண வரமாக **वृणे** வ்ருணே தேர்ந்தெடுக்கிறேன்.

யமதேவரே, நீங்கள் ஸ்வர்கலோகத்திற்கு அழைத்துச் செல்லும் யாகத்தை அறிவீர்கள். நீங்கள், ச்ரத்தையுடைய எனக்கு அந்த யாகத்தைக் கூறுவீர்களாக. ஸ்வர்கலோகத்தில் இருப்பவர்கள் அதிக கால இருப்பை அனுபவிக்கிறார்கள். இதை இரண்டாவது வரமாகத் தேர்ந்தெடுக்கிறேன்.

१४. प्र ते ब्रवीमि तदु मे निबोध स्वर्ग्यमग्निं नचिकेतः प्रजानन्।
अनन्तलोकाप्तिमथो प्रतिष्ठां विद्धि त्वमेतं निहितं गुहायाम्।।

14. ப்ர தே ப்$_3$ரவீமி தது$_3$ மே நிபோ$_3$த$_4$
ஸ்வர்க்$_3$யமக்$_3$னிம் நசிகேத: ப்ரஜானன் ।
அனந்தலோகாப்திமதோ$_2$ ப்ரதிஷ்டா$_2$ம்
வித்$_3$தி$_4$ த்வமேதம் நிஹிதம் கு$_3$ஹாயாம் ।।

नचिकेतः நசிகேத: நசிகேதனே **स्वर्ग्यं** ஸ்வர்க்$_3$யம் ஸ்வர்கத்திற்கான ஸாதனையான **अग्निं** அக்$_3$னிம் யாகத்தை **प्रजानन्** ப்ரஜானன் ஞாபகப் படுத்திக்கொண்டு **ते** தே உனக்கு **प्र** ப்ர தெளிவாக **ब्रवीमि** ப்$_3$ரவீமி

கூறுகிறேன். **तत् उ** தத் உ அதை **मे** மே என்னிடமிருந்து **निबोध** நிபோ$_3$த$_4$ கவனமாகக்கேள். **एतं** ஏதம் இதை (இந்த யாகத்தை) **अनन्त-लोक-आप्तिं** அனந்த-லோக-ஆப்திம் எண்ணற்ற உலகங்களை அடைவதற்கான ஸாதனையாகவும் **प्रतिष्ठां** ப்ரதிஷ்டா$_2$ம் (உலகத்திற்கு) ஆதாரமானதாகவும் **अथो** அதோ$_2$ மேலும் **गुहायां** கு$_3$ஹாயாம் (உபாஸகர்களின்) மனதில் **निहितं** நிஹிதம் இருப்பதாகவும் **त्वं** த்வம் நீ **विद्धि** வித்$_3$தி$_4$ அறிவாயாக.

நசிகேதனே, ஸ்வர்கத்திற்கான ஸாதனையான யாகத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு உனக்குத் தெளிவாகக் கூறுகிறேன். அதை என்னிடமிருந்து கவனமாகக் கேள். இந்த யாகத்தை, எண்ணற்ற உலகங்களை அடைவதற்கான ஸாதனையாகவும் உலகத்திற்கு ஆதாரமானதாகவும் மேலும் உபாஸகர்களின் மனதில் இருப்பதாகவும் நீ அறிவாயாக.

१५. लोकादिमग्निं तमुवाच तस्मै या इष्टका यावतीर्वा यथा वा।
स चापि तत्प्रत्यवदद्यथोक्तम् अथास्य मृत्युः पुनरेवाह तुष्टः ॥

15. லோகாதி$_3$மக்$_3$னிம் தமுவாச தஸ்மை
யா இஷ்டகா யாவதீர்வா யதா$_2$ வா ।
ஸ சாபி தத்ப்ரத்யவத$_3$த்$_3$யதோ$_2$க்தம்
அதா$_2$ஸ்ய ம்ருத்யு: புனரேவாஹ துஷ்ட: ॥

लोकादिं லோகாதி$_3$ம் முதலில் தோன்றிய **तं अग्निं** தம் அக்$_3$னிம் அந்த யாகத்தை **तस्मै** தஸ்மை அவனுக்கு **उवाच** உவாச உபதேசித்தார். **याः इष्टकाः** யா: இஷ்டகா: எப்படிப்பட்ட செங்கற்கள் **यावतीः वा** யாவதீ: வா எவ்வளவு **यथा वा** யதா$_2$ வா எவ்விதத்தில் அமைக்க வேண்டும் (என்பதையும் உபதேசித்தார்). **सः अपि च** ஸ: அபி ச அவனும் **यथा** யதா$_2$ எப்படி (யமதேவரால்) **उक्तं** உக்தம் உபதேசிக்கப்பட்டதோ **तत्** தத் அதை (அப்படியே) **प्रत्यवदत्** ப்ரத்யவத$_3$த் திருப்பிக்கூறினான். **अथ** அத$_2$ ஆகவே **अस्य** அஸ்ய அவனிடத்தில் **तुष्टः** துஷ்ட:

மகிழ்ச்சிகொண்ட **मृत्युः** ம்ருத்யு: யமதேவர் **पुनः एव** புன: ஏவ மீண்டும் **आह** ஆஹ கூறினார்.

முதலில் தோன்றிய அந்த யாகத்தை அவனுக்கு உபதேசித்தார். எப்படிப்பட்ட செங்கற்கள், எவ்வளவு, எவ் விதத்தில் அமைக்க வேண்டும் என்பதையும் உபதேசித்தார். அவனும் எப்படி யமதேவரால் உபதேசிக்கப்பட்டதோ, அதை அப்படியே திருப்பிக் கூறினான். ஆகவே அவனிடத்தில் மகிழ்ச்சி கொண்ட யமதேவர் மீண்டும் கூறினார்.

१६. तमब्रवीत् प्रीयमाणो महात्मा वरं तवेहाद्य ददामि भूयः ।
तवैव नाम्ना भवितायमग्निः सृङ्कां चेमामनेकरूपां गृहाण ॥

16. தமப்$_3$ரவீத் ப்ரீயமாணோ மஹாத்மா
வரம் தவேஹாத்$_3$ய த$_3$தா$_3$மி பூ$_4$ய: ।
தவைவ நாம்நா ப$_4$விதாயமக்$_3$னி:
ஸ்ருங்காம் சேமாமனேகரூபாம் க்$_3$ருஹாண ॥

प्रीयमाणः ப்ரீயமாண: மகிழ்வடைந்த **महात्मा** மஹாத்மா பரந்தமனம் கொண்ட (யமதேவர்) **तं** தம் அவனிடத்தில் **अब्रवीत्** அப்$_3$ரவீத் கூறினார். **तव** தவ உனக்கு **अद्य** அத்$_3$ய இப்பொழுதே **इह** இஹ இங்கு **भूयः** பூ$_4$ய: மீண்டும் **वरं** வரம் ஒரு வரத்தை **ददामि** த$_3$தா$_3$மி கொடுக்கிறேன். **तव** தவ உன்னுடைய **नाम्ना एव** நாம்நா ஏவ பெயரிலேயே **अयं अग्निः** அயம் அக்$_3$னி: இந்த யாகமானது **भविता** ப$_4$விதா விளங்கட்டும். **अनेकरूपां** அனேகரூபாம் விதவிதமான வர்ணங்களைக் கொண்ட **इमां** இமாம் இந்த **सृङ्कां च** ஸ்ருங்காம் ச நகையையும் **गृहाण** க்$_3$ருஹாண பெற்றுக்கொள்வாயாக.

மகிழ்வடைந்த, பரந்தமனம் கொண்ட யமதேவர் அவனிடத்தில் கூறினார்: உனக்கு இப்பொழுதே இங்கு மீண்டும் ஒரு வரத்தைக் கொடுக்கிறேன். உன்னுடைய பெயரிலேயே இந்த யாகமானது விளங்கட்டும். விதவிதமான வர்ணங்களைக் கொண்ட இந்த நகையையும் பெற்றுக் கொள்வாயாக.

१७. त्रिणाचिकेतस्त्रिभिरेत्य सन्धिं त्रिकर्मकृत्तरति जन्ममृत्यू ।
ब्रह्मजज्ञं देवमीड्यं विदित्वा निचाय्येमाँ शान्तिमत्यन्तमेति ॥

17. த்ரிணாசிகேதஸ்த்ரிபி$_4$ரேத்ய ஸந்தி$_4$ம்
த்ரிகர்மக்ருத்தரதி ஜன்மம்ருத்யூ ।
ப்$_3$ரஹ்மஜஜ்ஞம் தே$_3$வமீட்$_3$யம் விதி$_3$த்வா
நிசாய்யேமாம் சா$_1$ந்திமத்யந்தமேதி ॥

त्रिणाचिकेत: த்ரிணாசிகேத: நாசிகேதம் என்ற யாகத்தை மூன்று முறை செய்தவன் **त्रिभि:** த்ரிபி$_4$: மூவரிடம் **सन्धिं** ஸந்தி$_4$ம் இணக்கத்தை **एत्य** ஏத்ய வைத்தவன் **त्रिकर्मकृत्** த்ரிகர்மக்ருத் மூன்று (அடிப்படை) கர்மங்களை செய்தவன் **जन्ममृत्यू** ஜன்மம்ருத்யூ பிறப்பையும் இறப்பையும் **तरति** தரதி கடக்கிறான். **ब्रह्मजज्ञं** ப்$_3$ரஹ்மஜஜ்ஞம் ஹிரண்யகர்பரிடமிருந்து தோன்றியவரான **ईड्यं** ஈட்$_3$யம் வணங்கத் தக்க **देवं** தே$_3$வம் தேவரை (விராட்டை) **विदित्वा** விதி$_3$த்வா அறிந்து **निचाय्य** நிசாய்ய (பின்) த்யானித்து **इमां** இமாம் இந்த **अत्यन्तं** அத்யந்தம் மேலான **शान्तिं** சா$_1$ந்திம் அமைதியை **एति** ஏதி (ஒருவன்) அடைகிறான்.

நாசிகேதம் என்ற யாகத்தை மூன்றுமுறை செய்தவன், மூவரிடம் இணக்கத்தை வைத்தவன், மூன்று அடிப்படைக் கர்மங்களைச் செய்தவன் பிறப்பையும் இறப்பையும் கடக்கிறான். ஹிரண்யகர்பரிடமிருந்து தோன்றியவரான, வணங்கத்தக்க தேவரான விராட்டை அறிந்து, பின் த்யானித்து இந்த மேலான அமைதியை ஒருவன் அடைகிறான்.

மேலான லோகத்தை அடைய நிபந்தனைகள் கூறப்படுகின்றன. இங்கு புகட்டப்பட்ட யாகத்தை மும்முறை செய்து, தாய், தந்தை, ஆசிரியர் ஆகிய மூவரிடம் இணக்கத்தை வைத்து, அடைய வேண்டிய பக்குவத்தை அடைந்து யாகம், வேத அத்யயனம், தானம் ஆகிய மூன்று அடிப்படைக் கர்மங்களைச் செய்தவன் நற்கதியை அடைகிறான்.

१८. त्रिणाचिकेतस्त्रयमेतद्विदित्वा य एवं विद्वाँश्चिनुते नाचिकेतम् ।
स मृत्युपाशान् पुरतः प्रणोद्य शोकातिगो मोदते स्वर्गलोके ।।

18. த்ரிணாசிகேதஸ்த்ரயமேதத்$_3$விதி$_3$த்வா
ய ஏவம் வித்$_3$வாம்ச்$_1$சினுதே நாசிகேதம் ।
ஸ ம்ருத்யுபாசா$_1$ந் புரத: ப்ரணோத்$_3$ய
சோ$_1$காதிகோ$_3$ மோத$_3$தே ஸ்வர்க$_3$லோகே ।।

त्रयम् एतत् த்ரயம் ஏதத் இம்மூன்றையும் **विदित्वा** விதி$_3$த்வா அறிந்து **एवं** ஏவம் அதன்படி **त्रिणाचिकेतः** த்ரிணாசிகேத: நாசிகேதம் என்ற யாகத்தை மூன்றுமுறை செய்த **यः** ய: யார் **नाचिकेतं** நாசிகேதம் நாசிகேதயாகத்தை **चिनुते** சினுதே அனுஷ்டிப்பதுடன் **विद्वान्** வித்$_3$வான் த்யானிக்கிறானோ **सः** ஸ: அவன் **पुरतः** புரத: முதலில் **मृत्युपाशात्** ம்ருத்யுபாசா$_1$த் மரணத்தின் பிடியிலிருந்து **प्रणोद्य** ப்ரணோத்$_3$ய நீங்கி **शोकातिगः** சோ$_1$காதிக$_3$: சோகத்தைக் கடந்தவனாக **स्वर्गलोके** ஸ்வர்க$_3$லோகே ப்ரஹ்மலோகத்தில் **मोदते** மோத$_3$தே மகிழ்ந்திருக்கிறான்.

இம்மூன்றையும் அறிந்து, அதன்படி நாசிகேதம் என்ற யாகத்தை மூன்றுமுறை செய்த யார் நாசிகேதயாகத்தை அனுஷ்டிப்பதுடன் த்யானிக்கிறானோ அவன் முதலில் மரணத்தின் பிடியிலிருந்து நீங்கி சோகத்தைக் கடந்தவனாக ப்ரஹ்மலோகத்தில் மகிழ்ந்திருக்கிறான்.

இம்மூன்றையும் அறிந்து என்பது முன் கூறிய 1. எப்படிப்பட்ட செங்கற்கள் 2. எவ்வளவு 3. எவ்விதம் அமைக்கவேண்டும் என்பவை. இந்த யாகத்தை செய்வதன் பலன் ஸ்வர்கலோகம். த்யானிப்பதன் பலன் ஸ்வர்கத்தைக் காட்டிலும் மேலான ப்ரஹ்ம லோகம். இங்கு ஸ்வர்கலோகம் என்று குறிப்பிட்டது ப்ரஹ்ம லோகத்தைக் குறிக்கிறது.

१९. एष तेऽग्निर्नचिकेतः स्वर्ग्यः यमवृणीथा द्वितीयेन वरेण ।
एतमग्निं तवैव प्रवक्ष्यन्ति जनासः तृतीयं वरं नचिकेतो वृणीष्व ।।

19. ஏஷ தேऽக்₃னிர்நசிகேத: ஸ்வர்க்₃ய:
யமவ்ருணீதா₂ த்₃விதீயேன வரேண ।
ஏதமக்₃னிம் தவைவ ப்ரவக்ஷ்யந்தி ஜனாஸ:
த்ருதீயம் வரம் நசிகேதோ வ்ருணீஷ்வ ॥

नचिकेत: நசிகேத: நசிகேதனே **यं** யம் எதை **द्वितीयेन वरेण** த்₃விதீயேன வரேண இரண்டாவது வரத்தால் **अवृणीथा:** அவ்ருணீதா₂: தேர்ந்தெடுத்தாயோ **एष: स्वर्ग्य:** ஏஷ: ஸ்வர்க்₃ய: அந்த ஸ்வர்கத்திற்கு ஸாதனமான **अग्नि:** அக்₃னி: யாகம் **ते** தே உனக்கு (சொல்லப்பட்டது). **जनास:** ஜனாஸ: மனிதர்கள் **एतं अग्निं** ஏதம் அக்₃னிம் இந்த யாகத்தை **तव एव** தவ ஏவ உன்னுடையதாகவே **प्रवक्ष्यन्ति** ப்ரவக்ஷ்யந்தி கூறுவார்கள். **नचिकेत:** நசிகேத: நசிகேதனே **तृतीयं वरं** த்ருதீயம் வரம் மூன்றாவது வரத்தை **वृणीष्व** வ்ருணீஷ்வ தேர்ந்தெடுப்பாயாக.

நசிகேதனே, எதை இரண்டாவது வரத்தால் தேர்ந்தெடுத்தாயோ, அந்த ஸ்வர்கத்திற்கு ஸாதனமான யாகம் உனக்கு சொல்லப்பட்டது. மனிதர்கள் இந்த யாகத்தை உன்னுடையதாகவே கூறுவார்கள். நசிகேதனே, மூன்றாவது வரத்தைத் தேர்ந்தெடுப்பாயாக.

२०. येयं प्रेते विचिकित्सा मनुष्ये अस्तीत्येके नायमस्तीति चैके ।
एतद्विद्यामनुशिष्टस्त्वयाहं वराणामेष वरस्तृतीय: ॥

20. யேயம் ப்ரேதே விசிகித்ஸா மனுஷ்யே
அஸ்தீத்யேகே நாயமஸ்தீதி சைகே ।
ஏதத்₃வித்₃யாமனுசி₁ஷ்டஸ்த்வயாஹம்
வராணாமேஷ வரஸ்த்ருதீய: ॥

प्रेते ப்ரேதே இறந்த **मनुष्ये** மனுஷ்யே மனிதனைப் பற்றி **एके** ஏகே ஒரு சிலர் **अस्ति इति** அஸ்தி இதி (அவன் இறந்ததற்குப் பின்) இருக்கிறான் என்றும் **एके च** ஏகே ச ஒரு சிலர் **अयं** அயம் அவன் **न अस्ति** ந அஸ்தி (இறந்ததற்குப் பின்) இல்லை **इति** இதி என்றும் **या इयं**

யா இயம் இப்படி ஒரு **विचिकित्सा** விசிகித்ஸா ஸந்தேஹம் (இருக்கிறது). **त्वया** த்வயா உங்களால் **अनुशिष्टः** அநுசி₁ஷ்ட: உபதேசிக்கப் பட்டவனாக **अहं** அஹம் நான் **एतत्** ஏதத் இதை **विद्यां** வித்₃யாம் அறிவேனாக. **वराणां** வராணாம் வரங்களுக்குள் **एषः** ஏஷ: இது **तृतीयः वरः** த்ருதீய: வர: மூன்றாவது வரமாகும்.

இறந்த மனிதனைப் பற்றி ஒரு சிலர், அவன் இறந்ததற்குப் பின் இருக்கிறான் என்றும், ஒரு சிலர் அவன் இறந்ததற்குப் பின் இல்லையென்றும் -- இப்படி ஒரு ஸந்தேஹம் இருக்கிறது. உங்களால் உபதேசிக்கப்பட்டவனாக நான் இதை அறிவேனாக. வரங்களுக்குள் இது மூன்றாவது வரமாகும்.

२१. देवैरत्रापि विचिकित्सितं पुरा न हि सुविज्ञेयमणुरेष धर्मः।
अन्यं वरं नचिकेतो वृणीष्व मा मोपरोत्सीरति मा सृजैनम्॥

21. தே₃வைரத்ராபி விசிகித்ஸிதம் புரா
ந ஹி ஸுவிஜ்ஞேயமணுரேஷ த₄ர்ம: ।
அன்யம் வரம் நசிகேதோ வ்ருணீஷ்வ
மா மோபரோத்ஸீரதி மா ஸ்ருஜைனம் ॥

अत्र அத்ர இவ்விஷயமானது **पुरा** புரா முன்பு **देवैः अपि** தே₃வை: அபி தேவர்களாலும் **विचिकित्सितं** விசிகித்ஸிதம் ஸந்தேஹிக்கப்பட்டது. **एषः धर्मः** ஏஷ: த₄ர்ம: இந்தத் தத்துவம் **अणुः** அணு: ஸூக்ஷ்மமானது. **सुविज्ञेयं** ஸுவிஜ்ஞேயம் ஸுலபமாக அறியக்கூடியது **न हि** ந ஹி அல்ல. **नचिकेतः** நசிகேத: நசிகேதனே **अन्यं वरं** அன்யம் வரம் வேறு வரத்தை **वृणीष्व** வ்ருணீஷ்வ தேர்ந்தெடுப்பாயாக. **मा** மா என்னை **मा उपरोत्सीः** மா உபரோத்ஸீ: வற்புறுத்தாதே. **मा** மா என்னிடம் **एनं** ஏனம் இதை (கேட்பதை) **अतिसृज** அதிஸ்ருஜ விட்டுவிடு.

இவ்விஷயமானது முன்பு தேவர்களாலும் ஸந்தேஹிக்கப் பட்டது. இந்தத் தத்துவம் ஸூக்ஷ்மமானது. ஸுலபமாக அறியக் கூடியது அல்ல. நசிகேதனே, வேறு வரத்தைத் தேர்ந்தெடுப் பாயாக. என்னை வற்புறுத்தாதே. என்னிடம் இதைக் கேட்பதை விட்டுவிடு.

२२. देवैरत्रापि विचिकित्सितं किल त्वं च मृत्यो यन्न सुविज्ञेयमात्थ।
वक्ता चास्य त्वादृगन्यो न लभ्यः नान्यो वरस्तुल्य एतस्य कश्चित्॥

22. தே$_3$வைரத்ராபி விசிகித்ஸிதம் கில
த்வம் ச ம்ருத்யோ யந்ந ஸுவிஜ்ஞேயமாத்த$_2$ ।
வக்தா சாஸ்ய த்வாத்$_3$ருக$_3$ன்யோ ந லப்$_4$ய:
நான்யோ வரஸ்துல்ய ஏதஸ்ய கச்$_1$சித் ॥

मृत्यो ம்ருத்யோ யமதேவரே **अत्र** அத்ர இவ்விஷயமானது **देवैः अपि** தே$_3$வை: அபி தேவர்களாலும் **विचिकित्सितं किल** விசிகித்ஸிதம் கில ஸந்தேஹிக்கப்பட்டதன்றோ **त्वं च** த்வம் ச நீங்களும் **यत्** யத் இதை **न सुविज्ञेयं** ந ஸுவிஜ்ஞேயம் புரிந்து கொள்வது கடினம் (என்று) **आत्थ** ஆத்த$_2$ கூறுகிறீர்கள். **अस्य च** அஸ்ய ச இந்தத் தத்துவத்தை **वक्ता** வக்தா உபதேசிப்பவர் **त्वादृक्** த்வாத்$_3$ருக் உங்களுக்கு நிகரான **अन्यः** அன்ய: வேறு ஒருவர் **न लभ्यः** ந லப்$_4$ய: கிடைக்கமாட்டார். **एतस्य** ஏதஸ்ய இதற்கு **तुल्यः** துல்ய: நிகரான **वरः** வர: வரம் **अन्यः** அன்ய: வேறு **कश्चित्** கச்$_1$சித் ஒன்றும் **न** ந இல்லை.

யமதேவரே, இவ்விஷயமானது தேவர்களாலும் ஸந்தேஹிக்கப் பட்டதன்றோ! நீங்களும் இதைப் புரிந்துகொள்வது கடினம் என்று கூறுகிறீர்கள். இந்தத் தத்துவத்தை உபதேசிப்பவர் உங்களுக்கு நிகரான வேறு ஒருவர் கிடைக்க மாட்டார். இதற்கு நிகரான வரம் வேறு ஒன்றும் இல்லை.

२३. शतायुषः पुत्रपौत्रान् वृणीष्व बहून् पशून् हस्तिहिरण्यमश्वान्।
भूमेर्महदायतनं वृणीष्व स्वयं च जीव शरदो यावदिच्छसि॥

23. ச$_1$தாயுஷ: புத்ரபௌத்ரான் வ்ருணீஷ்வ
ப$_3$ஹூன் பசூ$_1$ன் ஹஸ்திஹிரண்யமச்$_1$வான் ।
பூ$_4$மேர்மஹதா$_3$யதனம் வ்ருணீஷ்வ
ஸ்வயம் ச ஜீவ ச$_1$ரதோ$_3$ யாவதி$_3$ச்ச$_2$ஸி ॥

शतायुषः ச$_1$தாயுஷ: நூறுவருட ஆயுளுடன் கூடிய **पुत्र-पौत्रान्** புத்ர-பௌத்ரான் மகன்களை பேரன்களை **बहून् पशून्** ப$_3$ஹூன் பசூ$_1$ன் அதிகமான பசுக்களை **हस्ति-हिरण्यं** ஹஸ்தி-ஹிரண்யம் யானைகளை தங்கத்தை **अश्वान्** அச்$_1$வான் குதிரைகளை **वृणीष्व** வ்ருணீஷ்வ தேர்ந்தெடுப்பாயாக. **भूमेः** பூ$_4$மே: பூமியில் **महत्** மஹத் பரந்த **आयतनं** ஆயதனம் ராஜ்யத்தை **वृणीष्व** வ்ருணீஷ்வ தேர்ந்தெடுப்பாயாக. **यावत्** யாவத் எவ்வளவு **शरदः** ச$_1$ரத$_3$: வருடங்கள் **इच्छसि** இச்ச$_2$ஸி (வாழ்வதற்கு) விரும்புகிறாயோ (அவ்வளவு வருடங்கள்) **स्वयं च** ஸ்வயம் ச நீயும் **जीव** ஜீவ வாழ்வாயாக.

நூறுவருட ஆயுளுடன் கூடிய மகன்களை, பேரன்களை, அதிகமான பசுக்களை, யானைகளை, தங்கத்தை, குதிரைகளைத் தேர்ந்தெடுப்பாயாக. பூமியில் பரந்த ராஜ்யத்தைத் தேர்ந்தெடுப்பாயாக. எவ்வளவு வருடங்கள் வாழ்வதற்கு விரும்புகிறாயோ அவ்வளவு வருடங்கள் நீயும் வாழ்வாயாக.

२४. एतत्तुल्यं यदि मन्यसे वरं वृणीष्व वित्तं चिरजीविकां च ।
महाभूमौ नचिकेतस्त्वमेधि कामानां त्वा कामभाजं करोमि ॥

24. ஏதத்துல்யம் யதி$_3$ மன்யஸே வரம்
வ்ருணீஷ்வ வித்தம் சிரஜீவிகாம் ச ।
மஹாபூ$_4$மௌ நசிகேதஸ்த்வமேதி$_4$
காமானாம் த்வா காமபா$_4$ஜம் கரோமி ॥

एतत्-तुल्यं ஏதத்-துல்யம் இதற்கு நிகரான (வேறொரு) **वरं** வரம் வரத்தை **यदि मन्यसे** யதி$_3$ மன்யஸே (நீ) கருதினால் (அதையும்) **वृणीष्व** வ்ருணீஷ்வ தேர்ந்தெடுப்பாயாக. **वित्तं** வித்தம் பொருளையும் **चिरजीविकां च** சிரஜீவிகாம் ச நீண்டகால வாழ்க்கையையும் (தேர்ந்தெடுப்பாயாக). **नचिकेतः** நசிகேத: நசிகேதனே **महाभूमौ** மஹாபூ$_4$மௌ பரந்த பூமியில் **त्वं** த்வம் நீ **एधि** ஏதி$_4$ (பேரரசனாக) இருப்பாயாக. **कामानां** காமானாம் அனைத்து போகங்களையும் **कामभाजं** காமபா$_4$ஜம் அனுபவிப்பவனாக **त्वा** த்வா உன்னை **करोमि** கரோமி ஆக்குகிறேன்.

இதற்கு நிகரான வேறொரு வரத்தை நீ கருதினால் அதையும் தேர்ந்தெடுப்பாயாக. பொருளையும் நீண்டகால வாழ்க்கையையும் தேர்ந்தெடுப்பாயாக. நசிகேதனே, பரந்த பூமியில் நீ பேரரசனாக இருப்பாயாக. அனைத்து போகங்களையும் அனுபவிப்பவனாக உன்னை ஆக்குகிறேன்.

२५. ये ये कामा दुर्लभा मर्त्यलोके सर्वान् कामाँश्छन्दतः प्रार्थयस्व ।
इमा रामाः सरथाः सतूर्याः न हीदृशा लम्भनीया मनुष्यैः ।
आभिर्मत्प्रत्ताभिः परिचारयस्व नचिकेतो मरणं मानुप्राक्षीः ॥

25. யே யே காமா து$_3$ர்லபா$_4$ மர்த்யலோகே
ஸர்வான் காமாம் ச்$_1$ச$_2$ந்த$_3$த: ப்ரார்த$_2$யஸ்வ ।
இமா ராமா: ஸரதா$_2$: ஸதூர்யா:
ந ஹீத்$_3$ருசா$_1$ லம்ப$_4$னீயா மனுஷ்யை: ।
ஆபி$_4$ர்மத்ப்ரத்தாபி$_4$: பரிசாரயஸ்வ
நசிகேதோ மரணம் மானுப்ராக்ஷீ: ॥

मर्त्यलोके மர்த்யலோகே மானிட உலகில் **ये ये** யே யே எந்தெந்த **दुर्लभाः** து$_3$ர்லபா$_4$: அரிதான **कामाः** காமா: போகங்கள் (உள்ளனவோ) **सर्वान् कामान्** ஸர்வான் காமான் அவ்வனைத்து போகங்களையும் **छन्दतः** ச$_2$ந்த$_3$த: விருப்பப்படி **प्रार्थयस्व** ப்ரார்த$_2$யஸ்வ கேட்பாயாக. **सरथाः** ஸரதா$_2$: ரதத்துடனும் **सतूर्याः** ஸதூர்யா: இசைக்கருவிகளுடனும் கூடிய **इमाः** இமா: இந்த **रामाः** ராமா: பெண்கள் (இருக்கிறார்கள்). **ईदृशाः** ஈத்$_3$ருசா$_1$: இப்படிப்பட்டவர்கள் **मनुष्यैः** மனுஷ்யை: மனிதர்களால் **न हि लम्भनीयाः** ந ஹி லம்ப$_4$னீயா: அடையப்பட முடியாதவர்கள். **मत्प्रत्ताभिः** மத்ப்ரத்தாபி$_4$: என்னால் கொடுக்கப்பட்ட **आभिः** ஆபி$_4$: இப்பெண்களின் மூலம் **परिचारयस्व** பரிசாரயஸ்வ (உனக்கு) பணிவிடைகளைச் செய்துகொள். **नचिकेतः** நசிகேத: நசிகேதனே **मरणं** மரணம் மரணத்தைப் பற்றிய **मा अनुप्राक्षीः** மா அனுப்ராக்ஷீ: கேள்வியைக் கேட்காதே.

மானிட உலகில் எந்தெந்த அரிதான போகங்கள் உள்ளனவோ அவ்வனைத்து போகங்களையும் விருப்பப்படி கேட்பாயாக. ரதத்துடனும் இசைக்கருவிகளுடனும் கூடிய இந்தப் பெண்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மனிதர்களால் அடையப்பட முடியாதவர்கள். என்னால் கொடுக்கப்பட்ட இப் பெண்களின் மூலம் உனக்கு பணிவிடைகளைச் செய்துகொள். நசிகேதனே, மரணத்தைப் பற்றிய கேள்வியைக் கேட்காதே.

२६. श्वोभावा मर्त्यस्य यदन्तकैतत् सर्वेन्द्रियाणां जरयन्ति तेजः ।
अपि सर्वं जीवितमल्पमेव तवैव वाहास्तव नृत्यगीते ॥

26. ச்$_1$வோபா$_4$வா மர்த்யஸ்ய யத$_3$ந்தகைதத்
ஸர்வேந்த்$_3$ரியாணாம் ஜரயந்தி தேஜ: ।
அபி ஸர்வம் ஜீவிதமல்பமேவ
தவைவ வாஹாஸ்தவ ந்ருத்யகீ$_3$தே ॥

मर्त्यस्य மர்த்யஸ்ய மனிதர்களை **अन्तक** அந்தக அழிக்கின்றவரே **सर्वेन्द्रियाणां** ஸர்வேந்த்$_3$ரியாணாம் எல்லா இந்த்ரியங்களிலும் **यत् तेजः** யத் தேஜ: எந்த சக்தி உண்டோ **एतत्** ஏதத் அதை **श्वोभावाः** ச்$_1$வோபா$_4$வா: இந்த நிலையற்ற பொருள்கள் **जरयन्ति** ஜரயந்தி பலஹீனப்படுத்தும். **सर्वं अपि** ஸர்வம் அபி அனைத்துவிதமான **जीवितं** ஜீவிதம் வாழ்வும் **अल्पं एव** அல்பம் ஏவ வரையறைக்கு உட்பட்டதே. **तव** தவ உங்களுடைய **वाहाः** வாஹா: வாஹனங்களும் **नृत्य-गीते** ந்ருத்ய-கீ$_3$தே ஆடலும் பாடலும் **तव एव** தவ ஏவ உங்களிடமே (இருக்கட்டும்).

மனிதர்களை அழிக்கின்றவரே, எல்லா இந்த்ரியங்களிலும் எந்த சக்தி உண்டோ அதை இந்த நிலையற்ற பொருள்கள் பலஹீனப்படுத்தும். அனைத்துவிதமான வாழ்வும் வரை யறைக்கு உட்பட்டதே. உங்களுடைய வாஹனங்களும் ஆடலும் பாடலும் உங்களிடமே இருக்கட்டும்.

२७. न वित्तेन तर्पणीयो मनुष्यः लप्स्यामहे वित्तमद्राक्ष्म चेत्त्वा ।
जीविष्यामो यावदीशिष्यसि त्वं वरस्तु मे वरणीयः स एव ।।

27. ந வித்தேன தர்பணீயோ மனுஷ்ய:
லப்ஸ்யாமஹே வித்தமத்$_3$ராக்ஷ்ம சேத்த்வா ।
ஜீவிஷ்யாமோ யாவதீ$_3$சி$_1$ஷ்யஸி த்வம்
வரஸ்து மே வரணீய: ஸ ஏவ ।।

मनुष्यः மனுஷ்ய: மனிதன் **वित्तेन** வித்தேன பொருளினால் **न तर्पणीयः** ந தர்பணீய: மகிழ்விக்கப்படமாட்டான். **त्वा** த்வா உங்களை **अद्राक्ष्म चेत्** அத்$_3$ராக்ஷ்ம சேத் பார்த்ததனாலேயே **वित्तं** வித்தம் பொருளை **लप्स्यामहे** லப்ஸ்யாமஹே அடைவோம். **यावत्** யாவத் எவ்வளவு காலம் **त्वं** த்வம் நீங்கள் **ईशिष्यसि** ஈசி$_1$ஷ்யஸி ஆட்சி செய்கிறீர்களோ (அவ்வளவு காலம் வரைதான்) **जीविष्यामः** ஜீவிஷ்யாம: வாழ்வோம். **मे** மே என்னால் **वरणीयः** வரணீய: தேர்ந்தெடுக்கத்தக்க **वरः तु** வர: து வரமோ **सः एव** ஸ: ஏவ அதுதான்.

மனிதன் பொருளினால் மகிழ்விக்கப்படமாட்டான். உங்களைப் பார்த்ததனாலேயே பொருளை அடைவோம். எவ்வளவு காலம் நீங்கள் ஆட்சி செய்கிறீர்களோ, அவ்வளவு காலம் வரைதான் வாழ்வோம். என்னால் தேர்ந்தெடுக்கத்தக்க வரமோ அதுதான்.

२८. अजीर्यताममृतानामुपेत्य जीर्यन् मर्त्यः क्वधःस्थः प्रजानन् ।
अभिध्यायन् वर्णरतिप्रमोदान् अतिदीर्घे जीविते को रमेत ।।

28. அஜீர்யதாமம்ருதானாமுபேத்ய
ஜீர்யன் மர்த்ய: க்வத$_4$:ஸ்த$_2$: ப்ரஜானன் ।
அபி$_4$த்$_4$யாயன் வர்ணரதிப்ரமோதா$_3$ன்
அதிதீ$_3$ர்கே$_4$ ஜீவிதே கோ ரமேத ।।

अजीर्यतां அஜீர்யதாம் தேய்வற்றவர்களான **अमृतानां** அம்ருதானாம் மரணமற்றவர்களான (உங்களைப் போன்றவர்களை) **उपेत्य** உபேத்ய

அடைந்த **कु-अधः-स्थः** கு-அத₄:-ஸ்த₂: கீழான பூமியில் வாழ்கின்ற ஒருவன் **जीर्यन्** ஜீர்யன் (தன்னை) தேய்ந்து **मर्त्यः** மர்த்ய: மடிபவனாக **प्रजानन्** ப்ரஜானன் அறிந்துகொண்டு **वर्ण-रति-प्रमोदान्** வர்ண-ரதி-ப்ரமோதா₃ன் பாடல் ஆடல் இவற்றால் வரும் ஸுகத்தின் (குறைகளை) **अभिध्यायन्** அபி₄த்₄யாயன் மீண்டும் மீண்டும் சிந்தித்துப் பார்க்கும் **कः** க: யார்தான் **अतिदीर्घे** அதிதீ₃ர்கே₄ அதிககாலம் உடைய **जीविते** ஜீவிதே வாழ்வில் **रमेत** ரமேத மகிழ்ந்திருக்க விரும்புவான்.

தேய்வற்றவர்களான, மரணமற்றவர்களான, உங்களைப் போன்றவர்களை அடைந்த, கீழான பூமியில் வாழ்கின்ற ஒருவன், தன்னைத் தேய்ந்து மடிபவனாக அறிந்து கொண்டு பாடல் ஆடல் இவற்றால் வரும் ஸுகத்தின் குறைகளை மீண்டும் மீண்டும் சிந்தித்துப்பார்க்கும் யார்தான் அதிக காலம் உடைய வாழ்வில் மகிழ்ந்திருக்க விரும்புவான்!

२९. यस्मिन्निदं विचिकित्सन्ति मृत्यो यत्सांपराये महति ब्रूहि नस्तत्।
यो॒ऽयं वरो गूढमनुप्रविष्टः नान्यं तस्मान्नचिकेता वृणीते ।।

29. யஸ்மிந்நித₃ம் விசிகித்ஸந்தி ம்ருத்யோ
யத்ஸாம்பராயே மஹதி ப்₃ரூஹி நஸ்தத் ।
யோऽயம் வரோ கூ₃ட₄மனுப்ரவிஷ்ட:
நான்யம் தஸ்மாந்நசிகேதா வ்ருணீதே ।।

मृत्यो ம்ருத்யோ யமதேவரே **यस्मिन्** யஸ்மின் எதில் **इदं** இத₃ம் (இருக்கிறதா இல்லையா என்றதான) இந்த **विचिकित्सन्ति** விசிகித்ஸந்தி ஸந்தேகம் வந்துள்ளதோ **यत्** யத் எது **साम्पराये महति** ஸாம்பராயே மஹதி இறப்பிற்குப்பின் மேலான வாழ்வைப்பற்றியதோ **तत्** தத் அதை **नः** ந: எனக்கு **ब्रूहि** ப்₃ரூஹி கூறுங்கள். **यः अयं वरः** ய: அயம் வர: இந்த வரமானது **गूढं** கூ₃ட₄ம் ரஹஸ்யத்தை **अनुप्रविष्टः** அனுப்ரவிஷ்ட: அடைந்துவிட்டது. **तस्मात्** தஸ்மாத் ஆகவே **नचिकेताः** நசிகேதா: நசிகேதன் **अन्यं** அன்யம் வேறு (வரத்தை) **न वृणीते** ந வ்ருணீதே தேர்ந்தெடுக்கமாட்டான்.

யமதேவரே, எதில் இருக்கிறதா இல்லையா என்றதான இந்த ஸந்தேகம் வந்துள்ளதோ, எது இறப்பிற்குப்பின் மேலான வாழ்வைப் பற்றியதோ அதை எனக்குக் கூறுங்கள். இந்த வரமானது ரஹஸ்யத்தை அடைந்துவிட்டது. ஆகவே நசிகேதன் வேறு வரத்தைத் தேர்ந்தெடுக்கமாட்டான்.

इति प्रथमाध्याये प्रथमा वल्ली

முதல் அத்யாயத்தில் முதல் வல்லி முடிவுற்றது.

प्रथमाध्याये द्वितीया वल्ली

முதல் அத்யாயத்தில் இரண்டாவது வல்லி

१. **अन्यच्छ्रेयोऽन्यदुतैव प्रेयः ते उभे नानार्थे पुरुषँ सिनीतः ।**
तयोः श्रेय आददानस्य साधु भवति हीयतेऽर्थाद्य उ प्रेयो वृणीते ।।

1. அன்யச்ச்$_2$ரேயோऽன்யது$_3$தைவ ப்ரேய:
தே உபே$_4$ நாநார்தே$_2$ புருஷம்ஸினீத: ।
தயோ: ச்$_1$ரேய ஆத$_3$தா$_3$நஸ்ய ஸாது$_4$ ப$_4$வதி
ஹீயதேऽர்தா$_2$த்$_3$ய உ ப்ரேயோ வ்ருணீதே ।।

श्रेयः ச்$_1$ரேய: நன்மைக்கான பாதை **अन्यत्** அன்யத் வேறு. **प्रेयः** ப்ரேய: இன்பத்திற்கான பாதை **अन्यद् उत एव** அன்யத்$_3$ உத ஏவ வேறு. **ते उभे** தே உபே$_4$ இவ்விரண்டும் **नाना-अर्थे** நாநா-அர்தே$_2$ முற்றிலும் வேறான பலனைக் கொண்டவையாக **पुरुषं** புருஷம் மனிதனை **सिनीतः** ஸினீத: கட்டுகின்றன. **तयोः** தயோ: அந்த இரண்டில் **श्रेयः** ச்$_1$ரேய: நன்மைக்கான பாதையை **आददानस्य** ஆத$_3$தா$_3$நஸ்ய தேர்ந்தெடுத்துக் கொண்டவனுக்கு **साधु** ஸாது$_4$ மங்களம் **भवति** ப$_4$வதி உண்டாகிறது. **यः** ய: யார் **प्रेयः** ப்ரேய: இன்பத்திற்கான பாதையை **वृणीते** வ்ருணீதே தேர்ந்தெடுக்கிறானோ (அவன்) **अर्थात् उ** அர்தா$_2$த் உ மோக்ஷத்திலிருந்து **हीयते** ஹீயதே வீழ்ந்துவிடுகிறான்.

நன்மைக்கான பாதை வேறு. இன்பத்திற்கான பாதை வேறு. இவ்விரண்டும் முற்றிலும் வேறான பலனைக் கொண்டவையாக மனிதனைக் கட்டுகின்றன. அந்த இரண்டில் நன்மைக் கான பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவனுக்கு மங்களம் உண்டாகிறது. யார் இன்பத்திற்கான பாதையைத் தேர்ந்தெடுக் கிறானோ அவன் மோக்ஷத்திலிருந்து வீழ்ந்து விடுகிறான்.

२. **श्रेयश्च प्रेयश्च मनुष्यमेतः तौ संपरीत्य विविनक्ति धीरः ।**
श्रेयो हि धीरोऽभिप्रेयसो वृणीते प्रेयो मन्दो योगक्षेमाद् वृणीते ।।

2. ச்₁ரேயச்₁ச ப்ரேயச்₁ச மனுஷ்யமேத:
தௌ ஸம்பரீத்ய விவினக்தி தீ₄ர: ।
ச்₁ரேயோ ஹி தீ₄ரோऽபி₄ப்ரேயஸோ வ்ருணீதே
ப்ரேயோ மந்தோ₃ யோக₃க்ஷேமாத்₃ வ்ருணீதே ॥

श्रेयः च ச்₁ரேய: ச நன்மையும் **प्रेयः च** ப்ரேய: ச இன்பமும் (வேறுபாடு தெரியாமல்) **मनुष्यं** மனுஷ்யம் மனிதனை **एतः** ஏத: அடைகின்றன. **धीरः** தீ₄ர: தீரன் **तौ** தௌ அந்த இரண்டை **संपरीत्य** ஸம்பரீத்ய நன்கு ஆராய்ந்து **विविनक्ति** விவினக்தி பிரிக்கின்றான். **धीरः** தீ₄ர: தீரன் **प्रेयसः हि** ப்ரேயஸ: ஹி இன்பத்தை விடுத்து **श्रेयः** ச்₁ரேய: நன்மையை **अभिवृणीते** அபி₄வ்ருணீதே தேர்ந்தெடுக்கிறான். **मन्दः** மந்த₃: அறிவற்றவன் **योगक्षेमाद्** யோக₃க்ஷேமாத்₃ (பொருள்களை) அடைவதற்கும் (அவற்றை) காப்பதற்கும் **प्रेयः** ப்ரேய: இன்பத்தை **वृणीते** வ்ருணீதே தேர்ந்தெடுக்கிறான்.

நன்மையும் இன்பமும் வேறுபாடு தெரியாமல் மனிதனை அடைகின்றன. தீரன் அந்த இரண்டை நன்கு ஆராய்ந்து பிரிக்கின்றான். தீரன் இன்பத்தை விடுத்து நன்மையைத் தேர்ந்தெடுக்கிறான். அறிவற்றவன், பொருள்களை அடைவதற்கும் அவற்றைக் காப்பதற்கும் இன்பத்தைத் தேர்ந்தெடுக்கிறான்.

३. स त्वं प्रियान् प्रियरूपाँश्च कामान्
अभिध्यायन् नचिकेतोऽत्यस्राक्षीः ।
नैताँ सृङ्कां वित्तमयीमवाप्तः
यस्यां मज्जन्ति बहवो मनुष्याः ॥

3. ஸ த்வம் ப்ரியான் ப்ரியரூபாம்ச்₁ச காமான்
அபி₄த்₄யாயன் நசிகேதோऽத்யஸ்ராக்ஷீ: ।
நைதாம் ஸ்ருங்காம் வித்தமயீமவாப்த:
யஸ்யாம் மஜ்ஜந்தி ப₃ஹவோ மனுஷ்யா: ॥

नचिकेतः நசிகேத: நசிகேதனே **प्रियान्** ப்ரியான் இன்பத்தைக் கொடுக்கின்ற **प्रियरूपान् च** ப்ரியரூபான் ச கவர்ச்சியான **कामान्** காமான் பொருள்களை **अभिध्यायन्** அபி₄த்₄யாயன் நன்கு ஆராய்ந்து **सः त्वं** ஸ: த்வம் நீ **अत्यस्राक्षीः** அத்யஸ்ராக்ஷீ: விட்டுவிட்டாய். **यस्यां** யஸ்யாம் எதில் **बहवः** ப₃ஹவ: பல **मनुष्याः** மனுஷ்யா: மனிதர்கள் **मज्जन्ति** மஜ்ஜந்தி மூழ்குகிறார்களோ **एतां वित्तमयीं** ஏதாம் வித்தமயீம் அந்த விலையுயர்ந்த **सृङ्कां** ஸ்ருங்காம் நகையை **न अवाप्तः** ந அவாப்த: (நீ) ஏற்றுக்கொள்ளவில்லை.

நசிகேதனே, இன்பத்தைக் கொடுக்கின்ற கவர்ச்சியான பொருள்களை, நன்கு ஆராய்ந்து நீ விட்டுவிட்டாய். எதில் பல மனிதர்கள் மூழ்குகிறார்களோ, அந்த விலையுயர்ந்த நகையை நீ ஏற்றுக்கொள்ளவில்லை.

४. दूरमेते विपरीते विषूची अविद्या या च विद्येति ज्ञाता।
विद्याभीप्सिनं नचिकेतसं मन्ये न त्वा कामा बहवोऽलोलुपन्त ॥

4. தூ₃ரமேதே விபரீதே விஷூசீ
அவித்₃யா யா ச வித்₃யேதி ஞாதா ।
வித்₃யாபீ₄ப்ஸினம் நசிகேதஸம் மன்யே
ந த்வா காமா ப₃ஹவோऽலோலுபந்த ॥

या யா எது **अविद्या च** அவித்₃யா ச அவித்யா என்றும் **विद्या इति** வித்₃யா இதி வித்யா என்றும் **ज्ञाता** ஞாதா கருதப்படுகின்றதோ **एते** ஏதே இவை இரண்டும் **दूरं** தூ₃ரம் முற்றிலும் **विपरीते** விபரீதே வேறான பலனை உடைய **विषूची** விஷூசீ பாதைகள். **नचिकेतसं** நசிகேதஸம் நசிகேதனை **विद्या-अभीप्सिनं** வித்₃யா-அபீ₄ப்ஸினம் வித்யையை நாடுபவனாக **मन्ये** மன்யே கருதுகிறேன். **बहवः कामाः** ப₃ஹவ: காமா: பல பொருள்கள் **त्वा** த்வா உன்னை **न अलोलुपन्त** ந அலோலுபந்த ஈர்க்கவில்லை.

எது அவித்யா என்றும் வித்யா என்றும் கருதப் படுகின்றதோ இவை இரண்டும் முற்றிலும் வேறான பலனை உடைய பாதைகள். நசிகேதனை வித்யையை நாடுபவனாகக் கருதுகிறேன். பல பொருள்கள் உன்னை ஈர்க்கவில்லை.

५. अविद्यायामन्तरे वर्तमानाः स्वयं धीराः पण्डितं मन्यमानाः ।
दन्द्रम्यमाणाः परियन्ति मूढाः अन्धेनैव नीयमाना यथान्धाः ॥

5. அவித்$_3$யாயாமந்தரே வர்தமானா:
ஸ்வயம் தீ$_4$ரா: பண்டி$_3$தம் மன்யமானா: ।
த$_3$ந்த்$_3$ரம்யமாணா: பரியந்தி மூடா$_4$:
அந்தே$_4$னைவ நீயமானா யதா$_2$ந்தா$_4$: ॥

अविद्यायां अन्तरे அவித்$_3$யாயாம் அந்தரே அறியாமையின் மையத்தில் **वर्तमानाः** வர்தமானா: (மூழ்கி) இருப்பவர்கள் **स्वयं** ஸ்வயம் தங்களை **धीराः** தீ$_4$ரா: அறிவுடையவர்களாகவும் **पण्डितं मन्यमानाः** பண்டி$_3$தம் மன்யமானா: ஞானிகளாகவும் கருதுகின்ற **मूढाः** மூடா$_4$: அறிவிலிகள் **अन्धेन एव** அந்தே$_4$ன ஏவ குருடனாலேயே **नीयमानाः** நீயமானா: வழிநடத்தப்படுகின்ற **अन्धाः यथा** அந்தா$_4$: யதா$_2$ குருடர்கள் போல **दन्द्रम्यमाणाः** த$_3$ந்த்$_3$ரம்யமாணா: அங்கிங்குமாக **परियन्ति** பரியந்தி அலைகிறார்கள்.

அறியாமையின் மையத்தில் மூழ்கி இருப்பவர்கள், தங்களை அறிவுடையவர்களாகவும் ஞானிகளாகவும் கருதுகின்ற அறிவிலிகள், குருடனாலேயே வழிநடத்தப்படுகின்ற குருடர்கள் போல அங்கிங்குமாக அலைகிறார்கள்.

६. न सांपरायः प्रतिभाति बालं प्रमाद्यन्तं वित्तमोहेन मूढम् ।
अयं लोको नास्ति पर इति मानी पुनः पुनर्वशमापद्यते मे ॥

6. ந ஸாம்பராய: ப்ரதிபா$_4$தி பா$_3$லம்
ப்ரமாத்$_3$யந்தம் வித்தமோஹேன மூட$_4$ம் ।
அயம் லோகோ நாஸ்தி பர இதி மானீ
புன: புனர்வச$_1$மாபத்$_3$யதே மே ॥

बालं பா$_3$லம் பக்குவமடையாத **प्रमाद्यन्तं** ப்ரமாத்$_3$யந்தம் கவனக் குறைவுடன் கூடிய **वित्त-मोहेन** வித்த-மோஹேன செல்வம் மீதான மோஹத்தால் **मूढं** மூட$_4$ம் அறிவை இழந்தவனுக்கு **सांपराय:** ஸாம்பராய: மேலான லோகத்திற்கான ஸாதனம் **न प्रतिभाति** ந ப்ரதிபா$_4$தி விளங்காது. **अयं लोक:** அயம் லோக: இவ்வளவுதான் உலகம் **पर:** பர: (இதற்கு) மேலானது **न अस्ति** ந அஸ்தி ஒன்றுமில்லை **इति** இதி என்று **मानी** மானீ நினைப்பவன் **पुन: पुन:** புன: புன: மீண்டும் மீண்டும் **मे** மே என்னுடைய **वशं** வச$_1$ம் வசத்தை **आपद्यते** ஆபத்$_3$யதே அடைகிறான்.

பக்குவமடையாத, கவனக்குறைவுடன் கூடிய, செல்வம் மீதான மோஹத்தால் அறிவை இழந்தவனுக்கு மேலான லோகத்திற்கான ஸாதனம் விளங்காது. இவ்வளவுதான் உலகம், இதற்கு மேலானது ஒன்றுமில்லை என்று நினைப்பவன் மீண்டும் மீண்டும் என்னுடைய வசத்தை அடைகிறான்.

७. श्रवणायापि बहुभिर्यो न लभ्य: शृण्वन्तोऽपि बहवो यं न विद्यु:।
आश्चर्यो वक्ता कुशलोऽस्य लब्धा आश्चर्यो ज्ञाता कुशलानुशिष्ट:॥

7. ச்$_1$ரவணாயாபி ப$_3$ஹுபி$_4$ர்யோ ந லப்$_4$ய:
ச்$_1$ருண்வந்தோऽபி ப$_3$ஹவோ யம் ந வித்$_3$யு: ।
ஆச்$_1$சர்யோ வக்தா குச$_1$லோऽஸ்ய லப்$_3$தா$_4$
ஆச்$_1$சர்யோ ஞாதா குச$_1$லானுசி$_1$ஷ்ட: ॥

य: ய: எந்த (ஆத்மாவைப் பற்றி) **श्रवणाय अपि** ச்$_1$ரவணாய அபி கேட்பதற்குக் கூட **बहुभि:** ப$_3$ஹுபி$_4$: பலரால் **न लभ्य:** ந லப்$_4$ய: முடிவதில்லையோ **यं** யம் எதை (ஆத்மாவைப் பற்றி) **शृण्वन्त: अपि**

ச்$_1$ருண்வந்த: அபி கேட்டுக் கொண்டிருந்தபோதிலும் **बहवः** ப$_3$ஹவ: பலர் **न विद्युः** ந வித்$_3$யு: அறிவதில்லையோ (அத்தகைய) **अस्य** அஸ்ய அதைப்பற்றி (ஆத்மாவைப் பற்றி) **वक्ता** வக்தா உபதேசிப்பவர் **आश्चर्यः** ஆச்$_1$சர்ய: வியப்புக்குரியவர் (போல் ஒரு சிலரே). **लब्धा** லப்$_3$தா$_4$ (ஆத்மாவை) அடைபவர் **कुशलः** குச$_1$ல: வியப்புக்குரியவர் (போல் ஒரு சிலரே). **कुशल-अनुशिष्टः** குச$_1$ல- அனுசி$_1$ஷ்ட: தகுதியுடையவரால் உபதேசிக்கப்பட்டவராக **ज्ञाता** ஞாதா (ஆத்மாவை) அறிபவர் **आश्चर्यः** ஆச்$_1$சர்ய: வியப்புக்குரியவர் (போல் ஒரு சிலரே).

எந்த ஆத்மாவைப் பற்றிக் கேட்பதற்குக்கூடப் பலரால் முடிவதில்லையோ, எந்த ஆத்மாவைப்பற்றிக் கேட்டுக் கொண்டிருந்த போதிலும் பலர் அறிவதில்லையோ, அத்தகைய ஆத்மாவைப் பற்றி உபதேசிப்பவர் வியப்புக்குரியவர் போல் ஒருசிலரே. ஆத்மாவை அடைபவர் வியப்புக்குரியவர் போல் ஒருசிலரே. தகுதியுடையவரால் உபதேசிக்கப்பட்டவராக ஆத்மாவை அறிபவர் வியப்புக்குரியவர் போல் ஒருசிலரே.

௮. न नरेणावरेण प्रोक्त एषः सुविज्ञेयो बहुधा चिन्त्यमानः ।
अनन्यप्रोक्तेऽगतिरत्र नास्ति अणीयान् ह्यतर्क्यमणुप्रमाणात् ॥

8. ந நரேணாவரேண ப்ரோக்த ஏஷ:
ஸுவிஞேயோ ப$_3$ஹுதா$_4$ சிந்த்யமான: ।
அனன்யப்ரோக்தேऽக$_3$திரத்ர நாஸ்தி
அணீயான் ஹ்யதர்க்யமணுப்ரமாணாத் ॥

अवरेण அவரேண தகுதியற்ற **नरेण** நரேண மனிதரால் **प्रोक्तः** ப்ரோக்த: உபதேசிக்கப்பட்ட **बहुधा** ப$_3$ஹுதா$_4$ பலவிதமாக **चिन्त्यमानः** சிந்த்யமான: கருதப்பட்ட **एषः** ஏஷ: இந்த (ஆத்மா) **न सुविज्ञेयः** ந ஸுவிஞேய: எளிதில் அறியமுடியாததாக உள்ளது. **अनन्य-प्रोक्ते** அனன்ய-ப்ரோக்தே தகுதி உடையவர்களால் உபதேசிக்கப் படும்போது **अत्र** அத்ர இந்த ஆத்மவிஷயத்தில் **अगतिः** அக$_3$தி: தவறாக புரிந்துகொள்வது என்பது **न अस्ति** ந அஸ்தி ஏற்படாது.

अणु-प्रमाणात् அணு-ப்ரமாணாத் (ஆத்மா) அணுவின் அளவைக் காட்டிலும் **अणीयान्** அணீயான் சிறியதாக உள்ளது. **अतर्क्यं हि** அதர்க்யம் ஹி தர்க்கத்திற்கு அப்பாற்பட்டது.

தகுதியற்ற மனிதரால் உபதேசிக்கப்பட்ட, பலவிதமாகக் கருதப்பட்ட இந்த ஆத்மா எளிதில் அறியமுடியாததாக உள்ளது. தகுதி உடையவர்களால் உபதேசிக்கப் படும்போது இந்த ஆத்ம விஷயத்தில் தவறாகப் புரிந்து கொள்வது என்பது ஏற்படாது. ஆத்மா அணுவின் அளவைக் காட்டிலும் சிறியதாக உள்ளது. தர்க்கத்திற்கு அப்பாற்பட்டது.

९. **नैषा तर्केण मतिरापनेया प्रोक्तान्येनैव सुज्ञानाय प्रेष्ठ ।**
यां त्वमापः सत्यधृतिर्बतासि त्वादृङ्नो भूयान्नचिकेतः प्रष्टा ॥

9. நைஷா தர்கேண மதிராபனேயா
ப்ரோக்தான்யேனைவ ஸுஜ்ஞானாய ப்ரேஷ்ட$_2$ ।
யாம் த்வமாப: ஸத்யத்$_4$ருதிர்ப$_3$தாஸி
த்வாத்$_3$ருங்னோ பூ$_4$யாந்நசிகேத: ப்ரஷ்டா ॥

एषा मतिः ஏஷா மதி: இந்த அறிவு **तर्केण** தர்கேண தர்க்கத்தால் **न आपनेया** ந ஆபனேயா அடையப்பட முடியாதது. **प्रेष्ठ** ப்ரேஷ்ட$_2$ ப்ரியமானவனே **अन्येन** அன்யேன மற்றொருவரால் **प्रोक्ता एव** ப்ரோக்தா ஏவ உபதேசிக்கப்பட்டுத்தான் **सुज्ञानाय** ஸுஜ்ஞானாய நன்கு புரிந்து கொள்வதாகிறது. **यां** யாம் இதை (அறிவை) **त्वं** த்வம் நீ **आपः** ஆப: அடைந்துள்ளாய். **सत्यधृतिः बत** ஸத்யத்$_4$ருதி: ப$_3$த உண்மையான உறுதி உடையவனாக **असि** அஸி இருக்கிறாய். **नचिकेतः** நசிகேத: நசிகேதனே **नः** ந: எங்களுக்கு **त्वादृक्** த்வாத்$_3$ருக் உன்னைப்போல **प्रष्टा** ப்ரஷ்டா சிஷ்யன் **भूयात्** பூ$_4$யாத் அமையட்டும்.

இந்த அறிவு தர்க்கத்தால் அடையப்பட முடியாதது. ப்ரியமானவனே, மற்றொருவரால் உபதேசிக்கப்பட்டுத்தான் நன்கு புரிந்து கொள்வதாகிறது. இந்த அறிவை நீ அடைந்

துள்ளாய். உண்மையான உறுதி உடையவனாக இருக்கிறாய். நசிகேதனே, எங்களுக்கு உன்னைப் போல சிஷ்யன் அமையட்டும்.

१०. जानाम्यहँ शेवधिरित्यनित्यं न ह्यध्रुवैः प्राप्यते हि ध्रुवं तत्।
ततो मया नचिकेतश्चितोऽग्निः अनित्यैर्द्रव्यैः प्राप्तवानस्मि नित्यम्॥

10. ஜாநாம்யஹம் சே1வதி4ரித்யநித்யம்
ந ஹ்யத்4ருவை: ப்ராப்யதே ஹி த்4ருவம் தத் ।
ததோ மயா நசிகேதச்1சிதோऽக்3னி:
அநித்யைர்த்3ரவ்யை: ப்ராப்தவானஸ்மி நித்யம் ॥

शेवधिः சே1வதி4: கர்மபலன் **अनित्यं** அநித்யம் நிலையற்றது **इति** இதி என்று **अहं** அஹம் நான் **जानामि** ஜாநாமி அறிவேன். **हि** ஹி ஏனெனில் **अध्रुवैः** அத்4ருவை: அழியக்கூடிய ஸாதனங்களால் **तत् ध्रुवं** தத் த்4ருவம் அந்த அழியாததை **न हि प्राप्यते** ந ஹி ப்ராப்யதே அடையமுடியாது. **नचिकेतः** நசிகேத: நசிகேதனே **ततः** தத: இருந்த போதிலும் **मया** மயா என்னால் **अग्निः** அக்3னி: யாகம் **चितः** சித: செய்யப்பட்டது. **अनित्यैः** அநித்யை: நிலையற்ற **द्रव्यैः** த்3ரவ்யை: ஸாதனங்களைக் கொண்டு **नित्यं** நித்யம் அதிக காலத்துடன் கூடிய (யமபதவியை) **प्राप्तवान् अस्मि** ப்ராப்தவான் அஸ்மி அடைந்துள்ளேன்.

கர்மபலன் நிலையற்றது என்று நான் அறிவேன். ஏனெனில் அழியக்கூடிய ஸாதனங்களால் அந்த அழியாததை அடைய முடியாது. நசிகேதனே, இருந்தபோதிலும் என்னால் யாகம் செய்யப்பட்டது. நிலையற்ற ஸாதனங்களைக் கொண்டு அதிக காலத்துடன் கூடிய யமபதவியை அடைந்துள்ளேன்.

११. कामस्याप्तिं जगतः प्रतिष्ठां क्रतोरानन्त्यमभयस्य पारम्।
स्तोममहदुरुगायं प्रतिष्ठां दृष्ट्वा धृत्या धीरो नचिकेतोऽत्यस्राक्षीः॥

11. காமஸ்யாப்திம் ஜக$_3$த: ப்ரதிஷ்டா$_2$ம்
க்ரதோரானந்த்யமப$_4$யஸ்ய பாரம் ।
ஸ்தோமமஹது$_3$ருகா$_3$யம் ப்ரதிஷ்டா$_2$ம்
த்$_3$ருஷ்ட்வா த்$_4$ருத்யா தீ$_4$ரோ நசிகேதோऽத்யஸ்ராக்ஷீ: ॥

नचिकेतः நசிகேத: நசிகேதனே **कामस्य** காமஸ்ய ஆசையை **आप्तिं** ஆப்திம் பூர்த்தி செய்யும் (இடமாகவும்) **जगतः** ஜக$_3$த: உலகுக்கு **प्रतिष्ठां** ப்ரதிஷ்டா$_2$ம் ஆதாரமாகவும் **क्रतोः** க்ரதோ: த்யானத்தின் **आनन्त्यं** ஆனந்த்யம் முடிவற்ற பலனாகவும் **अभयस्य** அப$_4$யஸ்ய பயமின்மைக்கு **पारं** பாரம் இடமாகவும் **स्तोम-महद्-उरुगायं** ஸ்தோம-மஹத்$_3$-உருகா$_3$யம் பூஜிக்கத்தக்க ஐச்வர்யத்துடன் கூடிய விரிந்த **प्रतिष्ठां** ப்ரதிஷ்டா$_2$ம் ப்ரஹ்ம லோகத்தை **दृष्ट्वा** த்$_3$ருஷ்ட்வா ஆராய்ந்து (அதன் நிலையாமையை உணர்ந்த) **धीरः** தீ$_4$ர: தீரனான (நீ அதை) **धृत्या** த்$_4$ருத்யா உறுதியுடன் **अत्यस्राक्षीः** அத்யஸ்ராக்ஷீ: ஒதுக்கித் தள்ளிவிட்டாய்.

நசிகேதனே, ஆசையைப் பூர்த்தி செய்யும் இடமாகவும் உலகுக்கு ஆதாரமாகவும் த்யானத்தின் முடிவற்ற பலனாகவும் பயமின்மைக்கு இடமாகவும் பூஜிக்கத்தக்க, ஐச்வர்யத்துடன் கூடிய. விரிந்த ப்ரஹ்மலோகத்தை ஆராய்ந்து அதன் நிலையாமையை உணர்ந்த தீரனான நீ அதை உறுதியுடன் ஒதுக்கித் தள்ளிவிட்டாய்.

१२. तं दुर्दर्शं गूढमनुप्रविष्टं गुहाहितं गह्वरेष्ठं पुराणम् ।
अध्यात्मयोगाधिगमेन देवं मत्वा धीरो हर्षशोकौ जहाति ॥

12. தம் து$_3$ர்த$_3$ர்ச$_1$ம் கூ$_3$ட$_4$மனுப்ரவிஷ்டம்
கு$_3$ஹாஹிதம் க$_3$ஹ்வரேஷ்ட$_2$ம் புராணம் ।
அத்$_4$யாத்மயோகா$_3$தி$_4$க$_3$மேன தே$_3$வம்
மத்வா தீ$_4$ரோ ஹர்ஷசோ$_1$கௌ ஜஹாதி ॥

अध्यात्मयोग-अधिगमेन அத்₄யாத்மயோக₃-அதி₄க₃மேன ஞான யோகத்தை எடுத்துக்கொள்வதன் மூலம் **धीर:** தீ₄ர: தீரன் **दुर्दर्शं** து₃ர்த₃ர்ச₁ம் அறிவதற்கு அரிதான **गूढं** கூ₃ட₄ம் ரஹஸ்யத்தை **अनुप्रविष्टं** அனுப்ரவிஷ்டம் அடைந்த **गुहाहितं** கு₃ஹாஹிதம் புத்தியில் வெளிப் படுகின்ற **गह्वरेष्ठं** க₃ஹ்வரேஷ்ட₂ம் துயரத்திற்குள் இருக்கின்ற **पुराणं** புராணம் என்றுமுள்ள **तं** தம் அந்த **देवं** தே₃வம் அறிவு ஸ்வரூபமான ஆத்மாவை **मत्वा** மத்வா அறிந்து **हर्ष-शोकौ** ஹர்ஷ-சோ₁கௌ ஸுகத்தையும் துக்கத்தையும் **जहाति** ஜஹாதி கடந்து செல்கிறான்.

ஞானயோகத்தை எடுத்துக் கொள்வதன் மூலம் தீரன், அறிவதற்கு அரிதான, ரஹஸ்யத்தை அடைந்த, புத்தியில் வெளிப்படுகின்ற, துயரத்திற்குள் இருக்கின்ற, என்றுமுள்ள அந்த அறிவு ஸ்வரூபமான ஆத்மாவை அறிந்து, ஸுகத்தையும் துக்கத்தையும் கடந்து செல்கிறான்.

ஆத்மா கஹ்வரேஷ்டம்-துயரத்திற்குள் இருக்கிறது என்ற லக்ஷணத்திற்கு துயரத்தைக் கொடுக்கக்கூடிய உடலுக்கும் உலகத்திற்கும் ஆதாரமாக உள்ளது என்பது பொருள்.

१३. एतच्छ्रुत्वा सम्परिगृह्य मर्त्य: प्रवृह्य धर्म्यमणुमेतमाप्य ।
स मोदते मोदनीयँहि लब्ध्वा विवृतँसद्म नचिकेतसं मन्ये ।।

13. ஏதச்ச்₂ருத்வா ஸம்பரிக்₃ருஹ்ய மர்த்ய:
ப்ரவ்ருஹ்ய த₄ர்ம்யமணுமேதமாப்ய ।
ஸ மோத₃தே மோத₃னீயம் ஹி லப்₃த்₄வா
விவ்ருதம்ஸத்₃ம நசிகேதஸம் மன்யே ।।

मर्त्य: மர்த்ய: அழியக்கூடிய மனிதன் **एतत्** ஏதத் இதை (ஆத்மாவைப் பற்றி) **श्रुत्वा** ச்₁ருத்வா கேட்டு **सम्परिगृह्य** ஸம்பரிக்₃ருஹ்ய நன்கு புரிந்துகொண்டு **प्रवृह्य** ப்ரவ்ருஹ்ய (உடலிலிருந்து) வேறுபடுத்தி **एतं अणुं** ஏதம் அணும் இந்த ஸூக்ஷ்மமான **धर्म्यं** த₄ர்ம்யம் ஆத்மாவை **आप्य** ஆப்ய அடைகிறான். **स:** ஸ: அவன் **मोदनीयं हि** மோத₃நீயம் ஹி ஸுகத்திற்கான காரணத்தை **लब्ध्वा** லப்₃த்₄வா அடைந்ததனால்

मोदते மோத$_3$தே மகிழ்ந்திருக்கிறான். **नचिकेतसं** நசிகேதஸம் நசிகேதனுக்கு **सद्म** ஸத்$_3$ம (ப்ரஹ்மனுடைய) இருப்பிடம் **विवृतं** விவ்ருதம் திறக்கப்பட்டுள்ளதாக **मन्ये** மன்யே கருதுகிறேன்.

அழியக்கூடிய மனிதன் இந்த ஆத்மாவைப் பற்றிக் கேட்டு, நன்கு புரிந்துகொண்டு, உடலிலிருந்து வேறுபடுத்தி, இந்த ஸூக்ஷ்மமான ஆத்மாவை அடைகிறான். அவன் ஸுகத்திற்கான காரணத்தை அடைந்ததனால் மகிழ்ந்திருக்கிறான். நசிகேதனுக்கு ப்ரஹ்மனுடைய இருப்பிடம் திறக்கப்பட்டுள்ளதாக கருதுகிறேன்.

१४. अन्यत्र धर्मादन्यत्राधर्माद् अन्यत्रास्मात् कृताकृतात्।
अन्यत्र भूताच्च भव्याच्च यत्तत्पश्यसि तद्वद ॥

14. அன்யத்ர த$_4$ர்மாத$_3$ன்யத்ராத$_4$ர்மாத்$_3$
அன்யத்ராஸ்மாத் க்ருதாக்ருதாத் ।
அன்யத்ர பூ$_4$தாச்ச ப$_4$வ்யாச்ச
யத்தத்பச்$_1$யஸி தத்$_3$வத$_3$ ॥

धर्मात् த$_4$ர்மாத் தர்மத்திற்கும் **अन्यत्र** அன்யத்ர வேறான **अधर्मात् अन्यत्र** அத$_4$ர்மாத் அன்யத்ர அதர்மத்திற்கும் வேறான **अस्मात्** அஸ்மாத் இந்த **कृत-अकृतात्** க்ருத-அக்ருதாத் கார்யத்திற்கும் காரணத்திற்கும் **अन्यत्र** அன்யத்ர வேறான **भूतात् च** பூ$_4$தாத் ச கடந்ததற்கும் **भव्यात् च** ப$_4$வ்யாத் ச வருவதற்கும் **अन्यत्र** அன்யத்ர வேறான **यत् तत्** யத் தத் எந்த ஒன்றை **पश्यसि** பச்$_1$யஸி அறிகிறீர்களோ **तत्** தத் அதை **वद** வத$_3$ (எனக்கு) கூறுங்கள்.

தர்மத்திற்கும் வேறான அதர்மத்திற்கும் வேறான, இந்த கார்யத்திற்கும் காரணத்திற்கும் வேறான, கடந்ததற்கும் வருவதற்கும் வேறான எந்த ஒன்றை அறிகிறீர்களோ அதை எனக்குக் கூறுங்கள்.

१५. सर्वे वेदा यत्पदमामनन्ति तपाँसि सर्वाणि च यद्वदन्ति।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदँसङ्ग्रहेण ब्रवीम्योमित्येतत् ॥

15. ஸர்வே வேதா$_3$ யத்பத$_3$மாமனந்தி
தபாம்ஸி ஸர்வாணி ச யத்$_3$வத$_3$ந்தி ।
யதி$_3$ச்ச$_2$ந்தோ ப்$_3$ரஹ்மசர்யம் சரந்தி
தத்தே பத$_3$ம்ஸங்க்$_3$ரஹேண ப்$_3$ரவீம்யோமித்யேதத் ॥

सर्वे ஸர்வே எல்லா **वेदा:** வேதா$_3$: வேதங்களும் **यत् पदं** யத் பத$_3$ம் எந்த லக்ஷ்யத்தை **आमनन्ति** ஆமனந்தி பேசுகின்றனவோ **यत्** யத் எதற்காக **सर्वाणि** ஸர்வாணி அனைத்து **तपांसि च** தபாம்ஸி ச தவங்களையும் **वदन्ति** வத$_3$ந்தி கூறுகின்றனவோ **यत् इच्छन्त:** யத் இச்ச$_2$ந்த: எதை (அடைவதற்கு) ஆசை கொண்டு **ब्रह्मचर्यं** ப்$_3$ரஹ்ம சர்யம் (ஸாதகர்கள்) ப்ரஹ்மசர்யத்தை **चरन्ति** சரந்தி அனுஷ்டிக் கிறார்களோ **तत् पदं** தத் பத$_3$ம் அந்த லக்ஷ்யத்தை **ते** தே உனக்கு **सङ्ग्रहेण** ஸங்க்$_3$ரஹேண சுருக்கமாக **ब्रवीमि** ப்$_3$ரவீமி கூறுகிறேன் **एतत् ओं** ஏதத் ஓம் அது ஓம் **इति** இதி என்பதே ஆகும்.

எல்லா வேதங்களும் எந்த லக்ஷ்யத்தைப் பேசுகின்றனவோ, எதற்காக அனைத்து தவங்களையும் கூறுகின்றனவோ, எதை அடைவதற்கு ஆசைகொண்டு ஸாதகர்கள் ப்ரஹ்மசர்யத்தை அனுஷ்டிக்கிறார்களோ, அந்த லக்ஷ்யத்தை உனக்கு சுருக்கமாகக் கூறுகிறேன்: அது ஓம் என்பதே ஆகும்.

१६. एतद्ध्येवाक्षरं ब्रह्म एतद्ध्येवाक्षरं परम् ।
एतद्ध्येवाक्षरं ज्ञात्वा यो यदिच्छति तस्य तत् ॥

16. ஏதத்$_3$த்$_4$யேவாக்ஷரம் ப்$_3$ரஹ்ம ஏதத்$_3$த்$_4$யேவாக்ஷரம் பரம் ।
ஏதத்$_3$த்$_4$யேவாக்ஷரம் ஞாத்வா யோ யதி$_3$ச்ச$_2$தி தஸ்ய தத் ॥

एतत् हि ஏதத் ஹி இந்த **अक्षरं एव** அக்ஷரம் ஏவ எழுத்தே **ब्रह्म** ப்$_3$ரஹ்ம (ஸகுண) ப்ரஹ்மன். **एतत् हि** ஏதத் ஹி இந்த **अक्षरं एव** அக்ஷரம் ஏவ எழுத்தே **परं** பரம் நிர்குண (ப்ரஹ்மன்). **एतत् हि** ஏதத் ஹி இந்த **अक्षरं एव** அக்ஷரம் ஏவ எழுத்தையே **ज्ञात्वा** ஞாத்வா த்யானித்து **य:** ய:

ஒருவன் **यत्** யத் எதை **इच्छति** இச்ச$_2$தி விரும்புகிறானோ **तस्य** தஸ்ய அவனுக்கு **तत्** தத் அது (அமைகிறது).

இந்த எழுத்தே ஸகுணப்ரஹ்மன். இந்த எழுத்தே நிர்குணப்ரஹ்மன். இந்த எழுத்தையே த்யானித்து ஒருவன் எதை விரும்புகிறானோ, அவனுக்கு அது அமைகிறது.

ஓம் என்பதுதான் எழுத்து என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

१७. एतदालम्बनँ श्रेष्ठं एतदालम्बनं परम् ।
एतदालम्बनं ज्ञात्वा ब्रह्मलोके महीयते ।।

17. ஏததா$_3$லம்ப$_3$னம் ச்$_1$ரேஷ்ட$_2$ம் ஏததா$_3$லம்ப$_3$னம் பரம் ।
ஏததா$_3$லம்ப$_3$னம் ஞாத்வா ப்$_3$ரஹ்மலோகே மஹீயதே ।।

एतत् आलम्बनं ஏதத் ஆலம்ப$_3$னம் இந்த ஆலம்பனம் **श्रेष्ठं** ச்$_1$ரேஷ்ட$_2$ம் மேலானது. **एतत् आलम्बनम्** ஏதத் ஆலம்ப$_3$னம் இந்த ஆலம்பனம் **परं** பரம் (ஸகுண நிர்குண) ப்ரஹ்மனை (குறிப்பது). **एतत् आलम्बनम्** ஏதத் ஆலம்ப$_3$னம் இந்த ஆலம்பனத்தை **ज्ञात्वा** ஞாத்வா த்யானித்து **ब्रह्मलोके** ப்$_3$ரஹ்மலோகே ப்ரஹ்மலோகத்தில் **महीयते** மஹீயதே (ஒருவன்) மஹிமைப்படுத்தப்படுகிறான்.

இந்த ஆலம்பனம் மேலானது. இந்த ஆலம்பனம் ஸகுண, நிர்குண ப்ரஹ்மனைக் குறிப்பது. இந்த ஆலம்பனத்தை த்யானித்து, ப்ரஹ்மலோகத்தில் ஒருவன் மஹிமைப்படுத்தப் படுகிறான்.

எதன் துணைகொண்டு இறைவனை த்யானிக்கிறோமோ அது ஆலம்பனம் எனப்படும். உதாரணமாக, லிங்கத்தின் துணை கொண்டு சிவனை த்யானிக்கும் பொழுது லிங்கம் ஆலம்பனம் ஆகிறது. அதுபோல் ஓம் என்ற எழுத்தின் துணை கொண்டு ப்ரஹ்மனை த்யானிக்கும் பொழுது ஓம் ஆலம்பனம் ஆகிறது. ஆலம்பனங்களில் ஓங்காரம் சிறந்ததாகக் கூறப்படுகிறது.

१८. न जायते म्रियते वा विपश्चिद् नायं कुतश्चिन्न बभूव कश्चित्।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणः न हन्यते हन्यमाने शरीरे ॥

18. ந ஜாயதே ம்ரியதே வா விபச்$_1$சித்$_3$
நாயம் குதச்$_1$சிந்ந ப$_3$பூ$_4$வ கச்$_1$சித் ।
அஜோ நித்ய: சா$_1$ச்$_1$வதோऽயம் புராண:
ந ஹன்யதே ஹன்யமானே ச$_1$ரீரே ॥

अयं அயம் இந்த **विपश्चित्** விபச்$_1$சித் சைதன்ய ஸ்வரூபமான (ஆத்மா) **न जायते** ந ஜாயதே பிறப்பதில்லை. **म्रियते वा** ம்ரியதே வா இறப்பதில்லை. **कुतश्चित्** குதச்$_1$சித் எதனிடமிருந்தும் **न बभूव** ந ப$_3$பூ$_4$வ (இது) தோன்றவில்லை. **कश्चित्** கச்$_1$சித் (இதனிடமிருந்தும்) எதுவும் **न** ந தோன்றவில்லை. **अजः** அஜ: பிறப்பற்றது. **नित्यः** நித்ய: என்றும் உள்ளது. **शाश्वतः** சா$_1$ச்$_1$வத: தேய்வற்றது. **पुराणः** புராண: வளர்ச்சியற்றது. **शरीरे हन्यमाने** ச$_1$ரீரே ஹன்யமானே உடல் கொல்லப்படும் பொழுது **अयं** அயம் இந்த (ஆத்மா) **न हन्यते** ந ஹன்யதே கொல்லப்படுவதில்லை.

இந்த சைதன்ய ஸ்வரூபமான ஆத்மா பிறப்பதில்லை. இறப்பதில்லை. எதனிடமிருந்தும் இது தோன்றவில்லை. இதனிடமிருந்தும் எதுவும் தோன்றவில்லை. பிறப்பற்றது. என்றும் உள்ளது. தேய்வற்றது. வளர்ச்சியற்றது. உடல் கொல்லப்படும் பொழுது இந்த ஆத்மா கொல்லப்படுவதில்லை.

१९. हन्ता चेन्मन्यते हन्तुँ हतश्चेन्मन्यते हतम्।
उभौ तौ न विजानीतः नायं हन्ति न हन्यते ॥

19. ஹந்தா சேந்மன்யதே ஹன்தும் ஹதச்$_1$சேந்மன்யதே ஹதம் ।
உபௌ$_4$ தௌ ந விஜானீத: நாயம் ஹன்தி ந ஹன்யதே ॥

हन्ता ஹன்தா கொல்பவன் **हन्तुं** ஹன்தும் (ஆத்மாவை) கொல்வதாக **मन्यते चेत्** மன்யதே சேத் கருதினாலும் **हतः** ஹத: கொல்லப்படுபவன்

हतम् ஹதம் (ஆத்மா) கொல்லப்படுவதாக **मन्यते चेत्** மன்யதே சேத் கருதினாலும் **तौ उभौ** தௌ உபௌ$_4$ அந்த இருவரும் **न विजानीतः** ந விஜாநீத: (ஆத்மாவை) அறிபவர்கள் அல்ல. **अयं** அயம் இந்த (ஆத்மா) **न हन्ति** ந ஹந்தி கொல்வதில்லை. **न हन्यते** ந ஹன்யதே கொல்லப்படுவதில்லை.

கொல்பவன், ஆத்மாவைக் கொல்வதாகக் கருதினாலும், கொல்லப்படுபவன், ஆத்மா கொல்லப்படுவதாகக் கருதினாலும் அந்த இருவரும் ஆத்மாவை அறிபவர்கள் அல்ல. இந்த ஆத்மா கொல்வதில்லை. கொல்லப்படுவதில்லை.

२०. अणोरणीयान्महतो महीयान् आत्मास्य जन्तोर्निहितो गुहायाम्।
तमक्रतुः पश्यति वीतशोकः धातुप्रसादान्महिमानमात्मनः ॥

20. அணோரணீயான்மஹதோ மஹீயான்
ஆத்மாஸ்ய ஜந்தோர்நிஹிதோ கு$_3$ஹாயாம் ।
தமக்ரது: பச்$_1$யதி வீதசோ$_1$க:
தா$_4$துப்ரஸாதா$_3$ந்மஹிமானமாத்மன: ॥

आत्मा ஆத்மா ஆத்மா **अणोः** அணோ: சிறியதைக்காட்டிலும் **अणीयान्** அணீயான் சிறியது. **महतः** மஹத: பெரியதைக்காட்டிலும் **महीयान्** மஹீயான் பெரியது. **अस्य जन्तोः** அஸ்ய ஜந்தோ: இந்த உயிரினத்தினுடைய **गुहायां** கு$_3$ஹாயாம் ஹ்ருதயகுகையில் **निहितः** நிஹித: இருக்கிறது. **अक्रतुः** அக்ரது: ஆசையற்றவன் **धातु-प्रसादात्** தா$_4$து-ப்ரஸாதா$_3$த் இந்த்ரியத்தின் அமைதியினால் **आत्मनः** ஆத்மன: ஆத்மாவினுடைய **तं महिमानं** தம் மஹிமானம் இந்த மஹிமையை **पश्यति** பச்$_1$யதி அறிகிறான். **वीतशोकः** வீதசோ$_1$க: சோகத்திலிருந்தும் விடுபடுகிறான்.

ஆத்மா சிறியதைக் காட்டிலும் சிறியது. பெரியதைக் காட்டிலும் பெரியது. இந்த உயிரினத்தினுடைய ஹ்ருதய குஹையில் இருக்கிறது. ஆசையற்றவன், இந்த்ரியத்தின் அமைதி

யினால் ஆத்மாவினுடைய இந்த மஹிமையை அறிகிறான். சோகத்திலிருந்தும் விடுபடுகிறான்.

२१. आसीनो दूरं व्रजति शयानो याति सर्वतः।
कस्तं मदामदं देवं मदन्यो ज्ञातुमर्हति॥

21. ஆஸீனோ தூ$_3$ரம் வ்ரஜதி ச$_1$யானோ யாதி ஸர்வத: ।
கஸ்தம் மதா$_3$மத$_3$ம் தே$_3$வம் மத$_3$ன்யோ ஞாதுமர்ஹதி ॥

आसीनः ஆஸீன: அமர்ந்துகொண்டு **दूरं** தூ$_3$ரம் தூரம் **व्रजति** வ்ரஜதி செல்கிறது. **शयानः** ச$_1$யான: படுத்துக்கொண்டு **सर्वतः** ஸர்வத: எல்லா இடத்திற்கும் **याति** யாதி செல்கிறது. **मद-अमदं** மத$_3$-அமத$_3$ம் ஸுகம் உடையதாகவும் ஸுகம் அற்றதாகவும் உள்ள **तं देवं** தம் தே$_3$வம் அந்த ஆத்மாவை **मदन्यः** மத$_3$ன்ய: என்னைத்தவிர வேறு **कः** க: யார்தான் **ज्ञातुं अर्हति** ஞாதும் அர்ஹதி அறியமுடியும்.

அமர்ந்துகொண்டு தூரம் செல்கிறது. படுத்துக்கொண்டு எல்லா இடத்திற்கும் செல்கிறது. ஸுகம் உடையதாகவும் ஸுகம் அற்றதாகவும் உள்ள அந்த ஆத்மாவை என்னைத் தவிர வேறு யார்தான் அறியமுடியும்?

தன்னைப்போல தகுதியை அடைந்தவர்களால்தான் ஆத்ம தத்துவத்தை அறியமுடியும் என்று யமதேவர் கூறுகிறார்.

२२. अशरीरँ शरीरेषु अनवस्थेष्ववस्थितम्।
महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति॥

22. அச$_1$ரீரம்ச$_1$ரீரேஷு அனவஸ்தே$_2$ஷ்வவஸ்தி$_2$தம் ।
மஹாந்தம் விபு$_4$மாத்மானம் மத்வா தீ$_4$ரோ ந சோ$_1$சதி ॥

शरीरेषु ச$_1$ரீரேஷு உடல்களுள் **अशरीरं** அச$_1$ரீரம் உடலற்றதாகவும் **अनवस्थेषु** அனவஸ்தே$_2$ஷு நிலையற்றவற்றுள் **अवस्थितं** அவஸ்தி$_2$தம் நிலை யானதுமான **महान्तं** மஹாந்தம் பெரிய **विभुं** விபு$_4$ம் அனைத்

தையும் வ்யாபிக்கின்ற **आत्मानं** ஆத்மானம் ஆத்மாவை **मत्वा** மத்வா அறிந்து **धीरः** தீ₄ர: தீரன் **न शोचति** ந சோ₁சதி துயரப்படுவதில்லை.

உடல்களுள் உடலற்றதாகவும் நிலையற்றவற்றுள் நிலை யானதுமான, பெரிய, அனைத்தையும் வ்யாபிக்கின்ற, ஆத்மாவை அறிந்து தீரன் துயரப்படுவதில்லை.

२३. नायमात्मा प्रवचनेन लभ्यः न मेधया न बहुना श्रुतेन ।
यमेवैष वृणुते तेन लभ्यः तस्यैष आत्मा विवृणुते तनूँ स्वाम् ॥

23. நாயமாத்மா ப்ரவசனேன லப்₄ய:
ந மேத₄யா ந ப₃ஹுனா ச்₁ருதேன ।
யமேவைஷ வ்ருணுதே தேன லப்₄ய:
தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனூம்ஸ்வாம் ॥

अयं आत्मा அயம் ஆத்மா இந்த ஆத்மா **प्रवचनेन** ப்ரவசனேன (வேதத்தை) ஓதுவதால் (மட்டும்) **न लभ्यः** ந லப்₄ய: அடையப் படுவதில்லை. **मेधया** மேத₄யா ஞாபகசக்தியால் (மட்டும்) **न** ந அடையப்படுவதில்லை. **बहुना श्रुतेन** ப₃ஹுனா ச்₁ருதேன மீண்டும் மீண்டும் கேட்பதால் (மட்டும்) **न** ந அடையப்படுவதில்லை. **एषः** ஏஷ: இந்த (ஆத்மா) **यं** யம் யாரை **वृणुते** வ்ருணுதே தேர்ந் தெடுக்கிறதோ **तेन एव** தேன ஏவ அவனால்தான் **लभ्यः** லப்₄ய: அடையப்படுகிறது. **एषः आत्मा** ஏஷ: ஆத்மா இந்த ஆத்மா **तस्य** தஸ்ய அவனுக்கு **स्वां** ஸ்வாம் தன் **तनूं** தனூம் ஸ்வரூபத்தை **विवृणुते** விவ்ருணுதே விளக்குகிறது.

இந்த ஆத்மா, வேதத்தை ஓதுவதால் மட்டும் அடையப் படுவதில்லை. ஞாபக சக்தியால் மட்டும் அடையப்படுவதில்லை. மீண்டும் மீண்டும் கேட்பதால் மட்டும் அடையப்படுவதில்லை. இந்த ஆத்மா யாரைத் தேர்ந்தெடுக்கிறதோ அவனால்தான் அடையப்படுகிறது. இந்த ஆத்மா அவனுக்குத் தன் ஸ்வ ரூபத்தை விளக்குகிறது.

२४. नाविरतो दुश्चरिताद् नाशान्तो नासमाहितः ।
नाशान्तमनसो वापि प्रज्ञानेनैनमाप्नुयात् ।।

24. நாவிரதோ து$_3$ச்$_1$சரிதாத்$_3$ நாசா$_1$ந்தோ நாஸமாஹித: ।
நாசா$_1$ந்தமனஸோ வாபி ப்ரஜ்ஞானேனைனமாப்னுயாத் ।।

दुश्चरिताद् து$_3$ச்$_1$சரிதாத்$_3$ தவறான நடத்தையிலிருந்து **अविरतः** அவிரத: விலகாதவன் **एनं** ஏனம் இந்த (ஆத்மாவை) **प्रज्ञानेन** ப்ரஜ்ஞானேன அறிவினால் **न आप्नुयात्** ந ஆப்னுயாத் அடைய முடியாது. **अशान्तः** அசா$_1$ந்த: இந்த்ரிய ஒழுக்கமற்றவன் **न** ந அடைய முடியாது. **असमाहितः** அஸமாஹித: மன ஒருமுகப்பாடு அற்றவன் **न** ந அடைய முடியாது. **अशान्तमनसः वा अपि** அசா$_1$ந்தமனஸ: வா அபி மன அமைதி அற்றவனாலும் **न** ந அடைய முடியாது.

தவறான நடத்தையிலிருந்து விலகாதவன் இந்த ஆத்மாவை அறிவினால் அடைய முடியாது. இந்த்ரிய ஒழுக்க மற்றவன் அடைய முடியாது. மன ஒருமுகப்பாடு அற்றவன் அடைய முடியாது. மன அமைதியற்றவனாலும் அடைய முடியாது.

२५. यस्य ब्रह्म च क्षत्रं च उभे भवत ओदनः ।
मृत्युर्यस्योपसेचनं क इत्था वेद यत्र सः ।।

25. யஸ்ய ப்$_3$ரஹ்ம ச க்ஷத்ரம் ச உபே$_4$ ப$_4$வத ஓத$_3$ன: ।
ம்ருத்யுர்யஸ்யோபஸேசனம் க இத்தா$_2$ வேத$_3$ யத்ர ஸ: ।।

यस्य யஸ்ய எந்த (ஆத்மாவுக்கு) **ब्रह्म च** ப்$_3$ரஹ்ம ச ப்ராஹ்மணன் **क्षत्रं च** க்ஷத்ரம் ச க்ஷத்ரியன் **उभे** உபே$_4$ ஆகிய இருவரும் **ओदनः** ஓத$_3$ன: உணவு **भवतः** ப$_4$வத: ஆகின்றனரோ **यस्य** யஸ்ய எந்த (ஆத்மாவுக்கு) **मृत्युः** ம்ருத்யு: யமதேவர் **उपसेचनं** உபஸேசனம் ஊறுகாய் ஆவாரோ **सः** ஸ: அந்த (ஆத்மா) **यत्र** யத்ர எங்குள்ளது என்றும் **इत्था** இத்தா$_2$ இவ்விதம் உள்ளது என்றும் **कः** க: யாரால்தான் **वेद** வேத$_3$ அறியமுடியும்.

எந்த ஆத்மாவுக்கு ப்ராஹ்மணன், க்ஷத்ரியன் ஆகிய இருவரும் உணவு ஆகின்றனரோ, எந்த ஆத்மாவுக்கு யமதேவர் ஊறுகாய் ஆவாரோ, அந்த ஆத்மா எங்குள்ளது என்றும் இவ்விதம் உள்ளது என்றும் யாரால்தான் அறியமுடியும்?

அனைத்துக்கும் ஆதாரமாக இருக்கின்ற ஆத்மாவுக்கு யமதேவரே ஊறுகாய் போல என்ற உவமையிலிருந்து ஆத்மா மரணமற்றது, அனைத்தும் ஆத்மாவில் ஒடுங்குகின்றது என்ற கருத்து கூறப் படுகிறது. இப்படிப்பட்ட ஆத்மஸ்வரூபத்தைத் தகுதியானவர்களே அறிவார்கள். மற்றவர்களால் அறியமுடியாது என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

इति प्रथमाध्याये द्वितीया वल्ली

முதல் அத்யாயத்தில் இரண்டாவது வல்லி முடிவுற்றது.

प्रथमाध्याये तृतीया वल्ली

முதல் அத்யாயத்தில் மூன்றாவது வல்லி

१. ऋतं पिबन्तौ सुकृतस्य लोके गुहां प्रविष्टौ परमे परार्धे।
छायातपौ ब्रह्मविदो वदन्ति पञ्चाग्नयो ये च त्रिणाचिकेताः ।।

1. ரிதம் பிப$_3$ந்தெள ஸுக்ருதஸ்ய லோகே
கு$_3$ஹாம் ப்ரவிஷ்டெள பரமே பரார்தே$_4$ ।
சா$_2$யாதபெள ப்$_3$ரஹ்மவிதோ$_3$ வத$_3$ந்தி
பஞ்சாக்$_3$னயோ யே ச த்ரிணாசிகேதா: ।।

सुकृतस्य ஸுக்ருதஸ்ய தன்னால் செய்யப்பட்ட **ऋतं** ரிதம் கர்ம பலனை **पिबन्तौ** பிப$_3$ந்தெள அனுபவித்துக்கொண்டுள்ள **छाया-आतपौ** சா$_2$யா-ஆதபெள நிழலும் ஒளியும் போன்ற (ஜீவாத்மாவும் பரமாத்மாவும்) **लोके** லோகே உடலில் உள்ள **परार्धे** பரார்தே$_4$ ப்ரஹ்மனின் இருப்பிடமான **परमे** பரமே மேலான **गुहां** கு$_3$ஹாம் ஹ்ருதயகுகையில் **प्रविष्टौ** ப்ரவிஷ்டெள நுழைந்துள்ளார்கள் (என்று) **ब्रह्मविदः** ப்$_3$ரஹ்மவித$_3$: ப்ரஹ்மனை அறிந்தவர்கள் **वदन्ति** வத$_3$ந்தி கூறுகிறார்கள். **ये च** யே ச மேலும் **पञ्चाग्नयः** பஞ்சாக்$_3$னய: ஐந்து அக்னியில் யாகம் செய்பவர்களும் **त्रिणाचिकेताः** த்ரிணாசிகேதா: மும்முறை நாசிகேதம் என்ற யாகத்தைச் செய்தவர்களும் (இவ்விதம் கூறுகிறார்கள்).

தன்னால் செய்யப்பட்ட கர்மபலனை அனுபவித்துக் கொண்டுள்ள, நிழலும் ஒளியும் போன்ற ஜீவாத்மாவும் பரமாத்மாவும் உடலில் உள்ள ப்ரஹ்மனின் இருப்பிடமான, மேலான ஹ்ருதய குஹையில் நுழைந்துள்ளார்கள் என்று ப்ரஹ்மனை அறிந்தவர்கள் கூறுகிறார்கள். மேலும் ஐந்து அக்னியில் யாகம் செய்பவர்களும் மும்முறை நாசிகேதம் என்ற யாகத்தைச் செய்தவர்களும் இவ்விதம் கூறுகிறார்கள்.

२. यः सेतुरीजानानाम् अक्षरं ब्रह्म यत् परम्।
अभयं तितीर्षतां पारं नाचिकेतँशकेमहि॥

2. ய: ஸேதுரீஜானானாம் அக்ஷரம் ப்$_{3}$ரஹ்ம யத் பரம் ।
அப$_{4}$யம் திதீர்ஷதாம் பாரம் நாசிகேதம்ச$_{1}$கேமஹி ॥

ईजानानां ஈஜானானாம் யாகம் செய்பவர்களுக்கு (ஸ்வர்கத்திற்கான) **यः सेतुः** ய: ஸேது: எந்த வழி உள்ளதோ **नाचिकेतं** நாசிகேதம் அந்த நாசிகேதம் என்ற யாகத்தை (அறிந்து செயல்பட நாம்) **शकेमहि** ச$_{1}$கேமஹி முற்படலாம். (அல்லது ஸம்ஸாரத்தின்) **पारं** பாரம் கரையை **तितीर्षतां** திதீர்ஷதாம் கடக்க விரும்புபவர்களின் **यत् परं** யத் பரம் அந்த மேலான **अभयं** அப$_{4}$யம் பயமற்ற **अक्षरं** அக்ஷரம் அழியாத **ब्रह्म** ப்$_{3}$ரஹ்ம ப்ரஹ்மனை (நாம் அறிய முற்படலாம்).

யாகம் செய்பவர்களுக்கு ஸ்வர்கத்திற்கான எந்த வழி உள்ளதோ அந்த நாசிகேதம் என்ற யாகத்தை அறிந்து செயல்பட நாம் முற்படலாம். அல்லது ஸம்ஸாரத்தின் கரையைக் கடக்க விரும்புபவர்களின் அந்த மேலான, பயமற்ற, அழியாத ப்ரஹ்மனை நாம் அறிய முற்படலாம்.

ஒரு ஜீவன் யாகத்தின் துணைகொண்டு ஸ்வர்கம் முதலிய லோகங்களை அடைய இந்த வாழ்க்கையைப் பயன்படுத்தலாம். அல்லது ப்ரஹ்மத்தை அறிந்து மோக்ஷத்தை அடைய பயன்படுத்தலாம் என்பது இங்கு புகட்டப்படும் கருத்து.

३. आत्मानँ रथिनं विद्धि शरीरँ रथमेव तु।
बुद्धिं तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च॥

3. ஆத்மானம் ரதி$_{2}$னம் வித்$_{3}$தி$_{4}$ ச$_{1}$ரீரம் ரத$_{2}$மேவ து ।
பு$_{3}$த்$_{3}$தி$_{4}$ம் து ஸாரதி$_{2}$ம் வித்$_{3}$தி$_{4}$ மன: ப்ரக்$_{3}$ரஹமேவ ச ॥

आत्मानं ஆத்மானம் ஜீவாத்மாவை **रथिनं** ரதி$_{2}$னம் தேரில் அமர்ந்தி ருப்பவனாகவும் **शरीरं** ச$_{1}$ரீரம் உடலை **रथं एव तु** ரத$_{2}$ம் ஏவ து தேராகவும் **विद्धि** வித்$_{3}$தி$_{4}$ அறிவாயாக. **बुद्धिं तु** பு$_{3}$த்$_{3}$தி$_{4}$ம் து

புத்தியை **सारथिं** ஸாரதி$_2$ம் தேரோட்டியாகவும் **मनः च** மன: ச மனதை **प्रग्रहं एव** ப்ரக்$_3$ரஹம் ஏவ கடிவாளமாகவும் **विद्धि** வித்$_3$தி$_4$ அறிவாயாக.

ஜீவாத்மாவைத் தேரில் அமர்ந்திருப்பவனாகவும் உடலைத் தேராகவும் அறிவாயாக. புத்தியைத் தேரோட்டியாகவும் மனதைக் கடிவாளமாகவும் அறிவாயாக.

४. इन्द्रियाणि हयानाहुः विषयाँ स्तेषु गोचरान् ।
आत्मेन्द्रियमनोयुक्तं भोक्तेत्याहुर्मनीषिणः ॥

4. இந்த்$_3$ரியாணி ஹயானாஹு:
விஷயாம் ஸ்தேஷு கோ$_3$சரான் ।
ஆத்மேந்த்$_3$ரியமனோயுக்தம்
போ$_4$க்தேத்யாஹுர்மனீஷிண: ॥

इन्द्रियाणि இந்த்$_3$ரியாணி இந்த்ரியங்களை **हयान्** ஹயான் குதிரைகளாகவும் **विषयान्** விஷயான் பொருள்களை **तेषु** தேஷு அவற்றின் **गोचरान्** கோ$_3$சரான் பாதைகளாகவும் **आहुः** ஆஹு: கூறுகிறார்கள். **आत्म-इन्द्रिय-मनः-युक्तं** ஆத்ம-இந்த்$_3$ரிய-மன:-யுக்தம் உடல் இந்த்ரியம் மனம் இவற்றுடன் கூடிய (ஜீவாத்மாவை) **भोक्ता** போ$_4$க்தா அனுபவிப்பவன் **इति** இதி என்று **मनीषिणः** மனீஷிண: ஞானிகள் **आहुः** ஆஹு: கூறுகிறார்கள்.

இந்த்ரியங்களைக் குதிரைகளாகவும் பொருள்களை அவற்றின் பாதைகளாகவும் கூறுகிறார்கள். உடல், இந்த்ரியம், மனம் இவற்றுடன் கூடிய ஜீவாத்மாவை, அனுபவிப்பவன் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

५. यस्त्वविज्ञानवान् भवति अयुक्तेन मनसा सदा ।
तस्येन्द्रियाण्यवश्यानि दुष्टाश्वा इव सारथेः ॥

5. யஸ்த்வவிஞானவான் ப$_4$வதி அயுக்தேன மனஸா ஸதா$_3$ ।
தஸ்யேந்த்$_3$ரியாண்யவச்$_1$யானி து$_3$ஷ்டாச்$_1$வா இவ ஸாரதே$_2$: ॥

यः तु யஃ து யார் **अविज्ञानवान्** அவிஞானவான் அறிவற்றவனாகவும் **सदा** ஸதா$_3$ என்றும் **अयुक्तेन** அயுக்தேன நெறிப்படுத்தப்படாத **मनसा** மனஸா மனதுடன் கூடியவனாகவும் **भवति** ப$_4$வதி உள்ளானோ **तस्य** தஸ்ய அவனுடைய **इन्द्रियाणि** இந்த்$_3$ரியாணி இந்த்ரியங்கள் **सारथेः** ஸாரதே$_2$: தேரோட்டியின் **दुष्टाश्वाः** து$_3$ஷ்டாச்$_1$வா: மோசமான குதிரைகள் **इव** இவ போல் **अवश्यानि** அவச்$_1$யாணி கட்டுப்படாமல் இருக்கின்றன.

யார் அறிவற்றவனாகவும் என்றும் நெறிப்படுத்தப்படாத மனதுடன் கூடியவனாகவும் உள்ளானோ, அவனுடைய இந்த்ரியங்கள் தேரோட்டியின் மோசமான குதிரைகள் போல் கட்டுப்படாமல் இருக்கின்றன.

६. यस्तु विज्ञानवान् भवति युक्तेन मनसा सदा ।
तस्येन्द्रियाणि वश्यानि सदश्वा इव सारथेः ।।

6. யஸ்து விஞானவான் ப$_4$வதி யுக்தேன மனஸா ஸதா$_3$ ।
தஸ்யேந்த்$_3$ரியாணி வச்$_1$யாணி ஸத$_3$ச்$_1$வா இவ ஸாரதே$_2$: ।।

यः तु யஃ து யார் **विज्ञानवान्** விஞானவான் அறிவுடையவனாகவும் **सदा** ஸதா$_3$ என்றும் **युक्तेन** யுக்தேன நெறிப்படுத்தப்பட்ட **मनसा** மனஸா மனதுடன் கூடியவனாகவும் **भवति** ப$_4$வதி உள்ளானோ **तस्य** தஸ்ய அவனுடைய **इन्द्रियाणि** இந்த்$_3$ரியாணி இந்த்ரியங்கள் **सारथेः** ஸாரதே$_2$: தேரோட்டியின் **सदश्वाः** ஸத$_3$ச்$_1$வா: நல்ல குதிரைகள் **इव** இவ போல் **वश्यानि** வச்$_1$யாணி கட்டுப்பட்டு இருக்கின்றன.

யார் அறிவுடையவனாகவும் என்றும் நெறிப்படுத்தப்பட்ட மனதுடன் கூடியவனாகவும் உள்ளானோ, அவனுடைய இந்த்ரியங்கள் தேரோட்டியின் நல்ல குதிரைகள் போல் கட்டுப்பட்டு இருக்கின்றன.

७. यस्त्वविज्ञानवान् भवति अमनस्कः सदाशुचिः ।
न स तत्पदमाप्नोति सँसारं चाधिगच्छति ।।

7. யஸ்த்வவிஞானவான் ப$_4$வதி அமனஸ்க: ஸதா$_3$ சு$_1$சி: ।
நு ஸ தத்பத$_3$மாப்னோதி ஸம்ஸாரம் சாதி$_4$க$_3$ச்ச$_2$தி ।।

यः तु ய: து யார் **अविज्ञानवान्** அவிஞானவான் அறிவற்றவனாகவும் **अमनस्कः** அமனஸ்க: நெறிப்படுத்தப்படாத மனதையுடையவனாகவும் **सदा** ஸதா$_3$ என்றும் **अशुचिः** அசு$_1$சி: தூய்மையற்றவனாகவும் **भवति** ப$_4$வதி உள்ளானோ **सः** ஸ: அவன் **तत् पदं** தத் பத$_3$ம் அந்தப்பதத்தை **न आप्नोति** நு ஆப்னோதி அடையமாட்டான். **संसारं च** ஸம்ஸாரம் ச ஸம்ஸாரத்தை **अधिगच्छति** அதி$_4$க$_3$ச்ச$_2$தி அடைகிறான்.

யார் அறிவற்றவனாகவும் நெறிப்படுத்தப்படாத மனதை யுடையவனாகவும் என்றும் தூய்மையற்றவனாகவும் உள்ளானோ, அவன் அந்தப் பதத்தை அடையமாட்டான். ஸம்ஸாரத்தை அடைகிறான்.

௮. यस्तु विज्ञानवान् भवति समनस्कः सदा शुचिः ।
स तु तत्पदमाप्नोति यस्माद् भूयो न जायते ।।

8. யஸ்து விஞானவான் ப$_4$வதி ஸமனஸ்க: ஸதா$_3$ சு$_1$சி: ।
ஸ து தத்பத$_3$மாப்னோதி யஸ்மாத்$_3$ பூ$_4$யோ நு ஜாயதே ।।

यः तु ய: து யார் **विज्ञानवान्** விஞானவான் அறிவுடையவனாகவும் **समनस्कः** ஸமனஸ்க: நெறிப்படுத்தப்பட்ட மனதையுடையவனாகவும் **सदा** ஸதா$_3$ என்றும் **शुचिः** சு$_1$சி: தூய்மையுடையவனாகவும் **भवति** ப$_4$வதி உள்ளானோ **सः तु** ஸ: து அவன் **यस्माद्** யஸ்மாத்$_3$ எதை அடைவதால் **भूयः** பூ$_4$ய: மீண்டும் **न जायते** நு ஜாயதே பிறப்பதில்லையோ **तत् पदं** தத் பத$_3$ம் அந்தப்பதத்தை **आप्नोति** ஆப்னோதி அடைகிறான்.

யார் அறிவுடையவனாகவும் நெறிப்படுத்தப்பட்ட மனதை யுடையவனாகவும் என்றும் தூய்மையுடையவனாகவும் உள்ளானோ, அவன், எதை அடைவதால் மீண்டும் பிறப்ப தில்லையோ, அந்தப்பதத்தை அடைகிறான்.

९. **विज्ञानसारथिर्यस्तु मनःप्रग्रहवान्नरः ।**
सोऽध्वनः पारमाप्नोति तद्विष्णोः परमं पदम् ॥

9. விஞ்ஞானஸாரதி$_2$ர்யஸ்து மன:ப்ரக்$_3$ரஹவாந்நர: ।
ஸோऽத்$_4$வன: பாரமாப்னோதி தத்$_3$விஷ்ணோ: பரமம் பத$_3$ம் ॥

यः नरः तु ய: நர: து எந்த மனிதன் **विज्ञानसारथिः** விஞ்ஞானஸாரதி$_2$: அறிவுடைய தேரோட்டியைப் போலவும் **मनः-प्रग्रहवान्** மன:-ப்ரக்$_3$ரஹவான் (தன்) வசத்திலுள்ள கடிவாளம் போன்ற மனதையுடையவனாகவும் உள்ளானோ **सः** ஸ: அவன் **अध्वनः** அத்$_4$வன: பயணத்தின் **पारं** பாரம் முடிவை **आप्नोति** ஆப்னோதி அடைகிறான். **तत्** தத் அது **विष्णोः** விஷ்ணோ: ப்ரஹ்மனுடைய **परमं** பரமம் மேலான **पदं** பத$_3$ம் இருப்பிடம்.

எந்த மனிதன் அறிவுடைய தேரோட்டியைப் போலவும் தன் வசத்திலுள்ள கடிவாளம் போன்ற மனதையுடையவனாகவும் உள்ளானோ, அவன் பயணத்தின் முடிவை அடைகிறான். அது ப்ரஹ்மனுடைய மேலான இருப்பிடம்.

१०. **इन्द्रियेभ्यः परा ह्यर्थाः अर्थेभ्यश्च परं मनः ।**
मनसस्तु परा बुद्धिः बुद्धेरात्मा महान् परः ॥

10. இந்த்$_3$ரியேப்$_4$ய: பரா ஹ்யர்தா$_2$: அர்தே$_2$ப்$_4$யச்$_1$ச பரம் மன: ।
மனஸஸ்து பரா பு$_3$த்$_3$தி$_4$: பு$_3$த்$_3$தே$_4$ராத்மா மஹான் பர: ॥

इन्द्रियेभ्यः இந்த்$_3$ரியேப்$_4$ய: இந்த்ரியங்களைக் காட்டிலும் **अर्थाः हि** அர்தா$_2$: ஹி விஷயங்கள் **पराः** பரா: மேலானவை. **अर्थेभ्यः च** அர்தே$_2$ப்$_4$ய: ச விஷயங்களைக் காட்டிலும் **मनः** மன: மனம் **परं** பரம் மேலானது. **मनसः तु** மனஸ: து மனதைக்காட்டிலும் **बुद्धिः** பு$_3$த்$_3$தி$_4$: புத்தி **परा** பரா மேலானது. **बुद्धेः** பு$_3$த்$_3$தே$_4$: புத்தியைக் காட்டிலும் **महान् आत्मा** மஹான் ஆத்மா ஹிரண்யகர்பதத்துவம் **परः** பர: மேலானது.

இந்த்ரியங்களைக் காட்டிலும் விஷயங்கள் மேலானவை. விஷயங்களைக் காட்டிலும் மனம் மேலானது. மனதைக் காட்டிலும் புத்தி மேலானது. புத்தியைக் காட்டிலும் ஹிரண்யகர்ப தத்துவம் மேலானது.

११. महतः परमव्यक्तम् अव्यक्तात् पुरुषः परः ।
पुरुषान्न परं किञ्चित् सा काष्ठा सा परा गतिः ॥

11. மஹத: பரமவ்யக்தம் அவ்யக்தாத் புருஷ: பர: ।
புருஷாந்ந பரம் கிஞ்சித் ஸா காஷ்டா₂ ஸா பரா க₃தி: ॥

महतः மஹத: ஹிரண்யகர்ப தத்துவத்தைக் காட்டிலும் **अव्यक्तं** அவ்யக்தம் மாயை **परं** பரம் மேலானது. **अव्यक्तात्** அவ்யக்தாத் மாயையைக்காட்டிலும் **पुरुषः** புருஷ: ஆத்மா **परः** பர: மேலானது. **पुरुषात्** புருஷாத் ஆத்மாவைக் காட்டிலும் **परं** பரம் மேலானது **न किञ्चित्** ந கிஞ்சித் ஒன்றும் இல்லை. **सा काष्ठा** ஸா காஷ்டா₂ அதுவே முடிவான இடம். **सा परा** ஸா பரா அதுவே மேலான **गतिः** க₃தி: லக்ஷ்யம்.

ஹிரண்யகர்ப தத்துவத்தைக் காட்டிலும் மாயை மேலானது. மாயையைக் காட்டிலும் ஆத்மா மேலானது. ஆத்மாவைக் காட்டிலும் மேலானது ஒன்றும் இல்லை. அதுவே முடிவான இடம். அதுவே மேலான லக்ஷ்யம்.

१२. एष सर्वेषु भूतेषु गूढोऽऽत्मा न प्रकाशते ।
दृश्यते त्वग्र्यया बुद्ध्या सूक्ष्मया सूक्ष்மदर्शिभिः ॥

12. ஏஷ ஸர்வேஷு பூ₄தேஷு
கூ₃டோ₄ऽऽத்மா ந ப்ரகாச₁தே ।
த்₃ருச₁யதே த்வக்₃ர்யயா பு₃த்₃த்₄யா
ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்மத₃ர்சி₁பி₄: ॥

सर्वेषु भूतेषु ஸர்வேஷு பூ₄தேஷு எல்லா உயிரினங்களுக்குள்ளும் **गूढः** கூ₃ட₄: மறைந்திருக்கின்ற **एषः आत्मा** ஏஷ: ஆத்மா இந்த ஆத்மா **न प्रकाशते** ந ப்ரகாச₁தே தெளிவாக விளங்குவதில்லை. **अग्र्यया** அக்₃ர்யயா கூர்மையான **सूक्ष्मया** ஸூக்ஷ்மயா நுட்பமான **बुद्ध्या** பு₃த்₃த்₄யா புத்தியின் மூலம் **सूक्ष्म-दर्शिभिः** ஸூக்ஷ்ம-த₃ர்சி₁பி₄: நுண்ணிய பார்வை உடையவர்களால் **तु दृश्यते** து த்₃ருச்₁யதே (இந்த ஆத்மா) அறியப்படுகிறது.

எல்லா உயிரினங்களுக்குள்ளும் மறைந்திருக்கின்ற இந்த ஆத்மா தெளிவாக விளங்குவதில்லை. கூர்மையான, நுட்பமான புத்தியின் மூலம் நுண்ணிய பார்வை உடையவர்களால் இந்த ஆத்மா அறியப்படுகிறது.

१३. यच्छेद्वाङ्मनसी प्राज्ञः तद्यच्छेज्ज्ञान आत्मनि।
ज्ञानमात्मनि महति नियच्छेत् तद्यच्छेच्छान्त आत्मनि॥

13. யச்சே₂த்₃வாங்மனஸீ ப்ராஜ்ஞ: தத்₃யச்சே₂ஜ்ஞான ஆத்மனி।
ஜ்ஞானமாத்மனி மஹதி நியச்சே₂த் தத்₃யச்சே₂ச்சா₂ந்த ஆத்மனி ॥

प्राज्ञः ப்ராஜ்ஞ: ஞானி **वाक्** வாக் வாக்கை **मनसी** மனஸீ மனதில் **यच्छेत्** யச்சே₂த் ஒடுக்கவேண்டும். **तत्** தத் அதை (மனதை) **ज्ञाने आत्मनि** ஞானே ஆத்மனி புத்தியில் **यच्छेत्** யச்சே₂த் ஒடுக்க வேண்டும். **ज्ञानं** ஞானம் புத்தியை **महति आत्मनि** மஹதி ஆத்மனி ஸமஷ்டி புத்தியில் **नियच्छेत्** நியச்சே₂த் ஒடுக்கவேண்டும். **तत्** தத் அதை (ஸமஷ்டி புத்தியை) **शान्ते आत्मनि** சா₁ந்தே ஆத்மனி சாந்தமான ஆத்மாவில் **यच्छेत्** யச்சே₂த் ஒடுக்கவேண்டும்.

ஞானி, வாக்கை மனதில் ஒடுக்க வேண்டும். மனதை புத்தியில் ஒடுக்க வேண்டும். புத்தியை ஸமஷ்டி புத்தியில் ஒடுக்க வேண்டும். ஸமஷ்டி புத்தியை சாந்தமான ஆத்மாவில் ஒடுக்க வேண்டும்.

१४. उत्तिष्ठत जाग्रत प्राप्य वरान् निबोधत।
क्षुरस्य धारा निशिता दुरत्यया दुर्गं पथस्तत् कवयो वदन्ति॥

14. உத்திஷ்ட2த ஜாக்3ரத
ப்ராப்ய வரான் நிபோ3த4த।
க்ஷுரஸ்ய தா4ரா நிசி1தா து3ரத்யயா
து3ர்க3ம் பத2ஸ்தத் கவயோ வத3ந்தி॥

उत्तिष्ठत உத்திஷ்ட2த எழுந்துகொள்வீர்களாக. **जाग्रत** ஜாக்3ரத: விழித்துக் கொள்வீர்களாக. **वरान्** வரான் சான்றோர்களை **प्राप्य** ப்ராப்ய அடைந்து **निबोधत** நிபோ3த4த (ஆத்மாவை) அறிவீர்களாக. **क्षुरस्य** க்ஷுரஸ்ய கத்தியினுடைய **निशिता** நிசி1தா கூர்மையான **धारा** தா4ரா நுனியில் (நடப்பது எவ்விதம்) **दुरत्यया** து3ரத்யயா கடினமானதோ **तत्** தத் (அவ்விதம் ஞானத்திற்கான) இந்த **पथः** பத2: பாதை **दुर्गं** து3ர்க3ம் கடினமானது (என்று) **कवयः** கவய: ஞானிகள் **वदन्ति** வத3ந்தி கூறுகிறார்கள்.

எழுந்து கொள்வீர்களாக. விழித்துக் கொள்வீர்களாக. சான்றோர்களை அடைந்து ஆத்மாவை அறிவீர்களாக. கத்தியினுடைய கூர்மையான நுனியில் நடப்பது எவ்விதம் கடினமானதோ, அவ்விதம் ஞானத்திற்கான இந்தப் பாதை யானது கடினமானது என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

१५. अशब्दमस्पर्शमरूपमव्ययं तथारसं नित्यमगन्धवच्च यत्।
अनाद्यनन्तं महतः परं ध्रुवं निचाय्य तन्मृत्युमुखात् प्रमुच्यते॥

15. அச1ப்3த3மஸ்பர்ச1மரூபமவ்யயம்
ததா2ரஸம் நித்யமக3ந்த4வச்ச யத்।
அனாத்3யனந்தம் மஹத: பரம் த்4ருவம்
நிசாய்ய தந்ம்ருத்யுமுகா2த் ப்ரமுச்யதே॥

यत् யத் எது **अशब्दं** அச$_1$ப்$_3$த$_3$ம் சப்தமற்றதோ **अस्पर्शं** அஸ்பர்ச$_1$ம் ஸ்பர்சமற்றதோ **अरूपं** அரூபம் ரூபமற்றதோ **तथा अरसं** ததா$_2$ அரஸம் சுவையற்றதோ **अगन्धवत् च** அக$_3$ந்த$_4$வத் ச வாஸனையற்றதோ **अव्ययं** அவ்யயம் தேய்வுறாததோ **नित्यं** நித்யம் என்றும் உள்ளதோ **अनादि-अनन्तं** அனாதி$_3$-அனந்தம் தோற்றமற்றதோ முடிவற்றதோ **महतः** மஹத: ஹிரண்யகர்பருக்கும் **परं** பரம் மேலானதோ **ध्रुवं** த்$_4$ருவம் அழியாததோ **तत्** தத் அதை **निचाय्य** நிசாய்ய தெளிவாக அறிந்து **मृत्युमुखात्** ம்ருத்யுமுகா$_2$த் மரணத்தினுடைய வாயிலிருந்து **प्रमुच्यते** ப்ரமுச்யதே (ஒருவன்) விடுவிக்கப்படுகிறான்.

எது சப்தமற்றதோ, ஸ்பர்சமற்றதோ, ரூபமற்றதோ, சுவையற்றதோ, வாஸனையற்றதோ, தேய்வுறாததோ, என்றும் உள்ளதோ, தோற்றமற்றதோ, முடிவற்றதோ, ஹிரண்யகர்பருக்கும் மேலானதோ, அழியாததோ, அதைத் தெளிவாக அறிந்து மரணத்தினுடைய வாயிலிருந்து ஒருவன் விடுவிக்கப்படுகிறான்.

१६. नाचिकेतमुपाख्यानं मृत्युप्रोक्तं सनातनम् ।
उक्त्वा श्रुत्वा च मेधावी ब्रह्मलोके महीयते ।।

16. நாசிகேதமுபாக்$_2$யானம் ம்ருத்யுப்ரோக்தம் ஸனாதனம் ।
உக்த்வா ச்$_1$ருத்வா ச மேதா$_4$வீ ப்$_3$ரஹ்மலோகே மஹீயதே ।।

नाचिकेतं நாசிகேதம் நசிகேதனால் அடையப்பட்ட **मृत्युप्रोक्तं** ம்ருத்யுப்ரோக்தம் யமதேவரால் உபதேசிக்கப்பட்ட **सनातनं** ஸனாதனம் என்றும் தொடர்ந்துவந்த **उपाख्यानं** உபாக்$_2$யானம் இந்த உபதேசத்தை **श्रुत्वा** ச்$_1$ருத்வா கேட்டு **उक्त्वा च** உக்த்வா ச (பிறகு அதை) உபதேசிக்கின்ற **मेधावी** மேதா$_4$வீ ஞானி **ब्रह्मलोके** ப்$_3$ரஹ்மலோகே ப்ரஹ்மலோகத்தில் **महीयते** மஹீயதே மஹிமைப்படுத்தப்படுகிறான்.

நசிகேதனால் அடையப்பட்ட, யமதேவரால் உபதேசிக்கப் பட்ட, என்றும் தொடர்ந்து வந்த இந்த உபதேசத்தைக் கேட்டு, பிறகு அதை உபதேசிக்கின்ற ஞானி ப்ரஹ்மலோகத்தில் மஹிமைப்படுத்தப்படுகிறான்.

१७. य इमं परमं गुह्यं श्रावयेद् ब्रह्मसंसदि।
प्रयतः श्राद्धकाले वा तदानन्त्याय कल्पते तदानन्त्याय कल्पत इति ॥

17. ய இமம் பரமம் கு$_3$ஹ்யம்
ச்$_1$ராவயேத்$_3$ ப்$_3$ரஹ்மஸம்ஸதி$_3$ ।
ப்ரயத: ச்$_1$ராத்$_3$த$_4$காலே வா
ததா$_3$னந்த்யாய கல்பதே ததா$_3$னந்த்யாய கல்பத இதி ॥

यः ய: யார் **प्रयतः** ப்ரயத: தூய்மையானவனாக இருந்துகொண்டு **ब्रह्मसंसदि** ப்$_3$ரஹ்மஸம்ஸதி$_3$ ப்ராஹ்மணர்களுடைய ஸபையிலோ **श्राद्धकाले वा** ச்$_1$ராத்$_3$த$_4$காலே வா ச்ராத்த காலத்திலோ **इमं** இமம் இந்த **परमं** பரமம் மேலான **गुह्यं** கு$_3$ஹ்யம் ரஹஸ்யத்தை **श्रावयेत्** ச்$_1$ராவயேத் கேட்கும்படி செய்கிறானோ (அவனுக்கு) **तत्** தத் அது (அந்த ஸாதனையானது) **आनन्त्याय** ஆனந்த்யாய முடிவற்ற பலனையடைய **कल्पते** கல்பதே காரணமாகிறது. (அவனுக்கு) **तत्** தத் அது (அந்த ஸாதனையானது) **आनन्त्याय** ஆனந்த்யாய முடிவற்ற பலனையடைய **कल्पते** கல்பதே காரணமாகிறது. **इति** இதி இவ்விதம் (இந்த முதல் அத்யாயம் முடிவடைகிறது).

யார் தூய்மையானவனாக இருந்துகொண்டு, ப்ராஹ்மணர்களுடைய ஸபையிலோ, ச்ராத்த காலத்திலோ, இந்த மேலான ரஹஸ்யத்தைக் கேட்கும்படி செய்கிறானோ, அவனுக்கு அந்த ஸாதனையானது முடிவற்ற பலனையடையக் காரணமாகிறது. அவனுக்கு அந்த ஸாதனையானது முடிவற்ற பலனையடையக் காரணமாகிறது. இவ்விதம் இந்த முதல் அத்யாயம் முடிவடைகிறது.

इति प्रथमाध्याये तृतीया वल्ली

முதல் அத்யாயத்தில் மூன்றாவது வல்லி முடிவுற்றது.

द्वितीयाध्याये प्रथमा वल्ली

இரண்டாவது அத்யாயத்தில் முதல் வல்லி

१. पराञ्चि खानि व्यतृणत् स्वयम्भूः
तस्मात् पराङ् पश्यति नान्तरात्मन्।
कश्चिद्धीरः प्रत्यगात्मानमैक्षद्
आवृत्तचक्षुरमृतत्वमिच्छन्॥

1. பராஞ்சி கா$_2$னி வ்யத்ருணத் ஸ்வயம்பூ$_4$:
தஸ்மாத் பராங் பச்$_1$யதி நாந்தராத்மன் ।
கச்$_1$சித்$_3$தீ$_4$ர: ப்ரத்யகா$_3$த்மானமைக்ஷத்$_3$
ஆவ்ருத்தசக்ஷுரம்ருதத்வமிச்ச$_2$ன் ॥

स्वयम्भूः ஸ்வயம்பூ$_4$: ஈச்வரன் **खानि** கா$_2$னி இந்த்ரியங்களை **पराञ्चि** பராஞ்சி வெளிநோக்கு உடையனவாக (படைத்திருப்பதன் மூலம் நம்மை) **व्यतृणत्** வ்யத்ருணத் நாசப்படுத்திவிட்டார். **तस्मात्** தஸ்மாத் ஆகவே **पराङ्** பராங் (ஒருவன்) வெளிவிஷயத்தையே **पश्यति** பச்$_1$யதி பார்க்கிறான். **अन्तरात्मन्** அந்தராத்மன் தன்னுள் உள்ள ஆத்மாவை **न** ந பார்ப்பதில்லை. **कश्चित् धीरः** கச்$_1$சித் தீ$_4$ர: யாரோ ஒரு தீரன் **अमृतत्वं** அம்ருதத்வம் மரணமற்ற நிலையை **इच्छन्** இச்ச$_2$ன் விரும்பி **आवृत्त-चक्षुः** ஆவ்ருத்த-சக்ஷு: வெளியிலிருந்து விலகிய பார்வையை உடையவனாக **प्रत्यक्** ப்ரத்யக் தன்னுள் உள்ள **आत्मानं** ஆத்மானம் ஆத்மாவை **ऐक्षत्** ஐக்ஷத் பார்க்கிறான்.

ஈச்வரன் இந்த்ரியங்களை வெளிநோக்கு உடையனவாகப் படைத்திருப்பதன் மூலம் நம்மை நாசப்படுத்தி விட்டார். ஆகவே ஒருவன் வெளிவிஷயத்தையே பார்க்கிறான். தன்னுள் உள்ள ஆத்மாவைப் பார்ப்பதில்லை. யாரோ ஒரு தீரன் மரணமற்ற நிலையை விரும்பி, வெளியிலிருந்து விலகிய பார்வையை உடையவனாக தன்னுள் உள்ள ஆத்மாவைப் பார்க்கிறான்.

२. पराचः कामाननुयन्ति बालाः ते मृत्योर्यन्ति विततस्य पाशम्।
अथ धीरा अमृतत्वं विदित्वा ध्रुवमध्रुवेष्विह न प्रार्थयन्ते ।।

2. பராச: காமானனுயந்தி பா$_3$லா:
தே ம்ருத்யோர்யந்தி விததஸ்ய பாச$_1$ம் ।
அத$_2$ தீ$_4$ரா அம்ருதத்வம் விதி$_3$த்வா
த்$_4$ருவமத்$_4$ருவேஷ்விஹ ந ப்ரார்த$_2$யந்தே ।।

बालाः பா$_3$லா: பக்குவமற்றவர்கள் **पराचः** பராச: வெளியில் உள்ள **कामान्** காமான் இன்பங்களை **अनुयन्ति** அனுயந்தி நாடிச் செல்கிறார்கள். **ते** தே அவர்கள் **विततस्य** விததஸ்ய எங்கும் வ்யாபிக்கின்ற **मृत्योः** ம்ருத்யோ: மரணத்தின் **पाशं** பாச$_1$ம் வலையில் **यन्ति** யந்தி வீழ்கிறார்கள். **अथ** அத$_2$ ஆனால் **धीराः** தீ$_4$ரா: தீரர்கள் **अमृतत्वं** அம்ருதத்வம் மரணமற்ற **ध्रुवं** த்$_4$ருவம் என்றுமுள்ளதை **विदित्वा** விதி$_3$த்வா அறிந்து **अध्रुवेषु** அத்$_4$ருவேஷு அழிகின்றனவற்றுள் **इह** இஹ இங்கு **न प्रार्थयन्ते** ந ப்ரார்த$_2$யந்தே (எதையும்) நாடுவதில்லை.

பக்குவமற்றவர்கள் வெளியில் உள்ள இன்பங்களை நாடிச் செல்கிறார்கள். அவர்கள் எங்கும் வ்யாபிக்கின்ற மரணத்தின் வலையில் வீழ்கிறார்கள். ஆனால் தீரர்கள் மரணமற்ற, என்றுமுள்ளதை அறிந்து, அழிகின்றனவற்றுள் இங்கு எதையும் நாடுவதில்லை.

३. येन रूपं रसं गन्धं शब्दान् स्पर्शांश्च मैथुनान्।
एतेनैव विजानाति किमत्र परिशिष्यते। एतद्वै तत्।।

3. யேன ரூபம் ரஸம் க$_3$ந்த$_4$ம்
ச$_1$ப்$_3$தா$_3$ன் ஸ்பர்சா$_1$ம்ச்$_1$ச மைது$_2$னான் ।
ஏதேனைவ விஜானாதி
கிமத்ர பரிசி$_1$ஷ்யதே । ஏதத்$_3$வை தத் ।।

येन एतेन एव யேன ஏதேன ஏவ இந்த (சைதன்யத்தினால்) தான் (ஒருவன்) **रूपं** ரூபம் ரூபத்தை **रसं** ரஸம் சுவையை **गन्धं** க$_3$ந்த$_4$ம் வாஸனையை **शब्दान्** ச$_1$ப்$_3$தா$_3$ன் சப்தங்களை **स्पर्शान्** ஸ்பர்சா$_1$ன் ஸ்பர்சங்களை **मैथुनान् च** மைது$_2$னான் ச இன்பங்களை **विजानाति** விஜாநாதி அறிகிறான். **अत्र** அத்ர இங்கு (சைதன்யத்தால் அறியப் படாதது) **किं** கிம் என்ன **परिशिष्यते** பரிசி$_1$ஷ்யதே எஞ்சியிருக்கிறது. **एतत् वै** ஏதத் வை இந்த ஆத்மாவே **तत्** தத் அந்தத் தத்துவம்.

இந்த சைதன்யத்தினால்தான் ஒருவன் ரூபத்தை, சுவையை, வாஸனையை, சப்தங்களை, ஸ்பர்சங்களை, இன்பங்களை அறிகிறான். இங்கு சைதன்யத்தால் அறியப்படாதது என்ன எஞ்சியிருக்கிறது. இந்த ஆத்மாவே அந்தத் தத்துவம்.

४. स्वप्रान्तं जागरितान्तं च उभौ येनानुपश्यति ।
महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति ॥

4. ஸ்வப்னாந்தம் ஜாக$_3$ரிதாந்தம் ச உபௌ$_4$ யேனானுபச்$_1$யதி ।
மஹாந்தம் விபு$_4$மாத்மானம் மத்வா தீ$_4$ரோ ந சோ$_1$சதி ॥

येन யேன எதனால் (ஒருவன்) **स्वप्रान्तं** ஸ்வப்னாந்தம் கனவு நிலையில் உள்ள பொருள்கள் **जागरितान्तं** ஜாக$_3$ரிதாந்தம் விழிப்பு நிலையில் உள்ள பொருள்கள் **उभौ च** உபௌ$_4$ ச ஆகிய இரண்டையும் **अनुपश्यति** அனுபச்$_1$யதி பார்க்கிறானோ (அந்த) **महान्तं** மஹாந்தம் மேலான **विभुं** விபு$_4$ம் அனைத்தையும் வ்யாபிக்கின்ற **आत्मानं** ஆத்மானம் ஆத்மாவை **मत्वा** மத்வா அறிந்து **धीरः** தீ$_4$ரः தீரன் **न शोचति** ந சோ$_1$சதி துயரப்படுவதில்லை.

எதனால் ஒருவன் கனவு நிலையில் உள்ள பொருள்கள், விழிப்பு நிலையில் உள்ள பொருள்கள் ஆகிய இரண்டையும் பார்க்கிறானோ, அந்த மேலான, அனைத்தையும் வ்யாபிக்கின்ற ஆத்மாவை அறிந்து, தீரன் துயரப்படுவதில்லை.

५. य इमं मध्वदं वेद आत्मानं जीवमन्तिकात्।
ईशानं भूतभव्यस्य न ततो विजुगुप्सते। एतद्वै तत्॥

5. ய இமம் மத்$_4$வத$_3$ம் வேத$_3$ ஆத்மானம் ஜீவமந்திகாத் ।
ஈசா$_1$னம் பூ$_4$தப$_4$வ்யஸ்ய ந ததோ விஜுகு$_3$ப்ஸதே ।
ஏதத்$_3$வை தத் ।।

यः ய: யார் **मध्वदं** மத்$_4$வத$_3$ம் கர்மபலனை அனுபவிக்கின்ற **इमं** இமம் இந்த **जीवं आत्मानं** ஜீவம் ஆத்மானம் ஜீவாத்மாவையும் **भूतभव्यस्य** பூ$_4$தப$_4$வ்யஸ்ய கடந்ததற்கும் வரவிருப்பதற்கும் **ईशानं** ஈசா$_1$னம் ஈச்வரனாக உள்ளவரையும் **अन्तिकात्** அந்திகாத் ஒன்றாக **वेद** வேத$_3$ அறிகிறானோ **ततः** தத: அதன்பிறகு (அவன் தன்னை) **न विजुगुप्सते** ந விஜுகு$_3$ப்ஸதே பாதுகாத்துக்கொள்ள விரும்பமாட்டான். **एतत् वै** ஏதத் வை இந்த ஆத்மாவே **तत्** தத் அந்தத் தத்துவம்.

யார் கர்மபலனை அனுபவிக்கின்ற இந்த ஜீவாத்மாவையும், கடந்ததற்கும் வரவிருப்பதற்கும் ஈச்வரனாக உள்ளவரையும் ஒன்றாக அறிகிறானோ, அதன்பிறகு அவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பமாட்டான். இந்த ஆத்மாவே அந்தத் தத்துவம்.

६. यः पूर्वं तपसो जातम् अद्भ्यः पूर्वमजायत।
गुहां प्रविश्य तिष्ठन्तं यो भूतेभिर्व्यपश्यत। एतद्वै तत्॥

6. ய: பூர்வம் தபஸோ ஜாதம் அத்$_3$ப்$_4$ய: பூர்வமஜாயத ।
கு$_3$ஹாம் ப்ரவிச்$_1$ய திஷ்ட$_2$ந்தம் யோ பூ$_4$தேபி$_4$ர்வ்யபச்$_1$யத ।
ஏதத்$_3$வை தத் ।।

यः ய: எந்த (ஹிரண்யகர்பர்) **तपसः** தபஸ: (ப்ரஹ்மதேவரின்) தவத்திலிருந்து **पूर्वं** பூர்வம் முதலில் **जातं** ஜாதம் தோன்றியவராகவும் **अद्भ्यः** அத்$_3$ப்$_4$ய: ஸ்தூலபூதங்களுக்கு **पूर्वं** பூர்வம் முன் **अजायत** அஜாயத தோன்றியவராகவும் (உள்ளாரோ அவரை) **गुहां** கு$_3$ஹாம்

ஹ்ருதய குகையில் **प्रविश्य** ப்ரவிச்₁ய நுழைந்து **भूतेभिः** பூ₄தேபி₄: ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களுடன் **तिष्ठन्तं** திஷ்ட₂ந்தம் வீற்றிருப்பவராக **यः** ய: யார் **व्यपश्यत** வ்யபச்₁யத அறிகிறானோ (அவனே தத்துவத்தை அறிந்தவன்). **एतत् वै** ஏதத் வை இந்த ஹிரண்யகர்பரே **तत्** தத் அந்தத் தத்துவம்.

எந்த ஹிரண்யகர்பர் ப்ரஹ்மதேவரின் தவத்திலிருந்து முதலில் தோன்றியவராகவும் ஸ்தூலபூதங்களுக்கு முன் தோன்றிய வராகவும் உள்ளாரோ அவரை, ஹ்ருதய குகையில் நுழைந்து ஸ்தூல, ஸூக்ஷ்ம சரீரங்களுடன் வீற்றிருப்பவராக யார் அறிகிறானோ, அவனே தத்துவத்தை அறிந்தவன். இந்த ஹிரண்யகர்பரே அந்தத் தத்துவம்.

७. या प्राणेन सम्भवति अदितिर्देवतामयी ।
गुहां प्रविश्य तिष्ठन्तीं या भूतेभिर्व्यजायत । एतद्वै तत् ॥

7. யா ப்ராணேன ஸம்ப₄வதி அதி₃திர்தே₃வதாமயீ ।
குஹாம் ப்ரவிச்₁ய திஷ்ட₂ந்தீம் யா பூ₄தேபி₄ர்வ்யஜாயத ।
ஏதத்₃வை தத் ॥

या யா யார் **प्राणेन** ப்ராணேன ஹிரண்யகர்பராக **सम्भवति** ஸம்ப₄வதி தோற்றத்தை அடைந்து (மேலும்) **या** யா அவரே **भूतेभिः** பூ₄தேபி₄: ஸூக்ஷ்மபூதங்களுடன் **व्यजायत** வ்யஜாயத தோன்றி **अदितिः** அதி₃தி: அனைத்தையும் அனுபவிப்பவராகவும் **देवतामयी** தே₃வதாமயீ தேவதைகளாகவும் விளங்கி வருகின்றாரோ (அவரை) **गुहां** கு₃ஹாம் ஹ்ருதய குகையில் **प्रविश्य** ப்ரவிச்₁ய நுழைந்து **तिष्ठन्तीं** திஷ்ட₂ந்தீம் வீற்றிருப்பவராக (யார் அறிகிறானோ அவனே தத்துவத்தை அறிந்தவன்). **एतत् वै** ஏதத் வை இந்த ஹிரண்யகர்பரே **तत्** தத் அந்தத் தத்துவம்.

யார் ஹிரண்யகர்பராக தோற்றத்தை அடைந்து மேலும் அவரே ஸூக்ஷ்ம பூதங்களுடன் தோன்றி, அனைத்தையும் அனுபவிப்பவராகவும் தேவதைகளாகவும் விளங்கிவருகின்றாரோ, அவரை ஹ்ருதய குஹையில் நுழைந்து வீற்றிருப்பவராக யார் அறிகிறானோ அவனே தத்துவத்தை அறிந்தவன். இந்த ஹிரண்யகர்பரே அந்தத் தத்துவம்.

௮. **अरण्योर्निहितो जातवेदाः गर्भ इव सुभृतो गर्भिणीभिः ।**
दिवे दिव ईड्यो जागृवद्भिः हविष्मद्भिर्मनुष्येभिरग्निः ।
एतद्वै तत् ॥

8. அரண்யோர்நிஹிதோ ஜாதவேதா3:
க3ர்ப4 இவ ஸுப்4ருதோ க3ர்பி4ணீபி4: ।
தி3வே தி3வ ஈட்3யோ ஜாக்3ருவத்3பி4:
ஹவிஷ்மத்3பி4ர்மனுஷ்யேபி4ரக்3னி: । ஏதத்3வை தத் ॥

अरण्योः அரண்யோ: அரணி என்ற இரண்டு மரக்கட்டைக்குள் **निहितः** நிஹித: இருக்கின்ற **जातवेदाः** ஜாதவேதா3: விராட் **गर्भिणीभिः** க3ர்பி4ணீபி4: கர்பத்தையுடைய பெண்களால் **गर्भः** க3ர்ப4: கர்பமானது (பாதுகாக்கப்படுவது) **इव** இவ போல **सुभृतः** ஸுப்4ருத: பாதுகாக்கப் படுகிறது. **अग्निः** அக்3னி: விராட் **दिवे दिवे** தி3வே தி3வே ஒவ்வொரு நாளும் **हविष्मद्भिः मनुष्येभिः** ஹவிஷ்மத்3பி4: மனுஷ்யேபி4: யாகம் செய்கின்ற மனிதர்களாலும் **जागृवद्भिः** ஜாக்3ருவத்3பி4: உபாஸகர்களாலும் **ईड्यः** ஈட்3ய: பூஜிக்கப்படுகிறது. **एतत् वै** ஏதத் வை இந்த விராட் ஸ்வரூபமே **तत्** தத் அந்தத் தத்துவம்.

அரணி என்ற இரண்டு மரக்கட்டைக்குள் இருக்கின்ற விராட், கர்பத்தையுடைய பெண்களால் கர்பமானது பாதுகாக்கப் படுவது போலப் பாதுகாக்கப்படுகிறது. விராட் ஒவ்வொரு நாளும் யாகம் செய்கின்ற மனிதர்களாலும் உபாஸகர்களாலும் பூஜிக்கப் படுகிறது. இந்த விராட் ஸ்வரூபமே அந்தத் தத்துவம்.

யாகத்திற்குப் பயன்படுத்தப்படும் அக்னியை அரணி என்ற இரு மரக்கட்டைகளைக் கடைவதின் மூலம் எடுப்பார்கள். அவ்விதம் எடுத்த அக்னி பாதுகாக்கப்படும். இங்கு அக்னி விராட் தத்துவமாகப் பார்க்கப்படுகிறது. ஸ்தூல சரீரத்தில் அபிமானம் வைக்கும் பொழுது ஜீவனுக்கு விச்வன் என்று பெயர். ஸ்தூல உலகையே உடலாக அபிமானிக்கும் ஈச்வரனுக்கு விராட் என்று பெயர். விராட் தத்துவமும் விச்வனும் உண்மையில் ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே உள்ளார்கள். அது போல் ஸூக்ஷ்ம சரீரத்தில் அபிமானம் வைக்கும் ஜீவனுக்கு தைஜசன் என்று பெயர். ஸூக்ஷ்ம உலகை அபிமானிக்கும் ஈச்வரனுக்கு ஹிரண்யகர்பர் என்று பெயர். தைஜஸனும் ஹிரண்யகர்பரும் உண்மையில் ப்ரஹ்மஸ்வரூபமே. அதுபோல் காரண சரீரத்தில் மட்டும் அபிமானம் வைக்கும் ஜீவனுக்கு ப்ராஞன் என்று பெயர். காரண உலகம் என்பது மாயா. அந்த மாயாதத்துவத்தில் வெளிப் படுகின்ற ஈச்வரனுக்கு அந்தர்யாமி என்று பெயர். ப்ராஞனும் அந்தர்யாமியும் உண்மையில் ப்ரஹ்ம ஸ்வரூபமே. இவ்விதம் ஜீவன்-ஈச்வரன் ஆகிய தத்துவங்களைப் பல கோணங்களில் பார்த்து, இருவருக்கும் உடல்-உலகம் என்ற அடிப்படையில் வேற்றுமை உண்டே தவிர உண்மையில் வேற்றுமை இல்லை என்ற ஜீவ-ஈச்வர ஐக்யம் பேசப்பட்டுள்ளது.

९. यतश्चोदेति सूर्यः अस्तं यत्र च गच्छति ।
तं देवाः सर्वे अर्पिताः तदु नात्येति कश्चन । एतद्वै तत् ।।

9. யதச்$_1$சோதே$_3$தி ஸூர்ய: அஸ்தம் யத்ர ச க$_3$ச்ச$_2$தி ।
தம் தே$_3$வா: ஸர்வே அர்பிதா: தது$_3$ நாத்யேதி கச்$_1$சன ।
ஏதத்$_3$வை தத் ।।

यतः च யத: ச எதனிடமிருந்து **सूर्यः** ஸூர்ய: ஸூர்யன் **उदेति** உதே$_3$தி உதிக்கிறாரோ **यत्र च** யத்ர ச எதில் **अस्तं गच्छति** அஸ்தம் க$_3$ச்ச$_2$தி அஸ்தமிக்கிறாரோ **तं** தம் அவரை (அந்த ஹிரண்யகர்பரை) **सर्वे देवाः** ஸர்வே தே$_3$வா: எல்லா தேவர்களும் **अर्पिताः** அர்பிதா: சார்ந்துள்ளார்கள். **कश्चन** கச்$_1$சன எதுவும் **तत् उ** தத் உ அவரை **न अत्येति** ந அத்யேதி கடந்து செல்வதில்லை. **एतत् वै** ஏதத் வை இந்த ஹிரண்யகர்பரே **तत्** தத் அந்தத் தத்துவம்.

எதனிடமிருந்து ஸூர்யன் உதிக்கிறாரோ, எதில் அஸ்தமிக்கிறாரோ, அந்த ஹிரண்யகர்பரை எல்லா தேவர்களும் சார்ந்துள்ளார்கள். எதுவும் அவரைக் கடந்து செல்வதில்லை. இந்த ஹிரண்யகர்பரே அந்தத் தத்துவம்.

१०. यदेवेह तदमुत्र यदमुत्र तदन्विह ।
मृत्योः स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति ॥

10. யதே₃வேஹ தத₃முத்ர யத₃முத்ர தத₃ந்விஹ ।
ம்ருத்யோ: ஸ ம்ருத்யுமாப்னோதி ய இஹ நாநேவ பச்₁யதி ॥

यत् யத் எது **इह** இஹ இங்கு (ஜீவனாக உள்ளதோ) **तत् एव** தத் ஏவ அதுவே **अमुत्र** அமுத்ர அங்கு (ப்ரஹ்மனாக உள்ளது). **यत्** யத் எது **अमुत्र** அமுத்ர அங்கு (ப்ரஹ்மனாக உள்ளதோ) **तत् अनु** தத் அனு அதுவே **इह** இஹ இங்கு (ஜீவனாக உள்ளது). **यः** ய: யார் **इह** இஹ இங்கு **नाना इव** நாநா இவ வேற்றுமையை **पश्यति** பச்₁யதி பார்க்கிறானோ **सः** ஸ: அவன் **मृत्योः** ம்ருத்யோ: மரணத்திலிருந்து **मृत्युं** ம்ருத்யும் மரணத்தை **आप्नोति** ஆப்னோதி அடைகிறான்.

எது இங்கு ஜீவனாக உள்ளதோ அதுவே அங்கு ப்ரஹ்மனாக உள்ளது. எது அங்கு ப்ரஹ்மனாக உள்ளதோ அதுவே இங்கு ஜீவனாக உள்ளது. யார் இங்கு வேற்றுமையைப் பார்க்கிறானோ, அவன் மரணத்திலிருந்து மரணத்தை அடைகிறான்.

११. मनसैवेदमाप्तव्यं नेह नानास्ति किञ्चन ।
मृत्योः स मृत्युं गच्छति य इह नानेव पश्यति ॥

11. மனஸைவேத₃மாப்தவ்யம் நேஹ நாநாஸ்தி கிஞ்சன ।
ம்ருத்யோ: ஸ ம்ருத்யும் க₃ச்ச₂தி ய இஹ நாநேவ பச்₁யதி ॥

इदं இத₃ம் இது (இந்த அறிவு) **मनसा एव** மனஸா ஏவ மனதால்தான் **आप्तव्यम्** ஆப்தவ்யம் அடையப்படும். **इह** இஹ இங்கு **नाना** நாநா வேற்றுமை **किञ्चन** கிஞ்சன ஒன்றும் **न अस्ति** ந அஸ்தி இல்லை.

य: ய: யார் **इह** இஹ இங்கு **नाना इव** நாநா இவ வேற்றுமையை **पश्यति** பச்$_1$யதி பார்க்கிறானோ **सः** ஸ: அவன் **मृत्योः** ம்ருத்யோ: மரணத் திலிருந்து **मृत्युं** ம்ருத்யும் மரணத்திற்கு **गच्छति** க$_3$ச்ச$_2$தி செல்கிறான்.

இந்த அறிவு மனதால்தான் அடையப்படும். இங்கு வேற்றுமை ஒன்றும் இல்லை. யார் இங்கு வேற்றுமையைப் பார்க்கிறானோ அவன் மரணத்திலிருந்து மரணத்திற்குச் செல்கிறான்.

१२. अङ्गुष्ठमात्रः पुरुषः मध्य आत्मनि तिष्ठति ।
ईशानो भूतभव्यस्य न ततो विजुगुप्सते । एतद्वै तत् ।।

12. அங்கு$_3$ஷ்ட$_2$மாத்ர: புருஷ: மத்$_4$ய ஆத்மனி திஷ்ட$_2$தி ।
ஈசா$_1$னோ பூ$_4$தப$_4$வ்யஸ்ய ந ததோ விஜுகு$_3$ப்ஸதே ।
ஏதத்$_3$வை தத் ।।

भूतभव्यस्य பூ$_4$தப$_4$வ்யஸ்ய கடந்ததற்கும் வர இருப்பதற்கும் **ईशानः** ஈசா$_1$ன: தலைவனான **पुरुषः** புருஷ: ப்ரஹ்மன் **अङ्गुष्ठमात्रः** அங்கு$_3$ஷ்ட$_2$மாத்ர: கட்டைவிரல் அளவுள்ளவனாக **आत्मनि मध्ये** ஆத்மனி மத்$_4$யே உடலின் நடுவில் **तिष्ठति** திஷ்ட$_2$தி வீற்றிருக்கிறான். **ततः** தத: இந்த அறிவுக்குப்பின் (ஒருவன் தன்னை) **न विजुगुप्सते** ந விஜுகு$_3$ப்ஸதே பாதுகாத்துக் கொள்ள விரும்ப மாட்டான். **एतत् वै** ஏதத் வை இந்த ப்ரஹ்மனே **तत्** தத் அந்தத் தத்துவம்.

கடந்ததற்கும் வர இருப்பதற்கும் தலைவனான ப்ரஹ்மன் கட்டைவிரல் அளவுள்ளவனாக, உடலின் நடுவில் வீற்றிருக்கிறான். இந்த அறிவுக்குப்பின் ஒருவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்ப மாட்டான். இந்த ப்ரஹ்மனே அந்தத் தத்துவம்.

१३. अङ्गुष्ठमात्रः पुरुषः ज्योतिरिवाधूमकः ।
ईशानो भूतभव्यस्य स एवाद्य स उ श्वः । एतद्वै तत् ।।

13. அங்கு$_3$ஷ்ட$_2$மாத்ர: புருஷ: ஜ்யோதிரிவாதூ$_4$மக: ।
ஈசா$_1$னோ பூ$_4$தப$_4$வ்யஸ்ய ஸ ஏவாத்$_3$ய ஸ உ ச்$_1$வ: ।
ஏதத்$_3$வை தத் ॥

भूतभव्यस्य பூ$_4$தப$_4$வ்யஸ்ய கடந்ததற்கும் வர இருப்பதற்கும் **ईशानः** ஈசா$_1$ன: தலைவனான **अङ्गुष्ठमात्रः** அங்கு$_3$ஷ்ட$_2$மாத்ர: கட்டைவிரல் அளவுள்ள **पुरुषः** புருஷ: ப்ரஹ்மன் **अधूमकः** அதூ$_4$மக: புகையற்ற **ज्योतिः इव** ஜ்யோதி: இவ ஜ்யோதியைப் போன்றவர். **सः एव** ஸ: ஏவ அவரே **अद्य** அத்$_3$ய இன்றும் (உள்ளார்). **सः उ** ஸ: உ அவரே **श्वः** ச்$_1$வ: நாளையும் (இருப்பவர்). **एतत् वै** ஏதத் வை இந்த ப்ரஹ்மனே **तत्** தத் அந்தத் தத்துவம்.

கடந்ததற்கும் வர இருப்பதற்கும் தலைவனான, கட்டை விரல் அளவுள்ள ப்ரஹ்மன் புகையற்ற ஜ்யோதியைப் போன்றவர். அவரே இன்றும் உள்ளார். அவரே நாளையும் இருப்பவர். இந்த ப்ரஹ்மனே அந்தத் தத்துவம்.

१४. यथोदकं दुर्गे वृष्टं पर्वतेषु विधावति ।
एवं धर्मान् पृथक्पश्यन् तानेवानुविधावति ॥

14. யதோ$_2$த$_3$கம் து$_3$ர்கே$_3$ வ்ருஷ்டம் பர்வதேஷு விதா$_4$வதி ।
ஏவம் த$_4$ர்மான் ப்ருத$_2$க்பச்$_1$யன் தானேவானுவிதா$_4$வதி ॥

यथा யதா$_2$ எவ்விதம் **दुर्गे** து$_3$ர்கே$_3$ மலையில் **वृष्टं** வ்ருஷ்டம் பெய்த **उदकं** உத$_3$கம் நீர் **पर्वतेषु** பர்வதேஷு மலைப்பகுதிகளில் **विधावति** விதா$_4$வதி ஓடி மறைகிறதோ **एवं** ஏவம் அவ்விதம் **धर्मान्** த$_4$ர்மான் ஜீவர்களை **पृथक्** ப்ருத$_2$க் வேறுபாட்டுடன் **पश्यन्** பச்$_1$யன் பார்ப்பவன் **तान् एव** தான் ஏவ அவற்றைத் தொடர்ந்து **अनुविधावति** அனுவிதா$_4$வதி சென்று மடிகிறான்.

எவ்விதம் மலையில் பெய்த நீர் மலைப்பகுதிகளில் ஓடி மறைகிறதோ, அவ்விதம் ஜீவர்களை வேறுபாட்டுடன் பார்ப்பவன் அவற்றைத் தொடர்ந்து சென்று மடிகிறான்.

१५. यथोदकं शुद्धे शुद्धम् आसिक्तं तादृगेव भवति।
एवं मुनेर्विजानतः आत्मा भवति गौतम ।।

15. யதோ$_2$த$_3$கம் சு$_1$த்$_3$தே$_4$ சு$_1$த்$_3$த$_4$ம் ஆஸிக்தம் தாத்$_3$ருகே$_3$வ ப$_4$வதி ।
ஏவம் முனேர்விஜானத: ஆத்மா ப$_4$வதி கௌ$_3$தம ।।

गौतम கௌ$_3$தம கௌதமனே (நசிகேதனே) **यथा** யதா$_2$ எவ்விதம் **शुद्धे** சு$_1$த்$_3$தே$_4$ தூய்மையான (நீரில்) **शुद्धं** சு$_1$த்$_3$த$_4$ம் தூய்மையான **उदकं** உத$_3$கம் நீர் **आसिक्तं** ஆஸிக்தம் விடப்படும்பொழுது **तादृक् एव** தாத்$_3$ருக் ஏவ தூய்மையானதாகவே **भवति** ப$_4$வதி இருக்கிறதோ **एवं** ஏவம் அதுபோல **विजानतः** விஜானத: ஞானத்தை உடைய **मुनेः** முனே: முனிவருக்கு **आत्मा** ஆத்மா ஆத்மாவானது (ப்ரஹ்மனாகவே) **भवति** ப$_4$வதி இருக்கிறது.

நசிகேதனே, எவ்விதம் தூய்மையான நீரில் தூய்மையான நீர் விடப்படும் பொழுது தூய்மையானதாகவே இருக்கிறதோ அதுபோல ஞானத்தை உடைய முனிவருக்கு ஆத்மாவானது ப்ரஹ்மனாகவே இருக்கிறது.

इति द्वितीयाध्याये प्रथमा वल्ली

இரண்டாவது அத்யாயத்தில் முதல் வல்லி முடிவுற்றது.

द्वितीयाध्याये द्वितीया वल्ली

இரண்டாவது அத்யாயத்தில் இரண்டாவது வல்லி

१. पुरमेकादशद्वारम् अजस्यावक्रचेतसः ।
अनुष्ठाय न शोचति विमुक्तश्च विमुच्यते । एतद्वै तत् ॥

1. புரமேகாத₃ச₁த்₃வாரம் அஜஸ்யாவக்ரசேதஸ: ।
அனுஷ்டா₂ய ந சோ₁சதி விமுக்தச்₁ச விமுச்யதே ।
ஏதத்₃வை தத் ॥

अजस्य அஜஸ்ய பிறவாத **अवक्र-चेतसः** அவக்ர-சேதஸ: பிளவுபடாத அறிவு ஸ்வரூபமான (ஆத்மாவுக்கு) **एकादश-द्वारं** ஏகாத₃ச₁-த்₃வாரம் பதினோரு வாயில்களை உடைய **पुरं** புரம் நகரத்தை (போன்ற உடல் உள்ளது). **अनुष्ठाय** அனுஷ்டா₂ய (இந்த ஆத்மாவை) த்யானிப்பதால் **न शोचति** ந சோ₁சதி (ஒருவன்) துயரப்படுவதில்லை. **विमुक्तः च** விமுக்த: ச (உயிர்வாழும் பொழுதே) விடுபட்டவனாக **विमुच्यते** விமுச்யதே (இறப்புக்குப் பிறகு) விடுவிக்கப்படுகிறான். **एतत् वै** ஏதத் வை இந்த ஆத்மாவே **तत्** தத் அந்தத் தத்துவம்.

பிறவாத, பிளவுபடாத அறிவு ஸ்வரூபமான ஆத்மாவுக்கு பதினோரு வாயில்களை உடைய நகரத்தைப் போன்ற உடல் உள்ளது. இந்த ஆத்மாவை த்யானிப்பதால் ஒருவன் துயரப் படுவதில்லை. உயிர் வாழும்பொழுதே விடுபட்டவனாக இறப்புக்குப் பிறகு விடுவிக்கப்படுகிறான். இந்த ஆத்மாவே அந்தத் தத்துவம்.

२. हँसः शुचिषद्वसुरन्तरिक्षसद्
होता वेदिषदतिथिर्दुरोणसत् ।
नृषद्वरसदृतसद्व्योमसदब्जाः
गोजा ऋतजा अद्रिजा ऋतं बृहत् ॥

2. ஹம்ஸ: ஶு$_{1}$சிஷத்$_{3}$வஸுரந்தரிக்ஷஸத்$_{3}$
ஹோதா வேதி$_{3}$ஷத$_{3}$திதி$_{2}$ர்து$_{3}$ரோணஸத் ।
ந்ருஷத்$_{3}$வரஸத்$_{3}$ருதஸத்$_{3}$வ்யோமஸத$_{3}$ப்$_{3}$ஜா:
கோ$_{3}$ஜா ரிதஜா அத்$_{3}$ரிஜா ரிதம் ப்$_{3}$ருஹத் ॥

ऋतं ரிதம் உண்மையான **बृहत्** ப்$_{3}$ருஹத் அந்த மேலான (தத்துவம்) **हंस:** ஹம்ஸ: ஸூர்யனாக **शुचिषत्** ஶு$_{1}$சிஷத் ஸ்வர்கத்தில் இருக்கிறது. **वसु:** வஸு: வாயுவாக **अन्तरिक्षसत्** அந்தரிக்ஷஸத் ஆகாசத்தில் இருக்கிறது. **होता** ஹோதா நெருப்பாக **वेदिषत्** வேதி$_{3}$ஷத் பூமியில் இருக்கிறது. **अतिथि:** அதிதி$_{2}$: விருந்தினராக **दुरोणसत्** து$_{3}$ரோணஸத் வீட்டில் இருக்கிறது. **नृषत्** ந்ருஷத் மனிதர்களுக்குள் இருக்கிறது. **वरसत्** வரஸத் தேவர்களுக்குள் இருக்கிறது. **ऋतसत्** ரிதஸத் யாகங்களுக்குள் இருக்கிறது. **व्योमसत्** வ்யோமஸத் ஆகாசத்தில் இருக்கிறது. **अब्जा:** அப்$_{3}$ஜா: நீருக்குள் பிறந்த உயிரினங்களாக இருக்கிறது. **गोजा:** கோ$_{3}$ஜா: பூமியில் பிறந்த தானியங்களாக இருக்கிறது. **ऋतजा** ரிதஜா யஞங்களின் அங்கங்களாக இருக்கிறது. **अद्रिजा:** அத்$_{3}$ரிஜா: மலைகளில் தோன்றிய நதிகளாக இருக்கிறது.

உண்மையான அந்த மேலான தத்துவம் ஸூர்யனாக ஸ்வர்கத்தில் இருக்கிறது. வாயுவாக ஆகாசத்தில் இருக்கிறது. நெருப்பாக பூமியில் இருக்கிறது. விருந்தினராக வீட்டில் இருக்கிறது. மனிதர்களுக்குள் இருக்கிறது. தேவர்களுக்குள் இருக்கிறது. யாகங்களுக்குள் இருக்கிறது. ஆகாசத்தில் இருக்கிறது. நீருக்குள் பிறந்த உயிரினங்களாக இருக்கிறது. பூமியில் பிறந்த தானியங்களாக இருக்கிறது. யஞங்களின் அங்கங்களாக இருக்கிறது. மலைகளில் தோன்றிய நதிகளாக இருக்கிறது.

३. ऊर्ध्वं प्राणमुन्नयति अपानं प्रत्यगस्यति।
मध्ये वामनमासीनं विश्वे देवा उपासते॥

3. ஊர்த்$_4$வம் ப்ராணமுன்னயதி அபானம் ப்ரத்யக$_3$ஸ்யதி ।
மத்$_4$யே வாமனமாஸீனம் விச்$_1$வே தே$_3$வா உபாஸதே ।।

प्राणं ப்ராணம் (ஆத்மா) ப்ராணனை **ऊर्ध्वं** ஊர்த்$_4$வம் மேல்நோக்கி **उन्नयति** உன்னயதி இழுக்கிறது. **अपानं** அபானம் அபானனை **प्रत्यक्** ப்ரத்யக் கீழ்நோக்கி **अस्यति** அஸ்யதி தள்ளுகிறது. **विश्वे देवाः** விச்$_1$வே தே$_3$வா: எல்லா இந்த்ரியங்களும் **मध्ये** மத்$_4$யே ஹ்ருதயத்தில் **आसीनं** ஆஸீனம் இருக்கின்ற **वामनं** வாமனம் வணங்கத்தக்க (ஆத்மாவை) **उपासते** உபாஸதே வழிபடுகின்றன.

ஆத்மா ப்ராணனை மேல்நோக்கி இழுக்கிறது. அபானனைக் கீழ்நோக்கித் தள்ளுகிறது. எல்லா இந்த்ரியங்களும் ஹ்ருதயத்தில் இருக்கின்ற வணங்கத்தக்க ஆத்மாவை வழிபடுகின்றன.

४. अस्य विस्रंसमानस्य शरीरस्थस्य देहिनः।
देहाद्विमुच्यमानस्य किमत्र परिशिष्यते। एतद्वै तत्।।

4. அஸ்ய விஸ்ரம்ஸமானஸ்ய ச$_1$ரீரஸ்த$_2$ஸ்ய தே$_3$ஹின: ।
தே$_3$ஹாத்$_3$விமுச்யமானஸ்ய கிமத்ர பரிசி$_1$ஷ்யதே ।
ஏதத்$_3$வை தத் ।।

शरीरस्थस्य ச$_1$ரீரஸ்த$_2$ஸ்ய உடலில் இருக்கின்ற **अस्य देहिनः** அஸ்ய தே$_3$ஹின: இந்த ஆத்மா **विस्रंसमानस्य** விஸ்ரம்ஸமானஸ்ய வெளியேறும்பொழுது **देहात्** தே$_3$ஹாத் (அதாவது) உடலிலிருந்து **विमुच्यमानस्य** விமுச்யமானஸ்ய விலகிச்சென்று விடும் பொழுது **अत्र** அத்ர இந்த உடலில் **किं** கிம் என்னதான் **परिशिष्यते** பரிசி$_1$ஷ்யதே எஞ்சியிருக்கிறது. **एतत् वै** ஏதத் வை இந்த ஆத்மாவே **तत्** தத் அந்தத் தத்துவம்.

உடலில் இருக்கின்ற இந்த ஆத்மா வெளியேறும்பொழுது அதாவது உடலிலிருந்து விலகிச் சென்றுவிடும்பொழுது இந்த

உடலில் என்னதான் எஞ்சியிருக்கிறது! இந்த ஆத்மாவே அந்தத் தத்துவம்.

५. न प्राणेन नापानेन मर्त्यो जीवति कश्चन।
इतरेण तु जीवन्ति यस्मिन्नेतावुपाश्रितौ॥

5. ந ப்ராணேன நாபானேன மர்த்யோ ஜீவதி கச்$_1$சன ।
இதரேண து ஜீவந்தி யஸ்மிந்நேதாவுபாச்$_1$ரிதௌ ॥

कश्चन मर्त्यः கச்$_1$சன மர்த்ய: எந்த மனிதனும் **प्राणेन** ப்ராணேன ப்ராணனால் **न जीवति** ந ஜீவதி வாழ்வதில்லை. **अपानेन** அபானேன அபானனால் **न** ந வாழ்வதில்லை. **यस्मिन्** யஸ்மிந் எந்த (ஆத்மாவி னிடத்தில்) **एतौ** ஏதௌ இவ்விரண்டும் **उपाश्रितौ** உபாச்$_1$ரிதௌ சார்ந்துள்ளதோ (அந்த இவ்விரண்டிற்கு) **इतरेण तु** இதரேண து வேறான (ஆத்மாவினால்) **जीवन्ति** ஜீவந்தி வாழ்கிறார்கள்.

எந்த மனிதனும் ப்ராணனால் வாழ்வதில்லை. அபானனால் வாழ்வதில்லை. எந்த ஆத்மாவினிடத்தில் இவ்விரண்டும் சார்ந்துள்ளதோ, அந்த இவ்விரண்டிற்கு வேறான ஆத்மா வினால் வாழ்கிறார்கள்.

६. हन्त त इदं प्रवक्ष्यामि गुह्यं ब्रह्म सनातनम्।
यथा च मरणं प्राप्य आत्मा भवति गौतम॥

6. ஹந்த த இத$_3$ம் ப்ரவக்ஷ்யாமி கு$_3$ஹ்யம் ப்$_3$ரஹ்ம ஸனாதனம் ।
யதா$_2$ ச மரணம் ப்ராப்ய ஆத்மா ப$_4$வதி கௌ$_3$தம ॥

गौतम கௌ$_3$தம கௌதமனே (நசிகேதனே) **ते** தே உனக்கு **इदं** இத$_3$ம் இந்த **गुह्यं** கு$_3$ஹ்யம் ரஹஸ்யமான **सनातनं** ஸனாதனம் என்றுமுள்ள **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **प्रवक्ष्यामि** ப்ரவக்ஷ்யாமி கூறுகிறேன். **हन्त** ஹந்த மேலும் **मरणं** மரணம் மரணத்தை **प्राप्य** ப்ராப்ய அடைந்தபின் **यथा च** யதா$_2$ ச எவ்விதம் **आत्मा** ஆத்மா ஜீவன் **भवति** ப$_4$வதி தொடர்கிறான் (என்பதையும் கூறுகிறேன்).

நசிகேதனே, உனக்கு இந்த ரஹஸ்யமான என்றுமுள்ள ப்ரஹ்மனைக் கூறுகிறேன். மேலும் மரணத்தை அடைந்தபின் எவ்விதம் ஜீவன் தொடர்கிறான் என்பதையும் கூறுகிறேன்.

७. योनिमन्ये प्रपद्यन्ते शरीरत्वाय देहिनः ।
स्थाणुमन्येऽनुसंयन्ति यथाकर्म यथाश्रुतम् ॥

7. யோனிமந்யே ப்ரபத்$_3$யந்தே ச$_1$ரீரத்வாய தே$_3$ஹின: ।
ஸ்தா$_2$ணுமந்யேऽனுஸம்யந்தி யதா$_2$கர்ம யதா$_2$ ச்$_1$ருதம் ॥

यथाकर्म யதா$_2$கர்ம அவரவர்களுடைய கர்மத்திற்கேற்பவும் **यथाश्रुतं** யதா$_2$ச்$_1$ருதம் அவரவர்களுடைய உபாஸனைக்கேற்பவும் **अन्ये** அந்யே சில **देहिनः** தே$_3$ஹின: ஜீவர்கள் **शरीरत्वाय** ச$_1$ரீரத்வாய (மனித அல்லது மிருக) உடலை எடுப்பதற்காக **योनिं** யோனிம் கர்பத்தை **प्रपद्यन्ते** ப்ரபத்$_3$யந்தே அடைகிறார்கள். **अन्ये** அந்யே வேறுசில (ஜீவர்கள்) **स्थाणुं** ஸ்தா$_2$ணும் மரம் (முதலிய உடலை) **अनुसंयन्ति** அனுஸம்யந்தி அடைகிறார்கள்.

அவரவர்களுடைய கர்மத்திற்கேற்பவும் அவரவர்களுடைய உபாஸனைக்கேற்பவும் சில ஜீவர்கள் மனித அல்லது மிருக உடலை எடுப்பதற்காக கர்பத்தை அடைகிறார்கள். வேறுசில ஜீவர்கள் மரம் முதலிய உடலை அடைகிறார்கள்.

८. य एष सुप्तेषु जागर्ति कामं कामं पुरुषो निर्मिमाणः ।
तदेव शुक्रं तद्ब्रह्म तदेवामृतमुच्यते ।
तस्मिँल्लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन । एतद्वै तत् ॥

8. ய ஏஷ ஸுப்தேஷு ஜாக$_3$ர்தி
காமம் காமம் புருஷோ நிர்மிமாண: ।
ததே$_3$வ சு$_1$க்ரம் தத்$_3$ப்$_3$ரஹ்ம
ததே$_3$வாம்ருதமுச்யதே ।

தஸ்மிம்ல்லோகா: ச்$_1$ரிதா: ஸர்வே
தது$_3$ நாத்யேதி கச்$_1$சன । ஏதத்$_3$வை தத் ।।

य: एष: पुरुष: ய: ஏஷ: புருஷ: இந்த ஆத்மா **कामं कामं** காமம் காமம் (கனவில்) விதவிதமான பொருள்களை **निर्मिमाण:** நிர்மிமாண: தோற்றுவித்துக்கொண்டு **सुप्तेषु** ஸுப்தேஷு (இந்த்ரியங்கள்) உறங்கும் பொழுது **जागर्ति** ஜாக$_3$ர்தி விழித்துக்கொண்டிருக்கிறது. **तत् एव** தத் ஏவ அதுவே (ஆத்மாவே) **शुक्रं** சு$_1$க்ரம் தூய்மையானது. **तत्** தத் அது **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன். **तत् एव** தத் ஏவ அதுவே **अमृतं** அம்ருதம் மரணமற்றதாக **उच्यते** உச்யதே சொல்லப்படுகிறது. **सर्वे लोका:** ஸர்வே லோகா: எல்லா உலகங்களும் **तस्मिन्** தஸ்மின் அதை **श्रिता:** ச்$_1$ரிதா: சார்ந்துள்ளன. **कश्चन** கச்$_1$சன எதுவும் **तत् उ** தத் உ அதை **न अत्येति** ந அத்யேதி கடந்து செல்வதில்லை. **एतत् वै** ஏதத் வை இந்த ஆத்மாவே **तत्** தத் அந்தத் தத்துவம்.

இந்த ஆத்மா கனவில் விதவிதமான பொருள்களைத் தோற்றுவித்துக்கொண்டு இந்த்ரியங்கள் உறங்கும்பொழுது விழித்துக் கொண்டிருக்கிறது. அந்த ஆத்மாவே தூய்மையானது. அது ப்ரஹ்மன். அதுவே மரணமற்றதாக சொல்லப்படுகிறது. எல்லா உலகங்களும் அதைச் சார்ந்துள்ளன. எதுவும் அதைக் கடந்து செல்வதில்லை. இந்த ஆத்மாவே அந்தத் தத்துவம்.

९. अग्निर्यथैको भुवनं प्रविष्ट: रूपं रूपं प्रतिरूपो बभूव ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा रूपं रूपं प्रतिरूपो बहिश्च ।।

9. அக்$_3$னிர்யதை$_2$கோ பு$_4$வனம் ப்ரவிஷ்ட:
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ ப$_3$பூ$_4$வ ।
ஏகஸ்ததா$_2$ ஸர்வபூ$_4$தாந்தராத்மா
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ ப$_3$ஹிச்$_1$ச ।।

यथा யதா$_2$ எவ்விதம் **भुवनं प्रविष्टः** பு$_4$வனம் ப்ரவிஷ்ட: உலகில் உள்ள **एकः अग्निः** ஏக: அக்$_3$னி ஒரே நெருப்பானது **रूपं रूपं** ரூபம் ரூபம் ஒவ்வொரு பொருளிலும் **प्रतिरूपः** ப்ரதிரூப: அப்பொருளின் உருவமாக **बभूव** ப$_3$பூ$_4$வ தோன்றுகிறதோ **तथा** ததா$_2$ அவ்விதம் **एकः सर्वभूत-अन्तरात्मा** ஏக: ஸர்வபூ$_4$த-அந்தராத்மா எல்லா ஜீவர்களுக்குள்ளும் இருக்கும் ஒரே ஆத்மா **रूपं रूपं** ரூபம் ரூபம் ஒவ்வொரு உடலிலும் **प्रतिरूपः** ப்ரதிரூப: அந்த உடலின் வடிவில் (தோன்றுகிறது). **बहिः च** ப$_3$ஹி: ச வெளியேயும் (உள்ளது).

எவ்விதம் உலகில் உள்ள ஒரே நெருப்பானது ஒவ்வொரு பொருளிலும் அப்பொருளின் உருவமாகத் தோன்றுகிறதோ, அவ்விதம் எல்லா ஜீவர்களுக்குள்ளும் இருக்கும் ஒரே ஆத்மா ஒவ்வொரு உடலிலும் அந்த உடலின் வடிவில் தோன்றுகிறது. வெளியேயும் உள்ளது.

१०. वायुर्यथैको भुवनं प्रविष्टः रूपं रूपं प्रतिरूपो बभूव ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा रूपं रूपं प्रतिरूपो बहिश्च ॥

10. வாயுர்யதை$_2$கோ பு$_4$வனம் ப்ரவிஷ்ட:
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ ப$_3$பூ$_4$வ ।
ஏகஸ்ததா$_2$ ஸர்வபூ$_4$தாந்தராத்மா
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ ப$_3$ஹிச்$_1$ச ॥

यथा யதா$_2$ எவ்விதம் **भुवनं प्रविष्टः** பு$_4$வனம் ப்ரவிஷ்ட: உலகில் உள்ள **एकः वायुः** ஏக: வாயு: ஒரே வாயுவானது **रूपं रूपं** ரூபம் ரூபம் ஒவ்வொரு பொருளிலும் **प्रतिरूपः** ப்ரதிரூப: அப்பொருளின் உருவமாக **बभूव** ப$_3$பூ$_4$வ தோன்றுகிறதோ **तथा** ததா$_2$ அவ்விதம் **एकः सर्वभूत-अन्तरात्मा** ஏக: ஸர்வபூ$_4$த-அந்தராத்மா எல்லா ஜீவர்களுக்குள்ளும் இருக்கும் ஒரே ஆத்மா **रूपं रूपं** ரூபம் ரூபம் ஒவ்வொரு உடலிலும் **प्रतिरूपः** ப்ரதிரூப: அந்த உடலின் வடிவில் (தோன்றுகிறது). **बहिः च** ப$_3$ஹி: ச வெளியேயும் (உள்ளது).

எவ்விதம் உலகில் உள்ள ஒரே வாயுவானது ஒவ்வொரு பொருளிலும் அப்பொருளின் உருவமாகத் தோன்றுகிறதோ அவ்விதம் எல்லா ஜீவர்களுக்குள்ளும் இருக்கும் ஒரே ஆத்மா ஒவ்வொரு உடலிலும் அந்த உடலின் வடிவில் தோன்றுகிறது. வெளியேயும் உள்ளது.

११. सूर्यो यथा सर्वलोकस्य चक्षुः न लिप्यते चाक्षुषैर्बाह्यदोषैः ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा न लिप्यते लोकदुःखेन बाह्यः ।।

11. ஸூர்யோ யதா$_2$ ஸர்வலோகஸ்ய சக்ஷு:
ந லிப்யதே சாக்ஷுஷைர்பா$_3$ஹ்யதோ$_3$ஷை: ।
ஏகஸ்ததா$_2$ ஸர்வபூ$_4$தாந்தராத்மா
ந லிப்யதே லோகது$_3$:கே$_2$ன பா$_3$ஹ்ய: ।।

सर्वलोकस्य ஸர்வலோகஸ்ய அனைத்து உலகத்திற்கும் **चक्षुः** சக்ஷு: கண்ணாக விளங்கும் **सूर्यः** ஸூர்ய: ஸூர்யன் **चाक्षुषैः** சாக்ஷுஷை: பார்வையில் உள்ள (குறைகளாலும்) **बाह्यदोषैः** பா$_3$ஹ்யதோ$_3$ஷை: வெளியே உள்ள குறைகளாலும் **यथा** யதா$_2$ எவ்விதம் **न लिप्यते** ந லிப்யதே பாதிக்கப்படுவதில்லையோ **तथा** ததா$_2$ அவ்விதம் **एकः सर्वभूत-अन्तरात्मा** ஏக: ஸர்வபூ$_4$த-அந்தராத்மா எல்லா ஜீவர்களுக் குள்ளும் இருக்கும் ஒரே ஆத்மா **लोक-दुःखेन** லோக-து$_3$:கே$_2$ன உலகத்தினுடைய துயரத்தால் **न लिप्यते** ந லிப்யதே பாதிக்கப் படுவதில்லை. **बाह्यः** பா$_3$ஹ்ய: அனைத்தையும் கடந்தும் உள்ளது.

அனைத்து உலகத்திற்கும் கண்ணாக விளங்கும் ஸூர்யன், பார்வையில் உள்ள குறைகளாலும் வெளியே உள்ள குறை களாலும் எவ்விதம் பாதிக்கப்படுவதில்லையோ, அவ்விதம் எல்லா ஜீவர்களுக்குள்ளும் இருக்கும் ஒரே ஆத்மா உலகத்தி னுடைய துயரத்தால் பாதிக்கப்படுவதில்லை. அனைத்தையும் கடந்தும் உள்ளது.

१२. एको वशी सर्वभूतान्तरात्मा एकं रूपं बहुधा यः करोति।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीराः तेषां सुखं शाश्वतं नेतरेषाम्॥

12. ஏகோ வசீ1 ஸர்வபூ4தாந்தராத்மா
ஏகம் ரூபம் ப3ஹுதா4 ய: கரோதி ।
தமாத்மஸ்த2ம் யேऽனுபச்1யந்தி தீ4ரா:
தேஷாம் ஸுக2ம் சா1ச்1வதம் நேதரேஷாம் ॥

यः एकः ய: ஏக: எந்த ஒன்று **वशी** வசீ1 (அனைத்தையும் தன்) வசத்தில் வைத்துள்ளதாகவும் **सर्वभूत-अन्तरात्मा** ஸர்வபூ4த-அந்தராத்மா எல்லா ஜீவர்களுக்குள்ளும் ஆத்மாவாக இருந்து கொண்டும் **एकं रूपं** ஏகம் ரூபம் (தன்னுடைய) ஒரு ரூபத்தை **बहुधा** ப3ஹுதா4 பலவாக **करोति** கரோதி வெளிப்படுத்துகிறதோ **तं** தம் அதை (ஆத்மாவை) **आत्मस्थं** ஆத்மஸ்த2ம் உடலில் வெளிப்படுவதாக **ये धीराः** யே தீ4ரா: எந்த தீரர்கள் **अनुपश्यन्ति** அனுபச்1யந்தி அறிகிறார்களோ **तेषां** தேஷாம் அவர்களுக்கு **शाश्वतं** சா1ச்1வதம் நிலையான **सुखं** ஸுக2ம் ஸுகம் (கிடைக்கிறது). **इतरेषां** இதரேஷாம் மற்றவர்களுக்கு **न** ந இல்லை.

எந்த ஒன்று அனைத்தையும் தன் வசத்தில் வைத்துள்ளதாகவும் எல்லா ஜீவர்களுக்குள்ளும் ஆத்மாவாக இருந்து கொண்டும் தன்னுடைய ஒரு ரூபத்தைப் பலவாக வெளிப்படுத்துகிறதோ, அந்த ஆத்மாவை உடலில் வெளிப்படுவதாக எந்த தீரர்கள் அறிகிறார்களோ, அவர்களுக்கு நிலையான ஸுகம் கிடைக்கிறது. மற்றவர்களுக்கு இல்லை.

१३. नित्योऽनित्यानां चेतनश्चेतनानाम्
एको बहूनां यो विदधाति कामान्।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीराः
तेषां शान्तिः शाश्वती नेतरेषाम्॥

13. நித்யோऽநித்யானாம் சேதனச்$_1$சேதனானாம்
ஏகோ ப$_3$ஹூனாம் யோ வித$_3$தா$_4$தி காமான் ।
தமாத்மஸ்த$_2$ம் யேऽனுபச்$_1$யந்தி தீ$_4$ரா:
தேஷாம் சா$_1$ந்தி: சா$_1$ச்$_1$வதீ நேதரேஷாம் ।।

यः एकः ய: ஏக: எந்த ஒன்று **अनित्यानां** அநித்யானாம் அழிவன வற்றுள் **नित्यः** நித்ய: அழியாததாகவும் **चेतनानां** சேதனானாம் உயிரினங்களுக்குள் **चेतनः** சேதன: உயிராகவும் **बहूनां** ப$_3$ஹூனாம் அனைவருடைய **कामान्** காமான் ஆசைகளையும் **विदधाति** வித$_3$தா$_4$தி பூர்த்தி செய்கிறதோ **तं** தம் அதை (ஆத்மாவை) **आत्मस्थं** ஆத்மஸ்த$_2$ம் உடலில் வெளிப்படுவதாக **ये धीराः** யே தீ$_4$ரா: எந்த தீரர்கள் **अनुपश्यन्ति** அனுபச்$_1$யந்தி அறிகிறார்களோ **तेषां** தேஷாம் அவர்களுக்கு **शाश्वती** சா$_1$ச்$_1$வதீ நிலையான **शान्तिः** சா$_1$ந்தி: அமைதி (கிடைக்கிறது). **इतरेषां** இதரேஷாம் மற்றவர்களுக்கு **न** ந இல்லை.

எந்த ஒன்று அழிவனவற்றுள் அழியாததாகவும் உயிரினங் களுக்குள் உயிராகவும் அனைவருடைய ஆசைகளையும் பூர்த்தி செய்கிறதோ, அந்த ஆத்மாவை உடலில் வெளிப்படுவதாக எந்த தீரர்கள் அறிகிறார்களோ, அவர்களுக்கு நிலையான அமைதி கிடைக்கிறது. மற்றவர்களுக்கு இல்லை.

१४. तदेतदिति मन्यन्ते अनिर्देश्यं परमं सुखम्।
कथं नु तद्विजानीयां किमु भाति विभाति वा।।

14. ததே$_3$ததி$_3$தி மன்யந்தே அநிர்தே$_3$ச்$_1$யம் பரமம் ஸுக$_2$ம் ।
கத$_2$ம் நு தத்$_3$விஜானீயாம் கிமு பா$_4$தி விபா$_4$தி வா ।।

अनिर्देश्यं அநிர்தே$_3$ச்$_1$யம் விளக்கமுடியாத **परमं सुखं** பரமம் ஸுக$_2$ம் மேலான ஸுகம் (எதுவோ) **तत्** தத் அதுவே **एतत्** ஏதத் இது **इति** இதி என்று **मन्यन्ते** மன்யந்தே கருதுகிறார்கள். **तत्** தத் அதை

कथं नु கத₂ம் நு எப்படி **विजानीयां** விஜாநீயாம் அறிவேன். **किं उ भाति** கிம் உ பா₄தி தானாக (அது) விளங்குகிறதா. **विभाति वा** விபா₄தி வா தெளிவாக (அது) விளங்குகிறதா.

விளக்கமுடியாத மேலான ஸுகம் எதுவோ அதுவே இது என்று கருதுகிறார்கள். அதை எப்படி அறிவேன்? தானாக அது விளங்குகிறதா? தெளிவாக அது விளங்குகிறதா?

இது நசிகேதனின் கேள்வி. பதில் அடுத்த மந்த்ரத்தில் வருகிறது. ப்ரஹ்மனை நேரடியாக சொற்களால் விளக்கமுடியாது என்பதே இங்கு கருத்து.

१५. न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं
नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ।
तमेव भान्तमनुभाति सर्वं
तस्य भासा सर्वमिदं विभाति ॥

15. ந தத்ர ஸூர்யோ பா₄தி ந சந்த்₃ரதாரகம்
நேமா வித்₃யுதோ பா₄ந்தி குதோऽயமக்₃னி: ।
தமேவ பா₄ந்தமனுபா₄தி ஸர்வம்
தஸ்ய பா₄ஸா ஸர்வமித₃ம் விபா₄தி ॥

तत्र தத்ர அதனிடத்தில் (ப்ரஹ்மனை) **सूर्यः** ஸூர்ய: ஸூர்யன் **न भाति** ந பா₄தி விளக்காது. **चन्द्र-तारकं** சந்த்₃ர-தாரகம் நிலவும் நக்ஷத்ரங்களும் **न** ந விளக்காது. **इमाः विद्युतः** இமா: வித்₃யுத: இந்த மின்னல்கள் **न भान्ति** ந பா₄ந்தி விளக்காது. **अयं अग्निः** அயம் அக்₃னி: இந்த நெருப்பு **कुतः** குத: எப்படி (விளக்கும்). **भान्तं** பா₄ந்தம் ஸ்வயமாக விளங்குகின்ற **तं एव** தம் ஏவ அதையே (சார்ந்து) **सर्वं** ஸர்வம் அனைத்தும் **अनुभाति** அனுபா₄தி விளங்குகின்றன. **तस्य** தஸ்ய அதனுடைய **भासा** பா₄ஸா ஒளியினால் **इदं सर्वं** இத₃ம் ஸர்வம் இவை அனைத்தும் **विभाति** விபா₄தி விளங்குகின்றன.

ப்ரஹ்மனை ஸூர்யன் விளக்காது. நிலவும் நக்ஷத்ரங்களும் விளக்காது. இந்த மின்னல்கள் விளக்காது. இந்த நெருப்பு எப்படி விளக்கும்! ஸ்வயமாக விளங்குகின்ற அதையே சார்ந்து அனைத்தும் விளங்குகின்றன. அதனுடைய ஒளியினால் இவை அனைத்தும் விளங்குகின்றன.

इति द्वितीयाध्याये द्वितीया वल्ली

இரண்டாவது அத்யாயத்தில் இரண்டாவது வல்லி முடிவுற்றது.

द्वितीयाध्याये तृतीया वल्ली

இரண்டாவது அத்யாயத்தில் மூன்றாவது வல்லி

१. ऊर्ध्वमूलोऽवाक्शाखः एषोऽश्वत्थः सनातनः।
तदेव शुक्रं तद् ब्रह्म तदेवामृतमुच्यते।
तस्मिँल्लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन। एतद्वै तत्॥

1. ஊர்த்$_4$வமூலோऽவாக்சா$_1$க$_2$: ஏஷோऽச்$_1$வத்த$_2$: ஸனாதன: ।
ததே$_3$வ சு$_1$க்ரம் தத்$_3$ ப்$_3$ரஹ்ம ததே$_3$வாம்ருதமுச்யதே ।
தஸ்மிம்ல்லோகா: ச்$_1$ரிதா: ஸர்வே தது$_3$ நாத்யேதி கச்$_1$சன ।
ஏதத்$_3$வை தத் ॥

सनातनः ஸனாதன: (ப்ரவாஹமாக) தொடர்ந்து இருக்கின்ற **एषः अश्वत्थः** ஏஷ: அச்$_1$வத்த$_2$: (ஸம்ஸாரத்துடன் ஒப்பிடப்படும்) இந்த அரசமரமானது **ऊर्ध्वमूलः** ஊர்த்$_4$வமூல: ப்ரஹ்மத்தை வேராகவும் **अवाक्शाखः** அவாக்சா$_1$க$_2$: (இவ்வுலகத்தை) கீழ்நோக்கிய கிளை யாகவும் (கொண்டுள்ளது). **तत् एव** தத் ஏவ அதுவே **शुक्रं** சு$_1$க்ரம் தூய்மையானது. **तत्** தத் அது **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன். **तत् एव** தத் ஏவ அதுவே **अमृतं** அம்ருதம் மரணமற்றதாக **उच्यते** உச்யதே சொல்லப்படுகிறது. **सर्वे लोकाः** ஸர்வே லோகா: எல்லா உலகங்களும் **तस्मिन्** தஸ்மின் அதை **श्रिताः** ச்$_1$ரிதா: சார்ந்துள்ளன. **कश्चन** கச்$_1$சன எதுவும் **तत् उ** தத் உ அதை **न अत्येति** ந அத்யேதி கடந்து செல்வதில்லை. **एतत् वै** ஏதத் வை இந்த ப்ரஹ்மனே **तत्** தத் அந்தத் தத்துவம்.

ப்ரவாஹமாக தொடர்ந்து இருக்கின்ற ஸம்ஸாரத்துடன் ஒப்பிடப்படும் இந்த அரசமரமானது ப்ரஹ்மத்தை வேராகவும் இவ்வுலகத்தைக் கீழ்நோக்கிய கிளையாகவும் கொண்டுள்ளது. அதுவே தூய்மையானது. அது ப்ரஹ்மன். அதுவே மரண மற்றதாக சொல்லப்படுகிறது. எல்லா உலகங்களும் அதைச் சார்ந்துள்ளன. எதுவும் அதைக் கடந்து செல்வதில்லை. இந்த ப்ரஹ்மனே அந்தத் தத்துவம்.

२. यदिदं किञ्च जगत्सर्वं प्राण एजति निःसृतम्।
महद्भयं वज्रमुद्यतं य एतद्विदुरमृतास्ते भवन्ति ॥

2. யதி$_3$த$_3$ம் கிஞ்ச ஜக$_3$த்ஸர்வம்
ப்ராண ஏஜதி நி:ஸ்ருதம் ।
மஹத்$_3$ப$_4$யம் வஜ்ரமுத்$_3$யதம்
ய ஏதத்$_3$விது$_3$ரம்ருதாஸ்தே ப$_4$வந்தி ॥

यत् किञ्च யத் கிஞ்ச எதெல்லாம் உண்டோ **इदं सर्वं** இத$_3$ம் ஸர்வம் அந்த அனைத்து **जगत्** ஜக$_3$த் உலகமும் **प्राणे** ப்ராணே ப்ரஹ்மனால் **निःसृतं** நி:ஸ்ருதம் தோற்றத்தை அடைந்து **एजति** ஏஜதி செயல் படுகிறது. **वज्रं** வஜ்ரம் வஜ்ராயுதத்தை **उद्यतं** உத்$_3$யதம் தூக்கியவன் (போல இந்த ப்ரஹ்மன்) **महत् भयं** மஹத் ப$_4$யம் அதிக பயத்தை (கொடுப்பவன் போலும்). **ये** யே எவர்கள் **एतत्** ஏதத் இதை **विदुः** விது$_3$: அறிகிறார்களோ **ते** தே அவர்கள் **अमृताः भवन्ति** அம்ருதா: ப$_4$வந்தி மரணமற்றவர்களாக ஆகிறார்கள்.

எதெல்லாம் உண்டோ அந்த அனைத்து உலகமும் ப்ரஹ்மனால் தோற்றத்தை அடைந்து செயல்படுகிறது. வஜ்ராயுதத்தைத் தூக்கியவன் போல இந்த ப்ரஹ்மன் அதிக பயத்தைக் கொடுப்பவன் போலும். எவர்கள் இதை அறிகிறார்களோ அவர்கள் மரணமற்றவர்களாக ஆகிறார்கள்.

३. भयादस्याग्निस्तपति भयात्तपति सूर्यः।
भयादिन्द्रश्च वायुश्च मृत्युर्धावति पञ्चमः ॥

3. ப$_4$யாத$_3$ஸ்யாக்$_3$னிஸ்தபதி ப$_4$யாத்தபதி ஸூர்ய: ।
ப$_4$யாதி$_3$ந்த்$_3$ரச்$_1$ச வாயுச்$_1$ச ம்ருத்யுர்தா$_4$வதி பஞ்சம: ॥

अस्य அஸ்ய அந்த (ப்ரஹ்மனைக் குறித்த) **भयात्** ப$_4$யாத் பயத்தால் **अग्निः** அக்$_3$னி: நெருப்பு **तपति** தபதி எரிகிறது. **भयात्** ப$_4$யாத் பயத்தால் **सूर्यः** ஸூர்ய: ஸூர்யன் **तपति** தபதி ஒளிர்கிறார். **भयात्**

ப4யாத் பயத்தால் **इन्द्रः च** இந்த்3ர: ச இந்த்ரனும் **वायुः च** வாயு: ச வாயுவும் (அவரவர் செயலில் ஈடுபடுகிறார்கள்). **पञ्चमः** பஞ்சம: ஐந்தாவதாக (இங்கு கூறும்) **मृत्युः** ம்ருத்யு: யமதேவர் **धावति** தா4வதி தன் கடமையைச் செய்கிறார்.

அந்த ப்ரஹ்மனைக் குறித்த பயத்தால் நெருப்பு எரிகிறது. பயத்தால் ஸூர்யன் ஒளிர்கிறார். பயத்தால் இந்த்ரனும் வாயுவும் அவரவர் செயலில் ஈடுபடுகிறார்கள். ஐந்தாவதாக இங்கு கூறும் யமதேவர் தன் கடமையைச் செய்கிறார்.

**४. इह चेदशकद् बोद्धुं प्राक्शरीरस्य विस्रसः ।
ततः सर्गेषु लोकेषु शरीरत्वाय कल्पते ॥**

4. இஹ சேத3ச1கத்3 போ3த்3து4ம் ப்ராக்ச1ரீரஸ்ய விஸ்ரஸ: ।
தத: ஸர்கே3ஷு லோகேஷு ச1ரீரத்வாய கல்பதே ॥

शरीरस्य ச1ரீரஸ்ய உடலினுடைய **विस्रसः** விஸ்ரஸ: வீழ்ச்சிக்கு **प्राक्** ப்ராக் முன் **इह** இஹ இங்கேயே **बोद्धुं अशकद् चेत्** போ3த்3து4ம் அச1கத்3 சேத் (ப்ரஹ்மனை) அறிந்தால் (விடுதலை அடைகிறான்). **ततः** தத: அறியவில்லை என்றால் **सर्गेषु** ஸர்கே3ஷு உயிரினங்களுடைய **लोकेषु** லோகேஷு உலகத்தில் **शरीरत्वाय** ச1ரீரத்வாய உடல் எடுப்பதற்கு **कल्पते** கல்பதே முற்படுகிறான்.

உடலினுடைய வீழ்ச்சிக்குமுன் இங்கேயே ப்ரஹ்மனை அறிந்தால் விடுதலை அடைகிறான். அறியவில்லை என்றால் உயிரினங்களுடைய உலகத்தில் உடல் எடுப்பதற்கு முற்படுகிறான்.

**५. यथादर्शे तथात्मनि यथा स्वप्ने तथा पितृलोके ।
यथाप्सु परीव ददृशे तथा गन्धर्वलोके छायातपयोरिव ब्रह्मलोके ॥**

5. யதா$_2$த$_3$ர்சே$_1$ ததா$_2$த்மனி
யதா$_2$ ஸ்வப்னே ததா$_2$ பித்ருலோகே।
யதா$_2$ப்ஸு பரீவ த$_3$த்$_3$ருசே$_1$ ததா$_2$ க$_3$ந்த$_4$ர்வலோகே
சா$_2$யாதபயோரிவ ப்$_3$ரஹ்மலோகே ॥

यथा யதா$_2$ எவ்விதம் **आदर्शे** ஆத$_3$ர்சே$_1$ கண்ணாடியில் (தன்னை தெளிவாக காண்கிறானோ) **तथा** ததா$_2$ அவ்விதம் **आत्मनि** ஆத்மனி (பூலோகத்தில்) புத்தியில் **परिददृशे** பரித$_3$த்$_3$ருசே$_1$ (ஆத்மாவை) தெளிவாக அறிகிறான். **यथा** யதா$_2$ எவ்விதம் **स्वप्ने** ஸ்வப்னே கனவில் **तथा** ததா$_2$ (பொருள்களை அறிகிறானோ) அவ்விதம் **पितृलोके** பித்ருலோகே பித்ருலோகத்தில் (ஆத்மாவை அறிகிறான்). **यथा** யதா$_2$ எவ்விதம் **आप्सु इव** ஆப்ஸு இவ நீரில் (ப்ரதிபிம்பத்தைப் பார்க்கிறானோ) **तथा** ததா$_2$ அவ்விதம் **गन्धर्वलोके** க$_3$ந்த$_4$ர்வலோகே கந்தர்வ லோகத்தில் (ஆத்மாவை அறிகிறான்). **छाया-आतपयोः इव** சா$_2$யா-ஆதபயோ: இவ நிழலையும் ஒளியையும் போல **ब्रह्मलोके** ப்$_3$ரஹ்மலோகே ப்ரஹ்மலோகத்தில் (ஆத்மாவை அறிகிறான்).

எவ்விதம் கண்ணாடியில் தன்னைத் தெளிவாகக் காண்கிறானோ, அவ்விதம் பூலோகத்தில் புத்தியில் ஆத்மாவைத் தெளிவாக அறிகிறான். எவ்விதம் கனவில் பொருள்களை அறிகிறானோ, அவ்விதம் பித்ருலோகத்தில் ஆத்மாவை அறிகிறான். எவ்விதம் நீரில் ப்ரதிபிம்பத்தைப் பார்க்கிறானோ, அவ்விதம் கந்தர்வ லோகத்தில் ஆத்மாவை அறிகிறான். நிழலையும் ஒளியையும் போல ப்ரஹ்மலோகத்தில் ஆத்மாவை அறிகிறான்.

பூலோகத்தில்தான் ஆத்மாவைத் தெளிவாக அறியமுடியும். மற்ற லோகங்களில் தெளிவாக அறியமுடியாது. பூலோகத்தை விட்டால் அடுத்து ஆத்மாவைத் தெளிவாக அறியும் வாய்ப்பு ப்ரஹ்ம லோகத்தில்தான் உள்ளது. ஆனால் அந்த ப்ரஹ்மலோகத்தை அடைதல் கடினம். ஆகவே இவ்வாழ்க்கையை ஞானத்திற்குப் பயன்படுத்தவேண்டும் என்பதே இங்கு கூறப்படும் கருத்து.

६. इन्द्रियाणां पृथग्भावम् उदयास्तमयौ च यत्।
पृथगुत्पद्यमानानां मत्वा धीरो न शोचति।।

6. இந்த்$_3$ரியாணாம் ப்ருத$_2$க்$_3$பா$_4$வம் உத$_3$யாஸ்தமயௌ ச யத் ।
ப்ருத$_2$கு$_3$த்பத்$_3$யமானானாம் மத்வா தீ$_4$ரோ ந சோ$_1$சதி ॥

पृथक् उत्पद्यमानानां ப்ருத$_2$க் உத்பத்$_3$யமானானாம் (ஆகாசம் முதலிய பூதங்களிலிருந்து) தனித்தனியே தோன்றிய **इन्द्रियाणां** இந்த்$_3$ரியாணாம் இந்த்ரியங்களின் **यत् च उदय-अस्तमयौ** யத் ச உத$_3$ய-அஸ்தமயௌ தோற்றமும் ஒடுக்கமும் **पृथक् भावं** ப்ருத$_2$க் பா$_4$வம் (ஆத்மாவிலிருந்து) வேறுபட்டிருக்கும் தன்மையையும் **मत्वा** மத்வா அறிந்து **धीरः** தீ$_4$ர: தீரன் **न शोचति** ந சோ$_1$சதி துயரப் படுவதில்லை.

ஆகாசம் முதலிய பூதங்களிலிருந்து தனித்தனியே தோன்றிய இந்த்ரியங்களின் தோற்றமும் ஒடுக்கமும் ஆத்மா விலிருந்து வேறுபட்டிருக்கும் தன்மையையும் அறிந்து தீரன் துயரப்படுவதில்லை.

७. इन्द्रियेभ्यः परं मनः मनसः सत्त्वमुत्तमम्।
सत्त्वादधि महानात्मा महतोऽव्यक्तमुत्तमम्।।

7. இந்த்$_3$ரியேப்$_4$ய: பரம் மன: மனஸ: ஸத்த்வமுத்தமம் ।
ஸத்த்வாத$_3$தி$_4$ மஹானாத்மா மஹதோऽவ்யக்தமுத்தமம் ॥

इन्द्रियेभ्यः இந்த்$_3$ரியேப்$_4$ய: இந்த்ரியங்களைக் காட்டிலும் **मनः** மன: மனம் **परं** பரம் மேலானது. **मनसः** மனஸ: மனதைக்காட்டிலும் **सत्त्वं** ஸத்த்வம் புத்தி **उत्तमं** உத்தமம் மேலானது. **सत्त्वात्** ஸத்த்வாத் புத்தியைக் காட்டிலும் **महान् आत्मा** மஹான் ஆத்மா ஸமஷ்டி புத்தி **अधि** அதி$_4$ மேலானது. **महतः** மஹத: ஸமஷ்டி புத்தியைக் காட்டிலும் **अव्यक्तं** அவ்யக்தம் மாயை **उत्तमं** உத்தமம் மேலானது.

இந்த்ரியங்களைக் காட்டிலும் மனம் மேலானது. மனதைக் காட்டிலும் புத்தி மேலானது. புத்தியைக் காட்டிலும் ஸமஷ்டி புத்தி மேலானது. ஸமஷ்டி புத்தியைக் காட்டிலும் மாயை மேலானது.

८. अव्यक्तात्तु परः पुरुषः व्यापकोऽलिङ्ग एव च ।
यं ज्ञात्वा मुच्यते जन्तुः अमृतत्वं च गच्छति ॥

8. அவ்யக்தாத்து பர: புருஷ: வ்யாபகோऽலிங்க$_{3}$ ஏவ ச ।
யம் ஞாத்வா முச்யதே ஜந்து: அம்ருதத்வம் ச க$_{3}$ச்ச$_{2}$தி ॥

अव्यक्तात् तु அவ்யக்தாத் து மாயையைக் காட்டிலும் **पुरुषः** புருஷ: ஆத்மா **परः** பர: மேலானது. **व्यापकः** வ்யாபக: (ஆத்மா) அனைத்தையும் வ்யாபிப்பது. **अलिङ्गः एव च** அலிங்க$_{3}$: ஏவ ச குணமற்றது. **यं** யம் அதை **ज्ञात्वा** ஞாத்வா அறிந்து **जन्तुः** ஜந்து: மனிதன் **मुच्यते** முச்யதே விடுவிக்கப்படுகிறான். **अमृतत्वं च** அம்ருதத்வம் ச மரணமற்ற நிலையையும் **गच्छति** க$_{3}$ச்ச$_{2}$தி அடைகிறான்.

மாயையைக் காட்டிலும் ஆத்மா மேலானது. ஆத்மா அனைத்தையும் வ்யாபிப்பது. குணமற்றது. அதை அறிந்து மனிதன் விடுவிக்கப்படுகிறான். மரணமற்ற நிலையையும் அடைகிறான்.

९. न सन्दृशे तिष्ठति रूपमस्य न चक्षुषा पश्यति कश्चनैनम् ।
हृदा मनीषा मनसाभिक्लृप्तः य एतद्विदुरमृतास्ते भवन्ति ॥

9. ந ஸந்த்$_{3}$ருசே$_{1}$ திஷ்ட$_{2}$தி ரூபமஸ்ய
ந சக்ஷுஷா பச்$_{1}$யதி கச்$_{1}$சனைனம் ।
ஹ்ருதா$_{3}$ மனீஷா மனஸாபி$_{4}$க்ல்ருப்த:
ய ஏதத்$_{3}$விது$_{3}$ரம்ருதாஸ்தே ப$_{4}$வந்தி ॥

अस्य அஸ்ய இதனுடைய (இந்த ஆத்மாவினுடைய) **रूपं** ரூபம் ஸ்வரூபம் **सन्दृश्ये** ஸந்த்$_{3}$ருச்$_{1}$யே பார்வைக்கோட்டிற்குள் **न तिष्ठति** ந

திஷ்ட₂தி நிற்பதில்லை. **एनं** ஏனம் இதை **कश्चन** கச்₁சன யாரும் **चक्षुषा** சக்ஷுஷா கண்ணால் **न पश्यति** ந பச்₁யதி காண்பதில்லை. **हृदा** ஹ்ருதா₃ ஹ்ருதயத்தில் உள்ள **मनीषा** மனீஷா புத்தியில் வெளிப் படுகின்ற **मनसा** மனஸா சரியான அறிவால் **अभिक्लृप्तः** அபி₄க்ல்ருப்த: (ஆத்மா) அறியப்படுகிறது. **ये** யே எவர்கள் **एतत्** ஏதத் இதை **विदुः** விது₃: அறிகிறார்களோ **ते** தே அவர்கள் **अमृताः** அம்ருதா: மரணமற் றவர்களாக **भवन्ति** ப₄வந்தி ஆகின்றனர்.

இந்த ஆத்மாவினுடைய ஸ்வரூபம் பார்வைக் கோட்டிற்குள் நிற்பதில்லை. இதை யாரும் கண்ணால் காண்பதில்லை. ஹ்ருதயத்தில் உள்ள புத்தியில் வெளிப்படுகின்ற சரியான அறிவால் ஆத்மா அறியப்படுகிறது. எவர்கள் இதை அறிகிறார்களோ அவர்கள் மரணமற்றவர்களாக ஆகின்றனர்.

१०. यदा पञ्चावतिष्ठन्ते ज्ञानानि मनसा सह ।
बुद्धिश्च न विचेष्टति तामाहुः परमां गतिम् ॥

10. யதா₃ பஞ்சாவதிஷ்ட₂ந்தே ஞானானி மனஸா ஸஹ ।
புத்₃த்₃தி₄ச்₁ச ந விசேஷ்டதி தாமாஹு: பரமாம் க₃திம் ॥

यदा யதா₃ எந்த நிலையில் **मनसा सह** மனஸா ஸஹ மனதுடன் **पञ्च** பஞ்ச ஐந்து **ज्ञानानि** ஞானானி ஞானேந்த்ரியங்கள் **अवतिष्ठन्ते** அவதிஷ்ட₂ந்தே தன்னிடத்தில் அமைதியாக இருக்கின்றனவோ **बुद्धिः च** புத்₃த்₃தி₄: ச புத்தியும் **न विचेष्टति** ந விசேஷ்டதி சஞ்சலத்தை அடைவதில்லையோ **तां गतिं** தாம் க₃திம் அந்த நிலையையே **परमां** பரமாம் மேலான நிலையென்று **आहुः** ஆஹு: கூறுகிறார்கள்.

எந்த நிலையில் மனதுடன் ஐந்து ஞானேந்த்ரியங்கள் தன்னிடத்தில் அமைதியாக இருக்கின்றனவோ, புத்தியும் சஞ்சலத்தை அடைவதில்லையோ, அந்த நிலையையே மேலான நிலையென்று கூறுகிறார்கள்.

११. तां योगमिति मन्यन्ते स्थिरामिन्द्रियधारणाम्।
अप्रमत्तस्तदा भवति योगो हि प्रभवाप्ययौ ।।

11. தாம் யோக$_3$மிதி மன்யந்தே ஸ்தி$_2$ராமிந்த்$_3$ரியதா$_4$ரணாம் ।
அப்ரமத்தஸ்ததா$_3$ ப$_4$வதி யோகோ$_3$ ஹி ப்ரப$_4$வாப்யயௌ ।।

इन्द्रियधारणां இந்த்$_3$ரியதா$_4$ரணாம் அமைதியடைந்த இந்த்ரியங்களுடைய **तां स्थिरां** தாம் ஸ்தி$_2$ராம் அந்த உறுதியை **योगं इति** யோக$_3$ம் இதி யோகம் என்று **मन्यन्ते** மன்யந்தே கருதுகிறார்கள். **तदा** ததா$_3$ அப்பொழுது **अप्रमत्तः** அப்ரமத்த: (ஒருவன்) கவனக்குறை வற்றவனாக **भवति** ப$_4$வதி இருக்கவேண்டும். **हि** ஹி ஏனெனில் **योगः** யோக$_3$: யோகமானது **प्रभव-अप्ययौ** ப்ரப$_4$வ-அப்யயௌ ஏற்றத்துக்கும் வீழ்ச்சிக்கும் உட்பட்டது.

அமைதியடைந்த இந்த்ரியங்களுடைய அந்த உறுதியை யோகம் என்று கருதுகிறார்கள். அப்பொழுது ஒருவன் கவனக் குறைவற்றவனாக இருக்க வேண்டும். ஏனெனில் யோகமானது ஏற்றத்துக்கும் வீழ்ச்சிக்கும் உட்பட்டது.

१२. नैव वाचा न मनसा प्राप्तुं शक्यो न चक्षुषा।
अस्तीति ब्रुवतोऽन्यत्र कथं तदुपलभ्यते ।।

12. நைவ வாசா ந மனஸா ப்ராப்தும் ச$_1$க்யோ ந சக்ஷுஷா ।
அஸ்தீதி ப்$_3$ருவதோऽந்யத்ர கத$_2$ம் தது$_3$பலப்$_4$யதே ।।

वाचा வாசா வாக்கினால் **प्राप्तुं** ப்ராப்தும் (ப்ரஹ்மனை) அடைய **न एव शक्यः** ந ஏவ ச$_1$க்ய: முடியாது. **मनसा** மனஸா மனதினாலும் **न** ந அடையமுடியாது. **चक्षुषा** சக்ஷுஷா கண்ணாலும் **न** ந அடையமுடியாது. **अस्ति** அஸ்தி (ப்ரஹ்மன்) இருக்கிறது **इति ब्रुवतः अन्यत्र** இதி ப்$_3$ருவத: அந்யத்ர என்ற நம்பிக்கையுடையவரைத் தவிர (மற்றவர்களால்) **तत्** தத் அது **कथं** கத$_2$ம் எப்படி **उपलभ्यते** உபலப்$_4$யதே அறியப்பட முடியும்.

வாக்கினால் ப்ரஹ்மனை அடையமுடியாது. மனதினாலும் அடையமுடியாது. கண்ணாலும் அடைய முடியாது. ப்ரஹ்மன் இருக்கிறது என்ற நம்பிக்கையுடையவரைத் தவிர மற்றவர் களால் அது எப்படி அறியப்படமுடியும்!

१३. अस्तीत्येवोपलब्धव्यः तत्त्वभावेन चोभयोः।
अस्तीत्येवोपलब्धस्य तत्त्वभावः प्रसीदति॥

13. அஸ்தீத்யேவோபலப்$_3$த$_4$வ்ய: தத்த்வபா$_4$வேன சோப$_4$யோ: ।
அஸ்தீத்யேவோபலப்$_3$த$_4$ஸ்ய தத்த்வபா$_4$வ: ப்ரஸீத$_3$தி ॥

अस्ति அஸ்தி இருக்கிறது **इति एव** இதி ஏவ என்றே **उपलब्धव्यः** உபலப்$_3$த$_4$வ்ய: (முதலில் ப்ரஹ்மன்) அறியப்படவேண்டும். **च** ச பிறகு **तत्त्वभावेन** தத்த்வபா$_4$வேன ஸத்யமாக இருப்பதாக (ப்ரஹ்மன் அறியப்படவேண்டும்). **उभयोः** உப$_4$யோ: இவ்விரண்டில் **अस्ति इति** அஸ்தி இதி (ப்ரஹ்மன்) இருக்கிறது என்று **उपलब्धस्य एव** உபலப்$_3$த$_4$ஸ்ய ஏவ அறிபவனுக்கே **तत्त्वभावः** தத்த்வபா$_4$வ: (ப்ரஹ்மனுடைய) ஸத்யமான தன்மை **प्रसीदति** ப்ரஸீத$_3$தி விளங்குகிறது.

இருக்கிறது என்றே முதலில் ப்ரஹ்மன் அறியப்பட வேண்டும். பிறகு ஸத்யமாக இருப்பதாக ப்ரஹ்மன் அறியப்பட வேண்டும். இவ்விரண்டில், ப்ரஹ்மன் இருக்கிறது என்று அறிபவனுக்கே ப்ரஹ்மனுடைய ஸத்யமான தன்மை விளங்குகிறது.

१४. यदा सर्वे प्रमुच्यन्ते कामा येऽस्य हृदि श्रिताः।
अथ मर्त्योऽमृतो भवति अत्र ब्रह्म समश्नुते॥

14. யதா$_3$ ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேऽஸ்ய ஹ்ருதி$_3$ ச்$_1$ரிதா: ।
அத$_2$ மர்த்யோऽம்ருதோ ப$_4$வதி அத்ர ப்$_3$ரஹ்ம ஸமச்$_1$னுதே ॥

यदा யதா$_3$ எப்பொழுது **अस्य** அஸ்ய ஒருவனுடைய **हृदि** ஹ்ருதி$_3$ ஹ்ருதயத்தில் **श्रिताः** ச்$_1$ரிதா: இருக்கின்ற **ये** யே எந்த **सर्वे** ஸர்வே

எல்லா **कामाः** காமா: ஆசைகளும் **प्रमुच्यन्ते** ப்ரமுச்யந்தே முழுமையாக நீக்கப்படுகின்றனவோ **अथ** அத₂ அப்பொழுது **मर्त्यः** மர்த்ய: (மரணத்தின் பிடியில் உள்ள) மனிதன் **अमृतः भवति** அம்ருத: ப₄வதி மரணமற்றவனாகிறான். **अत्र** அத்ர இங்கேயே **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மனை **समश्नुते** ஸமச்₁னுதே அடைகிறான்.

எப்பொழுது ஒருவனுடைய ஹ்ருதயத்தில் இருக்கின்ற எந்த எல்லா ஆசைகளும் முழுமையாக நீக்கப்படுகின்றனவோ, அப்பொழுது, மரணத்தின் பிடியில் உள்ள மனிதன் மரணமற்றவனாகிறான். இங்கேயே ப்ரஹ்மனை அடைகிறான்.

१५. यदा सर्वे प्रभिद्यन्ते हृदयस्येह ग्रन्थयः ।
अथ मर्त्योऽमृतो भवति एतावद्ध्यनुशासनम् ।।

15. யதா₃ ஸர்வே ப்ரபி₄த்₃யந்தே ஹ்ருத₃யஸ்யேஹ க்₃ரந்த₂ய: ।
அத₂ மர்த்யோऽம்ருதோ ப₄வதி ஏதாவத்₃த்₄யனுசா₁ஸனம் ।।

यदा யதா₃ எப்பொழுது **हृदयस्य** ஹ்ருத₃யஸ்ய ஹ்ருதயத்தினுடைய **सर्वे** ஸர்வே எல்லா **ग्रन्थयः** க்₃ரந்த₂ய: முடிச்சுகளும் **इह** இஹ இங்கேயே **प्रभिद्यन्ते** ப்ரபி₄த்₃யந்தே அவிழ்க்கப்படுகின்றனவோ **अथ** அத₂ அப்பொழுது **मर्त्यः** மர்த்ய: (மரணத்தின் பிடியில் உள்ள) மனிதன் **अमृतः भवति** அம்ருத: ப₄வதி மரணமற்றவனாகிறான். **एतावत् हि** ஏதாவத் ஹி இவ்வளவுதான் **अनुशासनं** அனுசா₁ஸனம் உபதேசம்.

எப்பொழுது ஹ்ருதயத்தினுடைய எல்லா முடிச்சுகளும் இங்கேயே அவிழ்க்கப்படுகின்றனவோ, அப்பொழுது, மரணத்தின் பிடியில் உள்ள மனிதன் மரணமற்றவனாகிறான். இவ்வளவுதான் உபதேசம்.

१६. शतं चैका च हृदयस्य नाड्यः तासां मूर्धानमभिनिःसृतैका ।
तयोर्ध्वमायन्नमृतत्वमेति विष्वङ्ङन्या उत्क्रमणे भवन्ति ।।

16. ச$_1$தம் சைகா ச ஹ்ருத$_3$யஸ்ய நாட்$_3$ய:
தாஸாம் மூர்தா$_4$னமபி$_4$நி:ஸ்ருதைகா ।
தயோர்த்$_4$வமாயந்நம்ருதத்வமேதி
விஷ்வங்ஙந்யா உத்க்ரமணே ப$_4$வந்தி ॥

हृदयस्य ஹ்ருத$_3$யஸ்ய ஹ்ருதயத்துடன் ஸம்பந்தப்பட்ட **शतं च एका च** ச$_1$தம் ச ஏகா ச நூற்றியோரு **नाड्यः** நாட்$_3$ய: நாடிகள் (உள்ளன). **तासां** தாஸாம் அவற்றில் (அந்த நாடிகளில்) **एका** ஏகா ஒன்று **मूर्धानं** மூர்தா$_4$னம் தலை உச்சியை (பிளந்து) **अभिनिःसृता** அபி$_4$நி:ஸ்ருதா வெளியேறுகிறது. **तया** தயா அதன் வழியாக **ऊर्ध्वं** ஊர்த்$_4$வம் மேலே **आयन्** ஆயந் செல்பவன் **अमृतत्त्वं** அம்ருதத்த்வம் (ப்ரஹ்ம லோகத்தில்) அதிக கால வாழ்க்கையை **एति** ஏதி அடைகிறான். **विष्वङ्** விஷ்வங் வேறு வேறு திசையில் (செல்கின்ற) **अन्याः** அந்யா: மற்ற (நாடிகள்) **उत्क्रमणे** உத்க்ரமணே மறுபிறப்புக்கு **भवन्ति** ப$_4$வந்தி காரணமாகின்றன.

ஹ்ருதயத்துடன் ஸம்பந்தப்பட்ட நூற்றியோரு நாடிகள் உள்ளன. அந்த நாடிகளில் ஒன்று தலை உச்சியைப் பிளந்து வெளியேறுகிறது. அதன் வழியாக மேலே செல்பவன் ப்ரஹ்ம லோகத்தில் அதிககால வாழ்க்கையை அடைகிறான். வேறு வேறுதிசையில் செல்கின்ற மற்ற நாடிகள் மறுபிறப்புக்குக் காரணமாகின்றன.

१७. अङ्गुष्ठमात्रः पुरुषोऽन्तरात्मा सदा जनानां हृदये संनिविष्टः।
तं स्वाच्छरीरात् प्रवृहेत् मुञ्जादिवेषीकां धैर्येण।
तं विद्याच्छुक्रममृतं तं विद्याच्छुक्रममृतमिति ॥

17. அங்கு$_3$ஷ்ட$_2$மாத்ர: புருஷோऽந்தராத்மா
ஸதா$_3$ ஜனானாம் ஹ்ருத$_3$யே ஸம்நிவிஷ்ட: ।
தம் ஸ்வாச்சு$_2$ரீராத் ப்ரவ்ருஹேத்
முஞ்ஜாதி$_3$வேஷீகாம் தை$_4$ர்யேண ।
தம் வித்$_3$யாச்சு$_2$க்ரமம்ருதம்
தம் வித்$_3$யாச்சு$_2$க்ரமம்ருதமிதி ॥

अङ्गुष्ठमात्रः அங்கு₃ஷ்ட₂மாத்ர: கட்டைவிரல் அளவுள்ள **अन्तरात्मा** அந்தராத்மா அந்தராத்மாவான **पुरुषः** புருஷ: ப்ரஹ்மன் **सदा** ஸதா₃ எப்பொழுதும் **जनानां** ஜனானாம் மனிதர்களுடைய **हृदये** ஹ்ருத₃யே ஹ்ருதயத்தில் **संनिविष्टः** ஸம்நிவிஷ்ட: வீற்றிருக்கிறது. **मुञ्जात्** முஞ்ஜாத் முஞ்ஜா என்ற புல்லிலிருந்து **इषीकां** இஷீகாம் (அதன்) தண்டை **धैर्येण** தை₄ர்யேண கவனமாக (பிரிப்பது) **इव** இவ போல **तं** தம் அதை (ஆத்மாவை) **स्वात्** ஸ்வாத் தன்னுடைய **शरीरात्** ச₁ரீராத் உடலிலிருந்து **प्रवृहेत्** ப்ரவ்ருஹேத் பிரிக்கவேண்டும். **तं** தம் அதை **शुक्रं** சு₁க்ரம் தூய்மையானதாகவும் **अमृतं** அம்ருதம் மரணம் அற்றதாகவும் **विद्यात्** வித்₃யாத் (ஒருவன்) அறியவேண்டும். **तं** தம் அதை **शुक्रं** சு₁க்ரம் தூய்மையானதாகவும் **अमृतं** அம்ருதம் மரணம் அற்றதாகவும் **विद्यात्** வித்₃யாத் (ஒருவன்) அறியவேண்டும். **इति** இதி இவ்விதம் (உபதேசம் முடிவடைகிறது).

கட்டைவிரல் அளவுள்ள அந்தராத்மாவான ப்ரஹ்மன் எப்பொழுதும் மனிதர்களுடைய ஹ்ருதயத்தில் வீற்றிருக்கிறது. முஞ்ஜா என்ற புல்லிலிருந்து அதன் தண்டை கவனமாகப் பிரிப்பது போல அந்த ஆத்மாவைத் தன்னுடைய உடலிலிருந்து பிரிக்க வேண்டும். அதைத் தூய்மையானதாகவும் மரணம் அற்றதாகவும் ஒருவன் அறியவேண்டும். அதைத் தூய்மையான தாகவும் மரணம் அற்றதாகவும் ஒருவன் அறிய வேண்டும். இவ்விதம் உபதேசம் முடிவடைகிறது.

१८. मृत्युप्रोक्तां नचिकेतोऽथ लब्ध्वा विद्यामेतां योगविधिं च कृत्स्नम् ।
ब्रह्मप्राप्तो विरजोऽभूद्विमृत्युः अन्योऽप्येवं यो विदध्यात्ममेव ॥

18. ம்ருத்யுப்ரோக்தாம் நசிகேதோऽத₂லப்₃த்₄வா
வித்₃யாமேதாம் யோக₃விதி₄ம் ச க்ருத்ஸ்நம் ।
ப்₃ரஹ்மப்ராப்தோ விரஜோऽபூ₄த்₃விம்ருத்யு:
அந்யோऽப்யேவம் யோ வித₃த்₄யாத்மமேவ ॥

मृत्युप्रोक्तां ம்ருத்யுப்ரோக்தாம் யமதேவரால் உபதேசிக்கப்பட்ட **एतां** ஏதாம் இந்த **विद्यां** வித்$_3$யாம் ஆத்மஞானத்தையும் **योगविधिं च** யோக$_3$விதி$_4$ம் ச யோகத்தின் நெறியையும் **नचिकेतः** நசிகேத: நசிகேதன் **कृत्स्नं** க்ருத்ஸ்நம் முழுமையாக **अथ लब्ध्वा** அத$_2$ லப்$_3$த்$_4$வா அடைந்த காரணத்தால் **ब्रह्मप्राप्तः** ப்$_3$ரஹ்மப்ராப்த: ப்ரஹ்மனை அடைந்து **विरजः** விரஜ: தூய்மையானவனாகவும் **विमृत्युः** விம்ருத்யு: மரணமற்றவனாகவும் **अभूत्** அபூ$_4$த் ஆனான். **यः अन्यः अपि** ய: அன்ய: அபி வேறு யாரெல்லாம் **अध्यात्मं** அத்$_4$யாத்மம் ஆத்மாவை **एवं एव** ஏவம் ஏவ இவ்விதம் **वित्** வித் அறிகிறார்களோ (அவர்களும் ப்ரஹ்மனை அடைகிறார்கள்).

யமதேவரால் உபதேசிக்கப்பட்ட இந்த ஆத்ம ஞானத்தையும் யோகத்தின் நெறியையும் நசிகேதன் முழுமையாக அடைந்த காரணத்தால் ப்ரஹ்மனை அடைந்து தூய்மையானவனாகவும் மரணமற்றவனாகவும் ஆனான். வேறு யாரெல்லாம் ஆத்மாவை இவ்விதம் அறிகிறார்களோ அவர்களும் ப்ரஹ்மனை அடைகிறார்கள்.

इति द्वितीयाध्याये तृतीया वल्ली


இரண்டாவது அத்யாயத்தில் மூன்றாவது வல்லி முடிவுற்றது.

।। कठोपनिषत् समाप्ता ।।

கடோபநிஷத் முடிவுற்றது.

****

கைவல்யோபநிஷத்



ॐ

कैवल्योपनिषद्

கைவல்யோபநிஷத்₃

ஸாரம்

கைவல்யோபநிஷத் அதர்வண வேதத்தில் அமைந்துள்ளது. கைவல்யம் என்றால் ஒன்று மட்டும் இருத்தல் என்று பொருள் படுகிறது. அந்த ஒன்றைப் பற்றிய அறிவு இங்கு புகட்டப் படுவதனால் கைவல்யோபநிஷத் என்று பெயர் பெறுகிறது.

ஆச்வலாயனர் என்பவர் ப்ரஹ்மதேவரை முறைப்படி அணுகி, அனைத்து பாவங்களையும் நீக்கும், மேலான, சாதுக்களால் நாடப்படுகின்ற, ப்ரஹ்மத்தை அடைய வைக்கின்ற ப்ரஹ்ம ஞானத்தைக் கொடுங்கள் என்று வினவுகிறார் (1). குருவானவர் முதலில் ப்ரஹ்ம ஞானத்துக்கான மூன்று உபாயங்களைக் கூறுகின்றார். அவை 1. ச்ரத்தா 2. பக்தி 3. த்யானம். இங்கு ச்ரத்தா என்ற சொல்லில் குருவிடம் முழு நம்பிக்கையுடன் வேதாந்த ச்ரவணம் செய்தல் என்ற சாதனையையும் பக்தி என்ற சொல்லில் ஸந்தேஹங்களை நீக்க மேற்கொள்ளப்படுகின்ற மனனம் அதாவது சிந்தித்தல் என்ற சாதனையையும் த்யானம் என்ற சொல்லில் பெற்ற அறிவை நிலைப்படுத்துவதற்காக மேற்கொள் கின்ற நிதித்யாஸனம் என்ற சாதனையையும் குறிப்பிடுகிறார் (2). ப்ரஹ்மனை அடைய எவை உபாயங்களல்ல என்பதைக் குறிப்பிடுகிறார். பொருள்கள், சந்ததி, வைதீககர்மங்கள் போன்றவை நேரடியாக ஞானத்துக்குத் துணை புரியாது. இவற்றை எல்லாம் தர்மப்படி கையாண்டு, பிறகு இவற்றைத் துறந்து, வைராக்யம் போன்ற தகுதிகளைப் பெற்று விசாரத்தினால்தான் ப்ரஹ்மத்தை அறியமுடியும் (3). ஆகவே மோக்ஷத்தை அடைய சாதனைகள் படிப்படியாக அமைந்திருப்பதைக் குறிப்பிடுகிறார். மனத் தூய்மையை அடைந்து, முமுக்ஷுத்வம் போன்ற தகுதிகளை

வளர்த்துக்கொண்டு, வேதாந்தத்தில் பொருளாக இருக்கின்ற ப்ரஹ்மத்தைப் பற்றிய உறுதியான ஞானத்தை அடைந்தவர்கள் மோக்ஷத்தை அடைகிறார்கள் (4). அடுத்து, ஞானத்திற்குப் பின் மேற்கொள்ளப்படும் நிதித்யாஸனம் என்று அழைக்கப்படுகின்ற த்யானமும் மோக்ஷபலனும் விளக்கப்படுகின்றன. த்யானத்துக்கு உதவுகின்ற தனிமையான சூழ்நிலை, தூய்மையான இடம், இருக்கை, அமர்கின்ற முறை இவையெல்லாம் கூறப்படுகின்றன (5). த்யானத்தில் ப்ரஹ்மனை எத்தகைய தன்மை உடையதாக சிந்திக்கவேண்டும் என்று அந்த ப்ரஹ்மனின் தன்மை இங்கு கூறப்படுகிறது. இங்கு குறிப்பிடப்படுகின்ற தன்மைகள் அனைத்தும் ப்ரஹ்மனின் நிர்குண ஸ்வரூபம் (6). குணங்கள் அற்ற ப்ரஹ்மனை த்யானிக்க இயலாத சமயத்தில் சகுண ப்ரஹ்மனை த்யானிக்க வேண்டும் (7, 8). சகுணப்ரஹ்மனை த்யானித்து பக்குவம் அடைந்த பின் நிர்குணப்ரஹ்ம த்யானத் துக்குச் செல்லலாம். மோக்ஷம் என்ற பலனை அடைவதற்கு தேச-காலத்தைக் கடந்து நிற்கின்ற, அனைத்து ஜீவர்களுக் குள்ளும் ஸாக்ஷியாக இருக்கின்ற ப்ரஹ்மனைப் பற்றிய ஞானத்தைத்தவிர வேறு மார்கம் இல்லை (9, 10).

அடுத்து ச்ரவணம் என்ற சாதனை பேசப்படுகிறது. ச்ரவணம் என்பது குருவிடம் வேதாந்த சாஸ்த்ரத்தைக் கேட்டல். இந்த சாதனையை விளக்க உவமை ஒன்று இங்கு கையாளப்படுகின்றது. அசையாத ஒரு கட்டையைக் கீழே வைத்து அதன் மேல் வேறொரு கட்டையை வைத்துக் கடையும் பொழுது அக்னி தோன்றுகிறது. இவ்விதமாக எடுக்கப்படும் அக்னியே ஹோம குண்டத்தில் உபயோகப்படுத்தப்படுகிறது. இங்கு, அசையாத கீழ்க்கட்டை உறுதியான மனதுக்கும், மேல்கட்டை ஓங்கார தத்துவத்துக்கும், கடைதல் என்ற செயல் விசாரத்துக்கும், கடைவதால் கிடைக்கும் நெருப்பு ஞானத்துக்கும், நெருப்பால் எரிக்கப்படும் பொருள் துயரத்துக்கும் ஒப்பிடப்படுகின்றன (11). ஒரு ஜீவன், விழிப்பு-கனவு-உறக்கம் என்ற மூன்று அவஸ்தைகளை அனுபவிக்கிறான். இந்த அவஸ்தைகளின் துணைகொண்டு

விசாரத்தை மேற்கொள்ளும்போது, இந்த மூன்று அவஸ்தை களிலும் மாறாது இருக்கின்ற ஒரே அறிவு ஸ்வரூபமாக விளங்கி வரும் தத்துவமே ஆத்மா அல்லது ப்ரஹ்மன் என்று அழைக்கப் படுகிறது. அனுபவிக்கப்படும் பொருள்கள் மாறுபடுகின்றன. நிலையற்றவையாக இருக்கின்றன. ஆத்மாவாகிய நான், இந்த அவஸ்தைகளுக்கும் அனைத்து உலகத்துக்கும் ஆதாரமாக இருக்கின்றேன் (12 - 14). இந்த அனைத்துலகமும் எவரிடமிருந்து தோன்றியதோ, அவரே ஈச்வரன் என்று ஈச்வரதத்துவம் அறிமுகப் படுத்தப்படுகிறது (15).

ஈச்வரனுடைய உண்மையான ஸ்வரூபமும் ஜீவனுடைய உண்மையான ஸ்வரூபமும் வேறுபடுவதில்லை என்ற ஜீவ-ஈச்வர ஐக்கியம் பேசப்பட்டு அதன் பலனும் கூறப்படுகின்றது (16, 17).

இவ்விதம் குருவினுடைய உபதேசத்தைக் கேட்ட சிஷ்யன், இப்பொழுது நான் என்னை எப்படி உணர்ந்துள்ளேன் என்று தன்னுடைய அறிவை வெளிப்படுத்துகிறான். நானே அனைத் துக்கும் ஸாக்ஷியாக இருக்கின்றேன். எல்லாம் என்னிடத்தில் தோன்றி, என்னையே சார்ந்து இருந்து, என்னிடத்திலேயே லயமடைகிறது. நான் சிறியதைக் காட்டிலும் சிறியதாகவும் பெரியதைக் காட்டிலும் பெரியதாகவும் அனைத்துமாகவும் இருக்கின்றேன். நான் அனைத்தையும் அறிகின்றேன். என்னை யாரும் அறியார். பஞ்ச பூதங்கள், புண்ய பாவங்கள் இவை எல்லாம் என்னிடத்தில் இல்லை (18 - 22). சிஷ்யன் அடைந்த ஞானத்தின் பலன் பேசப்படுகிறது (23).

இவ்விதமான ஞானத்தை அடைய மனத்தூய்மை அவசியமாகிறது. அந்த மனத்தூய்மைக்கு சாதனை கூறப்படுகிறது (24). இவ்விதமான ஞானத்தை அடைவதன் மூலம் உறுதியாக ஒருவன் மோக்ஷத்தை அடைகின்றான். இங்கு உபநிஷத், மோக்ஷத்தை கைவல்யம் என்றே அழைக்கிறது (25).

शान्तिपाठः
சா1ந்திபாட2:

भद्रं कर्णेभिः शृणुयाम देवाः। भद्रं पश्येमाक्षभिर्यजत्राः। स्थिरैरङ्गैस्तुष्टुवाँसस्तनूभिः। व्यशेम देवहितं यदायुः। स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः। स्वस्ति नः पूषा विश्ववेदाः। स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः। स्वस्ति नो बृहस्पतिर्दधातु। ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

ப4த்3ரம் கர்ணேபி4: ச்1ருணுயாம தே3வா:। ப4த்3ரம் பச்1யேமாக்ஷபி4ர்யஜத்ரா:। ஸ்தி2ரைரங்கை3ஸ்துஷ்டு வாம்ஸஸ்தனூபி4:। வ்யசே1ம தே3வஹிதம் யதா3யு:। ஸ்வஸ்தி ந இந்த்3ரோ வ்ருத்3த4ச்1ரவா:। ஸ்வஸ்தி ந: பூஷா விச்1வவேதா3:। ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டனேமி:। ஸ்வஸ்தி நோ ப்3ருஹஸ்பதிர்த3தா4து। ஓம் சா1ந்தி: சா1ந்தி: சா1ந்தி: ॥

देवाः தே3வா: தேவர்களே **कर्णेभिः** கர்ணேபி4: செவிகளால் **भद्रं** ப4த்3ரம் நல்லதை **शृणुयाम** ச்1ருணுயாம கேட்போமாக. **यजत्राः** யஜத்ரா: வணக்கத்திற்குரிய தேவர்களே **अक्षभिः** அக்ஷபி4: கண்களால் **भद्रं** ப4த்3ரம் நல்லதை **पश्येम** பச்1யேம பார்ப்போமாக. **स्थिरैः अङ्गैः** ஸ்தி2ரை: அங்கை3: உறுதியான உறுப்புக்களுடன் **तनूभिः** தனூபி4: வேதங்களால் (உங்களை நாங்கள்) **तुष्टुवांसः** துஷ்டுவாம்ஸ: புகழ்ந்துகொண்டு **यद् आयुः** யத்3 ஆயு: எவ்வளவு ஆயுள் **देवहितं** தே3வஹிதம் இறைவனால் (எங்களுக்கு) கொடுக்கப்பட்டுள்ளதோ (அதை) **व्यशेम** வ்யசே1ம அனுபவிப்போமாக. **वृद्धश्रवाः** வ்ருத்3த4ச்1ரவா: ஓங்கிய புகழையடைந்த **इन्द्रः** இந்த்3ர: இந்த்ரன் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **विश्ववेदाः** விச்1வவேதா3: அனைத்தையும் அறிகின்ற **पूषा** பூஷா ஸூர்யதேவர் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்).

अरिष्टनेमिः அரிஷ்டனேமி: தடையின்றிச் செல்லும் **तार्क्ष्यः** தார்க்ஷ்ய: கருடதேவர் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **बृहस्पतिः** ப்$_3$ருஹஸ்பதி: (பேரறிவுடைய) ப்ருஹஸ்பதி **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை **दधातु** த$_3$தா$_4$து அருளட்டும். **ओं शान्तिः** ஓம் சா$_1$ந்தி: ஓம் சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி.

தேவர்களே, செவிகளால் நல்லதைக் கேட்போமாக. வணக்கத்திற்குரிய தேவர்களே, கண்களால் நல்லதைப் பார்ப்போமாக. உறுதியான உறுப்புக்களுடன் வேதங்களால் உங்களை நாங்கள் புகழ்ந்து கொண்டு எவ்வளவு ஆயுள் இறைவனால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதோ அதை அனுபவிப்போமாக. ஓங்கிய புகழையடைந்த இந்த்ரன் எங்களுக்கு நன்மையை அருளட்டும். அனைத்தையும் அறிகின்ற ஸூர்யதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். தடையின்றிச் செல்லும் கருடதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். பேரறிவுடைய ப்ருஹஸ்பதி எங்களுக்கு நன்மையை அருளட்டும். ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

अथाश्वलायनो भगवन्तं परमेष्ठिनमुपसमेत्योवाच -

அதா$_2$ ச்$_1$வலாயனோ ப$_4$க$_3$வந்தம்
பரமேஷ்டி$_2$னமுபஸமேத்யோவாச -

अथ அத$_2$ (தன்னைத் தகுதிப்படுத்திக்கொண்ட) பிறகு **आश्वलायनः** ஆச்$_1$வலாயன: ஆச்வலாயனர் (என்ற முனிவர்) **भगवन्तं** ப$_4$க$_3$வந்தம் பகவான் **परमेष्ठिनं** பரமேஷ்டி$_2$னம் ப்ரஹ்மாவை **उपसमेत्य** உபஸமேத்ய முறைப்படி அணுகி **उवाच** உவாச (கீழ்க்கண்ட கேள்வியை) கேட்டார்.

தன்னைத் தகுதிப்படுத்திக்கொண்ட பிறகு ஆச்வலாயனர் என்ற முனிவர், பகவான் ப்ரஹ்மாவை முறைப்படி அணுகி கீழ்க்கண்ட கேள்வியைக் கேட்டார்.

१. अधीहि भगवो ब्रह्मविद्यां वरिष्ठां
सदा सद्भिः सेव्यमानां निगूढाम्।
ययाचिरात् सर्वपापं व्यपोह्य
परात्परं पुरुषं याति विद्वान्॥

1. அதீ$_4$ஹி ப$_4$க$_3$வோ ப்$_3$ரஹ்மவித்$_3$யாம் வரிஷ்டா$_2$ம்
ஸதா$_3$ ஸத்$_3$பி$_4$: ஸேவ்யமானாம் நிகூ$_3$டா$_4$ம் ।
யயாசிராத் ஸர்வபாபம் வ்யபோஹ்ய
பராத்பரம் புருஷம் யாதி வித்$_3$வான் ॥

भगवः ப$_4$க$_3$வ: இறைவா **वरिष्ठां** வரிஷ்டா$_2$ம் மிகவும் மேலானதும் **सद्भिः** ஸத்$_3$பி$_4$: பெரியோர்களால் **सदा** ஸதா$_3$ எப்பொழுதும் **सेव्यमानां** ஸேவ்யமானாம் நாடப்படுவதும் **निगूढां** நிகூ$_3$டா$_4$ம் மறைபொருளாக உள்ளதுமான **ब्रह्मविद्यां** ப்$_3$ரஹ்மவித்$_3$யாம் ப்ரஹ்மவித்யாவை **अधीहि** அதீ$_4$ஹி (எனக்கு) உபதேசியுங்கள். **विद्वान्** வித்$_3$வான் விவேகி யானவன் **यया** யயா எதனால் (எந்த அறிவினால்) **सर्वपापं** ஸர்வபாபம் எல்லாப் பாபத்தையும் **अचिरात्** அசிராத் உடனே **व्यपोह्य** வ்யபோஹ்ய நீக்கி **परात्** பராத் மாயைக்கும் **परं** பரம் மேலான **पुरुषं** புருஷம் பரம்பொருளை **याति** யாதி அடைகிறானோ (அப்படிப்பட்ட அறிவை உபதேசியுங்கள்).

இறைவா, மிகவும் மேலானதும் பெரியோர்களால் எப்பொழுதும் நாடப்படுவதும் மறைபொருளாக உள்ளதுமான ப்ரஹ்மவித்யாவை எனக்கு உபதேசியுங்கள். விவேகியானவன், எந்த அறிவினால் எல்லாப் பாபத்தையும் உடனே நீக்கி, மாயைக்கும் மேலான பரம்பொருளை அடைகிறானோ, அப்படிப்பட்ட அறிவை உபதேசியுங்கள்.

२. तस्मै स होवाच पितामहश्च श्रद्धाभक्तिध्यानयोगादवेहि॥

2. தஸ்மை ஸ ஹோவாச பிதாமஹச்$_1$ச
ச்$_1$ரத்$_3$தா$_4$ப$_4$க்தித்$_4$யானயோகா$_3$த$_3$வேஹி ॥

स: पितामह: च ஸ: பிதாமஹ: ச அந்த ப்ரஹ்மதேவரும் **श्रद्धा-भक्ति-ध्यान-योगात्** ச்$_1$ரத்$_3$தா$_4$-ப$_4$க்தி-த்$_4$யான-யோகா$_3$த் ச்ரத்தா பக்தி த்யானம் இவற்றின் துணைகொண்டு **अवेहि** அவேஹி (அந்தப் பரம்பொருளை) அறிந்து கொள் (என்று) **तस्मै** தஸ்மை அவருக்கு **ह उवाच** ஹ உவாச பதிலளித்தார்.

அந்த ப்ரஹ்மதேவரும் ச்ரத்தா, பக்தி, த்யானம் இவற்றின் துணைகொண்டு அந்தப் பரம்பொருளை அறிந்து கொள் என்று அவருக்கு பதிலளித்தார்.

३. न कर्मणा न प्रजया धनेन त्यागेनैके अमृतत्वमानशुः ।
परेण नाकं निहितं गुहायां विभ्राजते यद् यतयो विशन्ति ॥

3. ந கர்மணா ந ப்ரஜயா த$_4$னேன
த்யாகே$_3$னைகே அம்ருதத்வமானசு$_1$: ।
பரேண நாகம் நிஹிதம் கு$_3$ஹாயாம்
விப்$_4$ராஜதே யத்$_3$ யதயோ விச$_1$ந்தி ॥

त्यागेन த்யாகே$_3$ன த்யாகத்தினால் **एके** ஏகே ஒரு சிலர் **अमृतत्वं** அம்ருதத்வம் மரணமற்ற நிலையை **आनशुः** ஆனசு$_1$: அடைந்தார்கள். **कर्मणा** கர்மணா கர்மத்தினால் **न** ந (மரணமற்ற நிலையை) அடையவில்லை. **प्रजया** ப்ரஜயா ஸந்ததியினாலும் **धनेन** த$_4$னேன பொருளினாலும் **न** ந (மரணமற்ற நிலையை) அடையவில்லை. **यत्** யத் எது **नाकं** நாகம் ஸ்வர்கத்தைக்காட்டிலும் **परेण** பரேண மேலானதோ **गुहायां** கு$_3$ஹாயாம் மனதில் **निहितं** நிஹிதம் வெளிப்படுகிறதோ **विभ्राजते** விப்$_4$ராஜதே தானாக ப்ரகாசிக்கிறதோ (அதை) **यतय:** யதய: ஸாதகர்கள் **विशन्ति** விச$_1$ந்தி அடைகிறார்கள்.

த்யாகத்தினால் ஒரு சிலர் மரணமற்ற நிலையை அடைந்தார்கள். கர்மத்தினால் மரணமற்ற நிலையை அடையவில்லை. ஸந்ததியினாலும் பொருளினாலும் மரணமற்ற நிலையை அடையவில்லை. எது ஸ்வர்கத்தைக் காட்டிலும்

மேலானதோ, மனதில் வெளிப்படுகிறதோ, தானாக ப்ரகாசிக்கிறதோ, அதை ஸாதகர்கள் அடைகிறார்கள்.

४. वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः सन्न्यासयोगाद् यतयः शुद्धसत्त्वाः ।
ते ब्रह्मलोकेषु परान्तकाले परामृताः परिमुच्यन्ति सर्वे ॥

4. வேதா$_3$ந்தவிஞ்ஞானஸுநிச்$_1$சிதார்தா$_2$:
ஸந்ந்யாஸயோகா$_3$த்$_3$ யதய: சு$_1$த்$_3$த$_4$ஸத்த்வா: ।
தே ப்$_3$ரஹ்மலோகேஷு பராந்தகாலே
பராம்ருதா: பரிமுச்யந்தி ஸர்வே ॥

शुद्धसत्त्वाः சு$_1$த்$_3$த$_4$ஸத்த்வா: தூய்மையான மனதையுடைய **यतयः** யதய: ஸாதகர்கள் **सन्न्यासयोगात्** ஸந்ந்யாஸயோகா$_3$த் ஸந்யாஸம் என்ற ஸாதனையினால் **वेदान्त-विज्ञान-सुनिश्चित-अर्थाः** வேதா$_3$ந்த-விஞ்ஞான-ஸுநிச்$_1$சித-அர்தா$_2$: வேதாந்தத்திலிருந்து தோன்றிய ஞானத்திற்குப் பொருளான (ப்ரஹ்மனில்) உறுதியை அடைகிறார்கள். **ते सर्वे** தே ஸர்வே அவர்கள் அனைவரும் **परामृताः** பராம்ருதா: (வாழும் பொழுதே) ப்ரஹ்மனுடன் ஒன்றானவர்களாக இருந்து கொண்டு **परान्तकाले** பராந்தகாலே முடிவான மரண காலத்தில் **ब्रह्मलोकेषु** ப்$_3$ரஹ்மலோகேஷு ப்ரஹ்மனிடத்தில் **परिमुच्यन्ति** பரிமுச்யந்தி முழுமையாகக் கலந்து விடுகிறார்கள்.

தூய்மையான மனதையுடைய ஸாதகர்கள் ஸந்யாஸம் என்ற ஸாதனையினால் வேதாந்தத்திலிருந்து தோன்றிய ஞானத்திற்குப் பொருளான ப்ரஹ்மனில் உறுதியை அடைகிறார்கள். அவர்கள் அனைவரும் வாழும்பொழுதே ப்ரஹ்மனுடன் ஒன்றானவர்களாக இருந்துகொண்டு, முடிவான மரண காலத்தில் ப்ரஹ்மனிடத்தில் முழுமையாகக் கலந்து விடுகிறார்கள்.

५. विविक्तदेशे च सुखासनस्थः शुचिः समग्रीवशिरश्शरीरः ।
अत्याश्रमस्थः सकलेन्द्रियाणि निरुध्य भक्त्या स्वगुरुं प्रणम्य ॥

5. விவிக்ததே$_3$சே$_1$ ச ஸுகா$_2$ஸனஸ்த$_2$:
சு$_1$சி: ஸமக்$_3$ரீவசி$_1$ரச்$_1$ச$_1$ரீர: ।
அத்யாச்$_1$ரமஸ்த$_2$: ஸகலேந்த்$_3$ரியாணி
நிருத்$_4$ய ப$_4$க்த்யா ஸ்வகு$_3$ரும் ப்ரணம்ய ॥

विविक्तदेशे விவிக்ததே$_3$சே$_1$ தனிமையான இடத்தில் **शुचिः** சு$_1$சி: தூய்மையானவனாக **सुख-आसनस्थः** ஸுக$_2$-ஆஸனஸ்த$_2$: (தனக்கு) உகந்த விதத்தில் ஆஸனத்தில் அமர்ந்தவன் **सम-ग्रीव-शिरः-शरीरः** ஸம-க்$_3$ரீவ-சி$_1$ர:-ச$_1$ரீர: கழுத்து தலை உடல் இவற்றை ஸமமாக வைத்தவன் **अत्याश्रमस्थः** அத்யாச்$_1$ரமஸ்த$_2$: மேலான (ஸந்யாஸ) ஆச்ரமத்தில் இருந்தவனாக **सकल-इन्द्रियाणि** ஸகல-இந்த்$_3$ரியாணி எல்லா இந்த்ரியங்களையும் **निरुध्य** நிருத்$_4$ய அமைதிப்படுத்தி **भक्त्या** ப$_4$க்த்யா பக்தியுடன் **स्व-गुरुं** ஸ்வ-கு$_3$ரும் தன் குருவை **प्रणम्य च** ப்ரணம்ய ச வணங்கி (ப்ரஹ்மனை த்யானிக்க வேண்டும்).

தனிமையான இடத்தில், தூய்மையானவனாக, தனக்கு உகந்த விதத்தில் ஆஸனத்தில் அமர்ந்தவன், கழுத்து, தலை, உடல் இவற்றை ஸமமாக வைத்தவன், மேலான ஸந்யாஸ ஆச்ரமத்தில் இருந்தவனாக, எல்லா இந்த்ரியங்களையும் அமைதிப்படுத்தி, பக்தியுடன் தன் குருவை வணங்கி ப்ரஹ்மனை த்யானிக்க வேண்டும்.

६. हृत्पुण्डरीकं विरजं विशुद्धं विचिन्त्य मध्ये विशदं विशोकम् ।
अचिन्त्यमव्यक्तमनन्तरूपं शिवं प्रशान्तममृतं ब्रह्मयोनिम् ।
तथादिमध्यान्तविहीनमेकं विभुं चिदानन्दमरूपमद्भुतम् ॥

6. ஹ்ருத்புண்ட$_3$ரீகம் விரஜம் விசு$_1$த்$_3$த$_4$ம்
விசிந்த்ய மத்$_4$யே விச$_1$த$_3$ம் விசோ$_1$கம் ।
அசிந்த்யமவ்யக்தமனந்தரூபம்
சி$_1$வம் ப்ரசா$_1$ந்தமம்ருதம் ப்$_3$ரஹ்மயோனிம் ।
ததா$_2$தி$_3$மத்$_4$யாந்தவிஹீனமேகம்
விபு$_4$ம் சிதா$_3$னந்த$_3$மரூபமத்$_3$பு$_4$தம் ॥

विरजं விரஜம் உறுதியுடனும் **विशुद्धं** விசு$_1$த்$_3$த$_4$ம் தூய்மையுடனும் கூடிய **हृत्-पुण्डरीकं** ஹ்ருத்-புண்ட$_3$ரீகம் தாமரை போன்ற இதயத்தை நோக்கி **विचिन्त्य** விசிந்த்ய முழுகவனத்தையும் செலுத்தியவனாக (ஒருவன்) **मध्ये** மத்$_4$யே அங்கு **विशदं** விச$_1$த$_3$ம் பரிசுத்தமான **विशोकं** விசோ$_1$கம் துயரங்களற்ற **अचिन्त्यं** அசிந்த்யம் சிந்தனைக்கு எட்டாத **अव्यक्तं** அவ்யக்தம் வெளித்தோற்றத்திற்கு வராத **अनन्तरूपं** அனந்த ரூபம் (எண்ணங்களுடன் இணைத்துப் பார்த்தால்) விதவிதமான ரூபங்களை அடைந்த **शिवं** சி$_1$வம் மங்களமான **प्रशान्तं** ப்ரசா$_1$ந்தம் அமைதியான **अमृतं** அம்ருதம் அழியாத **ब्रह्मयोनिं** ப்$_3$ரஹ்மயோனிம் அனைத்துக்கும் காரணமான **तथा आदि-मध्य-अन्त-विहीनं** ததா$_2$ ஆதி$_3$-மத்$_4$ய-அந்த-விஹீனம் ஆதி-நடு-அந்தம் அற்ற **एकं** ஏகம் ஒன்றான **विभुं** விபு$_4$ம் எங்கும் நிறைந்த **चिदानन्दं** சிதா$_3$னந்த$_3$ம் அறிவு ஸ்வரூபமான ஆனந்த ஸ்வரூபமான **अरूपं** அரூபம் உருவமற்ற **अद्भुतं** அத்$_3$பு$_4$தம் உன்னதமான (ப்ரஹ்மனை த்யானிக்க வேண்டும்).

உறுதியுடனும் தூய்மையுடனும் கூடிய தாமரை போன்ற இதயத்தை நோக்கி, முழுகவனத்தையும் செலுத்தியவனாக ஒருவன், அங்கு பரிசுத்தமான, துயரங்களற்ற, சிந்தனைக்கு எட்டாத, வெளித்தோற்றத்திற்கு வராத, எண்ணங்களுடன் இணைத்துப் பார்த்தால் விதவிதமான ரூபங்களை அடைந்த, மங்களமான, அமைதியான, அழியாத, அனைத்துக்கும் காரணமான, ஆதி-நடு-அந்தம் அற்ற, ஒன்றான, எங்கும் நிறைந்த, அறிவு ஸ்வரூபமான, ஆனந்த ஸ்வரூபமான, உருவமற்ற, உன்னதமான ப்ரஹ்மனை த்யானிக்க வேண்டும்.

௭. उमासहायं परमेश्वरं प्रभुं त्रिलोचनं नीलकण्ठं प्रशान्तम्।
ध्यात्वा मुनिर्गच्छति भूतयोनिं समस्तसाक्षिं तमसः परस्तात्॥

7. உமாஸஹாயம் பரமேச்$_1$வரம் ப்ரபு$_4$ம்
த்ரிலோசனம் நீலகண்ட$_2$ம் ப்ரசா$_1$ந்தம் ।
த்$_4$யாத்வா முனிர்க$_3$ச்ச$_2$தி பூ$_4$தயோனிம்
ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் ।।

उमासहायं உமாஸஹாயம் உமையுடன் கூடிய **प्रभुं** ப்ரபு$_4$ம் (உலகிற்கு) ப்ரபுவான **त्रिलोचनं** த்ரிலோசனம் மூன்று கண்களையுடைய **नीलकण्ठं** நீலகண்ட$_2$ம் நீலவண்ணக்கழுத்தையுடைய **प्रशान्तं** ப்ரசா$_1$ந்தம் அமைதி ஸ்வரூபமான **परमेश्वरं** பரமேச்$_1$வரம் பரமேச்வரரை **मुनिः** முனி: முனிவர் **ध्यात्वा** த்$_4$யாத்வா த்யானித்து **भूतयोनिं** பூ$_4$தயோனிம் உலகத்திற்கு உபாதான காரணமான **समस्त-साक्षिं** ஸமஸ்த-ஸாக்ஷிம் எல்லாவற்றுக்கும் ஸாக்ஷியான **तमसः** தமஸ: மாயைக்கும் **परस्तात्** பரஸ்தாத் மேலான (ப்ரஹ்மனை) **गच्छति** க$_3$ச்ச$_2$தி அடைகிறார்.

உமையுடன் கூடிய, உலகிற்கு ப்ரபுவான, மூன்று கண்களையுடைய, நீலவண்ணக் கழுத்தையுடைய, அமைதி ஸ்வரூபமான பரமேச்வரரை முனிவர் த்யானித்து உலகத்திற்கு உபாதான காரணமான, எல்லாவற்றுக்கும் ஸாக்ஷியான, மாயைக்கும் மேலான ப்ரஹ்மனை அடைகிறார்.

௮. **स ब्रह्मा स शिवः सेन्द्रः सोऽक्षरः परमः स्वराट्।**
स एव विष्णुः स प्राणः स कालोऽग्निः स चन्द्रमाः ॥

8. ஸ ப்$_3$ரஹ்மா ஸ சி$_1$வ: ஸேந்த்$_3$ர: ஸோऽக்ஷர: பரம: ஸ்வராட் ।
ஸ ஏவ விஷ்ணு: ஸ ப்ராண: ஸ காலோऽக்$_3$னி: ஸ சந்த்$_3$ரமா: ॥

सः ब्रह्मा ஸ: ப்$_3$ரஹ்மா அவரே ப்ரஹ்மதேவர். **सः शिवः** ஸ: சி$_1$வ: அவரே சிவன். **सेन्द्रः** ஸேந்த்$_3$ர: அவரே இந்த்ரன். **सः** ஸ: அவரே **परमः** பரம: மேலான **स्वराट्** ஸ்வராட் தானாக ப்ரகாசிக்கின்ற **अक्षरः** அக்ஷர: அழியாத பொருள். **सः एव विष्णुः** ஸ: ஏவ விஷ்ணு: அவரே விஷ்ணு. **सः प्राणः** ஸ: ப்ராண: அவரே ப்ராணன். **सः कालः** ஸ: கால: அவரே காலதத்துவம். **अग्निः** அக்$_3$னி: (அவரே) நெருப்பு. **सः चन्द्रमाः** ஸ: சந்த்$_3$ரமா: அவரே சந்த்ரன்.

அவரே ப்ரஹ்மதேவர். அவரே சிவன். அவரே இந்த்ரன். அவரே மேலான, தானாக ப்ரகாசிக்கின்ற அழியாத பொருள். அவரே விஷ்ணு. அவரே ப்ராணன். அவரே காலதத்துவம். அவரே நெருப்பு. அவரே சந்த்ரன்.

९. स एव सर्वं यद् भूतं यच्च भव्यं सनातनम्।
ज्ञात्वा तं मृत्युमत्येति नान्यः पन्था विमुक्तये।।

9. ஸ ஏவ ஸர்வம் யத்$_3$ பூ$_4$தம் யச்ச ப$_4$வ்யம் ஸனாதனம் ।
ஞாத்வா தம் ம்ருத்யுமத்யேதி நாந்ய: பந்தா$_2$ விமுக்தயே ।।

यत् யத் எது **भूतं** பூ$_4$தம் இறந்த காலத்தில் இருந்ததோ **यत् च भव्यं** யத் ச ப$_4$வ்யம் எது (நிகழ்காலத்தில் இருக்கிறதோ) எதிர்காலத்திலும் இருக்கப்போகிறதோ **सः एव** ஸ: ஏவ அதுவே **सर्वं** ஸர்வம் அனைத்துமாகவும் **सनातनं** ஸனாதனம் நிலையானதாகவும் உள்ளது. **तं** தம் அதை **ज्ञात्वा** ஞாத்வா அறிந்து **मृत्युं** ம்ருத்யும் (ஒருவன்) மரணத்தை **अत्येति** அத்யேதி கடக்கிறான். **विमुक्तये** விமுக்தயே மோக்ஷத்திற்கு **अन्यः** அந்ய: வேறு **पन्थाः** பந்தா$_2$: பாதை **न** ந இல்லை.

எது இறந்த காலத்தில் இருந்ததோ, எது நிகழ்காலத்தில் இருக்கிறதோ, எதிர்காலத்திலும் இருக்கப்போகிறதோ, அதுவே அனைத்துமாகவும் நிலையானதாகவும் உள்ளது. அதை அறிந்து ஒருவன் மரணத்தைக் கடக்கிறான். மோக்ஷத்திற்கு வேறு பாதை இல்லை.

१०. सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि।
सम्पश्यन् ब्रह्म परमं याति नान्येन हेतुना।।

10. ஸர்வபூ$_4$தஸ்த$_2$மாத்மானம் ஸர்வபூ$_4$தானி சாத்மனி ।
ஸம்பச்$_1$யன் ப்$_3$ரஹ்ம பரமம் யாதி நாந்யேன ஹேதுனா ।।

आत्मानं ஆத்மானம் தன்னை **सर्वभूतस्थं** ஸர்வபூ$_4$தஸ்த$_2$ம் எல்லா உயிரினங்களிலும் **आत्मनि** ஆத்மனி தன்னில் **सर्वभूतानि च** ஸர்வபூ$_4$தானி ச எல்லா உயிரினங்களையும் **सम्पश्यन्** ஸம்பச்$_1$யன் தெளிவாக அறிபவன் **परमं** பரமம் மேலான **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **याति** யாதி அடைகிறான். **अन्येन** அந்யேன (இவ்விதமான அறிவைத்

தவிர) வேறு हेतुना ஹேதுனா உபாயத்தினால் न ந (ஒருவன் ப்ரஹ்மனை) அடையமுடியாது.

தன்னை எல்லா உயிரினங்களிலும், தன்னில் எல்லா உயிரினங்களையும் தெளிவாக அறிபவன் மேலான ப்ரஹ்மனை அடைகிறான். இவ்விதமான அறிவைத்தவிர வேறு உபாயத்தினால் ஒருவன் ப்ரஹ்மனை அடைய முடியாது.

११. आत्मानमरणिं कृत्वा प्रणवं चोत्तरारणिम् ।
ज्ञाननिर्मथनाभ्यासात् पाशं दहति पण्डितः ॥

11. ஆத்மானமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம் ।
ஞானநிர்மத$_2$னாப்$_4$யாஸாத் பாச$_1$ம் த$_3$ஹதி பண்டி$_3$த: ॥

आत्मानं ஆத்மானம் மனதை **अरणिं** அரணிம் (கீழ்) கட்டையாகவும் **प्रणवं च** ப்ரணவம் ச ஓங்காரத்தை **उत्तर-अरणिं** உத்தர-அரணிம் மேல் கட்டையாகவும் **कृत्वा** க்ருத்வா கொண்டு **ज्ञान-निर्मथन-अभ्यासात्** ஞான-நிர்மத$_2$ன-அப்$_4$யாஸாத் விசாரம் என்ற பயிற்சியால் கடைந்து **पण्डितः** பண்டி$_3$த: பண்டிதன் **पाशं** பாச$_1$ம் பந்தத்தை **दहति** த$_3$ஹதி எரிக்கிறான்.

மனதை கீழ்க்கட்டையாகவும் ஓங்காரத்தை மேல் கட்டையாகவும் கொண்டு, விசாரம் என்ற பயிற்சியால் கடைந்து, பண்டிதன் பந்தத்தை எரிக்கிறான்.

ஞானநிர்மதன அப்யாஸம் - என்ற இடத்தில் ஞானம்-விசாரம், நிர்மதனம்-கடைதல், அப்யாஸம்-பயிற்சி.

१२. स एव मायापरिमोहितात्मा शरीरमास्थाय करोति सर्वम् ।
स्त्रियन्नपानादिविचित्रभोगैः स एव जाग्रत्परितृप्तिमेति ॥

12. ஸ ஏவ மாயாபரிமோஹிதாத்மா
ச$_1$ரீரமாஸ்தா$_2$ய கரோதி ஸர்வம் ।
ஸ்த்ரியன்னபானாதி$_3$விசித்ரபோ$_4$கை$_3$:
ஸ ஏவ ஜாக்$_3$ரத்பரித்ருப்திமேதி ॥

स: एव ஸ: ஏவ அதுவே (அந்த ப்ரஹ்மனே) **माया-परिमोहित-आत्मा** மாயா-பரிமோஹித-ஆத்மா மாயையால் மோஹத்தை அடைந்த மனதுடன் **शरीरं** ச$_{1}$ரீரம் சரீரத்தில் **आस्थाय** ஆஸ்தா$_{2}$ய அபிமானம் வைத்து **सर्वं** ஸர்வம் அனைத்தையும் **करोति** கரோதி செய்கிறது. **स: एव** ஸ: ஏவ அதுவே (அந்த ப்ரஹ்மனே) **जाग्रत्** ஜாக்$_{3}$ரத் விழிப்பு நிலையில் **स्त्री-अन्न-पान-आदि-विचित्र-भोगै:** ஸ்த்ரீ-அன்ன-பான-ஆதி$_{3}$-விசித்ர-போ$_{4}$கை$_{3}$: ஸ்த்ரீ அன்னம் பானம் முதலிய விதவித மான போக்ய வஸ்துக்களினால் **परितृप्तिं** பரித்ருப்திம் இன்பத்தை **एति** ஏதி அடைகிறது.

அந்த ப்ரஹ்மனே, மாயையால் மோஹத்தை அடைந்த மனதுடன், சரீரத்தில் அபிமானம் வைத்து அனைத்தையும் செய்கிறது. அந்த ப்ரஹ்மனே விழிப்புநிலையில் ஸ்த்ரீ, அன்னம், பானம் முதலிய விதவிதமான போக்யவஸ்துக்களினால் இன்பத்தை அடைகிறது.

१३. स्वप्ने स जीवः सुखदुःखभोक्ता स्वमायया कल्पितजीवलोके ।
सुषुप्तिकाले सकले विलीने तमोऽभिभूतः सुखरूपमेति ॥

13. ஸ்வப்னே ஸ ஜீவ: ஸுக$_{2}$து$_{3}$:க$_{2}$போ$_{4}$க்தா
ஸ்வமாயயா கல்பிதஜீவலோகே ।
ஸுஷுப்திகாலே ஸகலே விலீனே
தமோऽபி$_{4}$பூ$_{4}$த: ஸுக$_{2}$ரூபமேதி ।।

जीव: ஜீவ: ஜீவனாக விளங்கி வருகின்ற **स:** ஸ: அவன் (அந்த ப்ரஹ்மன்) **स्व-मायया** ஸ்வ-மாயயா தன்னுடைய மாயையால் **कल्पितजीवलोके स्वप्ने** கல்பிதஜீவலோகே ஸ்வப்னே தோற்றுவிக்கப் பட்ட கனவுலகில் **सुखदु:खभोक्ता** ஸுக$_{2}$து$_{3}$:க$_{2}$போ$_{4}$க்தா ஸுக துக்கத்தை அனுபவிக்கிறான். **सकले विलीने** ஸகலே விலீனே எல்லாம் ஒடுங்கிய **सुषुप्ति-काले** ஸுஷுப்தி-காலே உறக்கநிலையில் **तमोऽभिभूत:**

தமோऽபி$_4$பூ$_4$த: அறியாமையால் மூடப்பட்டவனாக **सुख-रूपं** ஸுக$_2$-ரூபம் ஸுகத்தை **एति** ஏதி அடைகிறான்.

ஜீவனாக விளங்கி வருகின்ற அந்த ப்ரஹ்மன் தன்னுடைய மாயையால் தோற்றுவிக்கப்பட்ட கனவுலகில் ஸுக துக்கத்தை அனுபவிக்கிறான். எல்லாம் ஒடுங்கிய உறக்கநிலையில் அறியாமையால் மூடப்பட்டவனாக ஸுகத்தை அடைகிறான்.

१४. पुनश्च जन्मान्तरकर्मयोगात् स एव जीवः स्वपिति प्रबुद्धः।
पुरत्रये क्रीडति यश्च जीवः ततस्तु जातं सकलं विचित्रम्।
आधारमानन्दमखण्डबोधं यस्मिल्लँयं याति पुरत्रयं च॥

14. புனச்$_1$ச ஜன்மாந்தரகர்மயோகா$_3$த்
ஸ ஏவ ஜீவ: ஸ்வபிதி ப்ரபு$_3$த்$_3$த$_4$: ।
புரத்ரயே க்ரீட$_3$தி யச்$_1$ச ஜீவ:
ததஸ்து ஜாதம் ஸகலம் விசித்ரம் ।
ஆதா$_4$ரமானந்த$_3$மக$_2$ண்ட$_3$போ$_3$த$_4$ம்
யஸ்மிம்ல்லயம் யாதி புரத்ரயம் ச ॥

जन्मान्तर-कर्म-योगात् ஜன்மாந்தர-கர்ம-யோகா$_3$த் முற்பிறவியில் செய்த கர்மபலனின் காரணமாக **सः एव** ஸ: ஏவ அதே **जीवः** ஜீவ: ஜீவன் **पुनः च** புன: ச மீண்டும் **स्वपिति** ஸ்வபிதி கனவு காண்கிறான். **प्रबुद्धः** ப்ரபு$_3$த்$_3$த$_4$: (பிறகு) விழித்துக்கொள்கிறான். **यः च जीवः** ய: ச ஜீவ: எந்த ஜீவன் **पुरत्रये** புரத்ரயே (இந்த) மூன்று அவஸ்தைகளை **क्रीडति** க்ரீட$_3$தி அனுபவிக்கிறானோ **ततः तु** தத: து அவனிடமிருந்தே **सकलं** ஸகலம் எல்லா **विचित्रं** விசித்ரம் வேற்றுமைகளும் **जातं** ஜாதம் தோன்றின. **यस्मिन्** யஸ்மின் எவனிடத்தில் (எந்த ஜீவனிடத்தில்) **पुरत्रयं च** புரத்ரயம் ச (இந்த) மூன்று நிலைகளும் **लयं याति** லயம் யாதி ஒடுங்குகின்றனவோ (அந்த ஜீவன்) **अखण्ड-बोधं** அக$_2$ண்ட$_3$-போ$_3$த$_4$ம் பிளவுபடாத ஞான ஸ்வரூபமாகவும் **आनन्दं** ஆனந்த$_3$ம் ஆனந்த ஸ்வரூபமாகவும் **आधारं** ஆதா$_4$ரம் (அனைத்திற்கும்) ஆதாரமாகவும் (உள்ளான்).

முற்பிறவியில் செய்த கர்மபலனின் காரணமாக அதே ஜீவன் மீண்டும் கனவு காண்கிறான். பிறகு விழித்துக் கொள்கிறான். எந்த ஜீவன் இந்த மூன்று அவஸ்தைகளை அனுபவிக்கிறானோ, அவனிடமிருந்தே எல்லா வேற்றுமை களும் தோன்றின. எந்த ஜீவனிடத்தில் இந்த மூன்று நிலை களும் ஒடுங்குகின்றனவோ, அந்த ஜீவன் பிளவுபடாத ஞான ஸ்வரூபமாகவும் ஆனந்தஸ்வரூபமாகவும் அனைத்திற்கும் ஆதாரமாகவும் உள்ளான்.

१५. एतस्माज्जायते प्राणः मनः सर्वेन्द्रियाणि च।
खं वायुर्ज्योतिरापः पृथिवी विश्वस्य धारिणी॥

15. ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராண: மன: ஸர்வேந்த்$_3$ரியாணி ச ।
க$_2$ம் வாயுர்ஜ்யோதிராப: ப்ரிதி$_2$வீ விச்$_1$வஸ்ய தா$_4$ரிணீ ॥

एतस्मात् ஏதஸ்மாத் இதனிடமிருந்து (இந்த ப்ரஹ்மனிடமிருந்து) **प्राणः** ப்ராண: ப்ராணன் **मनः** மன: மனம் **सर्वेन्द्रियाणि च** ஸர்வேந்த்$_3$ரியாணி ச அனைத்து இந்த்ரியங்கள் **खं** க$_2$ம் ஆகாசம் **वायुः** வாயு: காற்று **ज्योतिः** ஜ்யோதி: நெருப்பு **आपः** ஆப: நீர் **विश्वस्य** விச்$_1$வஸ்ய அனைத்திற்கும் **धारिणी** தா$_4$ரிணீ ஆதாரமாக இருக்கும் **पृथिवी** ப்ருதி$_2$வீ பூமி (ஆகியவை) **जायते** ஜாயதே தோன்றுகின்றன.

இந்த ப்ரஹ்மனிடமிருந்து ப்ராணன், மனம், அனைத்து இந்த்ரியங்கள், ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கும் பூமி ஆகியவை தோன்றுகின்றன.

१६. यत्परं ब्रह्म सर्वात्मा विश्वस्यायतनं महत्।
सूक्ष्मात्सूक्ष्मतरं नित्यं तत्त्वमेव त्वमेव तत्॥

16. யத்பரம் ப்$_3$ரஹ்ம ஸர்வாத்மா விச்$_1$வஸ்யாயதனம் மஹத் ।
ஸூக்ஷ்மாத்ஸூக்ஷ்மதரம் நித்யம் தத்த்வமேவ த்வமேவ தத் ॥

यत् யத் எந்த **महत्** மஹத் மேலான **परं ब्रह्म** பரம் ப்₃ரஹ்ம பரப்ரஹ்மன் **नित्यं** நித்யம் என்றுமுள்ளதோ **सर्वात्मा** ஸர்வாத்மா எல்லோருடைய ஆத்மாவாகவும் உள்ளதோ **विश्वस्य** விச்₁வஸ்ய உலகத்திற்கு **आयतनं** ஆயதனம் ஆதாரமானதோ **सूक्ष्मात्** ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மத்தைக் காட்டிலும் **सूक्ष्मतरं** ஸூக்ஷ்மதரம் ஸூக்ஷ்மமாக உள்ளதோ **तत् एव** தத் ஏவ அதுவே **त्वं** த்வம் நீ **त्वं एव** த்வம் ஏவ நீயே **तत्** தத் அது.

எந்த மேலான பரப்ரஹ்மன் என்றுமுள்ளதோ, எல்லோருடைய ஆத்மாவாகவும் உள்ளதோ, உலகத்திற்கு ஆதாரமானதோ, ஸூக்ஷ்மத்தைக் காட்டிலும் ஸூக்ஷ்மமாக உள்ளதோ அதுவே நீ. நீயே அது.

१७. जाग्रत्स्वप्नसुषुप्त्यादि प्रपञ्चं यत्प्रकाशते ।
तद् ब्रह्माहमिति ज्ञात्वा सर्वबन्धैः प्रमुच्यते ॥

17. ஜாக்₃ரத்ஸ்வப்னஸுஷுப்த்யாதி₃ ப்ரபஞ்சம் யத்ப்ரகாச₁தே ।
தத்₃ ப்₃ரஹ்மாஹமிதி ஞாத்வா ஸர்வப₃ந்தை₄: ப்ரமுச்யதே ॥

जाग्रत्-स्वप्न-सुषुप्ति-आदि-प्रपञ्चं ஜாக்₃ரத்-ஸ்வப்ன-ஸுஷுப்தி-ஆதி₃-ப்ரபஞ்சம் விழிப்பு-கனவு-உறக்கம் முதலிய உலகத்தை **यत् प्रकाशते** யத் ப்ரகாச₁தே விளக்குவது எதுவோ **तत् ब्रह्म** தத் ப்₃ரஹ்ம அந்த ப்ரஹ்மன் **अहं इति** அஹம் இதி நான் என்று **ज्ञात्वा** ஞாத்வா அறிந்து **सर्वबन्धैः** ஸர்வப₃ந்தை₄: (ஒருவன்) எல்லா பந்தங்களிலிருந்தும் **प्रमुच्यते** ப்ரமுச்யதே விடுவிக்கப்படுகிறான்.

விழிப்பு-கனவு-உறக்கம் முதலிய உலகத்தை விளக்குவது எதுவோ, அந்த ப்ரஹ்மன் நான் என்று அறிந்து, ஒருவன் எல்லா பந்தங்களிலிருந்தும் விடுவிக்கப்படுகிறான்.

१८. त्रिषु धामसु यद्भोग्यं भोक्ता भोगश्च यद्भवेत् ।
तेभ्यो विलक्षणः साक्षी चिन्मात्रोऽहं सदाशिवः ॥

18. த்ரிஷு தா₄மஸு யத்₃போ₄க்₃யம் போ₄க்தா போ₄க₃ச்₁ச யத்₃ப₄வேத் ।
தேப்₄யோ விலக்ஷண: ஸாக்ஷீ சின்மாத்ரோऽஹம் ஸதா₃ சி₁வ: ॥

त्रिषु धामसु த்ரிஷு தா₄மஸு மூன்று அவஸ்தைகளில் **यत् भोग्यं** யத் போ₄க்₃யம் அனுபவிக்கப்படுவதாகவும் **भोक्ता** போ₄க்தா அனுபவிப் பவனாகவும் **भोगः च** போ₄க₃: ச அனுபவிப்பதற்கு கருவியாகவும் **यत्** யத் எது **भवेत्** ப₄வேத் உள்ளதோ **तेभ्यः** தேப்₄ய: அவற்றிலிருந்து **विलक्षणः** விலக்ஷண: வேறுபட்ட **अहं** அஹம் நான் **साक्षी** ஸாக்ஷீ ஸாக்ஷியாகவும் **चिन्मात्रः** சின்மாத்ர: தூய்மையான அறிவு ஸ்வரூப மாகவும் **सदाशिवः** ஸதா₃சி₁வ: எப்பொழுதும் மங்கள ஸ்வரூப மாகவும் (இருக்கிறேன்).

மூன்று அவஸ்தைகளில், அனுபவிக்கப்படுவதாகவும் அனுபவிப்பவனாகவும் அனுபவிப்பதற்குக் கருவியாகவும் எது உள்ளதோ, அவற்றிலிருந்து வேறுபட்ட நான், ஸாக்ஷியாகவும் தூய்மையான அறிவு ஸ்வரூபமாகவும் எப்பொழுதும் மங்கள ஸ்வரூபமாகவும் இருக்கிறேன்.

१९. मय्येव सकलं जातं मयि सर्वं प्रतिष्ठितम् ।
मयि सर्वं लयं याति तद् ब्रह्माद्वयमस्म्यहम् ॥

19. மய்யேவ ஸகலம் ஜாதம் மயி ஸர்வம் ப்ரதிஷ்டி₂தம் ।
மயி ஸர்வம் லயம் யாதி தத்₃ ப்₃ரஹ்மாத்₃வயமஸ்ம்யஹம் ॥

मयि एव மயி ஏவ என்னிடத்திலிருந்தே **सकलं** ஸகலம் அனைத்தும் **जातं** ஜாதம் தோன்றின. **मयि** மயி என்னிடத்தில் (என்னையே) **सर्वं** ஸர்வம் அனைத்தும் **प्रतिष्ठितं** ப்ரதிஷ்டி₂தம் சார்ந்துள்ளன. **मयि** மயி என்னிடத்தில் **सर्वं** ஸர்வம் அனைத்தும் **लयं याति** லயம் யாதி ஒடுங்கு கின்றன. **अहं** அஹம் நான் **तत्** தத் அந்த **अद्वयं** அத்₃வயம் இரண்டற்ற **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மனாக **अस्मि** அஸ்மி இருக்கிறேன்.

என்னிடத்திலிருந்தே அனைத்தும் தோன்றின. என்னையே அனைத்தும் சார்ந்துள்ளன. என்னிடத்தில் அனைத்தும் ஒடுங்குகின்றன. நான் அந்த இரண்டற்ற ப்ரஹ்மனாக இருக்கிறேன்.

२०. अणोरणीयानहमेव तद्वद् महानहं विश्वमहं विचित्रम्।
पुरातनोऽहं पुरुषोऽहमीशः हिरण्मयोऽहं शिवरूपमस्मि ॥

20. அணோரணீயானஹமேவ தத்₃வத்₃
மஹானஹம் விச்₁வமஹம் விசித்ரம் ।
புராதனோऽஹம் புருஷோऽஹமீச₁:
ஹிரண்மயோऽஹம் சி₁வரூபமஸ்மி ॥

अणोः அணோ: சிறியதைக்காட்டிலும் **अणीयान्** அணீயான் சிறியவன் **अहं एव** அஹம் ஏவ நானே. **तद्वत्** தத்₃வத் அதுபோல் **महान्** மஹான் (பெரியதைக் காட்டிலும்) பெரியவன் **अहं** அஹம் நான். **विचित्रं** விசித்ரம் விதவிதமான **विश्वं** விச்₁வம் உலகம் **अहं** அஹம் நான். **अहं** அஹம் நான் **पुरातनः** புராதன: என்றும் உள்ளவன். **अहं** அஹம் நான் **पुरुषः** புருஷ: (அனைத்தையும்) வ்யாபித்துள்ளவன். **ईशः** ஈச₁: (நான்) ஆள்பவன். **अहं** அஹம் நான் **हिरण्मयः** ஹிரண்மய: ஒளிர்கின்ற ரூபமானவன். **शिवरूपं** சி₁வரூபம் மங்கள ஸ்வரூபமாக **अस्मि** அஸ்மி இருக்கிறேன்.

சிறியதைக் காட்டிலும் சிறியவன் நானே. அதுபோல் பெரியதைக் காட்டிலும் பெரியவன் நான். விதவிதமான உலகம் நான். நான் என்றும் உள்ளவன். நான் அனைத்தையும் வ்யாபித்துள்ளவன். நான் ஆள்பவன். நான் ஒளிர்கின்ற ரூபமானவன். மங்கள ஸ்வரூபமாக இருக்கிறேன்.

२१. अपाणिपादोऽहमचिन्त्यशक्तिः पश्याम्यचक्षुः स शृणोम्यकर्णः।
अहं विजानामि विविक्तरूपः न चास्ति वेत्ता मम चित्सदाहम् ॥

21. அபாணிபாதோ$_{3}$ऽஹமசிந்த்ய ச$_{1}$க்தி:
பச்$_{1}$யாம்யசக்ஷு: ஸ ச்$_{1}$ருணோம்யகர்ண: ।
அஹம் விஜானாமி விவிக்தரூப:
ந சாஸ்தி வேத்தா மம சித்ஸதா$_{3}$ஹம் ॥

अहं அஹம் நான் **अपाणि-पादः** அபாணி-பாத$_{3}$: கை-கால்கள் அற்றவன். **अचिन्त्यशक्तिः** அசிந்த்யச$_{1}$க்தி: (இருப்பினும்) எல்லையற்ற சக்தியை உடையவன். **अचक्षुः** அசக்ஷு: கண் இல்லாத (நான்) **पश्यामि** பச்$_{1}$யாமி பார்க்கிறேன். **अकर्णः** அகர்ண: செவி இல்லாத (நான்) **शृणोमि** ச்$_{1}$ருணோமி கேட்கிறேன். **सः अहं** ஸ: அஹம் இப்படிப்பட்ட நான் **विविक्तरूपः** விவிக்தரூப: விதவிதமான வடிவத்தை அடைந்தவனாக **विजानामि** விஜானாமி (அனைத்தையும்) அறிகிறேன். **मम** மம (ஆனால்) என்னை **वेत्ता** வேத்தா அறிபவன் (ஒருவனும்) **न च अस्ति** ந ச அஸ்தி இல்லை. **अहं** அஹம் நான் **सदा** ஸதா$_{3}$ என்றும் **चित्** சித் தூய்மையான அறிவு ஸ்வரூபம்.

நான் கை-கால்கள் அற்றவன். இருப்பினும் எல்லையற்ற சக்தியை உடையவன். கண் இல்லாத நான் பார்க்கிறேன். செவி இல்லாத நான் கேட்கிறேன். இப்படிப்பட்ட நான் விதவிதமான வடிவத்தை அடைந்தவனாக அனைத்தையும் அறிகிறேன். ஆனால் என்னை அறிபவன் ஒருவனும் இல்லை. நான் என்றும் தூய்மையான அறிவு ஸ்வரூபம்.

२२. वेदैरनेकैरहमेव वेद्यः वेदान्तकृद्वेदविदेव चाहम् ।
न पुण्यपापे मम नास्ति नाशः न जन्मदेहेन्द्रियबुद्धिरस्ति ।
न भूमिरापो न च वह्निरस्ति न चानिलो मेऽस्ति न चाम्बरं च ॥

22. வேதை$_{3}$ரனேகைரஹமேவ வேத்$_{3}$ய:
வேதா$_{3}$ந்தக்ருத்$_{3}$வேத$_{3}$விதே$_{3}$வ சாஹம் ।
ந புண்யபாபே மம நாஸ்தி நாச$_{1}$:
ந ஜன்மதே$_{3}$ஹேந்த்$_{3}$ரியபு$_{3}$த்$_{3}$தி$_{4}$ரஸ்தி ।

ந பூ₄மிராபோ ந ச வஹ்நிரஸ்தி
ந சானிலோ மேऽஸ்தி ந சாம்ப₃ரம் ச ॥

अनेकैः वेदैः அனேகை: வேதை₃: அனைத்து வேதங்களாலும் **वेद्यः** வேத்₃ய: அறியப்படவேண்டியவன் **अहं एव** அஹம் ஏவ நானே. **वेदान्तकृत्** வேதா₃ந்தக்ருத் வேதாந்தத்தைத் தோற்றுவித்தவனும் **वेदवित् च** வேத₃வித் ச வேதத்தை அறிபவனும் **अहं एव** அஹம் ஏவ நானே. **मम** மம எனக்கு **पुण्यपापे** புண்யபாபே புண்யபாபங்கள் **न** ந கிடையாது. **नाशः** நாச₁: (எனக்கு) அழிவு **न अस्ति** ந அஸ்தி கிடையாது. **जन्म-देह-इन्द्रिय-बुद्धिः** ஜன்ம-தே₃ஹ-இந்த்₃ரிய-பு₃த்₃தி₄: பிறப்பு உடல் இந்த்ரியங்கள் புத்தி **न अस्ति** ந அஸ்தி (ஆகியவை எனக்கு) கிடையாது. **भूमिः** பூ₄மி: பூமி **आपः** ஆப: நீர் **न** ந (எனக்கு) கிடையாது. **वह्निः च** வஹ்னி: ச நெருப்பும் **न अस्ति** ந அஸ்தி (எனக்கு) கிடையாது. **मे** மே எனக்கு **अनिलः च** அனில: ச காற்றும் **न अस्ति** ந அஸ்தி கிடையாது. **अम्बरं च** அம்ப₃ரம் ச (எனக்கு) ஆகாசமும் **न च** ந ச கிடையாது.

அனைத்து வேதங்களாலும் அறியப்பட வேண்டியவன் நானே. வேதாந்தத்தைத் தோற்றுவித்தவனும் வேதத்தை அறிபவனும் நானே. எனக்கு புண்யபாபங்கள் கிடையாது. எனக்கு அழிவு கிடையாது. பிறப்பு, உடல், இந்த்ரியங்கள், புத்தி ஆகியவை எனக்குக் கிடையாது. பூமி, நீர் எனக்குக் கிடையாது. நெருப்பும் எனக்குக் கிடையாது. எனக்குக் காற்றும் கிடையாது. எனக்கு ஆகாசமும் கிடையாது.

२३. एवं विदित्वा परमात्मरूपं गुहाशयं निष्कलमद्वितीयम्।
समस्तसाक्षिं सदसद्विहीनं प्रयाति शुद्धं परमात्मरूपम्॥

23. ஏவம் விதி₃த்வா பரமாத்மரூபம்
கு₃ஹாச₁யம் நிஷ்கலமத்₃விதீயம் ।
ஸமஸ்தஸாக்ஷிம் ஸத₃ஸத்₃விஹீனம்
ப்ரயாதி சு₁த்₃த₄ம் பரமாத்மரூபம் ॥

एवं ஏவம் இங்கு விளக்கியபடி **गुहाशयं** கு3ஹாச1யம் மனதில் வெளிப்படுகின்ற **निष्कलं** நிஷ்கலம் பிளவுபடாத **अद्वितीयं** அத்3விதீயம் இரண்டற்ற **समस्त-साक्षिं** ஸமஸ்த-ஸாக்ஷிம் அனைத்திற்கும் ஸாக்ஷியான **सत्-असत्-विहीनं** ஸத்-அஸத்-விஹீனம் கார்ய-காரணமற்ற **शुद्धं** சு1த்3த4ம் தூய்மையான **परमात्मरूपं** பரமாத்மரூபம் மேலான ஆத்ம ஸ்வரூபத்தை **विदित्वा** விதி3த்வா (ஒருவன்) அறிந்து **परमात्मरूपं** பரமாத்மரூபம் (அதே) மேலான ஆத்ம ஸ்வரூபத்தை **प्रयाति** ப்ரயாதி அடைகிறான்.

இங்கு விளக்கியபடி, மனதில் வெளிப்படுகின்ற, பிளவுபடாத, இரண்டற்ற, அனைத்திற்கும் ஸாக்ஷியான, கார்ய காரணமற்ற, தூய்மையான, மேலான ஆத்மஸ்வரூபத்தை ஒருவன் அறிந்து அதே மேலான ஆத்மஸ்வரூபத்தை அடைகிறான்.

२४. यः शतरुद्रियमधीते सोऽग्निपूतो भवति सुरापानात्पूतो भवति ब्रह्महत्यात्पूतो भवति कृत्याकृत्यात्पूतो भवति तस्मादविमुक्त माश्रितो भवति। अत्याश्रमी सर्वदा सकृद्वा जपेत्॥

24. ய: ச1தருத்3ரியமதீ4தே ஸோऽக்3னிபூதோ ப4வதி
ஸுராபானாத்பூதோ ப4வதி
ப்3ரஹ்மஹத்யாத்பூதோ ப4வதி
க்ருத்யாக்ருத்யாத்பூதோ ப4வதி
தஸ்மாத3விமுக்தமாச்1ரிதோ ப4வதி ।
அத்யாச்1ரமீ ஸர்வதா3 ஸக்ருத்3வா ஜபேத் ॥

यः ய: யார் **शतरुद्रियं** ச1தருத்3ரியம் ஶ்ரீ ருத்ரத்தை **अधीते** அதீ4தே ஓதுகிறானோ **सः** ஸ: அவன் **अग्निपूतः भवति** அக்3னிபூத: ப4வதி அக்னியால் தூய்மையாக்கப்படுகிறான். **सुरापानात्** ஸுராபானாத் மது அருந்தியதால் வந்த (பாபத்திலிருந்து) **पूतः भवति** பூத: ப4வதி தூய்மை யாக்கப்படுகிறான். **ब्रह्महत्यात्** ப்3ரஹ்மஹத்யாத் ப்ராஹ்மணனைக்

கொன்ற (பாபத்திலிருந்து) **पूतः भवति** பூத: ப$_4$வதி தூய்மை யாக்கப்படுகிறான். **कृत्य-अकृत्यात्** க்ருத்ய-அக்ருத்யாத் செய்ய வேண்டியதைச் செய்யாத செய்யக்கூடாததைச் செய்த (பாபத்திலிருந்து) **पूतः भवति** பூத: ப$_4$வதி தூய்மையாக்கப்படுகிறான். **तस्मात्** தஸ்மாத் ஆகவே **अविमुक्तं** அவிமுக்தம் (அவன்) சிவனை **आश्रितः भवति** ஆச்$_1$ரித: ப$_4$வதி சார்ந்தவனாகிறான். **अत्याश्रमी** அத்யாச்$_1$ரமீ ஸந்யாஸி **सर्वदा** ஸர்வதா$_3$ எப்பொழுதும் **जपेत्** ஜபேத் (ஸ்ரீ ருத்ரத்தை) ஜபிக்கவேண்டும். **सकृत् वा** ஸக்ருத் வா (ஒரு நாளில்) ஒரு முறையாவது (ஜபிக்க வேண்டும்).

யார் ஸ்ரீ ருத்ரத்தை ஓதுகிறானோ, அவன் அக்னியால் தூய்மையாக்கப்படுகிறான். மது அருந்தியதால் வந்த பாபத்திலிருந்து தூய்மையாக்கப்படுகிறான். ப்ராஹ்மணனைக் கொன்ற பாபத்திலிருந்து தூய்மையாக்கப்படுகிறான். செய்ய வேண்டியதைச் செய்யாத, செய்யக்கூடாததைச் செய்த பாபத்திலிருந்து தூய்மையாக்கப்படுகிறான். ஆகவே அவன் சிவனைச் சார்ந்தவனாகிறான். ஸந்யாஸி எப்பொழுதும் ஸ்ரீ ருத்ரத்தை ஜபிக்க வேண்டும். ஒரு நாளில் ஒரு முறையாவது ஜபிக்க வேண்டும்.

२५. अनेन ज्ञानमाप्नोति संसारार्णवनाशनम्।
तस्मादेवं विदित्वैनं कैवल्यं फलमश्नुते
कैवल्यं फलमश्नुत इति॥

25. அனேன ஞானமாப்னோதி ஸம்ஸாரார்ணவநாச$_1$னம் ।
தஸ்மாதே$_3$வம் விதி$_3$த்வைனம் கைவல்யம் ப$_2$லமச்$_1$னுதே
கைவல்யம் ப$_2$லமச்$_1$னுத இதி ॥

अनेन அனேன இதன்மூலம் (தூய்மையானதால்) **संसार-अर्णव-नाशनं** ஸம்ஸார-அர்ணவ-நாச$_1$னம் (ஒருவன்) துயரக்கடலை நாசம் செய்யும் **ज्ञानं** ஞானம் ஞானத்தை **आप्नोति** ஆப்னோதி அடைகிறான். **तस्मात्** தஸ்மாத் ஆகவே **एवं** ஏவம் இவ்விதம் **एनं** ஏனம் இதை (இந்த

ஆத்மாவை) **विदित्वा** விதி$_3$த்வா அறிந்து **कैवल्यं** கைவல்யம் மோக்ஷம் என்கின்ற **फलं** ப$_2$லம் பலனை **अश्नुते** அச்$_1$னுதே அடைகிறான். **कैवल्यं** கைவல்யம் மோக்ஷம் என்கின்ற **फलं** ப$_2$லம் பலனை **अश्नुते इति** அச்$_1$னுதே இதி நிச்சயமாக அடைகிறான்.

இதன் மூலம் தூய்மையானதால் ஒருவன் துயரக்கடலை நாசம் செய்யும் ஞானத்தை அடைகிறான். ஆகவே, இவ்விதம் இந்த ஆத்மாவை அறிந்து மோக்ஷம் என்கின்ற பலனை அடைகிறான். மோக்ஷம் என்கின்ற பலனை நிச்சயமாக அடைகிறான்.

।। कैवल्योपनिषत् समाप्ता ।।

கைவல்யோபநிஷத் முடிவுற்றது.

****

தைத்திரீயோபநிஷத்



ॐ

तैत्तिरीयोपनिषद्

தைத்திரீயோபநிஷத்$_3$

சாரம்

இந்த உபநிஷத் க்ருஷ்ண யஜுர்வேதத்தில் அமைந்துள்ளது. இவ்வுபநிஷத்தில் மூன்று அத்யாயங்கள் உள்ளன. இங்கு அத்யாயங்கள் வல்லி என்று அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வல்லியிலும் பல பகுதிகள் உள்ளன. இங்கு பகுதிகள் அனுவாகம் என்று அழைக்கப்படுகின்றன.

முதல் வல்லி

இவ்வல்லி சீக்ஷாவல்லி என்று அழைக்கப்படுகிறது. இங்கு விதவிதமான த்யானங்கள், சில கர்மங்கள், நல்ல சில பண்புகள் உபதேசிக்கப்படுகின்றன. இவை எல்லாம் ஞானத்திற்குத் தகுதிப் படுத்தப் பயன்படுகின்றன. ப்ரஹ்மனைப் பற்றிய விளக்கம் இரண்டாவது வல்லியில்தான் வருகிறது. இவ்வுபநிஷத்தினுடைய சாந்திபாடமே முதல் அனுவாகமாக அமைந்துள்ளது. வேத மந்த்ரங்களை உச்சரிக்கும் போது கவனத்தில் வைக்கவேண்டிய விஷயங்கள் கூறப்படுகின்றன. பரம்பொருள் தத்துவமானது வாக்கியங்களால் விளக்கப்படுவதனால், அவற்றைச் சரியாக உச்சரிப்பது அவசியமாகிறது (2).

ஸம்ஹிதா உபாஸனம் என்று அழைக்கப்படுகின்ற த்யானம் கூறப்பட்டுள்ளது. த்யானம் என்ற சொல்லுக்கும் உபாஸனம் என்ற சொல்லுக்கும் அர்த்தம் ஒன்றே. இரண்டு எழுத்துக்களின் இடைவெளி இல்லாத நெருக்கம் ஸம்ஹிதா எனப்படும். இரண்டு சொற்கள் சேரும்பொழுது அங்குள்ள இடைவெளியில் சில சமயங்களில் புதிய எழுத்து சேர்க்கப்படும். உதாரணமாக நம்மை என்ற சொல்லும் சார்ந்து என்ற சொல்லும் சேரும் பொழுது இடையில் ச் என்ற எழுத்து வருகிறது. நம்மை - சார்ந்து என்ற சேர்க்கையில் மை என்பது முன் எழுத்து, சா என்பது பின் எழுத்து,

இரண்டுக்கும் இருக்கும் இடைவெளி, அதில் ச் என்பது சேர்க்கும் எழுத்து. இவ்விதம் சேர்க்கையில் ஸம்பந்தப்படுகின்ற இடங்களில் வித விதமான தேவதைகளை த்யானித்தல் இவ்வுபாஸனை ஆகிறது. மொத்தமாக இருபத்தி நான்கு தேவதைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு த்யானம் செய்யப்படுகிறது. த்யானத்தினுடைய பலனும் இறுதியில் கூறப்படுகிறது (3).

இறைவனை ஓங்காரரூபமாக வர்ணித்து, ஓங்காரத்திடம் வேண்டுதல் விடுக்கப்படுகின்றது. ஆரோக்யமான உடல், மற்றவர்களைத் துன்புறுத்தாத வாக்கு, சாஸ்த்ரத்தைத் தொடர்ந்து கேட்டு அதை மறக்காது இருக்க ஞாபகசக்தி முதலியவை வேண்டப்படுகின்றன. போதிய மனப்பக்குவம் அடைந்தபின் பொருள்களும் பரம்பரையைக் காக்க நல்ல மாணவர்களும் வேண்டப்பட்டு, இறுதியில் இறைவனுடன் ஒன்றாகக் கலந்து விடவேண்டும் என்று ப்ரார்த்தனை முடிகிறது (4).

இங்கு உள்ள த்யானத்திற்கு வ்யாஹ்ருதி உபாஸனம் என்று பெயர். படைப்பின் துவக்கத்தில் ப்ரஹ்மதேவர் பூ: புவ: ஸுவ: என்ற சப்தத்தை எழுப்பினார். பிறகு ஒரு ரிஷியானவர் மஹ: என்ற சப்தத்தைக் கொடுத்தார். இந்த சப்தங்களே வ்யாஹ்ருதி என்று அழைக்கப்படுகின்றன. வ்யாஹ்ருதி என்ற சொல்லுக்கு மங்களம் என்ற பொருள் உண்டு. இந்த நான்கு மந்த்ரங்களில் இயற்கையில் அமைந்துள்ள பதினாறு தேவதைகளை த்யானிக்க வேண்டும். இந்த உபாஸனை அடுத்த உபாஸனையுடன் சேர்க்கப்பட வேண்டும் (5).

இங்கு ஹிரண்யகர்பர் த்யானிக்கப்படுகிறார். சென்ற அனுவாகத்தில் சொன்ன வ்யாஹ்ருதி உபாஸனையை மேற்கொண்டபின் இந்த உபாஸனையைச் செய்ய வேண்டும். இங்கு அனைத்து ஸூக்ஷ்ம உலகுக்கும் அதிபதியாக இருக்கின்ற ஹிரண்யகர்பர் என்ற தத்துவத்தை மனத்துக்குள் த்யானிக்க வேண்டும். இந்த த்யானத்தின் பலனாக, உபாஸகன் உடலை விட்டதற்குப்பிறகு அக்னி, வாயு முதலிய தேவதைகளுடன் ஒன்றாகி, இறுதியாக ஹிரண்யகர்பருடன் ஐக்யமாகி விடுகிறான். உபாஸனையின் மூலம் பெறப்படும் மேலான பலனும் இதுவே. (6)

இங்கு உள்ள த்யானத்திற்கு பாங்க்த்த ப்ரஹ்ம உபாஸனம் என்று பெயர். பாங்க்த்தம் என்ற சொல்லுக்கு ஐந்து தத்துவங்களின் சேர்க்கை என்று பொருள். இவ்வுலகம் ஆறு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றிலும் ஐந்து தத்துவங்கள் அடக்கப் படுகின்றன. இந்த ஆறு கூறுகளில் மூன்று வெளியே உள்ள தத்துவங்களாகவும் மூன்று நமக்குள் உள்ள தத்துவங்களாகவும் அமைந்துள்ளன. வெளியே உள்ள தத்துவங்களை உள்ளே உள்ள தத்துவங்களுடன் ஐக்யப்படுத்தி த்யானிக்க வேண்டும். அதாவது, அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் உள்ளதாக த்யானித்தல். இதுவும் ஒருவகையான ஹிரண்யகர்ப உபாஸனை தான். இதன் பலனும் ஹிரண்யகர்பருடன் ஐக்யமாவதே (7).

ஓங்கார உபாஸனம் கூறப்படுகிறது. ஓங்காரத்தை ப்ரஹ்மனாக த்யானிக்க வேண்டும். ஓங்காரத்தின் பெருமைகள் இங்கு கூறப்பட்டுள்ளன (8). இவ்விதம் பலவிதமான உபாஸனைகளைக் கூறியபின் நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் பல பேசப்படுகின்றன. அந்தப் பண்புகளுக்குள் சாஸ்த்ரம் படித்தலையும் அதை போதித்தலையும் உபநிஷத் வலியுறுத்துகிறது (9). த்ரிசங்கு என்ற ரிஷியானவர், தான் அடைந்த ஞானத்தை வெளிப்படுத்து கின்றார். இப்பகுதி தன்னைப் பண்படுத்தும் ஜபமாக பயன்படுத்தப்பட வேண்டும். அதாவது த்ரிசங்குவினுடைய இந்த வாக்யங்களை ஜபம் செய்வதால் அவர் அடைந்த ஞானத்திற்கு உரிய தகுதியை நம் மனம் அடைகிறது (10).

இப்பகுதியில் சிஷ்யனுக்கு சில அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. உண்மை பேசுதல், தர்மப்படி வாழ்தல், சாஸ்த்ரம் படித்தல், பெற்றோரை மதித்தல், தானம் செய்தல் போன்ற பண்புகளை குரு போதிக்கின்றார். குருகுலத்தில் தர்மநெறிகளைப் பற்றிய படிப்பை முடித்து செல்லும் மாணவர்களிடம் குருவானவர் தன்னிடத்தில் ஏதேனும் பலஹீனங்கள் இருப்பின் அதை எடுத்துக் கொள்ளாமல், தன்னிடத்திலுள்ள நல்ல குணங்களை மட்டும் பின்பற்ற வேண்டும் எனக் கூறி, தர்ம விஷயத்தில் குழப்பம் ஏற்பட்டால் அப்பொழுது வாழ்ந்து வருகின்ற சான்றோர்கள் கூறுவதையே ஆதாரமாகக்

கொள்ளவேண்டும் என்று முடிக்கிறார். இவ்விதம் வேதம் உபதேசிக்கின்ற இப்பண்புகளை எல்லாம் பின்பற்றுகின்ற பொழுது, தனக்கும் மற்ற அனைவருக்கும் நன்மை ஏற்படுகிறது (11). இறுதியில் முதல் அனுவாகத்தில் வந்த சாந்தி பாடமே சிறு மாற்றத்துடன் வந்துள்ளது. இறைவன் எங்களைக் காப்பாற்றிவிட்டார் என்ற விதத்தில் முடிகிறது (12).

இரண்டாவது வல்லி

இந்த வல்லியின் துவக்கத்தில் ப்ரஹ்மதத்துவம் அறிமுகப் படுத்தப்பட்டு, இவ்வல்லி முழுவதும் ப்ரஹ்மதத்துவத்தின் விளக்கமும் அதன் பலனும் கூறப்படுகிறது. முதல் அனுவாகத்தில் முதல் வாக்யம் சூத்ரவாக்யமாக அமைந்துள்ளது. சொல்ல விரும்பும் கருத்தை மிகவும் சுருக்கமாகக் கூறுவது சூத்ரவாக்யம். அந்த சூத்ரவாக்யத்தை சுருக்கமாக விளக்குவது வ்ருத்திவாக்யம் என்றும், விரிவாக விளக்குவது வ்யாக்யானம் என்றும் அழைக்கப் படுகின்றன.

ப்ரஹ்மனை அறிபவன் பரத்தை அடைகிறான் என்பது இங்குள்ள சூத்ரவாக்யத்தின் பொருள். இவ்வாக்யத்தைக் கேட்டவுடன் எது ப்ரஹ்மன்? எப்படி அறிதல்? பரத்தை அடைதல் என்றால் என்ன? என்று மூன்று கேள்விகள் எழுகின்றன. இவற்றின் சுருக்கமான பதில் வ்ருத்தி வாக்யத்தில் வருகிறது: 1. எது ஸத்யமாகவும் ஞானமாகவும் எல்லையற்றதாகவும் இருக்கிறதோ அது ப்ரஹ்மன். 2. அந்த ப்ரஹ்மனை மனத்துக்குள் அறியவேண்டும். 3. அந்த ப்ரஹ்மனை அறிந்தவன் ப்ரஹ்மனாகவே இருந்து அனைத்தையும் அடைகிறான். இவ்விதம் சுருக்கமான விளக்கம் கொடுக்கப்பட்டு, ஐந்தாவது அனுவாகம் வரை இந்த மூன்று கருத்துக்களும் விரிவாக விளக்கப்படுகின்றன. ப்ரஹ்ம தத்துவத்தை விளக்குவதற்கு இங்கு உபநிஷத் பயன்படுத்தும் முறையானது **(method)** அத்யாரோப அபவாத ந்யாயம் என்று அழைக்கப்படுகிறது. அத்யாரோபம் என்பது ப்ரஹ்மத்தின் மீது இவ்வுலகை ஏற்றி வைத்தல். அபவாதம் என்பது ஏற்றிவைத்த உலகை நீக்குதல். நாம் அனுபவிக்கின்ற இப்படைப்பு ப்ரஹ்மத்திலிருந்து தோன்றியது என்று ப்ரஹ்மனைக்

காரணமாகக் காட்டி, இப்படைப்பைக் கார்யமாகக் காட்டுதல் அத்யாரோபம் ஆகும். பிறகு கார்யமான இந்த உலகம் காரணத்தி லிருந்து வேறாக இல்லை என்று கார்யத்தை நீக்குதல் அபவாதம் ஆகும். முதல் அனுவாகத்தில் பஞ்சபூதங்களுடைய தோற்றம் பேசப்பட்டு இந்த அனைத்துப் படைப்பும் ப்ரஹ்மத்தின் மீது ஏற்றி வைக்கப்படுகிறது. ஏற்றி வைக்கப்பட்ட இந்த படைப்பானது இரண்டாவது அனுவாகத்தில் ஆரம்பித்து ஐந்தாவது அனுவாகம் வரை ஒன்றன்பின் ஒன்றாக நீக்கப்படுகிறது. அவ்விதம் நீக்குதலானது ஐந்துபடிகளில் நடக்கிறது. ஒரு ஜீவனின் அனாத்மா வாக இருக்கின்ற உடல் ஐந்து கோசங்களாகப் பிரிக்கப் படுகிறது. அவை 1. அன்னமய கோசம், 2. ப்ராணமய கோசம், 3. மனோமய கோசம், 4. விஞானமய கோசம், 5. ஆனந்தமய கோசம். ஒவ்வொரு கோசத்தை நீக்கும்பொழுது அந்த கோசத்துடன் சேர்ந்து இவ்வுலகமும் நீக்கப்படுகிறது. உதாரணமாக, அன்னமய கோசமான இந்த ஸ்தூல உடல் ஆத்மா அல்ல என்று அன்னமய கோசத்தை நீக்கும்பொழுது இந்த ஸ்தூல உலகமும் நீக்கப்படுகின்றது. இவ்விதம் ஐந்து கோசங்களும் நீக்கப்படும் பொழுது அனைத்துப் படைப்புகளும் உண்மையல்ல என்று உணர்த்தப்பட்டு, ஆனந்த ஸ்வரூபமாகவும் ஆத்மாவாகவும் இருக்கின்ற ப்ரஹ்மதத்துவம் விளக்கப்பட்டதாகிறது (1 – 5).

ப்ரஹ்மனே மாயையின் துணைகொண்டு இப்படைப்பிற்கு உபாதான காரணமாகவும் நிமித்த காரணமாகவும் விளங்குகிறது என்று விளக்கப்படுகிறது. ப்ரஹ்மன் அறியப்படாதபொழுது பயத்திற்குக் காரணமாகவும், அறியப்படும்பொழுது அபயத்திற்கு இருப்பிடமாகவும் விளங்குகிறது. இவ்விதங்களில் ப்ரஹ்மதத்துவ விளக்கங்கள் வந்துள்ளன. இங்கு கூறப்பட்டுள்ள கருத்துக்கள் ப்ரஹ்மதத்துவம் இருக்கின்றது என்பதற்குக் காரணங்களாகக் காட்டப்படுகின்றன. முதலில் சிஷ்யனுடைய கேள்வி வருகிறது: ஞானி ப்ரஹ்மத்தை அடைகின்றானா? இல்லையா? அஞானி ப்ரஹ்மத்தை அடைகின் றானா? இல்லையா? இவ்விதமான கேள்விகள் எழ, ப்ரஹ்மன் இருக்கின்றதா என்ற கேள்வியும் வருகிறது. இங்கு பேசப்பட்ட கருத்துக்கள், ப்ரஹ்மன் இருக்கிறது என்பதற்குக் காரணமாகக் காட்டப்பட்டு ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் விளக்கப்படுகிறது.

இவ்வல்லியின் இறுதியில் ஞானி, அஞானி இருவரும் ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே இருந்த போதிலும், ஞானி ப்ரஹ்மத்தை அடைகிறான். அஞானி ப்ரஹ்மத்தை அடைவதில்லை என்ற பதில் கூறப்படுகிறது (6, 7).

ப்ரஹ்மனுடைய ஆனந்த ஸ்வரூபம் விளக்கப்படுகிறது. ஆகவே இங்கு நடக்கின்ற விசாரத்திற்கு ஆனந்தமீமாம்ஸா என்று பெயர். இவ்வுலக வாழ்வில் அதிக ஆனந்தத்தை அடைய அதிகமான பொருள்கள் தேவை என்று நினைக்கின்றோம். ஆனால் இங்கு உபநிஷத், வைராக்யம் அதிகரிக்க அதிகரிக்க ஆனந்தம் அதிகரிக்கிறது என்று நமக்குப் புகட்டுகிறது. மானிட லோகத்தில் எவ்வளவு இன்பத்தை ஒருவனால் அடையமுடியுமோ அந்த இன்பத்தைக் காட்டிலும் நூறு மடங்கு இன்பத்தை, மனித கந்தர்வ லோகத்தில் இருப்பவர்கள் அடைகிறார்கள். மனித கந்தர்வ லோகத்திற்குச் செல்லாமலே, இவ்வுலகில் இருக்கின்ற மனிதன், இவ்வுலகில் உள்ள பொருள்கள் மீது வைராக்யத்தை அடைந்தால் இவனும் மானிடலோக இன்பத்தைக் காட்டிலும் நூறு மடங்கு ஆனந்தத்தை அனுபவிக்கின்றான். இவ்விதம் ஒரு லோகத்தில், அந்த லோகத்தில் கிடைக்கின்ற ஆனந்தத்தில் வைராக்யத்தை அடைந்தால் நூறு மடங்கு ஆனந்தம் அதிகம் என்று வைராக்யத்தின் மேன்மை பேசப்படுகிறது. இவ்விதம் ஆனந்தத்தைப் பற்றிய விசாரத்தை மேற்கொண்டு ப்ரஹ்மன் ஆனந்தஸ்வரூபம் என்று கூறி, ஜீவனும் உண்மையில் ஆனந்த ஸ்வரூபமாகவே இருக்கின்றான் என்ற மஹாவாக்யத்துடன் முடிவடைகிறது (8).

இறுதியாக ஞானத்தின் பலன் கூறப்படுகிறது. இந்த ஞானத்தின் பலனானது: நான் ஏன் இதைச் செய்தேன்? நான் ஏன் இதைச் செய்யவில்லை? போன்ற எண்ணங்களின் தாக்குதலிலிருந்து விடுதலை அடைந்து மனநிறைவுடன் இருத்தலே ஆகும் (9).

மூன்றாவது வல்லி

ப்ருகு முனிவர் தன்னுடைய தந்தையான வருணரை அணுகி ப்ரஹ்ம தத்துவத்தை உபதேசிக்குமாறு வேண்டுகிறார். தந்தையானவர் ப்ரஹ்மத்தைப் பற்றிய சில குறிப்புகளைக் கொடுத்து, இந்தக்

குறிப்புகளின் துணைகொண்டு விசாரத்தை மேற்கொண்டு ப்ரஹ்மத்தை அறிவாயாக என்று கூறுகிறார். அவர் கொடுத்த முக்கிய குறிப்பானது: எதனிடமிருந்து இந்த உயிர்த்திரள்கள் தோன்றுகின்றனவோ, எதனால் காக்கப்படுகின்றனவோ, எதைச்சென்று அடைகின்றனவோ, அதுவே ப்ரஹ்ம தத்துவம். இதைக்கேட்ட ப்ருகுமுனிவர், முதலில் அன்னத்தை ப்ரஹ்மனாக உணர்ந்து, பிறகு ப்ராணமயம், மனோமயம், விஞானமயம், ஆனந்தமயம் என்று ஒவ்வொரு கோசமாக சென்று இறுதியில் ஆனந்தஸ்வரூபமாக ப்ரஹ்மனை உணர்கிறார் (1 - 6).

உணவு விஷயத்தில் நாம் கடைப்பிடிக்கவேண்டிய பண்புகளைப் பற்றியும் உபாஸனைகளும் கூறப்படுகின்றன. இவ்வுலகில் உள்ள பொருள்களான ப்ராணன், அன்னம், நீர், நெருப்பு போன்றவை ஒன்றை ஒன்று சார்ந்திருப்பவையாக த்யானிக்கப்பட வேண்டும். உதாரணமாக ப்ராணன் அன்னத்தையும் அன்னம் ப்ராணனையும் சார்ந்துள்ளது. இவ்விதம் அனைத்துமே சார்ந்திருக்கும் தன்மை யுடையதாக த்யானித்துப் பழகுவதால் இவையனைத்தின் நிலையாமை விளங்கும் (7 - 9).

அன்னதானம் வலியுறுத்தப்பட்டு, உணவை நாம் எவ்விதம் கொடுக்கிறோமோ அவ்விதமே நமக்கும் கிடைக்கிறது என்ற நியதி கூறப்படுகிறது. ப்ரஹ்மனே அனைத்துமாக விளங்குவதால் உலகில் உள்ள அனைத்து பெருமைகளையும் ப்ரஹ்மனிடத்தில் பார்க்கும் உபாஸனம் பேசப்படுகிறது. இறுதியாக ஜீவ-ப்ரஹ்ம ஐக்யத்தைக் கூறி இந்த ஞானத்தை அடைந்தவன், ஆனந்தத்தில் களித்திருக் கிறான் என்பதுடன் உபநிஷத் முடிவடைகிறது (10).

शीक्षावल्ली

சீ$_1$க்ஷாவல்லீ

शान्तिपाठः

சா$_1$ந்திபாட$_2$:

१. शं नो मित्रः शं वरुणः। शं नो भवत्वर्यमा। शं न इन्द्रो बृहस्पतिः। शं नो विष्णुरुरुक्रमः। नमो ब्रह्मणे। नमस्ते वायो। त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि। त्वमेव प्रत्यक्षं ब्रह्म वदिष्यामि। ऋतं वदिष्यामि। सत्यं वदिष्यामि। तन्मामवतु। तद्वक्तारमवतु। अवतु माम्। अवतु वक्तारम्। ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

1. ச$_1$ம் நோ மித்ர: ச$_1$ம் வருண: । ச$_1$ம் நோ ப$_4$வத்வர்யமா । ச$_1$ம் ந இந்த்$_3$ரோ ப்$_3$ருஹஸ்பதி: । ச$_1$ம் நோ விஷ்ணுருருக்ரம: । நமோ ப்$_3$ரஹ்மணே । நமஸ்தே வாயோ । த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்$_3$ரஹ்மாஸி । த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்$_3$ரஹ்ம வதி$_3$ஷ்யாமி । ரிதம் வதி$_3$ஷ்யாமி । ஸத்யம் வதி$_3$ஷ்யாமி । தந்மாமவது । தத்$_3$வக்தாரமவது । அவது மாம் । அவது வக்தாரம் । ஓம் சா$_1$ந்தி: சா$_1$ந்தி: சா$_1$ந்தி: ॥

मित्रः மித்ர: மித்ரன் (என்கின்ற தேவர்) **नः** ந: எங்களுக்கு **शं** ச$_1$ம் மங்களத்தை (கொடுப்பவராக இருக்கட்டும்). **वरुणः** வருண: வருணதேவர் **शं** ச$_1$ம் (எங்களுக்கு) மங்களத்தை (கொடுப்பவராக இருக்கட்டும்). **अर्यमा** அர்யமா அர்யமா (என்கின்ற தேவர்) **नः** ந: எங்களுக்கு **शं** ச$_1$ம் மங்களத்தை **भवतु** ப$_4$வது கொடுப்பவராக இருக்கட்டும். **इन्द्रः** இந்த்$_3$ர: இந்த்ரதேவரும் **बृहस्पतिः** ப்$_3$ருஹஸ்பதி: ப்ருஹஸ்பதியும் **नः** ந: எங்களுக்கு **शं** ச$_1$ம் மங்களத்தை (கொடுப்ப வர்களாக இருக்கட்டும்). **उरुक्रमः** உருக்ரம: நீண்ட பாதங்களை யுடைய **विष्णुः** விஷ்ணு: விஷ்ணு **नः** ந: எங்களுக்கு **शं** ச$_1$ம் மங்களத்தை (கொடுப்பவராக இருக்கட்டும்). **ब्रह्मणे** ப்$_3$ரஹ்மணே ஹிரண்யகர்பதேவருக்கு **नमः** நம: நமஸ்காரம். **वायो** வாயோ

ஹிரண்யகர்பதேவரே ते தே உங்களுக்கு नमः நம: நமஸ்காரம். त्वं एव த்வம் ஏவ நீங்களே प्रत्यक्षं ப்ரத்யக்ஷம் நேரில் காணக்கூடிய ब्रह्म ப்₃ரஹ்ம ப்ரஹ்மனாக असि அஸி இருக்கிறீர்கள். त्वं एव த்வம் ஏவ நீங்களே प्रत्यक्षं ப்ரத்யக்ஷம் நேரில் காணக்கூடிய ब्रह्म ப்₃ரஹ்ம ப்ரஹ்மன் (என்று) वदिष्यामि வதி₃ஷ்யாமி சொல்வேன். ऋतं ரிதம் சரியான அறிவு ஸ்வரூபமாக वदिष्यामि வதி₃ஷ்யாமி (உங்களை) சொல்வேன். सत्यं ஸத்யம் ஸத்ய ஸ்வரூபமாக वदिष्यामि வதி₃ஷ்யாமி (உங்களை) சொல்வேன். तत् தத் அது (அந்த ஹிரண்யகர்ப தத்துவம்) मां மாம் என்னை अवतु அவது காப்பாற்றட்டும். तत् தத் அது वक्तारं வக்தாரம் குருவை अवतु அவது காப்பாற்றட்டும். मां மாம் (அது) என்னை अवतु அவது காப்பாற்றட்டும். वक्तारं வக்தாரம் (அது) குருவை अवतु அவது காப்பாற்றட்டும். ओं शान्तिः ஓம் சா₁ந்தி: ஓம் சாந்தி शान्तिः சா₁ந்தி: சாந்தி शान्तिः சா₁ந்தி: சாந்தி.

மித்ரன் என்கின்ற தேவர் எங்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவராக இருக்கட்டும். வருணதேவர் எங்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவராக இருக்கட்டும். அர்யமா என்கின்ற தேவர் எங்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவராக இருக்கட்டும். இந்த்ரதேவரும் ப்ருஹஸ்பதியும் எங்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவர்களாக இருக்கட்டும். நீண்ட பாதங்களையுடைய விஷ்ணு எங்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவராக இருக்கட்டும். ஹிரண்யகர்பதேவருக்கு நமஸ்காரம். ஹிரண்யகர்பதேவரே, உங்களுக்கு நமஸ்காரம். நீங்களே நேரில் காணக்கூடிய ப்ரஹ்மனாக இருக்கிறீர்கள். நீங்களே நேரில் காணக்கூடிய ப்ரஹ்மன் என்று சொல்வேன். சரியான அறிவு ஸ்வரூபமாக உங்களைச் சொல்வேன். ஸத்ய ஸ்வரூபமாக உங்களைச் சொல்வேன். அந்த ஹிரண்யகர்ப தத்துவம் என்னைக் காப்பாற்றட்டும். அது குருவைக் காப்பாற்றட்டும். அது என்னைக் காப்பாற்றட்டும். அது குருவைக் காப்பாற்றட்டும். ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

२. **शीक्षां व्याख्यास्यामः। वर्णः स्वरः। मात्रा बलम्। साम सन्तानः। इत्युक्तः शीक्षाध्यायः॥**

2. சீ$_1$க்ஷாம் வ்யாக்$_2$யாஸ்யாமஃ। வர்ணஃ ஸ்வரஃ। மாத்ரா ப$_3$லம்। ஸாம ஸந்தானஃ। இத்யுக்தஃ சீ$_1$க்ஷாத்$_4$யாயஃ॥

शीक्षां சீ$_1$க்ஷாம் உச்சாரண சாஸ்த்ரத்தை **व्याख्यास्यामः** வ்யாக்$_2$யாஸ் யாமஃ தெளிவாக விளக்குவோம். **शीक्षाध्यायः** சீ$_1$க்ஷாத்$_4$யாயஃ உச்சாரண சாஸ்த்ரத்தில் **वर्णः** வர்ணஃ எழுத்து **स्वरः** ஸ்வரஃ ஸ்வரம் **मात्रा** மாத்ரா எழுத்துக்களை உச்சரிக்கும் கால அளவு **बलं** ப$_3$லம் எழுத்துக்களுக்குக் கொடுக்கவேண்டிய அழுத்தம் **साम** ஸாம எழுத்துக்களைப் படிக்கும் வேகம் **सन्तानः** சந்தானஃ எழுத்துக்களை உச்சரிக்கும்போது கொடுக்கப்படும் இடைவெளி **इति** இதி ஆகியவை **उक्तः** உக்தஃ கூறப்பட்டுள்ளன.

உச்சாரண சாஸ்த்ரத்தைத் தெளிவாக விளக்குவோம். உச்சாரண சாஸ்த்ரத்தில் எழுத்து, ஸ்வரம், எழுத்துக்களை உச்சரிக்கும் கால அளவு, எழுத்துக்களுக்குக் கொடுக்க வேண்டிய அழுத்தம், எழுத்துக்களைப் படிக்கும் வேகம், எழுத்துக்களை உச்சரிக்கும்போது கொடுக்கப்படும் இடைவெளி ஆகியவை கூறப்பட்டுள்ளன.

३. **सह नौ यशः। सह नौ ब्रह्मवर्चसम्। अथातः सँहिताया उपनिषदं व्याख्यास्यामः। पञ्चस्वधिकरणेषु। अधिलोकमधिज्यौतिषमधिविद्यमधिप्रजमध्यात्मम्। ता महासँहिता इत्याचक्षते।**

3. ஸஹ நௌ யச$_1$ஃ । ஸஹ நௌ ப்$_3$ரஹ்மவர்சஸம் । அதா$_2$தஃ ஸம்ஹிதாயா உபநிஷத$_3$ம் வ்யாக்$_2$யாஸ்யாமஃ। பஞ்சஸ்வதி$_4$கரணேஷு । அதி$_4$லோகமதி$_4$ஜ்யௌதிஷமதி$_4$வித்$_3$யமதி$_4$ப்ரஜமத்$_4$யாத்மம் । தா மஹாஸம்ஹிதா இத்யாசக்ஷதே ।

नौ நௌ எங்கள் இருவருக்கும் **सह** ஸஹ சேர்ந்து **यशः** யச$_1$ஃ புகழ் உண்டாகட்டும். **नौ** நௌ எங்கள் இருவருக்கும் **सह** ஸஹ சேர்ந்து

ब्रह्मवर्चसं ப்₃ரஹ்மவர்சஸம் தேஜஸ் (உண்டாகட்டும்). **अथ** அத₂ வேதத்தை ஓதிப்பழகிய (பின்) **अतः** அத: (ஓதுதலில் பயிற்சியி ருப்பதாலும் மன ஒருமுகப்பாட்டுக்குக்) காரணமாவதாலும் **संहितायाः** ஸம்ஹிதாயா: ஸம்ஹிதா என்ற பெயரையுடைய **उपनिषदं** உபநிஷத₃ம் உபாஸனையை **पञ्चसु अधिकरणेषु** பஞ்சஸு அதி₄கரணேஷு ஐந்து விஷயங்களுடன் **व्याख्यास्यामः** வ்யாக்₂யாஸ்யாம: தெளிவாக உபதேசிப்போம். **अधिलोकं** அதி₄லோகம் லோக ஸம்பந்தமான தேவதைகளைப் பற்றியதான **अधिज्यौतिषम्** அதி₄ஜ்யௌதிஷம் ஒளி ஸம்பந்தமான தேவதைகளைப் பற்றியதான **अधिविद्यं** அதி₄வித்₃யம் அறிவு ஸம்பந்தமான தேவதைகளைப் பற்றியதான **अधिप्रजं** அதி₄ப்ரஜம் ஸந்ததி ஸம்பந்தமான தேவதைகளைப் பற்றியதான **अध्यात्मं** அத்₄யாத்மம் உடல் ஸம்பந்தமான தேவதைகளைப் பற்றியதான **ताः** தா: இந்த (உபாஸனைகளை) **महासंहिताः** மஹாஸம்ஹிதா: மஹாஸம் ஹிதைகள் **इति** இதி என்று **आचक्षते** ஆசக்ஷதே (வேதத்தை அறிந்தவர்கள்) கூறுகிறார்கள்.

எங்கள் இருவருக்கும் சேர்ந்து புகழ் உண்டாகட்டும். எங்கள் இருவருக்கும் சேர்ந்து தேஜஸ் உண்டாகட்டும். வேதத்தை ஓதிப்பழகியபின் ஓதுதலில் பயிற்சியிருப்பதாலும் மன ஒருமுகப்பாட்டுக்குக் காரணமாவதாலும் ஸம்ஹிதா என்ற பெயரையுடைய உபாஸனையை ஐந்து விஷயங்களுடன் தெளிவாக உபதேசிப்போம். லோக ஸம்பந்தமான தேவதை களைப் பற்றியதான, ஒளி ஸம்பந்தமான தேவதைகளைப் பற்றியதான, அறிவு ஸம்பந்தமான தேவதைகளைப் பற்றிய தான, ஸந்ததி ஸம்பந்தமான தேவதைகளைப் பற்றியதான, உடல் ஸம்பந்தமான தேவதைகளைப் பற்றியதான, இந்த உபாஸனைகளை மஹாஸம்ஹிதைகள் என்று வேதத்தை அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

अथाधिलोकम्। पृथिवी पूर्वरूपम्। द्यौरुत्तररूपम्। आकाशः सन्धिः। वायुः सन्धानम्। इत्यधिलोकम्।

அதா₂தி₄லோகம் । ப்ருதி₂வீ பூர்வரூபம் । த்₃யௌருத்தர ரூபம் । ஆகாச₁: ஸந்தி₄: । வாயு: ஸந்தா₄னம் । இத்யதி₄லோகம் ।

अथ அத₂ இப்பொழுது **अधिलोकं** அதி₄லோகம் லோக ஸம்பந்தமான (உபாஸனை துவங்குகிறது). **पृथिवी** ப்ருதி₂வீ பூமி **पूर्वरूपं** பூர்வரூபம் முன் எழுத்து. **द्यौः** த்₃யௌ: ஸ்வர்கம் **उत्तररूपं** உத்தரரூபம் பின் எழுத்து. **आकाशः** ஆகாச₁: ஆகாசம் **सन्धिः** ஸந்தி₄: இடைவெளி. **वायुः** வாயு: காற்று **सन्धानं** ஸந்தா₄னம் சேர்க்கும் எழுத்து. **इति अधिलोकं** இதி அதி₄லோகம் இவ்விதம் லோக ஸம்பந்தமான (உபாஸனை முடிகிறது).

இப்பொழுது லோக ஸம்பந்தமான உபாஸனை துவங்குகிறது. பூமி முன் எழுத்து. ஸ்வர்கம் பின் எழுத்து. ஆகாசம் இடைவெளி. காற்று சேர்க்கும் எழுத்து. இவ்விதம் லோக ஸம்பந்தமான உபாஸனை முடிகிறது.

अथाधिज्यौतिषम् । अग्निः पूर्वरूपम् । आदित्य उत्तररूपम् । आपः सन्धिः । वैद्युतः सन्धानम् । इत्यधिज्यौतिषम् ।

அதா₂தி₄ஜ்யௌதிஷம் । அக்₃னி: பூர்வரூபம் । ஆதி₃த்ய உத்தரரூபம் । ஆப: ஸந்தி₄: । வைத்₃யுத: ஸந்தா₄னம் । இத்யதி₄ ஜ்யௌதிஷம் ।

अथ அத₂ இப்பொழுது **अधिज्यौतिषं** அதி₄ஜ்யௌதிஷம் ஒளி ஸம்பந்தமான (உபாஸனை துவங்குகிறது). **अग्निः** அக்₃னி: நெருப்பு **पूर्वरूपं** பூர்வரூபம் முன் எழுத்து. **आदित्यः** ஆதி₃த்ய: ஸூர்யன் **उत्तररूपं** உத்தரரூபம் பின் எழுத்து. **आपः** ஆப: மழைநீர் **सन्धिः** ஸந்தி₄: இடைவெளி. **वैद्युतः** வைத்₃யுத: மின்னல் **सन्धानं** ஸந்தா₄னம் சேர்க்கும் எழுத்து. **इति अधिज्यौतिषं** இதி அதி₄ஜ்யௌதிஷம் இவ்விதம் ஒளி ஸம்பந்தமான (உபாஸனை முடிகிறது).

இப்பொழுது ஒளி ஸம்பந்தமான உபாஸனை துவங்குகிறது. நெருப்பு முன் எழுத்து. ஸூர்யன் பின் எழுத்து. மழைநீர்

இடைவெளி. மின்னல் சேர்க்கும் எழுத்து. இவ்விதம் ஒளி ஸம்பந்தமான உபாஸனை முடிகிறது.

अथाधिविद्यम्। आचार्यः पूर्वरूपम्। अन्तेवास्युत्तररूपम्। विद्या सन्धिः। प्रवचनँसन्धानम्। इत्यधिविद्यम्।

அதா$_2$தி$_4$வித்$_3$யம் । ஆசார்ய: பூர்வரூபம் । அந்தேவாஸ்யுத்தரரூபம் । வித்$_3$யா ஸந்தி$_4$: । ப்ரவசனம்ஸந்தா$_4$னம் । இத்யதி$_4$வித்$_3$யம் ।

अथ அத$_2$ இப்பொழுது **अधिविद्यं** அதி$_4$வித்$_3$யம் அறிவு ஸம்பந்தமான (உபாஸனை துவங்குகிறது). **आचार्यः** ஆசார்ய: குரு **पूर्वरूपं** பூர்வரூபம் முன் எழுத்து. **अन्तेवासी** அந்தேவாஸீ சிஷ்யன் **उत्तररूपं** உத்தரரூபம் பின் எழுத்து. **विद्या** வித்$_3$யா அறிவு **सन्धिः** ஸந்தி$_4$: இடைவெளி. **प्रवचनं** ப்ரவசனம் உபதேசித்தல் **सन्धानं** ஸந்தா$_4$னம் சேர்க்கும் எழுத்து. **इति अधिविद्यं** இதி அதி$_4$வித்$_3$யம் இவ்விதம் அறிவு ஸம்பந்தமான (உபாஸனை முடிகிறது).

இப்பொழுது அறிவு ஸம்பந்தமான உபாஸனை துவங்குகிறது. குரு முன் எழுத்து. சிஷ்யன் பின் எழுத்து. அறிவு இடைவெளி. உபதேசித்தல் சேர்க்கும் எழுத்து. இவ்விதம் அறிவு ஸம்பந்தமான உபாஸனை முடிகிறது.

अथाधिप्रजम्। माता पूर्वरूपम्। पितोत्तररूपम्। प्रजा सन्धिः। प्रजननँसन्धानम्। इत्यधिप्रजम्।

அதா$_2$தி$_4$ப்ரஜம் । மாதா பூர்வரூபம் । பிதோத்தரரூபம் । ப்ரஜா ஸந்தி$_4$: । ப்ரஜனனம்ஸந்தா$_4$னம் । இத்யதி$_4$ப்ரஜம் ।

अथ அத$_2$ இப்பொழுது **अधिप्रजं** அதி$_4$ப்ரஜம் ஸந்ததி ஸம்பந்தமான (உபாஸனை துவங்குகிறது). **माता** மாதா தாய் **पूर्वरूपं** பூர்வரூபம் முன் எழுத்து. **पिता** பிதா தந்தை **उत्तररूपं** உத்தரரூபம் பின் எழுத்து.

प्रजा ப்ரஜா குழந்தை **सन्धिः** ஸந்தி$_4$: இடைவெளி. **प्रजननं** ப்ரஜனனம் புணர்ச்சி **सन्धानं** ஸந்தா$_4$னம் சேர்க்கும் எழுத்து. **इति अधिप्रजं** இதி அதி$_4$ப்ரஜம் இவ்விதம் ஸந்ததி ஸம்பந்தமான (உபாஸனை முடிகிறது).

இப்பொழுது ஸந்ததி ஸம்பந்தமான உபாஸனை துவங்குகிறது. தாய் முன் எழுத்து. தந்தை பின் எழுத்து. குழந்தை இடைவெளி. புணர்ச்சி சேர்க்கும் எழுத்து. இவ்விதம் ஸந்ததி ஸம்பந்தமான உபாஸனை முடிகிறது.

अथाध्यात्मम्। अधराहनुः पूर्वरूपम्। उत्तराहनुरुत्तररूपम्। वाक्सन्धिः। जिह्वा सन्धानम्। इत्यध्यात्मम्।

அதா$_2$த்$_4$யாத்மம் । அத$_4$ராஹனு: பூர்வரூபம் । உத்தராஹனு ருத்தரரூபம் । வாக்ஸந்தி$_4$: । ஜிஹ்வா ஸந்தா$_4$னம் । இத்யத்$_4$யாத்மம் ।

अथ அத$_2$ இப்பொழுது **अध्यात्मं** அத்$_4$யாத்மம் உடல் ஸம்பந்தமான (உபாஸனை துவங்குகிறது). **अधराहनुः** அத$_4$ராஹனு: கீழ்வாய்க் கட்டை **पूर्वरूपं** பூர்வரூபம் முன் எழுத்து. **उत्तराहनुः** உத்தராஹனு: மேல்வாய்க்கட்டை **उत्तररूपं** உத்தரரூபம் பின் எழுத்து. **वाक्** வாக் பேசும் திறன் **सन्धिः** ஸந்தி$_4$: இடைவெளி. **जिह्वा** ஜிஹ்வா நாக்கு **सन्धानं** ஸந்தா$_4$னம் சேர்க்கும் எழுத்து. **इति अध्यात्मं** இதி அத்$_4$யாத்மம் இவ்விதம் உடல் ஸம்பந்தமான (உபாஸனை முடிகிறது).

இப்பொழுது உடல் ஸம்பந்தமான உபாஸனை துவங்குகிறது. கீழ்வாய்க்கட்டை முன் எழுத்து. மேல்வாய்க் கட்டை பின் எழுத்து. பேசும்திறன் இடைவெளி. நாக்கு சேர்க்கும் எழுத்து. இவ்விதம் உடல் ஸம்பந்தமான உபாஸனை முடிகிறது.

इतीमा महासँहिताः। य एवमेता महासँहिता व्याख्याता वेद। सन्धीयते प्रजया पशुभिः। ब्रह्मवर्चसेनान्नाद्येन सुवर्ग्येण लोकेन॥

இதீமா மஹாஸம்ஹிதா: । ய ஏவமேதா மஹாஸம்ஹிதா வ்யாக்₂யாதா வேத₃ । ஸந்தீ₄யதே ப்ரஜயா பசு₁பி₄: । ப்₃ரஹ்ம வர்சஸேனான்னாத்₃யேன ஸுவர்க்₃யேண லோகேன ॥

इमाः महासंहिताः இமா: மஹாஸம்ஹிதா: இந்த மஹாஸம்ஹிதைகள் (என்ற உபாஸனைகள்) **इति** இதி இவ்விதமாகும். **एवं** ஏவம் இவ்விதம் **व्याख्याताः** வ்யாக்₂யாதா: விளக்கப்பட்ட **एताः महासंहिताः** ஏதா: மஹாஸம்ஹிதா: இந்த மஹாஸம்ஹிதைகளை **यः** ய: யார் **वेद** வேத₃ உபாஸிக்கின்றானோ (அவன்) **प्रजया** ப்ரஜயா ஸந்ததியுடனும் **पशुभिः** பசு₁பி₄: பசுக்களுடனும் **ब्रह्मवर्चसेन** ப்₃ரஹ்மவர்சஸேன தேஜஸுடனும் **अन्नाद्येन** அன்னாத்₃யேன உகந்த உணவுடனும் **सुवर्ग्येण लोकेन** ஸுவர்க்₃யேண லோகேன ஸ்வர்கலோகத்துடனும் **सन्धीयते** ஸந்தீ₄யதே கூடியிருக்க அருளப்படுகிறான்.

இந்த மஹாஸம்ஹிதைகள் என்ற உபாஸனைகள் இவ்விதமாகும். இவ்விதம் விளக்கப்பட்ட இந்த மஹாஸம்ஹிதைகளை யார் உபாஸிக்கின்றானோ, அவன் ஸந்ததியுடனும் பசுக்களுடனும் தேஜஸுடனும் உகந்த உணவுடனும் ஸ்வர்க லோகத்துடனும் கூடியிருக்க அருளப்படுகிறான்.

४. यश्छन्दसामृषभो विश्वरूपः। छन्दोभ्योऽध्यमृतात्संबभूव। स मेन्द्रो मेधया स्पृणोतु। अमृतस्य देव धारणो भूयासम्। शरीरं मे विचर्षणम्। जिह्वा मे मधुमत्तमा। कर्णाभ्यां भूरि विश्रुवम्। ब्रह्मणः कोशोऽसि मेधया पिहितः। श्रुतं मे गोपाय।

4. யச்₁ச₂ந்த₃ஸாம்ருஷபோ₄ விச்₁வரூப: । ச₂ந்தோ₃ப்₄யோऽத்₄ய ம்ருதாத்ஸம்ப₃பூ₄வ । ஸ மேந்த்₃ரோ மேத₄யா ஸ்ப்ருணோது । அம்ருதஸ்ய தே₃வ தா₄ரணோ பூ₄யாஸம் । ச₁ரீரம் மே விசர்ஷ ணம் । ஜிஹ்வா மே மது₄மத்தமா । கர்ணாப்₄யாம் பூ₄ரி விச்₁ரு வம் । ப்₃ரஹ்மண: கோசோ₁ऽஸி மேத₄யா பிஹித: । ச்₁ருதம் மே கோ₃பாய ।

यः யஃ எந்த (ஓங்காரமானது) **अमृतात्** அம்ருதாத் என்றுமுள்ள **छन्दोभ्यः** ச$_2$ந்தோ$_3$ப்$_4$யஃ வேதங்களிலிருந்து **अधिसंबभूव** அதி$_4$ஸம்ப$_3$பூ$_4$வ தோன்றியதோ **छन्दसां** ச$_2$ந்த$_3$ஸாம் வேத மந்த்ரங்களில் **ऋषभः** ரிஷப$_4$ஃ சிறந்ததோ **विश्वरूपः** விச்$_1$வரூபஃ அனைத்துமாக விளங்கு கிறதோ **सः इन्द्रः** ஸஃ இந்த்$_3$ரஃ அந்த ஓங்காரம் **मेधया** மேத$_4$யா அறிவை நிலைப்படுத்துவன் மூலம் **मा** மா என்னை **स्पृणोतु** ஸ்ப்ருணோது வலிமைப்படுத்தட்டும். **देव** தே$_3$வ (ஓங்காரரூபமான) இறைவா **अमृतस्य** அம்ருதஸ்ய ப்ரஹ்ம ஞானத்தை **धारणः** தா$_4$ரணஃ (நான்) அனுபவிப்பவன் **भूयासं** பூ$_4$யாஸம் ஆவேனாக. **मे** மே என்னுடைய **शरीरं** ச$_1$ரீரம் உடல் **विचर्षणं** விசர்ஷணம் நோயற்று இருக்கட்டும். **मे** மே என்னுடைய **जिह्वा** ஜிஹ்வா நாக்கு **मधुमत्तमा** மது$_4$மத்தமா இனிமையாகப் பேசுவதாக இருக்கட்டும். **कर्णाभ्यां** கர்ணாப்$_4$யாம் செவிகளால் **भूरि** பூ$_4$ரி மீண்டும் மீண்டும் **विश्रुवं** விச்$_1$ருவம் (சாஸ்த்ரத்தை நான்) கேட்பேனாக. **ब्रह्मणः** ப்$_3$ரஹ்மணஃ (நீ) ப்ரஹ்மனின் **कोशः** கோச$_1$ஃ இருப்பிடமாக **असि** அஸி விளங்குகிறாய். **मेधया** மேத$_4$யா (உலக விஷயங்களைப் பற்றிய) அறிவால் **पिहितः** பிஹிதஃ (நீ) மறைக்கப்பட்டுள்ளாய். **मे** மே என்னால் **श्रुतं** ச்$_1$ருதம் (சாஸ்த்ரத்தின் மூலம்) கேட்கப்பட்டதை **गोपाय** கோ$_3$பாய காப்பாற்றுவாயாக.

எந்த ஓங்காரமானது என்றுமுள்ள வேதங்களிலிருந்து தோன்றியதோ, வேத மந்த்ரங்களில் சிறந்ததோ, அனைத்துமாக விளங்குகிறதோ, அந்த ஓங்காரம் அறிவை நிலைப் படுத்துவதன் மூலம் என்னை வலிமைப்படுத்தட்டும். ஓங்கார ரூபமான இறைவா, ப்ரஹ்ம ஞானத்தை நான் அனுபவிப்பவன் ஆவேனாக. என்னுடைய உடல் நோயற்று இருக்கட்டும். என்னுடைய நாக்கு இனிமையாகப் பேசுவதாக இருக்கட்டும். செவிகளால் மீண்டும் மீண்டும் சாஸ்த்ரத்தை நான் கேட்பேனாக. நீ ப்ரஹ்மனின் இருப்பிடமாக விளங்குகிறாய். உலக விஷயங்களைப் பற்றிய அறிவால் நீ மறைக்கப் பட்டுள்ளாய். என்னால் சாஸ்த்ரத்தின் மூலம் கேட்கப்பட்டதைக் காப்பாற்றுவாயாக.

आवहन्ती वितन्वाना। कुर्वाणा चीरमात्मनः। वासाँसि मम गावश्च। अन्नपाने च सर्वदा। ततो मे श्रियमावह। लोमशां पशुभिस्सह स्वाहा।

ஆவஹந்தீ விதந்வானா। குர்வாணா சீரமாத்மன:। வாஸாம் ஸி மம கா$_3$வச்$_1$ச। அன்னபானே ச ஸர்வதா$_3$। ததோ மே ச்$_1$ரியமாவஹ। லோமசா$_1$ம் பசு$_1$பி$_4$ஸ்ஸஹ ஸ்வாஹா।

मे மே எனக்கு **ततः** தத: (போதிய பக்குவம் வந்த) பிறகு **सर्वदा** ஸர்வதா$_3$ எல்லாக்காலத்திலும் **मम** மம எனக்கு **वासांसि** வாஸாம்ஸி ஆடைகளையும் **गावः च** கா$_3$வ: ச பசுக்களையும் **अन्नपाने च** அன்னபானே ச உணவையும் நீரையும் **पशुभिः सह** பசு$_1$பி$_4$: ஸஹ மற்ற விலங்கினங்களையும் **लोमशां** லோமசா$_1$ம் ரோமங்களுடன் கூடிய ஆடுகளையும் **आवहन्ती** ஆவஹந்தீ தொடர்ந்து வருகின்ற **वितन्वाना** விதந்வானா வளர்கின்ற **चीरं कुर्वाणा** சீரம் குர்வாணா அதிக காலம் இருக்கின்ற **श्रियं** ச்$_1$ரியம் செழிப்பையும் **आत्मनः** ஆத்மன: எனக்கு **आवह** ஆவஹ அருள்புரிவாயாக.

எனக்குப் போதிய பக்குவம் வந்தபிறகு எல்லாக் காலத்திலும் எனக்கு ஆடைகளையும் பசுக்களையும் உணவையும் நீரையும் மற்ற விலங்கினங்களையும், ரோமங் களுடன் கூடிய ஆடுகளையும் தொடர்ந்து வருகின்ற, வளர்கின்ற, அதிக காலம் இருக்கின்ற செழிப்பையும் எனக்கு அருள்புரிவாயாக.

ஸ்வாஹா என்ற சொல் இம்மந்த்ரத்தை ஹோமத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

आ मा यन्तु ब्रह्मचारिणः स्वाहा। वि मायन्तु ब्रह्मचारिणः स्वाहा। प्र मायन्तु ब्रह्मचारिणः स्वाहा। द मायन्तु ब्रह्मचारिणः स्वाहा। श मायन्तु ब्रह्मचारिणः स्वाहा। यशो जनेऽसानि स्वाहा। श्रेयान्व स्यसोऽसानि स्वाहा। तं त्वा भग प्रविशानि स्वाहा। स मा भग प्रविश स्वाहा। तस्मिन्सहस्रशाखे। निभगाहं त्वयि मृजे स्वाहा।

यथापः प्रवता यन्ति। यथा मासा अहर्जरम्। एवं मां ब्रह्मचारिणः। धातरायन्तु सर्वतः स्वाहा। प्रतिवेशोऽसि प्र मा भाहि प्र मा पद्यस्व॥

ஆ மா யந்து ப்$_3$ரஹ்மசாரிண: ஸ்வாஹா। வி மாயந்து ப்$_3$ரஹ்மசாரிண: ஸ்வாஹா। ப்ர மாயந்து ப்$_3$ரஹ்மசாரிண: ஸ்வாஹா। த$_3$ மாயந்து ப்$_3$ரஹ்மசாரிண: ஸ்வாஹா। ச$_1$ மா யந்து ப்$_3$ரஹ்மசாரிண: ஸ்வாஹா। யசோ$_1$ ஜனேऽஸானி ஸ்வாஹா। ச்$_1$ரேயாந்வஸ்யஸோऽஸானி ஸ்வாஹா। தம் த்வா ப$_4$க$_3$ ப்ரவிசா$_1$னி ஸ்வாஹா। ஸ மா ப$_4$க$_3$ ப்ரவிச$_1$ ஸ்வாஹா। தஸ்மிந்ஸஹஸ்ரசா$_1$கே$_2$। நிப$_4$கா$_3$ஹம் த்வயி ம்ருஜே ஸ்வாஹா। யதா$_2$ப: ப்ரவதா யந்தி। யதா$_2$ மாஸா அஹர்ஜரம்। ஏவம் மாம் ப்$_3$ரஹ்மசாரிண:। தா$_4$தராயந்து ஸர்வத: ஸ்வாஹா। ப்ரதிவேசோ$_1$ऽஸி ப்ர மா பா$_4$ஹி ப்ர மா பத்$_3$யஸ்வ॥

ब्रह्मचारिणः ப்$_3$ரஹ்மசாரிண: மாணவர்கள் **मा** மா என்னை நோக்கி **आयन्तु** ஆயந்து வரட்டும். **वि** வி பல்வேறு திசைகளிலிருந்து **ब्रह्मचारिणः** ப்$_3$ரஹ்மசாரிண: மாணவர்கள் **मा** மா என்னை நோக்கி **आयन्तु** ஆயந்து வரட்டும். **प्र** ப்ர அறியும் திறனுடைய **ब्रह्मचारिणः** ப்$_3$ரஹ்மசாரிண: மாணவர்கள் **मा** மா என்னை நோக்கி **आयन्तु** ஆயந்து வரட்டும். **द** த$_3$ இந்த்ரிய ஒழுக்கமுடைய **ब्रह्मचारिणः** ப்$_3$ரஹ்மசாரிண: மாணவர்கள் **मा** மா என்னை நோக்கி **आयन्तु** ஆயந்து வரட்டும். **श** ச$_1$ மனக்கட்டுப்பாடுடைய **ब्रह्मचारिणः** ப்$_3$ரஹ்மசாரிண: மாணவர்கள் **मा** மா என்னை நோக்கி **आयन्तु** ஆயந்து வரட்டும். **जने** ஜனே மனிதரில் **यशः** யச$_1$: புகழ் பெற்றவனாக **असानि** அஸானி இருப்பேனாக. **वस्यसः** வஸ்யஸ: செல்வந்தர் களுக்குள் **श्रेयान्** ச்$_1$ரேயான் மேலானவனாக **असानि** அஸானி இருப்பேனாக. **भग** ப$_4$க$_3$ இறைவா **तं त्वा** தம் த்வா உங்களில் **प्रविशानि** ப்ரவிசா$_1$னி (நான்) கலந்துவிடுவேனாக. **भग** ப$_4$க$_3$ இறைவா **सः** ஸ: அந்த (நீங்கள்) **मा** மா என்னில் **प्रविश** ப்ரவிச$_1$ கலந்துவிடுவீர்களாக. **भग** ப$_4$க$_3$ இறைவா **सहस्त्रशाखे** ஸஹஸ்ரசா$_1$கே$_2$ ஆயிரக்கணக்கான

ரூபங்களையுடைய **तस्मिन् त्वयि** தஸ்மின் த்வயி அந்த உங்களிடத்தில் **अहं** அஹம் நான் **निमृजे** நிம்ருஜே தூய்மை அடைவேனாக. **धातः** தா$_4$த: இறைவா **यथा** யதா$_2$ எவ்விதம் **आपः** ஆப: நீர் **प्रवता** ப்ரவதா கீழ்நோக்கி **यन्ति** யந்தி ஓடுகின்றதோ **यथा** யதா$_2$ எவ்விதம் **मासाः** மாஸா: மாதங்கள் **अहर्जरं** அஹர்ஜரம் வருடத்தை (நோக்கி ஓடுகின்றனவோ) **एवं** ஏவம் அவ்விதம் **मां** மாம் என்னை நோக்கி **सर्वतः** ஸர்வத: எல்லாப் பக்கங்களிலிருந்தும் **ब्रह्मचारिणः** ப்$_3$ரஹ்ம சாரிண: மாணவர்கள் **आयन्तु** ஆயந்து வரட்டும். **प्रतिवेशः** ப்ரதிவேச$_1$: (நீங்கள்) ஓய்விடம் (போல்) **असि** அஸி உள்ளீர்கள். **मा** மா எனக்கு **प्रभाहि** ப்ரபா$_4$ஹி (உங்களை) விளக்குங்கள். **मा** மா என்னை **प्रपद्यस्व** ப்ரபத்$_3$யஸ்வ (நீங்கள்) அடைவீர்களாக.

மாணவர்கள் என்னை நோக்கி வரட்டும். பல்வேறு திசைகளிலிருந்து மாணவர்கள் என்னை நோக்கி வரட்டும். அறியும் திறனுடைய மாணவர்கள் என்னை நோக்கி வரட்டும். இந்த்ரிய ஒழுக்கமுடைய மாணவர்கள் என்னை நோக்கி வரட்டும். மனக்கட்டுப்பாடுடைய மாணவர்கள் என்னை நோக்கி வரட்டும். மனிதரில் புகழ் பெற்றவனாக இருப்பேனாக. செல்வந்தர்களுக்குள் மேலானவனாக இருப்பேனாக. இறைவா, உங்களில் நான் கலந்து விடுவேனாக. இறைவா, அந்த நீங்கள் என்னில் கலந்து விடுவீர்களாக. இறைவா, ஆயிரக்கணக்கான ரூபங்களையுடைய அந்த உங்களிடத்தில் நான் தூய்மை அடைவேனாக. இறைவா, எவ்விதம் நீர் கீழ்நோக்கி ஓடுகின்றதோ, எவ்விதம் மாதங்கள் வருடத்தை நோக்கி ஓடுகின்றனவோ அவ்விதம் என்னை நோக்கி எல்லாப் பக்கங்களிலிருந்தும் மாணவர்கள் வரட்டும். நீங்கள் ஓய்விடம் போல் உள்ளீர்கள். எனக்கு உங்களை விளக்குங்கள். என்னை நீங்கள் அடைவீர்களாக.

௫. भूर्भुवस्सुवरिति वा एतास्तिस्रो व्याहृतयः। तासामु ह स्मैतां चतुर्थीम्। माहाचमस्यः प्रवेदयते। मह इति। तद् ब्रह्म। स आत्मा। अङ्गान्यन्या देवताः।

5. பூ₄ர்பு₄வஸ்ஸுவரிதி வா ஏதாஸ்திஸ்ரோ வ்யாஹ்ருதய: । தாஸாமு ஹ ஸ்மைதாம் சதுர்தீ₂ம் । மாஹாசமஸ்ய: ப்ரவேத₃யதே । மஹ இதி । தத்₃ ப்₃ரஹ்ம । ஸ ஆத்மா । அங்கா₃ந்யந்யா தே₃வதா: ।

भूः भुवः सुवः பூ₄: பு₄வ: ஸுவ: பூ: புவ: ஸுவ: **इति वै** இதி வை என்பன **एताः तिस्रः** ஏதா: திஸ்ர: இந்த மூன்று **व्याहृतयः** வ்யாஹ்ருதய: வ்யாஹ்ருதிகள். **तासां उ ह** தாஸாம் உ ஹ அவற்றுடன் **माहाचमस्यः** மாஹாசமஸ்ய: மாஹாசமஸ்யர் (என்ற ரிஷி) **महः इति** மஹ: இதி மஹ: என்ற **एतां चतुर्थीं** ஏதாம் சதுர்தீ₂ம் இந்த நான்காவது (வ்யாஹ்ருதியை) **प्रवेदयते स्म** ப்ரவேத₃யதே ஸ்ம வெளிப்படுத்தினார். **तद्** தத்₃ அதை (அந்த மஹ: என்பதை) **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மனாக (த்யானிக்க வேண்டும்). **सः** ஸ: அதுவே **आत्मा** ஆத்மா ஆத்மா **अन्याः देवताः** அந்யா: தே₃வதா: மற்ற தேவதைகள் (அதனுடைய) **अङ्गानि** அங்கா₃நி அங்கங்கள்.

பூ: புவ: ஸுவ: என்பன இந்த மூன்று வ்யாஹ்ருதிகள். அவற்றுடன் மாஹாசமஸ்யர் என்ற ரிஷி மஹ: என்ற இந்த நான்காவது வ்யாஹ்ருதியை வெளிப்படுத்தினார். அந்த மஹ: என்பதை ப்ரஹ்மனாக த்யானிக்க வேண்டும். அதுவே ஆத்மா. மற்ற தேவதைகள் அதனுடைய அங்கங்கள்.

भूरिति वा अयं लोकः। भुव इत्यन्तरिक्षम्। सुवरित्यसौ लोकः।
मह इत्यादित्यः। आदित्येन वाव सर्वे लोका महीयन्ते।

பூ₄ரிதி வா அயம் லோக: । பு₄வ இத்யந்தரிக்ஷம் । ஸுவரித்யஸௌ லோக: । மஹ இத்யாதி₃த்ய: । ஆதி₃த்யேன வாவ ஸர்வே லோகா மஹீயந்தே ।

भूः इति वै பூ₄: இதி வை பூ: என்பதை **अयं लोकः** அயம் லோக: இந்த லோகமாகவும் **भुवः इति** பு₄வ: இதி புவ: என்பதை **अन्तरिक्षं** அந்தரிக்ஷம் இடையிலுள்ள லோகமாகவும் **सुवः इति** ஸுவ: இதி

ஸுவ: என்பதை **असौ लोक:** அஸௌ லோக: ஸ்வர்க லோகமாகவும் **मह: इति** மஹ: இதி மஹ: என்பதை **आदित्य:** ஆதி$_{3}$த்ய: ஸூர்யனாகவும் (த்யானிக்க வேண்டும்). **आदित्येन वाव** ஆதி$_{3}$த்யேன வாவ ஸூர்யனாலன்றோ **सर्वे लोका:** ஸர்வே லோகா: எல்லா உலகங்களும் **महीयन्ते** மஹீயந்தே பெருமைப்படுத்தப்படுகின்றன.

பூ: என்பதை இந்த லோகமாகவும் புவ: என்பதை இடையிலுள்ள லோகமாகவும் ஸுவ: என்பதை ஸ்வர்கலோகமாகவும் மஹ: என்பதை ஸூர்யனாகவும் த்யானிக்க வேண்டும். ஸூர்யனாலன்றோ எல்லா உலகங்களும் பெருமைப்படுத்தப்படுகின்றன.

भूरिति वा अग्निः । भुव इति वायुः । सुवरित्यादित्यः । मह इति चन्द्रमाः । चन्द्रमसा वाव सर्वाणि ज्योतीँषि महीयन्ते ।

பூ$_{4}$ரிதி வா அக்$_{3}$னி: । பு$_{4}$வ இதி வாயு: । ஸுவரித்யாதி$_{3}$த்ய: । மஹ இதி சந்த்$_{3}$ரமா: । சந்த்$_{3}$ரமஸா வாவ ஸர்வாணி ஜ்யோதீம்ஷி மஹீயந்தே ।

भू: इति वै பூ$_{4}$: இதி வை பூ: என்பதை **अग्नि:** அக்$_{3}$னி: அக்னி தேவராகவும் **भुव: इति** பு$_{4}$வ: இதி புவ: என்பதை **वायु:** வாயு: வாயுதேவராகவும் **सुव: इति** ஸுவ: இதி ஸுவ: என்பதை **आदित्य:** ஆதி$_{3}$த்ய: ஸூர்யதேவராகவும் **मह: इति** மஹ: இதி மஹ: என்பதை **चन्द्रमा:** சந்த்$_{3}$ரமா: சந்த்ரதேவராகவும் (த்யானிக்க வேண்டும்). **चन्द्रमसा वाव** சந்த்$_{3}$ரமஸா வாவ சந்த்ரதேவராலன்றோ **सर्वाणि ज्योतींषि** ஸர்வாணி ஜ்யோதீம்ஷி அனைத்து ஒளிகளும் **महीयन्ते** மஹீயந்தே பெருமைப்படுத்தப்படுகின்றன.

பூ: என்பதை அக்னிதேவராகவும் புவ: என்பதை வாயுதேவராகவும் ஸுவ: என்பதை ஸூர்யதேவராகவும் மஹ: என்பதை சந்த்ரதேவராகவும் த்யானிக்க வேண்டும். சந்த்ரதேவராலன்றோ அனைத்து ஒளிகளும் பெருமைப்படுத்தப்படுகின்றன.

भूरिति वा ऋचः। भुव इति सामानि। सुवरिति यजूँषि। महइति ब्रह्म। ब्रह्मणा वाव सर्वे वेदा महीयन्ते।

பூ$_4$ரிதி வா ரிச: । பு$_4$வ இதி ஸாமானி । ஸுவரிதி யஜூம்ஷி । மஹ இதி ப்$_3$ரஹ்ம । ப்$_3$ரஹ்மணா வாவ ஸர்வே வேதா$_3$ மஹீயந்தே ।

भूः इति वै பூ$_4$: இதி வை பூ: என்பதை **ऋचः** ரிச: ரிக் வேதமாகவும் **भुवः इति** பு$_4$வ: இதி புவ: என்பதை **सामानि** ஸாமானி ஸாம வேதமாகவும் **सुवः इति** ஸுவ: இதி ஸுவ: என்பதை **यजूंषि** யஜூம்ஷி யஜுர் வேதமாகவும் **महः इति** மஹ: இதி மஹ: என்பதை **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ஓங்காரமாகவும் (த்யானிக்க வேண்டும்). **ब्रह्मणा वाव** ப்$_3$ரஹ்மணா வாவ ஓங்காரத்தினாலான்றோ **सर्वे वेदाः** ஸர்வே வேதா$_3$: அனைத்து வேதங்களும் **महीयन्ते** மஹீயந்தே பெருமைப்படுத்தப்படுகின்றன.

பூ: என்பதை ரிக் வேதமாகவும் புவ: என்பதை ஸாமவேத மாகவும் ஸுவ: என்பதை யஜுர் வேதமாகவும் மஹ: என்பதை ஓங்காரமாகவும் த்யானிக்க வேண்டும். ஓங்காரத்தினாலன்றோ அனைத்து வேதங்களும் பெருமைப்படுத்தப்படுகின்றன.

भूरिति वै प्राणः। भुव इत्यपानः। सुवरिति व्यानः। मह इत्यन्नम्। अन्नेन वाव सर्वे प्राणा महीयन्ते।

பூ$_4$ரிதி வை ப்ராண: । பு$_4$வ இத்யபான: । ஸுவரிதி வ்யான: । மஹ இத்யன்னம் । அன்னேன வாவ ஸர்வே ப்ராணா மஹீயந்தே ।

भूः इति वै பூ$_4$: இதி வை பூ: என்பதை **प्राणः** ப்ராண: ப்ராணனாகவும் **भुवः इति** பு$_4$வ: இதி புவ: என்பதை **अपानः** அபான: அபானனாகவும் **सुवः इति** ஸுவ: இதி ஸுவ: என்பதை **व्यानः** வ்யான: வ்யானனாகவும் **महः इति** மஹ: இதி மஹ: என்பதை **अन्नं** அன்னம் உணவாகவும்

(த்யானிக்க வேண்டும்). **अन्नेन वाव** அன்னேன வாவ உணவினாலன்றோ **सर्वे प्राणाः** ஸர்வே ப்ராணா: எல்லா ப்ராணன்களும் **महीयन्ते** மஹீயந்தே பெருமைப்படுத்தப்படுகின்றன.

பூ: என்பதை ப்ராணனாகவும் புவ: என்பதை அபானனாகவும் ஸுவ: என்பதை வ்யானனாகவும் மஹ: என்பதை உணவாகவும் த்யானிக்க வேண்டும். உணவினாலன்றோ எல்லா ப்ராணன்களும் பெருமைப்படுத்தப்படுகின்றன.

ता वा एताश्चतस्रश्चतुर्धा। चतस्रश्चतस्रो व्याहृतयः। ता यो वेद। स वेद ब्रह्म। सर्वेऽस्मै देवा बलिमावहन्ति ।।

தா வா ஏதாச்$_1$சதஸ்ரச்$_1$சதுர்தா$_4$ । சதஸ்ரச்$_1$சதஸ்ரோ வ்யாஹ்ருதய: । தா யோ வேத$_3$ । ஸ வேத$_3$ ப்$_3$ரஹ்ம । ஸர்வேऽஸ்மை தே$_3$வா ப$_3$லிமாவஹந்தி ।।

वै வை இவ்விதம் **ताः एताः** தா: ஏதா: இந்த **चतस्रः** சதஸ்ர: நான்கு (வ்யாஹ்ருதிகள்) **चतुर्धा** சதுர்தா$_4$ நான்கு விதங்களில் (அமைந்துள்ளன). **चतस्रः चतस्रः** சதஸ்ர: சதஸ்ர: (ஒவ்வொரு த்யானத்திலும்) நான்கு நான்கு **व्याहृतयः** வ்யாஹ்ருதய: வ்யாஹ்ருதிகள் (உள்ளன). **यः** ய: யார் **ताः** தா: இவற்றை **वेद** வேத$_3$ உபாஸிக்கிறானோ **सः** ஸ: அவன் **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **वेद** வேத$_3$ உபாஸிக்கின்றவனாகின்றான். **अस्मै** அஸ்மை அவனுக்கு **सर्वे देवाः** ஸர்வே தே$_3$வா: எல்லா தேவர்களும் **बलिं** ப$_3$லிம் பொருளை **आवहन्ति** ஆவஹந்தி கொடுப்பார்கள்.

இவ்விதம் இந்த நான்கு வ்யாஹ்ருதிகள் நான்கு விதங்களில் அமைந்துள்ளன. ஒவ்வொரு த்யானத்திலும் நான்கு நான்கு வ்யாஹ்ருதிகள் உள்ளன. யார் இவற்றை உபாஸிக்கிறானோ அவன் ப்ரஹ்மனை உபாஸிக்கின்றவனாகின்றான். அவனுக்கு எல்லா தேவர்களும் பொருளைக் கொடுப்பார்கள்.

६. स य एषोऽन्तर्हृदय आकाशः। तस्मिन्नयं पुरुषो मनोमयः। अमृतो हिरण्मयः। अन्तरेण तालुके। य एष स्तन इवावलम्बते। सेन्द्रयोनिः। यत्रासौ केशान्तो विवर्तते। व्यपोह्य शीर्षकपाले।

6. ஸ ய ஏஷோऽந்தர்ஹ்ருத₃ய ஆகாஶ₁: । தஸ்மிந்நயம் புருஷோ மனோமய: । அம்ருதோ ஹிரண்மய: । அந்தரேண தாலுகே । ய ஏஷ ஸ்தன இவாவலம்ப₃தே । ஸேந்த்₃ரயோனி: । யத்ராஸௌ கேசா₁ந்தோ விவர்ததே । வ்யபோஹ்ய சீ₁ர்ஷகபாலே ।

अन्तर्हृदये அந்தர்ஹ்ருத₃யே ஹ்ருதயத்திற்குள் **यः एषः** ய: ஏஷ: யாதொரு **आकाशः** ஆகாச₁: ஆகாசம் (உண்டோ) **तस्मिन्** தஸ்மின் அதில் **मनोमयः** மனோமய: அனைத்து மனதையும் தன்மனமாகக் கொண்டவராகவும் **अमृतः** அம்ருத: அழிவற்றவராகவும் **हिरण्मयः** ஹிரண்மய: அறிவு ஸ்வரூபமாகவும் உள்ள **सः अयं** ஸ: அயம் அந்த இந்த **पुरुषः** புருஷ: ஹிரண்யகர்பர் (உபாஸிக்கப்பட வேண்டும்). **तालुके अन्तरेण** தாலுகே அந்தரேண தொண்டைப் பகுதியில் **यः एषः** ய: ஏஷ: எந்த (மாம்ஸ பிண்டமானது) **स्तनः इव** ஸ்தன: இவ (பசுவின்) காம்புபோல **अवलम्बते** அவலம்ப₃தே தொங்கிக் கொண்டிருக்கிறதோ (அதன் நடுவில் ஸுஷும்னா நாடி செல்கிறது). **यत्र** யத்ர எந்த (தலைப்பகுதியில்) **असौ केशान्तः** அஸௌ கேசா₁ந்த: இந்த முடியின் அடிப்பாகம் **विवर्तते** விவர்ததே வந்துள்ளதோ (அந்த இடத்தை ஸுஷும்னா நாடி அடைந்து) **शीर्षकपाले** சீ₁ர்ஷகபாலே மண்டை ஓட்டை **व्यपोह्य** வ்யபோஹ்ய துளைத்து (வெளிவருகிறது). **सा** ஸா அந்த (தலைப்பகுதியே) **इन्द्रयोनिः** இந்த்₃ரயோனி: ப்ரஹ்ம லோகத்திற்குச் செல்லும் மார்கம்.

ஹ்ருதயத்திற்குள் யாதொரு ஆகாசம் உண்டோ அதில் அனைத்து மனதையும் தன்மனமாகக் கொண்டவராகவும் அழிவற்றவராகவும் அறிவு ஸ்வரூபமாகவும் உள்ள அந்த இந்த ஹிரண்யகர்பர் உபாஸிக்கப்பட வேண்டும். தொண்டைப் பகுதியில் எந்த மாம்ஸ பிண்டமானது பசுவின் காம்புபோல தொங்கிக் கொண்டிருக்கிறதோ, அதன் நடுவில் ஸுஷும்னா

நாடி செல்கிறது. எந்தத் தலைப்பகுதியில் இந்த முடியின் அடிப்பாகம் வந்துள்ளதோ அந்த இடத்தை ஸுஷும்னா நாடி அடைந்து மண்டை ஓட்டைத் துளைத்து வெளிவருகிறது. அந்தத் தலைப்பகுதியே ப்ரஹ்ம லோகத்திற்குச் செல்லும் மார்கம்.

भूरित्यग्नौ प्रतितिष्ठति। भुव इति वायौ। सुवरित्यादित्ये। मह इति ब्रह्मणि। आप्नोति स्वाराज्यम्। आप्नोति मनसस्पतिम्। वाक्पतिश्चक्षुष्पतिः। श्रोत्रपतिर्विज्ञानपतिः। एतत्ततो भवति। आकाशशरीरं ब्रह्म। सत्यात्म प्राणारामं मन आनन्दम्। शान्तिसमृद्धममृतम्। इति प्राचीनयोग्योपास्स्व॥

பூ$_4$ரித்யக்$_3$னௌ ப்ரதிதிஷ்ட$_2$தி । பு$_4$வ இதி வாயௌ । ஸுவ ரித்யாதி$_3$த்யே । மஹ இதி ப்$_3$ரஹ்மணி । ஆப்னோதி ஸ்வாரா ஜ்யம் । ஆப்னோதி மனஸஸ்பதிம் । வாக்பதிச்$_1$ சக்ஷுஷ்பதி: । ச்$_1$ரோத்ரபதிர்விஞானபதி: । ஏதத்ததோ ப$_4$வதி । ஆகாச$_1$ச$_1$ரீரம் ப்$_3$ரஹ்ம । ஸத்யாத்ம ப்ராணாராமம் மன ஆனந்த$_3$ம் । ச$_1$ாந்தி ஸம்ருத்$_3$த$_4$மம்ருதம் । இதி ப்ராசீனயோக்$_3$யோபாஸ்ஸ்வ ॥

भूः इति பூ$_4$: இதி (மரணத்திற்குப் பின் இவ்வுபாஸகன்) பூ: என்பதால் குறிக்கப்பட்ட **अग्नौ** அக்$_3$னௌ அக்னியில் **प्रतितिष्ठति** ப்ரதிதிஷ்ட$_2$தி கலந்து விடுகிறான். **भुवः इति** பு$_4$வ: இதி புவ: என்பதால் குறிக்கப்பட்ட **वायौ** வாயௌ வாயுவில் (கலந்து விடுகிறான்). **सुवः इति** ஸுவ: இதி ஸுவ: என்பதால் குறிக்கப்பட்ட **आदित्ये** ஆதி$_3$த்யே ஸூர்யனில் (கலந்து விடுகிறான்). **महः इति** மஹ: இதி மஹ: என்பதால் குறிக்கப் பட்ட **ब्रह्मणि** ப்$_3$ரஹ்மணி ஹிரண்யகர்பரில் (கலந்து விடுகிறான்). **स्वाराज्यं** ஸ்வாராஜ்யம் தானே அதிபதியாக இருக்கும் தன்மையை **आप्नोति** ஆப்னோதி அடைகிறான். **मनसस्पतिं** மனஸஸ்பதிம் எல்லா மனங்களுக்கும் அதிபதியாக இருக்கும் தன்மையை **आप्नोति** ஆப்னோதி அடைகிறான். **वाक्पतिः** வாக்பதி: வாக்கிற்குத் தலைவ னாகிறான். **चक्षुष्पतिः** சக்ஷுஷ்பதி: கண்களுக்குத் தலைவனாகிறான். **श्रोत्रपतिः** ச்$_1$ரோத்ரபதி: செவிகளுக்குத் தலைவனாகிறான்.

विज्ञानपतिः விஞானபதி: அறிவுகளுக்குத் தலைவனாகிறான். **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ஹிரண்யகர்பருடைய **आकाशशरीरं** ஆகாச$_1$ச$_1$ரீரம் உடலானது ஆகாசத்தைப் போன்று வ்யாபித்து **सत्यात्म** ஸத்யாத்ம உருவமுடைய உருவமற்ற உலகங்களாகவும் உள்ளது. **प्राणारामं** ப்ராணாராமம் (ஹிரண்யகர்பர்) அனைத்து ப்ராணன்களையும் விளையாட்டுக் களமாகக் கொண்டுள்ளார். **मनः आनन्दं** மன: ஆனந்த$_3$ம் அனைத்து மனங்களையும் ஆனந்தத்திற்குக் காரணமாகக் கொண்டுள்ளார். **शान्ति-समृद्धं** சா$_1$ந்தி-ஸம்ருத்$_3$த$_4$ம் முழு அமைதியையும் அனைத்து செழிப்பையும் உடையவராக உள்ளார். **अमृतं** அம்ருதம் அழிவற்றவராக உள்ளார். **एतत् ततः भवति** ஏதத் தத: ப$_4$வதி (உபாஸகன்) இந்த (ஹிரண்யகர்பராக) ஆகிறான். **प्राचीनयोग्य** ப்ராசீனயோக்$_3$ய ப்ராசீன யோக்யரே **इति** இதி இவ்விதம் **उपास्स्व** உபாஸ்ஸ்வ உபாஸனம் செய்வீராக.

மரணத்திற்குப்பின் இவ்வுபாஸகன் பூ: என்பதால் குறிக்கப் பட்ட அக்னியில் கலந்து விடுகிறான். புவ: என்பதால் குறிக்கப் பட்ட வாயுவில் கலந்து விடுகிறான். ஸுவ: என்பதால் குறிக்கப் பட்ட ஸூர்யனில் கலந்து விடுகிறான். மஹ: என்பதால் குறிக்கப்பட்ட ஹிரண்யகர்பரில் கலந்துவிடுகிறான். தானே அதிபதியாக இருக்கும் தன்மையை அடைகிறான். எல்லா மனங்களுக்கும் அதிபதியாக இருக்கும் தன்மையை அடைகிறான். வாக்கிற்குத் தலைவனாகிறான். கண்களுக்குத் தலைவனாகிறான். செவிகளுக்குத் தலைவனாகிறான். அறிவுகளுக்குத் தலைவனாகிறான். ஹிரண்யகர்பருடைய உடலானது ஆகாசத்தைப் போன்று வ்யாபித்து, உருவமுடைய, உருவமற்ற உலகங்களாகவும் உள்ளது. ஹிரண்யகர்பர் அனைத்து ப்ராணன்களையும் விளையாட்டுக்களமாகக் கொண்டுள்ளார். அனைத்து மனங்களையும் ஆனந்தத்திற்குக் காரணமாகக் கொண்டுள்ளார். முழு அமைதியையும் அனைத்து செழிப்பையும் உடையவராக உள்ளார். அழிவற்றவராக உள்ளார். உபாஸகன் இந்த ஹிரண்யகர்பராக ஆகிறான். ப்ராசீனயோக்யரே, இவ்விதம் உபாஸனம் செய்வீராக.

७. पृथिव्यन्तरिक्षं द्यौर्दिशोऽवान्तरदिशाः। अग्निर्वायुरादित्यश्चन्द्रमा नक्षत्राणि। आप ओषधयो वनस्पतय आकाश आत्मा। इत्यधिभूतम्। अथाध्यात्मम्। प्राणो व्यानोऽपान उदानः समानः। चक्षुः श्रोत्रं मनो वाक्त्वक्। चर्म माँसँस्नावास्थि मज्जा। एतदधिविधाय ऋषिरवोचत्। पाङ्क्तं वा इदँसर्वम्। पाङ्क्तेनैव पाङ्क्तँस्पृणोतीति॥

7. ப்ருதி$_2$வ்யந்தரிக்ஷம் த்$_3$யௌர்தி$_3$சோ$_1$ऽவாந்தரதி$_3$சா$_1$: । அக்$_3$னிர் வாயுராதி$_3$த்யச்$_1$சந்த்$_3$ரமா நக்ஷத்ராணி । ஆப ஓஷத$_4$யோ வனஸ்பதய ஆகாச$_1$ ஆத்மா । இத்யதி$_4$பூ$_4$தம் । அதா$_2$த்$_4$யாத்மம் । ப்ராணோ வ்யானோऽபான உதா$_3$ன: ஸமான: । சக்ஷு: ச்$_1$ரோத்ரம் மனோ வாக்த்வக் । சர்ம மாம்ஸம்ஸ்னாவாஸ்தி$_2$ மஜ்ஜா । ஏதத$_3$தி$_4$விதா$_4$ய ரிஷிரவோசத் । பாங்க்தம் வா இத$_3$ம்ஸர்வம் । பாங்க்தேனைவ பாங்க்தம்ஸ்ப்ருணோதீதி ॥

पृथिवी ப்ருதி$_2$வீ பூமி **अन्तरिक्षं** அந்தரிக்ஷம் இடைவெளி **द्यौः** த்$_3$யௌ: ஸ்வர்கம் **दिशः** தி$_3$ச$_1$: திசைகள் **अवान्तरदिशाः** அவாந்தரதி$_3$சா$_1$: இடையில் உள்ள திசைகள். **अग्निः** அக்$_3$னி: நெருப்பு **वायुः** வாயு: காற்று **आदित्यः** ஆதி$_3$த்ய: ஸூர்யன் **चन्द्रमाः** சந்த்$_3$ரமா: நிலவு **नक्षत्राणि** நக்ஷத்ராணி நக்ஷத்ரங்கள். **आपः** ஆப: நீர் **ओषधयः** ஓஷத$_4$ய: செடிகொடிகள் **वनस्पतयः** வனஸ்பதய: மரங்கள் **आकाशः** ஆகாச$_1$: ஆகாசம் **आत्मा** ஆத்மா விராட். **इति** இதி இவை **अधिभूतं** அதி$_4$பூ$_4$தம் உலக ஸம்பந்தப்பட்டவை. **अथ** அத$_2$ இப்பொழுது **अध्यात्मं** அத்$_4$யாத்மம் உடல் ஸம்பந்தப்பட்டவை (துவங்குகின்றன). **प्राणः** ப்ராண: ப்ராணன் **व्यानः** வ்யான: வ்யானன் **अपानः** அபான: அபானன் **उदानः** உதா$_3$ன: உதானன் **समानः** ஸமான: ஸமானன். **चक्षुः** சக்ஷு: கண் **श्रोत्रं** ச்$_1$ரோத்ரம் செவி **मनः** மன: மனம் **वाक्** வாக் வாக்கு **त्वक्** த்வக் மேல்தோல். **चर्म** சர்ம உள்தோல் **मांसं** மாம்ஸம் சதை **स्नावा** ஸ்னாவா தசைநார் **अस्थि** அஸ்தி$_2$ எலும்பு **मज्जा** மஜ்ஜா எலும்பில் உள்ள திரவம். **एतत्** ஏதத் இவற்றை **अधिविधाय** அதி$_4$விதா$_4$ய எடுத்துக்கூறி **ऋषिः** ரிஷி: ரிஷியானவர் **अवोचत्** அவோசத்

(இவ்விதம்) கூறினார். **इदं सर्वं** இத$_3$ம் ஸர்வம் இவை அனைத்தும் **पाङ्क्तं वै** பாங்க்தம் வை ஐந்து அங்கங்களின் சேர்க்கைகளாக உள்ளன. **पाङ्क्तेन एव** பாங்க்தேன ஏவ (உடல் ஸம்பந்தமான) பாங்க்தத்தின் துணைகொண்டு **पाङ्क्तं** பாங்க்தம் (வெளி ஸம்பந்தமான) பாங்க்தத்தை **स्पृणोति इति** ஸ்ப்ருணோதி இதி த்யானிக்க வேண்டும்.

பூமி, இடைவெளி, ஸ்வர்கம், திசைகள், இடையில் உள்ள திசைகள். நெருப்பு, காற்று, ஸூர்யன், நிலவு, நக்ஷத்ரங்கள். நீர், செடிகொடிகள், மரங்கள், ஆகாசம், விராட். இவை உலக ஸம்பந்தப்பட்டவை. இப்பொழுது உடல் ஸம்பந்தப்பட்டவை துவங்குகின்றன. ப்ராணன், வ்யானன், அபானன், உதானன், ஸமானன். கண், செவி, மனம், வாக்கு, மேல்தோல். உள்தோல், சதை, தசைநார், எலும்பு, எலும்பில் உள்ள திரவம். இவற்றை எடுத்துக்கூறி ரிஷியானவர் இவ்விதம் கூறினார்: இவை அனைத்தும் ஐந்து அங்கங்களின் சேர்க்கைகளாக உள்ளன. உடல் ஸம்பந்தமான பாங்க்தத்தின் துணைகொண்டு, வெளி ஸம்பந்தமான பாங்க்தத்தை த்யானிக்க வேண்டும்.

௮. **ओमिति ब्रह्म। ओमितीदँसर्वम्। ओमित्येतदनुकृति ह स्म वा अप्यो श्रावयेत्याश्रावयन्ति। ओमिति सामानि गायन्ति। ओँशोमिति शस्त्राणि शँसन्ति। ओमित्यध्वर्युः प्रतिगरं प्रति गृणाति। ओमिति ब्रह्मा प्रसौति। ओमित्यग्निहोत्रमनुजानाति। ओमिति ब्राह्मणः प्रवक्ष्यन्नाह ब्रह्मोपाप्नवानीति। ब्रह्मैवोपाप्नोति ॥**

8. ஓமிதி ப்$_3$ரஹ்ம। ஓமிதீத$_3$ம்ஸர்வம்। ஓமித்யேதத$_3$னுக்ருதி ஹ ஸ்ம வா அப்யோ ச்$_1$ராவயேத்யாச்$_1$ராவயந்தி। ஓமிதி ஸாமானி கா$_3$யந்தி। ஓம் சோ$_1$மிதி ச$_1$ஸ்த்ராணி ச$_1$ம்ஸந்தி। ஓமித்யத்$_4$வர்யு: ப்ரதிக$_3$ரம் ப்ரதிக்$_3$ருணாதி। ஓமிதி ப்$_3$ரஹ்மா ப்ரஸௌதி। ஓமித்யக்$_3$னிஹோத்ரமனுஜானாதி। ஓமிதி ப்$_3$ராஹ்மண: ப்ரவக்ஷ்யந்நாஹ ப்$_3$ரஹ்மோபாப்னவானீதி। ப்$_3$ரஹ்மைவோபாப்னோதி ॥

ओं इति ஓம் இதி ஓங்காரத்தில் **ब्रह्म** ப்₃ரஹ்ம ஹிரண்யகர்பரை (த்யானிக்க வேண்டும்). **इदं सर्वं** இத₃ம் ஸர்வம் இவை அனைத்தும் **ओं इति** ஓம் இதி ஓங்காரமாக (உருவகப்படுத்தப்படுகிறது). **ओं इति** ஓம் இதி ஓம் என்ற **एतत्** ஏதத் இந்த (சொல்) **अनुकृति ह स्म वै** அனுக்ருதி ஹ ஸ்ம வை அனுமதியை (வெளிப்படுத்துவதைக் குறிக்கிறது). **अपि** அபி மேலும் **ओ श्रावय** ஓ ச்₁ரவாய ஓம் (நீ) தெரிவி **इति** இதி என்று **आश्रावयन्ति** ஆச்₁ராவயந்தி (ரித்விக் தனக்குக் கீழ் உள்ளவரிடம்) ஆணையிடுகிறார். **ओं इति** ஓம் இதி ஓம் என்று (கூறியதற்குப் பிறகு) **सामानि** ஸாமானி ஸாம மந்த்ரங்களை **गायन्ति** கா₃யந்தி (ஸாமவேத ரித்விக்) ஓதுகிறார். **ओं शों इति** ஓம் சோ₁ம் இதி ஓம் சோம் என்று **शस्त्राणि** ச₁ஸ்த்ராணி (கூறியதற்குப் பிறகு) ரிக் மந்த்ரங்களை **शंसन्ति** ச₁ம்ஸந்தி (ரிக்வேத ரித்விக்) ஓதுகிறார். **अध्वर्युः** அத்₄வர்யு: யஜுர்வேத ரித்விக் **प्रतिगरं** ப்ரதிக₃ரம் தன்னுடைய அனுமதியை **ओं इति** ஓம் இதி ஓம் என்று **प्रतिगृणाति** ப்ரதிக்₃ருணாதி வெளிப்படுத்துகிறார். **ब्रह्मा** ப்₃ரஹ்மா அதர்வண வேத ரித்விக் **ओं इति** ஓம் இதி ஓம் என்று **प्रसौति** ப்ரஸௌதி (மற்றவர்களுக்கு) ஆணையிடுகிறார். **ओं इति** ஓம் இதி ஓம் என்று (கூறி) **अग्निहोत्रं** அக்₃னிஹோத்ரம் அக்னிஹோத்ரத்தைச் செய்ய **अनुजानाति** அனுஜானாதி (ரித்விக்) அனுமதி கொடுக்கிறார். **ब्राह्मणः** ப்₃ராஹ்மண: ப்ராஹ்மணன் **प्रवक्ष्यन्** ப்ரவக்ஷ்யன் (வேதத்தை) கற்றுக்கொள்ள விரும்பி **ब्रह्म** ப்₃ரஹ்ம வேத (அறிவை) **उपाप्रवानि इति** உபாப்னவானி இதி அடைந்தே தீருவேன் என்ற நோக்குடன் **ओं इति** ஓம் இதி ஓம் என்று **आह** ஆஹ உச்சரிக்கிறான். **ब्रह्म** ப்₃ரஹ்ம வேத (அறிவை) **उपाप्नोति एव** உபாப்னோதி ஏவ அடைந்தே தீருவான்.

ஓங்காரத்தில் ஹிரண்யகர்பரை த்யானிக்க வேண்டும். இவை அனைத்தும் ஓங்காரமாக உருவகப்படுத்தப்படுகிறது. ஓம் என்ற இந்தச் சொல் அனுமதியை வெளிப்படுத்துவதைக் குறிக்கிறது. மேலும், ஓம் நீ தெரிவி என்று ரித்விக் தனக்குக் கீழ் உள்ளவரிடம் ஆணையிடுகிறார். ஓம் என்று கூறியதற்குப் பிறகு ஸாம மந்த்ரங்களை ஸாமவேத ரித்விக் ஓதுகிறார். ஓம் சோம்

என்று கூறியதற்குப் பிறகு ரிக் மந்த்ரங்களை ரிக்வேத ரித்விக் ஓதுகிறார். யஜுர்வேத ரித்விக் தன்னுடைய அனுமதியை ஓம் என்று வெளிப்படுத்துகிறார். அதர்வணவேத ரித்விக் ஓம் என்று மற்றவர்களுக்கு ஆணையிடுகிறார். ஓம் என்று கூறி அக்னி ஹோத்ரத்தைச் செய்ய ரித்விக் அனுமதி கொடுக்கிறார். ப்ராஹ்மணன் வேதத்தைக் கற்றுக்கொள்ள விரும்பி, வேத அறிவை அடைந்தே தீருவேன் என்ற நோக்குடன் ஓம் என்று உச்சரிக்கிறான். வேத அறிவை அடைந்தே தீருவான்.

९. ऋतं च स्वाध्यायप्रवचने च। सत्यं च स्वाध्यायप्रवचने च। तपश्च स्वाध्यायप्रवचने च। दमश्च स्वाध्यायप्रवचने च। शमश्च स्वाध्यायप्रवचने च। अग्नयश्च स्वाध्यायप्रवचने च। अग्निहोत्रं च स्वाध्यायप्रवचने च। अतिथयश्च स्वाध्यायप्रवचने च। मानुषं च स्वाध्यायप्रवचने च। प्रजा च स्वाध्यायप्रवचने च। प्रजनश्च स्वाध्यायप्रवचने च। प्रजातिश्च स्वाध्यायप्रवचने च। सत्यमिति सत्यवचा राथीतरः। तप इति तपोनित्यः पौरुशिष्टिः। स्वाध्याय प्रवचने एवेति नाको मौद्गल्यः। तद्धि तपस्तद्धि तपः॥

9. ரிதம் ச ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ச । ஸத்யம் ச ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ச । தபச்$_1$ச ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ச । த$_3$மச்$_1$ச ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ச । ச$_1$மச்$_1$ச ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ச । அக்$_3$னயச்$_1$ச ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ச । அக்$_3$னிஹோத்ரம் ச ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ச । அதித$_2$யச்$_1$ச ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ச । மானுஷம் ச ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ச । ப்ரஜா ச ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ச । ப்ரஜனச்$_1$ச ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ச । ப்ரஜாதிச்$_1$ச ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ச । ஸத்யமிதி ஸத்யவசா ராதீ$_2$தர: । தப இதி தபோநித்ய: பௌருசி$_1$ஷ்டி: । ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ஏவேதி நாகோ மௌத்$_3$க$_3$ல்ய: । தத்$_3$தி$_4$ தபஸ் தத்$_3$தி$_4$ தப: ॥

ऋतं च ரிதம் ச சரியாகப் புரிந்துகொள்ளுதல் **स्वाध्याय-प्रवचने च** ஸ்வாத்$_4$யாய-ப்ரவசனே ச (சாஸ்த்ரங்களை) படித்தல் படிப்பித்தல் **सत्यं** சத்யம் உண்மை பேசுதல் **तपः** தப: தவம் **दमः** த$_3$ம: இந்த்ரிய ஒழுக்கம் **शमः** ச$_1$ம: மனக்கட்டுப்பாடு **अग्नयः** அக்$_3$னய: யாகத்திற்கான நெருப்பை (பாதுகாத்தல்) **अग्निहोत्रं** அக்$_3$னிஹோத்ரம் அக்னிஹோத்ர ஹோமத்தைச் செய்தல் **अतिथयः** அதித$_2$ய: விருந்தோம்பல் **मानुषं** மானுஷம் மானுட ஸேவை **प्रजा** ப்ரஜா ஸந்ததியை வளர்த்தல் **प्रजनः** ப்ரஜன: மகப்பேறு **प्रजातिः** ப்ரஜாதி: பேரனைப் பேணுதல். **सत्यवचा** ஸத்யவசா என்றும் உண்மை பேசுகின்ற **राथीतरः** ராதீ$_2$தர: ராதீதரர் (என்ற ரிஷி) **सत्यं इति** ஸத்யம் இதி வாய்மையை மேலான பண்பாகக் கருதுகிறார். **तपोनित्यः** தபோநித்ய: என்றும் தவத்தில் ஈடுபட்டுள்ள **पौरुशिष्टिः** பௌருசி$_1$ஷ்டி: பௌருசிஷ்டி (என்ற ரிஷி) **तपः इति** தப: இதி தவத்தை மேலான பண்பாகக் கருதுகிறார். **मौद्गल्यः** மௌத்$_3$க$_3$ல்ய: முத்கலருடைய மகனான **नाकः** நாக: நாகர் (என்ற ரிஷி) **स्वाध्यायप्रवचने एव इति** ஸ்வாத்$_4$யாயப்ரவசனே ஏவ இதி படித்தலையும் படிப்பித்தலையும் மேலான பண்பாகக் கருதுகிறார். **तत् हि** தத் ஹி அதுவே **तपः** தப: மேலான தவம். **तत् हि** தத் ஹி அதுவே **तपः** தப: மேலான தவம்.

பின்பற்றப்பட வேண்டிய நெறிகள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

சரியாகப் புரிந்து கொள்ளுதல், சாஸ்த்ரங்களைப் படித்தல், படிப்பித்தல், உண்மை பேசுதல், தவம், இந்த்ரிய ஒழுக்கம், மனக்கட்டுப்பாடு, யாகத்திற்கான நெருப்பைப் பாதுகாத்தல், அக்னிஹோத்ர ஹோமத்தைச் செய்தல், விருந்தோம்பல், மானுட ஸேவை, ஸந்ததியை வளர்த்தல், மகப்பேறு, பேரனைப் பேணுதல். என்றும் உண்மை பேசுகின்ற ராதீதரர் என்ற ரிஷி வாய்மையை மேலான பண்பாகக் கருதுகிறார். என்றும் தவத்தில் ஈடுபட்டுள்ள பௌருசிஷ்டி என்ற ரிஷி தவத்தை மேலான பண்பாகக் கருதுகிறார். முத்கலருடைய மகனான நாகர் என்ற ரிஷி படித்தலையும் படிப்பித்தலையும் மேலான பண்பாகக் கருதுகிறார். அதுவே மேலான தவம். அதுவே மேலான தவம்.

१०. अहं वृक्षस्य रेरिवा। कीर्तिः पृष्ठं गिरेरिव। ऊर्ध्वपवित्रो वाजिनीव स्वमृतमस्मि। द्रविणँसवर्चसम्। सुमेधा अमृतोऽक्षितः। इति त्रिशङ्कोर्वेदानुवचनम्॥

10. அஹம் வ்ருக்ஷஸ்ய ரேரிவா। கீர்தி: ப்ருஷ்ட$_2$ம் கி$_3$ரேரிவ। ஊர்த்$_4$வபவித்ரோ வாஜினீவ ஸ்வம்ருதமஸ்மி। த்$_3$ரவிணம் ஸவர்சஸம்। ஸுமேதா$_4$ அம்ருதோऽக்ஷித:। இதி த்ரிச$_1$ங்கோர் வேதா$_3$னுவசனம்॥

त्रिशङ्कोः वेदानुवचनं इति த்ரிச$_1$ங்கோ: வேதா$_3$னுவசனம் இதி (ஆத்ம ஞானத்தை அடைந்ததற்குப்பிறகு கூறிய) த்ரிசங்குவினுடைய வசனம் இது. **अहं** அஹம் நான் **वृक्षस्य** வ்ருக்ஷஸ்ய (உலகமாகின்ற) மரத்தை **रेरिवा** ரேரிவா தாங்குபவனாக இருக்கிறேன். **गिरेः** கி$_3$ரே: மலையின் **पृष्ठं इव** ப்ருஷ்ட$_2$ம் இவ உச்சியைப்போல் **कीर्तिः** கீர்தி: (என்னுடைய) புகழ் (ஓங்கியிருக்கிறது). **ऊर्ध्व-पवित्रः** ஊர்த்$_4$வ-பவித்ர: முழுமையாக தூய்மையடைந்தவனாக (உள்ளேன்). **वाजिनि इव** வாஜினி இவ ஸூர்யதேவனில் இருக்கின்ற ஒளியைப்போல **स्वमृतं** ஸ்வம்ருதம் அழியாத ஆத்ம தத்துவமாகவும் **सवर्चसं** ஸவர்சஸம் ஒளிபொருந்திய **द्रविणं** த்$_3$ரவிணம் உண்மைப் பொருளாகவும் **सुमेधा** ஸுமேதா$_4$ மங்களரூபமான அறிவை அடைந்தவனாகவும் **अमृतः** அம்ருத: மரணமற்றவனாகவும் **अक्षितः** அக்ஷித: மாற்றமற்றவனாகவும் **अस्मि** அஸ்மி இருக்கின்றேன்.

ஆத்மஞானத்தை அடைந்ததற்குப்பிறகு கூறிய திரிசங்குவினுடைய வசனம் இது: நான் உலகமாகின்ற மரத்தைத் தாங்குபவனாக இருக்கிறேன். மலையின் உச்சியைப் போல் என்னுடைய புகழ் ஓங்கியிருக்கிறது. முழுமையாக தூய்மையடைந்தவனாக உள்ளேன். ஸூர்ய தேவனில் இருக்கின்ற ஒளியைப்போல அழியாத ஆத்ம தத்துவமாகவும் ஒளி பொருந்திய உண்மைப் பொருளாகவும் மங்கள ரூபமான அறிவை அடைந்தவனாகவும் மரணமற்றவனாகவும் மாற்றமற்ற வனாகவும் இருக்கின்றேன்.

११. वेदमनूच्याचार्योऽन्तेवासिनमनुशास्ति। सत्यं वद। धर्मं चर। स्वाध्यायान्मा प्रमदः। आचार्याय प्रियं धनमाहृत्य प्रजातन्तुं मा व्यवच्छेत्सीः। सत्यान्न प्रमदितव्यम्। धर्मान्न प्रमदितव्यम्। कुशलान्न प्रमदितव्यम्। भूत्यै न प्रमदितव्यम्। स्वाध्यायप्रवचनाभ्यां न प्रमदितव्यम्। देवपितृकार्याभ्यां न प्रमदितव्यम्। मातृदेवो भव। पितृदेवो भव। आचार्यदेवो भव। अतिथिदेवो भव।

11. வேத$_3$மனூச்யாசார்யோऽந்தேவாஸினமனுசா$_1$ஸ்தி । ஸத்யம் வத$_3$ । த$_4$ர்மம் சர । ஸ்வாத்$_4$யாயாந்மா ப்ரமத$_3$: । ஆசார்யாய ப்ரியம் த$_4$னமாஹ்ருத்ய ப்ரஜாதந்தும் மா வ்யவச்சே$_2$த்ஸீ: । ஸத்யாந்ந ப்ரமதி$_3$தவ்யம் । த$_4$ர்மாந்ந ப்ரமதி$_3$தவ்யம் । குச$_1$லாந்ந ப்ரமதி$_3$தவ்யம் । பூ$_4$த்யை ந ப்ரமதி$_3$தவ்யம் । ஸ்வாத்$_4$யாயப்ரவசனாப்$_4$யாம் ந ப்ரமதி$_3$தவ்யம் । தே$_3$வபித்ருகார்யாப்$_4$யாம் ந ப்ரமதி$_3$தவ்யம் । மாத்ருதே$_3$வோ ப$_4$வ । பித்ருதே$_3$வோ ப$_4$வ । ஆசார்யதே$_3$வோ ப$_4$வ । அதிதி$_2$ தே$_3$வோ ப$_4$வ ।

आचार्यः ஆசார்ய: ஆசிரியர் **वेदं** வேத$_3$ம் வேதத்தை **अनूच्य** அனூச்ய ஓதும் நெறியைப் புகட்டியபின் **अन्तेवासिनं** அந்தேவாஸினம் மாணவனிடத்தில் **अनुशास्ति** அனுசா$_1$ஸ்தி (கீழ்க்கண்டவாறு) உபதேசிக்கிறார். **सत्यं** ஸத்யம் உண்மையை **वद** வத$_3$ பேசு. **धर्मं** த$_4$ர்மம் தர்மத்தை **चर** சர பின்பற்று. **स्वाध्यायात्** ஸ்வாத்$_4$யாயாத் சாஸ்த்ரத்தைப் படிப்பதிலிருந்து **मा अप्रमदः** மா அப்ரமத$_3$: விலகி விடாதே. **आचार्याय** ஆசார்யாய ஆசிரியருக்கு **प्रियं** ப்ரியம் ப்ரியமான **धनं** த$_4$னம் பொருளை **आहृत्य** ஆஹ்ருத்ய கொடுத்ததற்குப் பிறகு **प्रजातन्तुं** ப்ரஜாதந்தும் (உன்னுடைய) வம்சத்தொடரை **मा व्यवच्छेत्सीः** மா வ்யவச்சே$_2$த்ஸீ: (நீ) அறுத்து விடாதே. **सत्यात्** ஸத்யாத் உண்மை பேசுவதிலிருந்து **न प्रमदितव्यं** ந ப்ரமதி$_3$தவ்யம் விலகிவிடாதே. **धर्मात्** த$_4$ர்மாத் தர்ம அனுஷ்டானத்திலிருந்து **न प्रमदितव्यं** ந ப்ரமதி$_3$தவ்யம் விலகிவிடாதே. **कुशलात्** குச$_1$லாத் தன்னைக் காத்துக்கொள்வதில் **न प्रमदितव्यं** ந ப்ரமதி$_3$தவ்யம் கவனக்

குறைவாக இருந்துவிடாதே. **भूत्यै** பூ$_4$த்யை தன் முன்னேற்றத்தில் **न प्रमदितव्यं** ந ப்ரமதி$_3$தவ்யம் கவனக்குறைவாக இருந்துவிடாதே. **स्वाध्यायप्रवचनाभ्यां** ஸ்வாத்$_4$யாயப்ரவசனாப்$_4$யாம் சாஸ்த்ரத்தைப் படிப்பதிலிருந்தும் படிப்பித்தலிலிருந்தும் **न प्रमदितव्यं** ந ப்ரமதி$_3$தவ்யம் விலகிவிடாதே. **देवपितृकार्याभ्यां** தே$_3$வபித்ருகார்யாப்$_4$யாம் தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் செய்கின்ற கர்மத்திலிருந்து **न प्रमदितव्यं** ந ப்ரமதி$_3$தவ்யம் விலகிவிடாதே. **मातृदेवः भव** மாத்ருதே$_3$வ: ப$_4$வ தாயை தெய்வமாகக் கருதுபவனாக இரு. **पितृदेवः भव** பித்ருதே$_3$வ: ப$_4$வ தந்தையை தெய்வமாகக் கருதுபவனாக இரு. **आचार्यदेवः भव** ஆசார்யதே$_3$வ: ப$_4$வ ஆசிரியரை தெய்வமாகக் கருதுபவனாக இரு. **अतिथिदेवः भव** அதிதி$_2$தே$_3$வ: ப$_4$வ விருந்தினரை தெய்வமாகக் கருதுபவனாக இரு.

ஆசிரியர் வேதத்தை ஓதும் நெறியைப் புகட்டியபின் மாணவனிடத்தில் கீழ்க்கண்டவாறு உபதேசிக்கிறார்: உண்மையைப் பேசு. தர்மத்தைப் பின்பற்று. சாஸ்த்ரத்தைப் படிப்பதிலிருந்து விலகி விடாதே. ஆசிரியருக்கு ப்ரியமான பொருளைக் கொடுத்ததற்குப் பிறகு உன்னுடைய வம்சத்தொடரை நீ அறுத்துவிடாதே. உண்மை பேசுவதிலிருந்து விலகிவிடாதே. தர்ம அனுஷ்டானத்திலிருந்து விலகிவிடாதே. தன்னைக் காத்துக்கொள்வதில் கவனக்குறைவாக இருந்துவிடாதே. தன் முன்னேற்றத்தில் கவனக்குறைவாக இருந்துவிடாதே. சாஸ்த்ரத்தைப் படிப்பதிலிருந்தும் படிப்பித்தலிலிருந்தும் விலகிவிடாதே. தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் செய்கின்ற கர்மத்திலிருந்து விலகிவிடாதே. தாயை தெய்வமாகக் கருதுபவனாக இரு. தந்தையை தெய்வமாகக் கருதுபவனாக இரு. ஆசிரியரை தெய்வமாகக் கருதுபவனாக இரு. விருந்தினரை தெய்வமாகக் கருதுபவனாக இரு.

यान्यनवद्यानि कर्माणि। तानि सेवितव्यानि। नो इतराणि। यान्यस्माकँसुचरितानि। तानि त्वयोपास्यानि। नो इतराणि। ये के चास्मच्छ्रेयाँसो ब्राह्मणाः। तेषां त्वयासने न प्रश्वसितव्यम्।

யான்யனவத்₃யானி கர்மாணி । தானி ஸேவிதவ்யானி । நோ இதராணி । யான்யஸ்மாகம் ஸுசரிதானி । தானி த்வயோபாஸ்யானி । நோ இதராணி । யே கே சாஸ்மச்ச்₂ரேயாம் ஸோ ப்₃ராஹ்மணா: । தேஷாம் த்வயாஸனே ந ப்ரச்₁வஸிதவ்யம் ।

यानि कर्माणि யானி கர்மாணி எந்தச் செயல்கள் **अनवद्यानि** அனவத்₃யானி கீழ்மைப்படுத்தாதோ **तानि** தானி அவை **सेवितव्यानि** ஸேவிதவ்யானி பின்பற்றப்பட வேண்டும். **इतराणि** இதராணி மற்றவை **न उ** ந உ பின்பற்றப்படக்கூடாது. **अस्माकं** அஸ்மாகம் எங்களிடம் உள்ள **सुचरितानि** ஸுசரிதானி நல்ல நடத்தைகள் **यानि** யானி எவையுண்டோ **तानि** தானி அவை **त्वया** த்வயா உன்னால் **उपास्यानि** உபாஸ்யானி பின்பற்றப்பட வேண்டும். **इतराणि** இதராணி மற்றவை **न उ** ந உ பின்பற்றப்படக் கூடாது. **अस्मत् च** அஸ்மத் ச நம்மைக் காட்டிலும் **श्रेयांस:** ச்₁ரேயாம்ஸ: மேலான **ये के** யே கே எந்த **ब्राह्मणा:** ப்₃ராஹ்மணா: சான்றோர்கள் உள்ளனரோ **तेषां** தேஷாம் அவர்களுடைய **आसने** ஆஸனே முன்னிலையில் **त्वया** த்வயா உன்னால் **न प्रश्वसितव्यं** ந ப்ரச்₁வஸிதவ்யம் அமைதியானது கடைப்பிடிக்கப்பட வேண்டும். (அல்லது) **तेषां** தேஷாம் அவர்களுக்கு **त्वया** த்வயா உன்னால் (உன்) **आसनेन** ஆஸனேன இருக்கையைக் கொடுப்பதன் மூலம் **प्रश्वसितव्यं** ப்ரச்₁வஸிதவ்யம் (அவர்களுடைய) களைப்பை நீக்க வேண்டும்.

எந்தச் செயல்கள் கீழ்மைப்படுத்தாதோ அவை பின்பற்றப் பட வேண்டும். மற்றவை பின்பற்றப்படக் கூடாது. எங்களிடம் உள்ள நல்ல நடத்தைகள் எவையுண்டோ அவை உன்னால் பின்பற்றப்பட வேண்டும். மற்றவை பின்பற்றப்படக் கூடாது. நம்மைக் காட்டிலும் மேலான எந்த சான்றோர்கள் உள்ளனரோ அவர்களுடைய முன்னிலையில் உன்னால் அமைதியானது கடைப்பிடிக்கப்பட வேண்டும். அல்லது அவர்களுக்கு உன் இருக்கையைக் கொடுப்பதன் மூலம் அவர்களுடைய களைப்பை நீக்க வேண்டும்.

श्रद्धया देयम्। अश्रद्धयादेयम्। श्रिया देयम्। ह्रिया देयम्। भिया देयम्। संविदा देयम्।

ச்$_1$ரத்$_3$த$_4$யா தே$_3$யம் । அச்$_1$ரத்$_3$த$_4$யாதே$_3$யம் । ச்$_1$ரியா தே$_3$யம் । ஹ்ரியா தே$_3$யம் । பி$_4$யா தே$_3$யம் । ஸம்விதா$_3$ தே$_3$யம் ।

श्रद्धया ச்$_1$ரத்$_3$த$_4$யா ச்ரத்தையுடன் **देयं** தே$_3$யம் தானம் செய்யப்பட வேண்டும். **अश्रद्धया** அச்$_1$ரத்$_3$த$_4$யா ச்ரத்தை இல்லாமல் **अदेयं** அதே$_3$யம் தானம் செய்யப்படக் கூடாது. **श्रिया** ச்$_1$ரியா அதிகமாக **देयं** தே$_3$யம் தானம் செய்யப்பட வேண்டும். **ह्रिया** ஹ்ரியா ஸங்கோசத்துடன் **देयं** தே$_3$யம் தானம் செய்யப்பட வேண்டும். **भिया** பி$_4$யா அக்கறையுடன் **देयं** தே$_3$யம் தானம் செய்யப்பட வேண்டும். **संविदा** ஸம்விதா$_3$ அறிவு பூர்வமாக **देयं** தே$_3$யம் தானம் செய்யப்பட வேண்டும்.

ச்ரத்தையுடன் தானம் செய்யப்பட வேண்டும். ச்ரத்தை இல்லாமல் தானம் செய்யப்படக் கூடாது. அதிகமாக தானம் செய்யப்பட வேண்டும். ஸங்கோசத்துடன் தானம் செய்யப்பட வேண்டும். அக்கறையுடன் தானம் செய்யப்பட வேண்டும். அறிவு பூர்வமாக தானம் செய்யப்பட வேண்டும்.

अथ यदि ते कर्मविचिकित्सा वा वृत्तविचिकित्सा वा स्यात्। ये तत्र ब्राह्मणाः संमर्शिनः। युक्ता आयुक्ताः। अलूक्षा धर्मकामाः स्युः। यथा ते तत्र वर्तेरन्। तथा तत्र वर्तेथाः। अथाभ्याख्यातेषु। ये तत्र ब्राह्मणाः संमर्शिनः। युक्ता आयुक्ताः। अलूक्षा धर्मकामाः स्युः। यथा ते तेषु वर्तेरन्। तथा तेषु वर्तेथाः। एष आदेशः। एष उपदेशः। एषा वेदोपनिषत्। एतदनुशासनम्। एवमुपासितव्यम्। एवमु चैतदुपास्यम्।।

அத$_2$ யதி$_3$ தே கர்மவிசிகித்ஸா வா வ்ருத்தவிசிகித்ஸா வா ஸ்யாத் । யே தத்ர ப்$_3$ராஹ்மணா: ஸம்மர்சி$_1$ன: । யுக்தா ஆயுக்தா: । அலூக்ஷா த$_4$ர்மகாமா: ஸ்யு: । யதா$_2$ தே தத்ர வர்தேரன் । ததா$_2$ தத்ர வர்தேதா$_2$: । அதா$_2$ப்$_4$யாக்$_2$யாதேஷு ।

யே தத்ர ப்$_3$ராஹ்மணா: ஸம்மர்சி$_1$ன: । யுக்தா ஆயுக்தா: ।
அலூக்ஷா த$_4$ர்மகாமா: ஸ்யு: । யதா$_2$ தே தேஷு வர்தேரன் ।
ததா$_2$ தேஷு வர்தேதா$_2$: । ஏஷ ஆதே$_3$ச$_1$: । ஏஷ உபதே$_3$ச$_1$: ।
ஏஷா வேதோ$_3$பநிஷத் । ஏதத$_3$னுசா$_1$ஸனம் । ஏவமுபாஸி
தவ்யம் । ஏவமு சைதது$_3$பாஸ்யம் ॥

अथ यदि அத$_2$ யதி$_3$ ஒருவேளை **ते** தே உனக்கு **कर्मविचिकित्सा वा** கர்மவிசிகித்ஸா வா கடமையைப் பற்றிய ஸந்தேஹமோ **वृत्तविचिकित्सा वा** வ்ருத்தவிசிகித்ஸா வா நடத்தையைப் பற்றிய ஸந்தேஹமோ **स्यात्** ஸ்யாத் தோன்றினால் **तत्र** தத்ர அங்கு **संमर्शिनः** ஸம்மர்சி$_1$ன: அறிவுடைய **युक्ताः** யுக்தா: அனுபவமிக்க **आयुक्ताः** ஆயுக்தா: நடுநிலையில் உள்ள **अलूक्षाः** அலூக்ஷா: மென்மையான மனதையுடைய **धर्मकामाः** த$_4$ர்மகாமா: தர்மத்தில் நிலைபெற்ற **ये ब्राह्मणाः** யே ப்$_3$ராஹ்மணா: எந்த சான்றோர்கள் **स्युः** ஸ்யு: இருக்கிறார்களோ **ते** தே அவர்கள் **यथा** யதா$_2$ எவ்விதம் **तत्र** தத்ர அந்த சூழ்நிலையில் **वर्तेरन्** வர்தேரன் நடந்து கொள்வார்களோ **तथा** ததா$_2$ அவ்விதம் **तत्र** தத்ர அந்த சூழ்நிலையில் **वर्तेथाः** வர்தேதா$_2$: (நீ) நடந்து கொள்ள வேண்டும். **अथ** அத$_2$ மேலும் **अभ्याख्यातेषु** அப்$_4$யாக்$_2$யாதேஷு குற்றம் சுமத்தப்பட்டவர்களிடம் (எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற ஸந்தேஹம் உனக்கு வந்தால்) **तत्र** தத்ர அங்கு **संमर्शिनः** ஸம்மர்சி$_1$ன: அறிவுடைய **युक्ताः** யுக்தா: அனுபவமிக்க **आयुक्ताः** ஆயுக்தா: நடுநிலையில் உள்ள **अलूक्षाः** அலூக்ஷா: மென்மையான மனதையுடைய **धर्मकामाः** த$_4$ர்மகாமா: தர்மத்தில் நிலைபெற்ற **ये ब्राह्मणाः** யே ப்$_3$ராஹ்மணா: எந்த சான்றோர்கள் **स्युः** ஸ்யு: இருக்கிறார்களோ **ते** தே அவர்கள் **यथा** யதா$_2$ எவ்விதம் **तेषु** தேஷு அவர்களிடம் **वर्तेरन्** வர்தேரன் நடந்து கொள்வார்களோ **तथा** ததா$_2$ அவ்விதம் **तेषु** தேஷு அவர்களிடம் **वर्तेथाः** வர்தேதா$_2$: (நீ) நடந்து கொள்ள வேண்டும். **एषः** ஏஷ: இது **आदेशः** ஆதே$_3$ச$_1$: (ச்ருதியின்) கட்டளை. **एषः** ஏஷ: இது **उपदेशः** உபதே$_3$ச$_1$: (ஸ்ம்ருதியின்) கட்டளை. **एषा** ஏஷா இது **वेदोपनिषत्** வேதோ$_3$பநிஷத் வேதத்தின்

சாரம். **एतत्** ஏதத் இது **अनुशासनं** அனுசா1ஸனம் (இறைவனின்) கட்டளை. **एवं** ஏவம் இவ்விதத்தில் **उपासितव्यं** உபாஸிதவ்யம் வாழ்க்கை நடத்தப்பட வேண்டும். **एवं उ** ஏவம் உ இவ்விதத்தில்தான் **एतत् उपास्यं च** ஏதத் உபாஸ்யம் ச வாழ்க்கை நடத்தப்பட வேண்டும்.

ஒருவேளை உனக்கு கடமையைப் பற்றிய ஸந்தேஹமோ, நடத்தையைப் பற்றிய ஸந்தேஹமோ தோன்றினால் அங்கு அறிவுடைய, அனுபவமிக்க, நடுநிலையில் உள்ள, மென்மையான மனதையுடைய, தர்மத்தில் நிலைபெற்ற எந்த சான்றோர்கள் இருக்கிறார்களோ அவர்கள் எவ்விதம் அந்த சூழ்நிலையில் நடந்து கொள்வார்களோ அவ்விதம் அந்த சூழ்நிலையில் நீ நடந்து கொள்ள வேண்டும். மேலும், குற்றம் சுமத்தப்பட்டவர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற ஸந்தேஹம் உனக்கு வந்தால் அங்கு அறிவுடைய, அனுபவமிக்க, நடுநிலையில் உள்ள, மென்மையான மனதையுடைய, தர்மத்தில் நிலைபெற்ற, எந்த சான்றோர்கள் இருக்கிறார்களோ அவர்கள் எவ்விதம் அவர்களிடம் நடந்து கொள்வார்களோ அவ்விதம் அவர்களிடம் நீ நடந்து கொள்ள வேண்டும். இது ச்ருதியின் கட்டளை. இது ஸ்ம்ருதியின் கட்டளை. இது வேதத்தின் சாரம். இது இறைவனின் கட்டளை. இவ்விதத்தில் வாழ்க்கை நடத்தப்பட வேண்டும். இவ்விதத்தில்தான் வாழ்க்கை நடத்தப்பட வேண்டும்.

१२. शं नो मित्रः शं वरुणः। शं नो भवत्वर्यमा। शं न इन्द्रो बृहस्पतिः। शं नो विष्णुरुरुक्रमः। नमो ब्रह्मणे। नमस्ते वायो। त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि। त्वामेव प्रत्यक्षं ब्रह्मावादिषम्। ऋतमवादिषम्। सत्यमवादिषम्। तन्मामावीत्। तद्वक्तारमावीत्। आवीन्माम्। आवीद्वक्तारम्। ओं शान्तिः शान्तिः शान्तिः ।।

12. ச1ம் நோ மித்ர: ச1ம் வருண: । ச1ம் நோ ப4வத்வர்யமா । ச1ம் ந இந்த்3ரோ ப்3ருஹஸ்பதி: । ச1ம் நோ விஷ்ணுருருக்ரம: । நமோ ப்3ரஹ்மணே । நமஸ்தே வாயோ । த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்3ரஹ்மாஸி । த்வாமேவ ப்ரத்யக்ஷம் ப்3ரஹ்மாவாதி3ஷம் ।

ரிதமவாதி3ஷம் । ஸத்யமவாதி3ஷம் । தந்மாமாவீத் । தத்3வக்தா
ரமாவீத் । ஆவீந்மாம் । ஆவீத்3வக்தாரம் । ஓம் சா1ந்தி:
சா1ந்தி: சா1ந்தி: ॥

मित्रः மித்ர: மித்ரன் (என்கின்ற தேவர்) **नः** ந: எங்களுக்கு **शं** ச1ம் மங்களத்தை (கொடுப்பவராக இருக்கட்டும்). **वरुणः** வருண: வருணதேவர் **शं** ச1ம் (எங்களுக்கு) மங்களத்தை (கொடுப்பவராக இருக்கட்டும்). **अर्यमा** அர்யமா அர்யமா (என்கின்ற தேவர்) **नः** ந: எங்களுக்கு **शं** ச1ம் மங்களத்தை **भवतु** ப4வது கொடுப்பவராக இருக்கட்டும். **इन्द्रः** இந்த்3ர: இந்த்ரதேவரும் **बृहस्पतिः** ப்3ருஹஸ்பதி: ப்ருஹஸ்பதியும் **नः** ந: எங்களுக்கு **शं** ச1ம் மங்களத்தை (கொடுப்ப வர்களாக இருக்கட்டும்). **उरुक्रमः** உருக்ரம: நீண்ட பாதங்களை யுடைய **विष्णुः** விஷ்ணு: விஷ்ணு **नः** ந: எங்களுக்கு **शं** ச1ம் மங்களத்தை (கொடுப்பவராக இருக்கட்டும்). **ब्रह्मणे** ப்3ரஹ்மணே ஹிரண்யகர்பதேவருக்கு **नमः** நம: நமஸ்காரம். **वायो** வாயோ ஹிரண்கர்பதேவரே **ते** தே உங்களுக்கு **नमः** நம: நமஸ்காரம். **त्वं एव** த்வம் ஏவ நீங்களே **प्रत्यक्षं** ப்ரத்யக்ஷம் நேரில் காணக்கூடிய **ब्रह्म** ப்3ரஹ்ம ப்ரஹ்மனாக **असि** அஸி இருக்கிறீர்கள். **त्वां एव** த்வாம் ஏவ உங்களையே **प्रत्यक्षं** ப்ரத்யக்ஷம் நேரில் காணக்கூடிய **ब्रह्म** ப்3ரஹ்ம ப்ரஹ்மனாக **अवादिषं** அவாதி3ஷம் கூறினேன். **ऋतं** ரிதம் (உங்களை) சரியான அறிவு ரூபமாக **अवादिषं** அவாதி3ஷம் கூறினேன். **सत्यं** ஸத்யம் (உங்களை) ஸத்ய ரூபமாக **अवादिषं** அவாதி3ஷம் கூறினேன். **तत्** தத் அந்த (ஹிரண்யகர்ப தத்துவம்) **मां** மாம் என்னை **आवीत्** ஆவீத் காப்பாற்றியது. **तत्** தத் அது **वक्तारं** வக்தாரம் குருவை **आवीत्** ஆவீத் காப்பாற்றியது. **मां** மாம் என்னை **आवीत्** ஆவீத் காப்பாற்றியது. **वक्तारं** வக்தாரம் குருவை **आवीत्** ஆவீத் காப்பாற்றியது. **ओं शान्तिः** ஓம் சா1ந்தி: ஓம் சாந்தி **शान्तिः** சா1ந்தி: சாந்தி **शान्तिः** சா1ந்தி: சாந்தி.

மித்ரன் என்கின்ற தேவர் எங்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவராக இருக்கட்டும். வருணதேவர் எங்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவராக இருக்கட்டும். அர்யமா என்கின்ற

தேவர் எங்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவராக இருக்கட்டும். இந்த்ரதேவரும் ப்ருஹஸ்பதியும் எங்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவர்களாக இருக்கட்டும். நீண்ட பாதங்களையுடைய விஷ்ணு எங்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவராக இருக்கட்டும். ஹிரண்யகர்பதேவருக்கு நமஸ்காரம். ஹிரண்யகர்ப தேவரே, உங்களுக்கு நமஸ்காரம். நீங்களே நேரில் காணக் கூடிய ப்ரஹ்மனாக இருக்கிறீர்கள். உங்களையே நேரில் காணக்கூடிய ப்ரஹ்மனாக கூறினேன். உங்களை சரியான அறிவு ரூபமாகக் கூறினேன். உங்களை ஸத்ய ரூபமாக கூறினேன். அந்த ஹிரண்யகர்ப தத்துவம் என்னைக் காப்பாற்றியது. அது குருவைக் காப்பாற்றியது. என்னைக் காப்பாற்றியது. குருவைக் காப்பாற்றியது. ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

इति शीक्षावल्ली

சீக்ஷாவல்லி முடிவுற்றது.

ब्रह्मानन्दवल्ली

ப்$_3$ரஹ்மானந்த$_3$வல்லீ

शान्तिपाठः

சா$_1$ந்திபாட$_2$:

स ह नाववतु। स ह नौ भुनक्तु। सह वीर्यं करवावहै।
तेजस्विनावधीतमस्तु मा विद्विषावहै।
ओं शान्तिः शान्तिः शान्तिः ।।

ஸ ஹ நாவவது । ஸ ஹ நௌ பு$_4$நக்து । ஸஹ வீர்யம் கரவாவஹை । தேஜஸ்விநாவதீ$_4$தமஸ்து மா வித்$_3$விஷா வஹை । ஓம் சா$_1$ந்தி: சா$_1$ந்தி: சா$_1$ந்தி: ।।

सः ஸ: அவன் (அந்த இறைவன்) **नौ ह** நௌ ஹ (குரு சிஷ்யர்களாகிய) எங்கள் இருவரையும் **अवतु** அவது காப்பாற்றட்டும். **सः** ஸ: அவன் (அந்த இறைவன்) **नौ ह** நௌ ஹ எங்கள் இருவரையும் **भुनक्तु** பு$_4$நக்து காப்பாற்றட்டும். **वीर्यं** வீர்யம் (எங்களுக்குரிய) முயற்சியை **सह** ஸஹ (நாங்கள் இருவரும்) சேர்ந்து **करवावहै** கரவாவஹை செய்வோமாக. **नौ अधीतं** நௌ அதீ$_4$தம் எங்கள் படிப்பு **तेजस्वि** தேஜஸ்வி ஒளிபொருந்தியதாக **अस्तु** அஸ்து இருக்கட்டும். **मा विद्विषावहै** மா வித்$_3$விஷாவஹை (நாங்கள் ஒருவரையொருவர்) வெறுக்காமல் இருப்போமாக. **ओं शान्तिः** ஓம் சா$_1$ந்தி: ஓம் சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி.

அந்த இறைவன் குரு சிஷ்யர்களாகிய எங்கள் இருவரையும் காப்பாற்றட்டும். அந்த இறைவன் எங்கள் இருவரையும் காப்பாற்றட்டும். எங்களுக்குரிய முயற்சியை நாங்கள் இருவரும் சேர்ந்து செய்வோமாக. எங்கள் படிப்பு ஒளிபொருந்தியதாக இருக்கட்டும். நாங்கள் ஒருவரையொருவர் வெறுக்காமல் இருப்போமாக. ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

१. ब्रह्मविदाप्नोति परम्। तदेषाऽभ्युक्ता। सत्यं ज्ञानमनन्तं ब्रह्म। यो वेद निहितं गुहायां परमे व्योमन्। सोऽश्नुते सर्वान् कामान्सह। ब्रह्मणा विपश्चितेति।

1. ப்$_3$ரஹ்மவிதா$_3$ப்னோதி பரம் । ததே$_3$ஷாऽப்$_4$யுக்தா । ஸத்யம் ஞானமனந்தம் ப்$_3$ரஹ்ம । யோ வேத$_3$ நிஹிதம் கு$_3$ஹாயாம் பரமே வ்யோமன் । ஸோऽச்$_1$னுதே ஸர்வான் காமான்ஸஹ । ப்$_3$ரஹ்மணா விபச்$_1$சிதேதி ।

ब्रह्मवित् ப்$_3$ரஹ்மவித் ப்ரஹ்மனை அறிந்தவன் परं பரம் மோக்ஷத்தை आप्नोति ஆப்னோதி அடைகிறான். तत् தத் இவ்விஷயத்தில் एषा ஏஷா இந்த (ரிக் மந்த்ரம்) अभ्युक्ता அப்$_4$யுக்தா சொல்லப்பட்டிருக்கிறது. ब्रह्म ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனானது सत्यं ஸத்யம் என்றுமுள்ள ஸ்வரூபமானது. ज्ञानं ஞானம் அறிவு ஸ்வரூபமானது. अनन्तं அனந்தம் வரையறுக்கப்படாத ஸ்வரூபமானது. यः ய: யார் (அந்த ப்ரஹ்மனை) गुहायां கு$_3$ஹாயாம் ஹ்ருதய குஹையில் உள்ள परमे பரமே மேலான व्योमन् வ்யோமன் ஆகாசத்திற்குள் निहितं நிஹிதம் இருப்பதாக वेद வேத$_3$ அறிகிறானோ सः ஸ: அவன் विपश्चिता விபச்$_1$சிதா அறிவு ஸ்வரூபமான ब्रह्मणा ப்$_3$ரஹ்மணா ப்ரஹ்மனாக இருப்பவனாக सर्वान् कामान् ஸர்வான் காமான் அனைத்து ஆசைகளையும் सह ஸஹ ஒரே ஸமயத்தில் अश्नुते அச்$_1$னுதே பூர்த்தி செய்கிறான். इति இதி இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது.

ப்ரஹ்மனை அறிந்தவன் மோக்ஷத்தை அடைகிறான். இவ்விஷயத்தில் இந்த ரிக் மந்த்ரம் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரஹ்மனானது என்றுமுள்ள ஸ்வரூபமானது. அறிவு ஸ்வரூப மானது. வரையறுக்கப்படாத ஸ்வரூபமானது. யார் அந்த ப்ரஹ்மனை ஹ்ருதய குஹையில் உள்ள மேலான ஆகாசத்திற்குள் இருப்பதாக அறிகிறானோ, அவன் அறிவு ஸ்வரூபமான ப்ரஹ்மனாக இருப்பவனாக அனைத்து ஆசைகளையும் ஒரே ஸமயத்தில் பூர்த்தி செய்கிறான். இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது.

तस्माद्वा एतस्मादात्मन आकाशः संभूतः। आकाशाद्वायुः। वायोरग्निः। अग्नेरापः। अद्भ्यः पृथिवी। पृथिव्या ओषधयः। ओषधीभ्योऽन्नम्। अन्नात् पुरुषः। स वा एष पुरुषोऽन्नरसमयः। तस्येदमेव शिरः। अयं दक्षिणः पक्षः। अयमुत्तरः पक्षः। अयमात्मा। इदं पुच्छं प्रतिष्ठा। तदप्येष श्लोको भवति ॥

தஸ்மாத்$_3$வா ஏதஸ்மாதா$_3$த்மன ஆகாச$_1$: ஸம்பூ$_4$த: । ஆகாசா$_1$த்$_3$வாயு: । வாயோரக்$_3$னி: । அக்$_3$னேராப: । அத்$_3$ப்$_4$ய: ப்ருதி$_2$வீ । ப்ருதி$_2$வ்யா ஓஷத$_4$ய: । ஓஷதீ$_4$ப்$_4$யோऽன்னம் । அன்னாத் புருஷ: । ஸ வா ஏஷ புருஷோऽன்னரஸமய: । தஸ்யேத$_3$மேவ சி$_1$ர: । அயம் த$_3$க்ஷிண: பக்ஷ: । அயமுத்தர: பக்ஷ: । அயமாத்மா । இத$_3$ம் புச்ச$_2$ம் ப்ரதிஷ்டா$_2$ । தத$_3$ப்யேஷ ச்$_1$லோகோ ப$_4$வதி ॥

एतस्मात् आत्मनः ஏதஸ்மாத் ஆத்மன: இந்த ஆத்மாவாக உள்ள **तस्मात् वै** தஸ்மாத் வை அதனிடமிருந்து (அந்த ப்ரஹ்மனிடமிருந்து) **आकाशः** ஆகாச$_1$: ஆகாசம் **संभूतः** ஸம்பூ$_4$த: தோன்றியது. **आकाशात्** ஆகாசா$_1$த் ஆகாசத்திலிருந்து **वायुः** வாயு: காற்று (தோன்றியது). **वायोः** வாயோ: காற்றிலிருந்து **अग्निः** அக்$_3$னி: நெருப்பு (தோன்றியது). **अग्नेः** அக்$_3$னே: நெருப்பிலிருந்து **आपः** ஆப: நீர் (தோன்றியது). **अद्भ्यः** அத்$_3$ப்$_4$ய: நீரிலிருந்து **पृथिवी** ப்ருதி$_2$வீ பூமி (தோன்றியது). **पृथिव्याः** ப்ருதி$_2$வ்யா: பூமியிலிருந்து **ओषधयः** ஓஷத$_4$ய: தாவரங்கள் (தோன்றின). **ओषधीभ्यः** ஓஷதீ$_4$ப்$_4$ய: தாவரங்களிலிருந்து **अन्नं** அன்னம் உணவு (தோன்றியது). **अन्नात्** அன்னாத் உணவிலிருந்து **पुरुषः** புருஷ: மனித உடல் (தோன்றியது). **सः वै एषः पुरुषः** ஸ: வை ஏஷ: புருஷ: இந்த ஆத்மா **अन्नरसमयः** அன்னரஸமய: அன்னமயமான மனிதன். **तस्य** தஸ்ய (அன்னமயமான) அவனுக்கு **इदं एव** இத$_3$ம் ஏவ இதுவே **शिरः** சி$_1$ர: தலைப்பாகம். **अयं** அயம் இது **दक्षिणः पक्षः** த$_3$க்ஷிண: பக்ஷ: வலது பாகம். **अयं** அயம் இது **उत्तरः पक्षः** உத்தர: பக்ஷ: இடது பாகம். **अयं** அயம் இது **आत्मा** ஆத்மா நடுப்பாகம். **इदं पुच्छं** இத$_3$ம் புச்ச$_2$ம் இது வாலைப்போல **प्रतिष्ठा** ப்ரதிஷ்டா$_2$ தாங்கும்

தாங்கும் பாகம். **तत् अपि** தத் அபி இந்த விஷயத்தில் **एषः श्लोकः** ஏஷ: ச்$_1$லோக: பின்வரும் ரிக் மந்த்ரம் **भवति** ப$_4$வதி உள்ளது.

இந்த ஆத்மாவாக உள்ள அந்த ப்ரஹ்மனிடமிருந்து ஆகாசம் தோன்றியது. ஆகாசத்திலிருந்து காற்று தோன்றியது. காற்றிலிருந்து நெருப்பு தோன்றியது. நெருப்பிலிருந்து நீர் தோன்றியது. நீரிலிருந்து பூமி தோன்றியது. பூமியிலிருந்து தாவரங்கள் தோன்றின. தாவரங்களிலிருந்து உணவு தோன்றியது. உணவிலிருந்து மனித உடல் தோன்றியது. இந்த ஆத்மா அன்னமயமான மனிதன். அன்னமயமான அவனுக்கு இதுவே தலைப்பாகம். இது வலது பாகம். இது இடது பாகம். இது நடுப்பாகம். இது வாலைப்போல தாங்கும் பாகம். இந்த விஷயத்தில் பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது:

२. अन्नाद्वै प्रजाः प्रजायन्ते। याः काश्च पृथिवीँ श्रिताः। अथो अन्नेनैव जीवन्ति। अथैनदपियन्त्यन्ततः। अन्नँहि भूतानां ज्येष्ठम्। तस्मात् सर्वौषधमुच्यते। सर्वं वै तेऽन्नमाप्नुवन्ति। येऽन्नं ब्रह्मोपासते। अन्नँहि भूतानां ज्येष्ठम्। तस्मात् सर्वौषधमुच्यते। अन्नाद् भूतानि जायन्ते। जातान्यन्नेन वर्धन्ते। अद्यतेऽत्ति च भूतानि। तस्मादन्नं तदुच्यत इति।

2. அன்னாத்$_3$வை ப்ரஜா: ப்ரஜாயந்தே। யா: காச்$_1$ச ப்ருதி$_2$வீம் ச்$_1$ரிதா:। அதோ$_2$ அன்னேனைவ ஜீவந்தி। அதை$_2$னத$_3$பியந்த் யந்தத:। அன்னம்ஹி பூ$_4$தானாம் ஜ்யேஷ்ட$_2$ம்। தஸ்மாத் ஸர்வௌஷத$_4$முச்யதே। ஸர்வம் வை தேऽன்னமாப்னுவந்தி। யேऽன்னம் ப்$_3$ரஹ்மோபாஸதே। அன்னம்ஹி பூ$_4$தானாம் ஜ்யேஷ்ட$_2$ம்। தஸ்மாத் ஸர்வௌஷத$_4$முச்யதே। அன்னாத்$_3$ பூ$_4$தானி ஜாயந்தே। ஜாதான்யன்னேன வர்த$_4$ந்தே। அத்$_3$யதே ऽத்தி ச பூ$_4$தானி। தஸ்மாத$_3$ன்னம் தது$_3$ச்யத இதி।

पृथिवीं ப்ருதி$_2$வீம் பூமியை **श्रिताः** ச்$_1$ரிதா: சார்ந்துள்ள **प्रजाः** ப்ரஜா: உயிரினங்கள் **याः काः च** யா: கா: ச அனைத்தும் **अन्नात् वै** அன்னாத்

வை உணவிலிருந்து प्रजायन्ते ப்ரஜாயந்தே தோன்றுகின்றன. अथो அதோ$_2$ மேலும் अन्नेन एव அன்னேன ஏவ உணவினாலேயே जीवन्ति ஜீவந்தி வாழ்கின்றன. अथ अन्ततः அத$_2$ அந்தத: முடிவில் एनत् ஏனத் இதை (இந்த உணவையே) अपियन्ति அபியந்தி அடைகின்றன. भूतानां பூ$_4$தானாம் உயிரினங்களுக்குள் अन्नं हि அன்னம் ஹி உணவே ज्येष्ठं ஜ்யேஷ்ட$_2$ம் முக்யமாகவும் முதன்மையாகவும் உள்ளது. तस्मात् தஸ்மாத் ஆகவே सर्व-औषधं ஸர்வ-ஔஷத$_4$ம் (உணவு) அனைவருக்கும் மருந்தாக उच्यते உச்யதே சொல்லப்படுகிறது. ये யே எவர்கள் अन्नं அன்னம் உணவை ब्रह्म ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனாக उपासते உபாஸதே த்யானிக்கிறார்களோ ते தே அவர்கள் सर्वं वै अन्नं ஸர்வம் வை அன்னம் அனைத்துவிதமான உணவையும் आप्नुवन्ति ஆப்னுவந்தி அடைவார்கள். भूतानां பூ$_4$தானாம் உயிரினங்களுக்குள் अन्नं हि அன்னம் ஹி உணவே ज्येष्ठं ஜ்யேஷ்ட$_2$ம் முக்யமாகவும் முதன்மை யாகவும் உள்ளது. तस्मात् தஸ்மாத் ஆகவே सर्व-औषधं ஸர்வ-ஔஷத$_4$ம் (உணவு) அனைவருக்கும் மருந்தாக उच्यते உச்யதே சொல்லப்படுகிறது. भूतानि பூ$_4$தானி உயிரினங்கள் अन्नात् அன்னாத் உணவிலிருந்து जायन्ते ஜாயந்தே தோன்றுகின்றன. जातानि ஜாதானி தோன்றியவை अन्नेन அன்னேன உணவினால் वर्धन्ते வர்த$_4$ந்தே வளர்கின்றன. अद्यते அத்$_3$யதே (உயிரினங்களால் உணவு) சாப்பிடப் படுகிறது. भूतानि பூ$_4$தானி (உணவு) உயிரினங்களை अत्ति च அத்தி ச சாப்பிடுகிறது. तस्मात् தஸ்மாத் ஆகவே तत् தத் அது (அந்த உணவு) अन्नं அன்னம் அன்னம் (என்று) उच्यते உச்யதே சொல்லப்படுகிறது. इति இதி இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது.

பூமியை சார்ந்துள்ள உயிரினங்கள் அனைத்தும் உணவிலிருந்து தோன்றுகின்றன. மேலும், உணவினாலேயே வாழ்கின்றன. முடிவில் இந்த உணவையே அடைகின்றன. உயிரினங்களுக்குள் உணவே முக்யமாகவும் முதன்மை யாகவும் உள்ளது. ஆகவே உணவு அனைவருக்கும் மருந்தாக சொல்லப்படுகிறது. எவர்கள் உணவை ப்ரஹ்மனாக த்யானிக் கிறார்களோ அவர்கள் அனைத்து விதமான உணவையும்

அடைவார்கள். உயிரினங்களுக்குள் உணவே முக்யமாகவும் முதன்மையாகவும் உள்ளது. ஆகவே உணவு அனைவருக்கும் மருந்தாக சொல்லப்படுகிறது. உயிரினங்கள் உணவிலிருந்து தோன்றுகின்றன. தோன்றியவை உணவினால் வளர்கின்றன. உயிரினங்களால் உணவு சாப்பிடப்படுகிறது. உணவு உயிரினங்களை சாப்பிடுகிறது. ஆகவே அந்த உணவு அன்னம் என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது.

तस्माद्वा एतस्मादन्नरसमयात्। अन्योऽन्तर आत्मा प्राणमयः। तेनैष पूर्णः। स वा एष पुरुषविध एव। तस्य पुरुषविधताम्। अन्वयं पुरुषविधः। तस्य प्राण एव शिरः। व्यानो दक्षिणः पक्षः। अपान उत्तरः पक्षः। आकाश आत्मा। पृथिवी पुच्छं प्रितिष्ठा। तदप्येष श्लोको भवति॥

தஸ்மாத்$_3$வா ஏதஸ்மாத$_3$ன்னரஸமயாத்। அந்யோऽந்தர ஆத்மா ப்ராணமய:। தேநைஷ பூர்ண:। ஸ வா ஏஷ புருஷவித$_4$ ஏவ। தஸ்ய புருஷவித$_4$தாம்। அந்வயம் புருஷவித$_4$:। தஸ்ய ப்ராண ஏவ சி$_1$ர:। வ்யானோ த$_3$க்ஷிண: பக்ஷ:। அபான உத்தர: பக்ஷ:। ஆகாச$_1$ ஆத்மா। ப்ருதி$_2$வீ புச்ச$_2$ம் ப்ரதிஷ்டா$_2$। தத$_3$ப்யேஷ ச்$_1$லோகோ ப$_4$வதி ॥

तस्मात् वै एतस्मात् अन्नरसमयात् தஸ்மாத் வை ஏதஸ்மாத் அன்னரஸமயாத் முன் சொல்லப்பட்ட அந்த அன்னமயத்திலிருந்து **अन्यः** அந்ய: வேறாகவும் **अन्तरः** அந்தர: உள்ளேயும் உள்ள **आत्मा** ஆத்மா ஆத்மா **प्राणमयः** ப்ராணமய: ப்ராணமயன். **तेन** தேன அதனால் (அந்த ப்ராணமயத்தினால்) **एषः** ஏஷ: இவன் (இந்த அன்னமயன்) **पूर्णः** பூர்ண: வ்யாபிக்கப்பட்டுள்ளான். **सः वै एषः** ஸ: வை ஏஷ: அந்த இந்த (ப்ராணமயன்) **पुरुषविधः एव** புருஷவித$_4$: ஏவ மனித உடலைப் போன்றவன். **तस्य** தஸ்ய அதனுடைய (அந்த அன்னமயனுடைய) **पुरुषविधतां अनु** புருஷவித$_4$தாம் அனு உடலமைப்பை ஒட்டி **अयं** அயம் இவன் (இந்த ப்ராணமயனின்)

पुरुषविधः புருஷவித$_4$: உடல்வடிவம் அமைகிறது. **तस्य** தஸ்ய அவனுக்கு (அந்த ப்ராணமயனுக்கு) **प्राणः एव** ப்ராண: ஏவ ப்ராணனே **शिरः** சி$_1$ர: தலைப்பாகம். **व्यानः** வ்யான: வ்யானன் **दक्षिणः पक्षः** த$_3$க்ஷிண: பக்ஷ: வலதுபாகம். **अपानः** அபான: அபானன் **उत्तरः पक्षः** உத்தர: பக்ஷ: இடதுபாகம். **आकाशः** ஆகாச$_1$: ஸமானன் **आत्मा** ஆத்மா நடுப்பாகம். **पृथिवी** ப்ருதி$_2$வீ உதானன் **पुच्छं प्रतिष्ठा** புச்ச$_2$ம் ப்ரதிஷ்டா$_2$ வாலைப் போல தாங்கும் பாகம். **तत् अपि** தத் அபி இந்த விஷயத்தில் **एषः श्लोकः भवति** ஏஷ: ச்$_1$லோக: ப$_4$வதி பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது.

முன் சொல்லப்பட்ட அந்த அன்னமயத்திலிருந்து வேறாகவும் உள்ளேயும் உள்ள ஆத்மா ப்ராணமயன். அந்த ப்ராணமயத்தினால் இந்த அன்னமயன் வ்யாபிக்கப்பட்டுள்ளான். அந்த இந்த ப்ராணமயன் மனித உடலைப் போன்றவன். அந்த அன்னமயனுடைய உடலமைப்பை ஒட்டி இந்த ப்ராணமயனின் உடல்வடிவம் அமைகிறது. அந்த ப்ராணமயனுக்கு ப்ராணனே தலைப்பாகம். வ்யானன் வலது பாகம். அபானன் இடதுபாகம். ஸமானன் நடுப்பாகம். உதானன் வாலைப்போல தாங்கும் பாகம். இந்த விஷயத்தில் பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது:

३. प्राणं देवा अनुप्राणन्ति। मनुष्याः पशवश्च ये। प्राणो हि भूतानामायुः। तस्मात्सर्वायुषमुच्यते। सर्वमेव त आयुर्यन्ति। ये प्राणं ब्रह्मोपासते। प्राणो हि भूतानामायुः। तस्मात्सर्वायुषमुच्यत इति। तस्यैष एव शारीर आत्मा। यः पूर्वस्य।

3. ப்ராணம் தே$_3$வா அனுப்ராணந்தி। மனுஷ்யா: பச$_1$வச்$_1$ச யே। ப்ராணோ ஹி பூ$_4$தானாமாயு:। தஸ்மாத்ஸர்வாயுஷமுச்யதே। ஸர்வமேவ த ஆயுர்யந்தி। யே ப்ராணம் ப்$_3$ரஹ்மோபாஸதே। ப்ராணோ ஹி பூ$_4$தானாமாயு:। தஸ்மாத்ஸர்வாயுஷமுச்யத இதி। தஸ்யைஷ ஏவ சா$_1$ரீர ஆத்மா। ய: பூர்வஸ்ய।

ये च देवाः யே ச தே₃வா: எல்லா தேவர்களும் **मनुष्याः** மனுஷ்யா: மனிதர்களும் **पशवः** பஶ₁வ: மிருகங்களும் **प्राणं** ப்ராணம் ப்ராணனை **अनुप्राणन्ति** அனுப்ராணந்தி சார்ந்து வாழ்கின்றன. **भूतानां** பூ₄தானாம் உயிரினங்களுக்கு **प्राणः हि** ப்ராண: ஹி ப்ராணன் **आयुः** ஆயு: ஆயுள் ஆகிறது. **तस्मात्** தஸ்மாத் ஆகவே **सर्व-आयुषं** ஸர்வ-ஆயுஷம் (ப்ராணன்) அனைவருக்கும் ஆயுளாக **उच्यते** உச்யதே சொல்லப் படுகிறது. **ये** யே எவர்கள் **प्राणं** ப்ராணம் ப்ராணனை **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மனாக **उपासते** உபாஸதே த்யானிக்கிறார்களோ **ते** தே அவர்கள் **सर्वं एव आयुः** ஸர்வம் ஏவ ஆயு: முழு ஆயுளையும் **यन्ति** யந்தி அடைகிறார்கள். **भूतानां** பூ₄தானாம் உயிரினங்களுக்கு **प्राणः हि** ப்ராண: ஹி ப்ராணன் **आयुः** ஆயு: ஆயுள் ஆகிறது. **तस्मात्** தஸ்மாத் ஆகவே (ப்ராணன்) **सर्व-आयुषं** ஸர்வ-ஆயுஷம் அனைவருக்கும் ஆயுளாக **उच्यते** உச்யதே சொல்லப்படுகிறது. **इति** இதி இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது. **पूर्वस्य** பூர்வஸ்ய முன் சொன்ன **तस्य** தஸ்ய அதற்கு (அன்னமயத்திற்கு) **यः** ய: யார் **शारीरः आत्मा** சா₁ரீர: ஆத்மா உள்ளே உள்ள ஆத்மாவாக இருக்கிறானோ **एषः एव** ஏஷ: ஏவ அவனே (இந்த ப்ராணமயன்).

எல்லா தேவர்களும் மனிதர்களும் மிருகங்களும் ப்ராணனைச் சார்ந்து வாழ்கின்றன. உயிரினங்களுக்கு ப்ராணன் ஆயுள் ஆகிறது. ஆகவே ப்ராணன் அனைவருக்கும் ஆயுளாக சொல்லப் படுகிறது. எவர்கள் ப்ராணனை ப்ரஹ்மனாக த்யானிக்கிறார்களோ அவர்கள் முழு ஆயுளையும் அடைகிறார்கள். உயிரினங்களுக்கு ப்ராணன் ஆயுள் ஆகிறது. ஆகவே ப்ராணன் அனைவருக்கும் ஆயுளாக சொல்லப்படுகிறது. இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது. முன் சொன்ன அன்னமயத்திற்கு யார் உள்ளே உள்ள ஆத்மாவாக இருக்கிறானோ, அவனே இந்த ப்ராணமயன்.

तस्माद्वा एतस्मात् प्राणमयात्। अन्योऽन्तर आत्मा मनोमयः। तेनैष पूर्णः। स वा एष पुरुषविध एव। तस्य पुरुषविधताम्। अन्वयं पुरुषविधः। तस्य यजुरेव शिरः। ऋग्दक्षिणः पक्षः।

सामोत्तरः पक्षः। आदेश आत्मा। अथर्वाङ्गिरसः पुच्छं प्रतिष्ठा। तदप्येष श्लोको भवति ॥

தஸ்மாத்$_3$வா ஏதஸ்மாத் ப்ராணமயாத்। அந்யோऽந்தர ஆத்மா மனோமய:। தேனைஷ பூர்ண:। ஸ வா ஏஷ புருஷவித$_4$ ஏவ। தஸ்ய புருஷவித$_4$தாம்। அந்வயம் புருஷவித$_4$:। தஸ்ய யஜுரேவ சி$_1$ர:। ரிக்$_3$த$_3$க்ஷிண: பக்ஷ:। ஸாமோத்தர: பக்ஷ:। ஆதே$_3$ச$_1$ ஆத்மா। அத$_2$ர்வாங்கி$_3$ரஸ: புச்ச$_2$ம் ப்ரதிஷ்டா$_2$। தத$_3$ப்யேஷ ச்$_1$லோகோ ப$_4$வதி ॥

तस्मात् वै एतस्मात् प्राणमयात् தஸ்மாத் வை ஏதஸ்மாத் ப்ராணமயாத் முன் சொல்லப்பட்ட அந்த ப்ராணமயத்திலிருந்து **अन्यः** அந்ய: வேறாகவும் **अन्तरः** அந்தர: உள்ளேயும் உள்ள **आत्मा** ஆத்மா ஆத்மா **मनोमयः** மனோமய: மனோமயன். **तेन** தேன அதனால் (அந்த மனோமயத்தினால்) **एषः** ஏஷ: இவன் (இந்த ப்ராணமயன்) **पूर्णः** பூர்ண: வ்யாபிக்கப்பட்டுள்ளான். **सः वै एषः** ஸ: வை ஏஷ: அந்த இந்த (மனோமயன்) **पुरुषविधः एव** புருஷவித$_4$: ஏவ மனித உடலைப் போன்றவன். **तस्य** தஸ்ய அந்த (ப்ராணமயனுடைய) **पुरुषविधतां अनु** புருஷவித$_4$தாம் அனு உடலமைப்பை ஒட்டி **अयं** அயம் இவன் (இந்த மனோமயனின்) **पुरुषविधः** புருஷவித$_4$: உடல்வடிவம் அமைகிறது. **तस्य** தஸ்ய அவனுக்கு (அந்த மனோமயனுக்கு) **यजुः एव** யஜு: ஏவ யஜுர்வேதமே **शिरः** சி$_1$ர: தலைப்பாகம். **ऋक्** ரிக் ரிக்வேதம் **दक्षिणः पक्षः** த$_3$க்ஷிண: பக்ஷ: வலது பாகம். **साम** ஸாம ஸாமவேதம் **उत्तरः पक्षः** உத்தர: பக்ஷ: இடது பாகம். **आदेशः** ஆதே$_3$ச$_1$: வேதவிதி **आत्मा** ஆத்மா நடுப்பாகம். **अथर्वाङ्गिरसः** அத$_2$ர்வாங்கி$_3$ரஸ: அதர்வண வேதம் **पुच्छं प्रतिष्ठा** புச்ச$_2$ம் ப்ரதிஷ்டா$_2$ வாலைப்போல தாங்கும் பாகம். **तत् अपि** தத் அபி இந்த விஷயத்தில் **एषः श्लोकः भवति** ஏஷ: ச்$_1$லோக: ப$_4$வதி பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது.

முன் சொல்லப்பட்ட அந்த ப்ராணமயத்திலிருந்து வேறாகவும் உள்ளேயும் உள்ள ஆத்மா மனோமயன். அந்த

மனோமயத்தினால் இந்த ப்ராணமயன் வ்யாபிக்கப் பட்டுள்ளான். அந்த இந்த மனோமயன் மனித உடலைப் போன்றவன். அந்த ப்ராணமயனுடைய உடலமைப்பை ஒட்டி இந்த மனோமயனின் உடல்வடிவம் அமைகிறது. அந்த மனோமயனுக்கு யஜுர்வேதமே தலைப்பாகம். ரிக்வேதம் வலது பாகம். ஸாமவேதம் இடது பாகம். வேதவிதி நடுப்பாகம். அதர்வண வேதம் வாலைப்போல தாங்கும் பாகம். இந்த விஷயத்தில் பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது:

**४. यतो वाचो निवर्तन्ते। अप्राप्य मनसा सह। आनन्दं ब्रह्मणो विद्वान्।
न बिभेति कदाचनेति। तस्यैष एव शारीर आत्मा। यः पूर्वस्य।**

4. யதோ வாசோ நிவர்தந்தே । அப்ராப்ய மனஸா ஸஹ । ஆன
ந்த$_3$ம் ப்$_3$ரஹ்மணோ வித்$_3$வான் । ந பி$_3$பே$_4$தி கதா$_3$சனேதி ।
தஸ்யைஷ ஏவ சா$_1$ரீர ஆத்மா । ய: பூர்வஸ்ய ।

यतः யத: எவரிடமிருந்து **मनसा सह** மனஸா ஸஹ மனதுடன் **वाचः** வாச: சொற்கள் **अप्राप्य** அப்ராப்ய அடையமுடியாமல் **निवर्तन्ते** நிவர்தந்தே திரும்புகின்றனவோ (அவரே ஸமஷ்டி மனமான ஹிரண்யகர்பர்). **ब्रह्मणः** ப்$_3$ரஹ்மண: ஹிரண்யகர்பருடைய **आनन्दं** ஆனந்த$_3$ம் ஆனந்தஸ்வரூபத்தை **विद्वान्** வித்$_3$வான் த்யானிப்பவன் **कदाचन** கதா$_3$சன எப்பொழுதும் **न बिभेति** ந பி$_3$பே$_4$தி பயப்படு வதில்லை. **इति** இதி இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது. **पूर्वस्य** பூர்வஸ்ய முன் சொன்ன **तस्य** தஸ்ய அதற்கு (ப்ராணமயத்திற்கு) **यः** ய: யார் **शारीरः आत्मा** சா$_1$ரீர: ஆத்மா உள்ளே உள்ள ஆத்மாவாக இருக்கின்றானோ **एषः एव** ஏஷ: ஏவ அவனே (இந்த மனோமயன்).

எவரிடமிருந்து மனதுடன் சொற்கள் அடையமுடியாமல் திரும்புகின்றனவோ அவரே ஸமஷ்டி மனமான ஹிரண்யகர்பர். ஹிரண்யகர்பருடைய ஆனந்தஸ்வரூபத்தை த்யானிப்பவன் எப்பொழுதும் பயப்படுவதில்லை. இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது. முன் சொன்ன ப்ராணமயத்திற்கு யார் உள்ளே உள்ள ஆத்மாவாக இருக்கின்றானோ அவனே இந்த மனோமயன்.

तस्माद्वा एतस्मान्मनोमयात्। अन्योऽन्तर आत्मा विज्ञानमयः। तेनैष पूर्णः। स वा एष पुरुषविध एव। तस्य पुरुषविधताम्। अन्वयं पुरुषविधः। तस्य श्रद्धैव शिरः। ऋतं दक्षिणः पक्षः। सत्यमुत्तरः पक्षः। योग आत्मा। महः पुच्छं प्रतिष्ठा। तदप्येष श्लोको भवति॥

தஸ்மாத்$_3$வா ஏதஸ்மாந்மனோமயாத்। அந்யோऽந்தர ஆத்மா விஞானமய:। தேனைஷ பூர்ண:। ஸ வா ஏஷ புருஷவித$_4$ ஏவ। தஸ்ய புருஷவித$_4$தாம்। அந்வயம் புருஷவித$_4$:। தஸ்ய ச்$_1$ரத்$_3$தை$_4$வ சி$_1$ர:। ரிதம் த$_3$க்ஷிண: பக்ஷ:। ஸத்யமுத்தர: பக்ஷ:। யோக$_3$ ஆத்மா। மஹ: புச்ச$_2$ம் ப்ரதிஷ்டா$_2$। தத$_3$ப்யேஷ ச்$_1$லோகோ ப$_4$வதி॥

तस्मात् वै एतस्मात् मनोमयात् தஸ்மாத் வை ஏதஸ்மாத் மனோமயாத் முன் சொல்லப்பட்ட அந்த மனோமயத்திலிருந்து **अन्यः** அன்ய: வேறாகவும் **अन्तरः** அந்தர: உள்ளேயும் உள்ள **आत्मा** ஆத்மா ஆத்மா **विज्ञानमयः** விஞானமய: விஞானமயன். **तेन** தேன அதனால் (அந்த விஞானமயத்தினால்) **एषः** ஏஷ: இவன் (இந்த மனோமயன்) **पूर्णः** பூர்ண: வ்யாபிக்கப்பட்டுள்ளான். **सः वै एषः** ஸ: வை ஏஷ: அந்த இந்த (விஞானமயன்) **पुरुषविधः एव** புருஷவித$_4$: ஏவ மனித உடலைப் போன்றவன். **तस्य** தஸ்ய அவனுடைய (அந்த மனோ மயனுடைய) **पुरुषविधतां अनु** புருஷவித$_4$தாம் அனு உடலமைப்பை ஒட்டி **अयं** அயம் இவன் (இந்த விஞானமயனின்) **पुरुषविधः** புருஷவித$_4$: உடல்வடிவம் அமைகிறது. **तस्य** தஸ்ய அவனுக்கு (அந்த விஞானமயனுக்கு) **श्रद्धा एव** ச்$_1$ரத்$_3$தா$_4$ ஏவ ச்ரத்தையே **शिरः** சி$_1$ர: தலைப்பாகம். **ऋतं** ரிதம் சரியான அறிவு **दक्षिणः पक्षः** த$_3$க்ஷிண: பக்ஷ: வலது பாகம். **सत्यं** ஸத்யம் வாய்மை **उत्तरः पक्षः** உத்தர: பக்ஷ: இடதுபாகம். **योगः** யோக$_3$: மனஒருமுகப்பாடு **आत्मा** ஆத்மா நடுப்பாகம். **महः** மஹ: ஹிரண்யகர்பர் **पुच्छं प्रतिष्ठा** புச்ச$_2$ம் ப்ரதிஷ்டா$_2$ வாலைப்போல தாங்கும் பாகம். **तत् अपि** தத் அபி இந்த விஷயத்தில் **एषः श्लोकः भवति** ஏஷ: ச்$_1$லோக: ப$_4$வதி பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது.

முன் சொல்லப்பட்ட அந்த மனோமயத்திலிருந்து வேறாகவும் உள்ளேயும் உள்ள ஆத்மா விஞானமயன். அந்த விஞானமயத்தினால் இந்த மனோமயன் வ்யாபிக்கப் பட்டுள்ளான். அந்த இந்த விஞானமயன் மனித உடலைப் போன்றவன். அந்த மனோமயனுடைய உடலமைப்பை ஒட்டி இந்த விஞானமயனின் உடல் வடிவம் அமைகிறது. அந்த விஞானமயனுக்கு ச்ரத்தையே தலைப்பாகம். சரியான அறிவு வலது பாகம். வாய்மை இடது பாகம். மனஒருமுகப்பாடு நடுப்பாகம். ஹிரண்யகர்பர் வாலைப்போல தாங்கும் பாகம். இந்த விஷயத்தில் பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது:

௫. विज्ञानं यज्ञं तनुते। कर्माणि तनुतेऽपि च। विज्ञानं देवाः सर्वे। ब्रह्म ज्येष्ठमुपासते। विज्ञानं ब्रह्म चेद्वेद। तस्माच्चेन्न प्रमाद्यति। शरीरे पाप्मनो हित्वा। सर्वान् कामान् समश्नुत इति। तस्यैष एव शारीर आत्मा। यः पूर्वस्य।

5. விஞானம் யஞம் தனுதே । கர்மாணி தனுதேऽபி ச । விஞானம் தே3வா: ஸர்வே । ப்3ரஹ்ம ஜ்யேஷ்ட2முபாஸதே । விஞானம் ப்3ரஹ்ம சேத்3வேத3 । தஸ்மாச்சேந்ந ப்ரமாத்3யதி । ச1ரீரே பாப் மனோ ஹித்வா । ஸர்வான் காமான் ஸமச்1னுத இதி । தஸ் யைஷ ஏவ சா1ரீர ஆத்மா । ய: பூர்வஸ்ய ।

विज्ञानं விஞானம் விஞானமயன் **यज्ञं** யஞம் யாகங்களை **तनुते** தனுதே செய்கிறான். **कर्माणि अपि च** கர்மாணி அபி ச மற்ற செயல்களையும் **तनुते** தனுதே செய்கிறான். **सर्वे देवाः** ஸர்வே தே3வா: எல்லா தேவர்களும் **ज्येष्ठं** ஜ்யேஷ்ட2ம் முக்யமாகவும் முதன்மையாகவும் உள்ள **विज्ञानं** விஞானம் விஞானமயத்தை **ब्रह्म** ப்3ரஹ்ம ப்ரஹ்மனாக **उपासते** உபாஸதே த்யானிக்கிறார்கள். **विज्ञानं** விஞானம் விஞான மயத்தை **ब्रह्म** ப்3ரஹ்ம ப்ரஹ்மனாக **वेद चेत्** வேத3 சேத் ஒருவன் த்யானித்து **तस्मात्** தஸ்மாத் அதிலிருந்து (அந்த த்யானத்திலிருந்து) **न प्रमाद्यति चेत्** ந ப்ரமாத்3யதி சேத் (அவன்) நழுவவில்லை என்றால் (அவன்)

शरीरे पाप्मनः ச₁ரீரே பாப்மன: உடலைச் சார்ந்த பாபங்களை **हित्वा** ஹித்வா விடுத்து **सर्वान् कामान्** ஸர்வான் காமான் அனைத்து இன்பங்களையும் **समश्नुते** ஸமச்₁னுதே அடைகிறான். **इति** இதி இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது. **पूर्वस्य** பூர்வஸ்ய முன் சொன்ன **तस्य** தஸ்ய அதற்கு (மனோமயத்திற்கு) **यः** ய: யார் **शारीरः आत्मा** சா₁ரீர: ஆத்மா உள்ளே உள்ள ஆத்மாவாக இருக்கிறானோ **एषः एव** ஏஷ: ஏவ அவனே (இந்த விஞானமயன்).

விஞானமயன் யாகங்களைச் செய்கிறான். மற்ற செயல்களையும் செய்கிறான். எல்லா தேவர்களும் முக்யமாகவும் முதன்மையாகவும் உள்ள விஞானமயத்தை ப்ரஹ்மனாக த்யானிக்கிறார்கள். விஞானமயத்தை ப்ரஹ்மனாக ஒருவன் த்யானித்து, அந்த த்யானத்திலிருந்து அவன் நழுவவில்லை என்றால் அவன் உடலைச் சார்ந்த பாபங்களை விடுத்து அனைத்து இன்பங்களையும் அடைகிறான். இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது. முன் சொன்ன மனோமயத்திற்கு யார் உள்ளே உள்ள ஆத்மாவாக இருக்கிறானோ அவனே இந்த விஞானமயன்.

तस्माद्वा एतस्माद्विज्ञानमयात्। अन्योऽन्तर आत्माऽऽनन्दमयः। तेनैष पूर्णः। स वा एष पुरुषविध एव। तस्य पुरुषविधताम्। अन्वयं पुरुषविधः। तस्य प्रियमेव शिरः। मोदो दक्षिणः पक्षः। प्रमोद उत्तरः पक्षः। आनन्द आत्मा। ब्रह्म पुच्छं प्रतिष्ठा। तदप्येष श्लोको भवति ॥

தஸ்மாத்₃வா ஏதஸ்மாத்₃விஞானமயாத் । அந்யோऽந்தர ஆத்மாऽऽனந்த₃மய: । தேனைஷ பூர்ண: । ஸ வா ஏஷ புருஷ வித₄ ஏவ । தஸ்ய புருஷவித₄தாம் । அந்வயம் புருஷவித₄: । தஸ்ய ப்ரியமேவ சி₁ர: । மோதோ₃ த₃க்ஷிண: பக்ஷ: । ப்ர மோத₃ உத்தர: பக்ஷ: । ஆனந்த₃ ஆத்மா । ப்₃ரஹ்ம புச்ச₂ம் ப்ரதிஷ்டா₂ । தத₃ப்யேஷ ச்₁லோகோ ப₄வதி ॥

तस्मात् वै एतस्मात् विज्ञानमयात् தஸ்மாத் வை ஏதஸ்மாத் விஞானமயாத் முன் சொல்லப்பட்ட அந்த விஞானமயத்திலிருந்து **अन्यः** அந்ய: வேறாகவும் **अन्तरः** அந்தர: உள்ளேயும் உள்ள **आत्मा** ஆத்மா ஆத்மா **आनन्दमयः** ஆனந்த₃மய: ஆனந்தமயன். **तेन** தேன அதனால் (அந்த ஆனந்தமயத்தினால்) **एषः** ஏஷ: இவன் (இந்த விஞானமயன்) **पूर्णः** பூர்ண: வ்யாபிக்கப்பட்டுள்ளான். **सः वै एषः** ஸ: வை ஏஷ: அந்த இந்த (ஆனந்தமயன்) **पुरुषविधः एव** புருஷவித₄: ஏவ மனித உடலைப் போன்றவன். **तस्य** தஸ்ய அவனுடைய (அந்த விஞான மயனுடைய) **पुरुषविधतां अनु** புருஷவித₄தாம் அனு உடலமைப்பை ஒட்டி **अयं** அயம் இவன் (இந்த ஆனந்தமயனின்) **पुरुषविधः** புருஷவித₄: உடல் வடிவம் அமைகிறது. **तस्य** தஸ்ய அவனுக்கு (ஆனந்தமயனுக்கு) **प्रियं एव** ப்ரியம் ஏவ ப்ரியமே **शिरः** சி₁ர: தலைப்பாகம். **मोदः** மோத₃: மோதம் **दक्षिणः पक्षः** த₃க்ஷிண: பக்ஷ: வலது பாகம். **प्रमोदः** ப்ரமோத₃: ப்ரமோதம் **उत्तरः पक्षः** உத்தர: பக்ஷ: இடது பாகம். **आनन्दः** ஆனந்த₃: ஆனந்தம் **आत्मा** ஆத்மா நடுப்பாகம். **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மன் **पुच्छं प्रतिष्ठा** புச்ச₂ம் ப்ரதிஷ்டா₂ வாலைப் போல தாங்கும் பாகம். **तत् अपि** தத் அபி இந்த விஷயத்தில் **एषः श्लोकः भवति** ஏஷ: ச்₁லோக: ப₄வதி பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது.

முன் சொல்லப்பட்ட அந்த விஞானமயத்திலிருந்து வேறாகவும் உள்ளேயும் உள்ள ஆத்மா ஆனந்தமயன். அந்த ஆனந்தமயத்தினால் இந்த விஞானமயன் வ்யாபிக்கப் பட்டுள்ளான். அந்த இந்த ஆனந்தமயன் மனித உடலைப் போன்றவன். அந்த விஞானமயனுடைய உடலமைப்பை ஒட்டி இந்த ஆனந்தமயனின் உடல்வடிவம் அமைகிறது. அந்த ஆனந்தமயனுக்கு ப்ரியமே தலைப்பாகம். மோதம் வலது பாகம். ப்ரமோதம் இடது பாகம். ஆனந்தம் நடுப்பாகம். ப்ரஹ்மன் வாலைப்போல தாங்கும் பாகம். இந்த விஷயத்தில் பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது:

விரும்பிய பொருளைப் பார்க்கும் பொழுது கிடைக்கும் இன்பம் பிரியம் எனவும் அப்பொருளை அடையும் பொழுது கிடைக்கும்

இன்பம் மோதம் எனவும் அப்பொருளை அனுபவிக்கும் பொழுது கிடைக்கும் இன்பம் ப்ரமோதம் எனவும் கூறப்படுகிறது. அனாத்ம இன்பத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் இவை.

६. असन्नेव स भवति। असद् ब्रह्मेति वेद चेत्। अस्ति ब्रह्मेति चेद्वेद। सन्तमेनं ततो विदुरिति। तस्यैष एव शारीर आत्मा। यः पूर्वस्य।

6. அஸந்நேவ ஸ ப$_4$வதி। அஸத்$_3$ ப்$_3$ரஹ்மேதி வேத$_3$ சேத்। அஸ்தி ப்$_3$ரஹ்மேதி சேத்$_3$வேத$_3$। ஸந்தமேனம் ததோ விது$_3$ரிதி। தஸ்யைஷ ஏவ சா$_1$ரீர ஆத்மா। ய: பூர்வஸ்ய।

ब्रह्म ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன் **असत्** அஸத் இல்லை **इति** இதி என்று **वेद चेत्** வேத$_3$ சேத் ஒருவன் கருதினால் **सः एव** ஸ: ஏவ அவனே **असत् भवति** அஸத் ப$_4$வதி இல்லாதவன் (போல்) ஆகிறான். **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன் **अस्ति** அஸ்தி இருக்கிறது **इति वेद चेत्** இதி வேத$_3$ சேத் (என்று ஒருவன்) கருதினால் **ततः** தத: அவ்வாறு கருதுவதனால் **एनं** ஏனம் அவனை **सन्तं** ஸந்தம் இருப்பவனாகவும் (மேலோனாகவும்) **विदुः** விது$_3$: கருதுகிறார்கள். **इति** இதி இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது. **पूर्वस्य** பூர்வஸ்ய முன் சொன்ன **तस्य** தஸ்ய அவனுக்கு (விஞானமயத்திற்கு) **यः** ய: யார் **शारीरः आत्मा** சா$_1$ரீர: ஆத்மா உள்ளே உள்ள ஆத்மாவாக இருக்கின்றானோ **एषः एव** ஏஷ: ஏவ அவனே (இந்த ஆனந்தமயன்).

ப்ரஹ்மன் இல்லை என்று ஒருவன் கருதினால் அவனே இல்லாதவன் போல் ஆகிறான். ப்ரஹ்மன் இருக்கிறது என்று ஒருவன் கருதினால் அவ்வாறு கருதுவதனால் அவனை இருப்பவனாகவும் மேலோனாகவும் கருதுகிறார்கள். இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது. முன் சொன்ன விஞானமயத்திற்கு யார் உள்ளே உள்ள ஆத்மாவாக இருக்கின்றானோ அவனே இந்த ஆனந்தமயன்.

**अथातोऽनुप्रश्नाः। उताविद्वानमुं लोकं प्रेत्य। कश्चन गच्छती ३।
आहो विद्वानमुं लोकं प्रेत्य। कश्चित्समश्नुता ३ उ।**

அதா$_2$தோऽனுப்ரச்$_1$னா: । உதாவித்$_3$வானமும் லோகம் ப்ரேத்ய ।
கச்$_1$சன க$_3$ச்ச$_2$தீ 3 । ஆஹோ வித்$_3$வானமும் லோகம் ப்ரேத்ய ।
கச்$_1$சித்ஸமச்$_1$னுதா 3 உ ।।

अथ அத$_2$ (ஆசிரியருடைய உபதேசத்திற்குப்) பிறகு **अतः** அத: அதனால் (மாணவனுக்கு ஸந்தேகம் இருப்பதனால்) **अनुप्रश्नाः** அனுப்ரச்$_1$னா: உபதேசத்தை ஒட்டிய கேள்விகள் (எழுகின்றன). **कश्चन** கச்$_1$சன எந்த ஒரு **अविद्वान्** அவித்$_3$வான் அஞானி **अमुं लोकं** அமும் லோகம் இவ்வுலகை **प्रेत्य** ப்ரேத்ய விட்டுச் சென்றபின் (ப்ரஹ்மனை) **गच्छति** க$_3$ச்ச$_2$தி அடைகிறானா **उत** உத இல்லையா **कश्चित्** கச்$_1$சித் எந்த ஒரு **विद्वान्** வித்$_3$வான் ஞானி **अमुं लोकं** அமும் லோகம் இவ்வுலகை **प्रेत्य** ப்ரேத்ய விட்டுச் சென்றபின் (ப்ரஹ்மனை) **समश्नुते** ஸமச்$_1$னுதே அடைகிறானா **आहो उ** ஆஹோ உ இல்லையா.

ஆசிரியருடைய உபதேசத்திற்குப் பிறகு மாணவனுக்கு ஸந்தேஹம் இருப்பதனால் உபதேசத்தை ஒட்டிய கேள்விகள் எழுகின்றன. எந்த ஒரு அஞானி இவ்வுலகை விட்டுச் சென்றபின் ப்ரஹ்மனை அடைகிறானா? இல்லையா? எந்த ஒரு ஞானி இவ்வுலகை விட்டுச் சென்றபின் ப்ரஹ்மனை அடைகிறானா? இல்லையா?

सोऽकामयत। बहुस्यां प्रजायेयेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा। इदँ सर्वमसृजत। यदिदं किञ्च। तत्सृष्ट्वा। तदेवानुप्राविशत्। तदनुप्रविश्य। सच्चत्यच्चाभवत्। निरुक्तं चानिरुक्तं च। निलयनं चानिलयनं च। विज्ञानं चाविज्ञानं च। सत्यं चानृतं च सत्यमभवत्। यदिदं किञ्च। तत्सत्यमित्याचक्षते। तदप्येष श्लोको भवति।।

ஸோऽகாமயத । ப$_3$ஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி । ஸ தபோऽத
ப்யத । ஸ தபஸ்தப்த்வா । இத$_3$ம் ஸர்வமஸ்ருஜத । யதி$_3$த$_3$ம்
கிஞ்ச । தத்ஸ்ருஷ்ட்வா । ததே$_3$வானுப்ராவிச$_1$த் । தத$_3$னுப்ர
விச்$_1$ய । ஸச்சத்யச்சாப$_4$வத் । நிருக்தம் சாநிருக்தம் ச । நில
யனம் சாநிலயனம் ச । விஞானம் சாவிஞானம் ச । ஸத்யம்
சாந்ருதம் ச ஸத்யமப$_4$வத் । யதி$_3$த$_3$ம் கிஞ்ச । தத்ஸத்யமித்யா
சக்ஷதே । தத$_3$ப்யேஷ ச்$_1$லோகோ ப$_4$வதி ।।

प्रजायेय ப்ரஜாயேய (நான்) பிறப்பேனாக **बहु** ப$_3$ஹு பலவாக **स्यां** ஸ்யாம் ஆவேனாக **इति** இதி என்று **सः** ஸ: அவன் (அந்த ஈச்வரன்) **अकामयत** அகாமயத ஆசைகொண்டார். **सः** ஸ: அவர் **तपः** தப: தவத்தை **अतप्यत** அதப்யத செய்தார். **सः** ஸ: அவர் **तपः** தப: தவத்தை **तप्त्वा** தப்த்வா செய்து **यत् इदं किञ्च** யத் இத$_3$ம் கிஞ்ச இங்கு எவை உண்டோ **इदं सर्वं** இத$_3$ம் ஸர்வம் அவை அனைத்தையும் **असृजत** அஸ்ருஜத படைத்தார். **तत्** தத் அவற்றை **सृष्ट्वा** ஸ்ருஷ்ட்வா படைத்து **तत् एव** தத் ஏவ அதிலேயே **अनुप्राविशत्** அனுப்ராவிச$_1$த் நுழைந்தார். **तत्** தத் அதில் **अनुप्रविश्य** அனுப்ரவிச்$_1$ய நுழைந்து (அந்த ப்ரஹ்மன்) **सत् च** ஸத் ச ஸ்தூலமாகவும் **त्यत् च** த்யத் ச ஸூக்ஷ்மமாகவும் **अभवत्** அப$_4$வத் ஆனார். **निरुक्तं च** நிருக்தம் ச விளக்கக் கூடியதாகவும் **अनिरुक्तं च** அநிருக்தம் ச விளக்க முடியாததாகவும் **निलयनं च** நிலயனம் ச தாங்குவதாகவும் **अनिलयनं च** அநிலயனம் ச தாங்கப்படுவதாகவும் **विज्ञानं च** விஞானம் ச அறிவுடையதாகவும் **अविज्ञानं च** அவிஞானம் ச அறிவற்றதாகவும் **सत्यं च** ஸத்யம் ச உண்மையானதாகவும் **अनृतं च** அன்ருதம் ச பொய்யானதாகவும் (ஆனார்). **सत्यं** ஸத்யம் ஸத்யமான (ப்ரஹ்மனே) **यत् इदं किञ्च** யத் இத$_3$ம் கிஞ்ச இவையனைத்துமாக **अभवत्** அப$_4$வத் ஆனது. **तत्** தத் ஆகவே (ப்ரஹ்மனை) **सत्यं** ஸத்யம் ஸத்யம் **इति** இதி என்று **आचक्षते** ஆசக்ஷதே (சாஸ்த்ரங்கள்) கூறுகின்றன. **तत् अपि** தத் அபி இந்த விஷயத்தில் **एषः श्लोकः भवति** ஏஷ: ச்$_1$லோக: ப$_4$வதி பின் வரும் ரிக் மந்த்ரம் உள்ளது.

நான் பிறப்பேனாக, பலவாக ஆவேனாக என்று அந்த ஈச்வரன் ஆசைகொண்டார். அவர் தவத்தைச் செய்தார். அவர் தவத்தைச் செய்து இங்கு எவை உண்டோ அவையனைத்தையும் படைத்தார். அவற்றைப் படைத்து அதிலேயே நுழைந்தார். அதில் நுழைந்து அந்த ப்ரஹ்மன் ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவும் ஆனார். விளக்கக்கூடியதாகவும் விளக்க முடியாததாகவும் தாங்குவதாகவும் தாங்கப்படுவதாகவும் அறிவுடையதாகவும் அறிவற்றதாகவும் உண்மையானதாகவும் பொய்யானதாகவும் ஆனார். ஸத்யமான ப்ரஹ்மனே இவையனைத்துமாக ஆனது. ஆகவே ப்ரஹ்மனை ஸத்யம் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. இந்த விஷயத்தில் பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது:

௭. असद्वा इदमग्र आसीत्। ततो वै सदजायत। तदात्मानँस्वयमकुरुत। तस्मात्तत्सुकृतमुच्यत इति। यद्वै तत्सुकृतम्। रसो वै सः। रसँह्येवायं लब्ध्वानन्दी भवति। को ह्येवान्यात् कः प्राण्यात्। यदेष आकाश आनन्दो न स्यात्। एष ह्येवानन्दयाति।

7. அஸத்₃வா இத₃மக்₃ர ஆஸீத் । ததோ வை ஸத₃ஜாயத । ததா₃த்மானம்ஸ்வயமகுருத । தஸ்மாத்தத்ஸுக்ருதமுச்யத இதி । யத்₃வை தத்ஸுக்ருதம் । ரஸோ வை ஸ: । ரஸம்ஹ்யேவாயம் லப்₃த்₄வானந்தீ₃ ப₄வதி । கோ ஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத் । யதே₃ஷ ஆகாச₁ ஆனந்தோ₃ ந ஸ்யாத் । ஏஷ ஹ்யேவானந்த₃யாதி ।

अग्रे அக்₃ரே (ஸ்ருஷ்டிக்கு) முன் **इदं** இத₃ம் இது (உலகம்) **असत् वै** அஸத் வை வெளித்தோற்றத்துக்கு வராத ப்ரஹ்மனாக **आसीत्** ஆஸீத் இருந்தது. **ततः वै** தத: வை அப்படிப்பட்ட (ப்ரஹ்மனிடமிருந்து) **सत्** ஸத் வெளித்தோற்றத்துக்கு வந்த (இந்த உலகம்) **अजायत** அஜாயத தோன்றியது. **तत्** தத் அது (அந்த ப்ரஹ்மன்) **आत्मानं** ஆத்மானம் தன்னை **स्वयं** ஸ்வயம் தானே **अकुरुत** அகுருத தோற்றுவித்தார். **तस्मात्** தஸ்மாத் ஆகவே **तत्** தத் அது (அந்த

ப்ரஹ்மன்) सुकृतं ஸுக்ருதம் தானே தோற்றுவிப்பவர் என்று उच्यते உச்யதே சொல்லப்படுகிறது. इति இதி இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது. यत् वै तत् யத் வை தத் எந்த ஒன்று सुकृतं ஸுக்ருதம் தானே தோற்றுவிப்பதாக உள்ளதோ सः ஸ: அவர் रसः वै ரஸ: வை ஆனந்த ஸ்வரூபம். रसं हि ரஸம் ஹி ஆனந்த ஸ்வரூபத்தை अयं அயம் ஒருவன் लब्ध्वा एव லப்$_3$த்$_4$வா ஏவ அடைந்து आनन्दी भवति ஆனந்தீ$_3$ ப$_4$வதி மகிழ்ந்திருக்கிறான். आकाशे ஆகாசே$_1$ ஹ்ருதய ஆகாசத்திற்குள் यत् एषः யத் ஏஷ: எந்த இந்த आनन्दः ஆனந்த$_3$: ப்ரஹ்மன் न स्यात् ந ஸ்யாத் இல்லையென்றால் कः हि एव க: ஹி ஏவ யார்தான் अन्यात् அன்யாத் மூச்சையிழுப்பான். कः க: யார்தான் प्राण्यात् ப்ராண்யாத் மூச்சை விடுவான். एषः हि एव ஏஷ: ஹி ஏவ இவரே (இந்த ப்ரஹ்மனே அனைவரையும்) आनन्दयाति ஆனந்த$_3$யாதி மகிழ்விக்கிறது.

ஸ்ருஷ்டிக்கு முன் இந்த உலகம் வெளித்தோற்றத்துக்கு வராத ப்ரஹ்மனாக இருந்தது. அப்படிப்பட்ட ப்ரஹ்மனிடமிருந்து வெளித்தோற்றத்துக்கு வந்த இந்த உலகம் தோன்றியது. அந்த ப்ரஹ்மன் தன்னைத்தானே தோற்றுவித்தார். ஆகவே அந்த ப்ரஹ்மன் தானே தோற்றுவிப்பவர் என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது. எந்த ஒன்று தானே தோற்றுவிப்பதாக உள்ளதோ அவர் ஆனந்த ஸ்வரூபம். ஆனந்த ஸ்வரூபத்தை ஒருவன் அடைந்து மகிழ்ந்திருக்கிறான். ஹ்ருதய ஆகாசத்திற்குள் எந்த இந்த ப்ரஹ்மன் இல்லையென்றால் யார்தான் மூச்சையிழுப்பான். யார்தான் மூச்சை விடுவான். இந்த ப்ரஹ்மனே அனைவரையும் மகிழ்விக்கிறது.

यदा ह्येवैष एतस्मिन्नदृश्येऽनात्म्येऽनिरुक्तेऽनिलयनेऽभयं प्रतिष्ठां विन्दते। अथ सोऽभयं गतो भवति। यदा ह्येवैष एतस्मिन्नुदरमन्तरं कुरुते। अथ तस्य भयं भवति। तत्त्वेव भयं विदुषोऽमन्वानस्य। तदप्येष श्लोको भवति॥

யதா$_3$ ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நத்$_3$ருச்$_1$யேऽனாத்ம்யேऽநிருக்தேऽநிலயனேऽப$_4$யம் ப்ரதிஷ்டா$_2$ம் விந்த$_3$தே । அத$_2$ ஸோऽப$_4$யம் க$_3$தோ ப$_4$வதி । யதா$_3$ ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நுத$_3$ரமந்தரம் குருதே । அத$_2$ தஸ்ய ப$_4$யம் ப$_4$வதி । தத்த்வேவ ப$_4$யம் விது$_3$ஷோऽமன்வானஸ்ய । தத$_3$ப்யேஷ ச்$_1$லோகோ ப$_4$வதி ॥

अदृश्ये அத்$_3$ருச்$_1$யே பார்க்க முடியாத **अनात्म्ये** அனாத்ம்யே உடலற்ற **अनिरुक्ते** அநிருக்தே விளக்க முடியாத **अनिलयने** அநிலயனே சார்பற்ற **एतस्मिन्** ஏதஸ்மின் இதனிடத்தில் (இந்த ப்ரஹ்மனிடத்தில்) **यदा हि एव** யதா$_3$ ஹி ஏவ எப்பொழுது **एषः** ஏஷ: இவன் (இந்த ஞானி) **अभयं** அப$_4$யம் உறுதியான **प्रतिष्ठां** ப்ரதிஷ்டா$_2$ம் நிலையை **विन्दते** விந்த$_3$தே அடைகிறானோ **अथ** அத$_2$ அப்பொழுது **सः** ஸ: அவன் **अभयं गतः** அப$_4$யம் க$_3$த: பயத்திலிருந்து நீங்கியவன் **भवति** ப$_4$வதி ஆகிறான். **यदा हि एव** யதா$_3$ ஹி ஏவ எப்பொழுது **एषः** ஏஷ: இவன் (இந்த அஞானி) **एतस्मिन्** ஏதஸ்மின் இதில் (இந்த ப்ரஹ்மனில்) **उदरं अन्तरं** உத$_3$ரம் அந்தரம் சிறிய வேற்றுமையை **कुरुते** குருதே பார்க்கிறானோ **अथ** அத$_2$ அப்பொழுது **तस्य** தஸ்ய அவனுக்கு **भयं** ப$_4$யம் பயம் **भवति** ப$_4$வதி ஏற்படுகிறது. **विदुषः** விது$_3$ஷ: கற்றிருந்தும் **अमन्वानस्य** அமன்வானஸ்ய (ப்ரஹ்ம) ஞானத்தை அடையாதவனுக்கு **तत् तु एव** தத் து ஏவ அதுவே (அந்த ப்ரஹ்மனே) **भयं** ப$_4$யம் பயத்திற்குக் காரணமாகிறது. **तत् अपि** தத் அபி இந்த விஷயத்தில் **एषः श्लोकः भवति** ஏஷ: ச்$_1$லோக: ப$_4$வதி பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது.

பார்க்க முடியாத, உடலற்ற, விளக்க முடியாத, சார்பற்ற இந்த ப்ரஹ்மனிடத்தில் எப்பொழுது இந்த ஞானி உறுதியான நிலையை அடைகிறானோ அப்பொழுது அவன் பயத்திலிருந்து நீங்கியவன் ஆகிறான். எப்பொழுது இந்த அஞானி இந்த ப்ரஹ்மனில் சிறிய வேற்றுமையைப் பார்க்கிறானோ அப்பொழுது அவனுக்கு பயம் ஏற்படுகிறது. கற்றிருந்தும் ப்ரஹ்ம ஞானத்தை அடையாதவனுக்கு அந்த ப்ரஹ்மனே பயத்திற்குக் காரணமாகிறது. இந்த விஷயத்தில் பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது:

८. भीषाऽस्माद्वातः पवते। भीषोदेति सूर्यः। भीषाऽस्मादग्निश्चेन्द्रश्च। मृत्युर्धावति पञ्चम इति। सैषानन्दस्य मीमाँसा भवति। युवा स्यात्साधु युवाध्यायकः। आशिष्ठो द्रढिष्ठो बलिष्ठः। तस्येयं पृथिवी सर्वा वित्तस्य पूर्णा स्यात्। स एको मानुष आनन्दः।

8. பீ4ஷாऽஸ்மாத்3வாத: பவதே। பீ4ஷோதே3தி ஸூர்ய:। பீ4ஷாऽஸ்மாத3க்3னிச்1சேந்த்3ரச்1ச। ம்ருத்யுர்தா4வதி பஞ்சம இதி। ஸைஷானந்த3ஸ்ய மீமாம்ஸா ப4வதி। யுவா ஸ்யாத்ஸாது4 யுவாத்4யாயக:। ஆசி1ஷ்டோ2 த்3ருடி4ஷ்டோ2 ப3லிஷ்ட2:। தஸ்யேயம் ப்ருதி2வீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணா ஸ்யாத் । ஸ ஏகோ மானுஷ ஆனந்த3:।

अस्मात् அஸ்மாத் இதனிடமிருந்து (இந்த ப்ரஹ்மனிடமிருந்து) உண்டான **भीषा** பீ4ஷா பயத்தினால் **वातः** வாத: காற்று **पवते** பவதே வீசுகிறது. **भीषा** பீ4ஷா பயத்தினால் **सूर्यः** ஸூர்ய: ஸூர்யன் **उदेति** உதே3தி உதிக்கிறது. **अस्मात्** அஸ்மாத் இதனிடமிருந்து (இந்த ப்ரஹ்மனிடமிருந்து) உண்டான **भीषा** பீ4ஷா பயத்தினால் **अग्निः च** அக்3னி: ச அக்னி (எரிகிறது). **इन्द्रः च** இந்த்3ர: ச இந்த்ரன் (தன் செயலைச் செய்கிறார்). **पञ्चमः** பஞ்சம: ஐந்தாவதாக (இங்கு கூறிய) **मृत्युः** ம்ருத்யு: யமதேவர் **धावति** தா4வதி தன் செயலில் ஈடுபடுகிறார். **इति** இதி இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது. **सा एषा** ஸா ஏஷா கீழ்க்கண்ட பகுதி **आनन्दस्य** ஆனந்த3ஸ்ய ஆனந்தத்தைப் பற்றிய **मीमांसा** மீமாம்ஸா விசாரம் **भवति** ப4வதி ஆகும். **युवा** யுவா இளம் பருவத்தையுடைய **साधु** ஸாது4 நன்னெறியைப் பின்பற்றுகின்ற **अध्यायकः** அத்4யாயக: சாஸ்த்ரங்களைப் படித்த **आशिष्ठः** ஆசி1ஷ்ட2: விரைவில் செயல்படும் திறனுடைய **द्रढिष्ठः** த்3ருடி4ஷ்ட2: உறுதியான உள்ளமுடைய **बलिष्ठः** ப3லிஷ்ட2: உடல் வலுவுடைய **युवा स्यात्** யுவா ஸ்யாத் ஒரு இளைஞன் இருப்பதாக (கற்பனை செய்வோம்). **तस्य** தஸ்ய அவனுக்கு **वित्तस्य पूर्णा** வித்தஸ்ய பூர்ணா செழிப்பால் நிறைந்த **इयं सर्वा पृथिवी** இயம் ஸர்வா ப்ருதி2வீ இந்த முழு பூமி **स्यात्** ஸ்யாத்

இருப்பதாக (கற்பனை செய்வோம்). (அப்படிப்பட்ட அவன் அடையும் ஆனந்தம்) **मानुषः** மானுஷ: மனிதனுடைய **सः एकः आनन्दः** ஸ: ஏக: ஆனந்த₃: ஒரு பங்கு ஆனந்தமாகும்.

இந்த ப்ரஹ்மனிடமிருந்து உண்டான பயத்தினால் காற்று வீசுகிறது. பயத்தினால் ஸூர்யன் உதிக்கிறது. இந்த ப்ரஹ்மனிடமிருந்து உண்டான பயத்தினால் அக்னி எரிகிறது. இந்த்ரன் தன் செயலைச் செய்கிறார். ஐந்தாவதாக, இங்கு கூறிய யமதேவர் தன் செயலில் ஈடுபடுகிறார். இவ்விதம் ரிக்மந்த்ரம் முடிவடைகிறது. கீழ்க்கண்ட பகுதி ஆனந்தத்தைப் பற்றிய விசாரமாகும். இளம் பருவத்தையுடைய, நன்னெறியைப் பின் பற்றுகின்ற, சாஸ்த்ரங்களைப் படித்த, விரைவில் செயல்படும் திறனுடைய, உறுதியான உள்ளமுடைய, உடல் வலுவுடைய ஒரு இளைஞன் இருப்பதாகக் கற்பனை செய்வோம். அவனுக்கு செழிப்பால் நிறைந்த இந்த முழு பூமி இருப்பதாகக் கற்பனை செய்வோம். அப்படிப்பட்ட அவன் அடையும் ஆனந்தம் மனிதனுடைய ஒரு பங்கு ஆனந்தமாகும்.

ते ये शतं मानुषा आनन्दाः। स एको मनुष्यगन्धर्वाणामानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतं मनुष्यगन्धर्वाणामानन्दाः। स एको देवगन्धर्वाणामानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतं देवगन्धर्वाणामानन्दाः। स एकः पितृणां चिरलोकलोकाना-मानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतं पितृणां चिरलोक-लोकानामानन्दाः। स एक आजानजानां देवानामानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतमाजानजानां देवानामानन्दाः। स एकः कर्मदेवानां देवानामानन्दः। ये कर्मणा देवानपियन्ति। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतं कर्मदेवानां देवानामानन्दाः। स एको देवानामानन्दः। श्रोत्रियस्य चाका महतस्य। ते ये शतं देवानामानन्दाः। स एक इन्द्रस्यानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतमिन्द्रस्यानन्दाः। स एको बृहस्पतेरानन्दः। श्रोत्रि यस्य चाकामहतस्य। ते ये शतं बृहस्पतेरानन्दाः। स एकः प्रजापते

रानन्दाः। स एकः प्रजापतेरानन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य। ते ये शतं प्रजापतेरानन्दाः। स एको ब्रह्मण आनन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य।

தே யே ச$_1$தம் மானுஷா ஆனந்தா$_3$: । ஸ ஏகோ மனுஷ்யக$_3$ந்த$_4$ர்வாணாமானந்த$_3$: । ச்$_1$ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தே யே ச$_1$தம் மனுஷ்யக$_3$ந்த$_4$ர்வாணாமானந்தா$_3$: । ஸ ஏகோ தே$_3$வக$_3$ந்த$_4$ர்வாணாமானந்த$_3$: । ச்$_1$ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தே யே ச$_1$தம் தே$_3$வக$_3$ந்த$_4$ர்வாணாமானந்தா$_3$: । ஸ ஏக: பித்ருணாம் சிரலோகலோகானாமானந்த$_3$: । ச்$_1$ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தே யே ச$_1$தம் பித்ருணாம் சிரலோகலோகானாமானந்தா$_3$: । ஸ ஏக ஆஜானஜானாம் தே$_3$வானாமானந்த$_3$: । ச்$_1$ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தே யே ச$_1$தமாஜானஜானாம் தே$_3$வானாமானந்தா$_3$: । ஸ ஏக: கர்மதே$_3$வானாம் தே$_3$வானாமானந்த$_3$: । யே கர்மணா தே$_3$வானபியந்தி । ச்$_1$ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தே யே ச$_1$தம் கர்மதே$_3$வானாம் தே$_3$வானாமானந்தா$_3$: । ஸ ஏகோ தே$_3$வானாமானந்த$_3$: । ச்$_1$ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தே யே ச$_1$தம் தே$_3$வானாமானந்தா$_3$: । ஸ ஏக இந்த்$_3$ரஸ்யானந்த$_3$: । ச்$_1$ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தே யே ச$_1$தமிந்த்$_3$ரஸ்யானந்தா$_3$: । ஸ ஏகோ ப்$_3$ருஹஸ்பதேரானந்த$_3$: । ச்$_1$ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தே யே ச$_1$தம் ப்$_3$ருஹஸ்பதேரானந்தா$_3$: । ஸ ஏக: ப்ரஜாபதேரானந்த$_3$: । ச்$_1$ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய । தே யே ச$_1$தம் ப்ரஜாபதேரானந்தா$_3$: । ஸ ஏகோ ப்$_3$ரஹ்மண ஆனந்த$_3$: । ச்$_1$ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய ।

मानुषाः மானுஷா: மனிதனுடைய **शतं आनन्दाः** ச$_1$தம் ஆனந்தா$_3$: நூறு பங்கு ஆனந்தங்கள் **ये** யே எவையோ **ते** தே அவை **मनुष्यगन्धर्वाणां** மனுஷ்யக$_3$ந்த$_4$ர்வாணாம் மனித கந்தர்வர்களுடைய **सः एकः आनन्दः** ஸ: ஏக: ஆனந்த$_3$: ஒரு பங்கு ஆனந்தம். **श्रोत्रियस्य** ச்$_1$ரோத்ரியஸ்ய (இதே அளவு ஆனந்தம்) சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து **अकामहतस्य च**

அகாமஹதஸ்ய ச (மனித லோகத்தில்) வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. **मनुष्यगन्धर्वाणां** மனுஷ்யக₃ந்த₄ர்வாணாம் மனித கந்தர்வர்களுடைய **शतं आनन्दाः** ச₁தம் ஆனந்தா₃: நூறு பங்கு ஆனந்தங்கள் **ये** யே எவையோ **ते** தே அவை **देवगन्धर्वाणां** தே₃வக₃ந்த₄ர்வாணாம் தேவகந்தர்வர்களுடைய **सः एकः आनन्दः** ஸ: ஏக: ஆனந்த₃: ஒரு பங்கு ஆனந்தம். **श्रोत्रियस्य** ச்₁ரோத்ரியஸ்ய (இதே அளவு ஆனந்தம்) சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து **अकामहतस्य च** அகாமஹதஸ்ய ச (மனித கந்தர்வ ஆனந்தத்தில்) வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. **देवगन्धर्वाणां** தே₃வக₃ந்த₄ர்வாணாம் தேவகந்தர்வர்களுடைய **शतं आनन्दाः** ச₁தம் ஆனந்தா₃: நூறு பங்கு ஆனந்தங்கள் **ये** யே எவையோ **ते** தே அவை **चिरलोकलोकानां** சிரலோகலோகானாம் சிரலோகத்தில் வசிக்கின்ற **पितृणां** பித்ருணாம் பித்ருக்களினுடைய **सः एकः आनन्दः** ஸ: ஏக: ஆனந்த₃: ஒரு பங்கு ஆனந்தம். **श्रोत्रियस्य** ச்₁ரோத்ரியஸ்ய (இதே அளவு ஆனந்தம்) சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து **अकामहतस्य च** அகாமஹதஸ்ய ச (தேவகந்தர்வ ஆனந்தத்தில்) வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. **चिरलोकलोकानां** சிரலோகலோகானாம் சிரலோகத்தில் வசிக்கின்ற **पितृणां** பித்ருணாம் பித்ருக்களுடைய **शतं आनन्दाः** ச₁தம் ஆனந்தா₃: நூறு பங்கு ஆனந்தங்கள் **ये** யே எவையோ **ते** தே அவை **आजानजानां** ஆஜானஜானாம் தேவலோகத்தில் பிறந்த **देवानां** தே₃வானாம் தேவர்களுடைய **सः एकः आनन्दः** ஸ: ஏக: ஆனந்த₃: ஒரு பங்கு ஆனந்தம். **श्रोत्रियस्य** ச்₁ரோத்ரியஸ்ய (இதே அளவு ஆனந்தம்) சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து **अकामहतस्य च** அகாமஹதஸ்ய ச (சிரலோக பித்ருக்களின் ஆனந்தத்தில்) வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. **आजानजानां** ஆஜானஜானாம் தேவலோகத்தில் பிறந்த **देवानां** தே₃வானாம் தேவர்களுடைய **शतं आनन्दाः** ச₁தம் ஆனந்தா₃: நூறு பங்கு ஆனந்தங்கள் **ये** யே எவையோ **ते** தே அவை **ये** யே எவர்கள் **कर्मणा** கர்மணா கர்மத்தால் **देवान्** தே₃வான் தேவபதவியை **अपियन्ति** அபியந்தி அடைந்தார்களோ **कर्मदेवानां देवानां** கர்மதே₃வானாம் தே₃வானாம் அந்த கர்ம தேவர்

श्रोत्रियस्य ச$_1$ரோத்ரியஸ்ய (இதே அளவு ஆனந்தம்) சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து अकामहतस्य च அகாமஹதஸ்ய ச (தேவலோகத்தில் பிறந்த தேவர்களின் ஆனந்தத்தில்) வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. कर्मदेवानां देवानां கர்மதே$_3$வானாம் தே$_3$வானாம் கர்மதேவர் களுடைய शतं आनन्दाः ச$_1$தம் ஆனந்தா$_3$: நூறு பங்கு ஆனந்தங்கள் ये யே எவையோ ते தே அவை देवानां தே$_3$வானாம் தேவர்களுடைய सः एकः आनन्दः ஸ: ஏக: ஆனந்த$_3$: ஒரு பங்கு ஆனந்தம். श्रोत्रियस्य ச$_1$ரோத்ரியஸ்ய (இதே அளவு ஆனந்தம்) சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து अकामहतस्य च அகாமஹதஸ்ய ச (கர்மதேவர்களின் ஆனந்தத்தில்) வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. देवानां தே$_3$வானாம் தேவர்களுடைய शतं आनन्दाः ச$_1$தம் ஆனந்தா$_3$: நூறு பங்கு ஆனந்தங்கள் ये யே எவையோ ते தே அவை इन्द्रस्य இந்த்$_3$ரஸ்ய இந்த்ரனுடைய सः एकः आनन्दः ஸ: ஏக: ஆனந்த$_3$: ஒரு பங்கு ஆனந்தம். श्रोत्रियस्य ச$_1$ரோத்ரியஸ்ய (இதே அளவு ஆனந்தம்) சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து अकामहतस्य च அகாமஹதஸ்ய ச (தேவர்களின் ஆனந்தத்தில்) வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. इन्द्रस्य இந்த்$_3$ரஸ்ய இந்த்ரனுடைய शतं आनन्दाः ச$_1$தம் ஆனந்தா$_3$: நூறு பங்கு ஆனந்தங்கள் ये யே எவையோ ते தே அவை बृहस्पतेः ப்$_3$ருஹஸ்பதே: ப்ருஹஸ்பதியினுடைய सः एकः आनन्दः ஸ: ஏக: ஆனந்த$_3$: ஒரு பங்கு ஆனந்தம். श्रोत्रियस्य ச$_1$ரோத்ரியஸ்ய (இதே அளவு ஆனந்தம்) சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து अकामहतस्य च அகாமஹதஸ்ய ச (இந்த்ரனுடைய ஆனந்தத்தில்) வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. बृहस्पतेः ப்$_3$ருஹஸ்பதே: ப்ருஹஸ்பதி யினுடைய शतं आनन्दाः ச$_1$தம் ஆனந்தா$_3$: நூறு பங்கு ஆனந்தங்கள் ये யே எவையோ ते தே அவை प्रजापतेः ப்ரஜாபதே: ப்ரஜாபதி யினுடைய सः एकः आनन्दः ஸ: ஏக: ஆனந்த$_3$: ஒரு பங்கு ஆனந்தம் श्रोत्रियस्य ச$_1$ரோத்ரியஸ்ய (இதே அளவு ஆனந்தம்) சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து अकामहतस्य च அகாமஹதஸ்ய ச (ப்ருஹஸ்பதியினுடைய ஆனந்தத்தில்) வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. प्रजापतेः ப்ரஜாபதே: ப்ரஜாபதியினுடைய शतं आनन्दाः ச$_1$தம்

प्रजापते: ப்ரஜாபதே: ப்ரஜாபதியினுடைய **शतं आनन्दा:** ச$_1$தம் ஆனந்தா$_3$: நூறு பங்கு ஆனந்தங்கள் **ये** யே எவையோ **ते** தே அவை **ब्रह्मण:** ப்$_3$ரஹ்மண: ஹிரண்யகர்பருடைய **स: एक: आनन्द:** ஸ: ஏக: ஆனந்த$_3$: ஒரு பங்கு ஆனந்தம் **श्रोत्रियस्य** ச்$_1$ரோத்ரியஸ்ய (இதே அளவு ஆனந்தம்) சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து **अकामहतस्य च** அகாமஹதஸ்ய ச (ப்ரஜாபதியினுடைய ஆனந்தத்தில்) வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது.

மனிதனுடைய நூறு பங்கு ஆனந்தங்கள் எவையோ அவை மனித கந்தர்வர்களுடைய ஒரு பங்கு ஆனந்தம். இதே அளவு ஆனந்தம் சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து மனித லோகத்தில் வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. மனித கந்தர்வர் களுடைய நூறு பங்கு ஆனந்தங்கள் எவையோ அவை தேவ கந்தர்வர்களுடைய ஒரு பங்கு ஆனந்தம். இதே அளவு ஆனந்தம் சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து மனித கந்தர்வ ஆனந் தத்தில் வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. தேவகந்தர் வர்களுடைய நூறு பங்கு ஆனந்தங்கள் எவையோ அவை சிரலோகத்தில் வசிக்கின்ற பித்ருக்களுடைய ஒரு பங்கு ஆனந்தம். இதே அளவு ஆனந்தம் சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து தேவ கந்தர்வ ஆனந்தத்தில் வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. சிரலோகத்தில் வசிக்கின்ற பித்ருக்களுடைய நூறு பங்கு ஆனந்தங்கள் எவையோ அவை தேவலோகத்தில் பிறந்த தேவர்களுடைய ஒரு பங்கு ஆனந்தம். இதே அளவு ஆனந்தம் சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து சிரலோக பித்ருக்களின் ஆனந்தத்தில் வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. தேவலோகத்தில் பிறந்த தேவர்களுடைய நூறு பங்கு ஆனந்தங்கள் எவையோ அவை எவர்கள் கர்மத்தால் தேவபதவியை அடைந்தார்களோ அந்த கர்மதேவர்களுடைய ஒரு பங்கு ஆனந்தம். இதே அளவு ஆனந்தம் சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து தேவலோகத்தில் பிறந்த தேவர்களின் ஆனந்தத்தில் வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. கர்மதேவர்களுடைய நூறு பங்கு ஆனந்தங்கள் எவையோ அவை தேவர்களுடைய ஒரு பங்கு ஆனந்தம். இதே

அளவு ஆனந்தம் சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து கர்மதேவர்களின் ஆனந்தத்தில் வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. தேவர்களுடைய நூறு பங்கு ஆனந்தங்கள் எவையோ அவை இந்த்ரனுடைய ஒரு பங்கு ஆனந்தம். இதே அளவு ஆனந்தம் சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து தேவர்களின் ஆனந்தத்தில் வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. இந்த்ரனுடைய நூறு பங்கு ஆனந்தங்கள் எவையோ அவை ப்ருஹஸ்பதியினுடைய ஒரு பங்கு ஆனந்தம். இதே அளவு ஆனந்தம் சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து இந்த்ரனுடைய ஆனந்தத்தில் வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. ப்ருஹஸ்பதியினுடைய நூறு பங்கு ஆனந்தங்கள் எவையோ அவை ப்ரஜாபதியினுடைய ஒரு பங்கு ஆனந்தம். இதே அளவு ஆனந்தம் சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து ப்ருஹஸ்பதியினுடைய ஆனந்தத்தில் வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது. ப்ரஜாபதியினுடைய நூறு பங்கு ஆனந்தங்கள் எவையோ அவை ஹிரண்யகர்பருடைய ஒரு பங்கு ஆனந்தம். இதே அளவு ஆனந்தம் சாஸ்த்ரங்களைக் கற்றறிந்து ப்ரஜாபதியினுடைய ஆனந்தத்தில் வைராக்யத்தை உடையவனுக்கும் உள்ளது.

स यश्चायं पुरुषे। यश्चासावादित्ये। स एकः। स य एवंवित्। अस्माल्लोकात्प्रेत्य। एतमन्नमयमात्मानमुपसङ्क्रामति। एतं प्राणमयमात्मानमुपसङ्क्रामति। एतं मनोमयमात्मानमुपसङ्क्रामति। एतं विज्ञानमयमात्मानमुपसङ्क्रामति। एतमानन्दमयमात्मानमुपसङ्क्रामति। तदप्येष श्लोको भवति॥

ஸ யச்$_1$சாயம் புருஷே। யச்$_1$சாஸாவாதி$_3$த்யே। ஸ ஏக:। ஸ ய ஏவம்வித்। அஸ்மால்லோகாத்ப்ரேத்ய। ஏதமன்னமயமாத்மானமுபஸங்க்ராமதி। ஏதம் ப்ராணமயமாத்மானமுபஸங்க்ராமதி। ஏதம் மனோமயமாத்மானமுபஸங்க்ராமதி। ஏதம் விஞானமயமாத்மானமுபஸங்க்ராமதி। ஏதமானந்த$_3$மயமாத்மானமுபஸங்க்ராமதி। தத$_3$ப்யேஷ ச்$_1$லோகோ ப$_4$வதி॥

यः च सः ய: ச ஸ: எந்த ஒரு **अयं** அயம் இது (ஆனந்தம்) **पुरुषे** புருஷே மனிதனிடத்தில் உண்டோ (அந்த ஆனந்தமும்) **यः च असौ** ய: ச அஸௌ எந்த ஒரு (ஆனந்தம்) **आदित्ये** ஆதி₃த்யே ஹிரண்ய கர்பரிடம் உண்டோ **सः एकः** ஸ: ஏக: (அந்த ஆனந்தமும்) ஒன்றே. **यः** ய: யார் **एवं विद्** ஏவம் வித்₃ இவ்விதம் அறிகிறானோ **सः** ஸ: அவன் **अस्मात् लोकात्** அஸ்மாத் லோகாத் இந்த லோகத்திலிருந்து **प्रेत्य** ப்ரேத்ய விடுபட்டு **एतं** ஏதம் இந்த **अन्नमयं** அன்னமயம் அன்னமயமாக உள்ள **आत्मानं** ஆத்மானம் ஆத்மாவை **उपसङ्क्रामति** உபஸங்க்ராமதி கடந்து செல்கிறான். **एतं प्राणमयं आत्मानं** ஏதம் ப்ராணமயம் ஆத்மானம் இந்த ப்ராணமயமாக உள்ள ஆத்மாவை **उपसङ्क्रामति** உபஸங்க்ராமதி கடந்து செல்கிறான். **एतं मनोमयं आत्मानं** ஏதம் மனோமயம் ஆத்மானம் இந்த மனோமயமாக உள்ள ஆத்மாவை **उपसङ्क्रामति** உபஸங்க்ராமதி கடந்து செல்கிறான். **एतं विज्ञानमयं आत्मानं** ஏதம் விஞானமயம் ஆத்மானம் இந்த விஞானமயமாக உள்ள ஆத்மாவை **उपसङ्क्रामति** உபஸங்க்ராமதி கடந்து செல்கிறான். **एतं आनन्दमयं आत्मानं** ஏதம் ஆனந்த₃மயம் ஆத்மானம் இந்த ஆனந்தமயமாக உள்ள ஆத்மாவை **उपसङ्क्रामति** உபஸங்க்ராமதி கடந்து செல்கிறான். **तत् अपि** தத் அபி இந்த விஷயத்தில் **एषः श्लोकः भवति** ஏஷ: ச்₁லோக: ப₄வதி பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது.

எந்த ஒரு ஆனந்தம் மனிதனிடத்தில் உண்டோ அந்த ஆனந்தமும், எந்த ஒரு ஆனந்தம் ஹிரண்யகர்பரிடம் உண்டோ அந்த ஆனந்தமும் ஒன்றே. யார் இவ்விதம் அறிகிறானோ அவன் இந்த லோகத்திலிருந்து விடுபட்டு இந்த அன்னமயமாக உள்ள ஆத்மாவைக் கடந்து செல்கிறான். இந்த ப்ராணமயமாக உள்ள ஆத்மாவைக் கடந்து செல்கிறான். இந்த மனோமயமாக உள்ள ஆத்மாவைக் கடந்து செல்கிறான். இந்த விஞானமயமாக உள்ள ஆத்மாவைக் கடந்து செல்கிறான். இந்த ஆனந்தமயமாக உள்ள ஆத்மாவைக் கடந்து செல்கிறான். இந்த விஷயத்தில் பின்வரும் ரிக் மந்த்ரம் உள்ளது:

९. यतो वाचो निवर्तन्ते । अप्राप्य मनसा सह । आनन्दं ब्रह्मणो विद्वान् । न बिभेति कुतश्चनेति ।

9. யதோ வாசோ நிவர்தந்தே । அப்ராப்ய மனஸா ஸஹ । ஆனந்த$_3$ம் ப்$_3$ரஹ்மணோ வித்$_3$வான் । ந பி$_3$பே$_4$தி குதச்$_1$சனேதி ।

यतः யத: எதனிடமிருந்து **मनसा सह** மனஸா ஸஹ மனதுடன் **वाचः** வாச: சொற்கள் **अप्राप्य** அப்ராப்ய அடைய முடியாமல் **निवर्तन्ते** நிவர்தந்தே திரும்புகின்றனவோ **ब्रह्मणः** ப்$_3$ரஹ்மண: (அந்த) ப்ரஹ்மனுடைய **आनन्दं** ஆனந்த$_3$ம் ஆனந்தஸ்வரூபத்தை **विद्वान्** வித்$_3$வான் (தன் ஸ்வரூபமாக) அறிபவன் **कुतश्चन** குதச்$_1$சன எதனாலும் **न बिभेति** ந பி$_3$பே$_4$தி பயப்படுவதில்லை. **इति** இதி இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது.

எதனிடமிருந்து மனதுடன் சொற்கள் அடைய முடியாமல் திரும்புகின்றனவோ அந்த ப்ரஹ்மனுடைய ஆனந்தஸ்வரூபத்தைத் தன் ஸ்வரூபமாக அறிபவன் எதனாலும் பயப்படுவதில்லை. இவ்விதம் ரிக் மந்த்ரம் முடிவடைகிறது.

एतँह वाव न तपति। किमहँसाधु नाकरवम्। किमहं पापमकरवमिति। स य एवं विद्वानेते आत्मानँस्पृणुते। उभे ह्येवैष एते आत्मानँस्पृणुते। य एवं वेद। इत्युपनिषत्।।

ஏதம்ஹ வாவ ந தபதி । கிமஹம்ஸாது$_4$ நாகரவம் । கிமஹம் பாபமகரவமிதி । ஸ ய ஏவம் வித்$_3$வானேதே ஆத்மானம் ஸ்ப்ருணுதே । உபே$_4$ ஹ்யேவைஷ ஏதே ஆத்மானம்ஸ்ப்ருணுதே । ய ஏவம் வேத$_3$ । இத்யுபநிஷத் ।।

अहं அஹம் நான் **किं** கிம் ஏன் **साधु** ஸாது$_4$ நல்லதை **न अकरवं** ந அகரவம் செய்யவில்லை **अहं** அஹம் நான் **किं** கிம் ஏன் **पापं** பாபம் பாபத்தை **अकरवं** அகரவம் செய்தேன் **इति** இதி இவ்விதமான (எண்ணங்கள்) **एतं ह** ஏதம் ஹ இவனை (இந்த ஞானியை) **न वाव तपति** ந வாவ தபதி வாட்டாது. **यः** ய: யார் **एते** ஏதே (பாப புண்யமான)

இவ்விரண்டையும் **आत्मानं** ஆத்மானம் தானாக **एवं विद्वान्** ஏவம் வித்$_3$வான் அறிகின்றானோ **सः** ஸ: அவன் (தன்னை) **स्पृणुते** ஸ்ப்ருணுதே வலிமைப்படுத்திக் கொள்கிறான். **यः हि** ய: ஹி யார் **एते उभे एव** ஏதே உபே$_4$ ஏவ இவ்விரண்டையும் **आत्मानं** ஆத்மானம் தானாக **एवं वेद** ஏவம் வேத$_3$ அறிகிறானோ **एषः** ஏஷ: அவன் (தன்னை) **स्पृणुते** ஸ்ப்ருணுதே வலிமைப்படுத்திக் கொள்கிறான். **इति** இதி இவ்விதம் **उपनिषत्** உபநிஷத் உபநிஷத் (முடிவடைகிறது).

நான் ஏன் நல்லதைச் செய்யவில்லை? நான் ஏன் பாபத்தைச் செய்தேன்? இவ்விதமான எண்ணங்கள் இந்த ஞானியை வாட்டாது. யார் பாப புண்யமான இவ்விரண்டையும் தானாக அறிகின்றானோ அவன் தன்னை வலிமைப்படுத்திக் கொள்கிறான். யார் இவ்விரண்டையும் தானாக அறிகிறானோ அவன் தன்னை வலிமைப்படுத்திக் கொள்கிறான். இவ்விதம் உபநிஷத் முடிவடைகிறது.

इति ब्रह्मनन्दवल्ली

ப்ரஹ்மானந்தவல்லி முடிவுற்றது.

भृगुवल्ली

ப்$_4$ருகு$_3$வல்லீ

शान्तिपाठः

சா$_1$ந்திபாட$_2$:

स ह नाववतु। स ह नौ भुनक्तु। सह वीर्यं करवावहै।
तेजस्विनावधीतमस्तु मा विद्विषावहै।
ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

ஸ ஹ நாவவது। ஸ ஹ நௌ பு$_4$நக்து। ஸஹ வீர்யம் கரவாவஹை। தேஜஸ்விநாவதீ$_4$தமஸ்து மா வித்$_3$விஷா வஹை। ஓம் சா$_1$ந்தி: சா$_1$ந்தி: சா$_1$ந்தி: ॥

सः ஸ: அவன் (அந்த இறைவன்) **नौ ह** நௌ ஹ (குரு சிஷ்யர்களாகிய) எங்கள் இருவரையும் **अवतु** அவது காப்பாற்றட்டும். **सः** ஸ: அவன் (அந்த இறைவன்) **नौ ह** நௌ ஹ எங்கள் இருவரையும் **भुनक्तु** பு$_4$நக்து காப்பாற்றட்டும். **वीर्यं** வீர்யம் (எங்களுக்குரிய) முயற்சியை **सह** ஸஹ (நாங்கள் இருவரும்) சேர்ந்து **करवावहै** கரவாவஹை செய்வோமாக. **नौ अधीतं** நௌ அதீ$_4$தம் எங்கள் படிப்பு **तेजस्वि** தேஜஸ்வி ஒளிபொருந்தியதாக **अस्तु** அஸ்து இருக்கட்டும். **मा विद्विषावहै** மா வித்$_3$விஷாவஹை (நாங்கள் ஒருவரையொருவர்) வெறுக்காமல் இருப்போமாக. **ओं शान्तिः** ஓம் சா$_1$ந்தி: ஓம் சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி.

அந்த இறைவன் குரு சிஷ்யர்களாகிய எங்கள் இருவரையும் காப்பாற்றட்டும். அந்த இறைவன் எங்கள் இருவரையும் காப்பாற்றட்டும். எங்களுக்குரிய முயற்சியை நாங்கள் இருவரும் சேர்ந்து செய்வோமாக. எங்கள் படிப்பு ஒளிபொருந்தியதாக இருக்கட்டும். நாங்கள் ஒருவரையொருவர் வெறுக்காமல் இருப்போமாக. ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

१. भृगुर्वै वारुणिः। वरुणं पितरमुपससार। अधीहि भगवो ब्रह्मेति। तस्मा एतत् प्रोवाच। अन्नं प्राणं चक्षुश्श्रोत्रं मनो वाचमिति। तँ होवाच। यतो वा इमानि भूतानि जायन्ते। येन जातानि जीवन्ति। यत्प्रयन्त्यभिसंविशन्ति। तद्विजिज्ञासस्व। तद् ब्रह्मेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा॥

1. ப்$_4$ருகு$_3$ர்வை வாருணி: । வருணம் பிதரமுபஸஸார । அதீ$_4$ஹி ப$_4$க$_3$வோ ப்$_3$ரஹ்மேதி । தஸ்மா ஏதத் ப்ரோவாச । அன்னம் ப்ராணம் சக்ஷுச்$_1$ச்$_1$ரோத்ரம் மனோ வாசமிதி । தம் ஹோவாச । யதோ வா இமானி பூ$_4$தானி ஜாயந்தே । யேன ஜாதானி ஜீவந்தி । யத்ப்ரயந்த்யபி$_4$ஸம்விச$_1$ந்தி । தத்$_3$விஜிஞா ஸஸ்வ । தத்$_3$ ப்$_3$ரஹ்மேதி । ஸ தபோऽதப்யத । ஸ தபஸ்தப்த்வா ॥

वारुणिः வாருணி: வருணரின் மகனான **भृगुः वै** ப்$_4$ருகு$_3$: வை ப்ருகு (என்ற ரிஷி) **पितरं** பிதரம் தந்தையாகிய **वरुणं** வருணம் வருணரை **उपससार** உபஸஸார அணுகினார். **भगवः** ப$_4$க$_3$வ: இறைவா **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **अधीहि** அதீ$_4$ஹி உபதேசிப்பீர்களாக **इति** இதி என்று (தந்தையிடம் ப்ருகு கேட்டார்). **तस्मै** தஸ்மை அவருக்கு (ப்ருகுவுக்கு) **अन्नं** அன்னம் அன்னமயகோசம் **प्राणं** ப்ராணம் ப்ராணமயகோசம் **मनः** மன: மனோமயகோசம் **चक्षुः** சக்ஷு: கண் **श्रोत्रं** ச்$_1$ரோத்ரம் செவி **वाचं** வாசம் வாக் **इति एतत्** இதி ஏதத் முதலிய தத்துவங்களை **प्रोवाच** ப்ரோவாச உபதேசித்தார். **तं** தம் அவரிடம் (ப்ருகுவிடம்) **ह उवाच** ஹ உவாச (மீண்டும்) வருணர் கூறினார். **यतः वै** யத: வை எதனிடமிருந்து **इमानि भूतानि** இமானி பூ$_4$தானி இந்த உயிரினங்கள் **जायन्ते** ஜாயந்தே தோன்றுகின்றனவோ **जातानि** ஜாதானி தோன்றியவை **येन** யேன எதனால் **जीवन्ति** ஜீவந்தி வாழ்கின்றனவோ **प्रयन्ति** ப்ரயந்தி இறப்பவை **यत्** யத் எதை **अभिसंविशन्ति** அபி$_4$ஸம்விச$_1$ந்தி சென்றடைகின்றனவோ **तत्** தத் அதை **विजिज्ञासस्व** விஜிஞாஸஸ்வ அறிய முயற்சிப்பாயாக. **तत्** தத் அதுவே **ब्रह्म इति** ப்$_3$ரஹ்ம இதி ப்ரஹ்மன். **सः** ஸ: (இவ்விதம் கேட்ட)

அவர் (ப்ருகு) **तप:** தப: தவத்தை **अतप्यत** அதப்யத மேற்கொண்டார். **तप:** தப: தவத்தை **तप्त्वा** தப்த்வா செய்து **स:** ஸ: அவர்...

வருணரின் மகனான ப்ருகு என்ற ரிஷி, தந்தையாகிய வருணரை அணுகினார். இறைவா, ப்ரஹ்மனை உபதேசிப் பீர்களாக என்று தந்தையிடம் ப்ருகு கேட்டார். ப்ருகுவுக்கு அன்னமயகோசம், ப்ராணமயகோசம், மனோமயகோசம், கண், செவி, வாக் முதலிய தத்துவங்களை உபதேசித்தார். ப்ருகுவிடம் மீண்டும் வருணர் கூறினார்: எதனிடமிருந்து இந்த உயிரினங்கள் தோன்றுகின்றனவோ, தோன்றியவை எதனால் வாழ்கின்றனவோ, இறப்பவை எதைச் சென்றடைகின்றனவோ அதை அறிய முயற்சிப்பாயாக. அதுவே ப்ரஹ்மன். இவ்விதம் கேட்ட ப்ருகு தவத்தை மேற்கொண்டார். தவத்தை செய்து அவர்...

२. अन्नं ब्रह्मेति व्यजानात्। अन्नाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते। अन्नेन जातानि जीवन्ति। अन्नं प्रयन्त्यभिसंविशन्तीति। तद्विज्ञाय। पुनरेव वरुणं पितरमुपससार। अधीहि भगवो ब्रह्मेति। तँहोवाच। तपसा ब्रह्म विजिज्ञासस्व। तपो ब्रह्मेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा॥

2. அன்னம் ப்$_3$ரஹ்மேதி வ்யஜானாத்। அன்னாத்$_3$த்$_4$யேவ க$_2$ல்வி மானி பூ$_4$தானி ஜாயந்தே। அன்னேன ஜாதானி ஜீவந்தி। அன்னம் ப்ரயந்த்யபி$_4$ஸம்விச$_1$ந்தீதி। தத்$_3$விஞாய। புனரேவ வருணம் பிதரமுபஸஸார। அதீ$_4$ஹி ப$_4$க$_3$வோ ப்$_3$ரஹ்மேதி। தம்ஹோவாச। தபஸா ப்$_3$ரஹ்ம விஜிஞாஸஸ்வ। தபோ ப்$_3$ரஹ்மேதி। ஸ தபோऽதப்யத। ஸ தபஸ்தப்த்வா॥

अन्नं அன்னம் அன்னம் **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன் **इति** இதி என்று **व्यजानात्** வ்யஜானாத் முடிவு செய்தார். **हि एव खलु** ஹி ஏவ க$_2$லு ஏனெனில் **अन्नात्** அன்னாத் உணவிலிருந்து **इमानि भूतानि** இமானி பூ$_4$தானி இந்த உயிரினங்கள் **जायन्ते** ஜாயந்தே தோன்றுகின்றன.

जातानि ஜாதானி தோன்றியவை **अन्नेन** அன்னேன உணவினால் **जीवन्ति** ஜீவந்தி வாழ்கின்றன. **प्रयन्ति** ப்ரயந்தி இறப்பவை **अन्नं** அன்னம் உணவை **अभिसंविशन्ति** அபி$_4$ஸம்விச$_1$ந்தி சென்றடைகின்றன. **इति** இதி இவ்விதம் **तत्** அதை (அந்த ப்ரஹ்மனை அன்னமாக) **विज्ञाय** விஞாய அறிந்து **पुनः एव** புன: ஏவ மீண்டும் **पितरं** பிதரம் தந்தையாகிய **वरुणं** வருணம் வருணரை **उपससार** உபஸஸார அணுகினார். **भगवः** ப$_4$க$_3$வ: இறைவா **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **अधीहि** அதீ$_4$ஹி உபதேசிப்பீர்களாக **इति** இதி என்று (கேட்டார்). **तं** தம் அவருக்கு (வருணர்) **इति** இதி இவ்விதம் **ह उवाच** ஹ உவாச கூறினார். **तपसा** தபஸா தவத்தால் **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **विजिज्ञासस्व** விஜிஞாஸஸ்வ அறிய முயற்சிப்பாயாக. **तपः** தப: தவமே **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன். **सः** ஸ: அவர் (ப்ருகு) **तपः** தப: தவத்தை **अतप्यत** அதப்யத மேற்கொண்டார். **तपः** தப: தவத்தை **तप्त्वा** தப்த்வா செய்து **सः** ஸ: அவர்...

அன்னம் ப்ரஹ்மன் என்று முடிவு செய்தார். ஏனெனில் உணவிலிருந்து இந்த உயிரினங்கள் தோன்றுகின்றன. தோன்றியவை உணவினால் வாழ்கின்றன. இறப்பவை உணவை சென்றடைகின்றன. இவ்விதம் அந்த ப்ரஹ்மனை அன்னமாக அறிந்து மீண்டும் தந்தையாகிய வருணரை அணுகினார். இறைவா, ப்ரஹ்மனை உபதேசிப்பீர்களாக என்று கேட்டார். அவருக்கு வருணர் இவ்விதம் கூறினார்: தவத்தால் ப்ரஹ்மனை அறிய முயற்சிப்பாயாக. தவமே ப்ரஹ்மன். ப்ருகு தவத்தை மேற்கொண்டார். தவத்தை செய்து அவர்...

३. प्राणो ब्रह्मेति व्यजानात्। प्राणाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते। प्राणेन जातानि जीवन्ति। प्राणं प्रयन्त्यभिसंविशन्तीति। तद्विज्ञाय। पुनरेव वरुणं पितरमुपससार। अधीहि भगवो ब्रह्मेति। तँहोवाच। तपसा ब्रह्म विजिज्ञासस्व। तपो ब्रह्मेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा॥

3. ப்ராணோ ப்$_3$ரஹ்மேதி வ்யஜானாத்। ப்ராணாத்$_3$த்$_4$யேவ க$_2$ல்விமானி பூ$_4$தானி ஜாயந்தே। ப்ராணேன ஜாதானி ஜீவந்தி। ப்ராணம் ப்ரயந்த்யபி$_4$ஸம்விச$_1$ந்தீதி। தத்$_3$விஞாய। புனரேவ வருணம் பிதரமுபஸஸார। அதீ$_4$ஹி ப$_4$க$_3$வோ ப்$_3$ரஹ்மேதி। தம்ஹோவாச। தபஸா ப்$_3$ரஹ்ம விஜிஞாஸஸ்வ। தபோ ப்$_3$ரஹ்மேதி। ஸ தபோऽதப்யத। ஸ தபஸ்தப்த்வா॥

प्राण: ப்ராண: ப்ராணன் **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன் **इति** இதி என்று **व्यजानात्** வ்யஜானாத் முடிவு செய்தார். **हि एव खलु** ஹி ஏவ க$_2$லு ஏனெனில் **प्राणात्** ப்ராணாத் ப்ராணனிடமிருந்து **इमानि भूतानि** இமானி பூ$_4$தானி இந்த உயிரினங்கள் **जायन्ते** ஜாயந்தே தோன்றுகின்றன. **जातानि** ஜாதானி தோன்றியவை **प्राणेन** ப்ராணேன ப்ராணனால் **जीवन्ति** ஜீவந்தி வாழ்கின்றன. **प्रयन्ति** ப்ரயந்தி இறப்பவை **प्राणं** ப்ராணம் ப்ராணனை **अभिसंविशन्ति** அபி$_4$ஸம் விச$_1$ந்தி சென்றடைகின்றன. **इति** இதி இவ்விதம் **तत्** தத் அதை (அந்த ப்ரஹ்மனை ப்ராணனாக) **विज्ञाय** விஞாய அறிந்து **पुन: एव** புன: ஏவ மீண்டும் **पितरं** பிதரம் தந்தையாகிய **वरुणं** வருணம் வருணரை **उपससार** உபஸஸார அணுகினார். **भगव:** ப$_4$க$_3$வ: இறைவா **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **अधीहि** அதீ$_4$ஹி உபதேசிப்பீர்களாக **इति** இதி என்று (கேட்டார்). **तं** தம் அவருக்கு (வருணர்) **इति** இதி இவ்விதம் **ह उवाच** ஹ உவாச கூறினார். **तपसा** தபஸா தவத்தால் **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **विजिज्ञासस्व** விஜிஞாஸஸ்வ அறிய முயற்சிப்பாயாக. **तप:** தப: தவமே **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன். **स:** ஸ: அவர் (ப்ருகு) **तप:** தப: தவத்தை **अतप्यत** அதப்யத மேற்கொண்டார். **तप:** தப: தவத்தை **तप्त्वा** தப்த்வா செய்து **स:** ஸ: அவர்...

ப்ராணன் ப்ரஹ்மன் என்று முடிவு செய்தார். ஏனெனில் ப்ராணனிடமிருந்து இந்த உயிரினங்கள் தோன்றுகின்றன. தோன்றியவை ப்ராணனால் வாழ்கின்றன. இறப்பவை ப்ராணனை சென்றடைகின்றன. இவ்விதம் அந்த ப்ரஹ்மனை ப்ராணனாக அறிந்து மீண்டும் தந்தையாகிய வருணரை

அணுகினார். இறைவா, ப்ரஹ்மனை உபதேசிப்பீர்களாக என்று கேட்டார். அவருக்கு வருணர் இவ்விதம் கூறினார்: தவத்தால் ப்ரஹ்மனை அறிய முயற்சிப்பாயாக. தவமே ப்ரஹ்மன். ப்ருகு தவத்தை மேற்கொண்டார். தவத்தை செய்து அவர்...

४. मनो ब्रह्मेति व्यजानात्। मनसो ह्येव खल्विमानि भूतानि जायन्ते। मनसा जातानि जीवन्ति। मनः प्रयन्त्यभिसंविशन्तीति। तद्विज्ञाय। पुनरेव वरुणं पितरमुपससार। अधीहि भगवो ब्रह्मेति। तँ होवाच। तपसा ब्रह्म विजिज्ञासस्व। तपो ब्रह्मेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा॥

4. மனோ ப்$_3$ரஹ்மேதி வ்யஜானாத் । மனஸோ ஹ்யேவ க$_2$ல்வி மானி பூ$_4$தானி ஜாயந்தே । மனஸா ஜாதானி ஜீவந்தி । மன: ப்ரயந்த்யபி$_4$ஸம்விச$_1$ந்தீதி । தத்$_3$விஞாய । புனரேவ வருணம் பிதரமுபஸஸார । அதீ$_4$ஹி ப$_4$க$_3$வோ ப்$_3$ரஹ்மேதி । தம்ஹோ வாச । தபஸா ப்$_3$ரஹ்ம விஜிஞாஸஸ்வ । தபோ ப்$_3$ரஹ்மேதி । ஸ தபோऽதப்யத । ஸ தபஸ்தப்த்வா ॥

मनः மன: மனம் **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன் **इति** இதி என்று **व्यजानात्** வ்யஜானாத் முடிவு செய்தார். **हि एव खलु** ஹி ஏவ க$_2$லு ஏனெனில் **मनसः** மனஸ: மனதிலிருந்து **इमानि भूतानि** இமானி பூ$_4$தானி இந்த உயிரினங்கள் **जायन्ते** ஜாயந்தே தோன்றுகின்றன. **जातानि** ஜாதானி தோன்றியவை **मनसा** மனஸா மனதினால் **जीवन्ति** ஜீவந்தி வாழ்கின்றன. **प्रयन्ति** ப்ரயந்தி இறப்பவை **मनः** மன: மனதை **अभिसंविशन्ति** அபி$_4$ஸம்விச$_1$ந்தி சென்றடைகின்றன. **इति** இதி இவ்விதம் **तत्** தத் அதை (அந்த ப்ரஹ்மனை மனதாக) **विज्ञाय** விஞாய அறிந்து **पुनः एव** புன: ஏவ மீண்டும் **पितरं** பிதரம் தந்தையாகிய **वरुणं** வருணம் வருணரை **उपससार** உபஸஸார அணுகினார். **भगवः** ப$_4$க$_3$வ: இறைவா **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **अधीहि** அதீ$_4$ஹி உபதேசிப் பீர்களாக **इति** இதி என்று (கேட்டார்). **तं** தம் அவருக்கு (வருணர்) **इति** இதி இவ்விதம் **ह उवाच** ஹ உவாச கூறினார். **तपसा** தபஸா தவத்தால்

ब्रह्म ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மனை **विजिज्ञासस्व** விஜிஜ்ஞாஸஸ்வ அறிய முயற்சிப்பாயாக. **तपः** தப: தவமே **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன். **सः** ஸ: அவர் (ப்ருகு) **तपः** தப: தவத்தை **अतप्यत** அதப்யத மேற்கொண்டார் **तपः** தப: தவத்தை **तप्त्वा** தப்த்வா செய்து **सः** ஸ: அவர்...

மனம் ப்ரஹ்மன் என்று முடிவு செய்தார். ஏனெனில் மனதிலிருந்து இந்த உயிரினங்கள் தோன்றுகின்றன. தோன்றியவை மனதினால் வாழ்கின்றன. இறப்பவை மனதை சென்றடைகின்றன. இவ்விதம் அந்த ப்ரஹ்மனை மனதாக அறிந்து மீண்டும் தந்தையாகிய வருணரை அணுகினார். இறைவா, ப்ரஹ்மனை உபதேசிப்பீர்களாக என்று கேட்டார். அவருக்கு வருணர் இவ்விதம் கூறினார்: தவத்தால் ப்ரஹ்மனை அறிய முயற்சிப் பாயாக. தவமே ப்ரஹ்மன். ப்ருகு தவத்தை மேற்கொண்டார். தவத்தை செய்து அவர்...

५. **विज्ञानं ब्रह्मेति व्यजानात्। विज्ञानाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते। विज्ञानेन जातानि जीवन्ति। विज्ञानं प्रयन्त्यभिसं विशन्तीति। तद्विज्ञाय। पुनरेव वरुणं पितरमुपससार। अधीहि भगवो ब्रह्मेति। तँ होवाच। तपसा ब्रह्म विजिज्ञासस्व। तपो ब्रह्मेति। स तपोऽतप्यत। स तपस्तप्त्वा।।**

5. விஞ்ஞானம் ப்$_3$ரஹ்மேதி வ்யஜானாத் । விஞ்ஞானாத்$_3$த்$_4$யேவ க$_2$ல் விமானி பூ$_4$தானி ஜாயந்தே । விஞ்ஞானேன ஜாதானி ஜீவந்தி । விஞ்ஞானம் ப்ரயந்த்யபி$_4$ஸம்விச$_1$ந்தீதி । தத்$_3$விஞ்ஞாய । புனரேவ வருணம் பிதரமுபஸஸார । அதீ$_4$ஹி ப$_4$க$_3$வோ ப்$_3$ரஹ்மேதி । தம்ஹோவாச । தபஸா ப்$_3$ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ । தபோ ப்$_3$ரஹ்மேதி । ஸ தபோऽதப்யத । ஸ தபஸ்தப்த்வா ।।

विज्ञानं விஞ்ஞானம் புத்தி **ब्रह्म** ப்$_3$ரஹ்ம ப்ரஹ்மன் **इति** இதி என்று **व्यजानात्** வ்யஜானாத் முடிவு செய்தார். **हि एव खलु** ஹி ஏவ க$_2$லு ஏனெனில் **विज्ञानात्** விஞ்ஞானாத் புத்தியிலிருந்து **इमानि भूतानि**

இமானி பூ₄தானி இந்த உயிரினங்கள் **जायन्ते** ஜாயந்தே தோன்று கின்றன. **जातानि** ஜாதானி தோன்றியவை **विज्ञानेन** விஞானேன புத்தியினால் **जीवन्ति** ஜீவந்தி வாழ்கின்றன. **प्रयन्ति** ப்ரயந்தி இறப்பவை **विज्ञानं** விஞானம் புத்தியை **अभिसंविशन्ति** அபி₄ஸம்விச₁ந்தி சென்றடைகின்றன. **इति** இதி இவ்விதம் **तत्** தத் அதை (அந்த ப்ரஹ்மனை புத்தியாக) **विज्ञाय** விஞாய அறிந்து **पुनः एव** புன: ஏவ மீண்டும் **पितरं** பிதரம் தந்தையாகிய **वरुणं** வருணம் வருணரை **उपससार** உபஸஸார அணுகினார். **भगवः** ப₄க₃வ: இறைவா **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மனை **अधीहि** அதீ₄ஹி உபதேசிப்பீர்களாக **इति** இதி என்று (கேட்டார்). **तं** தம் அவருக்கு (வருணர்) **इति** இதி இவ்விதம் **ह उवाच** ஹ உவாச கூறினார். **तपसा** தபஸா தவத்தால் **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மனை **विजिज्ञासस्व** விஜிஞாஸஸ்வ அறிய முயற்சிப்பாயாக. **तपः** தப: தவமே **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மன். **सः** ஸ: அவர் (ப்ருகு) **तपः** தப: தவத்தை **अतप्यत** அதப்யத மேற்கொண்டார். **तपः** தப: தவத்தை **तप्त्वा** தப்த்வா செய்து **सः** ஸ: அவர்...

புத்தி ப்ரஹ்மன் என்று முடிவு செய்தார். ஏனெனில் புத்தியிலிருந்து இந்த உயிரினங்கள் தோன்றுகின்றன. தோன்றியவை புத்தியினால் வாழ்கின்றன. இறப்பவை புத்தியை சென்றடைகின்றன. இவ்விதம் அந்த ப்ரஹ்மனை புத்தியாக அறிந்து மீண்டும் தந்தையாகிய வருணரை அணுகினார். இறைவா, ப்ரஹ்மனை உபதேசிப்பீர்களாக என்று கேட்டார். அவருக்கு வருணர் இவ்விதம் கூறினார்: தவத்தால் ப்ரஹ்மனை அறிய முயற்சிப்பாயாக. தவமே ப்ரஹ்மன். ப்ருகு தவத்தை மேற்கொண்டார். தவத்தை செய்து அவர்...

६. आनन्दो ब्रह्मेति व्यजानात्। आनन्दाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते। आनन्देन जातानि जीवन्ति। आनन्दं प्रयन्त्यभिसंविशन्तीति। सैषा भार्गवी वारुणी विद्या। परमे व्योमन् प्रतिष्ठिता। य एवं वेद प्रतितिष्ठति। अन्नवानन्नादो भवति। महान् भवति प्रजया पशुभिर्ब्रह्मवर्चसेन। महान् कीर्त्या॥

6. ஆனந்தோ3 ப்3ரஹ்மேதி வ்யஜானாத் । ஆனந்தா3த்3த்4யேவ க2ல்விமானி பூ4தானி ஜாயந்தே । ஆனந்தே3ன ஜாதானி ஜீவந்தி । ஆனந்த3ம் ப்ரயந்த்யபி4ஸம்விச1ந்தீதி । ஸைஷா பா4ர்க3வீ வாருணீ வித்3யா । பரமே வ்யோமன் ப்ரதிஷ்டி2தா । ய ஏவம் வேத3 ப்ரதிதிஷ்ட2தி । அன்னவானன்னாதோ3 ப4வதி । மஹான் ப4வதி ப்ரஜயா பசு1பி4ர் ப்3ரஹ்ம வர்சஸேன । மஹான் கீர்த்யா ॥

आनन्दः ஆனந்த3: ஆனந்தம் **ब्रह्म** ப்3ரஹ்ம ப்ரஹ்மன் **इति** இதி என்று **व्यजानात्** வ்யஜானாத் புரிந்துகொண்டார். **हि एव खलु** ஹி ஏவ க2லு ஏனெனில் **आनन्दात्** ஆனந்தா3த் ஆனந்தத்திலிருந்து **इमानि भूतानि** இமானி பூ4தானி இந்த உயிரினங்கள் **जायन्ते** ஜாயந்தே தோன்று கின்றன. **जातानि** ஜாதானி தோன்றியவை **आनन्देन** ஆனந்தே3ன ஆனந்தத்தினால் **जीवन्ति** ஜீவந்தி வாழ்கின்றன. **प्रयन्ति** ப்ரயந்தி இறப்பவை **आनन्दं** ஆனந்த3ம் ஆனந்தத்தை **अभिसंविशन्ति** அபி4ஸம்விச1ந்தி சென்றடைகின்றன. **इति** இதி இவ்விதம் (ப்ருகு ப்ரஹ்மனை உணர்ந்து கொண்டார்). **भार्गवी** பா4ர்க3வீ ப்ருகு ரிஷியால் புரிந்துகொள்ளப்பட்ட **वारुणी** வாருணீ வருணரால் உபதேசிக்கப்பட்ட **सा एषा विद्या** ஸா ஏஷா வித்3யா இந்த ஞானமானது **परमे** பரமே மேலான **व्योमन्** வ்யோமன் (ஹ்ருதய) ஆகாசத்தில் உள்ள (ப்ரஹ்மனிடத்தில்) **प्रतिष्ठिता** ப்ரதிஷ்டி2தா நிலைபெறுகிறது. **यः** ய: யார் **एवं** ஏவம் இவ்விதம் **वेद** வேத3 அறிகிறானோ (அவன் ப்ரஹ்மனிடத்தில்) **प्रतितिष्ठति** ப்ரதிதிஷ்ட2தி நிலைபெறுகிறான். **अन्नवान्** அன்னவான் உணவை உடையவ னாகவும் **अन्नादः** அன்னாத3: உணவை அனுபவிப்பவனாகவும் **भवति** ப4வதி ஆகிறான். **प्रजया** ப்ரஜயா ஸந்ததியினாலும் **पशुभिः** பசு1பி4: பசுக்களாலும் **ब्रह्मवर्चसेन** ப்3ரஹ்மவர்சஸேன தேஜஸாலும் **महान् भवति** மஹான் ப4வதி மேன்மை அடைகிறான். **कीर्त्या** கீர்த்யா புகழினாலும் **महान्** மஹான் மேன்மை (அடைகிறான்).

ஆனந்தம் ப்ரஹ்மன் என்று புரிந்துகொண்டார். ஏனெனில் ஆனந்தத்திலிருந்து இந்த உயிரினங்கள் தோன்றுகின்றன. தோன்றியவை ஆனந்தத்தினால் வாழ்கின்றன. இறப்பவை ஆனந்தத்தை சென்றடைகின்றன. இவ்விதம் ப்ருகு ப்ரஹ்மனை உணர்ந்து கொண்டார். ப்ருகு ரிஷியால் புரிந்து கொள்ளப்பட்ட, வருணரால் உபதேசிக்கப்பட்ட இந்த ஞான மானது மேலான ஹ்ருதய ஆகாசத்தில் உள்ள ப்ரஹ்ம னிடத்தில் நிலைபெறுகிறது. யார் இவ்விதம் அறிகிறானோ அவன் ப்ரஹ்மனிடத்தில் நிலைபெறுகிறான். உணவை உடைய வனாகவும் உணவை அனுபவிப்பவனாகவும் ஆகிறான். ஸந்ததியினாலும் பசுக்களாலும் தேஜஸாலும் மேன்மை அடைகிறான். புகழினாலும் மேன்மை அடைகிறான்.

௭. अन्नं न निन्द्यात्। तद् व्रतम्। प्राणो वा अन्नम्। शरीरमन्नादम्। प्राणे शरीरं प्रतिष्ठितम्। शरीरे प्राणः प्रतिष्ठितः। तदेतदन्नमन्ने प्रतिष्ठितम्। स य एतदन्नमन्ने प्रतिष्ठितं वेद प्रतितिष्ठति। अन्नवानन्नादो भवति। महान् भवति प्रजया पशुभिर्ब्रह्मवर्चसेन। महान् कीर्त्या॥

7. அன்னம் ந நிந்த்$_3$யாத் । தத்$_3$ வ்ரதம் । ப்ராணோ வா அன்னம் । ச$_1$ரீரமன்னாத$_3$ம் । ப்ராணே ச$_1$ரீரம் ப்ரதிஷ்டி$_2$தம் । ச$_1$ரீரே ப்ராண: ப்ரதிஷ்டி$_2$த: । ததே$_3$தத$_3$ன்னமன்னே ப்ரதிஷ்டி$_2$தம் । ஸ ய ஏதத$_3$ன்னமன்னே ப்ரதிஷ்டி$_2$தம் வேத$_3$ ப்ரதிதிஷ்ட$_2$தி । அன்னவானன்னாதோ$_3$ ப$_4$வதி । மஹான் ப$_4$வதி ப்ரஜயா பசு$_1$பி$_4$ர்ப்$_3$ரஹ்மவர்சஸேன । மஹான் கீர்த்யா ॥

अन्नं அன்னம் உணவை **न निन्द्यात्** ந நிந்த்$_3$யாத் அவமதிக்கக்கூடாது. **तत् व्रतं** தத் வ்ரதம் இது ஒரு வ்ரதமாக வேண்டும். **प्राणः वै** ப்ராண: வை (உடலினால்) ப்ராணன் **अन्नं** அன்னம் சாப்பிடப்படுகிறது. **शरीरं** ச$_1$ரீரம் உடல் (ப்ராணனை) **अन्नादं** அன்னாத$_3$ம் சாப்பிடுகிறது. (அதுபோல் ப்ராணனால் உடல் சாப்பிடப்படுகிறது. ப்ராணன் உடலை

சாப்பிடுகிறது). प्राणे ப்ராணே ப்ராணனால் शरीरं ச$_1$ரீரம் உடல் प्रतिष्ठितं ப்ரதிஷ்டி$_2$தம் தாங்கப்படுகிறது. शरीरे ச$_1$ரீரே உடலினால் प्राण: ப்ராண: ப்ராணன் प्रतिष्ठित: ப்ரிதிஷ்டி$_2$த: தாங்கப்படுகிறது. तत् एतत् தத் ஏதத் இவ்விதம் अन्ने அன்னே அன்னத்தினால் अन्नं அன்னம் அன்னம் प्रतिष्ठितं ப்ரதிஷ்டி$_2$தம் தாங்கப்படுகிறது. (அன்னாதத்தினால் அன்னாதம் தாங்கப்படுகிறது). य: ய: யார் एतत् ஏதத் இந்த अन्ने அன்னே அன்னத்தினால் अन्नं அன்னம் அன்னம் प्रतिष्ठितं ப்ரதிஷ்டி$_2$தம் தாங்கப்படுகிறது (அன்னாதத்தினால் அன்னாதம் தாங்கப்படுகிறது என்றவாறு) वेद வேத$_3$ த்யானிக்கிறானோ स: ஸ: அவன் (வாழ்வில்) प्रतितिष्ठति ப்ரதிதிஷ்ட$_2$தி நிலைபெறுகிறான். अन्नवान् அன்னவான் உணவை உடையவனாகவும் अन्नाद: அன்னாத$_3$: உணவை அனுபவிப்ப வனாகவும் भवति ப$_4$வதி ஆகிறான். प्रजया ப்ரஜயா ஸந்ததியினாலும் पशुभि: பசு$_1$பி$_4$: பசுக்களாலும் ब्रह्मवर्चसेन ப்$_3$ரஹ்மவர்சஸேன தேஜஸாலும் महान् भवति மஹான் ப$_4$வதி மேன்மை அடைகிறான். कीर्त्या கீர்த்யா புகழினாலும் महान् மஹான் மேன்மை (அடைகிறான்).

உணவை அவமதிக்கக்கூடாது. இது ஒரு வ்ரதமாக வேண்டும். உடலினால் ப்ராணன் சாப்பிடப்படுகிறது. உடல் ப்ராணனை சாப்பிடுகிறது. அதுபோல் ப்ராணனால் உடல் சாப்பிடப்படுகிறது. ப்ராணன் உடலை சாப்பிடுகிறது. ப்ராணனால் உடல் தாங்கப்படுகிறது. உடலினால் ப்ராணன் தாங்கப்படுகிறது. இவ்விதம் அன்னத்தினால் அன்னம் தாங்கப்படுகிறது. அன்னாதத்தினால் அன்னாதம் தாங்கப்படுகிறது. யார் இந்த அன்னத்தினால் அன்னம் தாங்கப்படுகிறது, அன்னாதத்தினால் அன்னாதம் தாங்கப்படுகிறது என்றவாறு த்யானிக்கிறானோ அவன் வாழ்வில் நிலைபெறுகிறான். உணவை உடையவனாகவும் உணவை அனுபவிப்பவனாகவும் ஆகிறான். ஸந்ததியினாலும் பசுக்களாலும் தேஜஸாலும் மேன்மை அடைகிறான். புகழினாலும் மேன்மை அடைகிறான்.

८. अन्नं न परिचक्षीत। तद् व्रतम्। आपो वा अन्नम्। ज्योतिरन्नादम्। अप्सु ज्योतिः प्रतिष्ठितम्। ज्योतिष्यापः प्रतिष्ठिताः। तदेतदन्नमन्ने प्रतिष्ठितम्। स य एतदन्नमन्ने प्रतिष्ठितं वेद प्रतितिष्ठति। अन्नवानन्नादो भवति। महान् भवति प्रजया पशुभिर्ब्रह्मवर्चसेन। महान् कीर्त्या॥

8. அன்னம் ந பரிசக்ஷீத। தத்$_3$ வ்ரதம்। ஆபோ வா அன்னம்। ஜ்யோதிரன்னாத$_3$ம்। அப்ஸு ஜ்யோதி: ப்ரதிஷ்டி$_2$தம்। ஜ்யோதிஷ்யாப: ப்ரதிஷ்டி$_2$தா:। ததே$_3$தத$_3$ன்னமன்னே ப்ரதிஷ்டி$_2$தம்। ஸ ய ஏதத$_3$ன்னமன்னே ப்ரதிஷ்டி$_2$தம் வேத$_3$ ப்ரதிதிஷ்ட$_2$தி। அன்னவானன்னாதோ$_3$ ப$_4$வதி। மஹான் ப$_4$வதி ப்ரஜயா பசு$_1$பி$_4$ர்ப்$_3$ரஹ்மவர்சஸேன। மஹான் கீர்த்யா॥

अन्नं அன்னம் உணவை **न परिचक्षीत** ந பரிசக்ஷீத வீண் செய்யக் கூடாது. **तत् व्रतं** தத் வ்ரதம் இது ஒரு வ்ரதமாக வேண்டும். **आपः वै** ஆப: வை (நெருப்பினால்) நீர் **अन्नं** அன்னம் சாப்பிடப்படுகிறது. **ज्योतिः** ஜ்யோதி: நெருப்பு (நீரை) **अन्नादं** அன்னாத$_3$ம் சாப்பிடுகிறது. (அதுபோல் நீரினால் நெருப்பு சாப்பிடப்படுகிறது. நீர் நெருப்பை சாப்பிடுகிறது). **अप्सु** அப்ஸு நீரினால் **ज्योतिः** ஜ்யோதி: நெருப்பு **प्रतिष्ठितं** ப்ரதிஷ்டி$_2$தம் தாங்கப்படுகிறது. **ज्योतिषु** ஜ்யோதிஷு நெருப்பினால் **आपः** ஆப: நீர் **प्रतिष्ठिताः** ப்ரதிஷ்டி$_2$தா: தாங்கப் படுகிறது. **तत् एतत्** தத் ஏதத் இவ்விதம் **अन्ने** அன்னே அன்னத்தினால் **अन्नं** அன்னம் அன்னம் **प्रतिष्ठितं** ப்ரதிஷ்டி$_2$தம் தாங்கப்படுகிறது. (அன்னாதத்தினால் அன்னாதம் தாங்கப்படுகிறது). **यः** ய: யார் **एतत्** ஏதத் இந்த **अन्ने** அன்னே அன்னத்தினால் **अन्नं** அன்னம் அன்னம் **प्रतिष्ठितं** ப்ரதிஷ்டி$_2$தம் தாங்கப்படுகிறது (அன்னாதத்தினால் அன்னாதம் தாங்கப்படுகிறது என்றவாறு) **वेद** வேத$_3$ த்யானிக் கிறானோ **सः** ஸ: அவன் (வாழ்வில்) **प्रतितिष्ठति** ப்ரதிதிஷ்ட$_2$தி நிலைபெறுகிறான். **अन्नवान्** அன்னவான் உணவை உடையவனாகவும் **अन्नादः** அன்னாத$_3$: உணவை அனுபவிப்பவனாகவும் **भवति** ப$_4$வதி

ஆகிறான். **प्रजया** ப்ரஜயா ஸந்ததியினாலும் **पशुभिः** பசு$_1$பி$_4$: பசுக்களாலும் **ब्रह्मवर्चसेन** ப்$_3$ரஹ்மவர்சஸேன தேஜஸாலும் **महान् भवति** மஹான் ப$_4$வதி மேன்மை அடைகிறான். **कीर्त्या** கீர்த்யா புகழினாலும் **महान्** மஹான் மேன்மை (அடைகிறான்).

உணவை வீண் செய்யக்கூடாது. இது ஒரு வ்ரதமாக வேண்டும். நெருப்பினால் நீர் சாப்பிடப்படுகிறது. நெருப்பு நீரை சாப்பிடுகிறது. அதுபோல் நீரினால் நெருப்பு சாப்பிடப் படுகிறது. நீர் நெருப்பை சாப்பிடுகிறது. நீரினால் நெருப்பு தாங்கப்படுகிறது. நெருப்பினால் நீர் தாங்கப்படுகிறது. இவ்விதம் அன்னத்தினால் அன்னம் தாங்கப்படுகிறது. அன்னா தத்தினால் அன்னாதம் தாங்கப்படுகிறது. யார், இந்த அன்னத்தினால் அன்னம் தாங்கப்படுகிறது, அன்னாதத்தினால் அன்னாதம் தாங்கப்படுகிறது என்றவாறு த்யானிக்கிறானோ அவன் வாழ்வில் நிலைபெறுகிறான். உணவை உடையவ னாகவும் உணவை அனுபவிப்பவனாகவும் ஆகிறான். ஸந்ததியினாலும் பசுக்களாலும் தேஜஸாலும் மேன்மை அடைகிறான். புகழினாலும் மேன்மை அடைகிறான்.

९. **अन्नं बहु कुर्वीत। तद् व्रतम्। पृथिवी वा अन्नम्। आकाशोऽन्नादः। पृथिव्यामाकाशः प्रतिष्ठितः। आकाशे पृथिवी प्रतिष्ठिता। तदेतदन्नमन्ने प्रतिष्ठितम्। स य एतदन्नमन्ने प्रतिष्ठितं वेद प्रतितिष्ठति। अन्नवानन्नादो भवति। महान् भवति प्रजया पशुभिर्ब्रह्मवर्चसेन। महान् कीर्त्या॥**

9. அன்னம் ப$_3$ஹு குர்வீத । தத்$_3$ வ்ரதம் । ப்ருதி$_2$வீ வா அன்னம் । ஆகாசோ$_1$ऽன்னாத$_3$: । ப்ருதி$_2$வ்யாமாகாச$_1$: ப்ரதிஷ்டி$_2$த: । ஆகாசே$_1$ ப்ருதி$_2$வீ ப்ரதிஷ்டி$_2$தா । ததே$_3$தத$_3$ன்னமன்னே ப்ரதி ஷ்டி$_2$தம் । ஸ ய ஏதத$_3$ன்னமன்னே ப்ரதிஷ்டி$_2$தம் வேத$_3$ ப்ரதிதி ஷ்ட$_2$தி । அன்னவானன்னாதோ$_3$ ப$_4$வதி । மஹான் ப$_4$வதி ப்ர ஜயா பசு$_1$பி$_4$ர்ப்$_3$ரஹ்மவர்சஸேன । மஹான் கீர்த்யா ॥

अन्नं அன்னம் உணவை बहु ப$_3$ஹு அதிகம் कुर्वीत குர்வீத உற்பத்தி செய்ய வேண்டும். तत् व्रतं தத் வ்ரதம் இது ஒரு வ்ரதமாக வேண்டும். पृथिवी वै ப்ருதி$_2$வீ வை (ஆகாசத்தால்) பூமி अन्नं அன்னம் சாப்பிடப்படுகிறது. आकाशः ஆகாச$_1$: ஆகாசம் (பூமியை) अन्नादः அன்னாத$_3$: சாப்பிடுகிறது. (அதுபோல் பூமியினால் ஆகாசம் சாப்பிடப் படுகிறது. பூமி ஆகாசத்தை சாப்பிடுகிறது). पृथिव्यां ப்ருதி$_2$வ்யாம் பூமியினால் आकाशः ஆகாச$_1$: ஆகாசம் प्रतिष्ठितः ப்ரதிஷ்டி$_2$த: தாங்கப்படுகிறது. आकाशे ஆகாசே$_1$ ஆகாசத்தினால் पृथिवी ப்ருதி$_2$வீ பூமி प्रतिष्ठिता ப்ரதிஷ்டி$_2$தா தாங்கப்படுகிறது. तत् एतत् தத் ஏதத் இவ்விதம் अन्ने அன்னே அன்னத்தினால் अन्नं அன்னம் அன்னம் प्रतिष्ठितं ப்ரதிஷ்டி$_2$தம் தாங்கப்படுகிறது. (அன்னாதத்தினால் அன்னாதம் தாங்கப்படுகிறது). यः ய: யார் एतत् ஏதத் இந்த अन्ने அன்னே அன்னத்தினால் अन्नं அன்னம் அன்னம் प्रतिष्ठितं ப்ரதிஷ்டி$_2$தம் தாங்கப்படுகிறது. (அன்னாதத்தினால் அன்னாதம் தாங்கப்படுகிறது என்றவாறு) वेद வேத$_3$ த்யானிக்கிறானோ सः ஸ: அவன் (வாழ்வில்) प्रतितिष्ठति ப்ரதிதிஷ்ட$_2$தி நிலைபெறுகிறான். अन्नवान् அன்னவான் உணவை உடையவனாகவும் अन्नादः அன்னாத$_3$: உணவை அனுபவிப்பவனாகவும் भवति ப$_4$வதி ஆகிறான். प्रजया ப்ரஜயா ஸந்ததியினாலும் पशुभिः பசு$_1$பி$_4$: பசுக்களாலும் ब्रह्मवर्चसेन ப்$_3$ரஹ்மவர்சஸேன தேஜஸாலும் महान् भवति மஹான் ப$_4$வதி மேன்மை அடைகிறான். कीर्त्या கீர்த்யா புகழினாலும் महान् மஹான் மேன்மை (அடைகிறான்).

உணவை அதிகம் உற்பத்தி செய்யவேண்டும். இது ஒரு வ்ரதமாக வேண்டும். ஆகாசத்தால் பூமி சாப்பிடப்படுகிறது. ஆகாசம் பூமியை சாப்பிடுகிறது. அதுபோல் பூமியினால் ஆகாசம் சாப்பிடப்படுகிறது. பூமி ஆகாசத்தை சாப்பிடுகிறது. பூமியினால் ஆகாசம் தாங்கப்படுகிறது. ஆகாசத்தினால் பூமி தாங்கப்படுகிறது. இவ்விதம் அன்னத்தினால் அன்னம் தாங்கப் படுகிறது. அன்னாதத்தினால் அன்னாதம் தாங்கப்படுகிறது. யார் இந்த அன்னத்தினால் அன்னம் தாங்கப்படுகிறது, அன்னா

தத்தினால் அன்னாதம் தாங்கப்படுகிறது என்றவாறு த்யானிக்கிறானோ அவன் வாழ்வில் நிலைபெறுகிறான். உணவை உடையவனாகவும் உணவை அனுபவிப்பவனாகவும் ஆகிறான். ஸந்ததியினாலும் பசுக்களாலும் தேஜஸாலும் மேன்மை அடைகிறான். புகழினாலும் மேன்மை அடைகிறான்.

१०. न कञ्चन वसतौ प्रत्याचक्षीत। तद् व्रतम्। तस्माद्यया कया च विधया बह्वन्नं प्राप्नुयात्। अराध्यस्मा अन्नमित्याचक्षते। एतद्वै मुखतोऽन्नँराद्धम्। मुखतोऽस्मा अन्नँराध्यते। एतद्वै मध्यतोऽन्नँ राद्धम्। मध्यतोऽस्मा अन्नँराध्यते। एतद्वा अन्ततोऽन्नँराद्धम्। अन्ततोऽस्मा अन्नँराध्यते। य एवं वेद।

10. ந கஞ்சன வஸதௌ ப்ரத்யாசக்ஷீத । தத்$_3$ வ்ரதம் । தஸ்மாத்$_3$யயா கயா ச வித$_4$யா ப$_3$ஹ்வன்னம் ப்ராப்னுயாத் । அராத்$_4$யஸ்மா அன்னமித்யாசக்ஷதே । ஏதத்$_3$வை முக$_2$தோऽன்னம் ராத்$_3$த$_4$ம் । முக$_2$தோऽஸ்மா அன்னம்ராத்$_4$யதே । ஏதத்$_3$வை மத்$_4$யதோऽன்னம்ராத்$_3$த$_4$ம் । மத்$_4$யதோऽஸ்மா அன்னம்ராத்$_4$யதே । ஏதத்$_3$வா அந்ததோऽன்னம்ராத்$_3$த$_4$ம் । அந்ததோऽஸ்மா அன்னம் ராத்$_4$யதே । ய ஏவம் வேத$_3$ ।

वसतौ வஸதௌ (இருக்க) இருப்பிடம் நாடி வந்த **कञ्चन** கஞ்சன யாரையும் **न प्रत्याचक्षीत** ந ப்ரத்யாசக்ஷீத மறுக்கக்கூடாது. **तत् व्रतं** தத் வ்ரதம் இது ஒரு வ்ரதமாக வேண்டும். **तस्मात्** தஸ்மாத் ஆகவே **यया कया च विधया** யயா கயா ச வித$_4$யா எப்படியாவது **बहु अन्नं** ப$_3$ஹு அன்னம் அதிக உணவை **प्राप्नुयात्** ப்ராப்னுயாத் சேகரிக்கவேண்டும். **अस्मै** அஸ்மை இவருக்கு **अन्नं** அன்னம் உணவு **अराधि** அராதி$_4$ தயாராக உள்ளது **इति** இதி என்று **आचक्षते** ஆசக்ஷதே (இல்லறத்தோர்) கூறுகிறார்கள். **एतत् वै** ஏதத் வை ஒருக்கால் **अन्नं** அன்னம் உணவானது **राद्धं** ராத்$_3$த$_4$ம் தயாரிக்கப்பட்டு **मुखतः** முக$_2$த: உயர்ந்த விதத்தில் (கொடுத்தால் இவ்விதம் கொடுத்த) **अस्मै** அஸ்மை

அவனுக்கு **अन्नं** அன்னம் உணவானது **मुखतः** முக$_2$த: உயர்ந்த விதத்தில் **राध्यते** ராத்$_4$யதே கிடைக்கிறது. **एतत् वै** ஏதத் வை ஒருக்கால் **अन्नं** அன்னம் உணவானது **राद्धं** ராத்$_3$த$_4$ம் தயாரிக்கப்பட்டு **मध्यतः** மத்$_4$யத: இடைப்பட்ட விதத்தில் (கொடுத்தால் இவ்விதம் கொடுத்த) **अस्मै** அஸ்மை அவனுக்கு **अन्नं** அன்னம் உணவானது **मध्यतः** மத்$_4$யத: இடைப்பட்ட விதத்தில் **राध्यते** ராத்$_4$யதே கிடைக்கிறது. **एतत् वै** ஏதத் வை ஒருக்கால் **अन्नं** அன்னம் உணவானது **राद्धं** ராத்$_3$த$_4$ம் தயாரிக்கப் பட்டு **अन्ततः** அந்தத: கீழ்மையான விதத்தில் (கொடுத்தால் இவ்விதம் கொடுத்த) **अस्मै** அஸ்மை அவனுக்கு **अन्नं** அன்னம் உணவானது **अन्ततः** அந்தத: கீழ்மையான விதத்தில் **राध्यते** ராத்$_4$யதே கிடைக்கிறது. **यः** ய: யார் **एवं** ஏவம் இவ்விதம் **वेद** வேத$_3$ அறிந்து (முறையாக உணவைக் கொடுக்கிறானோ அவன் நன்மையை அடைகிறான்).

இருக்க இருப்பிடம் நாடி வந்த யாரையும் மறுக்கக்கூடாது. இது ஒரு வ்ரதமாக வேண்டும். ஆகவே எப்படியாவது அதிக உணவை சேகரிக்கவேண்டும். இவருக்கு உணவு தயாராக உள்ளது என்று இல்லறத்தோர் கூறுகிறார்கள். ஒருக்கால் உணவானது தயாரிக்கப்பட்டு உயர்ந்த விதத்தில் கொடுத்தால் இவ்விதம் கொடுத்த அவனுக்கு உணவானது உயர்ந்த விதத்தில் கிடைக்கிறது. ஒருக்கால் உணவானது தயாரிக்கப்பட்டு இடைப்பட்ட விதத்தில் கொடுத்தால் இவ்விதம் கொடுத்த அவனுக்கு உணவானது இடைப்பட்ட விதத்தில் கிடைக்கிறது. ஒருக்கால் உணவானது தயாரிக்கப்பட்டு கீழ்மையான விதத்தில் கொடுத்தால் இவ்விதம் கொடுத்த அவனுக்கு உணவானது கீழ்மையான விதத்தில் கிடைக்கிறது. யார் இவ்விதம் அறிந்து முறையாக உணவைக் கொடுக்கிறானோ அவன் நன்மையை அடைகிறான்.

क्षेम इति वाचि। योगक्षेम इति प्राणापानयोः। कर्मेति हस्तयोः।
गतिरिति पादयोः। विमुक्तिरिति पायौ। इति मानुषीः समाज्ञाः।

க்ஷேம இதி வாசி। யோக$_3$க்ஷேம இதி ப்ராணாபானயோ:। கர்மேதி ஹஸ்தயோ:। க$_3$திரிதி பாத$_3$யோ:। விமுக்திரிதி பாயௌ। இதி மானுஷீ: ஸமாஞா:।

वाचि வாசி (ப்ரஹ்மனை) வாக் இந்த்ரியத்தில் **क्षेमः इति** க்ஷேம: இதி மங்கள ரூபமாகவும் **प्राण-अपानयोः** ப்ராண-அபானயோ: ப்ராண அபானனிடத்தில் **योगक्षेमः इति** யோக$_3$க்ஷேம: இதி யோகக்ஷேம மாகவும் **हस्तयोः** ஹஸ்தயோ: கைகளில் **कर्म इति** கர்ம இதி செயலாகவும் **पादयोः** பாத$_3$யோ: கால்களில் **गतिः इति** க$_3$தி: இதி அசைவாகவும் **पायौ** பாயௌ ஆசனவாயில் **विमुक्तिः इति** விமுக்தி: இதி வெளித்தள்ளுதலாகவும் (த்யானிக்க வேண்டும்). **इति मानुषीः** இதி மானுஷீ: இவை மனிதனுடன் ஸம்பந்தப்பட்ட **समाज्ञाः** ஸமாஞா: த்யானங்கள்.

ப்ரஹ்மனை வாக் இந்த்ரியத்தில் மங்கள ரூபமாகவும் ப்ராண அபானனிடத்தில் யோகக்ஷேமமாகவும் கைகளில் செயலாகவும் கால்களில் அசைவாகவும் ஆசனவாயில் வெளித்தள்ளுதலாகவும் த்யானிக்க வேண்டும். இவை மனிதனுடன் ஸம்பந்தப்பட்ட த்யானங்கள்.

अथ दैवीः। तृप्तिरिति वृष्टौ। बलमिति विद्युति। यश इति पशुषु। ज्योतिरिति नक्षत्रेषु। प्रजातिरमृतमानन्द इत्युपस्थे। सर्वमित्याकाशे।

அத$_2$ தை$_3$வீ:। த்ருப்திரிதி வ்ருஷ்டௌ। ப$_3$லமிதி வித்$_3$யுதி। யச$_1$ இதி பசு$_1$ஷு। ஜ்யோதிரிதி நக்ஷத்ரேஷு। ப்ரஜாதிர ம்ருதமானந்த$_3$ இத்யுபஸ்தே$_2$। ஸர்வமித்யாகாசே$_1$।

उपस्थे உபஸ்தே$_2$ (ப்ரஹ்மனை) கருவாயில் **प्रजातिः** ப்ரஜாதி: உற்பத்தி செய்யும் சக்தியாகவும் **अमृतं** அம்ருதம் அம்ருதமாகவும் **आनन्दः इति** ஆனந்த$_3$: இதி ஆனந்தமாகவும் (த்யானிக்க வேண்டும்). **अथ** அத$_2$

இப்பொழுது **दैवी:** தை₃வீ: தேவதா ஸம்பந்தமான (த்யானம் வருகிறது). **वृष्टौ** வ்ருஷ்டௌ (ப்ரஹ்மனை) மழையில் **तृप्तिः इति** த்ருப்தி: இதி த்ருப்தியாகவும் **विद्युति** வித்₃யுதி மின்னலில் **बलं इति** ப₃லம் இதி சக்தியாகவும் **पशुषु** பசு₁ஷு பசுக்களில் **यशः इति** யச₁: இதி புகழாகவும் **नक्षत्रेषु** நக்ஷத்ரேஷு நக்ஷத்ரங்களில் **ज्योतिः इति** ஜ்யோதி: இதி ஒளியாகவும் **आकाशे** ஆகாசே₁ ஆகாசத்தில் **सर्वं इति** ஸர்வம் இதி அனைத்துமாகவும் (த்யானிக்க வேண்டும்).

ப்ரஹ்மனை, கருவாயில் உற்பத்தி செய்யும் சக்தியாகவும் அம்ருதமாகவும் ஆனந்தமாகவும் த்யானிக்க வேண்டும். இப்பொழுது தேவதா ஸம்பந்தமான த்யானம் வருகிறது. ப்ரஹ்மனை மழையில் த்ருப்தியாகவும் மின்னலில் சக்தி யாகவும் பசுக்களில் புகழாகவும் நக்ஷத்ரங்களில் ஒளியாகவும் ஆகாசத்தில் அனைத்துமாகவும் த்யானிக்க வேண்டும்.

तत् प्रतिष्ठेत्युपासीत। प्रतिष्ठावान् भवति। तन्मह इत्युपासीत। महान् भवति। तन्मन इत्युपासीत। मानवान् भवति। तन्नम इत्युपासीत। नम्यन्तेऽस्मै कामाः। तद् ब्रह्मेत्युपासीत। ब्रह्मवान् भवति। तद् ब्रह्मणः परिमर इत्युपासीत। पर्येणं म्रियन्ते द्विषन्तः सपत्नाः। परि येऽप्रिया भ्रातृव्याः।

தத் ப்ரதிஷ்டே₂த்யுபாஸீத । ப்ரதிஷ்டா₂வான் ப₄வதி । தந்மஹ இத்யுபாஸீத । மஹான் ப₄வதி । தந்மன இத்யுபாஸீத । மானவான் ப₄வதி । தந்நம இத்யுபாஸீத । நம்யந்தேऽஸ்மை காமா: । தத்₃ ப்₃ரஹ்மேத்யுபாஸீத । ப்₃ரஹ்மவான் ப₄வதி । தத்₃ ப்₃ரஹ்மண: பரிமர இத்யுபாஸீத । பர்யேணம் ம்ரியந்தே த்₃விஷந்த: ஸபத்நா: । பரி யேऽப்ரியா ப்₄ராத்ருவ்யா: ।

तत् தத் அதை (ப்ரஹ்மனிடமிருந்து வேறாக இல்லாத ஆகாசத்தை) **प्रतिष्ठा इति** ப்ரதிஷ்டா₂ இதி ஆதாரமாக **उपासीत** உபாஸீத த்யானிக்க வேண்டும். (அவ்வாறு த்யானிப்பவன்) **प्रतिष्ठावान् भवति**

ப்ரதிஷ்டா$_2$வான் ப$_4$வதி ஆதாரத்தை அடைகிறான். **तत्** தத் அதை **महः इति** மஹ: இதி மேலானது என்று **उपासीत** உபாஸீத த்யானிக்கவேண்டும். (அவ்வாறு த்யானிப்பவன்) **महान् भवति** மஹான் ப$_4$வதி மேலானவன் ஆகிறான். **तत्** தத் அதை **मनः इति** மன: இதி சிந்திக்கும் திறனாக **उपासीत** உபாஸீத த்யானிக்க வேண்டும். (அவ்வாறு த்யானிப்பவன்) **मानवान् भवति** மானவான் ப$_4$வதி சிந்திக்கும் திறனுடையவனாகிறான். **तत्** தத் அதை **नमः इति** நம: இதி வணங்கத்தக்கதாக **उपासीत** உபாஸீத த்யானிக்க வேண்டும். **अस्मै** அஸ்மை அவனை (அவ்வாறு த்யானிப்பவனை) **कामाः** காமா: இன்பங்கள் **नम्यन्ते** நம்யந்தே வணங்குகின்றன. **तत्** தத் அதை **ब्रह्म इति** ப்$_3$ரஹ்ம இதி பெரியதாக **उपासीत** உபாஸீத த்யானிக்க வேண்டும். (அவ்வாறு த்யானிப்பவன்) **ब्रह्मवान् भवति** ப்$_3$ரஹ்மவான் ப$_4$வதி பெரியவன் ஆகிறான். **तत्** தத் அதை **ब्रह्मणः** ப்$_3$ரஹ்மண: ப்ரஹ்மனின் **परिमरः इति** பரிமர: இதி அழிக்கும் கருவியாக **उपासीत** உபாஸீத த்யானிக்க வேண்டும். **एनं** ஏனம் இவனை (அவ்வாறு த்யானிப்பவனை) **द्विषन्तः** த்$_3$விஷந்த: வெறுக்கின்ற **सपत्नाः** ஸபத்னா: பகைவர்கள் **परिम्रियन्ते** பரிம்ரியந்தே அழிவார்கள். **ये अप्रियाः** யே அப்ரியா: (இவனால்) விரும்பப்படாத **भ्रातृव्याः** ப்$_4$ராத்ருவ்யா: பகைவர்கள் **परि(म्रियन्ते)** பரி(ம்ரியந்தே) அழிவார்கள்.

ப்ரஹ்மனிடமிருந்து வேறாக இல்லாத ஆகாசத்தை ஆதாரமாக த்யானிக்கவேண்டும். அவ்வாறு த்யானிப்பவன் ஆதாரத்தை அடைகிறான். அதை மேலானது என்று த்யானிக்கவேண்டும். அவ்வாறு த்யானிப்பவன் மேலானவன் ஆகிறான். அதை சிந்திக்கும் திறனாக த்யானிக்க வேண்டும். அவ்வாறு த்யானிப்பவன் சிந்திக்கும் திறனுடையவனாகிறான். அதை வணங்கத்தக்கதாக த்யானிக்க வேண்டும். அவ்வாறு த்யானிப்பவனை இன்பங்கள் வணங்குகின்றன. அதைப் பெரியதாக த்யானிக்க வேண்டும். அவ்வாறு த்யானிப்பவன் பெரியவன் ஆகிறான். அதை ப்ரஹ்மனின் அழிக்கும் கருவியாக த்யானிக்க வேண்டும். அவ்வாறு த்யானிப்பவனை

வெறுக்கின்ற பகைவர்கள் அழிவார்கள். இவனால் விரும்பப் படாத பகைவர்கள் அழிவார்கள்.

स यश्चायं पुरुषे। यश्चासावादित्ये। स एकः। स य एवंवित्। अस्माल्लोकात् प्रेत्य। एतमन्नमयमात्मानमुपसंक्रम्य। एतं प्राणमयमात्मानमुपसंक्रम्य। एतं मनोमयमात्मानमुपसंक्रम्य। एतं विज्ञानमयमात्मानमुपसंक्रम्य। एतमानन्दमयमात्मानमुपसंक्रम्य।

ஸ யச்₁சாயம் புருஷே। யச்₁சாஸாவாதி₃த்யே। ஸ ஏக:। ஸ ய ஏவம்வித்। அஸ்மால்லோகாத் ப்ரேத்ய। ஏதமன்னமயமாத்மானமுபஸங்க்ரம்ய। ஏதம் ப்ராணமயமாத்மானமுபஸங்க்ரம்ய। ஏதம் மனோமயமாத்மானமுபஸங்க்ரம்ய। ஏதம் விஞானமயமாத்மானமுபஸங்க்ரம்ய। ஏதமானந்த₃மயமாத்மானமுபஸங்க்ரம்ய।

यः च सः ய: ச ஸ: எந்த ஒரு **अयं** அயம் இது (ஆனந்தம்) **पुरुषे** புருஷே மனிதனிடத்தில் உண்டோ (அந்த ஆனந்தமும்) **यः च असौ** ய: ச அஸௌ எந்த ஒரு (ஆனந்தம்) **आदित्ये** ஆதி₃த்யே ஹிரண்ய கர்பரிடம் உண்டோ **सः एकः** ஸ: ஏக: (அந்த ஆனந்தமும்) ஒன்றே. **यः** ய: யார் **एवं** ஏவம் இவ்விதம் **वित्** வித் அறிகிறானோ **सः** ஸ: அவன் **अस्मात् लोकात्** அஸ்மாத் லோகாத் இந்த லோகத்திலிருந்து **प्रेत्य** ப்ரேத்ய விடுபட்டு **एतं** ஏதம் இந்த **अन्नमयं** அன்னமயம் அன்ன மயமாக உள்ள **आत्मानं** ஆத்மானம் ஆத்மாவை **उपसङ्क्रम्य** உபஸங்க்ரம்ய கடந்து **एतं प्राणमयं आत्मानं** ஏதம் ப்ராண மயம் ஆத்மானம் இந்த ப்ராணமயமாக உள்ள ஆத்மாவை **उपसङ्क्रम्य** உபஸங்க்ரம்ய கடந்து **एतं मनोमयं आत्मानं** ஏதம் மனோமயம் ஆத்மானம் இந்த மனோமயமாக உள்ள ஆத்மாவை **उपसङ्क्रम्य** உபஸங்க்ரம்ய கடந்து **एतं विज्ञानमयं आत्मानं** ஏதம் விஞானமயம் ஆத்மானம் இந்த விஞானமயமாக உள்ள ஆத்மாவை **उपसङ्क्रम्य** உபஸங்க்ரம்ய கடந்து **एतं आनन्दमयं आत्मानं** ஏதம் ஆனந்த₃மயம்

ஆத்மானம் இந்த ஆனந்தமயமாக உள்ள ஆத்மாவை **उपसङ्क्रम्य** உபஸங்க்ரம்ய கடந்து...

எந்த ஒரு ஆனந்தம் மனிதனிடத்தில் உண்டோ அந்த ஆனந்தமும், எந்த ஒரு ஆனந்தம் ஹிரண்யகர்பரிடம் உண்டோ அந்த ஆனந்தமும் ஒன்றே. யார் இவ்விதம் அறிகிறானோ அவன் இந்த லோகத்திலிருந்து விடுபட்டு இந்த அன்னமயமாக உள்ள ஆத்மாவைக் கடந்து, இந்த ப்ராண மயமாக உள்ள ஆத்மாவைக் கடந்து, இந்த மனோமயமாக உள்ள ஆத்மாவைக் கடந்து, இந்த விஞானமயமாக உள்ள ஆத்மாவைக் கடந்து, இந்த ஆனந்தமயமாக உள்ள ஆத்மாவைக் கடந்து...

इमान् लोकान् कामान्नी कामरूप्यनुसञ्चरन्। एतत्साम गायन्नास्ते। हा ३ वु हा ३ वु हा ३ वु। अहमन्नमहमन्नमहमन्नम्। अहमन्नादो २ ऽहमन्नादो २ ऽहमन्नादः। अहँश्लोककृदहँ श्लोककृदहँ श्लोककृत्। अहमस्मि प्रथमजा ऋता ३ स्य। पूर्वं देवेभ्यो अमृतस्य ना ३ भायि। यो मा ददाति स इदेवमा ३ वाः। अहमन्नमन्नमदन्तमा ३ द्मि। अहं विश्वं भुवनमभ्यभवाम्। सुवर्नज्योतीः। य एवं वेद। इत्युपनिषत्॥

இமான் லோகான் காமான்னீ காமரூப்யனுஸஞ்சரன் । ஏதத் ஸாமகா$_3$யன்னாஸ்தே । ஹா 3 வு ஹா 3 வு ஹா 3 வு । அஹமன்னமஹமன்னமஹமன்னம் । அஹமன்னாதோ$_3$ 2 ऽஹமன்னாதோ$_3$ 2 ऽஹமன்னாத$_3$: । அஹம்ச்$_1$லோகக்ருத$_3$ஹம் ச்$_1$லோகக்ருத$_3$ஹம் ச்$_1$லோகக்ருத் । அஹமஸ்மி ப்ரத$_2$மஜா ரிதா 3 ஸ்ய । பூர்வம் தே$_3$வேப்$_4$யோ அம்ருதஸ்ய நா 3 பா$_4$யி । யோ மா த$_3$தா$_3$தி ஸ இதே$_3$வமா 3 வா: । அஹமன்னமன்னமத$_3$ந்தமா 3 த்$_3$மி । அஹம் விச்$_1$வம் பு$_4$வனமப்$_4$யப$_4$வாம் । ஸுவர்ந ஜ்யோதீ: । ய ஏவம் வேத$_3$ । இத்யுபநிஷத் ।।

कामान्नी காமான்னீ விருப்பம் போல் சாப்பிட்டுக்கொண்டு **कामरूपी** காமரூபீ விரும்பிய உருவத்தை எடுத்துக்கொண்டு **एतत् साम** ஏதத் ஸாம இந்தப் பாடலை **गायन्** கா₃யன் பாடிக்கொண்டு **इमान् लोकान्** இமான் லோகான் இந்த உலகங்களில் **अनुसञ्चरन्** அனுஸஞ்சரன் ஸஞ்சரித்துக் கொண்டு **आस्ते** ஆஸ்தே வாழ்கிறான். **हा वु** ஹா வு ஆச்சர்யம் **हा वु** ஹா வு ஆச்சர்யம் **हा वु** ஹா வு ஆச்சர்யம். **अहं अन्नं** அஹம் அன்னம் நானே உணவு **अहं अन्नं** அஹம் அன்னம் நானே உணவு **अहं अन्नं** அஹம் அன்னம் நானே உணவு. **अहं अन्नादः** அஹம் அன்னாத₃: நான் உணவை உண்பவன் **अहं अन्नादः** அஹம் அன்னாத₃: நான் உணவை உண்பவன் **अहं अन्नादः** அஹம் அன்னாத₃: நான் உணவை உண்பவன். **अहं श्लोककृत्** அஹம் ச்₁லோகக்ருத் நான் படைப்பவன் **अहं श्लोककृत्** அஹம் ச்₁லோகக்ருத் நான் படைப்பவன் **अहं श्लोककृत्** அஹம் ச்₁லோகக்ருத் நான் படைப்பவன். **अहं** அஹம் நான் **देवेभ्यः** தே₃வேப்₄ய: தேவர்களுக்கு **पूर्वं** பூர்வம் முன்னும் **ऋतस्य** ரிதஸ்ய இப்படைப்பின் **प्रथमजा** ப்ரத₂மஜா முதலில் தோன்றியவனாக **अस्मि** அஸ்மி உள்ளேன். **अमृतस्य** அம்ருதஸ்ய அம்ருதத்தின் **ना भायि (नाभिः)** நா பா₄யி (நாபி₄:) மையமாக உள்ளேன். **यः** ய: யார் **मा** மா (அன்னமாக உள்ள) என்னை **ददाति** த₃தா₃தி பகிர்ந்துகொள்கிறானோ **इत् एव** இத் ஏவ அவ்விதம் செய்வதனால் **सः** ஸ: அவன் **मा** மா என்னை **अवाः** அவா: காக்கிறான். **अन्नं अहं** அன்னம் அஹம் உணவாக இருக்கின்ற நான் **अन्नं** அன்னம் (பகிர்ந்துகொள்ளாமல்) உணவு **अदन्तं** அத₃ந்தம் உண்பவனை **अद्मि** அத்₃மி உண்ணுகிறேன். **अहं** அஹம் நான் **सुवः** ஸுவ: ஸூர்யனுடைய **ज्योतीः** ஜ்யோதீ: ஒளியை **न** ந போல **विश्वं** விச்₁வம் முழு **भुवनं** பு₄வனம் உலகையும் **अभ्यभवां** அப்₄யப₄வாம் வ்யாபிக்கிறேன். **यः** ய: யார் **एवं** ஏவம் இவ்விதம் **वेद** வேத₃ அறிகிறானோ (அவன் முக்தியடைகிறான்) **इति** இதி இவ்விதம் **उपनिषत्** உபநிஷத் உபநிஷத் (முடிவடைகிறது).

விருப்பம்போல் சாப்பிட்டுக்கொண்டு, விரும்பிய உருவத்தை எடுத்துக்கொண்டு, இந்தப் பாடலைப் பாடிக் கொண்டு, இந்த

உலகங்களில் ஸஞ்சரித்துக்கொண்டு வாழ்கிறான். ஆச்சர்யம், ஆச்சர்யம், ஆச்சர்யம். நானே உணவு, நானே உணவு, நானே உணவு. நான் உணவை உண்பவன், நான் உணவை உண்பவன், நான் உணவை உண்பவன். நான் படைப்பவன், நான் படைப்பவன், நான் படைப்பவன். நான் தேவர்களுக்கு முன்னும் இப்படைப்பின் முதலில் தோன்றியவனாக உள்ளேன். அம்ருதத்தின் மையமாக உள்ளேன். யார் அன்னமாக உள்ள என்னைப் பகிர்ந்துகொள்கிறானோ அவ்விதம் செய்வதனால் அவன் என்னைக் காக்கிறான். உணவாக இருக்கின்ற நான், பகிர்ந்துகொள்ளாமல் உணவு உண்பவனை உண்ணுகிறேன். நான், ஸூர்யனுடைய ஒளியைப்போல முழு உலகையும் வ்யாபிக்கிறேன். யார் இவ்விதம் அறிகிறானோ அவன் முக்தியடைகிறான். இவ்விதம் உபநிஷத் முடிவடைகிறது.

इति भृगुवल्ली


ப்ருகுவல்லி முடிவுற்றது.

।। तैत्तिरीयोपनिषत् समाप्ता ।।

தைத்திரீயோபநிஷத் முடிவுற்றது.

****

ஈசாவாஸ்யோபநிஷத்



ॐ

ईशावास्योपनिषद्

ஈசா₁வாஸ்யோபநிஷத்₃

சாரம்

இவ்வுபநிஷத் சுக்லயஜுர் வேதத்தில் அமைந்துள்ளது. இவ்வுலகம் அனைத்தும் ஈச்வரனால் வ்யாபிக்கப்பட்டுள்ளது என்று துவங்கு வதன் மூலம் ஈச்வரனுடைய ஸ்வரூபம் விளக்கப்படுகிறது. ஈச்வரன் இவ்வுலகுக்கு நிமித்த காரணமாகவும் உபாதான காரணம் ஆகவும் இருப்பதனால் உண்மையில் இவ்வுலகமே ஈச்வரனாக இருக்கின்றது. ஆகவேதான், ஈச்வரனால் இவ்வுலகமே வ்யாபிக்கப் பட்டுள்ளது என்ற வாக்யத்திற்கு, ஈச்வரனைப்பற்றிய ஞானத்தினால் இவ்வுலகமானது மறைக்கப்படவேண்டும் அதாவது உலகத்தில் உலகம் என்ற எண்ணத்தை நீக்கி, ஈச்வரன் என்ற உணர்வை வைக்கவேண்டும் என்றும் பொருள் சொல்லப்படுகிறது. இவ்விதம் ஈச்வரனைப் பற்றிய ஞானத்தைக் கொடுத்து, த்யாகத்தினால் உன்னைக் காப்பாற்றிக்கொள் என்றும் மற்றவர் பொருளை இச்சிக்காதே என்றும் உபநிஷத் அறிவுறுத்துகிறது (1).

யாரால் இந்த ஞானத்துக்கு வருவதற்கும் த்யாகத்துக்கும் தயாராக முடியவில்லையோ, அவர்கள் கர்மயோகப்படி வாழ்க்கையை மேற்கொண்டு தங்களைப் பண்படுத்தி வரவேண்டும். கர்மயோக வாழ்க்கை மேற்கொள்ளப்படும் பொழுது, கர்மமானது பந்தப் படுத்துவதற்குப் பதிலாக தகுதிப்படுத்துகிறது (2). இவ்விதம் ஞான யோகத்தையும் கர்ம யோகத்தையும் கூறியபின் அறியாமையில் இருப்பவர்களுடைய நிலை பேசப்படுகிறது. அஞானிகள் பிறந்து பிறந்து இறப்பதனால் அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்பவர்களுக்கு நிகராகிறார்கள் (3). பரப்ரஹ்ம தத்துவமானது அத்யாரோப-அபவாத ந்யாயப்படி விளக்கப்படுகிறது. அத்யாரோபம் என்றால் ஏற்றி வைத்தல். அபவாதம் என்றால் நீக்குதல். ப்ரஹ்மத்திற்கு அல்லாததை ப்ரஹ்மனில் ஏற்றிவைத்து,

பின், ஏற்றிவைத்தது நீக்கப்படுகிறது. இவ்விதம் செய்வதன் மூலம் ப்ரஹ்மன் இரண்டற்ற தத்துவம் என நிலைநாட்டப்படுகிறது. பர ப்ரஹ்மத்தில் ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களும் அவற்றின் தன்மைகளும் ஏற்றிவைக்கப்பட்டு, பிறகு உண்மையில் இவை அனைத்தும் அற்றதாக பரப்ரஹ்ம தத்துவம் விளக்கப்படுகிறது (4,5).

மெய்ப்பொருளைப்பற்றிய ஞானத்தை அடைந்தவன், தன்னையும் மற்ற உயிரினங்களையும் எவ்விதம் பார்க்கிறான் என்ற ஞானியின் பார்வை கூறப்பட்டு, அவ்வித ஞானத்தின் பலனும் பேசப் படுகிறது (6, 7). உடல்களும் அதன் தன்மைகளும் அற்றது ஆத்ம தத்துவம் என்று விளக்கப்படுகிறது (8). இப்பகுதியுடன் ஆத்ம தத்துவ விசாரம் முடிவடைகிறது.

வேதத்தில் சொன்ன கர்மங்களை மட்டும் ஆசைவசப்பட்டு செய்தால் ஸ்வர்கம் முதலிய லோகங்கள் பலனாகக் கிடைக்கின்றன. வேதத்தில் சொன்ன உபாஸனைகளை மட்டும் செய்தால் ஸ்வர்கத்தைக் காட்டிலும் மேலான சில லோகங்கள் பலனாகக் கிடைக்கின்றன. கர்மத்தையும் உபாஸனையையும் சேர்த்துச் செய்தால் ப்ரஹ்ம லோகம் பலனாக அடையப் பெறுகிறது. ப்ரஹ்மலோகம் அநித்தியமாக இருந்தபோதிலும், ஸம்ஸார வாழ்வில் அடையப்படும் உயர்ந்த பலனாகிறது. ஆகவே, கர்மத்தையும் உபாஸனையையும் தனித்தனியே செய்வதை உபநிஷத் நிந்தனை செய்து, இரண்டையும் சேர்த்துச் செய்ய வேண்டும் என்று கூறுகிறது. அதுபோல் இங்கு இரு உபாஸனைகளைத் தனித்தனியே செய்வதைக்காட்டிலும் சேர்த்துச் செய்தால் அதிகப் பலன் என்று குறிப்பிடப்படுகிறது (9 - 14).

கடைசி நான்கு மந்த்ரங்கள் (15 - 18) ப்ரார்த்தனைகளாக அமை கின்றன. குறிப்பாக ஸூர்யதேவனை அழைத்து, ஸத்யத்தை மறைக்கின்ற திரையை நீக்க வேண்டுதல் விடுக்கப்படுகின்றது. மேலும், மரணகாலத்தில் மனமானது தான் செய்த நல்ல செயல்களை நினைவுகூரவேண்டும் என்றும் மரணத்திற்குப்

பிறகு நல்ல பாதையில் அழைத்துச் செல்லவேண்டும் என்றும் வேண்டுதல் விடுக்கப்படுகின்றது.

இவ்விதம் முதல் எட்டு மந்த்ரங்களில் ஆத்மதத்துவ விசாரம் நடைபெற்று, பிறகு கர்ம உபாஸனா விஷயத்தில் அடையப் படும் பலனைக் கூறி, ப்ரார்த்தனையுடன் உபநிஷத் முடிவடைகிறது.

शान्तिपाठः

சா$_1$ந்திபாட$_2$:

पूर्णमदः पूर्णमिदं पूर्णात् पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ।
ओं शान्तिः शान्तिः शान्तिः ॥

பூர்ணமத$_3$: பூர்ணமித$_3$ம் பூர்ணாத் பூர்ணமுத$_3$ச்யதே ।
பூர்ணஸ்ய பூர்ணமாதா$_3$ய பூர்ணமேவாவசி$_1$ஷ்யதே ।
ஓம் சா$_1$ந்தி: சா$_1$ந்தி: சா$_1$ந்தி: ॥

अदः அத$_3$: அந்த (ஈச்வரன்) **पूर्णं** பூர்ணம் பூர்ணஸ்வரூபமானவர். **इदं** இத$_3$ம் இந்த (ஜீவன்) **पूर्णं** பூர்ணம் பூர்ணஸ்வரூபமானவன். **पूर्णात्** பூர்ணாத் பூர்ணமான (ஈச்வரனிடமிருந்து) **पूर्णं** பூர்ணம் பூர்ணமான (ஜீவன்) **उदच्यते** உத$_3$ச்யதே தோன்றியுள்ளான். **पूर्णस्य** பூர்ணஸ்ய பூர்ணமான (ஜீவனுடைய) **पूर्णं** பூர்ணம் பூர்ணஸ்வரூபத்தை **आदाय** ஆதா$_3$ய எடுத்துவிட்டால் **पूर्णं** பூர்ணம் பூர்ணம் **एव** ஏவ மட்டும் **अवशिष्यते** அவசி$_1$ஷ்யதே எஞ்சியுள்ளது. **ओं शान्तिः** ஓம் சா$_1$ந்தி: ஓம் சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி **शान्तिः** சா$_1$ந்தி: சாந்தி.

அந்த ஈச்வரன் பூர்ணஸ்வரூபமானவர். இந்த ஜீவன் பூர்ணஸ்வரூபமானவன். பூர்ணமான ஈச்வரனிடமிருந்து பூர்ணமான ஜீவன் தோன்றியுள்ளான். பூர்ணமான ஜீவனுடைய பூர்ணஸ்வரூபத்தை எடுத்துவிட்டால் பூர்ணம் மட்டும் எஞ்சியுள்ளது. ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

பூர்ணம் என்ற சொல்லுக்கு வரையறுக்கப்படாதது என்பது பொருள். காலத்தாலும் இடத்தாலும் குணத்தாலும் வரையறுக்கப் படாததாக உள்ளது, பூர்ணம் என்றும் ப்ரஹ்மன் என்றும் கூறப்படுகிறது. ஈச்வரனும் ஜீவனும் உண்மையில் பூர்ணமான தன்மையை யுடையவர்களே. வெளித்தோற்றத்தில் வேற்றுமையே தவிர ஸ்வரூபத்தில் வேற்றுமை இல்லை. கடலும் அலைகளும் நீர்

ஸ்வரூபமாக இருப்பது போல், ஈச்வரனும் ஜீவனும் பூர்ணஸ்வ ரூபமானவர்கள் அதாவது ப்ரஹ்ம ஸ்வரூபமானவர்கள்.

१. ईशा वास्यमिदँसर्वं यत्किञ्च जगत्यां जगत्।
तेन त्यक्तेन भुञ्जीथाः मा गृधः कस्यस्विद् धनम्॥

1. ஈசா$_1$ வாஸ்யமித$_3$ம்ஸர்வம் யத்கிஞ்ச ஜக$_3$த்யாம் ஜக$_3$த் ।
தேன த்யக்தேன பு$_4$ஞ்ஜீதா$_2$: மா க்$_3$ருத$_4$: கஸ்யஸ்வித்$_3$ த$_4$னம் ॥

जगत्यां ஜக$_3$த்யாம் பூமியில் **यत्किञ्च** யத்கிஞ்ச யாதொரு **जगत्** ஜக$_3$த் உலகம் உண்டோ **इदं सर्वं** இத$_3$ம் ஸர்வம் அவையனைத்தும் **ईशा** ஈசா$_1$ ஈச்வரனால் **वास्यं** வாஸ்யம் வ்யாபிக்கப்பட்டுள்ளது. **तेन त्यक्तेन** தேன த்யக்தேன த்யாகத்தால் **भुञ्जीथाः** பு$_4$ஞ்ஜீதா$_2$: (உன்னை) காப்பாற்றிக் கொள். **कस्यस्वित्** கஸ்யஸ்வித் யாருடைய **धनं** த$_4$னம் பொருளையும் **मा अगृधः** மா அக்$_3$ருத$_4$: அபகரிக்க இச்சை கொள்ளாதே.

பூமியில் யாதொரு உலகம் உண்டோ, அவையனைத்தும் ஈச்வரனால் வ்யாபிக்கப்பட்டுள்ளது. த்யாகத்தால் உன்னைக் காப்பாற்றிக்கொள். யாருடைய பொருளையும் அபகரிக்க இச்சை கொள்ளாதே.

२. कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतँसमाः।
एवं त्वयि नान्यथेतोऽस्ति न कर्म लिप्यते नरे॥

2. குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேச்ச$_2$தம்ஸமா: ।
ஏவம் த்வயி நாந்யதே$_2$தோऽஸ்தி ந கர்ம லிப்யதே நரே ॥

इह இஹ இங்கு (இவ்வுலகில்) **कर्माणि** கர்மாணி கர்மங்களை **कुर्वन् एव** குர்வன் ஏவ செய்து கொண்டுதான் **शतं** ச$_1$தம் நூறு **समाः** ஸமா: வருடங்கள் **जिजीविषेत्** ஜிஜீவிஷேத் வாழவிரும்பவேண்டும். **एवं** ஏவம் இப்படி விரும்புகின்ற **नरे** நரே மனிதனாகிய **त्वयि** த்வயி உனக்கு **इतः अन्यथा** இத: அன்யதா$_2$ (செயலில் ஈடுபடுவதைத்

தவிற) வேறு வழி **न अस्ति** ந அஸ்தி கிடையாது. **कर्म** கர்ம (இவ்விதம் வாழ்வதனால்) செயலானது **न लिप्यते** ந லிப்யதே (உனக்கு) பந்தத்தை உண்டுபண்ணாது.

இவ்வுலகில் கர்மங்களைச் செய்து கொண்டுதான் நூறு வருடங்கள் வாழ விரும்பவேண்டும். இப்படி விரும்புகின்ற மனிதனாகிய உனக்கு செயலில் ஈடுபடுவதைத்தவிற வேறு வழி கிடையாது. இவ்விதம் வாழ்வதனால் செயலானது உனக்கு பந்தத்தை உண்டுபண்ணாது.

३. असूर्या नाम ते लोका: अन्धेन तमसावृता: ।
तॉंस्ते प्रेत्याभिगच्छन्ति ये के चात्महनो जना: ।।

3. அஸூர்யா நாம தே லோகா: அந்தே₄ன தமஸாவ்ருதா: ।
தாம்ஸ்தே ப்ரேத்யாபி₄க₃ச்ச₂ந்தி யே கே சாத்மஹனோ ஜனா: ।।

आत्महन: ஆத்மஹன: தங்களை அழித்துக் கொள்கின்ற **जना:** ஜனா: மனிதர்கள் **ये के च** யே கே ச எவர்களோ **ते** தே அவர்கள் **असूर्या** அஸூர்யா அஸூர்யா (என்ற) **नाम** நாம பெயருடைய **अन्धेन** அந்தே₄ன அடர்ந்த **तमसा** தமஸா இருளால் **आवृता:** ஆவ்ருதா: மூடப்பட்ட **ते लोका:** தே லோகா: எந்த லோகங்கள் உண்டோ **तान्** தான் அதை (லோகங்களை) **प्रेत्य** ப்ரேத்ய மரணத்துக்குப் பின் **अभिगच्छन्ति** அபி₄க₃ச்ச₂ந்தி அடைகிறார்கள்.

தங்களை அழித்துக் கொள்கின்ற மனிதர்கள் எவர்களோ, அவர்கள் அஸூர்யா என்ற பெயருடைய அடர்ந்த இருளால் மூடப்பட்ட எந்த லோகங்கள் உண்டோ, அந்த லோகங்களை மரணத்துக்குப் பின் அடைகிறார்கள்.

இங்கு லோகம் என்ற சொல் சரீரத்தைக் குறிக்கின்றது.

४. अनेजदेकं मनसो जवीय: नैनद्देवा आप्नुवन् पूर्वमर्षत् ।
तद्धावतोऽन्यानत्येति तिष्ठत्तस्मिन्नपो मातरिश्वा दधाति ।।

4. அநேஜதே$_3$கம் மனஸோ ஜவீய:
நைனத்$_3$தே$_3$வா ஆப்னுவந் பூர்வமர்ஷத் ।
தத்$_3$தா$_4$வதோऽந்யானத்யேதி
திஷ்ட$_2$த்தஸ்மிந்நபோ மாதரிச்$_1$வா த$_3$தா$_4$தி ।।

अनेजत् அனேஜத் (இந்த ஆத்மதத்துவம்) சலனமற்றது. **एकं** ஏகம் (அனைவருக்குள்ளும்) ஒன்றாக இருக்கிறது. **मनसः** மனஸ: மனதைக்காட்டிலும் **जवीयः** ஜவீய: வேகமாகச் செல்கிறது. **एनत्** ஏனத் இதை **देवाः** தே$_3$வா: இந்த்ரிங்கள் **न आप्नुवन्** ந ஆப்னுவன் அடையவில்லை. (ஏனெனில் மனம் இதை நெருங்குவதற்கு) **पूर्वं** பூர்வம் முன்பே **अर्षत्** அர்ஷத் (இது) சென்றுவிட்டது. **धावतः** தா$_4$வத: ஓடுகின்ற **अन्यान्** அன்யான் (தனக்கு) வேறாக உள்ள (இந்த்ரியங்களை) **तत्** தத் அது **अत्येति** அத்யேதி கடந்து செல்கிறது. **तिष्ठत्** திஷ்ட$_2$த் (அதே சமயம்) அசைவற்றது. **तस्मिन्** தஸ்மின் அதன் இருப்பில் **मातरिश्वा** மாதரிச்$_1$வா ஹிரண்யகர்பர் **अपः** அப: கர்ம பலன்களை **दधाति** த$_3$தா$_4$தி வகுத்துக் கொடுக்கிறார்.

இந்த ஆத்ம தத்துவம் சலனமற்றது. அனைவருக்குள்ளும் ஒன்றாக இருக்கிறது. மனதைக்காட்டிலும் வேகமாகச் செல்கிறது. இதை இந்த்ரியங்கள் அடையவில்லை. ஏனெனில் மனம் இதை நெருங்குவதற்கு முன்பே இது சென்றுவிட்டது. ஓடுகின்ற தனக்கு வேறாக உள்ள இந்த்ரியங்களை அது கடந்து செல்கிறது. அதே சமயம் அசைவற்றது. அதன் இருப்பில் ஹிரண்யகர்பர் கர்ம பலன்களை வகுத்துக் கொடுக்கிறார்.

५. तदेजति तन्नैजति तद्दूरे तद्वन्तिके ।
तदन्तरस्य सर्वस्य तदु सर्वस्यास्य बाह्यतः ।।

5. ததே$_3$ஜதி தந்நைஜதி தத்$_3$தூ$_3$ரே தத்$_3$வந்திகே ।
தத$_3$ந்தரஸ்ய ஸர்வஸ்ய தது$_3$ ஸர்வஸ்யாஸ்ய பா$_3$ஹ்யத: ।।

तत् தத் அது **एजति** ஏஜதி அசைகிறது. **तत्** தத் அது **न एजति** ந ஏஜதி அசைவதில்லை. **तत्** தத் அது **दूरे** தூ$_3$ரே தொலைவில் உள்ளது. **तत् उ** தத் உ அது **अन्तिके** அந்திகே அருகில் உள்ளது. **तत्** தத் அது **अस्य सर्वस्य** அஸ்ய ஸர்வஸ்ய இவை அனைத்திற்கும் **अन्तः** அந்த: உள்ளே உள்ளது. **तत् उ** தத் உ அது **अस्य सर्वस्य** அஸ்ய ஸர்வஸ்ய இவை அனைத்திற்கும் **बाह्यतः** பா$_3$ஹ்யத: வெளியே உள்ளது.

அது அசைகிறது. அது அசைவதில்லை. அது தொலைவில் உள்ளது. அது அருகில் உள்ளது. அது இவை அனைத்திற்கும் உள்ளே உள்ளது. அது இவை அனைத்திற்கும் வெளியே உள்ளது.

இங்கு அது என்ற சொல்லில் ப்ரஹ்ம ஸ்வரூபமாக உள்ள ஆத்ம தத்துவம் குறிப்பிடப்படுகிறது.

௬. यस्तु सर्वाणि भूतानि आत्मन्येवानुपश्यति ।
सर्वभूतेषु चात्मानं ततो न विजुगुप्सते ॥

6. யஸ்து ஸர்வாணி பூ$_4$தானி ஆத்மன்யேவானுபச்$_1$யதி ।
ஸர்வபூ$_4$தேஷு சாத்மானம் ததோ ந விஜுகு$_3$ப்ஸதே ॥

यः तु ய: து யார் **सर्वाणि भूतानि** ஸர்வாணி பூ$_4$தானி அனைத்து உயிரினங்களையும் **आत्मनि एव** ஆத்மனி ஏவ தன்னிடத்திலேயே **अनुपश्यति** அனுபச்$_1$யதி பார்க்கின்றாரோ **सर्वभूतेषु** ஸர்வபூ$_4$தேஷு எல்லா உயிரினங்களிலும் **आत्मानं च** ஆத்மானம் ச தன்னை (பார்க்கின்றாரோ அவர்) **ततः** தத: அதனால் (அவ்விதமான அறிவை அடைந்ததால்) **न विजुगुप्सते** ந விஜுகு$_3$ப்ஸதே (யாரையும்) நிந்தனை செய்யமாட்டார்.

யார் அனைத்து உயிரினங்களையும் தன்னிடத்திலேயே பார்க்கின்றாரோ, எல்லா உயிரினங்களிலும் தன்னைப் பார்க்கின்றாரோ, அவர் அவ்விதமான அறிவை அடைந்ததால் யாரையும் நிந்தனை செய்ய மாட்டார்.

७. यस्मिन् सर्वाणि भूतानि आत्मैवाभूद् विजानतः।
तत्र को मोहः कः शोकः एकत्वमनुपश्यतः ॥

7. யஸ்மின் ஸர்வாணி பூ$_4$தானி ஆத்மைவாபூ$_4$த்$_3$ விஜானத: ।
தத்ர கோ மோஹ: க: சோ$_1$க: ஏகத்வமனுபச்$_1$யத: ।।

एकत्वं ஏகத்வம் ஒருமையை **अनुपश्यतः** அனுபச்$_1$யத: பார்க்கின்றவனாகவும் **विजानतः** விஜானத: (உண்மையை) அறிபவனாகவும் உள்ளவனுக்கு **यस्मिन्** யஸ்மின் எப்பொழுது **सर्वाणि भूतानि** ஸர்வாணி பூ$_4$தானி எல்லா உயிரினங்களும் **आत्मा एव** ஆத்மா ஏவ ஆத்மாவாகவே **अभूत्** அபூ$_4$த் ஆனதோ **तत्र** தத்ர அப்பொழுது (அவருக்கு) **मोहः कः** மோஹ: க: மோகம் ஏது. **शोकः कः** சோ$_1$க: க: சோகம் ஏது.

ஒருமையைப் பார்க்கின்றவனாகவும் உண்மையை அறிபவனாகவும் உள்ளவனுக்கு எப்பொழுது எல்லா உயிரினங்களும் ஆத்மாவாகவே ஆனதோ, அப்பொழுது அவருக்கு மோகம் ஏது! சோகம் ஏது!

८. स पर्यगाच्छुक्रमकायमव्रणं अस्नाविरँशुद्धमपापविद्धम्।
कविर्मनीषी परिभूः स्वयम्भूर्याथातथ्यतोऽर्थान्
व्यदधाच्छाश्वतीभ्यः समाभ्यः॥

8. ஸ பர்யகா$_3$ச்சு$_2$க்ரமகாயமவ்ரணம் அஸ்னாவிரம் சு$_1$த்$_3$த$_4$மபாபவித்$_3$த$_4$ம் । கவிர்மனீஷீ பரிபூ$_4$: ஸ்வயம்பூ$_4$ர்யாதா$_2$தத்$_2$யதோऽர்தா$_2$ன் வ்யத$_3$தா$_4$ச்சா$_2$ச்$_1$வதீப்$_4$ய: ஸமாப்$_4$ய: ।।

सः ஸ: அவன் (ஆத்மா) **पर्यगात्** பர்யகா$_3$த் எங்கும் செல்பவன். **शुक्रं** சு$_1$க்ரம் சுத்தமானவன். **अकायं** அகாயம் சரீரம் அற்றவன். **अव्रणं** அவ்ரணம் வெட்டுப்படாதவன். **अस्नाविरं** அஸ்னாவிரம் நரம்பு இல்லாதவன். **शुद्धं** சு$_1$த்$_3$த$_4$ம் தூய்மையானவன். **अपापविद्धं** அபாப வித்$_3$த$_4$ம் பாபம் அற்றவன். **कविः** கவி: அனைத்தையும் அறிபவன்.

मनीषी மனீஷீ மனதை ஆள்பவன். **परिभूः** பரிபூ$_4$: எல்லாமாக இருப்பவன். **स्वयम्भूः** ஸ்வயம்பூ$_4$: தானே தோன்றியவன். **याथातथ्यतः** யாதா$_2$தத்$_2$யத: அவரவர்கள் செய்த கர்ம உபாஸனைகளுக்குத் தக்கபடி **अर्थान्** அர்தா$_2$ன் ஆற்றவேண்டிய கடமைகளை (வகுத்துக் கொடுக்கும் சக்தியை) **शाश्वतीभ्यः** சா$_1$ச்$_1$வதீப்$_4$ய: அதிககாலம் இருக்கின்ற **समाभ्यः** ஸமாப்$_4$ய: ப்ரஜாபதிக்கு **व्यदधात्** வ்யத$_3$தா$_4$த் (ஈச்வரன்) கொடுத்தார்.

அந்த ஆத்மா எங்கும் செல்பவன். சுத்தமானவன். சரீரம் அற்றவன். வெட்டுப்படாதவன். நரம்பு இல்லாதவன். தூய்மை யானவன். பாபம் அற்றவன். அனைத்தையும் அறிபவன். மனதை ஆள்பவன். எல்லாமாக இருப்பவன். தானே தோன்றியவன். அவரவர்கள் செய்த கர்ம, உபாஸனைகளுக்குத் தக்கபடி ஆற்ற வேண்டிய கடமைகளை வகுத்துக்கொடுக்கும் சக்தியை அதிககாலம் இருக்கின்ற ப்ரஜாபதிக்கு ஈச்வரன் கொடுத்தார்.

ஆத்மாவைப்பற்றிய தன்மைகள் கூறப்பட்டு, இவ்வாத்ம தத்துவமே ஈச்வரனாகவும் இருக்கும் தன்மை கூறப்படுகிறது. அந்தந்த ஜீவர்கள் செய்த கர்மத்திற்கேற்ற பலனை அவரவர்கள் அடைய வேண்டும் என்ற நியதியை ப்ரஜாபதிக்கு ஈச்வரன் புகட்டுகிறார்.

९. अन्धं तमः प्रविशन्ति येऽविद्यामुपासते।
ततो भूय इव ते तमः य उ विद्यायाँरताः ॥

9. அந்த$_4$ம் தம: ப்ரவிச$_1$ந்தி யேऽவித்$_3$யாமுபாஸதே।
தடோ பூ$_4$ய இவ தே தம: ய உ வித்$_3$யாயாம்ரதா: ॥

ये யே யார் **अविद्यां** அவித்$_3$யாம் கர்மத்தை **उपासते** உபாஸதே (மட்டும்) அனுஷ்டிக்கிறார்களோ (அவர்கள்) **अन्धं तमः** அந்த$_4$ம் தம: அடர்ந்த இருளை **प्रविशन्ति** ப்ரவிச$_1$ந்தி அடைகிறார்கள். **ये उ** யே உ யார் **विद्यायां** வித்$_3$யாயாம் உபாஸனையில் **रताः** ரதா: (மட்டும்) பற்று

உள்ளவர்களாக இருக்கிறார்களோ **ते** தே அவர்கள் **ततः** தத: அதைக் காட்டிலும் **भूयः इव** பூ₄ய: இவ அதிகமான **तमः** தம: இருளை (அடைகிறார்கள்).

யார் கர்மத்தை மட்டும் அனுஷ்டிக்கிறார்களோ, அவர்கள் அடர்ந்த இருளை அடைகிறார்கள். யார் உபாஸனயில் மட்டும் பற்று உள்ளவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் அதைக் காட்டிலும் அதிகமான இருளை அடைகிறார்கள்.

உடலாலும் வாக்காலும் செய்யப்படும் செயல் கர்மம் என்றும் மனதால் செய்யப்படும் த்யானம் உபாஸனம் என்றும் அழைக்கப் படுகிறது. வேதத்தில் கூறிய கர்மத்தை ஆசைவசப்பட்டு செய்வதால் அதன் பலனாக போகத்தை அனுபவிக்கிறான். போகத்துக்குச் செல்பவன் மோக்ஷத்திலிருந்து விலகிச் செல்வதால் அடர்ந்த இருளை அடைவதாகக் கூறப்படுகிறது. உபாஸனைக்குப் பலன் அதிகம். ஆகவே உபாஸனையை செய்பவன் அதிக போகத்தை அடைவதால் மோக்ஷத்திலிருந்து அதிகம் விலகுகிறான். ஆகவே அவன் அதிக இருளை அடைவதாகக் கூறப்படுகிறது.

१०. अन्यदेवाहुर्विद्यया अन्यदाहुरविद्यया ।
इति शुश्रुम धीराणां ये नस्तद्विचचक्षिरे ॥

10. அந்யதே₃வாஹுர்வித்₃யயா அந்யதா₃ஹுரவித்₃யயா ।
இதி சு₁ச்₁ரும தீ₄ராணாம் யே நஸ்தத்₃விசசக்ஷிரே ॥

विद्यया வித்₃யயா உபாஸனையால் **अन्यत् एव** அந்யத் ஏவ ஒரு பலன் உண்டாகின்றது என்று **आहुः** ஆஹு: கூறுகிறார்கள். **अविद्यया** அவித்₃யயா கர்மத்தினால் **अन्यत्** அன்யத் வேறு ஒரு பலன் உண்டாகின்றது என்று **आहुः** ஆஹு: கூறுகிறார்கள். **इति** இதி இவ்விதம் **नः** ந: எங்களுக்கு **ये** யே யார் **तत्** தத் அதை **विचचक्षिरे** விசசக்ஷிரே சொன்னார்களோ (அந்த) **धीराणां** தீ₄ராணாம் தீரர் களுடைய (வசனத்தை நாங்கள்) **शुश्रुम** சு₁ச்₁ரும கேட்டிருக்கிறோம்.

உபாஸனையால் ஒரு பலன் உண்டாகின்றது என்று கூறுகிறார்கள். கர்மத்தினால் வேறு ஒரு பலன் உண்டாகின்றது என்று கூறுகிறார்கள். இவ்விதம் எங்களுக்கு யார் அதைச் சொன்னார்களோ, அந்த தீரர்களுடைய வசனத்தை நாங்கள் கேட்டிருக்கிறோம்.

கர்மத்திற்கு குறைவான பலனும் உபாஸனைக்கு அதிக பலனும் உண்டு என்பது இங்கு கூறப்படும் மையக்கருத்து.

११. विद्यां चाविद्यां च यस्तद्वेदोभयँसह ।
अविद्यया मृत्युं तीर्त्वा विद्ययामृतमश्नुते ।।

11. வித்$_3$யாம் சாவித்$_3$யாம் ச யஸ்தத்$_3$வேதோ$_3$ப$_4$யம்ஸஹ ।
அவித்$_3$யயா ம்ருத்யும் தீர்த்வா வித்$_3$யயாம்ருதமச்$_1$னுதே ।।

य: ய: யார் **विद्यां च** வித்$_3$யாம் ச உபாஸனை **अविद्यां च** அவித்$_3$யாம் ச கர்மம் **तत् उभयं सह** தத் உப$_4$யம் ஸஹ ஆகிய இரண்டையும் சேர்த்து **वेद** வேத$_3$ அனுஷ்டிக்கிறாரோ (அவர்) **अविद्यया** அவித்$_3$யயா கர்மத்தினால் **मृत्युं** ம்ருத்யும் மரணத்தை **तीर्त्वा** தீர்த்வா தாண்டி **विद्यया** வித்$_3$யயா உபாஸனையினால் **अमृतं** அம்ருதம் தேவதா ஸ்வரூபத்தை **अश्नुते** அச்$_1$னுதே அடைகிறார்.

யார் உபாஸனை, கர்மம் ஆகிய இரண்டையும் சேர்த்து அனுஷ்டிக்கிறாரோ, அவர் கர்மத்தினால் மரணத்தைத் தாண்டி, உபாஸனையினால் தேவதா ஸ்வரூபத்தை அடைகிறார்.

கர்மத்தையும் உபாஸனையையும் சேர்த்து செய்வதால் ப்ரஹ்ம லோகத்தை அடைந்து அங்குள்ள தேவதை ஸ்வரூபமாக ஆகும் பலன் கிடைக்கிறது. இவையனைத்தும் காம்யமாக அதாவது ஆசைவசப்பட்டு செய்யும் செயலின் பலன். நிஷ்காம்ய கர்மமாக அதாவது கர்மயோகமாக செய்தால் மனத்தூய்மையும் மனஒருமுகப் பாட்டையும் அடைந்து மோக்ஷத்திற்கு தகுதியை அடையலாம். இங்கு காம்யமாக செய்வதன் பலன் பேசப்பட்டுள்ளது.

१२. अन्धं तमः प्रविशन्ति येऽसम्भूतिमुपासते।
ततो भूय इव ते तमः य उ सम्भूत्याँरताः ।।

12. அந்த$_4$ம் தம: ப்ரவிச$_1$ந்தி யேऽஸம்பூ$_4$திமுபாஸதே ।
ததோ பூ$_4$ய இவ தே தம: ய உ ஸம்பூ$_4$த்யாம்ரதா: ।।

ये யே யார் **असम्भूतिं** அஸம்பூ$_4$திம் ப்ரக்ருதியை **उपासते** உபாஸதே (மட்டும்) உபாஸிக்கிறார்களோ (அவர்கள்) **अन्धं तमः** அந்த$_4$ம் தம: அடர்ந்த இருளை **प्रविशन्ति** ப்ரவிச$_1$ந்தி அடைகிறார்கள். **ये उ** யே உ யார் **सम्भूत्यां** ஸம்பூ$_4$த்யாம் ஹிரண்யகர்ப உபாஸனையில் **रताः** ரதா: (மட்டும்) பற்று உள்ளவர்களாக இருக்கிறார்களோ **ते** தே அவர்கள் **ततः** தத: அதைக்காட்டிலும் **भूयः इव** பூ$_4$ய: இவ அதிகமான **तमः** தம: இருளை (அடைகிறார்கள்).

யார் ப்ரக்ருதியை மட்டும் உபாஸிக்கிறார்களோ, அவர்கள் அடர்ந்த இருளை அடைகிறார்கள். யார் ஹிரண்யகர்ப உபாஸனையில் மட்டும் பற்று உள்ளவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் அதைக் காட்டிலும் அதிகமான இருளை அடைகிறார்கள்.

இங்கு இரண்டு உபாஸனைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 1. ப்ரக்ருதி உபாஸனம் 2. ஹிரண்யகர்ப உபாஸனம். இரண்டும் போகத்தைக் கொடுப்பதால் இருளை அடைவதாக கூறப் பட்டுள்ளது. இவ்விரண்டிற்கும் வேவ்வேறு பலன் உள்ளது என்றும் இவ்விரண்டையும் சேர்த்து செய்தால் மாயையில் ஒடுங்கி அடுத்த ஸ்ருஷ்டிவரை லயமாகவே அதாவது பிறப்பின்றி இருக்கின்ற பலனும் இனி பேசப்படுகிறது. இங்கும் காம்யமாக செய்யப்படுவதால் வரும் பலனே கூறப்பட்டுள்ளது.

१३. अन्यदेवाहुः सम्भवाद् अन्यदाहुरसंभवात्।
इति शुश्रुम धीराणां ये नस्तद्विचचक्षिरे ।।

13. அந்யதே3வாஹு: ஸம்ப4வாத்3 அந்யதா3ஹுரஸம்ப4வாத் ।
இதி சு1ச்1ரும தீ4ராணாம் யே நஸ்தத்3விசசக்ஷிரே ॥

सम्भवात् ஸம்ப4வாத் ஹிரண்யகர்ப உபாஸனைக்கு **अन्यत् एव्** அன்யத் ஏவ ஒரு பலன் உண்டாகின்றது என்று **आहुः** ஆஹு: கூறுகிறார்கள். **असम्भवात्** அஸம்ப4வாத் ப்ரக்ருதி உபாஸனைக்கு **अन्यत्** அன்யத் வேறு ஒரு பலன் உண்டாகின்றது என்று **आहुः** ஆஹு: கூறுகிறார்கள். **इति** இதி இவ்விதம் **नः** ந: எங்களுக்கு **ये** யே யார் **तत्** தத் அதை **विचचक्षिरे** விசசக்ஷிரே சொன்னார்களோ (அந்த) **धीराणां** தீ4ராணாம் தீரர்களுடைய (வசனத்தை நாங்கள்) **शुश्रुम** சு1ச்1ரும கேட்டிருக்கிறோம்.

ஹிரண்யகர்ப உபாஸனைக்கு ஒரு பலன் உண்டாகின்றது என்று கூறுகிறார்கள். ப்ரக்ருதி உபாஸனைக்கு வேறு ஒரு பலன் உண்டாகின்றது என்று கூறுகிறார்கள். இவ்விதம் எங்களுக்கு யார் அதைச் சொன்னார்களோ, அந்த தீரர் களுடைய வசனத்தை நாங்கள் கேட்டிருக்கிறோம்.

१४. सम्भूतिं च विनाशं च यस्तद्वेदोभयँसह ।
विनाशेन मृत्युं तीर्त्वा सम्भूत्यामृतमश्नुते ।।

14. ஸம்பூ4திம் ச விநாச1ம் ச யஸ்தத்3வேதோ3ப4யம் ஸஹ ।
விநாசே1ன ம்ருத்யும் தீர்த்வா ஸம்பூ4த்யாம்ருதமச்1னுதே ॥

यः ய: யார் **(अ) सम्भूतिं च विनाशं च** (அ) ஸம்பூ4திம் ச விநாச1ம் ச ப்ரக்ருதி உபாஸனை, ஹிரண்யகர்ப உபாஸனை **तत् उभयं सह** தத் உப4யம் ஸஹ ஆகிய இரண்டையும் சேர்த்தே **वेद** வேத3 அனுஷ்டிக்கின்றாரோ (அவர்) **विनाशेन** விநாசே1ன ஹிரண்யகர்ப உபாஸனையால் **मृत्युं** ம்ருத்யும் மரணத்தை **तीर्त्वा** தீர்த்வா தாண்டி **(अ) सम्भूत्या** (அ) ஸம்பூ4த்யா ப்ரக்ருதி உபாஸனையால் **अमृतं** அம்ருதம் ப்ரக்ருதியுடன் லயமாகின்ற பலனை **अश्नुते** அச்1னுதே அடைகிறார்.

யார் ப்ரக்ருதி உபாஸனை, ஹிரண்யகர்ப உபாஸனை ஆகிய இரண்டையும் சேர்த்தே அனுஷ்டிக்கின்றாரோ, அவர் ஹிரண்யகர்ப உபாஸனையால் மரணத்தைத் தாண்டி, ப்ரக்ருதி உபாஸனையால் ப்ரக்ருதியுடன் லயமாகின்ற பலனை அடைகிறார்.

१५. हिरण्मयेन पात्रेण सत्यस्यापिहितं मुखम् ।
तत्त्वं पूषन्नपावृणु सत्यधर्माय दृष्टये ॥

15. ஹிரண்மயேன பாத்ரேண ஸத்யஸ்யாபிஹிதம் முக$_2$ம் ।
தத்த்வம் பூஷந்நபாவ்ருணு ஸத்யத$_4$ர்மாய த்$_3$ருஷ்டயே ॥

हिरण्मयेन ஹிரண்மயேன தங்கம் போன்ற ஒளிமயமான **पात्रेण** பாத்ரேண பாத்திரத்தினால் **सत्यस्य** சத்யஸ்ய ஸத்யத்தின் **मुखं** முக$_2$ம் வாசல் **अपिहितं** அபிஹிதம் மூடப்பட்டிருக்கிறது. **पूषन्** பூஷன் ஸூர்யதேவரே **त्वं** த்வம் நீங்கள் **तत्** தத் அதை **सत्यधर्माय** ஸத்ய த$_4$ர்மாய உண்மையான தர்மத்தை அனுஷ்டிக்கின்ற (என்னுடைய) **दृष्टये** த்$_3$ருஷ்டயே பார்வைக்காக **अपावृणु** அபாவ்ருணு திறந்துவிடுவீர்களாக.

தங்கம் போன்ற ஒளிமயமான பாத்திரத்தினால் ஸத்யத்தின் வாசல் மூடப்பட்டிருக்கிறது. ஸூர்யதேவரே, நீங்கள் அதை, உண்மையான தர்மத்தை அனுஷ்டிக்கின்ற என்னுடைய பார்வைக்காகத் திறந்துவிடுவீர்களாக.

உலகில் உள்ள போகப்பொருள்கள் தங்கப்பாத்திரம் போல் உண்மையை மறைத்துள்ளன. நன்னெறியில் இருக்கும் எனக்கு மோஹத்தை நீக்கி அருளவேண்டும் என்பது இங்கு ப்ரார்த்தனை.

१६. पूषन्नेकर्षे यम सूर्य प्राजापत्य व्यूह रश्मीन्समूह ।
तेजो यत्ते रूपं कल्याणतमं तत्ते पश्यामि
योऽसावसौ पुरुषः सोऽहमस्मि ॥

16. பூஷந்நேகர்ஷே யம ஸூர்ய
ப்ராஜாபத்ய வ்யூஹ ரச்₁மீந்ஸமூஹ ।
தேஜோ யத்தே ரூபம் கல்யாணதமம் தத்தே பச்₁யாமி
யோऽஸாவஸௌ புருஷ: ஸோऽஹமஸ்மி ॥

पूषन् பூஷன் உலகை போஷிப்பவரே **एकर्षे** ஏகர்ஷே ஒருவராக செல்பவரே **यम** யம எல்லாவற்றையும் தன்வசம் வைத்துள்ளவரே **सूर्य** ஸூர்ய ஸூர்யதேவரே **प्राजापत्य** ப்ராஜாபத்ய ப்ரஜாபதியின் புத்ரரே **रश्मीन्** ரச்₁மீன் கிரணங்களை **व्यूह** வ்யூஹ விலக்கிக் கொள்வீராக. **तेज:** தேஜ: உஷ்ணமான ஒளியை **समूह** ஸமூஹ ஒடுக்கிக் கொள்வீராக. **ते** தே உங்களுடைய **यत् कल्याणतमं** யத் கல்யாணதமம் எந்த மங்களமான **रूपं** ரூபம் ரூபம் உண்டோ **तत्** தத் அதை **ते** தே உங்களுடைய (அருளால்) **पश्यामि** பச்₁யாமி பார்ப்பேனாக. **य:** ய: யார் **असौ पुरुष:** அஸௌ புருஷ: இந்தப் புருஷரோ **असौ स:** அஸௌ ஸ: அவரே **अहं अस्मि** அஹம் அஸ்மி நானாக இருக்கிறேன்.

உலகைப் போஷிப்பவரே, ஒருவராக செல்பவரே, எல்லாவற்றையும் தன்வசம் வைத்துள்ளவரே, ஸூர்யதேவரே, ப்ரஜாபதியின் புத்ரரே, கிரணங்களை விலக்கிக் கொள்வீராக. உஷ்ணமான ஒளியை ஒடுக்கிக் கொள்வீராக. உங்களுடைய எந்த மங்களமான ரூபம் உண்டோ, அதை உங்களுடைய அருளால் பார்ப்பேனாக. யார் இந்தப் புருஷரோ அவரே நானாக இருக்கிறேன்.

१७. वायुरनिलममृतमथेदं भस्मान्तँशरीरम् ।
ओं क्रतो स्मर कृतँस्मर क्रतो स्मर कृतँस्मर ॥

17. வாயுரநிலமம்ருதமதே₂த₃ம் ப₄ஸ்மாந்தம் ச₁ரீரம் ।
ஓம் க்ரதோ ஸ்மர க்ருதம்ஸ்மர க்ரதோ ஸ்மர க்ருதம்ஸ்மர ॥

वायु: வாயு: உடலில் உள்ள ப்ராணன் **अमृतं अनिलं** அம்ருதம் அனிலம் மரணமற்ற வாயுவான (ஹிரண்யகர்பரை அடையட்டும்). **अथ** அத₂ பிறகு **इदं शरीरं** இத₃ம் ச₁ரீரம் இந்த உடல் **भस्मान्तं** ப₄ஸ்மாந்தம்

சாம்பலாகட்டும். **ओं क्रतो** ஓம் க்ரதோ ஓ மனமே **स्मर** ஸ்மர நினைப்பாயாக. **कृतं** க்ருதம் செய்யப்பட்டதை **स्मर** ஸ்மர நினை. **क्रतो** க்ரதோ மனமே **स्मर** ஸ்மர நினைப்பாயாக. **कृतं** க்ருதம் செய்யப்பட்டதை **स्मर** ஸ்மர நினை.

உடலில் உள்ள ப்ராணன் மரணமற்ற வாயுவான ஹிரண்ய கர்பரை அடையட்டும். பிறகு இந்த உடல் சாம்பலாகட்டும். ஓ மனமே, நினைப்பாயாக. செய்யப்பட்டதை நினை. மனமே, நினைப்பாயாக. செய்யப்பட்டதை நினை.

१८. अग्ने नय सुपथा राये अस्मान्विश्वानि देव वयुनानि विद्वान्।
युयोध्यस्मज्जुहुराणमेनः भूयिष्ठां ते नम उक्तिं विधेम ।।

18. அக்$_3$னே நய ஸுபதா$_2$ ராயே
அஸ்மாந்விச்$_1$வானி தே$_3$வ வயுனானி வித்$_3$வான் ।
யுயோத்$_4$யஸ்மஜ்ஜுஹுராணமேன:
பூ$_4$யிஷ்டா$_2$ம் தே நம உக்திம் விதே$_4$ம ।।

अग्ने அக்$_3$னே அக்னிதேவரே **अस्मान्** அஸ்மாந் எங்களை **राये** ராயே கர்மபலனின் போகத்திற்காக **सुपथा** ஸுபதா$_2$ நல்ல பாதையில் **नय** நய அழைத்துச் செல்வீராக. **देव** தே$_3$வ தேவனே **विश्वानि** விச்$_1$வானி (நாங்கள் செய்த) அனைத்து **वयुनानि** வயுனானி கர்மங்களையும் உபாஸனைகளையும் **विद्वान्** வித்$_3$வான் அறிந்துள்ள (நீங்கள்) **अस्मत्** அஸ்மத் எங்களிடமிருந்து **जुहुराणं** ஜுஹுராணம் கீழான **एनः** ஏன: பாபத்தை **युयोधि** யுயோதி$_4$ விலக்குவீராக. **ते** தே உங்களுக்கு **भूयिष्ठां** பூ$_4$யிஷ்டா$_2$ம் வெகுவாய் **नमः उक्तिं** நம: உக்திம் நமஸ்கார வசனத்தை **विधेम** விதே$_4$ம சமர்ப்பிக்கிறோம்.

அக்னிதேவரே, எங்களைக் கர்மபலனின் போகத்திற்காக நல்ல பாதையில் அழைத்துச்செல்வீராக. தேவனே, நாங்கள்

செய்த அனைத்துக் கர்மங்களையும் உபாஸனைகளையும் அறிந்துள்ள நீங்கள் எங்களிடமிருந்து கீழான பாபத்தை விலக்குவீராக. உங்களுக்கு வெகுவாய் நமஸ்கார வசனத்தைச் சமர்ப்பிக்கிறோம்.

மரணத்திற்குப்பின் நல்ல கதியை அடையவேண்டும் என்பது இங்கு வேண்டுதல்.

॥ ईशावास्योपनिषत् समाप्ता ॥

ஈசாவாஸ்யோபநிஷத் முடிவுற்றது.

****


மாண்டூக்யோபநிஷத்

ॐ

माण्डूक्योपनिषद्

மாண்டூ$_3$க்யோபநிஷத்$_3$

சாரம்

அதர்வண வேதத்தில் அமைந்துள்ள இவ்வுபநிஷத் ஓங்காரத்தின் துணைகொண்டும் ஜீவன் அனுபவிக்கின்ற மூன்று அவஸ்தைகளின் துணைகொண்டும் ஆத்ம தத்துவத்தை விளக்குகிறது.

ஓம் என்கின்ற எழுத்தே இவை அனைத்தும் என்று கூறப்பட்டு ஓங்காரத்தைப் பற்றிய விசாரம் செய்யப்பட இருக்கின்றது என்று உறுதிமொழி அளிக்கப்படுகிறது (1). இவை அனைத்தும் ப்ரஹ்மன் என்று கூறப்பட்டு, இந்த ஆத்மாவே ப்ரஹ்மன் என்கின்ற மஹா வாக்யத்துடன் ஆத்மவிசாரம் ஆரம்பமாகிறது (2). ஆத்மா நான்கு பாதங்களாக அதாவது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முறையாக விளக்கப்படுகிறது. ஆத்மா, ஸ்தூல சரீரத்துடன் அபிமானம் வைக்கும்பொழுது விச்வன் என்ற பெயரைப் பெற்று வெளிஉலகத்தை அனுபவித்து விழிப்பு நிலையை அடைகிறது. இது ஆத்மாவின் முதல் பாதம் (3). அதே ஆத்மாவானது ஸூக்ஷ்மசரீரத்தை மட்டும் அபிமானிக்கும் பொழுது ஸூக்ஷ்ம மான பொருள்களை அனுபவித்துக் கனவு நிலையை அடைகிறது. அப்பொழுது ஆத்மாவுக்கு தைஜசன் என்ற பெயர் அமைகிறது. இது ஆத்மாவின் இரண்டாவது பாதம் (4). அதே ஆத்மாவானது காரணசரீரத்தை மட்டும் அபிமானிக்கும் பொழுது எந்தப் பொருள்களையும் அனுபவிக்காமல் அறியாமையையும் சுகத்தையும் மட்டும் அனுபவிக்கிறது. அப்பொழுது ஆத்மாவுக்கு ப்ராஜ்ஞன் என்ற பெயர் அமைகிறது. இது ஆத்மாவின் மூன்றாவது பாதம் (5). இவ்விதம் ஆத்ம தத்துவத்தில் மூன்று உடல்களும் அதன் விளைவாக வரும் மூன்று அவஸ்தைகளும் ஏற்றி வைக்கப்பட்ட பின், இவ்வனைத்து உலகமும் அதே ஆத்மாவில் ஏற்றி வைக்கப்படும்பொழுது ஈச்வரன் என்ற தத்துவம்

வெளிப்படுகிறது. அந்த ஈச்வரன், அனைத்தையும் அறிபவராகவும் அனைத்துக்கும் உபாதான காரணமாகவும் நிமித்த காரண மாகவும் விளங்குகிறார் (6).

ஆத்மாவின் மூன்று பாதங்கள் கூறப்பட்ட பின் நான்காவது பாதம் என்ன என்ற எதிர்பார்ப்பு வரும்பொழுது அப்பாதம் ஏழாவது மந்த்ரத்தில் விளக்கப்படுகிறது. நான்காவது என்பது ஸம்ஸ்க்ருதத்தில் துரீயம் என்று அழைக்கப்படுகின்றது. ஆத்மாவின் நான்காவது பாதம் ஓர் அவஸ்தை அல்ல. எந்த ஓர் அனாத்மாவுடனும் சம்பந்தப்பட்டதல்ல. அறிவு ஸ்வரூபமான எந்த ஓர் ஆத்மா மூன்று அவஸ்தைகளிலும் மாறாது ஒன்றாகவே இருந்து கொண்டி ருக்கிறதோ அந்த ஆத்மா, துரீயம் என்று அழைக்கப்படுகிறது. அந்த ஆத்மா விச்வன் அல்ல. ஆனால் அந்த ஆத்மாவைச் சார்ந்து விச்வன் இருக்கிறான். தூய ஆத்மாவுக்கு விச்வன், தைஜஸன், ப்ராஞன் என்ற தன்மைகள் பொய்யான சரீர நிமித்தமாக வந்துள்ளன. ஆகவே, ஆத்மாவின் துரீய ஸ்வரூபம் ஸத்யமாகவும், முதல் மூன்று அம்சங்கள் மித்யாவாகவும் இருக்கின்றன. அந்த துரீய ஆத்ம ஸ்வரூபம் விரிவாக விளக்கப்படுகின்றது (7).

ஓம் என்ற எழுத்து நான்கு அம்சங்களாகப் பிரிக்கப்படுகிறது. அதில் சப்த ரூபமாக மூன்று அம்சங்களும், சப்தமற்றதாக ஓர் அம்சமும் உள்ளன. சப்த ரூபமான மூன்று அம்சங்கள் முறையே அகாரம், உகாரம், மகாரம் அதாவது அ, உ, ம என்ற எழுத்துக்கள். இதில் இந்த மூன்று எழுத்துக்களும் முதல் மூன்று அவஸ்தைகளுடன் சேர்க்கப்படுகின்றன (8). ஆத்மாவின் முதல் பாதம் ஓங்காரத்தின் அகாரமாகவும் இரண்டாவது பாதம் உகார மாகவும் மூன்றாவது பாதம் மகாரமாகவும் இணைக்கப்படுகின்றன (9 - 11). ஓங்காரத்தின் சப்தமற்ற பாதம் துரீயத்துடன் இணைக்கப் படுகிறது. துரீயத்தின் இலக்கணம் மீண்டும் கூறப்படுகிறது (12).

शान्तिपाठः
சா1ந்திபாட2:

भद्रं कर्णेभिः शृणुयाम देवाः। भद्रं पश्येमाक्षभिर्यजत्राः। स्थिरैरङ्गैस्तुष्टुवाँसस्तनूभिः। व्यशेम देवहितं यदायुः। स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः। स्वस्ति नः पूषा विश्ववेदाः। स्वस्ति नस्ताक्ष्यो अरिष्टनेमिः। स्वस्ति नो बृहस्पतिर्दधातु। ओं शान्तिः शान्तिः शान्तिः ।।

ப4த்3ரம் கர்ணேபி4: ச்1ருணுயாம தே3வா:। ப4த்3ரம் பச்1யேமாக்ஷபி4ர்யஜத்ரா:। ஸ்தி2ரைரங்கை3ஸ்துஷ்டு வாம்ஸஸ்தனூபி4:। வ்யசே1ம தே3வஹிதம் யதா3யு:। ஸ்வஸ்தி ந இந்த்3ரோ வ்ருத்3த4ச்1ரவா:। ஸ்வஸ்தி ந: பூஷா விச்1வவேதா3:। ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டனேமி:। ஸ்வஸ்தி நோ ப்3ருஹஸ்பதிர் த3தா4து। ஓம் சா1ந்தி: சா1ந்தி: சா1ந்தி: ।।

देवाः தே3வா: தேவர்களே **कर्णेभिः** கர்ணேபி4: செவிகளால் **भद्रं** ப4த்3ரம் நல்லதை **शृणुयाम** ச்1ருணுயாம கேட்போமாக. **यजत्राः** யஜத்ரா: வணக்கத்திற்குரிய தேவர்களே **अक्षभिः** அக்ஷபி4: கண்களால் **भद्रं** ப4த்3ரம் நல்லதை **पश्येम** பச்1யேம பார்ப்போமாக. **स्थिरैः अङ्गैः** ஸ்தி2ரை: அங்கை3: உறுதியான உறுப்புக்களுடன் **तनूभिः** தனூபி4: வேதங்களால் (உங்களை நாங்கள்) **तुष्टुवांसः** துஷ்டுவாம்ஸ: புகழ்ந்துகொண்டு **यद् आयुः** யத்3 ஆயு: எவ்வளவு ஆயுள் **देवहितं** தே3வஹிதம் இறைவனால் (எங்களுக்கு) கொடுக்கப்பட்டுள்ளதோ (அதை) **व्यशेम** வ்யசே1ம அனுபவிப்போமாக. **वृद्धश्रवाः** வ்ருத்3த4ச்1ரவா: ஓங்கிய புகழையடைந்த **इन्द्रः** இந்த்3ர: இந்த்ரன் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **विश्ववेदाः** விச்1வவேதா3: அனைத்தையும் அறிகின்ற **पूषा** பூஷா ஸூர்யதேவர் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்).

अरिष्टनेमि: அரிஷ்டனேமி: தடையின்றிச்செல்லும் **तार्क्ष्य:** தார்க்ஷ்ய: கருடதேவர் **न:** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **बृहस्पति:** ப்$_3$ருஹஸ்பதி: (பேரறிவுடைய) ப்ருஹஸ்பதி **न:** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை **दधातु** த$_3$தா$_4$து அருளட்டும். **ओं शान्ति:** ஓம் சா$_1$ந்தி: ஓம் சாந்தி **शान्ति:** சா$_1$ந்தி: சாந்தி **शान्ति:** சா$_1$ந்தி: சாந்தி.

தேவர்களே, செவிகளால் நல்லதைக் கேட்போமாக. வணக்கத்திற்குரிய தேவர்களே, கண்களால் நல்லதைப் பார்ப்போமாக. உறுதியான உறுப்புக்களுடன் வேதங்களால் உங்களை நாங்கள் புகழ்ந்துகொண்டு எவ்வளவு ஆயுள் இறைவனால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதோ அதை அனுபவிப்போமாக. ஓங்கிய புகழையடைந்த இந்த்ரன் எங்களுக்கு நன்மையை அருளட்டும். அனைத்தையும் அறிகின்ற ஸூர்யதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். தடையின்றிச் செல்லும் கருடதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். பேரறிவுடைய ப்ருஹஸ்பதி எங்களுக்கு நன்மையை அருளட்டும். ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

१. **ओमित्येतदक्षरमिदँसर्वं तस्योपव्याख्यानं भूतं भवद्भविष्यदिति सर्वमोङ्कार एव। यच्चान्यत् त्रिकालातीतं तदप्योङ्कार एव॥**

1. ஓமித்யேதத$_3$க்ஷரமித$_3$ம்ஸர்வம் தஸ்யோபவ்யாக்$_2$யானம் பூ$_4$தம் ப$_4$வத்$_3$ப$_4$விஷ்யதி$_3$தி ஸர்வமோங்கார ஏவ। யச்சாந்யத் த்ரிகாலாதீதம் தத$_3$ப்யோங்கார ஏவ॥

ओं ஓம் ஓம் **इति** இதி என்கின்ற **एतत् अक्षरं** ஏதத் அக்ஷரம் இந்த எழுத்து **इदं सर्वं** இத$_3$ம் ஸர்வம் இவை அனைத்துமாக உள்ளது. **तस्य** தஸ்ய அதனுடைய (ஓங்காரத்தின்) **उपव्याख्यानं** உபவ்யாக்$_2$யானம் முழுமையான தெளிவான விளக்கம் (இப்பொழுது ஆரம்பிக்கப் படுகிறது). **भूतं** பூ$_4$தம் கடந்தது **भवत्** ப$_4$வத் இருப்பது

भविष्यत् ப₄விஷ்யத் வரப்போவது **इति सर्वं** இதி ஸர்வம் ஆகிய அனைத்தும் **ओङ्कारः एव** ஓங்காரः ஏவ ஓங்காரம் தான். **यत् च अन्यत्** யத் ச அன்யத் எந்த ஒன்று **त्रिकालातीतं** த்ரிகாலாதீதம் மூன்று காலத்தையும் கடந்துள்ளதோ **तत् अपि** தத் அபி அதுவும் **ओङ्कारः एव** ஓங்காரः ஏவ ஓங்காரமே.

ஓம் என்கின்ற இந்த எழுத்து இவை அனைத்துமாக உள்ளது. ஓங்காரத்தின் முழுமையான, தெளிவான விளக்கம் இப்பொழுது ஆரம்பிக்கப்படுகிறது. கடந்தது, இருப்பது, வரப்போவது ஆகிய அனைத்தும் ஓங்காரம்தான். எந்த ஒன்று மூன்று காலத்தையும் கடந்துள்ளதோ, அதுவும் ஓங்காரமே.

மூன்று காலத்தைக் கடந்துள்ளது என்பது இங்கு மாயா தத்துவத்தைக் குறிக்கிறது. தோன்றிய உலகமும் அதற்குக் காரணமான மாயையும் ஓங்காரத்தின் அகார-உகார-மகார ஸ்வரூபம். ஓங்காரத்தின் மற்றொரு அம்சமான அசப்தஸ்வரூபம் துரீய ஆத்மாவாகும். இந்த ஓங்கார விசாரம் எட்டாவது மந்த்ரத்திலிருந்து பன்னிரண்டாவது மந்த்ரம் வரை செய்யப்படும்.

२. सर्वं ह्येतद् ब्रह्म अयमात्मा ब्रह्म सोऽयमात्मा चतुष्पात् ॥

2. ஸர்வம்ஹ்யேதத்₃ ப்₃ரஹ்ம அயமாத்மா ப்₃ரஹ்ம
ஸோऽயமாத்மா சதுஷ்பாத் ॥

एतत् ஏதத் இவை **सर्वं** ஸர்வம் அனைத்தும் **ब्रह्म हि** ப்₃ரஹ்ம ஹி ப்ரஹ்மனே. **अयं** அயம் இந்த **आत्मा** ஆத்மா ஆத்மா **ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மன். **सः** ஸः அந்த (ப்ரஹ்மனான) **अयं** அயம் இந்த **आत्मा** ஆத்மா ஆத்மா **चतुष्पात्** சதுஷ்பாத் நான்கு பாதங்களை உடையது.

இவை அனைத்தும் ப்ரஹ்மனே. இந்த ஆத்மா ப்ரஹ்மன். அந்த ப்ரஹ்மனான இந்த ஆத்மா நான்கு பாதங்களை உடையது.

இங்கு ஆரம்பம் ஆகின்ற ஆத்மவிசாரம் ஏழாவது மந்த்ரத்தில் முடிவுறும். ஆத்மவிசாரம் என்பது நான் என்ற சொல்லின் உண்மையான பொருளைக் கண்டறிய மேற்கொள்ளப்படும் முயற்சி.

३. जागरितस्थानो बहिष्प्रज्ञः सप्ताङ्ग एकोनविंशतिमुखः स्थूलभुग् वैश्वानरः प्रथमः पादः ।।

3. ஜாக3ரிதஸ்தா2னோ ப3ஹிஷ்ப்ரஞு: ஸப்தாங்க3 ஏகோன விம்ச1திமுக2: ஸ்தூ2லபு4க்3 வைச்1வாநர: ப்ரத2ம: பாத3: ||

जागरितस्थान: ஜாக3ரிதஸ்தா2ன: விழிப்பு நிலையை உடைய **बहिष्प्रज्ञः** ப3ஹிஷ்ப்ரஞு: வெளிவிஷயங்களை அறிகின்ற **सप्ताङ्गः** ஸப்தாங்க3: ஏழு அங்கங்களை உடைய **एकोनविंशतिमुखः** ஏகோனவிம்ச1திமுக2: பத்தொன்பது வாய்களை உடைய **स्थूलभुक्** ஸ்தூ2லபு4க் ஸ்தூல விஷயங்களை அனுபவிக்கின்ற **वैश्वानरः** வைச்1வாநர: வைச்வாநரன் **प्रथमः** ப்ரத2ம: முதல் **पादः** பாத3: பாதம்.

விழிப்பு நிலையை உடைய, வெளிவிஷயங்களை அறிகின்ற, ஏழு அங்கங்களை உடைய, பத்தொன்பது வாய்களை உடைய, ஸ்தூல விஷயங்களை அனுபவிக்கின்ற வைச்வாநரன் முதல் பாதம்.

४. स्वप्नस्थानोऽन्तःप्रज्ञः सप्ताङ्ग एकोनविंशतिमुखः प्रविविक्तभुक् तैजसो द्वितीयः पादः ।।

4. ஸ்வப்னஸ்தா2னோऽந்த:ப்ரஞு: ஸப்தாங்க3 ஏகோனவிம்ச1தி முக2: ப்ரவிவிக்தபு4க் தைஜஸோ த்3விதீய: பாத3: ||

स्वप्नस्थानः ஸ்வப்னஸ்தா2ன: கனவு நிலையை உடைய **अन्तःप्रज्ञः** அந்த:ப்ரஞு: உள்விஷயங்களை அறிகின்ற **सप्ताङ्गः** ஸப்தாங்க3: ஏழு அங்கங்களை உடைய **एकोनविंशतिमुखः** ஏகோனவிம்ச1திமுக2: பத்தொன்பது வாய்களை உடைய **प्रविविक्तभुक्** ப்ரவிவிக்தபு4க் ஸூக்ஷ்ம விஷயங்களை அனுபவிக்கின்ற **तैजसः** தைஜஸ: தைஜஸன் **द्वितीयः** த்3விதீய: இரண்டாவது **पादः** பாத3: பாதம்.

கனவு நிலையை உடைய, உள்விஷயங்களை அறிகின்ற, ஏழு அங்கங்களை உடைய, பத்தொன்பது வாய்களை உடைய, ஸூக்ஷ்ம விஷயங்களை அனுபவிக்கின்ற தைஜஸன் இரண்டாவது பாதம்.

௫. यत्र सुप्तो न कञ्चन कामं कामयते न कञ्चन स्वप्नं पश्यति तत्सुषुप्तम्। सुषुप्तस्थान एकीभूतः प्रज्ञानघन एवानन्दमयो ह्यानन्दभुक् चेतोमुखः प्राज्ञस्तृतीयः पादः ॥

5. யத்ர ஸுப்தோ ந கஞ்சன காமம் காமயதே ந கஞ்சன ஸ்வப்னம் பச்$_1$யதி தத்ஸுஷுப்தம்। ஸுஷுப்தஸ்தா$_2$ன ஏகீபூ$_4$த: ப்ரஞானக$_4$ன ஏவானந்த$_3$மயோ ஹ்யானந்த$_3$பு$_4$க் சேதோமுக$_2$: ப்ராஞஸ்த்ருதீய: பாத$_3$: ॥

यत्र யத்ர எந்த நிலையில் இருக்கும்போது **सुप्तः** ஸுப்த: (ஒருவன் தன்னை) அறியாதவனாக இருக்கிறானோ **कञ्चन** கஞ்சன எந்த **कामं** காமம் பொருளையும் **न कामयते** ந காமயதே ஆசைப்படுவதில்லையோ **कञ्चन** கஞ்சன எந்த **स्वप्नं** ஸ்வப்னம் கனவையும் **न पश्यति** ந பச்$_1$யதி பார்ப்பதில்லையோ **तत्** தத் அது **सुषुप्तं** ஸுஷுப்தம் உறக்கநிலை. **सुषुप्तस्थानः** ஸுஷுப்தஸ்தா$_2$ன: உறக்கநிலையை உடைய **एकीभूतः** ஏகீபூ$_4$த: ஒன்றாக இருக்கின்ற **प्रज्ञानघनः एव** ப்ரஞானக$_4$ன: ஏவ விதவிதமான அறிவின்றி வெறும் அறிவின் குவியலாக மட்டும் உள்ள **आनन्दमयः** ஆனந்த$_3$மய: ஆனந்தமயமான **आनन्दभुक् हि** ஆனந்த$_3$பு$_4$க் ஹி ஆனந்தத்தை அனுபவிக்கின்ற **चेतोमुखः** சேதோமுக$_2$: விழிப்புக்கும் கனவுக்கும் வழியாக இருக்கின்ற **प्राज्ञः** ப்ராஞ: ப்ராஞன் **तृतीयः** த்ருதீய: மூன்றாவது **पादः** பாத$_3$: பாதம்.

எந்த நிலையில் இருக்கும்போது ஒருவன் தன்னை அறியாதவனாக இருக்கிறானோ, எந்தப் பொருளையும் ஆசைப் படுவதில்லையோ, எந்தக் கனவையும் பார்ப்பதில்லையோ அது உறக்கநிலை. உறக்கநிலையை உடைய, ஒன்றாக இருக்கின்ற, விதவிதமான அறிவின்றி வெறும் அறிவின்

குவியலாக மட்டும் உள்ள, ஆனந்தமயமான, ஆனந்தத்தை அனுபவிக்கின்ற, விழிப்புக்கும் கனவுக்கும் வழியாக இருக்கின்ற ப்ராஞன் மூன்றாவது பாதம்.

६. एष सर्वेश्वर एष सर्वज्ञ एषोऽन्तर्याम्येष योनिः सर्वस्य प्रभवाप्ययौ हि भूतानाम् ।।

6. ஏஷ ஸர்வேச்$_1$வர ஏஷ ஸர்வஞ ஏஷோऽந்தர்யாம்யேஷ யோனி: ஸர்வஸ்ய ப்ரப$_4$வாப்யயௌ ஹி பூ$_4$தானாம் ॥

एषः ஏஷ: இவர் **सर्वेश्वरः** ஸர்வேச்$_1$வர: அனைத்தையும் ஆள்பவர். **एषः** ஏஷ: இவர் **सर्वज्ञः** ஸர்வஞ: அனைத்தையும் அறிபவர். **एषः** ஏஷ: இவர் **अन्तर्यामी** அந்தர்யாமீ (அனைத்திலும்) ஊடுருவி இருப்பவர். **एषः** ஏஷ: இவர் **सर्वस्य** ஸர்வஸ்ய அனைத்திற்கும் **योनिः** யோனி: உபாதான காரணம். **भूतानां हि** பூ$_4$தானாம் ஹி எல்லா உயிரினங்களுடைய **प्रभव-अप्ययौ** ப்ரப$_4$வ-அப்யயௌ தோற்றத்துக்கும் லயத்துக்கும் (இருப்பிடமாக இவரே இருக்கிறார்).

இவர் அனைத்தையும் ஆள்பவர். இவர் அனைத்தையும் அறிபவர். இவர் அனைத்திலும் ஊடுருவி இருப்பவர். இவர் அனைத்திற்கும் உபாதான காரணம். எல்லா உயிரினங்களுடைய தோற்றத்துக்கும் லயத்துக்கும் இருப்பிடமாக இவரே இருக்கிறார்.

७. नान्तःप्रज्ञं न बहिष्प्रज्ञं नोभयतःप्रज्ञं न प्रज्ञानघनं न प्रज्ञं नाप्रज्ञम् । अदृष्टमव्यवहार्यमग्राह्यमलक्षणमचिन्त्यमव्यपदेश्यमेकात्मप्रत्ययसारं प्रपञ्चोपशमं शान्तं शिवमद्वैतं चतुर्थं मन्यन्ते स आत्मा स विज्ञेयः ।।

7. நாந்த:ப்ரஞம் ந ப$_3$ஹிஷ்ப்ரஞம் நோப$_4$யத:ப்ரஞம் ந ப்ர ஞானக$_4$னம் ந ப்ரஞம் நாப்ரஞம் । அத்$_3$ருஷ்டமவ்யவஹார்ய மக்$_3$ராஹ்யமலக்ஷணமசிந்த்யமவ்யபதே$_3$ச்$_1$யமேகாத்மப்ரத்யய

ஸாரம் ப்ரபஞ்சோபச₁மம் சா₁ந்தம் சி₁வமத்₃வைதம் சதுர்த₂ம் மன்யந்தே ஸ ஆத்மா ஸ விஞேய: ||

न बहिष्प्रज्ञं ந பஹிஷ்ப்ரஞும் (துரீயன்) வெளி விஷயங்களை அறிபவன் அல்ல. **न अन्त:प्रज्ञं** ந அந்த:ப்ரஞும் உள் விஷயங்களை அறிபவன் அல்ல. **न उभयत:प्रज्ञं** ந உப₄யத:ப்ரஞும் இடைப்பட்ட நிலையில் இருப்பவன் அல்ல. **न प्रज्ञानघनं** ந ப்ரஞானக₄னம் மொத்தமாக உள்ள சாமான்ய அறிவும் அல்ல. **न प्रज्ञं** ந ப்ரஞும் அனைத்தையும் சேர்ந்து அறிபவன் அல்ல. **न अप्रज्ञं** ந அப்ரஞும் ஜடமும் அல்ல. **अदृष्टं** அத்₃ருஷ்டம் (ஞானேந்த்ரியங்களினால்) அறியப்படாதது. **अव्यवहार्यं** அவ்யவஹார்யம் செயல்களுக்குள் வராதது. **अग्राह्यं** அக்₃ராஹ்யம் (கர்மேந்த்ரியங்களால்) க்ரஹிக்கப்படாதது. **अलक्षणं** அலக்ஷணம் யூகத்திற்கு அப்பாற்பட்டது. **अचिन्त्यं** அசிந்த்யம் சிந்தனைக்கு எட்டாதது. **अव्यपदेश्यं** அவ்யபதே₃ச்₁யம் வாக்கால் விளக்க முடியாதது. **एक-आत्म-प्रत्यय-सारं** ஏக-ஆத்ம- ப்ரத்யய-ஸாரம் நான் என்ற எண்ணத் தொடர்ச்சியினால் அறியப்படக் கூடியது. **प्रपञ्चोपशमं** ப்ரபஞ்சோபச₁மம் உலகமற்றது. **शान्तं** சா₁ந்தம் அமைதி ஸ்வரூபமானது. **शिवं** சி₁வம் மங்களரூபமானது. **अद्वैतं** அத்₃வைதம் இரண்டற்றது. **चतुर्थं** சதுர்த₂ம் நான்காவது (பாதத்தைப்போல்) **मन्यन्ते** மன்யந்தே கருதப்படுகிறது. **स:** ஸ: அதுவே **आत्मा** ஆத்மா ஆத்மா. **स:** ஸ: அதுவே **विज्ञेय:** விஞேய: அறியத்தக்கது.

துரீயன் வெளி விஷயங்களை அறிபவன் அல்ல. உள் விஷயங்களை அறிபவன் அல்ல. இடைப்பட்ட நிலையில் இருப்பவன் அல்ல. மொத்தமாக உள்ள சாமான்ய அறிவும் அல்ல. அனைத்தையும் சேர்ந்து அறிபவன் அல்ல. ஜடமும் அல்ல. ஞானேந்த்ரியங்களினால் அறியப்படாதது. செயல்களுக்குள் வராதது. கர்மேந்த்ரியங்களினால் க்ரஹிக்கப்படாதது. யூகத்திற்கு அப்பாற்பட்டது. சிந்தனைக்கு எட்டாதது. வாக்கால் விளக்க முடியாதது. நான் என்ற எண்ணத் தொடர்ச்சியினால் அறியப்படக்கூடியது. உலகமற்றது. அமைதி ஸ்வரூபமனாது. மங்களரூபமானது. இரண்டற்றது. நான்காவது பாதத்தைப் போல் கருதப்படுகிறது. அதுவே ஆத்மா. அதுவே அறியத்தக்கது.

८. सोऽयमात्माध्यक्षरमोङ्कारोऽधिमात्रं पादा मात्रा मात्राश्च पादा अकार उकारो मकार इति ।।

8. ஸோऽயமாத்மாத்$_4$யக்ஷரமோங்காரோऽதி$_4$மாத்ரம் பாதா$_3$ மாத்ரா மாத்ராச்$_1$ச பாதா$_3$ அகார உகாரோ மகார இதி ।।

स: अयं ஸ: அயம் அந்த **आत्मा** ஆத்மா ஆத்மாவே **अध्यक्षरं** அத்$_4$யக்ஷரம் ஓர் எழுத்தாகவும் **अधिमात्रं** அதி$_4$மாத்ரம் தனித்தனி எழுத்தாகவும் இருக்கின்ற **ओङ्कार:** ஓங்கார: ஓங்காரம் ஆகும். **पादा:** பாதா$_3$: பாதங்களே **मात्रा:** மாத்ரா: எழுத்துக்கள். **मात्रा: च** மாத்ரா: ச எழுத்துக்களே **पादा:** பாதா$_3$: பாதங்கள். **अकार:** அகார: அகாரம் **उकार:** உகார: உகாரம் **मकार:** மகார: மகாரம் **इति** இதி என்பன (ஓங்காரத்தின் எழுத்துக்கள்).

அந்த ஆத்மாவே, ஓர் எழுத்தாகவும் தனித்தனி எழுத்தாகவும் இருக்கின்ற ஓங்காரம் ஆகும். பாதங்களே எழுத்துக்கள். எழுத்துக்களே பாதங்கள். அகாரம், உகாரம், மகாரம் என்பன ஓங்காரத்தின் எழுத்துக்கள்.

९. जागरितस्थानो वैश्वानरोऽकार: प्रथमा मात्राप्तेरादिमत्त्वाद्वाप्नोति ह वै सर्वान्कामानादिश्च भवति य एवं वेद ।।

9. ஜாக$_3$ரிதஸ்தா$_2$னோ வைச்$_1$வாநரோऽகார: ப்ரத$_2$மா மாத்ராப் தேராதி$_3$மத்த்வாத்$_3$வாப்னோதி ஹ வை ஸர்வான்காமானா தி$_3$ச்$_1$ச ப$_4$வதி ய ஏவம் வேத$_3$ ।।

आप्ते: ஆப்தே: வ்யாபித்தல் (என்ற ஒற்றுமை)யாலும் **आदिमत्त्वात् वा** ஆதி$_3$மத்த்வாத் வா முதலாக இருத்தல் (என்ற ஒற்றுமை)யாலும் **जागरितस्थान:** ஜாக$_3$ரிதஸ்தா$_2$ன: விழிப்பு நிலையை உடைய **वैश्वानर:** வைச்$_1$வாநர: வைச்வாநரன் **अकार:** அகார: அகாரமான **प्रथमा** ப்ரத$_2$மா முதல் **मात्रा** மாத்ரா எழுத்து. **य:** ய: யார் **एवं** ஏவம் இவ்விதம் **वेद** வேத$_3$ த்யானிக்கிறானோ **सर्वान् कामान् ह वै**

ஸர்வான் காமான் ஹ வை (அவன்) அனைத்துப் பொருள்களையும் **आप्नोति** ஆப்னோதி அடைகிறான். **आदिः च** ஆதி$_3$: ச முதன்மையான வனாகவும் **भवति** ப$_4$வதி ஆகிறான்.

வ்யாபித்தல் என்ற ஒற்றுமையாலும் முதலாக இருத்தல் என்ற ஒற்றுமையாலும், விழிப்பு நிலையை உடைய வைச்வாநரன் அகாரமான முதல் எழுத்து. யார் இவ்விதம் த்யானிக்கிறானோ, அவன் அனைத்துப் பொருள்களையும் அடைகிறான். முதன்மை யானவனாகவும் ஆகிறான்.

१०. स्वप्रस्थानस्तैजस उकारो द्वितीया मात्रोत्कर्षादुभयत्वाद्वोत्कर्षति ह वै ज्ञानसन्ततिं समानश्च भवति नास्याब्रह्मवित्कुले भवति य एवं वेद ॥

10. ஸ்வப்னஸ்தா$_2$னஸ்தைஜஸ உகாரோ த்$_3$விதீயா மாத்ரோத் கர்ஷாது$_3$ப$_4$யத்வாத்$_3$வோத்கர்ஷதி ஹ வை ஞானஸந்ததிம் ஸமானச்$_1$ச ப$_4$வதி நாஸ்யாப்$_3$ரஹ்மவித்குலே ப$_4$வதி ய ஏவம் வேத$_3$ ॥

उत्कर्षात् உத்கர்ஷாத் மேலாக இருத்தல் (என்ற ஒற்றுமை)யாலும் **उभयत्वात् वा** உப$_4$யத்வாத் வா இடையில் இருத்தல் (என்ற ஒற்றுமை)யாலும் **स्वप्रस्थानः** ஸ்வப்னஸ்தா$_2$ன: கனவு நிலையை உடைய **तैजसः** தைஜஸ: தைஜஸன் **उकारः** உகார: உகாரமான **द्वितीया** த்$_3$விதீயா இரண்டாவது **मात्रा** மாத்ரா எழுத்து. **यः** ய: யார் **एवं** ஏவம் இவ்விதம் **वेद** வேத$_3$ த்யானிக்கிறானோ (அவன்) **ज्ञानसन्ततिं ह वै** ஞானஸந்ததிம் ஹ வை ஞானத்தின் பாரம்பர்யத்தை **उत्कर्षति** உத்கர்ஷதி வளர்க்கிறான். **समानः च** ஸமான: ச (அனைவரிடமும்) ஸமமாகவும் **भवति** ப$_4$வதி இருக்கிறான். **अस्य** அஸ்ய அவனுடைய **कुले** குலே குலத்தில் **अब्रह्मवित्** அப்$_3$ரஹ்மவித் ப்ரஹ்மனை அறியாதவர் **न भवति** ந ப$_4$வதி இருக்கமாட்டார்.

மேலாக இருத்தல் என்ற ஒற்றுமையாலும் இடையில் இருத்தல் என்ற ஒற்றுமையாலும், கனவு நிலையை உடைய தைஜஸன் உகாரமான இரண்டாவது எழுத்து. யார் இவ்விதம் த்யானிக்கிறானோ, அவன் ஞானத்தின் பாரம்பர்யத்தை வளர்க்கிறான். அனைவரிடமும் ஸமமாகவும் இருக்கிறான். அவனுடைய குலத்தில் ப்ரஹ்மனை அறியாதவர் இருக்க மாட்டார்.

११. सुषुप्तस्थानः प्राज्ञो मकारस्तृतीया मात्रा मितेरपीतेर्वा मिनोति ह वा इदँसर्वमपीतिश्च भवति य एवं वेद ।।

11. ஸுஷுப்தஸ்தா₂ன: ப்ராஜ்ஞோ மகாரஸ்த்ருதீயா மாத்ரா மிதேரபீதேர்வா மினோதி ஹ வா இத₃ம்ஸர்வமபீதிச்₁ச ப₄வதி ய ஏவம் வேத₃ ।।

मिते: மிதே: அளத்தல் (என்ற ஒற்றுமை)யாலும் **अपीतेः वा** அபீதே: வா ஒடுக்கத்தின் இருப்பிடமாக இருத்தல் (என்ற ஒற்றுமை)யாலும் **सुषुप्तस्थानः** ஸுஷுப்தஸ்தா₂ன: உறக்கநிலையை உடைய **प्राज्ञः** ப்ராஜ்ஞ: ப்ராஜ்ஞன் **मकारः** மகார: மகாரமான **तृतीया** த்ருதீயா மூன்றாவது **मात्रा** மாத்ரா எழுத்து. **यः** ய: யார் **एवं** ஏவம் இவ்விதம் **वेद** வேத₃ த்யானிக்கிறானோ (அவன்) **इदं सर्वं ह वै** இத₃ம் ஸர்வம் ஹ வை இவை அனைத்தையும் **मिनोति** மினோதி சரியாகப் புரிந்து கொள்வான். **अपीतिः च** அபீதி: ச ஒடுக்கத்தின் இருப்பிடமாகவும் **भवति** ப₄வதி ஆகிறான்.

அளத்தல் என்ற ஒற்றுமையாலும் ஒடுக்கத்தின் இருப் பிடமாக இருத்தல் என்ற ஒற்றுமையாலும், உறக்கநிலையை உடைய ப்ராஜ்ஞன் மகாரமான மூன்றாவது எழுத்து. யார் இவ்விதம் த்யானிக்கிறானோ, அவன் இவை அனைத்தையும் சரியாகப் புரிந்து கொள்வான். ஒடுக்கத்தின் இருப்பிடமாகவும் ஆகிறான்.

१२. अमात्रश्चतुर्थोऽव्यवहार्यः प्रपञ्चोपशमः शिवोऽद्वैत एवमोङ्कार आत्मैव संविशत्यात्मनात्मानं य एवं वेद ।।

12. அமாத்ரச்$_1$சதுர்தோ$_2$ऽவ்யவஹார்ய: ப்ரபஞ்சோபச$_1$ம: சி$_1$வோ ऽத்$_3$வைத ஏவமோங்கார ஆத்மைவ ஸம்விச$_1$த்யாத்மனாத்மானம் ய ஏவம் வேத$_3$ ।।

चतुर्थः சதுர்த$_2$: துரீயன் **अमात्रः** அமாத்ர: சப்தமற்றவன். **अव्यवहार्यः** அவ்யவஹார்ய: செயல்களுக்கு அப்பாற்பட்டவன். **प्रपञ्चोपशमः** ப்ரபஞ்சோபச$_1$ம: உலகமற்றவன். **शिवः** சி$_1$வ: மங்களமானவன். **अद्वैतः** அத்$_3$வைத: இரண்டற்றவன். **एवं** ஏவம் இவ்விதம் **ओङ्कारः** ஓங்கார: ஓங்காரம் **आत्मा एव** ஆத்மா ஏவ ஆத்மாதான். **यः** ய: யார் **एवं** ஏவம் இவ்விதம் **वेद** வேத$_3$ அறிகிறானோ (அவன்) **आत्मना** ஆத்மனா தன்னால் **आत्मानं** ஆத்மானம் தன்னை **संविशति** ஸம்விச$_1$தி அடைகிறான்.

துரீயன் சப்தமற்றவன். செயல்களுக்கு அப்பாற்பட்டவன். உலகமற்றவன். மங்களமானவன். இரண்டற்றவன். இவ்விதம் ஓங்காரம் ஆத்மாதான். யார் இவ்விதம் அறிகிறானோ, அவன் தன்னால் தன்னை அடைகிறான்.

।। माण्डूक्योपनिषत् समाप्ता ।।

மாண்டூக்யோபநிஷத் முடிவுற்றது.

****